அன்பே வாழ்வு

1-1-1979

யாழ் இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
யாழ்ப்பாணம்

யா/யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

# வெள்ளி விழா மலர்

2004

1979

J/ Jaffna Hindu Ladies' Primary School
25 Years In Education

HNB

# SINGITHI



*SINGITHI is the Minors' Savings Account at HNB An account can be opened on the day a baby is born! in fact, HNB gifts an identical amount as the initial deposit (up to a maximum of Rs.1,000/-) if the account is opened within three months of the little one's arrival. Of course, any child under eighteen years can open a Singithi Account which not only pays attractive interest, but depending on the balance in the account, enters the holder in SINGITHI PATHUM - a prize scheme with superb prizes: trips abroad, scholarships, computers, Walkmans and much, much, more. Being a Singithi account - holder also gives one easier access to other loan schemes for higher education, purchase of computers and more. Now! Are you a SINGITHI Account holder? if not, become one today- all it takes is just Rs. 50/-. Contact the nearest HNB Customer Centre for more details*

யா/ யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

# வெள்ளி விழா மலர்

*J/ Jaffna Hindu Ladies' Primary School*

*25 Years in Education*

## உள்ளே .....

ஆசிச்செய்திகள்...................... i - xxxii
பாடசாலைக் கீதம் ...................... 1
காலத்தின் பதிவுகள்...................... 3
பாடசாலை வரைபடம் ...................... 11
சகோதரப் பாடசாலை அதிபரின் பார்வையில் ...................... 12
வெள்ளிவிழாக் காணும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பற்றிய எனது நோக்கு ...................... 13
பகுதித்தலைவரின் உள்ளத்திலிருந்து... எங்கள் பாடசாலை...................... 15
என்னை வளர்த்த எனது பாடசாலை ...................... 16
நான் நடந்துவந்த பாதையில் ...................... 17
Great Pleasure ...................... 19
வரலாற்றின் பதிவுகளில் சேவையாற்றியோர் விபரம் ...................... 20
**நினைவு கூருகிறோம்**
மாணவர் தொகை விபரம் ...................... 26
பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 1979 – 2004 ஆண்டுகளுக்கான செயலறிக்கை ...................... 29
பழைய மாணவர் சங்கம் ...................... 36
விழுமியம்சார் ஆரம்பக்கல்வி – சில குறிப்புக்கள் ...................... 38
எங்கள் அதிபர் ...................... 44
வாழ்த்துரை (முதல் அதிபரின் சேவைநலன் பாராட்டு விழாவிற்காக எழுதப்பட்டது) ...................... 46
இருள் அகற்றும் ஆசான் ...................... 47
தாய்க் கல்வி ...................... 48
அம்மா எங்கே? ...................... 49
சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள் ...................... 50
புலமைப் பரிசில் பரீட்சை விபரம் ...................... 52
இன்று ரஷ்யாவில் இருந்து தரும் செய்தி ...................... 55
சதுரங்கத்தின் உயர்ச்சிப்படிகளில் ...................... 57
சிறாரும் ஒழுக்க விருத்தியும் அண்மைக்கால ஆய்வுகள் ...................... 58
தமிழ் மன்றச் செயற்பாடுகள் ...................... 61

தொட்டில் பழக்கம் ? ..... 66
ஆரம்பக் கல்வியும் தமிழ் மொழியும் ..... 70
மொழித்திறனும் மொழியாற்றலும் ..... 73
வரவேற்புப் பாடல் இயற்றியவர் வரலாறு ..... 75
நவாலியூர் சோமசுந்தரப் புலவர் ..... 77
எங்கள் வீட்டுத்தோட்டம் ..... 77
வேண்டும் முயற்சி ..... 78
மரம் நாட்டுவோம் ..... 78
இனிய தமிழ் மொழி ..... 79
மல்லிகை ..... 79
பிள்ளையின் கற்றலில் பெற்றோர் ஆசிரியரின் தொடர்பின் முக்கியத்துவம் ..... 80
இந்து மன்றச் செயற்பாடுகள் ..... 83
திருமுறைப் பெருமை ஆக்கியோன் ..... 86
சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு ..... 91
இந்துமதமும் மானிட வாழ்வும் ..... 98
ஆங்கில மன்றச் செயற்பாடுகள் ..... 100
Jaffna ..... 104
Myself ..... 104
My Pet ..... 104
The Elephant ..... 104
Do you know? ..... 105
Good Manners ..... 105
My Country ..... 105
Should English be a compulsory subject? ..... 106
ஆரம்பக் கல்வி மாணவர் ஆங்கில மொழியைக் கற்க வேண்டியதன் அவசியமும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான சில தீர்வுகளும் ..... 107
"How to Develop Positive Attitudes"? ..... 110
A Perahera I have seen ..... 111
Visit to Trincomalee ..... 111
Our Country ..... 112
The following are the Proverbs which were Derived from our teacher's mind according to contextual and environmental ..... 113

ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் வகை கூறல்களும் சவால்களும் ........................ 117

தாய்ப்பாலின் மகத்துவமும் துணை உணவின் அவசியமும் ........................ 121

கவின்கலை மன்றச் செயற்பாடுகள் ........................ 122

ஆரம்பக் கல்வியில் அழகியல் ........................ 123

ஆரம்பக் கல்வியில் ஆக்கச் செயற்பாடுகளின் பங்களிப்பு ........................ 125

ஆரம்ப வகுப்புக்களில் அழகியல் பாடத்தை கற்றலின் முக்கியத்துவம் ........................ 127

மாணவர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்தும் நடனக் கலை ........................ 129

வசந்த காலம் வந்தது ........................ 131

நான் ஒரு மருத்துவரானால் ........................ 132

"எனது அன்னை" ........................ 132

ஆரம்பக் கல்வியின் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களின் பங்கு ........................ 133

நான் சென்ற பயணம் ........................ 135

சிந்தனையில் ... ........................ 136

பாடசாலை சிறுவர் அரங்கச் செயற்பாடு........................ 137

சிறுவர் அரங்கும் ஆரம்பப் பாடசாலையும் ........................ 138

ஆரம்பப் பாடசாலையின் சிறுவர் அரங்கு சில முன்மொழிவுகள் ........................ 143

சிறுவர் நாடகமும் அரங்க ஒப்பனையும் ........................ 148

ஆரம்பக் கல்வியில் புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய நோக்கு ........................ 150

இலங்கையின் ஆரம்ப பாடசாலைக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பும் நடைமுறைகளும் ........................ 152

விளையாட்டுச் செயற்பாடு ........................ 162

மேலத்தேய வாத்திய இசைக்குழு ........................ 165

விளையாட்டின் மூலம் மேம்பாட்டுக் கல்வி ........................ 167

ஆரம்ப வகுப்புக்களுக்கான உடற்கல்வி ........................ 170

மாணவர்களின் ஆளுமை விருத்தியில் உடற்கல்வியின் பங்கு ........................ 173

பிள்ளைகளின் சமுக, ஒழுக்க விருத்திக்கான கல்வியில் ஆசிரியர், பெற்றோர் பங்களிப்பு ........................ 175

மதிப்பீடு என்பது வரிசைப்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொள்ளும் அளவீடு ........................ 181

இலட்சிய ஆரம்ப பாடசாலை ஒரு கனவு ........................ 182

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் உளவியலின் முக்கியத்துவம் ........................ 185

Importance of Educational Psychology for Teachers ........................ 187

ஆரம்பக் கல்வியில் விழுமியக் கல்வியின் அவசியம் ........................ 188

சுகாதாரக் கழகம் ........................................ 190
சிறாரின் வளர்ச்சியைப் பற்றிய தகவல்கள் ........................................ 191
சூழலும் மனித உடல் நலமும் ........................................ 194
தேக ஆரோக்கியத்திற்கு பத்து அறிவுரைகள் ........................................ 196
Good Habits for Good Health ........................................ 197
சுற்றாடல் பாதுகாப்பில் மாணவர் பங்களிப்பு ........................................ 199
மழலைப் பாடல்கள் ........................................ 201
மனித உன்னதத்திற்கான கல்வி ........................................ 207
பரிசளிப்பு விழாவின் ஞாபகங்கள் - அழைப்பிதழ்கள், படங்கள் ........................................ 214
சிறுவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பினையும் பேணுவதில் சமுதாயத்தின் பங்கு 216
சீர்திருத்தக் கல்வி ........................................ 218
சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகங்களும் ........................................ 221
நூலகச் செயற்பாடுகள் ........................................ 227
நூல் நிலையம் ........................................ 228
நூலகமும் பயன்பாடும்........................................ 230
தேடல்கள்........................................ 231
ஆரம்பக்கல்வியில் திட்டமிடலின் முக்கியத்துவம்........................................ 236
விசேட தேவைகள் உள்ள குழந்தைகளும் அவர்களுக்கான ஆரம்பக் கல்வியும் ....... 238
ஆசிரியர் கீதம் ........................................ 242
நன்றிகள் ........................................ 243
விளம்பரங்கள் ........................................ 244

# அருள் ஆசிச் செய்தி



இரண்டாவது குருமஹாசந்நிதானம்
***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக***
***ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்***

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தனது 25ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆரம்ப கல்வியே உயர்கல்விக்கு அத்திவாரம் ஆகும். இப்பாடசாலை 25 வருடங்கள் சமய, கலாச்சார பண்பாடுகளோடு நன்மாணாக்கர்களை உருவாக்கித் தந்த பெருமைக்கு உரியதாகும். தமிழ் இனத்தின் பெருமை இக்கல்வியிலேயே தங்கி இருக்கின்றது. இதிலும் சமயத்தோடு சேர்ந்த கல்வி மனித பண்பை மேல் எடுத்துச் செல்கின்றது. இதை உணர்ந்த நம்மவர்கள் ஆரம்பம் தொடக்கம் உயர் கல்வி வரை சமயக் கல்வியை கட்டாயக் கல்வியாக்கியுள்ளனர். இந்த நிலையில் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை கல்வியிலும், கலைபண்பாட்டு விழுமியங்களிலும், விளையாட்டிலும், ஏனைய துறைகளிலும் முன் வரிசையில் திகழ்ந்து கொண்டிருப்பது அனைவரையும் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இப்பணிக்காக சேவை ஆற்றும் அதிபரையும், ஆசிரியர்களையும் வாழ்த்துகிறேன். பாடசாலை இன்று போல் என்றும் கல்வியிலும், ஒழுக்கத்திலும் பல கல்வியாளர்களை உருவாக்கித் தர இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.



# ஆசியுரை



***திரு.பா.நகுலேஸ்வர ஐயர்***
யாழ்/இந்து மகளிர் கல்லூரி
நடுத்தோட்ட இராஜவரோதய பிள்ளையார் குரு

***யா***ழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வெள்ளி விழாவினை மேற்படி பாடசாலையின் கல்விச் சமூகம் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலை எமது நாட்டிலுள்ள சிறந்த ஆரம்ப பாடசாலைகளில் ஒன்றாக மிளிர்கின்றது. இங்கு மாணவர்க்கான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் மற்றும் அதனோடிணைந்த பிற வேலைகளும் சிறந்த முறையில் நடைபெறுகின்றன.

இப்பாடசாலைக் கல்விச் சமூகமானது மாணவரிடையே சைவத் தமிழ்ப்பண்பாட்டைப் பெரும் முயற்சியோடு வளர்த்து வருகின்றது.

இவற்றை எல்லாம் வெளிக் கொணரும் வகையில் வெள்ளி விழா எடுப்பது மிகப் பொருத்தமானதும் நன்மை பயக்கக் கூடியதுமாகும்.

இவ்வெள்ளி விழா இவ்வாறான தன்மையில் அமைவதற்கு நடுத் தோட்டத்து ஸ்ரீவிநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி, என் மனப்பூர்வமான நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

***"வித்யா தனம் சர்வ தனாத் ப்ரதானம்"***
***"கல்விச் செல்வமே எல்லாச் செல்வங்களிலும் சிறந்தது".***



# ஆசிச் செய்தி



***சைவப்புலவர் வ. கந்தசாமி***
தலைவர்
சைவபரிபாலனசபை

**யா**ழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வெள்ளிவிழாச் சார்பாக வெளிவரும் சிறப்புமலருக்கு ஆசியுரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.இப்பாடசாலை பலவசதிகள் இல்லாதிருந்தும், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் முயற்சியால் முன்னேற்றம் அடைந்து வருவது பாராட்டற் குரியதாகும்.

சிறுவயதுமுதல் பண்புநிறைந்த மகளிரை உருவாக்குவதற்கு இப்பாடசாலை இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையாக அமைந்து விளங்குவது சைவத்தமிழ் உலகிற்கு சிறப்புடைய அம்சமாகும்.

சைவப்பரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி, சைவநெறித்தேர்வு என்பனவற்றில் முதற்பரிசாகிய தங்கப் பதக்கப் பரிசுகளை மாணவர்கள் பெற்றுள்ளமை மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

தற்போதைய அதிபரின் சிறந்த தலைமைத்துவ நிர்வாகத்தின் கீழும் பாடசாலைச் சமூகத்தின் ஒன்றிணைந்த கட்டுக்கோப்பின் கீழும் யாழ்ப்பாணத்தில் தனித்துவமான பாடசாலையாக மேலும் வளர்ச்சியடைய இறை அருள் வேண்டி எமது உளமார்ந்த நன்றிகளை வழங்கி அமைகின்றேன்.



# முதல் அதிபரின் செய்தி



***திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா***
முதல் அதிபர்

யா/யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் 25ஆவது ஆண்டு நிறைவினை ஒட்டி விழா எடுக்க விளைந்து அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விடயம். அதற்காக மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளதாகவும் அதில் எனது செய்தி ஒன்றும் இடம்பெறவேண்டியது பொருத்தமானது என்றும் என்னை நாடியுள்ளனர். இந்த விழா சிறப்பாக நடைபெறவும், "மலர்" அழகாக உருப்பெற்று வெளிவரவும் எனது நல் வாழ்த்துக்களை முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்து மகளிர் சமூகத்திற்கு ஓர் ஆரம்ப பெண்கள் பாடசாலை இல்லை என்ற பெரும் குறைக்கு நிவர்த்திகண்டாற் போல, இப்பாடசாலை 1979ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது. அதற்கு முன் யா/யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியுடன் இணைந்து ஓரே நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது.

தனியாக்கப்பட்டபோது பௌதிக வளம் மிகவும் குறைவாகவே இருந்தது. மாணவர் தொகை குறைவாக இருந்தது. ஒரு சில ஆசிரியர்கள் மட்டும் கடமைபுரிந்தனர். பின்னர் படிப்படியான முன்னேற்றம் ஏற்பட்டது. எத்தனையோ இன்னல்கள், தடைகள் மத்தியில் கட்டட வசதிகள், தளபாட வசதிகள் தோன்றின. மாணவர் தொகை துரித கதியில் அதிகரித்தது. அதற்கேற்ப பௌதிக வளங்கள் இன்மையினால் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. அந்தக் காலத்தில் பயின்ற மாணவர்களின் பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் சகிப்புத் தன்மையுடன் கூடிய ஒத்துழைப்பினால் நிலைமையை ஓரளவு சமாளித்துத்தான் பாடசாலையை

நடாத்தவேண்டியிருந்தது என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். அவ்வப்போது கடமையாற்றிய கல்வி யதிகாரிகளும் இந்த பாடசாலையின் வளர்ச்சியில் தனிப்பட்ட அக்கறையை எடுத்துள்ளனர்.

பாடசாலைகளுக்கிடையேயான போட்டிகள், பரீட்சைகள் விழாக்கள் யாவற்றிலும் இந்தப் பாடசாலைக்குச் சிறந்த பெறுபேறுகள் கிடைத்தன. நல்லொழுக்கம், கட்டுப்பாடு கொண்ட நன் மாணாக்கர்களை இப்பாடசாலை உருவாக்கி சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

ஆரம்பக் கல்வி முடித்து உயர் கல்லூரிகளுக்குப் போகும் மாணவிகள் அங்கு நற்பெயரும் நன்மதிப்பும் பெற்று முன்னிலை வகிக்கின்றனர். இப்பாடசாலையில் கற்ற மாணவிகளில் ஏராளமானோர் உயர் கல்வி கற்று உயர் பதவிகளில் உள்ளனர். உலகின் பல நாடுகளிலும் இவர்கள் நன் நிலைகளில் மிளிர்வது பெருமைப்படவேண்டிய விடயமாகும்.

இந்நாள் அதிபர் இப்பாடசாலையின் நற் பெயர் மங்காவண்ணம் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு உணர்ந்து அதற்காக முழுமூச்சுடன் உழைத்து வருகின்றார். அவருக்கு உறுதுணையாய் ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர். இதேபோல் இனிவரும் காலங்களிலும் இப்பாடசாலையின் பொறுப்பை யார் ஏற்கின்றனரோ அவர்களும் இதனை வளர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

பாடசாலை வாழ்க! நற்பணி வளர்க!



# வாழ்த்துச் செய்தி



***திருமதி சரஸ்வதி ஜெயராசா***
B.A(HONS.Dip in Edu,SLPS I)
அதிபர் யாழ் இந்து மகளிர் கல்லூரி

**யா**ழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தனக்கென ஒரு கட்டமைப்பில் கல்விச் சேவையை 25 வருடங்களாக வழங்கி வருவது பெருமைக்குரியது. யாழ் இந்து மகளிர் கல்லூரி இடைநிலைக்குரிய கல்வி நிறுவனமாகவும், இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை ஆரம்பக் கல்விக்குரிய நிறுவனமாகவும், பிரிந்து நின்று செயற்பட்டு வருகின்றன. யாழ் முன்னணி ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றான இது, சிறுவர்களின் பண்பாட்டினை வளர்க்கும் களமாக மிளிர்வதனையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ் நகரில் அமைந்துள்ள இந்த ஆரம்பப் பாடசாலையில் இடம் பிடிக்க பலர் ஓடி வருவதில் இருந்து இப் பாடசாலையின் சிறப்பு நமக்குத் தெரிகின்றது.

என்றும் எக்காலமும் எமது கலாச்சாரப் பின்னணி வழுவாது நிற்கக் கூடிய எதிர்காலத் தலைவிகளை உருவாக்கவல்ல, பெண்களை சின்னஞ் சிறு வயதினிலேயே வளர்த்தெடுக்கும் பொறுப்பு எமக்குண்டு என்பதனை உணர்ந்து, இவ் ஆரம்பப் பாடசாலையை ஆரம்பித்து அதன் வளர்ச்சிக்கு உழைத்த பெரியார் அனைவரும் என்றும் போற்றுதற்குரியவர்கள்.

ஒரு மரத்திற்கு வேர் போல் ஒருவருக்கு ஆரம்பக் கல்வி உறுதியானதாக அமைந்திருக்க வேண்டும் என்பதனை நன்கு உணர்ந்து இதுவரை கடமையாற்றிய அதிபர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் அனைவரும் செயற்பட்டனர். அனைவரது நோக்கமும் சிறப்பாக நிறைவேறி வருவது மகிழ்ச்சிக்குரியதே.

"தெளிந்த நல்லறிவும் நெஞ்சிலே உறுதியும்" கொண்டவர்களாகவும், மதப் பற்று, மண், மொழிப் பற்று, நாட்டுப்பற்று கொண்ட பெண்களாகவும் மிளிரும் பலரை மேலும் மேலும் இப்பாடசாலை உருவாக்க வேண்டும் என வெள்ளி விழாக் காணும் இந்நாளில் மனதார வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



**திரு. ஆர். தியாகலிங்கம்**
செயலாளர்
வடக்கு கிழக்கு மாகாண கலை,
பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுதுறை அமைச்சு
திருகோணமலை.

இந்துப் பாரம்பரியக் கல்வி முறை எழுச்சி பெற்ற காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பல இந்துப் பாடசாலைகள் தோற்றம் பெற்றிருந்தன. அவ்வாறான பாடசாலைகளில் ஒன்றாக விளங்கிய யாழ் இந்து மகளிர் கல்லூரியில் இருந்து 1979ஆம் ஆண்டில் நிர்வாக ரீதியாகப் பிரிந்து இயங்கத் தொடங்கி இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்த யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை இன்று தனது வெள்ளி விழா ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்து சமயப் பாரம்பரியத்தைப் பேணிவரும் பெண்களுக்கான ஆரம்ப பாடசாலையாக விளங்கும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 1979ஆம் ஆண்டில் 153 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று 500க்கு மேற்பட்ட மாணவர்களுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளுடன் மட்டுமல்லாது கல்வி சார்ந்த ஏனைய செயற்பாடுகளான தமிழ்மொழித்திறன்விருத்திப் போட்டிகள் ஆங்கில மொழி விருத்திப் போட்டிகள் மற்றும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் ஆகியவற்றிலும் சாதனைகள் படைத்து வருவது பாடசாலையின் ஒன்றிணைந்த வளர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

வெள்ளிவிழா ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, கல்விச் செயற்பாடுகளுடன் மாணவர்களின் உடல் உள விருத்தியை ஏற்படுத்தும் வகையில் மேன்மேலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் வளர்ச்சி பெற்று வடக்கு கிழக்கு மாகாணத்தின் உன்னத பாடசாலைகளில் ஒன்றாக திகழ வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

பாடசாலையின் பண்பாட்டு பாரம்பரியத்தைப் பேணும் வகையிலும் கல்வி அபிவிருத்தி நிர்வாக செயற்பாடுகளிலும் முனைப்புடன் இயங்கும் வகையில் அர்ப்பணிப்புடன் உழைத்து வரும் அதிபர், ஆசிரியர்களினதும் தன்னலம் சாரா உழைப்பு மேலும் கூர்மை அடைய வேண்டும் என்றும் வாழ்த்துகின்றேன். இத்தகைய சிறப்பு வாய்ந்த யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை வெள்ளி விழா நிகழ்வுகளும் அது தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலரும் சிறக்க வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



***கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்***
முன்னாள் கல்விப்பணிப்பாளர் ஓய்வுபெற்ற
உதவிப்பணிப்பாளர் நாயகம்
தேசியகல்வி நிறுவகம்

**சை**வத் தமிழ் பண்பாட்டுச் சூழலில் கல்வியை வழங்கி, சைவத்தையும், தமிழையும் அவற்றின் வழி வந்த பண்பாடு, கலாச்சாரங்களையும் மக்களிடையே நிலைபெறச் செய்ய, கல்விக் கூடங்கள் நிறுவப்பட வேண்டும் என்ற சிந்தனை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் உள்ளத்தில் துளிர்த்தது. அது அன்றைய காலத்தின் தேவையாகும்.

நாவலர் பெருமான், வண்ணார்பண்ணையில் சைவப் பிரகாச வித்தியாசாலையையும், தொடர்ந்து சைவ ஆங்கில பாடசாலையையும் நிறுவியதன் மூலம், அவரின் சிந்தனை செயல் வடிவம் பெறலாயிற்று.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சபை பல இந்துக் கல்லூரிகளை நிறுவி நடாத்தியதன் மூலம் நாவலர் பெருமான் தொடக்கிய பணியைத் தொடர்ந்தது.

மகளிர்க்கென தனியான கல்லூரி ஒன்றின் தேவையை உணர்ந்த இந்துக் கல்லூரிச் சபை யாழ் இந்து மகளிர் கல்லூரியை நிறுவியது. அக் கல்லூரி மாணவர் தொகை ரீதியாக அதன் பருமனிலும் கல்வி வழங்கல் ரீதியாக அதன் தரத்திலும் பெரும் வளர்ச்சி கண்டு வந்தது.

1970களில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த கல்வி மறுசீரமைப்பு ஆரம்பக் கல்வியை சீராக்குவதில் அதிக கவனம் செலுத்தியது. கல்லூரியின் ஒரு பிரிவாக அமைவதை விட ஆரம்பக் கல்விப் பிரிவு ஒரு தனியான பாடசாலையாக ஒழுங்கு செய்தல் மூலம் ஆரம்பக் கல்வி மறுசீரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் என்பன செவ்வையாக அமுல்படுத்தப்பட முடியும் எனும் ஆலோசனையை கல்வியாளர்கள் முன் வைத்தனர். பாடசாலைப் பருமன் உரியளவில் மட்டுப்படுத்தப்படும் போதே கல்வித் தரம் பேணப்படும். அந்த அடிப்படையில், இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்பக் கல்விப் பிரிவு, 01.01.1979 அன்று யா/யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை எனும் பெயரில் இயங்கத் தொடங்கியது.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக அன்று விளங்கிய செல்வி இராமநாதன் அவர்களின் பங்களிப்பும், ஒத்துழைப்பும் மகத்தானது இன்று நினைவு கூரற்பாலது.

ஆரம்பப் பாடசாலையின் முதல் அதிபராக, திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா பதவியேற்றார். அவரின் சேவை போற்றுதற்குரியது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை தோற்றுவித்து, அதன் உதவி ஒத்துழைப்புடன் பாடசாலையை கட்டியெழுப்புவதில் பெரும் பங்கேற்றார். ஆசிரியர்களும் தத்தம் பணிகளை திறம்பட நிறைவேற்றி வந்தனர்.

இவர்கள் அனைவரினதும் ஒருமித்த சேவையும், ஈடுபாடும் அங்கு கல்வி கற்ற மாணவிகளின் கல்வித் தரத்தையும் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு கலாச்சார விழுமியங்களையும் உயர்த்தப் பெரிதும் வழிகோலின.

அக்காலப்பகுதியில், நல்லூர் கல்வி வட்டாரத்திற்கு பொறுப்பான கல்வி அதிகாரியாக நான் கடமையாற்றிக் கொண்டிருந்தமையினால் யாழ் இந்து மகளிர் கல்லூரியுடன் இணைந்திருந்து ஆரம்பக் கல்விப் பிரிவை தனியான ஆரம்பப் பாடசாலையாக உருவாக்குவதிலும் புதிய ஆரம்பக் கல்வி பாடத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் பங்கேற்று ஆலோசனை வழங்கவும், வழிப்படுத்தவும் வாய்ப்புக்கிடைத்தது. அதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

பிள்ளைகளின் இயற்கையான அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பவற்றை விருத்தி செய்ய உதவும் பண்புசார் ஆரம்பக் கல்வியை வழங்குதல் சைவத் தமிழ் பண்பாட்டுச் சூழலை உருவாக்கிக் கல்வி கற்கும் மாணவியரின் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கலாசார விழுமியங்களை வாழ்க்கையில் பேண உதவுதல் அதனால் அவர்களின் எதிர்கால ஆளுமை விருத்திக்கு அடித்தளம் இடுதல் போன்ற கல்வி நோக்கங்களை எய்துவதற்கு அன்று தொட்டுப் பணியாற்றி வருகின்ற அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரினதும் திடசங்கல்பம், பொறுப்புடைமை, ஒத்துழைப்பு, நற்பணிகள் என்பன மெச்சத் தக்கவை.

இன்றைய அதிபர் திருமதி த. துரைசிங்கம் அவர்களின் அர்ப்பணிப்பு, சேவைமனப்பான்மை, நிருவாகத்திறன் என்பன பாராட்டுக்குரியவை. பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் ஆசிரியைகள், அறியாமையை நீக்கும் அகல் விளக்குகள். ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாடு என்பவற்றைப் பேணி, வளர்ந்து வரும் மாணவச் செல்வங்களை, நாளைய நற்பிரசைகளாக விளங்க உதவும் அனைவருக்கும் எமது நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மேலும் மேலும் உயர்வும் சிறப்பும் பெற்றுப் பிரகாசிக்க வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுதல் செய்கிறேன்.

"வாழ்க வளர்க."

# வாழ்த்துச்செய்தி



***திரு. இ. சிவானந்தன்,***
சிரேஸ்ட உதவிச்செயலாளர்,
கல்வி கலாச்சார விளையாட்டுத்துறை
அமைச்சு,வ.கி.மா.
திருகோணமலை.

வெள்ளி விழா காணும் யா/யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலைக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். இவ் விழாத்தொடர்பாக வெளியிடப்படும் மலருக்கு இச்செய்தியை அனுப்பி வைப்பதில் மன நிறைவு கொள்கின்றேன்.

1978ஆம் ஆண்டு வரை யாழ்/இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவாக இருந்து, கல்வி மறுசீர் அமைப்பிற்கு அமைவாக, 1979ஆம் ஆண்டில் தனிவேறான ஆரம்ப பாடசாலையாக வளர்ச்சி அடைந்து, இன்று 500க்கு மேற்பட்ட மாணவிகளுடன் இப்பாடசாலை இயங்கி வருகின்றது.

கடந்த காலங்களில் இப்பாடசாலை பல சாதனைகள் புரிந்துள்ளது. 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை, மொழித்திறன் போட்டிகள், சிறுவர் நாடகம் ஆகியவற்றில் இப்பாடசாலை மாணவிகள் வெளிக்காட்டிய திறமைகளை நாம் மறப்பதற்கில்லை.

ஆரம்பப் பிரிவில் மாணவர்களின் அறிவை மட்டுமல்லாது, அவர்களின் பலவகைத் திறன்களையும் மனப்பாங்குகளையும் இனங்கண்டு வளர்த்து, நிறைவான ஆரம்ப கல்வியை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என்ற தெளிவான சிந்தனையுடன் இப்பாடசாலை செயற்படுவதையிட்டு பெருமைப் படுகின்றேன். புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இவர்களின் செயற்பாடுகளை மேலும் மெருகூட்டியுள்ளது.

இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று உழைத்த அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்கள். இந்து சமயப் பாரம்பரியங்களுடன் குழந்தைகளை வளர்த்தெடுக்கும் இப்பாடசாலை, தனது செயற்பாடுகளை மேலும் விரிவாக்கித் தொடர்ந்தும் வளர்ச்சி பெற்று, மேலும் பல சாதனைகள் புரிய வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



**திரு. இ. விசாகலிங்கம்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
மாகாண கல்வித்திணைக்களம்,
வ.கி.மா.,திருகோணமலை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் இந்து சமய எழுச்சிப் பிரசாரத்துடன் யாழ்ப்பாணத்தில் தோற்றுவிக்கப்பட்ட இந்துப் பாடசாலைகளில் பல இன்றும் அந்தப் பாரம்பரியத்தை பேணி வருகின்றன. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் மகளிருக்காக தோற்றுவிக்கப்பட்ட யாழ் இந்த மகளிர் கல்லூரியாக இருந்து யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை நிர்வாக ரீதியாக பிரிந்து இன்று 25 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இந்த 25 ஆண்டு காலத்தினுள் 153 மாணவர்களுடனும், 05 ஆசிரியர்களுடனும் தனது கல்விப் பணியை முன்னெடுத்து வைத்த இப்பாடசாலை 16 ஆசிரியர்களுடன் சுமார் 550 மாணவர்களைக் கொண்டதொரு முன்னணிப் பாடசாலையாக இயங்கி வருவது பெருமைக்குரியது.

கடந்த 25 வருடங்களாக இப்பாடசாலை உருவாக்கி வைத்த கல்விப் பரம்பரையின் தொடர்ச்சியானது நாடளாவிய ரீதியில் யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பெருமையைப் பேசி வருகின்றது.

அதன் இரண்டரை தசாப்த கால வளர்ச்சிப் பாதையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட இரு அதிபர்களையும், பல ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவு கூரும் விழாவாக வெள்ளிவிழா நிகழ்வுகள் அமையவேண்டும் என வாழ்த்துகிறேன். கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளிலும், பல்வேறு இணைப் பாடவிதான செயற்பாடுகளிலும் சாதனைகள் படைத்து முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக உருவாக்க உழைத்து வரும் யாழ் இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலையின் கல்விச் சமூகம் மேலும் மேலும் இப்பாடசாலையின் உயர்ச்சிக்காக உழைத்து வர வேண்டும். அதனூடாக யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற இந்துச் சமூகத்தின் தோற்றத்திற்கான தொடர்ச்சியை நிலைநிறுத்த முடியும்.

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வெள்ளி விழா நிகழ்வுகளும், அது தொடர்பாக வெளியிடப்படும் சிறப்பு மலரும் சிறக்க வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி

***திருமதி எஸ்.மகாலிங்கம்***
மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

**யா**ழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை தன் கல்வி வரலாற்றில் வெள்ளி விழாவை கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரிய ஒரு சிறப்பம்சமாகும். 1979 ஆம் ஆண்டு 153 மாணவர்களுடனும், 5 ஆசிரியர்களுடனும் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலிருந்து பிரிந்து ஆரம்பிக்கப்பட்டது. நல்லூரின் அயலில் வாழ்கின்ற இந்தச் சிறுமிகளின் கல்வித் தேவை கருதி, அதன் அயலில் அமைக்கப்பட்ட இப் பாடசாலை இன்று பல இன்னல்கள், இடம்பெயர்வுகளைக் கடந்து, 16 ஆசிரியர்களின் மகத்தான பணியில், 531 மாணவிகளின் கல்வித் தாகத்தை தீர்த்து வருகின்றது.

பாடசாலை ஆரம்ப காலத்திலிருந்து அயராது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகளின் ஆதரவில், வளங்களில் பெருவளர்ச்சி கண்டுள்ளது. பல கட்டடங்கள் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளன. வருடாந்தம் நடைபெறும் போட்டிகள், விழாக்கள் ஆகியவற்றில் பங்குபற்றி முழுமையான பல வெற்றிகளையும், பரிசில்களையும் பெற்றுள்ளது. புலமைப் பரிசில் பரீட்சையில் குறிப்பிடத்தக்க மாணவர்களைச் சித்தி மட்டத்திற்கு உயர்த்திய பெருமையுடையது.

தொடர்ந்து பல சிறப்புக்களைப் பெற்று சிறந்த மாணவிகளை உருவாக்கி முன்னணியிற் திகழ இறைவனை வேண்டி என் மனமுவந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



# வாழ்த்துச் செய்தி



**திரு. ப.விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப்பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

**"இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் 25வது சந்தன விழா உயர்கவே."**

நதிகளின் சோலையில் சைவமும் தமிழும் கீதம் பாடும் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் வெள்ளி விழா மகிழ்விற்கு வாழ்த்துச் செய்தி வரைவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒரு விருட்சத்தின் நிகழ்வில் ஆரம்பக் கல்வியை நாற்றாக்கி நடவு செய்து 01.01.1979 தொடக்கம் 2004 வரை கல்விப் பாதையில் வெற்றிகள் குவித்துள்ளது.

ஓய்வு பெற்ற அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா தொடக்கம் இன்றைய அதிபர் திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் வரையும் புலமைப் பரிசிலின் பெறுமதியில் நிறைவாகி வெற்றிகளை சேர்க்க, வென்ற மாணவிகள் உயர் நிலைக் கல்வியால், சிறு அரும்பான இந்து மகளிர் பாடசாலை பெரு மதிப்புக்களை குவித்துள்ளது. அதிபர்களின் ஆளுமை வெற்றியின் எல்லைகளை தொடும் நேரம் யாழ்ப்பாண வலயம் கல்வியில் உச்சப் பெறுமானத்தை நுகர்கின்றது.

பெண்பிள்ளைகளுக்கான பொன் பள்ளியான இப் பாடசாலை புலமைப் பரிசில்களுக்கப்பால் கணினிக் கல்வியில் மழலைகளை ஈர்க்கும் நுகத் தடியாக யாழ்ப்பாணத்தில் புகழ் பொறிக்க வாழ்த்துக்கள்.

# நிகரற்ற வளர்ச்சிப் பாதையில்

**திரு. த.பஞ்சலிங்கம்,**
சிரேஸ்ட துணைப் பொதுச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை இவ்வருடம் வெள்ளி விழாவை அடைந்திருப்பதையொட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை எழுதுவதில் மனமகிழ்ச்சி அடைகின்றேன். மாணவர்களின் கல்வியின் அடித்தளமான ஆரம்பக் கல்வியை மையமாகக் கொண்ட இப்பாடசாலையின் சாதனைகள் இலங்கை கல்வி வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும். தமிழ் இனத்தின் வரலாற்றில் அவர்களின் அடிப்படைச் சொத்தான கல்வியின் வளர்ச்சிக்கு அந்நியர்களினால் அவ்வப்போது பாரிய தடைகள் ஏற்படுத்தப்பட்ட போதிலும் சீர் குலையாமல் தலைநிமிர்ந்து கல்விப் பணியாற்றிய பாடசாலைகளுள் இப்பாடசாலையும் ஒன்றென துணிந்து சொல்வேன். இதற்கு ஆரம்ப கால அதிபர் திருமதி யோ. ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களும் இப்பாடசாலையின் தற்போதைய முதல்வரும் நல்லாசிரியர்களாக இருந்தவர்களும், இருப்பவர்களுமே முதன்மையான காரணகர்த்தாக்கள். இடப்பெயர்வு, வளத்தட்டுப்பாடு, ஆசிரியர் பற்றாக்குறை, அரசுகளின் மாற்றாந்தாய் மனப்பான்மை என்பன இருந்தபோதிலும் கற்றல், கற்பித்தலிலும் இணைபாடச் செயற்பாடுகளிலும் ஆட்டங் காணாமல் இன்றும் இப்பாடசாலை நிமிர்ந்து நிற்பது பாராட்டுக்குரியது.

இவ்வேளையில் இப்பாடசாலையின் வளர்ச்சியில் தாய்ப் பாடசாலையான யா/இந்து மகளிர் கல்லூரியும், அக்கல்லூரியின் அதிபர்களாக இருந்தவர்களும் இப்பாடசாலை மாணவர்களின் பரந்த மனம்கொண்ட பெற்றோர்களும் பங்காளிகள் என்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது.

இன்று கல்விப் புலத்தில் பாடசாலைகளுக்கிடையில் வளர்ச்சிப் போட்டிகள், தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலை மாணவர்களின் பொதுப் பரீட்சை முடிவுகளுக்கு உரிமை கோருதல், கல்வித் திணைக்களங்கள், கல்வி அமைச்சு, மாகாண கல்வி அமைச்சு என்பவற்றின் திட்டமிடப்படாத செயற்பாடுகள் என்பன இருந்த போதிலும் கல்வி அடைவு மட்டத்தை பல அமுக்கங்கள் சோதனைகள் வேதனைகள் மத்தியில்

குறிப்பிட்ட சில பாடசாலைகள் அடைவுமட்டத்தை அடைந்துள்ளன. இது போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்குமுரியது. இப்பாடசாலையும் அத்தகைய ஒரு நிலையிலிருப்பது வரவேற்கத்தக்கது.

இருந்தும் பாடசாலைகளின் அடைவு மட்டங்கள் குறைவு. அதிக சம்பளம் எடுத்தும் ஆசிரியர்கள் முழுமையான கடமைகளைச் செய்யவில்லை. பாடசாலைகளை விட தனியார் கல்வி நிறுவனங்கள் வளர்ச்சி யடைந்துள்ளன. பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகள் திருப்தியாக இல்லை என்ற பல குறைபாடுகள் கதைக்கப்படுகின்றன. இவற்றை நிவர்த்திசெய்ய சகலரின் கடின உழைப்பு காலத்தின் தேவைகருதி தேவையாக உள்ளது என்பதை எல்லோரும் மனதில் இருத்துவதோடு இப்பாடசாலை போன்ற பாடசாலைகளின் உயர்ச்சியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இப்பாடசாலையின் இன்றைய நிலைக்கு முதன்மையானவர்கள் ஆரம்பம் முதல் இன்று வரை கடமைபுரிந்த அதிபர்கள் தான் என்பதை யாவரும் ஏற்றுக்கொள்வர். அந்த வகையில் இன்றைய அதிபர் திருமதி. த.துரைசிங்கம் பாராட்டிற்குரியவர். அவர்களின் கரங்களைப் பற்றி இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் உரமேற்றுவது தான் நம் எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

**"எல்லோருக்கும் கல்வி அவசியம்**
**சுதந்திரமான கல்விக்கு வழிகோலுவோம்"**



# வாழ்த்துச் செய்தி



***கலாநிதி க.குணராசா,***
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

***யா/***இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தனது 25ஆவது அகவையைப் பூர்த்திசெய்து வெள்ளிவிழாக் கொண்டாடும் இத்தருணத்தில் அதனை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கல்விப் பாரம்பரியத்தில் யாழ்ப்பாண இந்து மகளிர் கல்லூரியின் பங்கு ஒருபொழுதும் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. அதன் ஒரு அங்கமாக விளங்கி பின் 1979ஆம் ஆண்டு தனித்த ஒரு கல்வி நிறுவனமாக மலர்ந்து இப்பிரதேசத்தின் பெண் சிறார்களுக்கான ஒரேயொரு ஆரம்ப பாடசாலையாக இயங்கிவருவது பெருமைக்குரியது. தமிழ் பண்பாட்டையும், சமயநெறியையும் பேணி இங்கு கல்வி கற்ற பலர் இன்று பல உயர்பதவிகளில் இருப்பது இவற்றுக்கு சான்றாகும்.

வெள்ளிவிழா ஆண்டின் அதிபராக விளங்குகின்ற திருமதி. த.துரைசிங்கம் அவர்களின் சிறப்பான தலைமைத்துவத்தில் இப்பாடசாலை கட்டமைப்பிலும், கல்வித்தரத்திலும் நல்ல முன்னேற்றத்தை அடைந்தமையினை இத்தருணத்தில் மறந்துவிட முடியாது.

இப்பாடசாலை பல்வேறு வழிகளிலும் யாழ்ப்பாண குடாநாட்டின் சிறப்பான பாடசாலையாக மலர்வதோடு, இலங்கையின் முன்னோடிப் பாடசாலைகளில் ஒன்றாக மிளிர வாழ்த்துகின்றேன்.

# வாழ்த்துச் செய்தி



***திருமதி ச.காங்கேயன்***
கோட்டக் கல்விப் பணிப்பாளர்
நல்லூர்

ஒரு சமுதாயத்தின் உயர் நிலையானது மாணவர்களுடைய உயர் நிலையைப் பொறுத்தே அமைகின்றது. மாணவர்களிடையே துலங்குகின்ற அமைதி, சமாதானம், சகோதரத்துவம் முதலிய பண்புகள் மேனிலையடைகின்ற போது அவன் சார்ந்த சமுதாயமும் மேனிலையடைகின்றது.

ஒரு சமுதாயத்தின் விருத்திக்கு மாணவர்களை தயார் நிலைப்படுத்துகின்ற பாரிய பங்களிப்பினை பாடசாலைகளே ஏற்படுத்திக் கொடுக்கின்றன என்பது வெளிப்படையானதொன்றே. அந்த வகையில் யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையானது மாணவர்களிடையே அறிவு, ஆற்றல், அமைதி, பண்பாடு போன்றவற்றை ஏற்படுத்திக் கொள்ளுவதில் பெரும் பங்களிப்பாற்றுகின்றது.

வடபுல மக்களின் அழியாச் சொத்தாகிய கல்வியை வளம்படுத்துகின்ற அடிப்படைப் பணியை ஆரம்ப நிலைப் பாடசாலைகளே ஆற்றுகின்றன. அவ் வரிசையில் யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையானது தனக்குரித்தான அப்பணியை செவ்வனே மேற்கொண்டுவருகின்றது. ஆரம்பத்தில் நான்கு ஆசிரியர்களுடன் நூற்று ஐம்பத்து மூன்று மாணவர்களை உள்ளடக்கிய இப் பாடசாலையானது இன்று பதினாறு ஆசிரியர்களுடன் 553 மாணவர்களைக் கொண்ட ஒரு வளம் மிக்க பாடசாலையாக வளர்ந்திருப்பது பாராட்டக்கூடியதொன்றாகவே விளங்குகின்றது.

இருபத்தைந்து வருட கால கல்விப் பணியினை மேற்கொண்டு வருகின்ற இவ் ஆரம்ப பாடசாலையானது யாழ் மாவட்டத்திலேயே விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச் சிறந்த ஆரம்ப பாடசாலைகளில் ஒன்றாக விளங்குகின்றது. கல்விப் பணியுடன் மாணவர்களுடைய பல்வேறு

கலையாற்றல்களையும் ஒழுக்க விழுமியங்களையும் வளர்ப்பதிலும் இப்பாடசாலை சிறப்பானதொரு இடத்தை வகித்து வருகின்றது குறிப்பாக பாடசாலைகளுக்கிடையே கோட்ட. வலய, மாகாண மட்டங்களில் நடைபெறுகின்ற தமிழ் மொழித் தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டுகின்ற பெருமையினையும் இப்பாடசாலை தனதாக்கியுள்ளது.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையிலும் யாழ் மாவட்டத்தில் முன்னணிப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளுகின்ற பாடசாலைகளுள் இப்பாடசாலையும் ஒன்றாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே இப்பாடசாலை அரவணைத்துக் கொள்ளுகின்ற அனைத்து மாணவர்களது திறன்களை உயர்த்தி அதன் மூலம் வளம் மிக்கதொரு அறிவியல் சார்ந்ததொரு சமுதாயத்தை உருவாக்குவதிலும் முனைப்புடன் செயற்படுகின்ற இப் பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் யாவரும் பாராட்டுக்குரியவர்களே. மாறிவரும் நவீன உலகிற்கு ஏற்ப மாணவர்களை வளம்படுத்துகின்ற பாரிய பொறுப்பினை ஏற்று அதனை சிறப்பாக செயற்படுத்திவருகின்ற இப்பாடசாலையானது இன்று வெள்ளி விழாவை கொண்டாடுவதனையிட்டு நான் பெருமகிழ்வு அடைகின்றேன். மேன் மேலும் இப்பாடசாலையானது சகல துறைகளிலும் வளர வேண்டும் என மனமார வாழ்த்தி மகிழ்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



***திருமதி கமலா சுப்பிரமணியம்,***
*உதவிக்கல்விப்பணிப்பாளர்*
*(ஆரம்பக் கல்வி)*
*யாழ் வலயம்.*

***யா***/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை வெள்ளி விழாக் கொண்டாடும் இவ் வேளையில், அதற்கணி செய்மலரையும் வெளியிடுவதில் களி கூருவதோடு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

ஆரம்ப காலத்தில் ஒரு சிறிய பாடசாலையாக காட்சியளித்த இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை கட்டடங்கள், மாடிகள் அழகிய சிறுவர் பூங்கா, மனம் கவர் விளையாட்டு முற்றம், செயற்பாட்டறை எனப் பல கொண்டதாய் மிளிருகின்றது. அத்துடன் பச்சைப் பசேலென பசிய நிறத்துடன் காட்சிதரும் பொழுது பாடசாலை சமூகத்தினரின் செயற்பாடுகளை மனதார வாழ்த்துகிறேன்.

**"ஒழுக்கம் விழுப்பம் தரலான்-**
**ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க ஒழுக்க சீலர்களாக மாணவர்களை வளர்த்தெடுக்க அரும்பாடுபடுகின்றனர் ஆசிரியர் குழாம்.

**"அறிவுடையார் எல்லாம் உடையார் - அறிவிலார்**
**என் உடையரேனும் இலர்."**

**"கண்ணுடையர் என்போர் கற்றோர்-முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லாதவர்"**

இரண்டடிக் குறளுக்கிணங்க மாணவர்களை கல்வியறிவு பெற முன்னின்று உழைக்கும் அதிபர் ஆசிரியர் பெருந்தகைகளே என்றும் வாழ்க வளர்க.

நற்றமிழ் வல்ல நல்லாசிரியர்கள் நற்பணியாற்றும் இந் நங்கை நல்லாளின் பாடசாலை ஆயுந்திறனும் ஆக்கும் திறனும் கொண்ட ஆளுமை மிக்க மாணவர்களை ஆக்கும் அரும் பணியாற்ற ஆக்கல் தொழிலோன் ஆண்டவனை வேண்டி வாழ்த்துகிறேன். இம் மலரின் பொறுப்பாசிரியருக்கு எனது உளங்கனிந்த பாராட்டுக்கள். இவர்களது பணி மேன் மேலும் வளர என்னுடைய வாழ்த்துக்கள் இப்பாடசாலை அகவை நூறு காண வேண்டுமென்று அவாவி நிற்கின்றேன்.

# வாழ்த்துரை



**திரு. கோ.சி.வேலாயுதன்,**
முன்னாள் கல்விப் பணிப்பாளர்.

கல்வி கண்போன்றது. வாழ்வியல் வனப்பிற்கு உரம் சேர்ப்பது. இந்த உண்மையை உளங் கொண்ட திருவாட்டி தனரஞ்சினி துரைசிங்கம் கண்ணை இமை காப்பது போல கட்டிக்காக்கும் கல்விச் சாலை இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையாகும். யாழ் நல்லூர் கோட்டங்களை உள்ளடக்கிய 71 பாடசாலைகளும் யாழ் கோட்டமாக இருந்த காலத்தில் கல்விப் பணியாற்றியவன் என்ற முறையில் இதன் வளர்ச்சிப் படிகளை நன்கு தெரிந்துகொண்டவன் யான்.

இந்து சிறுமியருக்காக விளங்கும் ஒரேயொரு வித்தியாசாலை. அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை நன்கு புரிந்துகொண்டு உதவுகரம் நீட்ட வேண்டும். இட நெருக்கடிக்கு மத்தியில் பெற்றோரின், நலன் விரும்பிகளின் சேவைக் கரங்களை இறுகப் பற்றும் திறமையும், சேவை மனப்பாங்கும் கொண்ட அதிபர் பல்வேறு மட்டங்களில் இதன் வளர்ச்சிக்கு உரம் சேர்த்தவர். எண்ணிய முடிக்கும் திண்ணிய நெஞ்சம் கொண்ட அதிபரின் காலத்தில் வெள்ளிவிழாக் காணும் கல்விக் கூடம் இது. பிஞ்சு உள்ளத்து அஞ்சுக மன்ன சிறுமியர் கலை நுகர்ச்சி பெற்று சாதனை புரிந்ததை, புரிவதை நன்கு அறிவேன்.

புதரில் மணி பொறுக்கும் பணிபோல் உயரிய உழைப்பால் பொதுப்பரீட்சையில் திறமையான அடைவுமட்டங்களைப் பெற வழிசமைத்தவர் இன்றைய அதிபர்.

**"வெள்ளத்தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்தனைய துயர்வு"**

என்ற வள்ளுவன் வாய்மொழியை மெய்ப்பிக்கும் வித்தியாலயம். நல்லதோர் வீணை செய்தே நலங்கெடப் புளுதியில் எறிவதுண்டோ என்ற வினாவிற்கு விடைகாணும் அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டவேண்டும்.

"ஆயகலைகள் அறுபத்து நான்கிற்கும் சொந்தக்காரர்கள் நாங்கள்" என இறுமாந்துகூறும் அளவிற்கு சைவ மணம் கமழ் கலைநலம் துலங்க, கல்வி நலம் பெருக மாணவ மணிகளை கட்டிக் காக்கும் இப்பாடசாலை பல் கலைகளும் பெற்று புதுப்பொலிவு பெற திரிபுரமெரித்த விரிசடைக் கடவுள் தந்த விநாயகன் அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

**"ஊழையும் உப்பக்கம் காண்பர்**
**உலைவின்றி தாழாது உஞற்றுபவர்"**

என்ற வள்ளுவன் ஆற்றுப்படுதலை அகங்கொண்டு அதிபரும் ஆசிரியர்களும் நிமிர்ந்த நன் நடையும் நேர் கொண்ட பார்வையும் செகத்தில் யார்க்கும் அஞ்சாதஞானச் செருக்கோடு வித்தியாலயத்தினுள் பிரவேசிக்கும் முத்துக்கள் புதுப் பொலிவோடு பிரகாசிக்க சீரிய அத்திவாரமிட்டு அணைத்துக்கொள்ள வேண்டும். தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல் சிறுமியர் கற்றனைத்தூறும் அறிவோடு துலங்க ஆக்கங்கள் அனைத்தும் முயற்சித்திருவால் பெற்றுய்ய வாழ்த்துகின்றேன். ஆடற் திருமகள் அருளால் ஆடல், பாடல், அறிவாற்றல் யாவும் பெற்று மாணவச் செல்வங்கள் மேன்மையுறுக.



# வாழ்த்துரை

**திரு. நா. சுந்தரலிங்கம்,**
*முன்னாள் கல்விப் பணிப்பாளர்,*
*வலயம் 1*

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தனது வெள்ளி விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். ஒரு பாடசாலையின் வாழ்நாள் மிக நீண்டது. இந்நீட்சிக்கு கல்வி, நிர்வாகப் புலம் சார்ந்தோர், ஆசிரியர், மாணவர், பாடசாலைச் சமூகம் என பலருடைய அர்ப்பணிப்பும், ஈடுபாடும், ஒத்தாசையும் அவசியமாகும்.

25 ஆண்டுகளை தனியாக பூர்த்தி செய்வது இப்பாடசாலையின் உடைய வாழ்நாளின் முதற்படி. இக்காலத்தில் தன் தனித்துவமான அடித்தளத்தை இட்டுக் கொள்ளும் செயற்பாடுகளும், அவற்றை அடைவதற்கான வழிவகைகளும் திட்டமிட்டுச் செயற்படுகின்றன. இச் செயற்பாடுகளினால் அப்பாடசாலையின் வளர்ச்சி துரிதப்படுவதோடு அதன் இருப்பும் நியாயப்படுத்தப்படுகின்றது. பாடசாலையின் தனித்துவமான மரபு உருவாக்கம் பெறுகின்றது.

கடந்த காலங்களில் இப்பாடசாலையின் செயற்பாடுகளையும், மொழித்திறன் செயற்பாடுகளையும் அவதானிக்கும் போது மாணவரின் பல்திறன் வளர்ச்சியும், அதிபர், ஆசிரியர்களது கல்விசார் ஈடுபாடுகளும் தெளிவாகப் புலனாகின்றது.

வளப்பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை என்பனவற்றால் இப்பாடசாலை பெரிதும் பாதிப்புக்குள்ளாவது வெளிப்படை. எனினும் யாழ் வலையத்தில் சிறந்த ஆரம்பப் பாடசாலைகள் என விரல் விட்டு எண்ணக்கூடிய சில பாடசாலைகளுள் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை ஒன்றாக இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இனிவரும் காலங்களிலும் இப்பாடசாலையின் கீர்த்தி மேலும் பொலிவுற்றுப் பெருக வாழ்த்துக்கள்.

# GREETINGS



**Mr. D.R.Arumaynayagam,**
Retired Asst.Director of Eduction (English)
President-Council for Peace & Goodwill,
Jaffna & Jaffna Christian Union.

It gives me great pleasure in sending this message of felicitation to Jaffna Hindu Ladies Primary School on the occasion of their Silver Jubilee celebration.

A Souvenir is a tribute to the past. It is a symbol of gratitude to those who labored untiringly to make the Institution great and a memento honoring those who helped it to earn a name.

The seed of the school was planted in 1979. Throughout these years the Principals and staff have devoted themselves to the education of the young ones meritoriously. I wish to make a special mention of the present Principal Mrs.Thanaranjani Thuraisingam (Vanaja) who has I believe grown with this school for nearly 22 Years, as an Assistant teacher. Sectional Head, Deputy Principal and now Principal. Her early education at the Convents and her commencement of career in the Convents, prompted the then Education officers of the Jaffna Department to appoint her to this school when she came on transfer from the outstation to build up an infant school. Their vision has succeeded.

Like a noble tree, this school has grown from very humble beginnings to fruitful maturity. A principal has to be innovative, forward looking and pioneering even though her task may be challenging. I am sure the versatile present Principal and her loyal band of teachers will build this school to still greater heights.

I have closely watched the performances of this school in English and feel happy and contented that the school has won numerous prizes at the English Day Competitions including Drama, competing with popular schools in the District. This speaks volumes of the tireless service of the administration.

I wish Jaffna Hindu ladies Primary school many more years of continued existence to the cause of education of the young.

# வாழ்த்துரை

***திருமதி திவ்விய சிரோன்மணி நாகராஜா,***
ஓய்வு பெற்ற அதிபர்,
யாழ் இந்து மகளிர் கல்லூரி.

1943ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை வளர்ந்து காலக்கிரமத்தில் திருமதி சிவகுருநாதர் விசாலாட்சி அம்மையாரின் காணி நன்கொடையோடு அரசடி வீதியில் தற்போதைய இடத்தை பெற்றது. யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவர் தொகையாலும் மற்றும் பல்வேறு துறைகளிலும் வளர்ந்து உயர்ச்சி பெற்றது. இக்காலத்தில் 1979ஆம் ஆண்டு சிறார்களைக் கொண்ட 1-5 வகுப்புக்களைக் கொண்ட தொகுதி தனிமையாக்கப்பட்டது. அன்று தொடக்கம் இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப வகுப்புக்களாக கொண்ட இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதை அவதானித்து பெருமை அடைகின்றேன்.

இன்று மாணவிகள் தேசிய மட்டத்திலும் நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுகிறார்கள். புலமைப் பரிசில் பரீட்சையில் பலர் சித்தியடைகின்றார்கள் என்றால் மாணவர்கள் மட்டுமல்ல அவர்களை வழிநடத்திய அதிபர் ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள். இன்று வெள்ளி விழாக் காணும் இப் பாடசாலை மென்மேலும் வளர்ந்து வீறு நடை போடவேண்டி நடுத்தோட்ட ராஜவரோதய பிள்ளையாரை வேண்டி எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



**செல்வி புஷ்பா செல்வநாயகம்,** (B.Sc.)

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் ஒரு அங்கமாக அதன் வளாகத்திலேயே ஆரம்பம் முதல் இயங்கி வந்த அதன் ஆரம்ப பாடசாலை தனியாகப் பிரிந்து, நறுநறு நடை நடந்து, துரித வளர்ச்சியினைக் கண்டு இன்று அதன் இருபத்தைந்தாவது ஆண்டினை நிறைவு செய்து வெள்ளி விழாக் காண்கிறது என்பதை கேட்டமாத்திரத்தில் மனதில் ஒரு நிறைவும் பெருமகிழ்வும் ஏற்படுகின்றது.

1947ஆம் ஆண்டு நான் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் கல்வி கற்க என மலேசியாவில் இருந்து வந்து சேர்ந்தபோது ஆண்டில் முத்த அனுபவம் நிறைந்த திருமதி குமாரவேலு, வைத்தியலிங்கம் போன்ற ஆசிரிய மணிகளால் கல்வி ஊட்டப்பட்ட ஆரம்ப பாடசாலைப் பிரிவில் படித்த மாணவிகள் இன்று ஒரு தனிப் பாடசாலையாக இந்த கல்விக் கூடம் உருப்பெற்று வளர்ந்திருப்பதைக் கண்டு இறும்பூது அடையாமல் இருக்கமுடியாது. இப்பாடசாலை தனியாகப் பிரிந்து இயங்க ஆரம்பித்த அக்கால ஆரம்பத்தில் அதன் தலைமை ஆசிரியையாகப் பொறுப்பேற்ற திருமதி விக்னேஸ்வரா முதல் இன்றுவரை இதன் தலைமைத்துவத்தை ஏற்று இதன் வளர்ச்சிக்கு வித்திட்டு உரமூட்டி அரும்பணி ஆற்றிய, ஆற்றிவரும் ஒவ்வொருவரும் போற்றுதற்குரியவர்கள். அவர்களது அர்ப்பணிப்புக்கும், பணியின் மேன்மைக்கும் அணிகலனாக இப்பாடசாலை இன்று விளங்குகிறது. இங்கு கல்வி கற்று பல்வேறு நிலையில் பலபல துறைகளில் துலங்கும் பழைய மாணவிகள் எமது கல்லூரியை மறந்துவிடாது உள்ளங்களில் இருத்தி அவளின் மேன்மைக்கு அரும்பாடு படவேண்டும்.

நம் தமிழ் பாரம்பரியம், சமய நெறி முதலியவற்றை போற்றி வளர்க்கும் இப்பாடசாலையை அதன் பெருமையை அனைவரும் அறியும்படி செய்யவேண்டும். யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அரும் பெரும் மகவாக அதன் ஆரம்ப பாடசாலை பொன்விழா பவளவிழா போன்ற பல விழாக்களை எடுத்து மேலும் உயர்ச்சியும் மாட்சியும் அடைய எல்லாம் வல்ல இறைவனை பரவி வேண்டிக் கொண்டு அதன் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் என் நல்லாசிகளை வழங்குவதில் புளகாங்கிதம் அடைகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



*திருமதி இராஜேஸ்வரி சண்முகம்.*
(BA Dip.in Ed.)
*முன்னாள் பிரதி அதிபர்,*
*யா/இந்துமகளிர்கல்லூரி*
*யாழ்ப்பாணம்.*

இன்று தனது 25வது வயதுப் பூர்த்தியை கொண்டாடும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை முன்னர் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அங்கமாக அதன் அரவணைப்பில் இருந்தது. தன் அன்னையால் பூஷிக்கப்பட்டு தக்க பராயம் வந்ததும் தனது தனித்துவத்தைப் பேணி சுதந்திரமாக வாழ 01.01.1979 இல் பிரிந்து அவ்வளவின் ஒரு பகுதியிலேயே தனியாக இயங்க ஆரம்பித்தது. மனிதர்களோ மிருகங்களோ பறவைகளோ ஏன் எல்லா உயிரினமுமே பருவம் வந்ததும் தனியாக இயங்க விழைவது இயற்கை.

அப்பொழுது இப்பாடசாலைக்கு அதிபராக பொறுப்பேற்ற திருமதி யோகம்மா விக்கினேஸ்வராவும் அவரது உதவி ஆசிரியர் குழாமும் இன்மைகளையும் இன்னல்களையும் பொருட்படுத்தாது மனந்தளராது ஊக்கத்தோடு செயல்பட்டு இப்பாடசாலையை ஒரு சிறந்த ஆரம்ப பாடசாலையாக உருவாக்கினர். அவர் அக்காலத்தில் பட்ட கஷ்டங்களையும் அவர்களது தளரா நெஞ்சங்களையும் கண்டு நான் வியப்பதுண்டு.

காலத்தின் கொடுமையால் யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லாப் பாடசாலைகளும் ஒரு காலத்தில் நலிவடைந்தன. காலம் ஓரளவு திருந்தியதும் இப்பாடசாலைகள் எல்லாம் மீண்டும் புத்துயிர் பெற்று மிகத் துரிதமாக வளர்ச்சி அடையத் தொடங்கின. இப் பாடசாலையும் அவ்வாறே தேங்கியிருந்த நிலை மாறி வளர்ச்சி பெற ஆரம்பித்துள்ளது.

புதிய அதிபர் வனஜா என்று அன்பாக எல்லோராலும் அழைக்கப்படுபவர், முன்னர் இங்கு ஆசிரியராக இருந்தவர். அப்பொழுதே இப் பாடசாலையின் முன்னேற்றத்தில் மிகுந்த ஆர்வம் காட்டியவர். பொறுப்பேற்ற காலம் தொடங்கி பாடசாலைச் சேவையையே தனது ஒரே

கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறார். அவர் தலைமையில் பாடசாலையின் முன்னேற்றங்கள் கண்கூடாகத் தெரிகிறது.

இப்பாடசாலை தனது தனித்துவத்தைப் பேணுவதோடு தனது தாய்ப் பாடசாலையின் உறவையும் அன்போடு பேணுகிறது. தாய்க் கல்லூரியும் தனது சேயின் வளர்ச்சியில் பெருமை அடைகிறது என்பதில் ஐயமில்லை.

ஒரு மாணவியின் முன்னேற்றத்தை, வளர்ச்சியை கண்டு மகிழும் ஆசிரியர் போல நானும் இப்பாடசாலையின் வளர்ச்சி கண்டு பூரிக்கிறேன். வாழ்க வளர்க என வாழ்த்துகிறேன்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்"

என்பது முதுமொழி. ஆரம்ப பாடசாலைகளின் தோள்களில்தான் நன் மாணாக்கரை, நற் குடிமக்களை உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது. குழந்தைகள் பச்சை மண் போன்றவர்கள். நாம் விரும்பியபடி உருவாக்கப் படக்கூடியவர்கள்.

ஒரு அறிஞர் "The world in which we are living is not inherited from our parents, but borrowed from our children" என்று கூறினார். இத் தத்துவத்தின் அடிப்படையில் நல்லவர்களாக, இனியவர்களாக, அறிவாளிகளாக, நாம் வாழும் பூமியின் அருமை தெரிந்தவர்களாக, நமது சமய பண்பாடு கலாசாரத்தை மேம்படுத்தக் கூடியவர்களாக, உலகின் வருங்காலம் சுபீட்சமாக விளங்க காரணமாக விளங்கப் போகிறவர்களாக உருவாக்க வேண்டியது ஆரம்ப பாடசாலைகளின் பொறுப்பு என நான் நம்புகிறேன். இப் பொறுப்பேற்றுள்ள ஆசிரியர்களாக உங்களை நான் மதிக்கின்றேன். திருமதி தனரஞ்சனியும் அவரது ஆசிரியர் குழாமும் எம் சமூகத்திற்கு ஆற்றி வரும் சேவை மிகப் பெரியது.

நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளும் வெற்றி பெற எனது ஆசிகள்.அன்று தொடக்கம் இன்றுவரை இப்பாடசாலையின் வளர்ச்சியை அருளாட்சி செய்து வரும் நடுத்தோட்டத்தில் விளங்கும் இராசவரோதயப் பிள்ளையார் இப்பாடசாலை இன்னும் ஓங்கி வளர்ந்து சீரும் சிறப்பும் பெற அருள் புரியுமாறு பிரார்த்திக்கிறேன்.

# வாழ்த்துச் செய்தி



**திருமதி அ.கயிலாசபிள்ளை**
*தலைவர்*
*பழைய மாணவர் சங்கம், கொழும்பு*

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

யாழ்ப்பாண நகரில் சைவச் சிறுமிகள் சைவச் சூழலில் கல்வி கற்பதற்கு ஒரு பெண்கள் கல்லூரி இல்லாதிருந்த குறையைப் போக்குவதற்காக, யாழ் இந்துக் கல்லூரி அதிகார சபையினரால் யாழ் இந்து மகளிர் கல்லூரி 1943ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. 1979ம் ஆண்டுமுதல் இக்கல்லூரியின் ஆரம்ப வகுப்புகள் (பாலர் வகுப்புத் தொடக்கம் 5ஆம் ஆண்டுவரை) நிர்வாக அடிப்படையில் தனியாக பிரிக்கப்பட்டு யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை நிறுவப்பட்டது.

இப்பாடசாலை படிப்படியாக வளர்ச்சி கண்டு சைவசமயச் சூழலில் இயங்கும் பெண்களுக்கான ஓர் ஆரம்ப பாடசாலையாக யாழ் நகரில் சிறப்புடன் விளங்குகின்றது. இன்று யாழ் மாவட்ட முன்னணி பாடசாலைகளுள் ஒன்றாக இப்பாடசாலை விளங்குகின்றது. இவற்றிற்கு காரணமான பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகிய சகலருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் பாடசாலை மென்மேலும் சகல துறைகளிலும் வளர்ச்சியடைந்து சிறப்புற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.



# வாழ்த்துச் செய்தி



***திருமதி தி. யோகநாதன்***
யாழ்/இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்க உப தலைவி.

***2004***ஆம் ஆண்டுதனில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை இன்று ஈழத்தின் சிறந்த ஆரம்ப பாடசாலைகளுள் ஒன்றாக விளங்குவது இக் கல்லூரிசார் சமூகத்தினருக்கு மகிழ்வையும் நிறைவையும் அளிக்கின்றது.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்ற முதுமொழி எமக்கு உணர்த்துவது யாதெனில் சிறுபராயத்தில் நாம் பெற்ற கல்வியே பசுமரத்தாணி போல் எம்மனதில் பதிந்து எமது உயர் கல்விக்கு அடித்தளம் இட்டது போலாகும் என்பதனையே. இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கல்விபயின்ற பெண் பிள்ளைகள் பலர் இன்று யாழ் இந்து மகளிர் கல்லூரி போன்ற உயர் நிலைக் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயின்று சமுதாயத்தில் மதிப்பும், செல்வாக்கும் நிறைந்த கல்விமான்களாகவும் அரச கரும பீடங்களில் உயர் பதவிகளை வகிப்பவர்களாகவும் இருப்பது கண்கூடாகும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் நேரடி நிர்வாகக் கட்டமைப்பிலிருந்து பிரிந்து 1979இல் 1முதல் 5ஆம் ஆண்டுவரையிலான வகுப்புக்களைக் கொண்ட தனித்துவமான பாடசாலையாக இப் பாடசாலை செயல்படத் தொடங்கியபோது செயற்திறனும் அர்ப்பணிப்பும் கொண்ட திருமதி யோ ஸ்ரீவிக்னேஸ்வரா அதிபராக அமைந்தமை இப்பாடசாலையின் பாக்கியமே. தொடர்ந்து பதவி வகித்த அதிபர் தமக்கு பக்கத் துணையாக அமைந்த ஆசிரியர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள், கல்வித் திணைக்களத்தினர் ஆகியோரின் கூட்டுறவோடு நல்ல முன்னேற்றப் பாதையில் பாடசாலையை இட்டுச் சென்றனர்.

இன்றைய அதிபர் திருமதி த.துரைசிங்கம் அவர்கள் பாடசாலையின் வெள்ளி விழா ஆண்டான இவ்வாண்டினை கோலாகலமாகக் கொண்டாட அரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். அத்துடன் ஒரு வெள்ளி விழா மலரினையும் வெளியிட முன்னின்று உழைக்கின்றார் அவரின் நன் முயற்சிகள் இனிதே நிறைவு பெறவும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தன் வளர்ச்சிப் பாதையில் பல வெற்றிகளைப் பெறவும் இறைவன் ஆசியை வேண்டி வாழ்த்துகிறேன்.

# வாழ்த்துச் செய்தி



***திரு. செ. சிவஞானம்,***
முன்னைநாள் இலங்கை சத்யசாயி நிறுவனத்தின்
மத்திய இணைப்பாளரும்
தற்போது நிறுவனத்தின் ஆலோசகரும்

ஓர் பாடசாலையின் தனிச் சிறப்பு சோதனைகளின் பெறுபேறுகளில் தங்கியிருக்கின்றது என்பது பொதுவான மதிப்பீடாக இருக்கலாம். ஆனால் இது ஒரு முழுமையான மதிப்பீடாக இருக்க முடியாது. இருக்கவும் கூடாது. ஒரு பாடசாலையின் பிள்ளைகளை வேறு நூற்றுக்கணக்கான பிள்ளைகளுடன் கலந்துவிட்டு அந்தப் பாடசாலையின் பிள்ளைகளை தனித்தனியாக இனங்கண்டு வேறுபடுத்த முடியுமானால் அதுதான் தனிச் சிறப்பு. அந்தத் தனிச் சிறப்பு எதனால் ஏற்படுகின்றது? பிள்ளைகளின் பழக்க வழக்கங்களால் (Behavior) ஏற்படுகின்றது. அந்தத் தனிச்சிறப்பை விருத்திபண்ணியிருக்கிறார்கள் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி தனரஞ்சினி துரைசிங்கம், அவர்களுக்கு உதவியாளர்களாக இருக்கும் சக ஆசிரியர்கள்.

இந்த விருத்தி பல ஆண்டுகளின் பெறுபேறாகவே வரும். வெள்ளி விழாவை கொண்டாடும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை நான் சொன்ன தகைமைகளைப் பெற்று மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றமைக்காக மனமார பாராட்டி வாழ்த்துகின்றேன். ஆறு வயது தொடக்கம் பத்து வயதுவரை உள்ள 537 சிறு பெண் பிள்ளைகள் இப்பாடசாலையில் படிக்கிறார்கள். பதினாறு ஆசிரியர்கள் இங்கு கற்பிக்கின்றார்கள்.

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் பெயரில் இயங்கும் சத்ய சாயி நிறுவனத்தில் மனித மேம்பாட்டு கல்வித் திட்டத்தில் ”பாலவிகாஷ்” என்ற பகுதி இயங்குகிறது. இத்திட்டத்தில் வாரம் ஒரு முறை விசேஷ பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் (குருமார்) ஆறு வயது தொடக்கம் பதினான்காவது வயதுவரைக்கும் நேரடியாக (Direct Method) மனித மேம்பாடுகளை விசேஷமாக தயாரிக்கப்பட்ட பாட விதானங்களின்படி கற்பிக்கிறார்கள். இந்தக் கல்வி சத்ய சாயி நிலையங்களிலேயே நடைபெறுகின்றது. அத்தோடு

அரச/தனிப்பட்ட பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களிற்கும் வழக்கமான பாடவிதானங்களுடன் (School Curriculum) ஒன்றிணைக்கப்பட்ட முறையில் (Integrated Method) மனித மேம்பாடுகள் கற்பிக்கப்படுகின்றன. மேம்பாடுகள் இல்லாத கல்வி பிரயோசனம் அற்றது. (Education without human values is useless, says Bhagavan Sri Sathya Sai Baba).

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை நாங்கள் வழக்கமாக செய்யும் கணிப்பீடுகளின் படி முன்னிலையில் இருக்கிறது. புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடையும் பிள்ளைகளின் எண்ணிக்கை விகிதாசாரம் மிகவும் சிறப்பாக இருக்கின்றது. சிறுவர் அரங்க (ஆங்கில, தமிழ்) நிகழ்வுகள், போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டி வருகிறது. பண்ணிசைப் போட்டிகளில் தங்கப் பதக்கங்கள் பெற்று இருக்கின்றது. தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, வலய, மாவட்ட, மாகாண மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றியீட்டி வருகின்றது.

மனித மேம்பாட்டு விழிப்புணர்வை நூல்கள் மூலமும் பேச்சுக்கள் மூலமும் சமூகத்தில் ஏற்படுத்திக் கொண்டுவரும் திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் வெள்ளிவிழாவிற்கு தலைமை தாங்குவது மிகவும் பொருத்தமானது.



# மலராசிரியரின் மனதிலிருந்து......



*திருமதி அனுசுயா விஜயநாதன்.*

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் 25 வருட அகவையை முன்னிட்டு அதன் நிறைவாக வெளிவரும் இம்மலரானது தேடல்களின் விளைவாக, தடயங்கள் பல பொதிந்த, வாக்குமூலங்கள் பல பதிந்த ஆவணமாக திகழவேண்டும் என்ற ஆர்வத்தில் எழுந்த வெளிப்பாடாகும்.

எமது ஆர்வத்திற்கு உரமேற்றும் வகையில் ஆசி, வாழ்த்துச் செய்திகள், அறிவு சார் கட்டுரைகள், ஆசிரிய, மாணவர்களின் கட்டுரைகள், பாடல்கள், கவிதைகள், துறைசார் விற்பன்னர்களின் கட்டுரைகள், எமது பாடசாலையின் பல்வேறு வரலாற்று அம்சங்கள் போன்ற பல இதழ்களை இணைத்து ஒட்ட வைத்த ஒரு மலராக இது உங்கள் கரங்களில் கையளிக்கப்பட்டுள்ளது.

**"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை"**

என்பதை உணர்ந்து, துணிந்து, எமது அதிபரின் ஆர்வ மிகுதியினாலும் எண்ணிய கருமம் முடிக்கும் திறனினாலும் உருவான இம் மலரின் குற்றம் நீக்கி, குணம் நாடி, மலரை ஏற்று, நுகர்வீர்கள் என எதிர்பார்த்து கல்வித் தெய்வத்திற்கே அதிபதியான சரஸ்வதித் தாயின் திருவடிகளுக்கு நன்றி கூறி சமர்ப்பிக்கின்றேன்.



# முதல் அதிபர்



திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா.
அதிபர் தரம் 2 -1 (பண்டிதர்)

## இலச்சனையும் விளக்கமும்

"அன்பே வாழ்வு" என்ற பாடசாலையின் மகுட வாசகத்தை ஏந்தி திறந்த புத்தகத்தின் மத்தியிலே வெண்டாமரையில் ஒரு கையிலே ஏட்டினைத் தாங்கி, மறு கையிலே கானம் இசைக்கும் வீணையை மீட்டி, கல்விச் செல்வத்திற்கே அதிபதியாகிய சரஸ்வதித் தாய் வீற்றிருந்து அருள்பாலிக்க, ஒருபுறம் விளையாட்டின் மகிமையை உணர்த்தும் ஒலிம்பிக் தீபம் சுடர் விட்டு ஒளிர, மறுபுறம் தொழில் நுட்ப வளர்ச்சி கண்டு மிளிரும் சுருங்கிவிட்ட வலைப்பின்னல் உலகத்தின் கோலத்தைக் காட்ட, இவற்றிற்கெல்லாம் தலையாக, பெயர் வரக்காரணமான யாழைக்காட்டி எழில் கொஞ்சும் பச்சை வர்ணக் கொடியில் பாடசாலைப் பெயரைத் தாங்கி வெளிவந்துள்ளது எமது பாடசாலை இலச்சனை.

*அன்பின் வழியது உயிர்நிலை உயிரின் உயர்வு கல்வி*
*கல்வியின் உயர்ச்சி கட்டுடல் வளர்ச்சி*
*மண்ணின்மாண்பு தொழில்நுட்பமேன்மை*
*வித்தியாலயம் அவாவும் வாழ்வியல் நோக்குகள் இவையே*

## பாடசாலைக் கீதம்

**இராகம் - ஹம்சத்வனி**
**தாளம் - சதுஸ்ரஏகம்**
**நடை - திஸ்டம்**

யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பள்ளித்
தாயே வணக்கம் அம்மா
வண்ணை வடக்கில் எம்மை அணைக்க
வந்தாய் வணக்கம் அம்மா

பச்சை வெண்மையுடன் பாங்கும் கொடிதான்
பட்டொளி வீசு தம்மா
அச்சம் அகன்றும் அரவணைப் பினிலே
அகமே மகிழ்வம் அம்மா

செந்தமிழ்ச் செல்வியர் எமக்கு இங்கே
சிவ நெறியுடன் அறிவும்
தந்து வளர்க்கும் இந்திளம் பள்ளித்
தாயே வணக்கம் அம்மா

அன்னையர்க் கன்னையாம் எம் அதிபருடன்
நல்லாசிரியர் குழுவும்
நன்னடை நல்கி நமை வளர்த்திடுவார்
நலமே வணக்கம் அம்மா.

**இயற்றியவர் :-**
**குழந்தைக் கவிஞர் அமரர் பா. சத்தியசீலன்,**
**நவாலி.**

# புலமையும் பதிவும்

எமது பாடசாலைக் கீதம் பாடும் ஒவ்வொரு மனங்களிலும் பதிவுகள் பல தந்த பாவேந்தன் அமரர் பா. சத்தியசீலன் அவர்களுடைய வாழ்வு அவர் இறப்போடு முடிந்துவிடவில்லை. நல்ல படைப்பால் அவர் வாழும் சமூகத்தில் மட்டுமல்ல உலகெங்கும் தன் படைப்புக்களால் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்.

அந்த வகையில் தடம்பதித்த கலைஞனாக, படைப்பாளியாக, வெளியீட்டாளனாக, நாடக நெறியாளனாக, சிறந்த மேடைப் பேச்சாளனாக, நல்லாசிரியனாக, குழந்தைக் கவிஞனாக எம் மண்ணில் பல பதிவுகளைத் தந்து சென்றவர் இவர்.

15.06.1938 இல் அல்லைப்பிட்டியில் பிறந்து, நவாலியில் வாழ்ந்து, பயிற்சி பெற்ற ஆசிரியராகி, பண்டிதராகி, சிறப்புக் கலைமாமணியாக, புகழ்பெற்ற சிறந்த கவிஞனும், பாவலனுமாகிய இவரிடம் எமது பாடசாலைக்கென ஒரு பாடசாலைக் கீதத்தைப் பாடித் தரும்படி முதலதிபர் வேண்டுகோள் விடுத்தார். கவிஞர் பாடசாலைக்கு வந்தார். பாடசாலையைப்பற்றி கலந்துரையாடினார். "நான் பாடுகிறேன் நீங்கள் எழுதுங்கள்" என்று கூறிப் பாடினார். அவ்வாறு எழுதி எடுக்கப்பட்ட எமது பாடசாலைக்கீதம் அவருடைய இசையாற்றலையும் படைப்புத்திறனையும் காட்டுவதாய் அமைந்துள்ளது. அவர் குரல் என்றும் எமது பாடசாலையில் ஒலித்துக்கொண்டே இருக்கும். அமரர் ஆகிவிட்ட அவர் நினைவு என்றும் எமது பாடசாலையில் நிலைத்தே இருக்கும்.



## எமது பாடசாலை அதிபர்



திருமதி தனரஞ்சனி துரைசிங்கம்

அதிபர் தரம் 2-I




பகுதித் தலைவர்



வெள்ளிவிழா மலர்குழு

# காலத்தின் பதிவுகள்

**திருமதி தனரஞ்சனி துரைசிங்கம்**
இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபா

யாழ். இந்து மகளிர் கல்லூரி வளாகத்தில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் நடுத்தோட்டத்து இராஜவரோதய விக்கினேஸ்வரப் பெருமானினதும், தன்னை உள்ளன்போடு நாடிவரும் பக்தர்களுக்கு அருளாசியை அள்ளிவழங்கும், கலியுகவரதனாம் நல்லூா் முருகப் பெருமானினதும், என்னை வழிநடத்திய, எனது பெற்றோா் வழி நடத்திக் கொண்டிருக்கும் சாயி பகவானினதும் அருள் ஆசியை வேண்டி, குறைந்த வளங்களுடன், தனது சேவையை நிறைவாக இப்பாடசாலைக்கு வழங்கி அயராது உழைத்த, இப்பாடசாலையின் முதல் அதிபா் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா அவா்களையும், இப்பாடசாலையின் சிறப்பிற்கு அயராது உழைத்த முன்னாள் ஆசிரியா்கள், பெற்றோா்கள், நலன்விரும்பிகள், கல்வித்திணைக்களத்தினா் அனைவரையும் நன்றியுடன் மனத்தில் நிறுத்தி, வெள்ளிவிழா ஆண்டிலே பிரகாசித்துக் கொண்டிருக்கும் இப்பாடசாலையின் காலத்தின் பதிவுகளைச் சமா்ப்பிக்க வேண்டிய தேவையுள்ளது.

அனைத்து நற்செயற்பாடுகளையும், விக்னேஸ்வரப் பெருமானை வழிபட்டே தொடங்குவோம், எல்லா சிறப்பிற்கும் நல்லயோகம் வேண்டும் என்றும் சொல்லக் கேட்டிருக்கிறோம். அந்த வகையில், நற்செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் போது விக்னேஸ்வரனை மனதில் இருத்தினால் யோகம் கிடைக்கும் என்பதற்கு ஏற்ப, **ஸ்ரீவிக்கினேஸ்வரா - யோகம்மா** என்ற பெயரைத் தாங்கி நல்ல சுபநேரத்தில் இப்பாடசாலையைப்பொறுப்பேற்றுச் சிறப்புடன் வழிநடத்திய முதல் அதிபா் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா அவா்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, இன்று மழலைகளின் மகிழ்ச்சியூட்டும் கலைக்கூடமாக, யாழ்மாவட்டத்தில் சைவச் சூழலில் வளா்த்தெடுக்கப்படுகின்ற சிறுமியருக்கான ஆரம்ப பாடசாலையாகச் சுடா் விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருப்பதற்கு அவா் ஆற்றிய நற்பணியின் பயன் என்றே கூறலாம்.

கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனைகள் படைத்து வரும் இப்பாடசாலை புதுப்பொலிவுடன் இன்று வெள்ளிவிழா காண்கிறது. ஆசிரியராக, பிரதி அதிபராக, அதிபராக 22 வருடங்கள் இந்துமகளிா் ஆரம்ப பாடசாலை அன்னையின் மடியில் தவழ்ந்து வளா்ந்தவள் என்ற முறையில் உரிமையுடன் பணிசெய்ய வாய்ப்புக் கிடைத்தது. இந்நிகழ்வையொட்டி வெளிவரும் வெள்ளிவிழா மலா் கண்டு பாடசாலை அன்னை அகமகிழ்கிறாள். இந்நிகழ்வு எனது சேவைக் காலத்தில் இடம் பெறுவது நான் செய்த பாக்கியம் என்றே கருதுகிறேன்.

**முதல் அதிபா்**

இப்பாடசாலையின் முதல் அதிபராக விளங்கிய திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா அவா்கள், (1947-1953 வரை) யா/சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியாவாா். 1957-1958 வரை யாழ்/திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில்

**ஆசிரியர் பயிற்சி** பெற்றார். 1959இல் தான் கல்வி கற்ற சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியில் தற்காலிக ஆசிரியராகக் கடமையாற்றினார். 1960.01.01 - 1971.07.31 வரை யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றியுள்ளார். 1971.08.01இல் நான்காந்தர தலைமை ஆசிரியர் பதவியுடன், யாழ் இந்து பெண்கள் கல்லூரிக்கு (யாழ் இந்து மகளிர் கல்லூரி) நியமிக்கப்பட்டார். திருமதி விமலா ஆறுமுகம், செல்வி பத்மாவதி இராமநாதன் போன்றோர் அதிபர்களாகக் கடமையாற்றிய காலப்பகுதியாகும். மேற்படி பாடசாலையில் இருந்த ஆரம்ப பிரிவு வகுப்புகளின் பொறுப்புகள் இவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அப்போது இவரின் மேற்பார்வையின் கீழ் யாழ் இந்து மகளிர் கல்லூரியுடன் இணைந்த பாடசாலையாக எங்கள் பாடசாலை இயங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வளவுக்குள்ளேயே அதன் தென்கிழக்கு மூலைப்பகுதியில் அமைந்துள்ள இப்பாடசாலை 1979.01.01 தொடக்கம் கல்லூரியிலிருந்து பிரிக்கப்பட்டு தனித்தியங்கி வருகிறது. இந்த வகையில் ஆரம்ப பாடசாலையின் நிர்வாகம் வேறாக்கப்பட்ட போது, அவர் அதன் அதிபராகப் பொறுப்பேற்றார். திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா அம்மையார் அவர்கள் தமிழ்ப் பண்டிதரும், ஆசிரிய ஆலோசகருமாவார் (Teacher Counsellor).

இப்பாடசாலை தனித்தியங்கத் தொடங்கிய 1979.01.01 முதல் பல இன்னல்கள், தடைகள், நெருக்கீடுகளுக்கு மத்தியில், எதிர் நீச்சல் போட்டு முன்னேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலும், அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் மன உறுதி, அர்ப்பணிப்பு, விடாமுயற்சியும், அப்போது இருந்த ஆசிரியர்குழாம், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், போன்றோரின் நிறைவான ஒத்துழைப்புகள், மற்றும் அப்போதைய கல்வித்திணைக்களத்தினரின் பங்களிப்புகள் போன்றவை இப்பாடசாலை படிப்படியாகப் பல்துறைகளிலும், முன்னேற்றம் கண்டு பிரபல்யம் அடைந்து வருவதற்கு உறுதுணையாக இருந்தன. யாழ்மாவட்டத்திலேயே, சைவச் சூழலிலே வளர்த்தெடுக்கப்படுகின்ற பெண்களுக்கான ஆரம்ப பாடசாலையாகப் பிரகாசிக்கத் தொடங்கியது. இவர் தனது ஓய்வுக்காலம் வரை இப்பாடசாலையின் அடிப்படை வசதிகள் பௌதிகவள அபிவிருத்திகள், மாணவர்கல்வி அபிவிருத்தி போன்ற விடயங்களில் ஏனைய முன்னணி பாடசாலைகளுக்கு இணையாக இப்பாடசாலையும் பிரபல்யம் அடைய முயற்சி செய்தார். புலமைப்பரிசில் பெறுபேறுகளில் வருடாவருடம் முன்னேற்றம் காணப்படுகிறது. மாணவர் தொகையும் அதிகரித்து வருகிறது.

இவர் ஓய்வு பெறும்போது யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், இப்பாடசாலையில் 1982.01.01 தொடக்கம் ஆசிரியராகக் கடமையாற்றியவரும், இப்பாடசாலையின் தரத்தையும், அதன் மேம்பாட்டையும், பாரம்பரியத்தையும் பேணிப்பாதுகாத்துக் கட்டியெழுப்பக் கூடியவருமென்று தான் கருதிய திருமதி. தனரஞ்சனி துரைசிங்கம் அவர்களிடம் ஒப்படைத்தார். அவர் அப்பொறுப்பை ஏற்று 1994.01.01 தொடக்கம் 1996.07.09 வரை பிரதி அதிபராகவும், 1996.02.10 தொடக்கம் அதிபராகவும் கடமையாற்றி வருகிறார்.

**பாடசாலைக் கட்டிடங்களின் அபிவிருத்தி**

கல்லூரிக்குத் திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அம்மையார் அவர்கள் நன்கொடையாகத் தந்துதவிய அரசடிவீதியில் உள்ள விசாலமான நிலப்பரப்பில் அதன் தென்கிழக்கு மூலைப்பகுதியில், கல்லூரி பயன்படுத்தி வந்த 70'×20' (1400ச.அடி) அளவு கொண்ட கைப்பணி அறை 1979ஆம் ஆண்டு இப்பாடசாலைக்கு ஒதுக்கித்தரப்பட்டது. 1979ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் இப்பாடசாலைக்கென ஒதுக்கித்தரப்பட்ட முப்பதாயிரம் (30,000/-) ரூபாவையும் பின்னர் கிடைத்த முப்பதாயிரம்

(30,000/-) ரூபாவையும் கொண்டு 50'×25' அளவு கொண்ட மேல்மாடிக் கட்டிடத்தின் தளவறை வேலை நடைபெற்றது. 1981இல் கைப்பணி அறையுடன் தொடர்ச்சியாக இருந்த மனையியல் அறை, 70'×20' (1400ச.அடி) இப்பாடசாலைக்கு கொடுக்கப்பட்டது. அக்காலப் பகுதியில் மனையியல் அறையில் கல்லூரி மனையியல் வகுப்புகள் ஒருபுறமும், இப்பாடசாலையின் இரண்டு வகுப்புகள் மறுபுறமும் நடக்க வேண்டிய இக்கட்டான நிலையில் பாடசாலை இயங்கியது. 1979இல் கட்டிமுடிக்க வேண்டிய 50'×25' மேல்மாடி, 1983.02.21இல் தான் நிறைவேற வேண்டிய நிலை ஏற்பட்டது.

**கட்டிட நெருக்கடி**

பதிவுகளின்படி இப்பாடசாலைக்கு ஆண்டு தோறும் கட்டிட நெருக்கடி இருந்து கொண்டே வருகிறது. குறிப்பாகச் சொல்லப் போனால் வகுப்பறை இன்மையால் இரு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களை ஒரே வகுப்பறைக்குள் அடக்க வேண்டிய நெருக்கடி நிலைமையும் காணப்பட்டது. பாடசாலையில் அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கு ஏற்ப கட்டப்படும் கட்டிடங்களின் அளவு அமையாமையே எமது இந்த இடர் நிலைக்குக் காரணம் என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. ஒன்று கூடல் மண்டபம் இன்றுவரை இல்லாமை பெரும் குறையாகவே காணப்படுகிறது.

**தளபாடத் தட்டுப்பாடு**

இப்பாடசாலைக்குத் தளபாடங்கள் எப்போதுமே தட்டுப்பாடாக இருந்துள்ளது. கல்லூரியில் இருந்து இப்பாடசாலை பிரிக்கப்பட்டபோது அங்குள்ள பாலர் மேசைகளும், கதிரைகளும் தேவைக்குத் தேவை இப்பாடசாலைக்குத் தரப்படும் என்று வட்டாரக் கல்வி அதிகாரி அவர்களால் கூறப்பட்ட போதிலும், கல்லூரியின் தளபாடத் தட்டுப்பாட்டைச் சமாளிக்கப் பாலர் மேசை கதிரைகளையே பயன்படுத்தி வந்ததால் இப்பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள் தரப்படவில்லை. இதன் பயனாக 1980ஆம் ஆண்டு இப்பாடசாலையில் 130 பிள்ளைகள் நிலத்திலேயே இருந்து படித்து வந்தார்கள். மலசலக்கூடம் அமைக்க ஒதுக்கியிருந்த பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதியைக் கொண்டு 25 பாலர் மேசைகளும், 50 பாலர் கதிரைகளும் வாங்கப்பட்டன. அக்காலப் பகுதியில் கல்வித் திணைக்களமும் தளபாடங்கள் தந்துதவி தளபாடத் தட்டுப்பாட்டைச் சிறிது தளர்த்தியது.

இன்றுவரை தளபாட பற்றாக்குறை இருந்து கொண்டு வருகிறது. தரம் 5இற்கான மாணவர் மேசை கதிரைகள் அவசியம் தேவைப்படுகின்றன.

**பாடசாலையின் பெயர்**

கல்லூரியின் அன்றைய பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயற்குழுவுடன் சமூகமாயிருந்த வட்டாரக் கல்வி அதிகாரி திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள், நிர்வாக அடிப்படையில் மட்டும் இப்பாடசாலை பிரிக்கப்படுகின்றபடியால், இந்து மகளிர் கல்லூரி வளவுக்குள்ளேயே அமையும் இப்பாடசாலைக்கு "**இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**" எனப் பெயரிடுவது மிகவும் பொருத்தமெனக் கூறிய போது யாவரும் அதனை ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

**ஆசிரியர்கள்**

1979இல் 4 ஆசிரியருடனும் 154 மாணவருடனும் ஆரம்பிக்கப்பட்டது. திருமதி ம. நடேசபிள்ளை, திருமதி அ. வீரசிங்கம், திருமதி அ. குருநாதன் போன்றோர் கல்லூரியில் கடமையாற்றி, ஆரம்ப பாடசாலை பிரிக்கப்பட்டபோது அங்கிருந்து வருகை தந்தவர்கள். திருமதி அ. செல்வத்துரை 1979.02.06 தொடக்கம் வேறுபாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்று வந்தவர். 1980.03.01 இல் கல்லூரியிலிருந்து இப்பாடசாலைக்குத் திருமதி

ஜெ. கந்தையா இடமாற்றம் பெற்று வந்தார். ஆசிரியர் தொகை படிப்படியாக அதிகரித்து வந்தது. 1995இல் 25 ஆசிரியர்கள் கற்பித்தார்கள். பாடசாலையின் நிர்வாக விடயங்களிலும், மாணவர் கல்வி அபிவிருத்தியிலும் திருமதி செ. சகாதேவன், திருமதி த. துரைசிங்கம் ஆகியோர் முறையே உப அதிபராகவும், பிரதி அதிபராகவும், கடமை ஆற்றினர். 2004இல் 17 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர். 1995இன் இடம் பெயர்வோடு எமது பாடசாலையின் பெரும்பாலான ஆசிரியர்கள் ஓய்விலும், இடமாற்றம் பெற்றும் சென்றுள்ளனர். தற்போது பாடசாலையில் புதிய ஆசிரியர் கட்டமைப்புத்தான் காணப்படுகிறது.

**வகுப்பும் மாணவர் தொகையும்**

1979இல் பாலர் வகுப்பு தொடக்கம் 2ஆம் வகுப்பு வரையும், வருட ஆரம்பத்தில் 148 மாணவரும், வருடமுடிவில் 154 மாணவரும், 1980இல் பாலர் வகுப்பு தொடக்கம் 3ஆம் வகுப்பு வரையும், வருட ஆரம்பத்தில் 233 மாணவரும், வருட முடிவில் 251 மாணவரும், 1981இல் பாலர் வகுப்பு தொடக்கம் 4ஆம் வகுப்பு வரையும், வருட ஆரம்பத்தில் 333 மாணவரும், வருட முடிவில் 343 மாணவரும், கல்விகற்றனர். 1995இல் 775 மாணவர் கல்விகற்றார்கள், 2004இல் 531 மாணவர் கல்விகற்கிறார்கள்.

1980இல் பாலர் வகுப்பிற்கு விண்ணப்பித்த பெற்றோர்களின் ஒருசாராரின் வேண்டுதலின் பேரில், மேலதிகமாக ஒருபிரிவு, பாலர் வகுப்பில் வைப்பதற்கான உத்தரவை, நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் கல்வித்திணைக்களத்திலிருந்து பெற்றுத் தந்ததன் விளைவாக மேலதிக பிரிவு வைக்கப்பட்டது. தொடர்ச்சியாக வகுப்புப் பிரிவுகளும் அதிகரித்தது. 1990 தொடக்கம் 1995 காலப்பகுதிவரையும் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையும் ஒவ்வொரு வகுப்பிலும் 4 பிரிவுகள் இயங்கின. 2004இல் ஒவ்வொரு வகுப்பிலும் 3 பிரிவுகளே உள்ளன. மாணவர் தொகைக்கேற்ப வகுப்பறைப் பற்றாக்குறை, தளபாடத்தட்டுப்பாடு ஆசிரியர் பற்றாக்குறை ஆகிய முக்கிய பிரச்சனைகளைத் தொடர்ந்தும் எதிர்நோக்க வேண்டிய நிலைமை இப்பாடசாலைக்கு இருந்து வருகிறது. இன்றுவரை ஒன்றுகூடல் மண்டபம் இல்லாததும் பெருங்குறையாகவே உள்ளது. ஏற்கனவே இருந்தது போன்று, இனிவரும் காலங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் 4 பிரிவுகள் இருக்க வேண்டியது அவசியமாகும்.

**பாடசாலையின் அமைவிடம்**

தரம் மூன்று வகையைச் சேர்ந்த இந்தப் பாடசாலை, யாழ்ப்பாணம் அரசடி வீதியில் விசாலாட்சி சிவகுருநாதர் அவர்கள் இந்து மகளிர் கல்லூரிக்கு வழங்கிய காணியில், தென்கிழக்கு மூலைப்பகுதியில் 80பேர்ச் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் J|102, கந்தர்மடம் வடமேற்கு கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ளது. பாடசாலையின் மகுட வாசகம் **“அன்பே வாழ்வு”** என்பதாகும்.

**கழுத்துப்பட்டி**

1983 வைகாசி மாதம், அதிபர் மற்றும் திருமதி நா. சத்தியநாதன், திருமதி. எஸ். இராமலிங்கம், திருமதி ஜெ. கந்தையா போன்றோரின் முயற்சியால் 1983.05.11 புதன் காலைக் கூட்டத்தின் போது பாடசாலை மாணவர் தலைவர்களுக்கு அதிபராலும், வகுப்புத் தலைவர்களுக்கு வகுப்பாசிரியர்களாலும் முதன் முதலாகக் கழுத்துப்பட்டி அணிவிக்கப்பட்டது.

**பாடசாலை கீதமும்,. இலச்சனையும்**

நவாலியூரைச் சேர்ந்த குழந்தைக் கவிஞர் அமரர் பா. சத்தியசீலன் அவர்களால் பாடசாலைக்கீதம் இயற்றித்தரப்பட்டது. 1994இல் பாடசாலைக்குரிய இலச்சனை

உருவாக்கப்பட்டது. 1994.10.06 உலக ஆசிரியர் தினத்தின்போது திரு. வைத்திலிங்கம் சண்முகநாதன் (மோகன்) என்பவரால் அதிபரிடம் கையளிக்கப்பட்டது. திரு.மு.இராதாகிருஷ்ணன் அவர்கள் இந்த இலச்சனையை வரைந்து உதவினார்.

**பாடசாலைக்கான பாதை**

1979–1982 வரை இந்து மகளிர் கல்லூரி நுழைவாயில் போக்கு வரத்துக்குப் பயன்பட்டது. 1982.06.14இல் இந்து மகளிர் ஒழுங்கையில் அமைக்கப்பட்ட புதிய பாதையை/வாசலை போக்கு வரத்துக்காகப் பயன்படுத்த ஆரம்பித்தோம். ஒடுக்கமுள்ள இந்து மகளிர் ஒழுங்கை ஆபத்து மிக்கதென்பதை அன்று அனுபவமூலமாக உணர்ந்து கொண்ட பெற்றோர்கள், அரசடி வீதியில் பாதை அமைப்பது பற்றிய கோரிக்கையை ஆரம்பத்தில் இருந்தே முன் வைத்தார்கள். 1992.05.15இல் அரசடி வீதியில் நுளைவாயில் கொண்ட பாதை திறக்கப்பட்டது. முதல் அதிபரின் பதிவின்படி 1990.03.04 இல் யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்குப் புதிய பாதை ஒன்றினைத் திறப்பது பற்றிய முன்மொழிவு, அப்போது இருந்த இரு பாடசாலைகளினதும், அபிவிருத்திச் சங்கங்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கல்வித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டு பாதை திறக்கப்பட்டது என்றும், இப்பாடசாலைக்கு அரசடி வீதியில் நுழைவாயில் கொண்ட பாதை திறக்கப்படுகிறது. இப்பாடசாலையின் ஆரம்பமுதல் இப்பாதை விடயமாகப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பெருமுயற்சி எடுத்து வந்திருக்கிறதென்பதும், இன்று அதன் செலவிலேயே இப்பாதை அமைக்கப்படுகிறதென்பதும் குறிப்பிட வேண்டியதாகும் என்று கூறப்பட்டுள்ளது. அன்று கொத்தணி அதிபராகவும், இந்து மகளிர் கல்லூரியின் அதிபராகவும் இருந்த திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா அவர்களின் காலப்பகுதியில் "புதிய பாதை திறப்பு விழா" விழாவாகக் கொண்டாடப்பட்டது. அப்போதைய செயலாளர் எஸ். சிவானந்தன் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் அது செயற்படுத்தப்பட்டது.

**இணைப் பாடவிதான செயற்பாடுகள்**

சைவநெறிச் செயற்பாடுகள், விளையாட்டுச் செயற்பாடுகள், ஆங்கிலதின, தமிழ்த்தினச் செயற்பாடுகள், சுகநலச் செயற்பாடுகள், சிறுவர் அரங்க செயற்பாடுகள் போன்றவை தொடக்ககாலம் முதல் இன்றுவரை மிகவும் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவர் ஒழுக்கமும், கட்டுப்பாடும் மேலோங்கிக் காணப்படுகிறது.

தமிழ் மொழித்தினப் போட்டிகளில், கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் மற்றும் தேசியமட்டப் பரிசில்கள், ஆங்கிலதினப் போட்டிகளில், மாகாணமட்டப் பரிசில்கள், சைவபரிபாலனசபை பரீட்சைகளிலும், பண்ணிசைப் போட்டிகளிலும் பங்குபற்றி தங்கப் பதக்கங்கள் ஆகியவை பெற்று எமது பாடசாலை சாதனை படைத்து வருகிறது. சிறுவர் அரங்கு இப்பாடசாலையில் சிறப்பாகச் செயற்படுத்தப்படுகிறது.

"மனிதர்களைத் திருத்துவதை விட சிறுவர்களைக் கட்டி எழுப்புவது மேல்" என்ற வாசகத்திற்கு அமைவாக, சிறுமியரின் பண்புசார் விருத்தி, தனிநபர் சுகாதாரம், சுகவாழ்வு, நல்லொழுக்க நெறிகள் சிறப்புற முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இப்பாடசாலையில் ஆறு வயது தொடக்கம் பத்து வயது வரையிலான மாணவர்கள் கல்வி பயில்வதால் பாடசாலையில் நடைபெறும் வைபவங்களுக்கு நலன்விரும்பிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்களின் உதவிகள் அவசியமாக உள்ளது. இந்தவகையில் செயல்திறனும், சிந்தனைத் தெளிவும், அர்ப்பணிப்பும் நிறைந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. நா. கமலநாதன் அவர்கள், கடந்த ஐந்து வருடங்களாகச் செயலாளராகக் கடமை

புரிந்துள்ளார். அன்னாரது கண்ணியம்மிக்க கடமையுணர்வினை இந்த வேளையில் பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டாமல் இருக்கமுடியாது. உறுப்பினருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

பாடசாலையின் உள்ளகக்கட்டமைப்பை அபிவிருத்தி செய்வதிலும், பேணுவதிலும் செயற்பட்டமை, பாடசாலையின் பௌதிகவள, மற்றும் வசதிகளைச் சீர்திருத்துவதிலும், விரிவாக்குவதிலும் உதவியமை, பாடசாலையின் சமூகத்தின் தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் பேணும் கருத்துடன் அதன் நலன்புரி செயற்பாடுகளை ஆதரித்து வலுப்பெறச் செய்தமை, கல்வித்திணைக்களத்தின் ஒதுக்கீடுகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி தொகைகள் ஆகியவற்றைக் கூடியளவு பயன்படுத்துவதற்குப் பாடசாலைக்கு உதவியமை, அவற்றை முறையாகச் செலவழிப்பதற்கு வழிவகுத்தமை போன்றவை இச்சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டன. நாட்டின் பதட்ட நிலைமை காரணமாக 1983-1994 காலப்பகுதி அரசியல் நெருக்கடிகள் எதிர் நோக்கிய காலம், எனினும் கல்வி அடைவுகளிலும், இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளிலும், பௌதிகவள அபிவிருத்தியிலும் முன்னேற்றம் காணப்பட்டே வந்து கொண்டிருந்தது. 1995இல் இடம் பெற்ற நிகழ்வுகளால் பாடசாலை மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த போதும், படிப்படியாக யாவும் ஒழுங்கமைக்கப்பட்டு வருவதற்கு அபிவிருத்திச் சங்கம் தனது பங்களிப்பை ஆற்றியது. தொடக்கம் முதல் இன்றுவரை நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் இச்சங்கத்தின் செயலாளர் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன.

**பழைய மாணவர் சங்கம்**

பாடசாலையின் வளர்ச்சிக்கு மற்றொரு வடிவமாக உதவிவரும் அமைப்பாகிய பழைய மாணவர் சங்கம், பாடசாலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு 1992இல் ஆரம்பிக்கப்பட்டு, இயலுமான வரை பாடசாலையின் நலனுக்காகச் செயற்படுகிறது. என்னிடம் கல்வி கற்று தற்போது இப்பாடசாலையின் ஆசிரியராகவும் கடமை யாற்றிக் கொண்டிருக்கும் திருமதி. சுபாங்கினி சுஜீவன் அவர்கள் இச்சங்கத்தின் தலைவராக இருந்து செயற்படுகிறார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு எமது உருக்கமான வேண்டுகோளையேற்று, எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவிவருகின்றது. மாணவரின் கற்றற் செயற்பாடுகளுக்கு நவீன தொழில்நுட்ப சாதனங்கள் எமக்கு வழங்கியுள்ளார்கள். விசேடமாக திருமதி. விமலா மணிவாசகன் அவர்கள் தமது மகள் வாசுகி மணிவாசகன் ஞாபகார்த்தமாக 1991ஆம் ஆண்டு முதல் இன்றுவரை எமது பாடசாலையின் சிறுவர்களின் நூலக வாசிப்புத் திறனை விருத்தி செய்யும் நோக்கோடு சிறுவர்களுக்கேற்ற தமிழ், ஆங்கில நூல்களை வழங்கி வருகிறார். வெள்ளிவிழா மலர்குழுவிலும் உறுப்பினராக உள்ளார். இந்து மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையைப் பிரபல்யம் அடையச் செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்.

இந்த வருடம் ஐப்பசி மாதம் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் நூறாயிரம் (100,000/-) ரூபாவை நிலையான வைப்பில் இட்டு அதன் வட்டியை எடுத்து, வறுமை நிலையில் உள்ள, கல்வியில் திறமையான மாணவர் இருவரைத் தெரிவு செய்து, அவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுவதற்கு மேற்படி கொழும்புச் சங்கத்தினர் உதவியுள்ளனர்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு தலைவி, செயலாளர், பொருளாளர் மற்றும் அவர்களுடன் இணைந்து செயற்படும் உறுப்பினருக்கும் எனது நன்றிகள்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**

1981ஆம் ஆண்டு முதல் ஆசிரியர் நலன்புரிச் சங்கம் செயற்பட்டுக் கொண்டு வருகிறது. ஆசிரியரின் நலனைக் கருத்திற் கொண்டு கருமமாற்றும் இச்சங்கம் சக ஆசிரியர்களின் நன்மை, தீமைகளில் பங்கு பற்றித் தனது பங்களிப்பைச் செவ்வனே வழங்கி வருகின்றது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தி செயற்பட்டு வருகின்றது. ஓய்வுபெறும் ஆசிரியர்களையும், இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களையும் தகுந்த முறையில் கௌரவித்து வருவதில் தனது பங்கினை ஆற்றி வருகின்றது. 2003.06.27இல் யாப்பு திருத்தி அமைக்கப்பட்டது. கழக நடைமுறைக்கேற்ப மனிதாபிமான அடிப்படையில் நிதி அன்பளிப்பினை வழங்கி வருகின்றனர். 1979.01.01 – 1987.08.21 வரை எமது பாடசாலையில் சிரேஸ்ட ஆசிரியராகச் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள திருமதி. மகேஸ்வரி நடேசபிள்ளை அவர்கள் 2003.07.24 வியாழன் இயற்கையெய்தினார். அவரின் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தினர் யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் ஐம்பதினாயிரம் (50,000/-) ரூபாவை நிலையான வைப்பில் இட்டு அதன் வட்டியில் பாடசாலை மட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவருக்கு வழங்கி மாணவரை ஊக்கப்படுத்துமாறு உதவியுள்ளனர். அவர்களுக்கு எனது நன்றிகள்.

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை நலன்விரும்பியாகவும், பாடசாலையின் நல்ல செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவும் இருந்து செயற்பட்டுவரும் முன்னாள் கல்விப்பணிப்பாளர் திரு. கோ.சி. வேலாயுதம் அவர்களுக்கும் எனது நன்றிகள்.

1986 தொடக்கம் இன்றுவரை பாடசாலையில் நடைபெறும் நிகழ்வுகளின் போது நாம் கேட்கும் போதெல்லாம் வருகைதந்து புகைப்படம் பிடிப்பாளராக இருந்து வரும் ரஜிபோட்டோ உரிமையாளர் திரு. சரவணமுத்து செல்லத்துரை அவர்களுக்கும் எமது நன்றிகள்.

எமது பாடசாலையின் 25 வருடகால வளர்ச்சியில், எமது தாய்க் கல்லூரியின் புகழ்பூத்த மூன்று அதிபர்களைச் சந்தித்துள்ளது. அந்தவரிசையில் செல்வி. பத்மாவதி இராமநாதன் அவர்கள் காலத்தில், கல்லூரியின் நிர்வாக அமைப்பில் இருந்து விலகி இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை என்ற பெயருடன் இயங்கியது. திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா அவர்கள் காலத்தில், அரசடி வீதியில் பாதை அமைக்கப்பட்டது. தற்போதைய அதிபர் திருமதி சரஸ்வதி ஜெயராசா அவர்கள் காலத்தில், கல்லூரியின் சேயாம், எம் பாடசாலைக்கு, நாம் உரிமையுடன் கேட்கும் உதவிகளைத் தயக்கமின்றி, மனமுவந்து அளித்துவரும் அவரின் உயர்பண்பு கண்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இவர்களுடைய காலத்தில் இரு பாடசாலைக்கும் இடையேயான நல்ல உறவுநிலை, மேலோங்கிக் காணப்படுகிறது.

அப்போதைய பாடசாலைச் சமூகம் மிகவும் பற்றுறுதியுடன் செயற்பட்டது. பாடசாலையினதும், மாணவரினதும் எதிர்கால நலன்கருதி சேவைமனப்பான்மையுடனும், அர்ப்பணிப்புடனும் கடமை ஆற்றினர். அவர்களால் இடப்பட்ட அத்திவாரம் இன்று இப்பாடசாலை, சமூகத்தில் ஓர் உயர்ந்த இடத்தில் தனது பெயரைத் தங்கவைப்பதற்கு உதவியுள்ளது.

இப்பாடசாலையின் சிறப்பிற்கு இன்றுவரை ஒன்று கூடல் மண்டபமும், சிறுவர் நூல்நிலையமும் இல்லாதிருப்பது பெருங்குறையாகவே உள்ளது. இவை நிவர்த்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும். கணினி அலகு, மாணவர் கல்வி அபிவிருத்திக்குத் தொழில் நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான அறை ஆகியனவும் முக்கியமானவையாகும். இப்பாடசாலையின் உயர்விற்கும், சிறப்பிற்கும் சகலரும் எதிர்காலத்தில் உதவ வேண்டும்.

வெள்ளிவிழா நிகழ்வுகள் சிறப்புற பலவழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எமது வேண்டுதலை ஏற்று ஆசிச் செய்தி, வாழ்த்துச் செய்தி தந்து உதவியோருக்கும், ஆரம்ப பாடசாலைக்கு ஏற்புடைய கட்டுரைகள் வழங்கிய அன்புள்ளங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது அன்பான அழைப்பையேற்று, சிரமத்தையும் பாராமல் விருந்தினர்களாக வருகைதந்து சிறப்பிக்கும் பெருமதிப்பிற்குரிய கலாநிதி. குமாரசாமி சோமசுந்தரம் அவர்களுக்கும், அவர்தம் பாரியார் திருமதி தையல்நாயகி சோமசுந்தரம் அவர்களுக்கும், யாழ். வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயர் திரு.நா.வரதராஜா அவர்களுக்கும், எமது அன்புக்குரிய திருமதி விமலா மணிவாசகன் அவர்களுக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

இப்பாடசாலையின் நிர்வாகம் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்கிவரும் பகுதித்தலைவர் திருமதி பு. வரதராஜா மற்றும் ஆசிரியர்களுக்கும், விழாமலர்க் குழுவினருக்கும், விசேடமாக வெள்ளிவிழா மலரை குறுகிய காலத்தில் சிறப்புற வடிவமைத்துதவிய இதழாசிரியர் திருமதி அனுசுயா விஜயநாதன் ஆசிரியர் அவர்களுக்கும் உள்ளம் நிறைந்த நன்றி கூறுவதில் பெரும் மகிழ்வடைகிறேன்.

**"வாழ்க எங்கள் பாடசாலை! வளர்க அதன் பணி!"**

***ஔவையார் அருளிச்செய்த மூதுரை***

**வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி**
**ஆங்கதனுக் காகாரம் ஆனாற்போற் - பாங்கறியாப்**
**புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரம்**
**கல்லின்மேல் இட்ட கலம்.**





# சகோதரப் பாடசாலை அதிபரின் பார்வையில்

**திரு. வே. ஞானகாந்தகன்**
அதிபர்,
யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

இந்துப் பாரம்பரியப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு யாழ்நகரின் மையப் பகுதியில் தனித்துவமாக விளங்கும் பெண்களுக்கான ஆரம்பப் பாடசாலை ஒன்று தனது 25 ஆண்டுகள் நிறைவில் வெள்ளி விழாவைக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

இப்பாடசாலையின் தோற்றம், வளர்ச்சி ஆகியன இந்து தர்மத்தின் வழித் தோன்றல்களின் உள்ளார்ந்த சிந்தனைகளின் வெளிப்பாடுகள் எனலாம். ஏறக்குறைய 500 மாணவர்களைத் தன் நிழலில் அமர்த்திப் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கமைய இப்பாடசாலை ஒழுங்கமைப்பிலும் ஒழுக்கக் கல்வியின் மேன்மையிலும் சிறப்பான இடத்தைப் பெற்றுவருகின்றது. கலை மடந்தையைக் கட்டுரைத்து இலச்சனையாகப் பொறியத்துத் தெய்வீக மணம் கமழ இப்பாடசாலை ஓர் கலைக் கூடமாகத் திகழ்வதையிட்டுப் பெருமகிழ்ச்சி யடைகின்றேன்.

இப்பாடசாலையை வழிநடத்திவந்த தலைவர்களின் பண்பாடு, விழுமியங்கள், எடுத்துக் காட்டுக்கள், வாழ்க்கை முறைகள் என்பன ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ளும் பேரம்சங்களாகும். அந்த வரிசையிலே திருமதி த.துரைசிங்கம் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் வெள்ளிவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெறுவதையிட்டுப் பேருவகை அடைகின்றேன். புலமைப்பரிசில் பரீட்சையிலும், கலைத்துவச் செயற்பாடுகளிலும், விளையாட்டுத்துறையிலும் முயற்சியுடன் முன்னேற்றம் கண்டு வருதல் குறிப்பிடத்தக்கதாகும். ஓர் பாடசாலையின் முன்னேற்றத்தில் கருத்தூன்றி நிற்பவர்கள் ஆசிரியர்களே. ஆசிரியர்களின் ஒன்றுபட்ட உள்ளார்ந்த செயற்பாடுகளே மாணவர்களின் மனதை விரிவுபடுத்திப் புத்துணர்ச்சியையும் புது வேகத்தையும் உண்டுபண்ணும். பலம், பலவீனம் இரண்டையும் கருத்தூன்றி ஆராயத்தக்கவனே வெற்றிக்கு வீறு நடைபோடுகின்றான். இப்பாடசாலை மேலும் புகழ் பூக்கவும் பாரம்பரியத்திற்குப் புத்துணர்வு கொடுக்கவும் பலமான காப்பரணிட்டு நிமிர்ந்து நிற்கவும் வெள்ளி விழா ஆண்டில் சகோதரப் பாடசாலை அதிபர் என்ற வகையில் எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் வாயார வாழ்த்துவதிலும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையை இருகரம் குவித்துப் போற்றுவதிலும் இதயத்தில் அமைதிபெறுகின்றேன்.



# வெள்ளிவிழாக்காணும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை பற்றிய எனது நோக்கு



**வைரம் சந்திரசேகரம்**
*கிராம அலுவலர்,*
*J/102, கந்தர் மடம் மேற்கு*

செல்வி பத்மாவதி இராமநாதன் அவர்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபராக இருந்த காலத்தில், அக்கல்லூரிக்குத் தென் கிழக்குத் திசையில், தனக்குச் சொந்தமாக இருந்த நான்கு பரப்பு காணியை அக்கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கிய பெருமை திருமதி விசாலாட்சி சிவகுருநாதர் அவர்களையே சாரும்.

யாழ் இந்து மகளிர் கல்லூரிச் சூழலில் வாழ்கின்ற பெரும்பான்மை இந்துப் பெண் சிறுமியர்களுக்கென ஒரு ஆரம்ப பாடசாலை தனித்து இயங்கவேண்டும், அதிலே கற்கும் சிறுமிகள் தங்களுக்கென்று தனித்துவமான கல்விக்கூடம் இயங்குகிறது என்ற சுதந்திர உணர்வோடு கல்விகற்கவேண்டும் என்ற சிந்தனை பரவிக்கொண்டிருந்த காலம் அது. அந்தச் சிந்தனையைப் பரப்பிய கல்விசார் அறிஞர்கள் பற்பல பெரியார்கள் ஆகியோரின் இடைவிடா முயற்சியின் பயனாகவும் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் அன்றைய அதிபர், பத்மாவதி இராமநாதன் அக்கருத்தை ஆதரித்து அதற்கு ஒத்துழைப்புத் தந்ததன் பயனாகவும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை உருவெடுத்தது.

திருமதி விசாலாட்சி சிவகுருநாதன் அவர்கள் அன்பளிப்பாக வழங்கிய அந்த தென்கிழக்கு மூலையில் தனது சிறுமிகள் கற்கும் கட்டடங்களையும் (வகுப்பறைகள்) வேறு வேறு தேவைகளுக்காக பயன்படுத்தப்பட்ட அறைகளையும் அந்த ஆரம்ப பாடசாலைக்கென்று வழங்கியவர் அதிபர் பத்மாவதி இராமநாதன் என்பது குறிப்பிடப்படவேண்டிய ஒன்றே. இந்த நிலையில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையொன்று உருவானது 1979இல் என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

அப்படி அது உருவானபோதும் அதற்கென ஒரு மண்டபம், ஒரு விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு அங்கு இடம் போதாமையால் யாழ் இந்து மகளிர் கல்லூரியான தாயிடமே இந்த ஆரம்ப பாடசாலையான சேய் சரண்புக வேண்டி நேர்ந்தது. அதாவது தாயின் மண்டபம், விளையாட்டு மைதானம் ஆகிய இரண்டையும் இப் பாடசாலை பயன்படுத்தி வருகிறது. இந்த நிலைப்பாடானது இரண்டு கல்விக் கூடங்களுக்குமிடையே ஒரு இணைபாலம் என்பதே பொருத்தம். தாயைப் பிரிந்தாலும், தாயை விட்டு முற்றிலும் பிரியமுடியாத-பிரிய மனமில்லாத சேய் தனது தாயுடன் ஒட்டிக்கொண்டிருப்பது ஆச்சரியமல்ல. அது இரத்த ஒட்டு, இரத்த இணைப்பு.

1979இல் 153 மாணவச் சிறுமியரோடும் 5 ஆசிரியரோடும் இயங்கிய இப்பாடசாலையின் முதல் அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா என்பது குறிப்பிடத்தக்கது. இதே

அதிபரின் கடமைக் காலத்தில் தான் திருமதி தனரஞ்சனி (வனஜா) துரைசிங்கம் அவர்களும் இக்கல்லூரியில் துணை ஆசிரியராக கடமையேற்றார். அதன் பின் உப அதிபராகி 1996இல் அதிபரானார்.

திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் இந்த ஆரம்ப பாடசாலை அமைந்த இடத்தில் கட்டடங்கள் போன்ற பௌதீக வளங்களை எப்படி எழுப்பினார்களோ அதே போன்றுதான் திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் அவர்களும் இப்பாடசாலையின் வளர்ச்சி நோக்கி ஒரு சில கட்டடங்களை எழுப்பினார். அத்தோடு, பருவத்துக்குப் பருவம் காலத்திற்கு காலம் பாடசாலைப் போட்டி நாடகங்கள், நடனங்கள், இசை, பண்ணிசைப் போட்டிகள் போன்றவற்றில் இப்பாடசாலை பங்கு பற்றிப் பல பரிசில்களையும் பாடசாலைக்கு நற்பெயரையும் பெற்றுத்தந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப் பாடசாலையின் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெறுபேறுகளின் விகிதாசாரம் போற்றக்கூடிய ஒன்றாகவே அமைகிறது. இதுவும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் நற்பெயருக்கும் ஒரு முத்திரை ஆகும்.

இப்பாடசாலையின் கலாசார-இலக்கிய நிகழ்வுகளையும்; விளையாட்டு, மெய்வன்மை நிகழ்வுகளையும் கவனத்தில் எடுத்துப் பார்த்தால், அதிபர் அவர்களின் வழிகாட்டல் உத்தித் திறமையும், ஆசிரியர்களின் செயலாற்றுப் பக்குவமும் எம்மெல்லோருக்கும் வெளிச்சமாகும்.

"ஊக்கம் ஆக்கந்தரும்" என்பதற்கு அதிபரும் ஆசிரியர்களும் ஒரு எடுத்துக்காட்டு. இப்பாடசாலை நடத்தும் "மாணவர் மன்றங்கள்" ஒரு சிறப்பான அம்சமாகும். இங்கு கல்வி கற்கின்ற பெண் சிறார்கள் நல்ல குடிமக்களாகவும், ஊரையும் நாட்டையும் மேம்படுத்துவதற்கான நோக்கங்கள் கொண்டவர்களாகவும் வளர்வதற்கு இந்த மாணவர் மன்றம் வழிசமைக்கிறது. ஒவ்வொரு புதன் கிழமையும் துறை சார்ந்தவர்களால் மாணவர் சுகநல வாழ்வுக்கான பத்து நிமிடப் பேச்சு ஒன்று இந்த மாணவர் மன்றத்தில் இடம்பெறுகிறது. அத்தோடு பண்புசார் விருத்தியை ஊக்குவித்து, மனித நேயத்தை வளர்ப்பதற்காக ஒவ்வொரு வியாழனும் குட்டிக்கதைகள் சொல்லப்படுகின்றன. சொல்லித் தருபவர்கள் சத்தியசாயி நிறுவன அங்கத்தவர்கள். இத்தகைய நல்ல செயல்களனைத்தும் பார்ப்போருக்குச் சிறப்பாகவும் அழகாகவும் தென்படும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

*"அழகுள்ள இடத்தில் ஆபத்துமுண்டு"*

என்று அறிஞர் அண்ணாத்துரை அவர்கள் சொன்னது போல் நிறைவு உள்ள இடத்தில் ஒரு குறைவு காணப்படும். பாடசாலைச் சமூகம் ஒன்று கூட ஒரு "ஒன்று கூடல் மண்டபம்" இல்லாததும் இப்பாடசாலையின் குறைபாடு.

பாடசாலையின் வளர்ச்சிக்கு நல்ல முறையில் ஈடு கொடுக்கும் பழைய மாணவியர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இரண்டும் இக்குறையை நீக்கலாம். கல்வித் திணைக்களத்தின் உதவியையும், சூழவுள்ள மக்களின் நலன் விரும்பிகளின் உதவிகளையும் பெற்றுச் செயற்பட்டால் ஒரு ஒன்று கூடல் மண்டபம் நிச்சயம் நனவாகும். பாடசாலை வளர்ச்சிக்கு அது பலமாகும்.

மற்றொன்று, இப்பாடசாலைச் சூழலிலுள்ள பெற்றோர்கள், தத்தம் சிறார்களை இப்பாடசாலைக்கு அனுப்பிக் கல்வி கற்பிக்கவே விரும்புகிறார்கள். ஏனெனில் இச்சூழலிலுள்ள பெண் சிறார்களுக்கான ஒரேயொரு ஆரம்ப பாடசாலை யாழ் இந்து மகளிர் பாடசாலைதான். எனவே இப்பாடசாலை வகுப்பறைகளைப் பெருக்கி, மாணவியர் தொகையை அதிகரித்தால் இச் சூழல் மக்களுக்கு மாபெரும் வரப்பிரசாதமாகும். சிறுமியரின் தூர இடப் போக்குவரத்து அபாயங்களையும் தவிர்க்கலாம்.

பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், சூழவுள்ள மக்கள், கல்வித் திணைக்களம் ஒன்று சேர்ந்து இதை நிறைவேற்றுவார்களா? நிறைவேற்றுவார்கள் என்பதே எனது திடமான நம்பிக்கை.

# பகுதித் தலைவரின் உள்ளத்திலிருந்து ...
# எங்கள் பாடசாலை

**திருமதி பு. வரதராசா**

**யா**ழ்ப்பாணத்திற்கே உரித்தான சைவப் பாரம்பரியங்களையும் சைவத்தின் பெருமையையும் தமிழ் பண்பாட்டையும் பேணி தரமான கல்விச் செயற்பாடுகளில் மழலைச் சொற்களை ஈடுபடுத்தும் மகிழ்ச்சியான கற்றலை ஊட்டி வளர்ந்து வருகின்ற பெண் குழந்தைகளுக்கென தனியாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எங்கள் பாடசாலை 25ஆவது ஆண்டு நிறைவு விழாவானது வெள்ளி விழா மலராக மலர்வதை எண்ணி பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

1979ஆம் ஆண்டு முதல் யாழ் இந்து மகளிர் கல்லூரி தாயாகவும், எங்கள் பாடசாலை சேயாகவும் இருந்து யாழ் குடாநாட்டுக்கு பெருமை தேடித்தருகின்றது.

1979முதல் எங்கள் பாடசாலையின் அதிபராகப் பணிபுரிந்து இப்பாடசாலையை தனது மூத்த புதல்வியாக மனதில் கொண்டு எவ்வளவோ இன்னல்களின் மத்தியிலும் எதிர் நீச்சல் போட்டு பாடசாலையையும், மழலைச் செல்வங்களையும் கல்வியில் மேன்மைப்படுத்திய முதல் அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களையும் அவர் ஆற்றிய பெரும் பணிகளையும் என்றும் மறக்க முடியாது.

அவர் காட்டிய பாதையில் எமது அதிபர் திருமதி த.துரைசிங்கம் அவர்கள் 1998ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய கல்வி சீர்திருத்தங்களுக்கு அமைவாக பாடசாலையை மகிழ்ச்சியூட்டும் கல்விச் சாலையாகவும் சிறார்கள் அனைவரும் தனது குழந்தைகளாகவும் மனதில் இருத்தி சமய, கலாசாரம், தமிழ்ப் பண்பாடு, சுகாதாரப் பழக்க வழக்கம், கற்றல் செயற்பாடுகள் போன்றவற்றிற்கு மெருகூட்டி தமது வாழ்வை பாடசாலைக்கே அர்ப்பணித்து கடமையே கண்ணென்ற பெரு நோக்கில் "யான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக" என்பதற்கு இணங்க செயற்பட்டு வருகின்றார்.

எங்கள் பாடசாலைச் சிறார்கள் நல்லவர்கள், வல்லவர்கள், தெய்வீகத் தன்மை கொண்ட உள்ளம் படைத்தவர்கள், தமக்கென்றே தனித்தன்மை கொண்ட உத்தம குழந்தைச் செல்வங்கள். இவர்கள் எந்தத் துறையில் எந்தப் போட்டியில் பங்குபற்றினாலும் வெற்றி வாகை சூடி பாடசாலைக்கும், அதிபர், ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பெருமைதேடிக் கொடுப்பவர்கள்.

கோட்டமட்டம், வலையமட்டம், மாவட்டமட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதலிடம் பெற்று மாகாணமட்டம் சென்று அங்கும் வென்று தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றி பாராட்டப்பட்டவர்கள். சைவ பரிபாலன சபை நடத்தும் சைவ நெறி தேர்வு, பண்ணிசைப் போட்டி என்பவற்றில் தங்கப்பதக்கங்கள், பரிசுகளைப் பெற்றுள்ளார்கள்.

அதிபரது அயராத ஊக்கமும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் மாணவர்களினது விடா முயற்சியினாலும் இப்பாடசாலை யாழ்ப்பாணத்தில் புகழ் பூத்த மலராக எல்லோராலும் போற்றப்படும் பெண் குழந்தைகளின் கல்விச் சாலையாக மிளிர்கிறது. எங்கள் பாடசாலை கல்விச் செயற்பாடுகளில் பலம் பெற்று தமது அளப்பரிய பணிகளைத் தொடர வேண்டும் என்று எல்லாம் வல்ல நடுத்தோட்ட ராஜவரோதய பிள்ளையாரை வேண்டி நிற்கிறேன்.

# என்னை வளர்த்த எனது பாடசாலை

**திருமதி சுபாங்கினி சுஜீவன்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

எனது ஆரம்ப பாடசாலை ஆரம்பித்து இவ்வருடம் வெள்ளி விழாவினை பூர்த்தி செய்யும் இந்நாளில் வெள்ளி விழா சிறப்பு மலரினை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். சைவப் பாரம்பரியத்துடன் தமிழ்க் கலாச்சாரமும் பேணி பெண்கள் கல்வியில் உயர்ந்திட வேண்டும் என்ற பெரு நோக்கில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை செயற்படுகின்றது.

நான் 1982.01.01ஆம் ஆண்டு தரம் 01இல் கல்வி கற்பதற்காக பாடசாலை சேர்ந்தேன். அப்பொழுது பாடசாலையின் முதல் அதிபராக திருமதி யோ. ஸ்ரீவிக்னேஸ்வரா இருந்தார். அவர் மாணவர்களோடு அன்பாகவும், பண்பாகவும், கண்ணியமாகவும் பழகினார். அவரது தோற்றத்திலும் நடையிலும் பணிவு காணப்பட்டது. அப்போது எனது பாடசாலையில் கல்வி வளங்கள் மிகவும் குறைவாக இருந்த போதிலும் பல இன்னல்களுக்கு மத்தியில் எதிர் நீச்சல் போட்டு பாடசாலையின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். இப்போதைய அதிபர் த.துரைசிங்கம் அவர்களிடம் நான் வகுப்பு 4இல் படிக்கும் போது எனக்கு ஆசிரியராக இருந்தார். அவர் அன்போடு நிறைந்த கண்டிப்பும், கட்டுப்பாடும் உடையவர். நாம் அவரை வனஜா மிஸ் என அழைப்போம். நற் சிந்தனைகள், சுய சுத்தம் போன்ற பல நல்ல விடயங்களை எமக்கு ஊட்டியுள்ளார். அவர் நமக்கு போதனை செய்தவையை என்றும் மறவோம்.

பின்பு திருமதி த.துரைசிங்கம் அவர்கள் 1996இல் அதிபர் பதவி பெற்று பாடசாலை நிர்வாகத்தை ஏற்று சிறப்புற நடத்திக்கொண்டிருக்கின்றார். நான் இப் பாடசாலையில் தொண்டர் ஆசிரியராக இருந்து நிரந்தர நியமனம் பெற்றேன். அப்போது அவர் ஆசிரியராகவும் நான் மாணவியாகவும் இருந்தோம். இப்போது அவர் அதிபராகவும் நான் ஆசிரியராகவும் அவரின் நல்லாசியுடன் கடமையாற்றுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அருள் வாக்குக்கு அமைவாக இவர் அரும் பணியாற்றி வருகின்றார். எமது இப் பாடசாலை இப்பொழுது நன்கு வளர்ச்சி பெற்று விளங்குகின்றது. சகல போட்டிகளிலும் விழாக்களிலும் பங்கு பற்றி பரிசில்களைப் பெறுகின்றது. இதற்கு எமது அதிபர் அயராது செயலாற்றி வருவதோடு அவருடன் ஈடு இணையற்ற ஆசிரியர்களும் இணைந்து தொழிற்படுகின்றார்கள். பாடசாலையையும், குழந்தைச் செல்வங்களையும் கண்ணை இமை காப்பது போல காத்து வருவதால் எமது அதிபரை ஒரு தர்ம சீலர் என்று கூறுவது சாலப் பொருத்தமாகும். சிறுவயது முதல் பெண் குழந்தைகள் நல்ல பண்பாடுகளை அறிந்து அதன் வழி நடந்து மங்கையர் குலத்தினருக்கு புகழ் தர இப்பாடசாலை உதவும் என்றால் அது மிகையாகாது.

இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்கு பெற்றோர்கள், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள் உதவ முன்வர வேண்டும். மேலும் இப்பாடசாலை வளர்ச்சியடைந்து பொன் விழா, மணி விழா, நூற்றாண்டு விழா என்பனவற்றை கொண்டாட திருவருள் புரிய வேண்டும் எனவும் நடுத்தோட்டத்து ராஜவரோதய பெருமானின் அருளையும் ஆசிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

# நான் நடந்துவந்த பாதையில்....

**செல்வி சுகிர்தா ஸ்ரீவரதன்**
தரம் 12 உயிரியல் பிரிவு ஏ.
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

என் இனிய சகோதரிகளே,

**தூ**ய்மையான உங்கள் இதயங்களை கொஞ்சம் இந்தப்பக்கம் திருப்புங்கள். நல்லோர் உரைகளைக் கேட்டுக் கேட்டு மெல்லிய பண்புபடைத்த உங்கள் செவிகளை திறந்துவைத்துக்கொள்ளுங்கள்.

உங்கள் வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் உங்களோடு பேசப்போகின்றது. உங்கள் சோலைகளிலிருந்து ஒரு குயில் உங்களுடன் உரையாடுகின்றது. உங்கள் மலர்த் தோட்டத்திலிருந்து ஒரு மலர் உங்களுடன் தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளப்போகின்றது. என் இனிய சகோதரிகளே, உங்கள் இதயங்கள் மறுபடியும் திறக்கட்டும் கேளுங்கள்.

அன்றொருநாள் 1993ஆம் ஆண்டில் ஜனவரிப் பொழுதில் முதன்முதலாய் அன்னையும் தந்தையும் கூட வர இனம்புரியாத ஒரு பீதியில் பாடசாலையில் காலடிவைத்தேன். என்னை அறியாமல் என் கரம் என் அன்னை, தந்தையினின்றும் நழுவி பாடசாலை வாசற்கதவை மெல்லப் பற்றியது. அப்போது உணர்ந்தேன் அன்பான பாடசாலையின் அறிமுகத்தை. புனிதமானதோர் ஆலயத்தை அங்கே நான் கண்டேன். வந்தவுடன் வரவேற்ற என் பாசத்திற்குரிய, மரியாதைக்குரிய முன்னாள் அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்களின் கண்கள் எனக்கு தெம்பூட்டின. அங்கு பணிபுரிய வந்திருக்கும் என் அன்புக்கினிய ஆசிரியர்களிடம் கண்டிப்புடன் கூடிய கனிவைக் கண்டேன். பூமணமும் பால் மணமும் என் பள்ளியில் கமழக் கண்டேன்.

சப்தம் இன்றி நிசப்தமாய் மெல்ல நுழைந்தார் என் வகுப்பாசிரியர். இந்த நேரத்தில் நான் அவரைப் பற்றிக் கூற வேண்டும். அவர் பெயர் பவானி. இதுதான் அறிமுகம். முதல் மழையிலேயே பக்குவப்பட்டுவிட்ட நிலம் போல் இளமையிலேயே தெளிவும் பக்குவமும் படைத்துவிட்ட அவரும், எனக்கு அவற்றைப் போதித்தார். இவ்வாறே மூன்று ஆண்டுகள் கழியும் நிலையில் மூன்றாவது ஆண்டு முடியுமுன் யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டாலும்; கல்வியே கலங்கரை விளக்கமென சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் எம் பாடசாலை ஆறே மாதங்கள் இயங்கினாலும்; அவ் ஆறு மாதங்களும் தன் உயிரைப் பணயம் வைத்து எமக்காக பள்ளிப் பொறுப்பை ஏற்று எம்மை வழிநடத்திச் சென்ற என் அன்புக்குரிய, பெரு மதிப்புக்குரிய அதிபர் திருமதி தனரஞ்சனி துரைசிங்கத்தை நீங்கள் அறிந்திருப்பீர்கள். உங்களுக்கெல்லாம் இன்றைய நிலையில் பாடசாலையை நடாத்திச் செல்லும் சிறந்த அதிபர் என்றே அவரைத் தெரியும். ஆனால் ஓர் அன்னையாய், ஆசிரியராய் அன்பிலே தெய்வமாய், கண்டிப்புடன் கூடிய கனிவிலே தனித்துவமாய் அவரை நான் நன்கறிவேன். இன்றும் 1997இல் நிகழ்ந்த சில சம்பவங்களை நினைக்கும் போது என் கண்கள் கலங்கும்.

ஐந்தாம் தரம் என்றவுடன் அனைவருக்கும் புலமைப்பரிசில் பரீட்சை நினைவில் வரும். விதியின் வினையோ சிலரின் சதியோ தெரியவில்லை பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் எம் வகுப்பாசிரியர் இடம் மாற்றப்பட்டுவிட நாமெல்லாம் யாருமின்றி அநாதரவாய் நின்றோம். ஆற்றங்கரையில் அன்றொருநாள் இறங்கமுடியுமா என்ற தயக்கத்துடனும், இறங்கினால் கரைசேர முடியுமா என்ற மயக்கத்தோடும் நின்றிருந்த பயணிபோல் நாம் நின்றிருந்த வேளை ஆதரவாய் கரம்பற்றி அரவணைத்து இன்று இந்நிலைக்கு என்னை உயர்த்தி வைத்த என் அதிபரை நினைக்கும்போது எல்லாம் நன்றிப் பெருக்கில் என் கண்கள் கண்ணீர் சொரியும். திருமதி த.துரைசிங்கம் என்ற பெயருக்குள் அடங்கியுள்ள அந்தக் கம்பீரம் என்னை இந்தப் பாடசாலையின் முதலாவது மாணவத் தலைவியாக்கியது. அன்று அவர் எனக்கு ஊட்டிய கடமையுணர்வும், தலைமைத்துவப் பண்பும், சோதனைக்கு மத்தியிலும் சாதனைபடைக்கும் மனோ தைரியமும் இவ்வேளையில் எனக்கு மிகவும் உதவி புரிகின்றன.

என் அன்பான சகோதரிகளே!

உங்களுக்கெல்லாம் அதிபரை அதிபராக மட்டுமே தெரியும். ஆனால் எனக்கு ஓர் அன்னையாகவும் தெரியும் என்று கூறியிருந்தேனே ஞாபகம் இருக்கிறதா? அதற்கோர் சம்பவத்தைக் கூறுகிறேன் கேளுங்கள்.

ஒருமுறை எங்கள் பாடசாலைக்கு வந்திருந்த ஒருவர் என் அதிபரை அலுவலகத்திற் சந்தித்து உரையாடிக்கொண்டிருந்தார். எதேச்சையாக நான் அங்கு சென்றிருந்த வேளை "உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?" என வந்த அந்த பெரியவர் என் அதிபரிடம் கேட்க, சற்றும் யோசியாது 500 என்றார். அங்கு எனக்கு ஒன்றுமே புரியவில்லை. சிறிது நேரம் செல்ல அவரே எனக்கு விடையளித்தார். அவர் என்ன சொன்னார் தெரியுமா? இந்தப் பள்ளியில் கற்கும் அனைவரையும் என் பிள்ளைகளாகவே நினைக்கிறேன் என்றார். அவர் சொன்னது பொய்யில்லை. என் பள்ளியின் ஒவ்வொரு தூணும் சொல்லும் அவர் எம் மீது கொண்ட அக்கறையை.

ஆதலினால் சகோதரிகளே இந்தப் பள்ளியில் நீங்கள் நுழைந்ததன் மூலம் பெறுதற்கரிய பேற்றைப் பெற்றுள்ளீர்கள். சில விடயங்களை கூறுவதைவிட உணர்ந்து பார்த்தாலே உண்மை புரியும். அது போலவே இப்பள்ளி வாழ்க்கையும். ஆனால் ஒன்று மட்டும் உறுதியாய் என்னால் கூற முடியும். அது யாதெனில் "இங்கு நீங்கள் பெறும் அனுபவங்களை வேறு எங்கும் பெறமுடியாது" என்பது தான். இப்போது இது போதும். இனிவரும் காலங்களில் இப் பள்ளியை வழிநடத்திச் செல்வது உங்கள் பொறுப்பென பாசத்துடன் விடைபெற்றுச் செல்லும் உங்கள் மூத்த சகோதரி. என்றும் உங்கள் நினைவுடன்...



# Great Pleasure

It really gives me great pleasure to pen a few words about respected principal of Jaffna Hindu Ladies primary school Mrs.T.Thuraisingam. She took over the school from Mrs. Sri Wigneshwara, also a respected principal, when the school was in the budding stage. Due to the energetic unselfish and devoted service of Mrs.Thuraisingam, today, this school is one of the leading schools for the Hindu Girls in the Jaffna District.

The principal's aim in life is to serve the educational sector. She takes a great interest in the extra curricular activities of the school. She has formed the board of prefects, a Library and a fine art society in addition to the existing teachers' welfare association, the Tamil Mantram, English Association and Inthu Mantram. All these associations are actively functioning.

The parents are glad to find that the students show great interest and enthusiasm in participating in the various activities of the associations. This helps to develop the oratorical dramatic and musical talents of the students.

As an old girl of this esteemed school, I wish to thank the principal and staff for their effects and "SELFLESS "service to the students.

May the almighty god bless our dear principal and staff with health and good luck to continue a devoted service to the school with "ALL SUCCESS".

*K.Easwarajanani*
*Old Girl ( 1995 – 1999).*



# வரலாற்றின் பதிவுகளில் சேவையாற்றியோர் விபரம்

**அதிபர்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா | 1979.01.01-1996.07.09 | | |
| 2 | திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் | 1996.07.10-இன்றுவரை | | |

**உப அதிபர்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருமதி மகேஸ்வரி நடேசப்பிள்ளை | 1979.08.01-1987.08.01 | | |
| 2 | திருமதி ஜெகதீஸ்வரி கந்தையா | 1989.03.01-1991.12.26 | | |
| 3 | திருமதி செல்வராணி சகாதேவன் | 1993.06.09.-1996.07.26 | | |

**பிரதி அதிபர்**

| | | | | |
|---|---|---|---|---|
| | திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் | 1994.01.01-1996.07.09 | | |

**பகுதித் தலைவர்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருமதி அகிலேஸ்வரி பரமலிங்கம் | 2003.04.01-2004.05.21 | | ஓய்வு |
| 2 | திருமத புஸ்பவதி வரதராசா | 2004.05.23-இன்றுவரை | | |

**ஆசிரியர்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | திருமதி அமிர்தம் குருநாதன் | 1979.01.01-1981.11.11 | தமிழ்பயிற்சி | ஓய்வு-இறப்பு |
| 2 | திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை | 1979.01.01-1987.08.01 | தமிழ்பயிற்சி | ஓய்வு-இறப்பு |
| 3 | திருமதி அன்னபூரணி வீரசிங்கம் | 1979.01.01-1981.03.12 | தமிழ்பயிற்சி | ஓய்வு-இறப்பு |
| 4 | திருமதி அரியமலர் செல்லத்துரை | 1979.02.06-1996.12.31 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 5 | திருமதி ஜெகதீஸ்வரி கந்தையா | 1980.03.01-1991.12.26 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 6 | திருமதி ந.இராசரத்தினம் | 1981.01.01-1981.07.01 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 7 | திருமதி த.மகாலிங்கம் | 1981.01.01-1981.03.12 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 8 | திருமதி ப.மகேஸ்வரன் | 1981.01.01-1981.05.12 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 9 | திருமதி நா.சத்தியநாதன் | 1981.07.04-1984.11.01 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 10 | திருமதி ம.மகேஸ்வரன் | 1981.09.01-1983.05.12 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 11 | திருமதி அன்னலட்சுமி யோகேஸ்வரன் | 1982.01.01-1990.12.31 | தமிழ்பயிற்சி | ஓய்வு-இறப்பு |
| 12 | செல்வி தனரஞ்சனி ஜீவரட்ணம் | 1982.01.01-1993.12.31 | பொதுப் பயிற்சி | |
| | திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் | 1994.01.01.1996.07.09 | பிரதி அதிபர் | |
| | திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் | 1996.07.10-இன்றுவரை | அதிபர் | |
| 13 | திருமதி ஸ்கந்தகுமாரி இராமலிங்கம் | 1982.02.05-1993.06.31 | பொதுப் பயிற்சி | ஓய்வு |
| 14 | செல்வி மேரி பிறிஜெற் ஸ்ரனிஸ்லோஸ் | 1982.03.16-1984.12.31 | பொதுப் பயிற்சி | இடமாற்றம் |
| 15 | திருமதி பராசக்தி சுகிர்தலிங்கம் | 1982.04.26-1984.02.07 | பொதுப் பயிற்சி | ஓய்வு |
| 16 | திருமதி தனபாக்கியம் தனபாலசிங்கம் | 1982.05.12-1982.07.09 | பொதுப் பயிற்சி | இடமாற்றம் |
| 17 | திருமதி விமலாதேவி சர்வேஸ்வரசர்மா | 1983.01.25-1995.12.09 | தமிழ்பயிற்சி | ஓய்வு-இறப்பு |
| 18 | திருமதி சௌ.விநாயகமூர்த்தி | 1983.05.12-1983.05.13 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 19 | திருமதி லில்லிமலர் குழந்தைவேலு | 1983.08.01-1996.04.18 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 20 | செல்வி கனகலட்சுமி சுப்பிரமணியம் | 1984.01.01-1997.07 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| | திருமதி கனகலட்சுமி சுந்தரலிங்கம் | | தமிழ்பயிற்சி | |

| | | | | |
|---|---|---|---|---|
| 21 | செல்வி ஜெ.பொன்னுத்துரை | 1984.09.01-1987.09.01 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 22 | திருமதி ப.கணேஸ் | 1985.01.21-1986.10.01 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 23 | திருமதி கமலேஸ்வரி நடராஜபிள்ளை | 1985.03.15-1999.09.27 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 24 | திருமதி நா.குணரத்தினம் | 1986.05.12-1989.03.15 | தமிழ்பயிற்சி | இடமாற்றம் |
| 25 | திருமதி நாகேஸ்வரி நடராஜா | 1988.03.07-1995.10.30 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 26 | திருமதி புவனேஸ்வரி சண்முகநாதன் | 1989.01.16-1996.04.18 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 27 | செல்வி ஜானகிதேவி அமிர்தலிங்கம்<br>திருமதி ஜானகிதேவி சச்சிதானந்தம் | 1989.09.29-1993.04.28 | பயிலுநர் | இடமாற்றம் |
| 28 | திருமதி யசோதா இரகுநாதன் | 1989.11.02-1993.02.02 | பயிலுநர் | இடமாற்றம் |
| 29 | செல்வி வடிவாம்பிகை கார்த்திகேசு | 1989.11.02-1990.12.31 | பயிலுநர் | இடமாற்றம் |
| 30 | செல்வி மனோரஞ்சினி பாலசிங்கம் | 1989.11.02-2001.02.14 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 31 | திருமதி புவனேஸ்வரி வேலாயுதர் | 1989.01.01-1996.05.31 | ஆரம்பக் கல்வி | ஓய்வு |
| 32 | செல்வி தர்சினி விஜயசிங்கம் | 1990.01.08-1991.09.01 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 33 | திருமதி தவமணிதேவி நவரத்தினம் | 1990.03.01-1997.12.31 | ஆரம்பக் கல்வி | ஓய்வு |
| 34 | செல்வி ஜனதா நாகலிங்கம் | 1990.03.26-1994.12.31 | பயிலுநர் | இடமாற்றம் |
| 35 | செல்வி ஜமுனா நடராஜா | 1990.03.26-1991.12.31 | பயிலுநர் | இடமாற்றம் |
| 36 | திருமதி ஞானம்மா வரதராஜசிங்கம் | 1990.11.19-1993.09.01 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 37 | திருமதி முத்தம்மா செல்வராஜா | 1991.01.01-1994.04.31 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 38 | திருமதி சுகன்யா ஞானகோபால் | 1991.01.01-2000.12.31 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 39 | திருமதி பிரபாலினி வரதராஜன் | 1993.09.01-1995.10.30 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 40 | செல்வி சாந்தாதேவி செல்வநாயகம்<br>திருமதி சாந்தாதேவி ஸ்ரீநிவாசன் | 1996.06.03-2003.09.19 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 41 | திருமதி சிவமணி கந்தையா | 1996.07.01-1997.09.30 | ஆரம்பக் கல்வி | தற்காலிக இணைப்பு |
| 42 | திருமதி ச.சுதாகர் | 1996.11.04-1998.12.31 | பட்டதாரி | இடமாற்றம் |
| 43 | திருமதி யோ.சிவானந்தன் | 1997.06.02-1997.12.31 | பட்டதாரி | இடமாற்றம் |
| 44 | திருமதி தவமணி சிற்சபேசலிங்கம் | 1997.04.03-2001.12.30 | தமிழ்பயிற்சி | ஓய்வு |
| 45 | செல்வி சுந்தரேஸ்வரி சண்முகநாதன் | 1998.01.23-2002.12.31 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 46 | செல்வி சரோஜினிதேவி கிட்டுணு | 1998.02.23-1998.08.31 | பயிலுநர் | இடமாற்றம் |
| 47 | திருமதி ஸ்ரீரஞ்சனி இராமநாதன் | 1998.07.27-1999.09.24 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 48 | திருமதி கௌரி யோகேஸ்வரன் | 1998.09.09-2003.12.31 | இந்துசமயப் பயிற்சி | இடமாற்றம் |
| 49 | செல்வி மாலினி நடராஜா | 2000.01.03-2003.09.19 | ஆரம்பக் கல்வி | இடமாற்றம் |
| 50 | திருமதி ச.தர்மகுலசிங்கம் | 2000.07.19-2001.09.24 | பட்டதாரி | தற்காலிக இணைப்பு |
| 51 | செல்வி சி அருட்செல்வி | 2002.01.10-2002.12.31 | சித்திரப் பயிற்சி | தற்காலிக இணைப்பு |

**ஆங்கிலம் கற்பித்த ஆசிரியர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி பரமேஸ்வரி பரமானந்தம் | 1981.03.01-1986.06.13 | ஓய்வு |
| 2 | திருமதி சு.ராஜசுந்தரம் | 1984.10.10-1985.04.30 | இடமாற்றம் |
| 3 | திருமதி சத்தியபாமா தயாளன் | 1986.07.07-1995.10.30 | இடமாற்றம் |

| | | | |
|---|---|---|---|
| 4 | திருமதி சிவயோகம்மா பரமலிங்கம் | 1989.05.19-1997.03.21 | இடமாற்றம் |
| 5 | திருமதி யோ.சுந்தரநேசன் | 1996.07.18-1998.07.02 | தற்காலிக இணைப்பு |
| 6 | செல்வி டொறின் சந்தாம்பிள்ளை | 1998.06.24-2001.07.19 | இடமாற்றம் |

### பகுதிநேர ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| 1 | திருமதி றோகினி குமார் | 1996.08.21-2000.12.31 |
| 2 | செல்வி சிவபாலினி தர்மலிங்கம் | 1998.06.15-1999.04.29 |
| 3 | திரு கு.விக்கினராஜா | 2001.03.01-2001.05.31 |
| 4 | செல்வி லுசாந்தி ஸ்ரீகந்தராசா | 2001.06.01-2001.12.31 |
| 5 | செல்வி வானதி புலேந்திரன் | 2001.06.01-2001.12.31 |
| 6 | திரு.ப.பாலமுகுந்தன் | 2002.02.06-2002.03.01 |
| 7 | செல்வி வேல்விழி வெற்றிவேல் | 2002.03.01-2002.12.31 |

### சங்கீதம் பகுதிநாள்

| | | | |
|---|---|---|---|
| 1 | செல்வி ப.இராஜஸ்ரீ | 1990.03.12-1992.02.01 | இடமாற்றம் |
| 2 | செல்வி திருமகள் வினாசித்தம்பி | 1992.03.01-1995.10.30 | இடமாற்றம் |
| 3 | திருமதி கலைமாலினி சிவானந்தம் | 1998.10.01-1999.03.05 | இடமாற்றம் |
| 4 | செல்வி ஜெயநாயகி இராமலிங்கம் | 1999.03.09-இன்றுவரை | |
| | திருமதி ஜெயநாயகி இளங்கீரன் | | |

### தொண்டர் ஆசிரியர்

| | | |
|---|---|---|
| 1 | செல்வி கஜேந்தினி நடேசபிள்ளை | 1993.11.01-1999.12.31 |
| 2 | செல்வி சாந்தாதேவி பெருமாள்பிள்ளை | 1993.06.30-1999.12.31 |
| 3 | செல்வி சி.வித்தியாலட்சுமி | 1994.09.01-1999.12.31 |
| 4 | செல்வி தாட்சாயினி ஸ்ரீபாலச்சந்திரன் | 1996.09.23-1999.12.31 |
| 5 | செல்வி சுபாங்கினி குணநாயகம் | 1996.08.31-1999.12.31 |
| 6 | திருமதி சரோஜா விஜயநாதன் | 1994.02.23-1997.04.04 |

இவர்களில் 1999.12.31 வரை கடமையாற்றியவர்கள் நிரந்தர நியமனம் பெற்று ஆசிரியப் பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆதரவில் கற்பித்தோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | செல்வி ஜெயவாணி சண்முகநாதன் | 1980.02.12-1989.07.06 | சங்கீதம் |
| 2 | திருமதி மேனகா ராஜ்குமார் | 1983.02.12-1983.06.22 | நடனம் |
| 3 | செல்வி சசிகலா கந்தையா | 1984.05.10-1989.08.31 | ஆரம்பக் கல்வி |
| 4 | செல்வி ராதிகா பாலசிங்கம் | 1992.02.19-1994.05.19 | |
| 5 | செல்வி வி.சந்திரபவானி | 1992.10.23-1994.09.29 | |
| 6 | செல்வி கே.கேமலதா | 1992.02.19-1992.04.03 | |

| | | | |
|---|---|---|---|
| 7 | செல்வி சந்திரபவானி சந்திரசேகரம் | 1992.09.30-1994.05.23 | |
| 8 | செல்வி சுபைதா பூபாலசிங்கம் | 1993.02.18-1993.10.25 | |
| 9 | செல்வி யாமினி விக்கினராஜா | 1993.02.18-1994.05.26 | |
| 10 | செல்வி கே.சுதர்சினி | 1993.06.30-1994.12.15 | |
| 11 | செல்வி வடிவாம்பிகை | 1993.06.30-1994.05.26 | |
| 12 | செல்வி எஸ் கனகதாரணி | 1994.09.12-1996.06.22 | |
| 13 | செல்வி சுலோசனா சோமசுந்தரம் | 1996.06.10-1998.10.07 | |
| 14 | செல்வி அனுசா செல்லத்துரை | 1998.10.21-1999.06.14 | |
| 15 | செல்வி மொனிக்கா மரியநாயகம் | 1999.04.28-2003.12.31 | நூலகப்பொறுப்பு |
| 16 | செல்வி ச. ஜெயந்தி | 2000.01.11-2001.03.31 | |
| 17 | செல்வி அ.கர்ஜினி | 2000.08.31-2001.07.02 | சித்திரம் |
| 18 | செல்வி கோகிலா இராமசாமி | 2000.07.06-இன்றுவரை | ஆரம்பக் கல்வி |
| 19 | செல்வி கேமமாலினி மகாலிங்கம் | 2000.07.06-2001.09.10 | |
| 20 | திரு.சி.தட்சணாமூர்த்தி | 2001.09.10-2004.07.12 | லிகிதர் |
| 21 | செல்வி பாமினி | 2001.04.25-2003.12.31 | உடற்கல்வி |
| 22 | செல்வி சங்கரி பரம்சோதி | 2002.01.10-இன்றுவரை | ஆங்கிலம் |
| 23 | செல்வி கி.கலையமுதா | 2003.05.12-2003.10.21 | நடனம் |
| 24 | செல்வி கலாவதி | 2003.07.05-2003.10.21 | ஆரம்பக் கல்வி |
| 25 | செல்வி செ.செல்வரஞ்சினி | 2004.07.03-இன்றுவரை | ஆரம்பக் கல்வி |
| 26 | செல்வி தெ.கோபிகா | 2004.07.14-இன்றுவரை | லிகிதர் |

1980 காலப்பகுதி தொடக்கம் இன்றுவரை ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருவது குறிப்பிடத்தக்கது

## தற்போது சேவையிலுள்ளோர் விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் | 1982.01.01-இன்றுவரை | அதிபர் |
| 2 | திருமதி புஸ்பவதி வரதராஜா | 1998.04.21-இன்றுவரை | பகுதித் தலைவர் |
| 3 | திருமதி இராஜகுமாரி வேணுகாந்தன் | 1997.09.23-இன்றுவரை | ஆரம்பப் பயிற்சி |
| 4 | திருமதி இராஜேஸ்வரி சுதானந்தராஜா | 1997.12.10-இன்றுவரை | ஆரம்பப் பயிற்சி |
| 5 | செல்வி சுபாசினி மகேந்திரன்<br>திருமதி சுபாசினி சிவகணேசன் | 1998.02.09-இன்றுவரை | கணிதப் பயிற்சி |
| 6 | செல்வி வினோதா தவச்செல்வம்<br>திருமதி வினோதா விஜயசுந்தரம் | 1998.02.23-இன்றுவரை | விஞ்ஞானப் பயிற்சி |
| 7 | செல்வி நித்தியா சண்முகலிங்கம்<br>திருமதி நித்தியா செங்கையாழியான் | 1998.04.08-இன்றுவரை | ஆரம்பப் பயிற்சி |
| 8 | செல்வி தயானி அருளம்பலம்<br>திருமதி தயானி குகநாதன் | 1998.04.08-இன்றுவரை | தமிழ் பயிற்சி |
| 9 | திருமதி அமலஜோதி அல்பிறட் குருஸ் | 1999.02.17-இன்றுவரை | வர்த்தக பட்டதாரி |

| | | | |
|---|---|---|---|
| 10 | செல்வி ஜெகநாயகி இராமலிங்கம் | 1999.05.09-இன்றுவரை | சங்கீத பயிற்சி பகுதிநாள் |
| | திருமதி ஜெகநாயகி இளங்கீரன் | | |
| 11 | செல்வி விஜயலட்சுமி சிவகுருநாதன் | 2000.01.03-இன்றுவரை | தமிழ் பயிற்சி |
| 12 | செல்வி சுபாசினி குணநாயகம் | 2000.01.14-இன்றுவரை | வர்த்தக பயிற்சி |
| | திருமதி சுபாசினி சுஜீவன் | | |
| 13 | திருமதி அனுசுயா விஜயநாதன் | 2000.01.24-இன்றுவரை | தமிழ் பயிற்சி |
| 14 | செல்வி திலகவதி குமாரவேலு | 2001.02.15-இன்றுவரை | ஆரம்பப் பயிற்சி |
| 15 | திருமதி கமலா காசிநாதன் | 2003.01.01-இன்றுவரை | ஆரம்பப் பயிற்சி |
| 16 | திருமதி பவானி புஸ்பராஜா | 2003.01.01-இன்றுவரை | ஆரம்பப் பயிற்சி |
| 17 | செல்வி சுஜித்தா குகதாசன் | 2003.06.06-இன்றுவரை | பகுதிநேர ஆங்கிலம் |
| | திருமதி சுஜித்தா பகீரதன் | | |
| 18 | திருமதி மங்களவதனி உதயகுமார் | 2003.06.27-இன்றுவரை | ஆங்கில பயிற்சி |

## ஔவையார் அருளிச்செய்த மூதுரை

அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம்.



# நினைவு கூருகிறோம்



காமினி இரத்தினசிங்கம்
1971.02.25 - 1979.11.19



எட்சாயினி இராசையா
1977.01.02 - 1986.12.31



வக்சலா பஞ்சலிங்கம்
1982.04.05 - 1992.02.13



தனுசலா றவிச்சந்திரன்
1987.11.24 - 1995.07.24



வாசுகி மணிவாசகன்
1981.07.11 - 1990.03.08



தக்சாயணி பரமசிவம்
1989.08.19 - 1999.05.09



தர்மினி நடராஜன்
1989.11.09 - 1999.05.09

# ஓய்வு பெற்று இயற்கை எய்தியோர்



திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை
1928.08.22 - 2003.07.24



திருமதி விமலாதேவி சர்வேஸ்வரசர்மா
1935.12.10 - 2003.11.19



திருமதி அன்னலட்சுமி
யோகேஸ்வரன்



திருமதி அமிர்தம் குருநாதன்



திருமதி அன்னபூரணி வீரசிங்கம்

# நனிசிறந்த மாணவி நல்வாசுகி பற்றி....



திரு. திருமதி மணிவாசகன் விமலா தம்பதிகள் திருமணம் செய்து எட்டுவருட காலம் மகவு இல்லாமல் அருந்தவஞ் செய்து அம்மன் அருளால் 1981இல் வந்துதித்த மகள் வாசுகி. அன்போடும் அரவணைப்போடும் சந்தோசமாக வாழ்ந்த குடும்பத்தில் முதலாவது பேரிடியாக 1983இல் யூலைக் கலவரத்தில் ஆட்சியாளர்களின் அரக்கத்தனத்தினால் தந்தை உயிரோடு எரியூட்டப்பட்டார். அதன் பின் தந்தைக்கு தந்தையாக வாசுகிக்கு தாத்தா இருந்து வந்தார். பின் தாத்தாவும் இறைபாதம் அடைய தாய் மாமன் துணையோடு பாடசாலைக்கு வந்து போனாள். காலப்போக்கில் அப்பாவும் இல்லை, தாத்தாவும் இல்லை என்ற தாக்கமும், மன உளைச்சலும் நல்ல நிலையில் இருந்த பிள்ளைக்கு எமனாக மாறி மூளைக்காய்ச்சல் பிள்ளைக்கு பீடித்தது. பல சிகிச்சைகளை செய்த போதும் எமனிடமிருந்து காப்பற்ற முடியவில்லை.

வாசுகி மண்ணை விட்டு மறைந்தாலும் இன்றும் எம் உள்ளத்தில் நிறைந்து நிற்கும் அளவிற்கு அவருடைய தாயாரும் அவருடைய குடும்பமும் எமது பாடசாலைக்கு கணினி, நூலகத்துக்கு தேவையான புத்தகங்கள், கற்பித்தலுக்கு தேவையான சொல்லட்டைகள் மற்றும் பண உதவி போன்றவற்றையும் செய்துள்ளார்கள். இதுமட்டுமன்றி எமது பாடசாலையில் இப்பொழுது தினமும் ஓதப்பட்டு வரும் பஞ்ச புராணத் திரட்டுப் புத்தகத்தையும் இரண்டாவது பதிப்புச் செய்து வழங்கியிருக்கிறார்கள்.

தொடர்ந்தும் அவர்கள் மகள் படித்த ஆரம்ப பாடசாலைக்காக தமது சேவையை ஆற்றி ஆத்ம திருப்தி அடைந்து கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை.



# மாணவர் தொகை விபரம்

## 01.01.1979-31.12.1984

| வகுப்பு | பிரிவு | 1979 | வகுப்பு மொத்தம் | 1980 | வகுப்பு மொத்தம் | 1981 | வகுப்பு மொத்தம் | 1982 | வகுப்பு மொத்தம் | 1983 | வகுப்பு மொத்தம் | 1984 | வகுப்பு மொத்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பாலர் கீழ் வகுப்பு | 1 | 44 | | – | | – | | – | | – | | – | |
| பாலர் மேல் வகுப்பு | 1 | 60 | 104 | – | | – | | – | | – | | – | |
| பாலர் வகுப்பு | A | – | | 40 | | 40 | | 54 | 54 | 44 | | 45 | |
| பாலர் வகுப்பு | B | – | | 38 | 78 | 40 | 80 | – | | 42 | 86 | 43 | 88 |
| முதலாம் வகுப்பு | 1 | – | | 50 | 50 | – | | – | | – | | – | |
| முதலாம் வகுப்பு | A | – | | – | | 40 | | 41 | | 31 | | 47 | |
| முதலாம் வகுப்பு | B | – | | – | | 40 | 80 | 41 | 82 | 30 | 61 | 49 | 96 |
| இரண்டாம் வகுப்பு | 1 | 49 | 49 | – | | 53 | 53 | – | | – | | – | |
| இரண்டாம் வகுப்பு | A | – | | 38 | | – | | 40 | | 50 | | 38 | |
| இரண்டாம் வகுப்பு | B | – | | 38 | 76 | – | | 39 | 79 | 46 | 69 | 34 | 72 |
| மூன்றாம் வகுப்பு | 1 | – | | 47 | 47 | – | | 54 | 54 | – | | – | |
| மூன்றாம் வகுப்பு | A | – | | – | | 42 | | – | | 44 | | 51 | |
| மூன்றாம் வகுப்பு | B | – | | – | | 41 | 83 | – | | 43 | 87 | 56 | 107 |
| நான்காம் வகுப்பு | 1 | – | | – | | 50 | 50 | – | | – | | – | |
| நான்காம் வகுப்பு | A | – | | – | | – | | 46 | | 34 | | 49 | |
| நான்காம் வகுப்பு | B | – | | – | | – | | 45 | 91 | 33 | 67 | 46 | 95 |
| ஐந்தாம் வகுப்பு | A | – | | – | | – | | 28 | | 46 | | 39 | |
| ஐந்தாம் வகுப்பு | B | – | | – | | – | | 27 | 55 | 46 | 92 | 39 | 78 |
| மாணவர் மொத்தம் | | | 153 | | 251 | | 346 | | 415 | | 489 | | 536 |

| 01.01.1985 - 31.12.1998 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | பிரிவு | 1985 | வ.மொ | 1986 | வ.மொ | 1987 | வ.மொ | 1988 | வ.மொ | 1989 | வ.மொ | 1990 | வ.மொ | 1991 | வ.மொ | 1992 | வ.மொ | 1993 | வ.மொ | 1994 | வ.மொ | 1995 | வ.மொ | 1996 | வ.மொ | 1997 | வ.மொ | 1998 | வ.மொ |
| 1 | A | 34 | | 39 | | 36 | | 35 | | 47 | | 44 | | 40 | | 38 | | 39 | | 35 | | 37 | | 33 | | 34 | | 29 | |
| 1 | B | 34 | | 40 | | 36 | | 35 | | 48 | | 43 | | 37 | | 37 | | 40 | | 35 | | 37 | | 32 | 65 | 35 | 69 | 29 | |
| 1 | C | 29 | 97 | 36 | 115 | 36 | 108 | 34 | | 47 | 142 | 44 | | 36 | | 37 | | 38 | | 35 | | 37 | | - | | - | | 29 | 87 |
| 1 | D | - | | - | | - | | 29 | 133 | - | | 44 | 175 | 37 | 150 | 36 | 148 | 38 | 155 | 35 | 140 | 36 | 147 | - | | - | | - | |
| 2 | A | 44 | | 54 | | 42 | | 38 | | 49 | | 49 | | 38 | | 38 | | 36 | | 40 | | 36 | | 31 | | 32 | | 26 | |
| 2 | B | 45 | 89 | 50 | 104 | 40 | | 34 | | 49 | | 49 | | 37 | | 34 | | 38 | | 40 | | 34 | | 30 | | 33 | 65 | 25 | |
| 2 | C | - | | - | | 38 | 120 | 37 | 109 | 48 | 146 | 50 | 148 | 36 | | 34 | | 37 | | 40 | | 32 | | 29 | 90 | - | | 26 | 77 |
| 2 | D | - | | - | | - | | - | | - | | - | | 37 | 148 | 33 | 139 | 35 | 146 | 37 | 157 | 35 | 137 | - | | - | | - | |
| 3 | A | 46 | | 49 | | 39 | | 45 | | 42 | | 54 | | 36 | | 39 | | 36 | | 36 | | 38 | | 29 | | 36 | | 36 | |
| 3 | B | 46 | 92 | 49 | 98 | 38 | | 44 | | 42 | | 54 | | 31 | | 39 | | 35 | | 36 | | 39 | | 27 | 56 | 37 | | 34 | 70 |
| 3 | C | - | | - | | 39 | 116 | 43 | 132 | 41 | 125 | 55 | 163 | 36 | | 38 | | 34 | | 34 | | 39 | | - | | 37 | 110 | - | |
| 3 | D | - | | - | | - | | - | | - | | - | | 33 | 136 | 39 | 155 | 32 | 137 | 32 | 138 | 38 | 154 | - | | - | | - | |
| 4 | A | 39 | | 48 | | 48 | | 43 | | 49 | | 46 | | 35 | | 37 | | 36 | | 39 | | 37 | | 33 | | 41 | | 30 | |
| 4 | B | 39 | 78 | 63 | 111 | 58 | 106 | 43 | | 47 | | 42 | | 35 | | 31 | | 41 | | 34 | | 37 | | 29 | 62 | 41 | 82 | 27 | |
| 4 | C | - | | - | | - | | 43 | 129 | 50 | 146 | 45 | 133 | 37 | | 34 | | 35 | | 39 | | 35 | | - | | - | | 26 | |
| 4 | D | - | | - | | - | | - | | - | | - | | 32 | 139 | 34 | 136 | 39 | 151 | 33 | 145 | 31 | 140 | - | | - | | 33 | 116 |
| 5 | A | 59 | | 48 | | 41 | | 34 | | 47 | | 53 | | 32 | | 27 | | 34 | | 38 | | 38 | | 43 | | 35 | | 31 | |
| 5 | B | 61 | 120 | 47 | 95 | 40 | | 36 | | 45 | | 53 | | 27 | | 32 | | 31 | | 43 | | 36 | | 41 | 84 | 34 | 69 | 30 | |
| 5 | C | - | | - | | 41 | 122 | 33 | 103 | 42 | 134 | 53 | 159 | 30 | | 34 | | 32 | | 37 | | 38 | | - | | - | | 28 | 89 |
| 5 | D | - | | - | | - | | - | | - | | - | | 30 | 119 | 31 | 124 | 38 | 135 | 40 | 158 | 34 | 146 | - | | - | | - | |
| 6 | A | 46 | | 42 | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | |
| 6 | B | 46 | | 42 | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | |
| 6 | C | - | | 42 | 126 | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | | - | |
| மொ | | | 476 | | 649 | | 512 | | 606 | | 693 | | 778 | | 692 | | 702 | | 724 | | 738 | | 724 | | 357 | | 395 | | 439 |

| 01.01.1999-31.12.2004 | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தரம் | பிரிவு | 1999 | வகுப்பு மொத்தம் | 2000 | வகுப்பு மொத்தம் | 2001 | வகுப்பு மொத்தம் | 2002 | வகுப்பு மொத்தம் | 2003 | வகுப்பு மொத்தம் | 2004 | வகுப்பு மொத்தம் |
| தரம்1 | A | 30 | | 27 | | 36 | | 21-2 | | 33 | | 32 | |
| தரம்1 | B | 30 | | 27 | | 35 | | 35 | | 33 | | 32 | |
| தரம்1 | C | 30 | 90 | 26 | 80 | 37 | 108 | 28-1 | 84-3 | 33 | 99 | 32 | 96 |
| தரம்2 | A | 30 | | 30 | | 27 | | 40-1 | | 31-1 | | 34 | |
| தரம்2 | B | 29 | | 30 | | 29 | | 39-1 | | 30 | | 33 | |
| தரம்2 | C | 30 | 89 | 30 | 90 | 27 | 83 | 37 | 116-2 | 30 | 91-1 | 34 | 101 |
| தரம்3 | A | 26 | | 28 | | 31 | | 31 | | 44 | | 31 | |
| தரம்3 | B | 38 | | 29 | | 31 | | 31 | | 44 | | 29 | |
| தரம்3 | C | 26 | 80 | 30 | 87 | 32 | 94 | 32 | 94 | 44-1 | 132-1 | 30 | 90 |
| தரம்4 | A | 39 | | 26 | | 33 | | 33 | | 34 | | 34 | |
| தரம்4 | B | 37 | | 27 | | 31 | | 33 | | 33 | | 34 | |
| தரம்4 | C | - | | 25 | | 31 | | 35 | | 33 | | 34 | |
| தரம்4 | D | - | 76 | - | 78 | - | 95 | - | 101 | - | 100 | 35 | 137 |
| தரம்5 | A | 30 | | 25 | | 29 | | 37 | | 34 | | 36 | |
| தரம்5 | B | 31 | | 25 | | 26 | | 30 | | 34 | | 33 | |
| தரம்5 | C | 26 | | 25 | | 27 | | 28 | | 35 | | 33 | |
| தரம்5 | D | 28 | 115 | - | 75 | - | 82 | - | 95 | - | 103 | - | 102 |
| மொ | | | 450 | | 410 | | 462 | | 490-5 | | 525-2 | | 526 |

### ஔவையார் அருளிச்செய்த மூதுரை

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு.

# பாடசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை 1979 – 2004 ஆண்டுகளுக்கான செயலறிக்கை

திரு. நா. கமலநாதன்
செயலாளர்.

எமது பாடசாலை வெள்ளி விழாவினைக் கொண்டாடும் இந்நாளில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் செயலறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

1979 ஜனவரி முதலாந் திகதி தொடக்கம் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் நிர்வாக அமைப்பில் இருந்து விலகி, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வளவிற்குள்ளே அதன் தென்கிழக்கு மூலைப் பகுதியில், யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை என்னும் பெயருடன் தனித்து இயங்கி வருகிறது.

இதன் 25 வருடகால வளர்ச்சிப் பாதையில் யாழ் மாவட்டத்திலே சைவச் சூழலில் வளர்த்தெடுக்கப்படுகின்ற பெண்களுக்கான ஆரம்பப்பாடசாலையாகப் பிரபல்யமடைந்து மிளிர்கின்றது.

நான் இப்பாடசாலையின் அயலவன் என்ற வகையில், இப்பாடசாலையின் செயற்பாடுகளை அவதானித்து வந்துள்ளேன். அந்த வகையில் தொடக்க காலம் முதல் இன்று வரை இப்பாடசாலையின் துரித வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டு செயற்பட்டவர்கள், அப்போது கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள், உள்வாங்கப்பட்ட அனைத்து மாணவரினதும் பெற்றோர்கள், நலன்விரும்பிகள் போன்றோரின் பற்றுறுதியும், அர்ப்பணிப்பு மிக்க சேவையுமே, இப்பாடசாலையின் சிறப்பான வளர்ச்சிக்குக் காரணம் எனலாம்.

ஓர் ஆரம்பப் பாடசாலைக்கு இருக்கவேண்டிய அனைத்து வளங்களும் படிப்படியாகவே வளர்ச்சி கண்டு வந்துள்ளது. பாடசாலையின் பதிவுகளின்படி அதிபர் திருமதி யோ. ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் தலைமையில் 1979.06.08இல் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அன்று பாடசாலை அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணமும் உத்தியோகத்தர் குழு, உபகுழுக்கள் தெரிவும் இடம்பெற்றது.

1981.02.26இல் நல்லூரில் வட்டாரக் கல்வி அதிகாரியாக கடமையாற்றிய குமாரசாமி சோமசுந்தரம் அவர்களைப் பிரதம விருந்தினராகக் கொண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பாடசாலையின் பெற்றோர், தொடக்கம் முதல் இன்றுவரை பாடசாலையின் பௌதிகவள அபிவிருத்திக்கு உதவியுள்ளனர். இவர்களின் கூடுதலான பங்களிப்புகள் இப்பாடசாலையைக் கட்டியெழுப்ப உதவியுள்ளது.

1980.01.24இல் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுச்சபை கூட்டத்தில் பாடசாலை அபிவிருத்திக்காகப் பெற்றோர்களிடமிருந்தும், பாடசாலையின் நலன் விரும்பிகளிடமிருந்தும்

நிதி திரட்டுவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டு, பாடசாலை நிலைமையை விளக்கி வேண்டுகோள் விடுக்கப்பட்டது. பெற்றோர், நலன்விரும்பிகள் விருப்புடன் பங்களிப்புச் செய்தனர்.

1984.06.24 ஞாயிறு பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, பாடசாலைக்கு நன்கொடை பெறுவதற்கான தீர்மானம் பெற்றோரால் கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

1985.03.23 பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயற்குழு உறுப்பினர்களும், புதிதாகச் சேர்க்கப்பட்ட மாணவரின் பெற்றோர்களையும் சேர்த்து நடத்தப்பட்ட கூட்டத்தில் தலைவரால் பாடசாலையின் வசதியீனங்கள், தேவைகள் பற்றி விளக்கிக் கூறப்பட்டதைத் தொடர்ந்து பெற்றோர் தம்மாலான உதவிகளைச் செய்து தருவதாகச் சம்மதம் தெரிவித்தனர். அந்தவகையில் நிறைவேற்றப்பட்ட பணிகள் வருமாறு.

**நீர் வசதி**

1979-1982 வரை எமது பாடசாலைக்கென்று தரப்பட்ட யா/இந்து மகளிர் கல்லூரியின் மனையியல் அறையிலுள்ள குழாய்மூலம் நீர் பெறப்பட்டுள்ளது. 1989.10.19இல் நீர் விநியோகத்திற்கான பைப்கள் இணைக்கும் ஆரம்ப வேலைகள் நடைபெற்று, எமது பாடசாலைக்கு மிக அருகில் இருக்கும், இந்து மகளிர் கல்லூரியின் கிணற்றிலிருந்து குழாய்மூலம் நீர் பெற்றுக் கொள்ளப்பட்டது. தண்ணீர் தாங்கியும் அமைக்கப்பட்டது. இதனைத் திருத்தியமைக்க வேண்டிய தேவையுள்ளது.

**மலசலகூடம்**

1979-1982 வரை இந்துமகளிர் கல்லூரியின் மலசலகூடமே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. 1983 மாசி மாதம் மலகூடம் ஒன்றும், 6 பிரிவுகளைக் கொண்ட இரண்டு சல கூடத் தொகுதியும் அமைக்கப்பட்டது. 1993.02.11இல் மலசல கூட குழி (பிற்) அடைப்பு விசேட சுத்திகரிப்பு பிரிவு தொழிலாளர் மூலம் சீர் செய்யப்பட்டது.

**பாடசாலைக்கான பாதை**

1979-1982 வரை இந்து மகளிர் கல்லூரியின் நுழைவாயில் போக்கு வரத்திற்குப் பயன் படுத்தப்பட்டது. 1982.06.14இல் இருந்து இந்து மகளிர் ஒழுங்கையில் அமைக்கப்பட்ட புதிய பாதையை வாகனப் போக்கு வரத்திற்காகப் பயன் படுத்த ஆரம்பித்துள்ளோம். ஒடுக்கமுள்ள இந்து மகளிர் ஒழுங்கை ஆபத்து மிக்கதென்பதை அன்று அனுபவமூலமாக உணர்ந்து கொண்ட பெற்றோர்கள், அரசடி வீதியிலிருந்து பாதை அமைப்பது பற்றிய கோரிக்கையை தொடக்கம் முதலே வலியுறுத்தி வந்துள்ளார்கள். 1992.05.15இல் அரசடி வீதியில் நுழைவாயில் கொண்ட பாதை திறக்கப்பட்டது. அன்றைய தினம் "புதியபாதை திறப்பு விழா" விழாவாகக் கொண்டாடப்பட்டது என்பது பதிவுகள் வாயிலாக அறியக் கூடியதாக இருந்தது. 1983இல் இரு பாடசாலைகளுக்கும் இடையில் எல்லை போடப்பட்டது. கோயில் வழிபாட்டிற்காகக் கல்லூரியின் கோவிலின் அருகில் உள்ள மதிலில் வாசல் வைக்கப்பட்டிருந்தது. அப்போது பாடசாலையின் தேவை கருதிய கோயில் வழிபாட்டிற்கும், மைதானப் பயன்பாட்டிற்கும் இப்பாதை பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதும் அறியக்கூடியதாக உள்ளது.

**கூரை வேலைகளும் கட்டட அபிவிருத்தியும்**

1979இல் ஆரம்பிக்க வேண்டிய பாடசாலையின் 50'x25' மேல்மாடி கட்டட வேலைகள் 1982இல் ஆரம்பித்து 1983.02.21இல் நிறைவு பெற்றன. அப்போது கடமையாற்றிய நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. சிவநாயகமூர்த்தி அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிறைவு விழாவைச் சிறப்பித்தார். 1983 காலப்பகுதியில் பாடசாலை சூழலில் ஏற்பட்ட பதட்ட நிலைமை, இடம்பெயர்ந்த மாணவரின் வருகை, வகுப்பறைத் தட்டுப்பாடு போன்ற காரணங்களினால் தற்காலிகக் கட்டடம் போடப்பட்டது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இரண்டு வகுப்பறைகளை தற்காலிகமாக அமைத்துக் கொடுத்தபடியால் பாலர் வகுப்பில் அனுமதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு 1984.02.20இல் வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டன. 1984இல் மேலும் இரண்டு வகுப்பறைகள் தற்காலிக கட்டடத்தில் அமைக்கப் பட்டன. அதிகரித்து வரும் மாணவர் தொகைக்கு ஏற்ப, இடநெருக்கடியை நிறைவு செய்ய 1989.05.14இல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மீண்டும் தற்காலிக கொட்டகை அமைத்து வகுப்பறை ஒழுங்குகளைச் செய்து உதவியுள்ளது. பாடசாலைக்குப் பெயர்ப்பலகை பொருத்தப்பட்டது. மறைப்புத் தட்டிகள் செய்யப்பட்டன.

1990இல் 25'x25' கீழ் தள மற்றும் மேல் தள வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்து காரியாலயமும், மேலே வகுப்பறைகளும் அமைக்கப்பட்டன. 1994.01.01இல் 90'x25' கூரைக்கு கிடுகை நீக்கி சீற் போடும் வேலை முடிவுற்றது.

**வேறு குறிப்பிடத்தக்க நிகழ்வுகள்**

1989இல் பாடசாலையின் 10ம் ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் மேற்கொண்ட போதும், தவிர்க்க முடியாத காரணங்களால் இவற்றை நிறைவேற்ற முடியவில்லை.

இந்திய அமைதிப்படையின் வருகையைத் தொடர்ந்து, 1987.09.09இற்குப் பின்னர் பாடசாலை ஓர் அகதி முகாமாக செயற்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அக்காலப் பகுதியில் நடைபெற்ற அனர்த்தங்களால் கட்டடங்களுக்குச் சேதங்களும் ஏற்பட்டன. அத்துடன் தளபாடங்கள், பொருட்கள் காணாமலும் போயின.

1991 மே மாத காலப்பகுதியில் சூழ்நிலைகள் காரணமாக பாடசாலை யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்ட் மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக் கட்டடத்தில் காலை 7.30-12.00 வரை இயங்கியது. அந்த ஆண்டு பிற்பகுதியில் இந்து மகளிர் கல்லூரியில் பிற் பகல் 1.00-5.00 வரை இயங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. 1991.11.11இலிருந்து ஆண்டு முடியும்வரை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் இயங்கியது. அகதி முகாமாக இயங்கியதால் ஏற்பட்ட வசதியீனங்கள், சுகாதார சீர்கேடுகள் சீர்செய்யப்பட்டு பாடசாலை மீண்டும் 1992.01.06 தொடக்கம் பழைய இடத்தில் இயங்க முடிந்தது.

1992-1995 காலப்பகுதியில் நிலவிய அசாதாரண சூழ்நிலையிலும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தனது நிலையில் நின்று விலகாமல் பாடசாலையின் அபிவிருத்தியில் இயன்றளவு பங்காற்றியது.

பாடசாலை வரலாற்றில் 14 வருடங்களாகப் பரிசளிப்பு விழா நடைபெறாதது கண்டு கவலையுற்ற அபிவிருத்திச் சங்கத்தினர், நிதியுதவியினை அளித்து 1994.10.09இல் மீண்டும் பரிசளிப்பு விழாவினை ஆரம்பித்துச் சிறப்பாக நடத்துவதற்கு பூரண ஆதரவினை வழங்கினர்.

மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாலும் பழைய தளபாடங்கள் பாவனைக்கு உதவாமல் போவதாலும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இயன்றளவு உதவியைச் செய்து தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றார்கள்.

1995இல் ஏற்பட்ட பாரிய இடம்பெயர்வைத் தொடர்ந்து மீளவும் 1996.05.06இல் வலிகாமம் பாடசாலைகள் இயங்கத் தொடங்கின. அன்று தொடக்கம் 1996.10.23 வரை பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்து திரு. கு.தர்மராஜா அவர்கள் தற்காலிக செயலாளராகக் கடமையாற்றினார். பின்னர் 1996.10.24இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரு. ம.இரகுநாதன் அவர்கள், தமிழ்துறை, யாழ் பல்கலைக் கழகம், செயலாளராகவும், திருமதி த.நவரட்ணம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுடன் இணைந்த செயற்குழு உறுப்பினர்களும் மீளக் குடியமர்ந்த நிலையில் பாடசாலையைப் புனரமைத்துப் பௌதிக வளம், மாணவர் கல்வி அபிவிருத்தி, புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டுதல் போன்ற பணிகளை நிறைவேற்றினர். திருமதி த.நவரட்ணம் 1997.12.31இல் ஓய்வு பெற்றதால் செல்வி பா.மனோரஞ்சினி பொருளாளர் பதவியைப் பொறுப்பேற்றார்.

அரசடி வீதியில் அமைந்துள்ள பாடசாலையின் நுழைவாயில் புனரமைப்பு, தளபாடத் திருத்தம், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் தொண்டர் ஆசிரியருக்கு வேதனம் வழங்குதல், சுத்திகரிப்புத் தொழிலாளியின் சேவை என்பன நிறைவேற்றப்பட்டன. அலுவலகத்திற்கு விளம்பரப் பலகையும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

1997.11.15இல் பரிசில் தினமும், பெற்றோர் தின விழாவும் சிறந்த முறையில் நடைபெறுவதற்கு உதவியவை போன்ற விடயங்கள் செயற்படுத்தப்பட்டன.

1998.04.09இல் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திரும்பவும் திரு. ம.இரகுநாதன் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பாடசாலையின் ஒளிமயமான வளர்ச்சிக்கான நல்ல செயற்பாடுகளுக்கு, நிர்வாகத்துடன் இணைந்து செயற்படவேண்டிய தேவை நிறையவே இக்காலப்பகுதியில் எதிர்பார்க்க வேண்டியிருந்தது. இக்காலப் பகுதியில் திணைக்கள நிதியுதவியுடன் காரியாலயம் அமைந்துள்ள மண்டபத்தின் கூரையும், நிலமும் திருத்தியமை, அருந்ததி மண்டப வகுப்பறைகள், நிலம், கூரை திருத்தியமை, மலசலகூட புனரமைப்பு, ஆசிரியர்களுக்கான சாதாரண மலசலகூடம் அமைக்கப்பட்டமை பிரதானமான பணிகளாகும்.

1999.03.28இல் நடந்த வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் செயலாளராக திரு. நா.கமலநாதனும், பொருளாளராக திருமதி பு.வரதராஜா அவர்களும் தெரிவு செய்யப் பட்டனர். காரியாலயத்திற்கு முன்பாக உள்ள தற்காலிகக் கொட்டகை இடிந்து விழும் அபாய நிலையில் காணப்பட்டமையால் கல்வித் திணைக்களத்தின் அனுமதியுடன் அது புனரமைக்கப்பட்டது. மின் இணைப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிறுவர் விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டுள்ளது. தரம் ஒன்று வகுப்பறை புதிய கல்விச் சீர்திருத்தக் கட்டமைப்பின் பேரில் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் புனரமைப்புச் செய்யப் பட்டுள்ளது. தரம் ஒன்றின் வகுப்புகளின் கதிரை மேசைகளுக்குத் தீந்தை பூசப்பட்டு அழகு படுத்தப்பட்டுள்ளது.

1999.09.23இல் விசேட பொதுக் கூட்டம் மாணவரினதும், பாடசாலையினதும் நலன் கருதி கூட்டப்பட்டது.

2002.06.23இல் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் திரும்பவும் திரு. நா.கமலநாதன் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். பொருளாளராக செல்வி நித்யா சண்முகலிங்கம் கடமையேற்றார். இவர்களுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் சிறந்த முறையில் செயற்பட்டனர். நிறைவேற்றிய அபிவிருத்தித் திட்டங்கள் வருமாறு.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் கோவிலுக்கருகில் உள்ள கிணற்றிலிருந்து குழாய் நீர் விநியோகத்திற்கும், குடிநீர் பாவனைக்கும் ஆன ஒழுங்குகள் பூர்த்தி செய்யப்பட்டன. GTZ நிறுவனத்தின் உதவியுடன் இரண்டாவது கட்ட மலசலகூட அமைப்பு புனரமைப்புச் செய்யப்பட்டது. பாடசாலை மலசல கூடத் தொகுதிக்கான தண்ணீர் வசதியும், குழாய் நீர் விநியோகமும் சீர் செய்யப்பட்டுள்ளது. பாடசாலையில் பூந்தோட்டம் அமைக்கப்பட்டது. சுவர்களை அழகுபடுத்த சுவர்ச் சித்திரங்கள் கீறப்பட்டன. தரம் இரண்டு வகுப்பறைகள் கொண்ட கட்டடப் பகுதி புதிய கல்வி சீர்திருத்தக் கட்டமைப்பின் பேரில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. தரம் 2 வகுப்பறைத் தளபாடங்களுக்குத் தீந்தை பூசப்பட்டது. 2001-2002இல் 90'x25' மேல்மாடிக் கட்டடத்தின் கீழ்த்தள வேலைகள் RAN நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு நிறைவடைந்துள்ளது. இங்கு 4 வகுப்பறைகள் நடைபெறுகின்றன. மேல்மாடி வேலைகள் 40'x25' கூரை வேலை நடைபெற்றுள்ளது. திறந்த அமைப்புடன் இருந்த 90'x25' மண்டபம், 4 வகுப்பறைகள் ஆகியன மூடி அமைக்கப்பட்டு சுண்ணாம்புப் பூச்சும் நடைபெற்றது.

ஆசிரியர்தினம், விளையாட்டுச் செயற்பாடுகள் மற்றும் பரிசில்தினம் சிறப்புற நடைபெறுவதற்கு பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து உதவி வருகின்றோம்.

பாடசாலை மாணவரின் வாசிப்புப் பழக்கத்தினை மேம்படுத்துவதற்கு தரம் வாய்ந்த "சிறுவர் நூல் நிலையம்" ஒரு அவசிய தேவையாகும்..

திருடர்களின் செயல்களைக் குறைக்கும் முகமாக, தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பாதுகாப்புச் சேவையை பெற்றோரின் வேண்டுகோளுக்கமைய பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் நியமித்துள்ளோம்.

தொடக்க காலம் முதல் பாடசாலையின் அபிவிருத்தியில் அக்கறையுடன் செயற்பட்ட செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| காலம் | செயலாளர் (பெற்றோர்) | பொருளாளர் (ஆசிரியர்) |
|---|---|---|
| 1979-1980 | திரு. சு.சண்முகராஜா | திருமதி அ.வீரசிங்கம் |
| 1981-1982 | திரு. சோ.சு. அருமைநாயகம் | திருமதி அ.குருநாதன் |
| 1983-1985 | திரு. சு.சண்முகராஜா | திருமதி ஜெ.கந்தையா |
| 1986-1889 | திரு. எஸ்.சிவானந்தம் | திருமதி வி.சர்வேஸ்வரசர்மா |
| 1990-1992 | திரு. பி.ஏ. ரஞ்சன் | திருமதி ச. தயாளன் |
| 1993-1995 | திரு. எஸ். வைரமுத்து | திருமதி க. சுந்தரலிங்கம் |
| 1995-1996 | திரு. கு. தர்மராஜா | திருமதி க. சுந்தரலிங்கம் |
| 1996-1998 | திரு. ம. இரகுநாதன் | திருமதி த. நவரத்தினம் (97 வரை)<br>செல்வி பா. மனோரஞ்சினி (98இல்) |
| 1999-2002 | திரு. நா. கமலநாதன் | திருமதி பு. வரதராஜா |
| 2003-2004 | திரு. நா. கமலநாதன் | செல்வி நி. சண்முகலிங்கம் |

பெற்றோர் ஆசிரியர்களுக்கு இணைப்புப் பாலமாக இருந்து செயற்பட்டு வரும் இச்சங்கம், பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்குச் செயலாற்றி வருகின்றது. அத்துடன் வெள்ளி விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடும் இப்பாடசாலைக்கு சங்கத்தின் பூரண ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றோம்.

எல்லாவற்றிலும் மேலாக மேற்கூறப்பட்டவை போன்ற அபிவிருத்திச் செயற்பாடுகளைத் திறம்படச் செயற்படுத்துவதற்கு எமக்கு உறுதுணையாக இருந்து உழைத்துவரும் அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழுவினர், கல்வித் திணைக்களத்தினர், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் யாவருக்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

***ஔவையார் அருளிச்செய்த மூதுரை***

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவுந் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.



## பழைய மாணவர் சங்கம்



**இருப்பவர்கள் (இ-வ):** செல்வி செ.கவிதா,(செயலாளர்) திருமதி சு.சுஜீவன்(தலைவர்), திருமதி த. துரைசிங்கம் (போசகர்), திருமதி பு.வரதராஜா, செல்வி தே.கிமாலினி(பொருளாளர்)

**நிற்பவர்கள் (இ-வ):**

செல்வி ப.மயூரதி, செல்வி வி.அபிராமி, செல்வி செ.செல்வரஞ்சினி, செல்வி தெ.கோபிகா

## நலன்புரிச் சங்க உறுப்பினர்கள்



**இருப்பவர் (இ.வ):** செல்வி. தி. குமாரவேலு, திருமதி க. காசிநாதன், திருமதி இ. சுதானந்தராஜா (தலைவர்), திருமதி த. துரைசிங்கம் (போஷகர்), திருமதி பு. வரதராஜா, திருமதி வி. விஜயசுந்தரம் (செயலாளர்), செல்வி சி. விஜயலட்சுமி (பொருளாளர்).

**நிற்பவர்கள் :** திருமதி அ. அல்பிரட்குரூஸ், திருமதி இ. வேணுகாந்தன், திருமதி அ. விஜயநாதன், திருமதி ஜெ. இளங்கீரன்

# ஆசிரியர் குழாம்



**இருப்பவர் :** திருமதி ம. உதயகுமார், திருமதி க. காசிநாதன் திருமதி பு. வரதராஜா, திருமதி த. துரைசிங்கம் (அதிபர்), திருமதி அ. பரமலிங்கம்,திருமதி இ. வேணுகாந்தன், திருமதி அ. அல்பிரட்ரூஸ்

**நிற்பவர் (வரிசை 1) :** திருமதி இ. சுதானந்தராஜா, திருமதி சு.பகீரதன், திருமதி ஜெ. இளங்கீரன், திருமதி வி. விஜயசுந்தரம், திருமதி த. குகநாதன், திருமதி ப. புஸ்பராஜா, செல்வி. சி. விஜயலட்சுமி, திருமதி சு. சுஜீவன், திருமதி அ. விஜயநாதன், செல்வி. ப. சங்கரி.

**நிற்பவர் (வரிசை 2) :** செல்வி இ. கலாவதி, செல்வி தி. குமாரவேலு, திருமதி கே.ப.சக்திவேல், செல்வி செ. செல்வரஞ்சினி, திருமதி சு. சிவகணேசன், செல்வி கி. கலையமுதா

# அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்



## அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழுவினர்

| | | |
|---|---|---|
| திருமதி த.அ.துரைசிங்கம் | - | தலைவர் |
| திரு. நா. கமலநாதன் | - | செயலாளர் |
| திருமதி ச.நித்தியா | - | பொருளாளர் |
| திருமதி பு.வரதராசா | - | உறுப்பினர் |

திருமதி வி.வினோஷா
திருமதி குயோகரட்ணம்
திருமதி ம.லோகநாதன்
திரு.M. சமாம்பிள்ளை
திருமதி சடாட்சரஜோதி
திருமதி நா.விக்னேஸ்வரன்
திரு பி. பாலக்ருஷ்ணன்
திரு த. யோகராசா
திரு ஞா.செல்வராசா
திருமதி S. ராஜதுரை
திரு. N. நாகேஸ்வரநாதன்
திரு. வ.யோகேஸ்வரன்
திருமதி பி.சிவகுமார்
திருமதி இ.கிருஷ்ணதாஷ்
திரு. ஓ.எ.மேவிட்
திருமதி தீ. கிருஷ்ணகுமார்

# பழைய மாணவர் சங்கம்

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் முதல் அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீவிக்கினேஸ்வரா 1971.08.01 தொடக்கம் அதிபர் பதவிக்கான நியமனம் பெற்று, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சேவை ஆற்றினார். 1979.01.01 தொடக்கம் ஆரம்ப பாடசாலையின் நிர்வாகம் வேறாக்கப்பட்ட போது அதன் அதிபராகப் பொறுப்பேற்றார். அப்போதைய ஆசிரியர்களின் தொகை 5 ஆகவும் மாணவர் தொகை 153ஆகவும் இருந்தது.

பாடசாலையின் வளர்ச்சியும் முன்னேற்றமும் கருதி அதிபர் திருமதி யோகம்மா ஸ்ரீ விக்கினேஸ்வரா அவர்களால் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்படவேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது. 01.01.1982ஆம் ஆண்டிற்குப் பின் வெளியேறிய மாணவர்களே பழைய மாணவர் சங்க உறுப்பினராக உரித்துடையவர்கள் ஆவார். முதன் முதலாக 1992ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போதைய நிர்வாக உறுப்பினர்களாக பின்வருவோர் இருந்தார்கள்.

1. இ.சுபைதா
2. அ.ஈஸ்வரப்பிரியா
3. கு.கனகதாரணி
4. கு.சித்திரா
5. கு.சுகந்தினி
6. பா.றதிகா
7. கு.பிரியா
8. தே.மைதிலி
9. சி.சிவஜா
10. சி.பத்மஜா
11. க.சோபனா
12. ஞா.கௌரி

**பழைய மாணவர் சங்க வங்கிக் கணக்கு**

முதன் முதலாக 1994ம் ஆண்டு யூலை மாதம் தேசிய சேமிப்பு வங்கியில் பழைய மாணவ சங்கத்தின் பெயரில் கணக்கு (இல INS 834) ஆரம்பிக்கப்பட்டது. இவ் வைப்பில் இடப்பட்ட தொகை ரூபா 7,400.00 ஆகும். இவ் நிதி அதிஷ்டலாபச் சீட்டு இழுப்பின் மூலமும் வீடியோ படக் காட்சி மூலமும் சேகரிக்கப்பட்ட நிதியாகும்.

**பழைய மாணவ சங்கத்தின் செயற்பாடு.**

பாடசாலையின் பூந்தோட்டம் பூச்சாடிகளினால் அழகுபட அமைக்கப்பட்டது. 1992, 1993, 1994, 1995 ஆம் ஆண்டுகளில் உலக ஆசிரியர் தினத்தன்று ஆசிரியர்களை மாலைகள் அணிவித்து சிறு பரிசுகள் வழங்கி கௌரவித்தார்கள். பாடசாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழா, விளையாட்டு போட்டி, விருந்தினரை வரவேற்றல், மதிய போசன உபசரணைகளுக்கு சரீர உதவியை வழங்கியது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பழைய மாணவர் சங்கத்தோடு பாடசாலை அபிவிருத்தி சங்கமும் இணைந்து ஒத்துழைப்பு வழங்கியது.1994ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 6ஆம் திகதி பாடசாலை இலச்சனை அமைக்கப்பட்டு அதிபருக்கு கையளிக்கப்பட்டது. 30.10.1995 வரை இந்த அமைப்பு எவ்வித தடங்கலுமின்றி செயற்பட்டு வந்தது.

இடப்பெயர்வின் பின்னர் தளர்வுற்ற பழைய மாணவர் சங்கம் மீண்டும் 1996ஆம் ஆண்டின் இறுதியில் புத்துயிர் பெற்றது. இப் பாடசாலையில் இதுவரை கடமையாற்றிய அதிபரான திருமதி யோகம்மா ஸ்ரீ விக்கினேஸ்வரா 10.07.1996 அன்று ஓய்வுபெற்றார்.

இப்பாடசாலையின் 2வது அதிபராக பொறுப்பேற்ற திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் அவர்களின் காலத்தில் மீண்டும் பழைய மாணவர் சங்கம் புத்தொளி பெற்று விளங்கியது. இவருடைய காலத்திலே பழைய மாணவர் சங்கத்தின் பணிப்பின் பெயரில் முதன் முதலாக 1997.01.24 இல் மாணவர் முதல்வர் தெரிவும் மாணவச் சின்னமும் வழங்கப்பட்டது.

இவ் அதிபரின் அயராது உழைப்பினால் எமது சங்கம் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. தற்போது எமது சங்கத்தின் போஷகராக அதிபர் திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் அவர்களும் தலைவராக திருமதி சுபாங்கினி சுஜீவன், செயலாளராக செல்வி கவிதா செல்லத்துரை, பொருளாளராக செல்வி சிமாலினி தேவதாஸ் ஆகியோர் உள்ளனர்.

முதலில் ஆரம்பிக்கப்பட்ட கணக்கின் ஊடாகவே தற்போதும் சேமிப்பு வைப்பினை மேற்கொண்டு வருகின்றோம். சங்கத்தின் புதிய கணக்கு இல: 1-0006-02-72710ஆகும். எமது சங்கத்தால் அன்பளிப்பு அட்டை மூலமும் நிதி சேகரித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு உதவி வருகின்றோம்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவ சங்க கொழும்புக்கிளைக்கு எமது அதிபர் திருமதி. த. துரைசிங்கம் அவர்கள் உருக்கமான வேண்டுகைக் கடிதம் மூலம் தொடர்பு கொண்டதற்கு இணங்க யாழ் இந்து மகளிர் கல்லூரி மணி விழாவுக்கு வருகை தந்த போது எமது பாடசாலைக்கு சமூகமளித்து பார்வையிட்டு அதிபருடன் கலந்து ஆலோசித்துச் சென்றார்கள். அதன் பின் கணனி, மேந்தலை எறியி, கற்பித்தல் உபகரணங்கள், நூலகத்திற்கான புத்தகங்கள் போன்றவற்றை எமக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். மேலும் நிதி உதவியும் செய்துள்ளார்கள். பாடசாலை மாணவிகளின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிந்து வருகிறார்கள். எமது பாடசாலையின் வளர்ச்சியை உலகில் உள்ளோர் அறிந்து கொள்வதற்காக இணையத் தளத்திலும் வெளியிட்டுள்ளார்கள். அவர்களுக்கு எமது பழைய மாணவ சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, யாழ் இந்து மகளிர் கல்லூரியினை தாய்ப் பாடசாலையாகவும் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையை சேயாகவும் கருத்தில் கொண்டு எமது பாடசாலையின் கல்வி வளர்ச்சிக்கு மேன்மேலும் உதவிகள் புரிய வகை செய்ய வேண்டும் என வேண்டி நிற்கிறோம்.

பாடசாலையின் வளர்ச்சியினையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு எமது பழைய மாணவர் அபிவிருத்திச் சங்கம் அயராது உழைக்கும் என்பதைக் கூறிக் கொள்வதோடு வெள்ளிவிழா மலர் வெளிவருவதையிட்டும் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

## ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

அதிபரைப் போஷகராகவும் நிரந்தர ஆசிரியர்களை அங்கத்தவர்களாகவும் கொண்டு 1981ஆம் ஆண்டு முதல் நலன்புரிச் சங்கம் செயற்பட்டு வருகிறது. ஆசிரியரின் நலனைக் கருத்திற் கொண்டு கருமமாற்றும் இச்சங்கம் சக ஆசிரியர்களின் நன்மை தீமைகளில் பங்குபற்றித் தனது பங்களிப்பைச் செவ்வனே ஆற்றி வருகிறது. மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை செலுத்தி செயற்பட்டு வருகிறது. ஓய்வு பெறும் ஆசிரியர்களையும் இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆசிரியர்களையும் தகுந்த முறையில் கௌரவிப்பதில் அக்கறையோடு செயற்பட்டு வருகிறது.

2003.06.27இல் யாப்பு திருத்தியமைக்கப்பட்டது. கழக நடைமுறைக்கு ஏற்ப மனிதாபிமான அடிப்படையில் நிதி அன்பளிப்பினை வழங்கி வருகிறது.

# விழுமியம்சார் ஆரம்பக்கல்வி – சில குறிப்புக்கள்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்**
முன்னாள் கல்விப் பணிப்பாளர்

கல்வியே மனிதவாழ்க்கை மேம்பாட்டிற்கும், பல்துறை முன்னேற்றங்களுக்கும், மனித தன்மைகளை மனிதர் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழவும், வளமாக வாழவும் உறுதுணையாக அமைகின்றது. இதனாலேயே உலகின் நயத்தக்க நாகரிக வரலாறும்; கல்வி வரலாறும் இணைந்தே காணப்படுகின்றன.

கல்வி மனித அடிப்படை உரிமை அதனை எவர்க்கும் மறுத்தல் மனித உரிமை மீறலாகும். கல்வியை கற்க மறுப்பவன் வாழ மறுக்கிறான் என அறிஞர்கள் கூறியுள்ளமை கருத்திற் கொள்ளற் பாலது.

கல்வி, மனித விழுமியங்களுடன் சம்பந்தப்பட்டது. விழுமியங்கள், உன்னத மனித பண்புகள், மனிதரின் ஒழுக்கம், நடத்தை என்பவற்றை நன்நெறிப்படுத்துகின்றன. மனிதர்கள் புன் நெறியில் செல்லும் போக்கினை மாற்றி நன்நெறியில் செல்ல அவர்களை வழிப்படுத்துவது விழுமியங்கள்.

மனிதரிடம் ஆழ்ந்துகிடக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி, என்று சுவாமி விவேகானந்தர், கல்விக்கு வரைவிலக்கணம் கண்டார். மனிதன் விழுமிய பண்பு வளம் கொண்டவன். விழுமியங்கள் பூரணத்துவத்துள் அடக்கம். மனிதனின் உன்னதம் மலர்ச்சி அடைதல் என்பதால், மனிதவிழுமியங்கள் மலர்ச்சி பெறுகின்றன: அவை வெளிப்பாடாகின்றன எனக்கொள்ளலாம்.

மனிதனிடம் உள்ளாந்து காணப்படும் விழுமியங்களை வெளிப்படுத்துவது கல்வியாகும்.

“வாழ்க்கைக்கு உறுதுணையாக வருவது தூயநற்கல்வியே”, என்பது திருமூலர் வாக்கு . தூயநற்கல்வி என்பது விழுமியக்கல்வியேயாகும்.

கல்வியும் விழுமியங்களும் பிரிக்கமுடியாதன; பிரிக்கப்படவும் கூடாது.

கல்வியானது விழுமியக்கல்வியாக, ஒழுக்கக்கல்வியாகவே ஆரம்பிக்கப்பட்டு அண்மைக்காலம்வரை வளர்ச்சிபெற்று வந்தது. உலக நாடுகளின் கல்விமுறைமையில் விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டு, உலகியல் சார் கல்வித் துறைகளுக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருதலைத் தற்காலத்தில் காண்கின்றோம். அறிவின் பெருவளர்ச்சியும் திறன்களின் பெருவிருத்தியும், விஞ்ஞான மற்றும் தொழினுட்பப் பாரிய முன்னேற்றங்களும் அதேவேளை மனித விழுமியங்களின் வீழ்ச்சியும் தற்கால உலக மக்களை அழிவுப் பாதையில் இட்டுச் செல்கின்றன.

எனவே, கல்வி விழுமியஞ் சார்ந்ததாகவும் அமைய வேண்டியது இன்றியமையாததாகும். அப்போதுதான், உலகு காப்பாற்றப்படும். இவ்வுண்மை இன்று உணரப்பட்டு வருதல் நல்ல அறிகுறியாகும்.

**கல்விமுறையில் விழுமியங்களின் தேவை உணரப்படல்**

கடந்த காலங்களில் "சிறந்த வாழ்க்கையை நடாத்துவதற்கு வேண்டிய அறிவு, விளக்கம், செயற்றிறன்கள், மனப்பாங்குகளைக் கொண்ட மாணவர்களை எமது கல்விமுறைவழங்கத் தவறிவிட்டது. ஆக்கத்திறன், சுய முனைப்பு, ஒழுக்கம், மற்றவர்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை மற்றும் ஏனைய பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட முழுமையான **ஆளுமை** விருத்தியை மாணவர்களில் ஏற்படுத்த அதனால் முடியவில்லை". இவ்வாறு 2000ஆம் ஆண்டில், இலங்கை கல்வி, உயர்கல்வி அமைச்சு வெளியிட்ட "இலங்கையில் ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம்" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது விழுமியஞ்சார் கல்வியின் தேவை தற்போது உணரப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகிறது.

எனவே, புதிய கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளில், "கல்விச் சீர்திருத்தங்களின் முதன்மையான நோக்காக அமைவது எமது மக்கள் திருப்திகரமான சமாதான வாழ்க்கைகளை அடைதல் ஆகும். அவை ஆக்க பூர்வமானவையாகவும், ஏனையோரின் நல் வாழ்க்கைக்கு வழிவகுக்கும் வாழ்க்கைமுறைகளாகவும் அமைதல் வேண்டும். தகவல்களைப் பெற்று அறிவாற்றலுள்ளவர்களாக, பரந்த செயற்றிறனுடையவராக, நிறைந்த நல்லொழுக்கமுள்ளவராக, ஒருவரோடொருவர் சிறந்த முறையில் தொடர்பாடலை ஏற்படுத்துபவராக, ஆக்குவதே மேற்குறிப்பிட்ட கல்விச் செயற்பாட்டின் முக்கிய வெளிப்பாடுகளாகும்" எனக் குறிப்பிடப்பட்டிருப்பது, கல்வி, விழுமியஞ்சார் கல்வியாகவும் அமைய வேண்டும் என்னும் நிலைப்பாடு செயற்பாடாவதைக் காட்டுவதாக உள்ளது. (இலங்கையில் ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம்- கல்வி, உயர் கல்வி அமைச்சு வெளியீடு-2000 .பக்.4)

கல்விமுறைமையில், ஆரம்பக்கல்விப்பருவத்தில் தொடங்கி, மனித விழுமியங்களை ஏனைய பாடங்களுடன் ஒன்றிணைத்துப் பயிற்றுதல், இடம் பெறலாயிற்று. பாடங்கள் மூலம் அறிவு, திறன்களை மாணவரில் விருத்திசெய்வதோடு, நல்ல மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பனவற்றையும் அவர்களில் விருத்திசெய்வதில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது வரவேற்கப்படவேண்டியதேயாகும்.

**ஆரம்பக் கல்வி**

எமது பாடசாலைக் கல்விமுறைமையில் தரம் ஒன்றிலிருந்து தரம் பதினொன்றுவரை, பொதுக்கல்வி வழங்கப்படுகிறது. தரம் 1-5 ஆரம்பக்கல்விக் காலம் ஆகும். ஆரம்பக் கல்வியை ஐந்து முதல் பத்து வயதுடைய பிள்ளைகள் பெறுகிறார்கள்.

ஆரம்பக் கல்விக்காலம், நம் நாட்டுச் சிறார்களுக்கு அவர்களது வாழ்நாட்களில், முறைசார்ந்த பாடசாலைக் கல்வியின் தொடக்கநிலையில் அமைகின்றது. பழக்கப்பட்ட வீட்டுச் சூழலிலிருந்து பழக்கப்படாத புதியதொரு சூழலுக்குச் சிறுவர்கள் வருகிறார்கள். பலதரப்பட்ட சமூக, பொருளாதாரப் பின்னணிகளிலிருந்து அவர்கள் வருகிறார்கள். முற்றிலும் புதிய சமூகச் சூழலில் எழும் சவால்களுக்கு முகங்கொடுக்கிறார்கள். இந் நிலையில், சிறுவர்கள் பாடசாலைக்கு வருதல், அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாக இருத்தல் வேண்டும். கல்வி கற்றல் விரும்பி ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படும் செயற்பாடாகச் சிறுவர்களுக்கு அமைவதற்குப் பாடசாலையில் அதற்கேற்ற உவப்பான பௌதிக, சமூகச் சூழல் உருவாக்கப்படவேண்டும்.

பிள்ளைகளின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதும், ஆர்வங்களை ஊக்குவிக்கக் கூடியதும், சுதந்திரமானதும் ஆன பாடசாலைச் சூழலே அவர்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கவல்லது.

ஆரம்பக் கல்விக் காலம், பிள்ளையின் ஆளுமை விருத்தியில் முக்கிய காலகட்டம் ஆகும். இப்பருவத்தில் நன்கு பதிந்த அனுபவங்கள், பிள்ளையின் எதிர்காலத்துக்கு இட்டுச் செல்லும் பாதையாகும். பிள்ளையின் சிந்திக்கும் ஆற்றல் விருத்தி செய்யப்படவேண்டும்.

பிள்ளைகள் பார்த்து, தொட்டு, உணர்ந்து அனுபவித்துக் கற்கக் கூடியவகையில், வழங்கப்படும் செயற்பாடுகள் அமைதல் அவசியம். உபகரணங்களும் அவ்வாறே இருத்தல் வேண்டும்.

இப்பருவத்தில் பிள்ளைகள் ஆராயுந்தன்மையைக் கொண்டிருப்பர். பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக் கொள்ள முயல்வர். ஆசிரியர் உதவிசெய்பவர், வசதிசெய்துகொடுப்பவர், வழிப்படுத்துபவர் என்ற வகையிலேயே விளங்குவர்.

ஒவ்வொரு பிள்ளையும் தத்தமது விருத்திக்கேற்பவே கற்கும் ஆற்றலுடையது. சிலர் விரைவாகக் கற்பர், வேறு சிலர் மெதுவாகக் கற்பர். சிலர் உளக்குறைபாடுடையவராக இருப்பர். சிலர் வெட்க சுபாவமுடையவராக இருப்பர். பிள்ளைகளிடையே தனியாள் வேறுபாடுகளை அறிந்து ஏற்ற விதத்தில் அவர்களுக்குக் கற்கச் சந்தர்ப்பமளித்து உதவவேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

இப் பருவத்தில் விளையாட்டுக்கள் மூலமும் செயற்பாடுகள் ஊடாகவும் பிள்ளைகள் கற்க வழிசெய்தல் வினைத்திறன், விளைத்திறன் மிக்கதாக அமையும்.

பிள்ளைகள் தம்மைச் சுற்றியுள்ள சமூகத்துடன் இடைத்தாக்கம் புரிதலின் விளைவாகவே பழக்க வழக்கங்கள், ஒழுக்கப்பண்புகள், விழுமியங்கள் என்பவற்றை விருத்தி செய்கிறார்கள். குடும்பம் ஒரு சமூகம். அவ்வாறே பாடசாலையும் ஒரு சமூகம். இச்சமூகங்களின் உறுப்பினர்கள் நன்முறைப்பாங்கில் ஒழுகுபவர்களாக, நடை, உடை, பாவனையில் முன்மாதிரியாக விளங்குபவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்களுடனான இடைத்தாக்கத்தின் ஊடாக, விழுமியங்கள் ஒழுக்கப் பண்புகள், நன்னடத்தைகள், நல்ல பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பிள்ளைகள் பெற்றுக் கொள்ளமுடியும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து", என்பது ஆன்றோர் வாக்கு. ஆரம்பக் கல்வியின்போது விருத்திசெய்யப்படுகின்ற விழுமியங்கள், ஒழுக்கங்கள், மனித தர்மங்கள் வாழ்நாட்கள் முழுவதும் நின்று நிலைக்கும் தன்மையானது என்பதை ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

**ஆரம்பக் கல்வி கற்கும் பிள்ளைகள்**

- ❖ செயல் மூலம் கற்கின்றனர். எனவே செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்.
- ❖ சுயாதீனமாக இயங்க இடமளிக்கப்பட வேண்டும். அதனால் கற்றலில் விருப்புடன் ஈடுபடுவர். ஆக்கமுயற்சிகளில் சுயமாக ஈடுபாடுகொள்வர்.
- ❖ குழுவாக வேலை செய்வர். பல நல்ல சமூக, ஒழுக்க விழுமியங்களைக் கற்றுக்கொள்வர். கரிசனை, பகிர்தல், கூட்டுப்பொறுப்பு, நலனோம்புதல், பண்போடு தொடர்பாடல், விட்டுக்கொடுத்தல் என்பன சில.
- ❖ ஆராய்வூக்கம் உடையவர்கள். தேடுதல், ஆராய்தல், பரிசோதித்தல், கண்டறிதல், உண்மையை உணர்தல் சார்ந்த செயற்பாடுகளில் அவர்களை ஈடுபடுத்துதல் வேண்டும்.
- ❖ வளர்ச்சியும் விருத்தியும் பெறுகிறார்கள். உடலில் ஏற்படுவது வளர்ச்சி; உள்ளத்தில் ஏற்படுவது விருத்தி, நற்பண்புகள் நன்னடத்தைப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை பிள்ளைகளின் உள்ளங்களில் விருத்தி

செய்து, நடைமுறை வாழ்வில் மேற்கொள்ளும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் இன்றியமையாததாகும். இணைப்பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தல் மூலம் இதனை நிறைவேற்றலாம். பிள்ளை நற்பண்புகளை எய்துவதற்கு, மனப்பாங்கு விருத்திபெறுதல் முக்கியம். நல்ல எண்ணங்கள், தூய்மையான மனங்களிலேயே தோன்றுகின்றன. உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகில், பேச்சிலும், செயலிலும் ஒளியுண்டாகும் என்பதில் ஐயமில்லை.

**ஆரம்பக்கல்வி ஆசிரியரின் வகிபாங்கு**

ஆரம்பக் கல்வி பிள்ளை மையக் கல்வியாகத் தற்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். கற்பித்தலிலும், கற்றலுக்கு முக்கியத்துவம் அதிகம். கற்பித்தல் ஆசிரியரின் பணி, கற்றல் மாணவரின் பணி. ஆசிரியர் மையக் கல்வியொழுங்கில் இருந்ததைவிட, பிள்ளை மையக் கல்வி ஒழுங்கில் ஆசிரியரின் கடமைக் கூறுகள், பொறுப்புக்கள் என்பன *சற்று அதிகமும் மகத்தானவையாகவும் உள்ளன. பல்வேறு முன்னாயத்தங்களைச்* செய்யவேண்டியுள்ளார், முகாமைத்துவப் பணிகளை ஆற்றவேண்டியுள்ளார்; நல் உறவுகளைப் பேணவேண்டிய நிலையிலுள்ளார்.

வகுப்பு, செயலூக்கமுள்ள ஒரு வகுப்பாக அமைப்பவர் ஆசிரியரே. செயலூக்கமுள்ள வகுப்பில் பின்வருவனவற்றை அவதானிக்கலாம்.

- திட்டமிட்ட செயற்பாடுகளில் பிள்ளைகள் ஈடுபடுதல்
- செயல் மூலம் கற்றல்
- குழு மூலம் கற்றல்.
- சேர்ந்து ஆடுதல், பாடுதல், மகிழ்தல்.
- பிள்ளைகளுக்கிடையே நல்லுறவு பேணுதல்.
- பிள்ளைகள் ஆசிரியர் நல்லுறவு
- அவதானித்தல் மூலம் கற்றல்.
- பிள்ளை- பிள்ளை மூலம் கற்றல்
- ஆசிரியர் பிள்ளைகளைத்தனித்தனியாக கவனித்தல்.
- பகிர்தல், நலனோம்புதல், உதவுதல், விட்டுக்கொடுத்தல், ஓர் ஒழுங்குமுறையை அனுசரித்தல், விதிகளைத் தாமே ஆக்கிக் கடைப்பிடித்தல், கூட்டுப் பொறுப்பு, வேலை செய்வதில் ஆர்வம் போன்ற விழுமியங்கள் நடைமுறைப்படுத்தப்படுதல்.
- ஆசிரியர் பிள்ளைகளுடன் இணைந்து செயற்பாடுகளில் பங்குபற்றல்.
- திட்டமிட்ட விளையாட்டுக்களில் மாணவர் ஈடுபடுதல்.
- துணைச் சாதனங்களையும் வளங்களையும் பயன்படுத்துதல்.
- கணிப்பீடு செய்தல்.
- ஆக்கங்களைக் காட்சிப்படுத்துதல்.

வகுப்பறைக்கு வெளியேயும் கற்றல் இடம்பெறும். வெளிக்கள வேலைகள், கல்விச் சுற்றுலா, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் என்பன இவற்றுள் அடங்கும். ஆசிரியரே இவற்றை திட்டமிட்டு ஒழுங்கு செய்வர். இவை ஒவ்வொன்றின் ஊடாகவும் பிள்ளைகளில் விழுமியப் பண்புகள் விருத்தி செய்யப்படுவதில் ஆசிரியர் கண்ணும்கருத்துமாக இருப்பர்.

எல்லாப் பிள்ளைகளும் கற்றலில் ஈடுபடச் செய்தல் ஆசிரியர் பொறுப்பாகும். கற்றலுக்கு வேண்டிய கருவி, உபகரணங்கள், பொறிகள், புலன்கள் என்பவற்றுடனேயே பிள்ளைகள் பிறக்கின்றனர். எனினும் இவற்றை இயக்க, "விசை" ஒன்று அவர்களுக்கு தேவைப்படுகின்றது. பிள்ளைகளைச் சூழவுள்ள சமூகத்தினருடன் பிள்ளை இடைத்தாக்கம் புரிதலே அந்த விசையாகும். பெற்றோர் வீட்டிலும் ஆசிரியர்கள், ஏனைய மாணவர்கள் பாடசாலையிலும் பிள்ளைகளுடனான இடைத்தாக்கத்தை ஏற்படுத்துகிறார்கள். இச் சமூகத்தினர் நன்முறைப்பாங்கினராக அமையும் பட்சத்தில் அவர்களுடன் இடைத்தாக்கம் புரிகின்ற பிள்ளைகள் மொழியறிவு, மொழித்திறன்கள் என்பவற்றுடன் சிறந்த மனித விழுமியங்கள், ஒழுக்கப் பண்புகள், நன்னடத்தைகள் என்பவற்றையும் விருத்திசெய்து கொள்வர்.

**ஜெரோம் புறூணர்** என்பவர் கற்றல் கொள்கையை உருவாக்கிய ஓர் உளவியலாளர். அவரின் ஆய்வின்படி பிள்ளைகள், ஆரம்பகாலக் கட்டத்திலிருந்தே மற்றையோருடன் பங்கேற்றுக் கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்குத் தயாராக உள்ளனர் என்பது தெரியவந்தது. ஆசிரியர்கள் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் உற்ற துணையாக அமைகிறார்கள் என்பது இதிலிருந்து பிறக்கும் கருத்தாகும். பிள்ளைகள் தாமாகவே கற்கும் கட்டம் வரை, ஆசிரியர்கள் துணைக்கட்டாக அவர்களுக்கு உதவவேண்டும். அந்த வகையில், கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில், ஆசிரியர் துணைவர் ஆகவும், அநுசரணையாளர் ஆகவும், கற்றல் சூழலை ஒழுங்கு செய்பவராகவும் விளங்குதல் இன்றியமையாதது ஆகும்.

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள், முறைசார் கற்றலின் மீது பிள்ளையை நிலைக்கவைத்து, ஒழுங்கை பேணுவதில் கவனம் செலுத்துதல் வேண்டும். கற்றலில் மூன்று முறைகளாக, வழிகாட்டப்பட்ட விளையாட்டுக்கள், செயற்பாடுகள் மற்றும் வகுப்பறை எழுத்து வேலை என்பன விதந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றை பொருத்தமான முறையில் கையாளுவது மூலம் அக் குறிக்கோளை அடைய முடியும்.

ஆரம்பக் கல்வியின் பண்பு தரத்தை அதிகரிக்க வேண்டுமாகில், அது விழுமியம் சார்ந்த கல்வியாக அமைய வேண்டும் என்பதை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ளல் வேண்டும்.

ஆசிரியர்கள் அறிவாற்றல், பொறுப்புடமை , தியாகம், அர்ப்பணிப்பு, நல்ல மனப்பாங்கு, கருணை, தொண்டு என்பனவற்றை வாழ்க்கையில் பேணி ஏனையோருக்கு முன்மாதிரியாக அமைதல் விழுமிய கல்வியை செயற்படுத்தும் மூலகாரணியாகும்.

அகஒழுங்கு, புறஒழுங்கு என்பன மெச்சப்படத் தக்க வகையில், ஆசிரியரில் சங்கமிக்க வேண்டும்.

ஆசிரியன் "கற்கப்படுவோன்" என்றும், மாணவன் "கற்பவன்" என்றும் தமிழ் மரபு கூறும். அதன்படி, ஆசிரியன் கையில் பாடநூலை வைத்துக்கொண்டு கற்பிப்பவன் அல்ல. ஆசிரியனே பாடநூலாகவும், பாடப் பொருளாகவும் விளங்குபவன் ஆகின்றான். மாணவர் ஆசிரியரைத்தான் கற்கின்றனர். ஆகையினால் ஆசிரியர் கல்வி, கேள்வி, ஒழுக்கங்களில் மிக சிறந்தவராகவும், கற்றபடி வாழ்ந்து காட்டுபவராகவும், பிறரையும் நன்நெறியில் வழி நடத்தி செல்பவராகவும் அமைதல் இன்றியமையாததாகும்.

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியரின் வகி பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து. தத்தம் பணிகளை செவ்வனே செய்தல் வேண்டும்.

**ஆரம்பக்கல்வி ஆசிரியரிடம் பிள்ளைகள் எதிர்பார்ப்பவை**

- ❖ ஏற்றுக்கொள்ளல், பரிவுணர்வு, அன்பு, கரிசனை, கனிவு, தாய்மை, நடுவுநிலைமை, பாதுகாப்பு, கணிப்பு, பாராட்டு, செவிமடுத்தல், புன்சிரிப்பு, இனியபேச்சு, நம்பிக்கை, பொறுமை, நன்நடத்தை.

- ❖ மாணவர்களின் தேவைகளை அறிந்து நிறைவேற்றல்.
- ❖ வகுப்பு மகிழ்ச்சிக்குரியதாக அமைதல்.
- ❖ சிந்திப்பதற்கும், வினாக்களை கேட்பதற்கும் அனுமதித்தல்.
- ❖ செயற்பாடுகள், விளையாட்டுக்களில் ஈடுபடுத்துதல்.
- ❖ ஆதரவு நல்குதல், வழிப்படுத்தல், உற்சாகப்படுத்தல்.

**முடிவுரை**

"மனித நாகரிகமானது வெறுமனே செங்கற்களாலும், சாந்தினாலும், இரும்பினாலும், இயந்திரங்களினாலும் கட்டியெழுப்பப்படுவதன்று. மனிதர்களாலும் அவர்களின் நற்குண, நல்லொழுக்க, விழுமியப்பண்புகளினாலும் உருவாக்கப்படுவதே நயத்தக்க நாகரிகமாகும்".

**சர்வபள்ளி இராதாகிருஷ்ணன்** ஆரம்பகல்வியை எல்லோருமே பெறுகின்ற வாய்ப்பு இன்று உள்ளது. எனவே ஆம்பக்கல்வியை விழுமியஞ்சார் கல்வியாக வழங்கினால், அவர்கள் எல்லோருமே நல்லொழுக்கம், நன்னடத்தை, நற்பண்புகள் நிறைந்த நற்குடிமக்களாக மிளிருவர் என்பது உறுதி.

"கல்விக்குப் பயனறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம்" எனும் நாவலரின் மகுட வாசகத்திற்குச் செயல்வடிவம் கொடுக்க யாவரும் முயல்வோமாக.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

முப்பதா மாண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறானாயிற் – செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலையளவே யாகுமா மூப்பு.

# எங்கள் அதிபர்

சிரித்த முகம், சிவந்த நிறம், மெலிந்த உடல் என்றாலும் உறுதியான தோற்றமுடையவர். பெண்களுக்கேற்ற அளவான உயரம். நெற்றியிலே குங்குமம் பாரதியின் கவிக்கேற்ப நிமிர்ந்த நடையும், நேர்கொண்ட பார்வையுமுடையவர். இவையே எம் அருமை அதிபரின் தோற்றமாகும். திருமதி யோகம்மா ஸ்ரீவிக்னேஸ்வரா என்ற பெயரையுடைய இவர் எம் பாடசாலை அதிபர் என்பதில் எமக்கெல்லாம் பெருமைதானே. தமிழிலும் ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் பெற்றவர். காலை ஆராதனையில் நற் சிந்தனை கூறுவார். கணீர் என்ற அவர் குரல் எம்மையெல்லாம் கவரும். மகுடிக்கு கட்டுண்ட நாகம் போல் நாம் எல்லோரும் அமைதியாவோம்.

இவர் எமக்கு அதிபர் மட்டுமல்ல அன்னை போலவும் அன்பு காட்டுவார். சில பாடசாலைகளில் அதிபர் அறைக்குச் செல்வதென்றால் மாணவர்கள் பயப்படுவர். ஆனால் இங்கு அப்படியல்ல. அதிபரிடம் செல்வதென்றால் தனிக்குசி. எம்மை அன்புடன் வரவேற்பார். ஆதரவுடன் விசாரிப்பார்.

வகுப்பு நேரங்களில் இடையிலே பாடசாலையைச் சுற்றி பார்வையிடுவார். ஒரு வகுப்பில் ஆசிரியர் வரவில்லை என்றால் தாமே அந்த வகுப்பிற்கு சென்று பாடம் நடத்துவார். இடையிடையே வினாக்கள் வினாவுவார். நாம் செய்த பயிற்சிகளைப் பார்வையிடுவார். ஆலோசனை கூறுவார். திறமைசாலிகள் இருந்தால் பாராட்டத்தவற மாட்டார். இவ்வாறு இவர் அதிபர் மட்டுமல்ல ஆசிரியர் போலவும் விளங்குகிறார். மாணவர் படித்தால் மட்டும் போதாது. நல்ல பழக்க வழக்கமுடையவராக திகழ வேண்டும் என்பதை விரும்புவார். இதனால் மாணவர் ஏதும் பிழைகள் செய்தால் கடுமையாக தண்டிக்க மாட்டார். மாறாக தகுந்தமுறையில் புத்திகூறி அவர்களை நல்வழிப்படுத்துவார்.

மாணவர் பாடசாலைக்கு நேரத்திற்கு வரவேண்டும், சுத்தம் பேணப்படவேண்டும் என்பதில் அக்கறை உடையவர்.

பாடசாலைகளுக்கிடையே போட்டிகள் இடம்பெறுவது என்றால் அதில் பங்குபற்றும் மாணவர்களை அழைத்து ஆசி கூறி உற்சாகப் படுத்துவார். வெற்றி கிடைத்தால் காலை ஆராதனையில் எல்லோருக்கும் தெரியப்படுத்தி பாராட்டுவார். இதனால் மற்றய மாணவர்களுக்கும் புதிய உற்சாகம் உண்டாகின்றது. காலை ஆராதனையின் பின் நடைபெறும் மாணவரின் இசை, பேச்சு, வாசிப்பு என்பனவற்றை உற்று நோக்கி குறிப்புக்களை கூறுவதிலும் பின்நிற்கமாட்டார்.

மரணவரின் கல்வி வளர்ச்சியில் அக்கறை காட்டுவது போல் பாடசாலை வளர்ச்சியிலும் ஆர்வம் காட்டுவார். எமது பாடசாலையில் மேல்மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டமை, நூல் நிலையம், புதிய பாதை திறந்தமை போன்றவை அதிபரின் அயராத உழைப்புக்கு சான்று பகர்கின்றன.

கல்வி அதிகாரிகள் பெற்றோர்கள் ஊர் மக்கள் யாவரும் இவரின் திறமையையும், சேவையையும் மெச்சுகின்றனர். எமது பாடசாலை மேலும் வளர்ச்சியடைய இவரின் சேவை எமக்கு என்றென்றும் தேவை. எனவே பாடசாலையிலேயே இவரின் பணி தொடர இறைவன் அருள் புரிவாராக.

அன்பும் அறிவும் கொண்ட
எம் அதிபரே வாழ்க
அன்னை போல் அணைக்கும்
எம் அதிபரே வாழ்க

ஊக்கம் எமக்கு அளிக்கும்
உத்தம அதிபரே
உங்கள் பணி தொடர
என்றென்றும் வாழ்க.

**மளஸ்வினி ஸ்ரீதரன்**
ஆண்டு 3B,
03.12.1992.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்றும்
அன்றென்று மாமென்று மாகாதே – நின்ற நிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.



# வாழ்த்துரை

*(திருமதி யோ.ஸ்ரீவிக்கினேஸ்வரா அதிபர் அவர்களின் சேவைநலன் பாராட்டு விழாவிற்கான முன்னாயத்தநிலையில் 1996ஆம் ஆண்டு எழுதப்பட்ட வாழ்த்துரை)*


**கலாநிதி கு.சோமசுந்தரம்**
முன்னாள் உதவிப் பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.


"**அறிவுக்கு வையகம் எப்போதும் தன் வணக்கத்தை செலுத்தும் திறமைக்கு ஆதரவு தரும் தூய உள்ளத்தை வரவேற்கும்**" என்கிறார் பேரறிஞர் இன்கர் சால்

**த**லைமைதாங்குகிறவர்கள், அதிலும் கல்வி நிறுவனத் தலைவர்கள், அறிவும் ஆற்றலும், தூய்மையான உள்ளமும் கொண்டு இலங்குதல் அவசியமாகும்.

கல்விக்கு பயன் அறிவு; அறிவுக்கு பயன் ஒழுக்கம். இது நாவலர் பெருமானின் வாக்கு.

கேடில் விழுச்செல்வம் கல்வியை வழங்கும் ஆசிரியர்கள் கல்வி நிறுவனத்தை ஒழுங்காக நடத்தும் அதிபர்கள் என்போர் வணக்கத்திற்கு உரியவர்கள். அவர்கள் மனிதப் பண்புகளில் நம்பிக்கை வைப்பவர்கள், மனித குலத்தின்பால் பேரன்பு கொண்டவர்கள். மனித நேயத்தினால் உந்தப்பட்டு வளரும் குழந்தைகளுக்கு நல் வழி காட்டுபவர்கள்.

திருமதி யோகம்மா ஸ்ரீ விக்னேஸ்வரா யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, 01.01.1979 முதல் தனியாக இயங்கத் தொடங்கிய காலத்திலிருந்து, அவர் 1996ஆம் ஆண்டில் ஓய்வு பெறும் வரை, 17 ஆண்டு காலம் அதன் புகழ் பூத்த அதிபராக தகுந்த தகுதிப்பாடுகளுடன் அப்பாடசாலைக்கு தலைமை தாங்கியுள்ளார். அவரின் திறமை மிக்க சேவை பாராட்டுக்குரியது.

இத்தருணத்தில் அஞ்ஞான்று, யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பெரும் புகழுக்குரிய அதிபராக விளங்கிய அமரர் செல்வி ப.இராமநாதன் நினைவு கூரப்பட வேண்டியவர். அன்னாரே, திருமதி யோ.ஸ்ரீ விக்னேஸ்வராவை கண்டெடுத்து ஆரம்ப பாடசாலையின் அதிபராக அமர்த்துவதில் பெரும் பங்கு கொண்டவர். நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியாக நான் அப்போது பணியாற்றினேன்.

திருமதி யோ.ஸ்ரீவிக்கினேஸ்வரா அவர்களின் வழிநடத்தலின் கீழ் பாடசாலையின் கல்வித் தரம் மிகவும் ஓங்கி வளர்ந்தது. பல்வேறு இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் பங்குபற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டது. பெற்றோர் ஆசிரியர் உறவு விருத்தி கண்டது. ஆசிரியர்கள் பெரிதும் ஒத்துழைத்தனர். கட்டடங்கள் அமைக்கப் பெற்றன. மிகக் குறுகிய காலத்தினுள் பெற்றோர் சமூகத்தினர் யாவரும் பெரிதும் விரும்பும் பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் போற்றுதற்குரியதாக விளங்கின. யாழ் மாவட்டத்தில் ஒரு சில முன்னணி ஆரம்ப பாடசாலைகளில் ஒன்றாக கணிப்புப் பெற்றது. அதிபரின் சிறந்த தலைமைத்துவமும் அவரின் அமைதி, அடக்கம், இனிய சுபாவம் உள்ளிட்ட மனித தன்மைகளும் அவரின் நிர்வாகத்திற்கு பெரிதும் உதவின.

ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள், கல்வித் திணைக்களத்தினர் முதலிய யாவரினதும் நன்மதிப்பை பெற்றமைக்கு காரணம் அவரின் தன்னலம் அற்ற கல்விப் பணிகளும் பாடசாலை அபிவிருத்திக்கு அர்ப்பணத்துடன் அவர் ஆற்றிய சேவையுமே ஆகும்.

இத்தகைய ஒரு சிறந்த அதிபரை பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

"வாழ்க வளர்க" அவருக்கும் அவர் குடும்பத்தினருக்கும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் பாலிப்பானாக.

# இருள் அகற்றும் ஆசான்

ஆசு + இரியர்=ஆசிரியர். அதாவது நமது மன மாசுக்களை நீக்கி நல்லனவற்றைத் தந்து சமூகத்தின் நற் பிரஜையாக உருவாக்குபவர் இவரே

**"மாதா பிதா குரு தெய்வம் - அவர்**
**மலரடி தினம் தினம் பணிந்திடுவோமே"**

இவர்களுள் முதன்மையானவராக மாதாவை போற்றுகின்றோம். அன்னையே நமக்கு தந்தையைக் காட்டுகின்றார். அடுத்து குருவிடம் செல்கின்றோம். குருவே நமக்கு தெய்வத்தை காட்ட வழிசெய்கின்றார்.

"குரு இல்லா வித்தை பாழ்" எனவேதான் மாதா, பிதாவுக்கு அடுத்ததாக குருவை வைத்துள்ளோம். குருவுக்கு அடுத்தபடியாக தெய்வத்தை போற்றும் நிலையை பார்க்கின்றீர்கள். குருவை வணங்கினால் விசுவாசமாக நடந்தால் அவர்களது நல்லாசிகள் என்றும் எமக்கு கிடைத்து ஏற்றம் பெற்றவர்களாக வாழ முடியும்.

ஏற்றிவிடும் ஏணியாய் கரைசேர்க்கும் தோணியாய், இருளகற்றும் தீபமாய் இன்னும் தாயாய் தந்தையாய் தோழியாய் வழிகாட்டியாய் தாதியாய் வைத்தியராய் இருந்து சமூகத்திற்கு ஏற்ற முழு மனிதரை உருவாக்கும் பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றும் நம் ஆசான்களைப் போற்றுதல் நம் ஒவ்வொருவருடைய கட்டாய கடமையாகும்.

**"குருவை போற்றுவோம்"**
**"குணமாய் நடப்போம்."**

**த.தர்சிகா**
தரம் 5 A..



# தாய்க் கல்வி

செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்வி. அது எடுக்க எடுக்க வற்றாதது. கொடுக்க கொடுக்க பெருகி செல்வது. இத்தகைய சிறப்புடைய கல்வியை நாம் பல இடங்களில் பல வழிகளில் பெற்றுக் கொள்கின்றோம். அவற்றுள் எல்லாம் முதன்மை வகிப்பது எமது பாடசாலை கல்வியேயாகும்.

நாம் பல வகையான பானங்களை அருந்தினாலும் தாய்ப்பாலுக்கு சமனாக எதையும் பெறமுடியாது. ஏனெனில் தாயானவள் தாய்ப்பாலுடன் சேர்த்து அன்பையும் அரவணைப்பும் தருகின்றாள்.

அதுபோலவே நாமும் பாடசாலை எனும் அன்னையிடம் கல்வியை பெறும் போது அறிவினை மட்டுமன்றி அதிபர் ஆசிரியர்களின் அன்பையும் அரவணைப்பையும் சேர்த்து பெறுகின்றோம். மேலும் சமய நெறி முறைகளையும், நற் பழக்க வழக்கங்களையும் பல்வேறு விளையாட்டு ஆற்றல்களையும், தேக ஆரோக்கியப் பயிற்சிகளையும், சித்திரம், சங்கீதம், நடனம், நாடகம் என பல்வேறு கலைத்திறன்களையும் பெற்றுக்கொள்கின்றோம்.

இவ்வாறு சிறந்த கல்வியை தரும் பாடசாலையை நாம் எம் அன்னையைப் போன்றே மதித்தல் வேண்டும். பச்சை வெண்மையுடன் பட்டொளி வீசும் எம் அன்னை வெள்ளி விழா காணும் இவ் வாண்டில் நாம் அன்னையின் அரைவணைப்பிலிருந்து "நன்நடை நல்கி நமை வளர்த்திடுவோம்" என்று உறுதி கூறி நிற்கின்றோம்.

**சு. கனிமொழி**
தரம் 4B.



# அம்மா எங்கே?

அம்மா மெல்ல மெல்ல ஓடி வா

அறிவுச் செல்வம் சொல்லித்தா
சின்னச் சின்னச் செல்வங்கள்
சிரித்து மகிழச் சிறிது வா அம்மா

பள்ளிக்கூடம் சென்று வர
பாலும் பழமும் பரிந்து தா
கள்ளம் கபடம் அற்று வர
கருணை வழி காட்டி வா அம்மா

வீர உள்ளம் படைத்து வர
வீறுகொண்டு எழுந்து வா
உண்மை தன்னைப் பேசிடவே
உற்ற துணையாய் வந்திடுவாய் அம்மா

துன்பங்கள் வந்த போதும்
துணிந்து வாழும் துணிவு தா
இன்பங்கள் வந்த போதும்
இசைந்து வாழும் பண்புதா அம்மா

அகிலம் போற்றும் உந்தன்
அரும்பு மக்களைக் காணவா
ஆசையுடன் நாங்கள் உன்னை
அழைத்திடவே ஓடி வா அம்மா

**சி. மயூரி**
தரம் 5"A".
பழைய மாணவி



# சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகள்

**திருமதி அ. பரமலிங்கம்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை இவ் வருடம் தனது வெள்ளி விழா வருடமாக தலை நிமிர்ந்து வெற்றி நடை போட்டுக்கொண்டிருக்கும் இவ்வாண்டில் சகல சித்திகளும் பெற்று சின்னஞ் சிறு மாணவச் செல்வங்கள் அத்தியாவசிய ஆற்றல்களை வளர்க்கும் அறிவுக்கூடமாக இப் பாடசாலை மிளிர்வதை இட்டு நாம் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். இன்றைய இளஞ் சிட்டுத்தான் நாளைய பெரியோர்கள் அல்லவா; வாழும் உயிரினங்களில் அரிய பிறவியாகக் கருதப்படுவது மனிதப் பிறவியாகும். இந்த மனிதப்பிறவியிலே மிகவும் அருமையான மீண்டும் பெறமுடியாத பருவம் குழந்தைப் பருவமாகும். மனிதன் பெற்றுவாழும் செல்வங்களுள் மகத்தான செல்வம் மக்கட் செல்வமாகும். எனவே மிகஅரிய பிறவியான மனிதப் பிறவியில் போற்றத் தக்க மழலைச்செல்வங்கள்தான் உலகத்தை உருவாக்கும் எதிர்காலச் சிற்பிகளாவர். ஒரு கட்டிடத்தை உறுதியாக வைத்துக் கொள்வது அத்திவாரமாகும். மனித வாழ்வை உறுதியாக உருவாக்குவது சிறு பராயமாகும். இச்சிறு பராயத்தை கண்ணும் கருத்துமாக உருவாக்கும் முழுப்பொறுப்பும் பெற்றோரின் வளர்ப்பிலும் அறிவூட்டும் ஆசானிலும் தங்கியுள்ளது எனலாம்.

ஒரு சிற்பத்தை உருவாக்கும் சிற்பி அவ்வுருவை தனது மிக நுண்ணிய திறமைகளைப் பயன்படுத்தி உருவாக்குகின்றான். உருவாக்கப்பட்ட சிற்பத்தை மற்றோர் பார்த்து வியக்கும்படி செய்வதில் தனது முழுக்கவனத்தையும் அங்கே ஒருமித்து செலுத்துகின்றான். இதே போல சிறு பிள்ளைகளையும் சிறப்பாகவும் நற்பிரஜையாகவும் உருவாக்குவதில் பெற்றோரும் அவர்களுக்கு அறிவூட்டும் ஆசான்களும் முக்கிய இடம் பெறுகின்றார்கள். ஒரு நல்ல சமுதாயம் உருவாக வேண்டும் என்றால் நற்பிரஜைகளும் உருவாக்கப்படவேண்டும். ஒவ்வொரு குடிமகனும் நற்பிரஜையாக வாழும்போது அங்கேயொரு நல்ல சமுதாயம் உருவாகின்றது. மழலைப்பருவத்திலிருந்தே உலகத்தில் வாழ தேவையான சகல நற்பழக்க வழக்கங்கள் யாவையும் சிறுவர்கள் பெற்றுக்கொள்ள வழிகாட்டப்படல் வேண்டும். கவியரசு கண்ணதாசனும் இதனையே "எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னைவளர்ப்பினிலே" என்ற கவிமூலம் உணர்த்துகின்றார். இதனையே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் அவர்களும் தனது எளிய பாடல் மூலம் விளக்குகின்றார்.

*"ஓடி விளையாடு பாப்பா- நீ*
*ஓய்ந்திருக்கலாகாது பாப்பா*
*கூடி விளையாடு பாப்பா ஒரு*
*குழந்தையை வையாதே பாப்பா"*

இந்த இனிமையான பாடல் வரிகள் குழந்தைகள் என்ன செய்ய வேண்டும் என்பதை எமக்கு விளக்குகின்றது. மீண்டும் அவர் எடுத்துரைக்கின்றார்.

*"காலை எழுந்தவுடன் படிப்பு- பின்பு*
*கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு*
*மாலை முழுதும் விளையாட்டு என்று*
*வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா"*

என அவர் குறிப்பிட்டு செல்லமாக அழைப்பது எமது சின்னஞ்சிறு செல்வங்களையே. மிகத் தெளிவாகவும் என்ன செய்யவேண்டும் என்பதையும் இந்த அடிகள் மூலம் எமக்கு விளக்குகின்றார்.

கல்வி என்பது மனிதனைப் பூரண மனிதனாக்குவதாகும். மிகவேகமாக முன்னேறிவரும் இக்காலகட்டத்தில் சிறுவர்கள் கற்கவேண்டியது அத்தியாவசியமான கல்வியாக கருதப்படுகின்றது. கல்வியில்லாதவன் வெறும் கல்லாகவே மதிக்கப்படுவான். கணினி யுகமாகிய இருபத்தோராம் நூற்றாண்டிலே எமது சிறுவர்கள் கல்வியை கண்போன்று கருதவேண்டியது அவசியமாகும். கல்வியில்லாதவன் கண் இல்லாதவனாகவே கருதப்படுவான். அத்தியாவசியக் கல்வியுடன் கவிநூறு கலைகளையும் கற்று அறிவு சார்ந்த அறிஞனாக உருவாகினால் தான் அவன் தனது வாழ்க்கையில் திறம்பட வாழமுடியும்.

எனவே சிறுவர்களை மிகச் சிறந்த பிரஜைகளாகவும் மானிட வாழ்வின் எதிர்கால சிற்பிகளாகவும் உருவாக்க அவர்களுக்கு சகல வாய்ப்புக்களையும் வழங்க வேண்டியது பெற்றோரினதும், அரசாங்கத்தினதும் கடமையாகும்.

எனவே மனித வாழ்வின் பருவங்களில் மிகச் சிறந்த கவனத்தை செலுத்தப்பட வேண்டியதும் சிறுவர்களின் பருவமாகும். இதைத்தான் ஆன்றோர்கள் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா", "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்றும் பழமொழிகள் மூலம் உணர்த்தியுள்ளனர்.

கல்வி என்பது சிறுவர்களின் பிறப்புரிமை என்று ஏற்கனவே அறிந்துள்ளோம். இதையே மீண்டும்

*"எண்ணென்ப ஏனைய எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"*

என ஔவையார் கூறியுள்ளார். மனிதனுக்கு கண் எவ்வளவு முக்கியமோ அது போன்று கல்வியும் முக்கியமாகும். எனவே ஒரு பிள்ளையின் எதிர் காலத்தை உருவாக்க வழிகாட்டுவது அப்பிள்ளையின் குருவாக மதிக்கப்படும் ஆசிரியர்களின் கைகளிலே தங்கியுள்ளது.

எனவே சிறுவர்களுக்கு அடிப்படையான அத்தியாவசியமான கல்வியை ஊட்டுவது எமது கடமையாகும். ஆடல், பாடல்களுடன் ஆராய்ந்தறியும் மனப்பக்குவத்தையும் அவர்கள் தமது இன்பமான இப்பருவத்தில் பெற்றுக்கொள்ள வழிகாட்ட வேண்டும். பாடித்திரியும் பறவைகளைப் போன்ற இப் பருவம் சிறுவர்களின் பருவமாகும். இதனாலேயே சர்வதேச சிறுவர் தினமாக அக்ரோபர் 1ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. துள்ளித்திரியும் இளமைப் பருவம் மனித வாழ்வின் மிகவும் பரிசுத்தமான கள்ளங்கபடமற்ற பருவமாகும். முதியோர்கள் கூட சிறுவர்களுடன் சேர்ந்து சிறுவர்களாக மாறிவிடச் செய்யும் பருவமாகும்.

எனவே அழகிய உள்ளத்தை உருவாக்கும் இளஞ்சிற்பிகள் சிறுவர்களே! இவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுப்போம்.

"இன்றைய சிறுவர்களே நாளைய மனிதர்கள்"

பெரியவர்கள் கூட தம் கவலை மறந்து சிறுவர்களுடன் சிறுவர்களாக மாறி மனமகிழ்ச்சி பெறுவர். சின்னஞ்சிறு சிறார்களை ரோஜாப் பூக்களுக்கு ஒப்பிட்டு இரசித்து மகிழ்வர். மறைந்த இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் சிறுவர்களுடன் தமது நேரத்தை ஆனந்தமாகப் பொழுதுபோக்குவதில் இன்பம் காண்பவர். இச் சின்னஞ்சிறு சிறுவர்கள் நாளைய உலகத்தை படைக்கப்போகும் சிற்பிகளாவர்.

எனவே ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்து போற்றி வளர்ப்போமாக.

**"இன்றைய சிறுவர்களே எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளாவர்".**

# புலமைப் பரிசில் பரீட்சை விபரம்

## புலமைப் பரிசில் பரீட்சை தரம்-5 [1983-2004]

| வருடம் | தோற்றிய மாணவர் | சித்தியடைந்தோர் | வெட்டுப் புள்ளி | பாடசாலை மட்ட உச்சப் புள்ளி | நூற்றுவீதம் | உதவு தொகை பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| 1983 | 93 | 9 | 131 | 149 | 10 | 4 |
| 1984 | 80 | 8 | 138 | 168 | 10 | 3 |
| 1985 | 98 | 5 | 147 | 170 | 5 | 1 |
| 1986 | 127 | 3 | 164 | 171 | 2 | |
| 1987 | – | – | | | | |
| 1988 | 104 | 11 | 167 | 193 | 11 | 3 |
| 1989 | 138 | 21 | 133 | 176 | 15 | 9 |
| 1990 | 159 | 28 | 114 | 180 | 18 | 16 |
| 1991 | 128 | 29 | 135 | 184 | 23 | 18 |
| 1992 | 131 | 30 | 136 | 189 | 23 | 15 |
| 1993 | 139 | 29 | 136 | 176 | 21 | 17 |
| 1994 | 158 | 40 | 142 | 180 | 25 | 28 |
| 1995 | 107 | 39 | 108 | 168 | 36 | 19 |
| 1996 | 105 | 36 | 100 | 135 | 34 | 31 |
| 1997 | 66 | 24 | 94 | 126 | 36 | 22 |
| 1998 | 74 | 16 | 110 | 147 | 22 | 6 |
| 1999 | 115 | 30 | 118 | 161 | 26 | 23 |
| 2000 | 74 | 24 | 134 | 165 | 32 | 19 |
| 2001 | 79 | 19 | 118 | 153 | 24 | 8 |
| 2002 | 89 | 23 | 118 | 156 | 26 | 18 |
| 2003 | 102 | 34 | 118 | 156 | 33 | 26 |
| 2004 | 100 | 36 | 124 | 164 | 36 | 25 |




### ஔவையார் அருளிச்செய்த மூதுரை

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

## புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

| | | |
|---|---|---|
| மாலினி நெல்லநாதன் | - | 1983-149 |
| கல்ப்பனா தனஞ்சயன் | - | 1984-168 |
| துஷ்யந்தி குமாரு | - | 1985-170 |
| ஜனனி சற்குணம் | - | 1986-171 |
| துஸ்யந்தி கனகரத்தினம் | - | 1988-193 |
| நிர்த்திகா ஸ்ரீமுருகதாசன் | - | 1989-176 |
| கிருஷாந்தி பூலோகநாதன் | - | 1990-180 |
| பிறேமிளா செல்வராசா | - | 1991-184 |
| நீரஜா தியாகராசா | - | 1992-189 |
| வித்தியா சதானந்தன் | - | 1993-176 |
| சுபாசினி சந்திரபாலன் | - | 1994-180 |
| ஜனார்த்தனி தவராசா | - | 1995-168 |
| அருந்தசா சிவபாலன் | - | 1996-135 |
| மகிழினி சிவலிங்கம் | - | 1997-126 |
| சுஜிதா இராசேந்திரம் | - | 1998-147 |
| விதுஷா ரவிராஜன் | - | 1999-161 |
| வினோதா யோகசுந்தரம் | - | 1999-161 |
| கம்சாயினி சூரியகுமார் பொன்னையா | - | 2000-165 |
| ருக்ஷிகா சந்தரபோஸ் | - | 2001-153 |
| சங்கீதனா செல்வராஜா | - | 2002-156 |
| ஆரண்யா பாலசுப்பிரமணியம் | - | 2003-156 |
| சந்தனா வசந்தகுமார் | - | 2004-16 |



எமது பாடசாலையின் சாதனை வரிசையில் செல்வி. துஸ்யந்தி கனகரட்னம் அவர்கள் இடம்பெறுகிறார்கள். 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 193 புள்ளிகளைப் பெற்று யாழ் மாவட்டத்தின் முதல் மாணவியாகத் திகழ்ந்த பெருமைக்குரியவர்.

# இன்று ரஷ்யாவில் இருந்து தரும் செய்தி

**செல்வி துஸ்யந்தி கனகரட்னம்**
மக்கள் நட்புறவு பல்கலைக் கழகம்,
மொஸ்கோ, ரஷ்யா.

யாழ்ப்பாணத்தில் முன்னணியிலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் ஒன்றான யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையில் கல்வி பெறும் பேற்றை பெற்றமையை இட்டு நான் பெருமை அடைவதுடன் புகழ்பூத்த இப்பாடசாலை அதன் இருபத்தைந்தாம் ஆண்டு நிறைவின் போது நினைவு மலர் ஒன்றை வெளியிடவுள்ள சந்தர்ப்பத்தில் எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை தனியான நிர்வாகத்தின் கீழ் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் இயங்கி, தனித்துவமான கலாச்சாரப் பாரம்பரியத்தினைப் பேணி நவீன கல்வி கற்கும் முறைகளினூடாக பிள்ளைகளின் பல் துறையாற்றல்களையும், ஆளுமைகளையும் வளர்த்து நற் பிரஜைகளை உருவாக்கும் பணியில் அளப்பரிய சேவையை ஆற்றி வருகின்றது.

பல் துறைகளிலும், உள் நாட்டிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் பெருமையுடன் பணியாற்றும் பழைய மாணவிகள் எமது பாடசாலையின் அளப்பரிய சேவைகளுக்கு சான்று பகர்கின்றனர்.

எனது அருளன்னையாகிய இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைக்கு அண்மையில் சென்ற போது நான் கற்ற காலம் தொடக்கம் இன்று வரை ஏற்பட்ட வளர்ச்சியை நேரடியாக அவதானிக்க முடிந்தது. நான் இப்பாடசாலையில் கற்க ஆரம்பித்த காலம் ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பக் காலமாகும். பாதுகாப்பு உணர்வற்ற காலம், பொருளாதாரத்

தடைகளால் பாடசாலையின் வளர்ச்சி முடங்கப்பட்டிருந்த காலம். இறுதிக் காலம் இந்திய இராணுவ நடவடிக்கை முடிவுற்ற காலம். இத்தகைய இக்கட்டான நிலையிலும் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் எமது ஆசிரியர்கள் தமது பணியை செவ்வனே நிறைவேற்றினர். அப்பொழுது எமது அதிபராக இருந்த திருமதி யோ. ஸ்ரீவிக்னேஸ்வரா அவர்கள் மிகுந்த அடக்கத்துடனும் பொறுமையுடனும் பாடசாலையின் பணிகளை அவரின் சகாக்களுடன் இணைந்து நிறைவுசெய்தார். அவரின் பணியை பாடசாலை தோற்றத்தில் மட்டுமின்றி அதன் பின்னரும் மாணவர் நலனுக்காக அர்ப்பணித்தார்.

அப்பொழுது நான்காம், ஐந்தாம் ஆண்டுகளில் எனது வகுப்பு ஆசிரியராக, தற்போதைய அதிபரான திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் அவர்கள் இருந்தார்கள். அவர் புலமைப் பரிசில் தேர்வுக்கு மாணவர்களை உரிய முறையில் தயார்படுத்தினார். மாணவர்களின் ஆற்றல்களை நன்கு அடையாளங்கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி வழிகாட்டினார். அதனால் எமது பாடசாலையைச் சேர்ந்த பலர் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றனர். நான் 1988இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 193 மதிப்பெண்களைப் பெற்று அகில இலங்கையில் இரண்டாமிடத்தையும் மாவட்ட மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்றுக்கொண்டேன்.

நான், எனது இரண்டாம் நிலைக் கல்வியை வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் தொடர்ந்தேன். அங்கு பாடவிதானத்துடன் இணைபாட விதானத் துறைகளிலும் சிறப்பாகப் பங்கேற்று 1993ஆம் ஆண்டு கனிஸ்ட மாணவத் தலைவியாக தெரிவானேன். க.பொ.த (சா/த) பரீட்சைக்கு 1994இல் தோற்றி ஆங்கில இலக்கியம் உட்பட 8 அதி விசேட சித்திகளுடன் சித்தியடைந்து க.பொ.த(உ/த) விருப்புக் கல்வியை கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியில் தொடர்ந்தேன். தற்பொழுது ரஷ்ய மக்கள் நட்புறவு பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டு மருத்துவபீட மாணவியாக கல்வி கற்று வருகின்றேன்.

இன்று உயர்ந்து நிற்கும் மாடிக்கட்டடங்களும், மனோரம்மியமான வனப்பூட்டப்பட்ட பாடசாலை வளாகமும் எமது தற்போதைய ஆசிரியர் குழாத்தினதும் சிறப்பான அதிபர் திருமதி த. துரைசிங்கம் அவர்களினதும் அயராத உழைப்பின் வெளிப்பாடாக அமைகின்றது. இப் பாடசாலை எதிர்காலத்தில் மேன்மேலும் சிறப்புற்று பற்பல துறைகளிலும் வளர்ச்சியடைய ஆண்டவனின் அன்பும் அருளும், ஆசியும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.



# சதுரங்கத்தின் உயர்ச்சிப்படிகளில்



**வித்திய ராணி சிவகுருநாதன்.**
தரம் 12 கணித பிரிவு 2006
யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை வெள்ளி விழா காண்பதை நினைக்கையில் எனது மனம் சந்தோசப்படுகின்றது: காரணம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக சின்னஞ்சிறு பிஞ்சுகளாக மழலைபேசி வந்த எம்போன்ற சிறுவர்களை ஆதரித்து அன்போடு அறிவூட்டி கல்வியில் மட்டுமல்லாமல் பண்பிலும் சிறந்த மாணவர்களாகவும் நேர்மை, தன்னம்பிக்கை; ஒற்றுமை, தன்னலம் போல் பிறர் நலம் கருதும் பண்பு என்பனவற்றை அச் சின்னஞ்சிறு வயதில் புகட்டி சமூகத்தில் நற் பிரஜையாய் நான் செல்லுமிடம் எல்லாம் பெருமையும் சிறப்பும் பெறவைத்த எனது பாடசாலையை சிரம் தாழ்த்தி வணங்குகிறேன்.

அச் சிறுவயதில் எமக்கு கிடைத்த அனுபவங்களும், கல்வியுமே எதிர்காலமான நிகழ்காலத்தில் ஆளுமையை நிர்ணயிக்க உதவியது. இந்த வகையில் அடிப்படைக் கல்வியை இந்தப் பாரம்பரியத்துடன் எமக்கு வழங்கிய இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை எமது வளர்ச்சிப் படியில் முக்கியபங்கை வகித்துள்ளது என்பதனை நான் மறுக்கவோ மறக்கவோ முடியாது. இதற்காக எனது மனமார்ந்த நன்றியை பாடசாலைக்கு கூற கடமைப்பட்டுள்ளேன்.

1998ஆம் ஆண்டு பச்சிளம் பாலகியாக நடந்துவந்த என்னை அனைத்து கலைகளையும் புகட்டி செல்லுமிடமெல்லாம் சிறப்புடனும் வெற்றியுடனும் திகழ வைத்தவள் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலைத் தாய். அவளை நன்றியுடன் நினைவு கூருவதுடன் வெள்ளிவிழா நாளில் தூய்மையான எனது உள்ளத்தினது அன்பினாலும், மலரினாலும் உன் தாமரை போன்ற திருவடிகளை வணங்குகிறேன்.

இவ் வெள்ளிவிழா மூலம் மேலும் பலம் பெற்று உனது அளப்பரிய சேவையை என் போன்ற சின்னஞ்சிறு மாணவிகளுக்கு வழங்க இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நின்தன் நிழலில் கல்வியுடன் கலைபல பயின்ற காரணத்தினால் இன்று சதுரங்க விளையாட்டரங்கில் பல சதுரங்களையும் வென்று கடந்து தேசிய மட்டத்தை சுவீகரித்து சர்வதேச போட்டியின் பொருட்டு இலங்கை அணி சார்பில் கிரேக்க தேசத்திற்கு போட்டியாளராக செல்வதில் மகிழ்ச்சி அடைவது மட்டுமன்றி என்போன்ற பல சாதனையாளர்களையும் வளர்த்துவிட்ட நின் திருவடியை வணங்கி உன் ஆசியையும், அன்பையும் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

எதிர்காலத்திலும் நின் நிழல் நாடி வரும் சிறார்களை பல சாதனை வீரர்களாகப் பெற்று உயர்பெற வைக்கும்படி நின் தாழ் பணிகிறேன்.

# சிறாரும் ஒழுக்க விருத்தியும் அண்மைக்கால ஆய்வுகள்

பேராசிரியர் சபா. ஜெயராசா

சமகாலக்கல்வியில் ஒழுக்க விருத்தி பற்றிய கருத்துக்கள் அதீத முக்கியத்துவம் பெற தொடங்கியுள்ளன. உலகமயமாக்கலின் தாக்கங்களும், நவீன நுகர்ச்சிப் பங்குகளும், ஏறுமாறான பொருளாதார கோலங்களும், தீவிர போட்டிகளும் ஆரம்ப பாடசாலைகளில் இருந்தே மாணவரிடத்து எதிர் நடத்தைக் கோலங்களை தூண்டிவருதல் அவதானிக்கப்பட்டுள்ளது. "ஒழுக்கம் கற்பிக்கப்பட முடியுமா?" என்ற வினா சமூக- இடைவினைகளின் மத்தியில் கடந்த நூற்றாண்டில் இருந்தே குழந்தை உளவியலாளரின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது.

-**ஹியு -ஹட் ஸ்கோர் (HUGH HARTSHORNE,**1928) அவர் கடந்த நூற்றாண்டிலே மேற்கொண்ட ஆய்வுகள் வியப்பூட்டும் முடிவுகளைத் தந்தன. அதாவது வரன் முறையான ஒழுக்கக் கல்வி மாணவர்களது நடத்தையிலேயே நேர்முகமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பது அவரின் ஆய்வின் பெறுபேறாகும். மேலும் ஒருவரது நடத்தையிலே ஓரிணைப்பு தொடர்ச்சியை (CONSISTENCY) காண முடியவில்லை என்றும் ஆய்வுகள் புலப்படுத்தின. அதாவது ஒரு சமயம் ஒருவரை ஏமாற்றிய மாணவர் மறுமுறையும் அவ்வாறான ஏமாற்று வேலையைச் செய்வார் என்பதற்கு உறுதியில்லை. மேலும், மாணவரின் ஒழுக்க நடத்தைகளைத் திட்டமிட்டு எதிர்கூற முடியாது என்பது அவரின் முடிவாக இருந்தது. இந்த நிலையில் மாணவர்கள் நல்லவர்கள் என்றோ, கெட்டவர்கள் என்றோ வகைப்படுத்துதல் பொருத்தமற்றதாகும்.

தமிழர்களது கல்வி பாரம்பரியத்தில் ஒழுக்கம் என்பது வரன் முறையாக கற்பிக்கப்பட முடியும் என்பதும் கல்வியின் நிறைவை நோக்கிச் செல்லும்போது அறிவும் ஒழுக்கமும் சமாந்திரமாக முகிழ்த்தெழும் எனவும் வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் சிறாரின் ஒழுக்க விருத்தி பற்றிய ஆய்வுகள் வேலைப் புலத்தில் வளர்ச்சி பெற்ற அளவுக்கு எமது சமூகப் பின்னணியிலே முன்னெடுக்கப்படவில்லை என்ற இடைவெளியையும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

ஒழுக்க விருத்தி தொடர்பாக **லோறன்ஸ் கோல் பேர்க் (LAWRENCE KOHLBERG, 1968)** மேற்கொண்ட ஆய்வுகள் அடுத்து முக்கியத்துவம் பெறுகின்றன. இவரது ஆய்வின்படி சிறார்கள் ஒழுக்க விருத்தி என்பது குறிப்பிடத் தக்க படிமுறை ஒழுங்கில் அனைவரிடத்தும் வளர்ந்து செல்லுகின்றது என விளக்கப்பட்டுள்ளது. படிநிலை ஒழுங்கில் நிகழும் பல்வேறு விருத்தி நிலைகள் பற்றிய கருத்துக்கள் ஏற்கனவே **சிக்கமன்ட் பிராய்ட், எறிக்சன் பியாசே** முதலியோரால் விளக்கப்பட்ட அறிக்கைப் பாரம்பரியம் மேலை நாடுகளிலே காணப்பட்டது.

படிநிலை ஒன்று மற்றும் படிநிலை இரண்டு ஆகியவற்றிலே காணப்படும் ஒழுக்க நடத்தையே "வழமைகளுக்கு முந்திய" ஒழுக்கப் பருவங்கள் என்று அவர் குறிப்பிட்டார். அதாவது படிநிலை ஒன்றில் வளர்ந்தோரில் உடல் சார்ந்த தண்டனைகளுக்கு தப்பும் பொருட்டு சிறார்கள் தமது நடத்தைகளை ஒழுங்கமைத்துக் கொள்கிறார்கள். படிநிலை

இரண்டில் தமது சுய தேவைகளை நிறைவேற்றும் வகையிலே தமது நடத்தைகளை பெருமளவிலே ஒழுங்கமைத்துக் கொள்கிறார்கள்.

அடுத்து நிகழும் 3ஆம் 4ஆம் படிநிலைகள் வழமைகளோடு இணைந்த ஒழுக்க வளர்ச்சிப் பருவங்களாக அமைகின்றன. 3ஆம் கட்டத்து ஒழுக்க விருத்தி சமூக இணக்கப் பாடோடு தொடர்புடையதாக இருக்கும். பிறர்க்கும் எவை மகிழ்ச்சியூட்டும் நடவடிக்கைகளாக இருக்குமோ, அவை ஏற்புடைய நடவடிக்கைகளாக இருக்கும். அவற்றை சிறார்கள் பின்பற்றத் தொடங்குவார்கள்.

அதாவது சமூகத்தின் வழமைகளோடும் மரபுகளோடும் இணைந்து நிற்கும் பருவமாக இது அமையும். நான்காம் படி நிலையில் சமூக ஒழுக்கங்கள், விதிகள், மரபுகள் முதலியவற்றிற்கு கீழ் படிதல் வளர்ச்சியுறத் தொடங்கும். சிக்கல் எழுகின்ற வேளைகளில் சமூக ஒழுக்க விதிகளை வெளிப்படுத்தும் சாதனங்களாக அமையும். இவற்றால் சமூக உறுதிப்பாடும், சமூக இசைவாக்கமும் முன்னெடுக்கப்படுகின்றன. சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களையும் ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வருவதற்கும் இவை துணைநிற்கின்றன. ஆனால் சமூகத்தின் சட்ட திட்டங்கள் நெகிழ்ச்சியற்று அதீத இறுக்கமானவையாக இருக்கும் பொழுது தனிமனிதர்கள் முரண்பாடுகளை எதிர்கொள்ள நேரிடும்.

இவற்றைத் தொடர்ந்து 5ஆம், 6ஆம் கட்ட வளர்ச்சிகளாக அமையும் பருவங்கள் வழமைகளுக்கு பிற்பட்ட ஒழுக்கப் பருவங்களாகும். இப் பருவங்களில் தனிமனிதர்கள் சமூக ஒழுக்கங்களை தழுவி முன்மாதிரியாக நடந்துகொள்வார்கள். இந்த நிலையில் மற்றவர்களை ஒழுக்க நிலைகளில் நெறிப்படுத்தும் வல்லவர்களாக உருவாகிவிடுகின்றார்கள். அனைத்து பரிமாணங்களையும் சீர்தூக்கிப் பார்த்து பொருத்தமான ஒழுக்க நடவடிக்கைகளை பெறும் ஆற்றலும் இவர்களால் கைவரப் பெற்று விடுகின்றன. 5ஆம் பருவத்தில் ஒழுக்க நடைமுறைகளோடு இணைந்து செயற்படுதலும், 6ம் பருவத்தில்கோட்பாடு மற்றும் கருத்தியல் ஆகியவற்றோடு இணைந்த அருவமாக்கலுடனும் ஒழுக்க நெறிப்பாடு இணைந்திருத்தலும் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட படிநிலை வளர்ச்சி நிலைகள் உலகமாந்தர் அனைவர் இடத்தும் காணப்படும் பொதுவான பண்புகளாக உள்ளனவா? என்பதும் அண்மைக் காலமாக விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுகின்றது.

தமிழர்களது கல்விப் பாரம்பரியத்தில் ஒழுக்கத்தின் உயர்வே ஒருவரின் வாழ்க்கையில் உயர்வாகக் கருதப்படுகின்றது. நடைமுறை வாழ்க்கையிலும் இலட்சிய வாழ்க்கையிலும் ஒழுக்க மேம்பாடு தமிழர் கல்வியிலே தொடர்ந்து வற்புறுத்தலுக்குள்ளாகி வந்துள்ளது. மேலை நாடுகளில் நிகழ்ந்த பாரிய புரட்சிகளும், கிராம வாழ்வின் சிதறல்களும் 20ஆம் நூற்றாண்டுவரை தமிழர்களால் அனுபவிக்கப்படாதவையாக இருந்தன. 20ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியிலே தான் முன்னர் அனுபவிக்கப்படாத அதிர்வுகள் தமிழர்களது சமூக வாழ்க்கையிலே ஏற்படலாயின. இந் நிலையிலே "கல்வியால் மட்டும்" ஒழுக்கத்தை கட்டியெழுப்பிவிடலாம் என்பது இலட்சியப் பாங்கான அணுகுமுறையாக மாறி விடுதல் யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நிகழ்ந்த ஆய்வரங்கு ஒன்றிலே இக் கட்டுரை ஆசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டது. ஒழுக்க உருவாக்கத்தில் கல்வி அனுசரணையாக இருக்குமேயன்றி அது மட்டும் முழுமுதற் காரணியாகாது.

மேலை நாடுகளில் நிகழ்ந்த ஒழுக்க விருத்தி தொடர்பாக ஆய்வுகளிலே பிறரை ஏமாற்றும் நடத்தைகள் பற்றிய கணிப்பீடுகள் சிறப்பிடம் பெற்றிருந்தன. ஏமாற்றும் பழக்கம் ஒருவரது நுண் மதியுடன் தொடர்புடையதா? அல்லது ஒருவர் மேற்கொள்ளும் அறத் தீர்மானிப்புக்களுடன் (MORAL JUDGEMENT) தொடர்புடையதா? என்ற விடயமும்

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. (KOHLBERG AND CANDEE,1984) கூடிய நுண்மதி ஈவு கொண்டவர்களும், தாழ் நிலையான தீர்மானிப்பு ஆற்றலும் கொண்டவர்கள் ஏமாற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதும் கண்டறியப்பட்டுள்ளது. அதே வேளை தாழ்ந்த நுண்மதி ஈவு கொண்டவர்களும் தாழ்ந்த நிலையான தீர்மானிப்பு ஆற்றல் கொண்டவர்களும் ஏமாற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுதலும், அதே ஆய்வுகளில் இருந்து வெளித்துலங்கின.

ஒழுக்கம் சார்ந்த நடத்தைகள் தொடர்பான ஆய்வுகளை மேலை நாடுகளில் மேற்கொண்டோர் பொருளாதார சுரண்டல்கள், தனிச் சொத்துரிமை சமூக ஏற்றத் தாழ்வுகள் முதலியவற்றின் அழுத்தங்களை ஆய்வுகளுக்கு உட்படுத்தாது சகபாடிகள் உறவு, குடும்பப் பின்னணி, பாடசாலையின் செல்வாக்கு முதலிய காரணிகளே அடிப்படையானவை என்ற மாயைத் தோற்றங்களை உருவாக்கி வருகின்றனர். **வில்லியம் டமொன் (William Damon, 1990)** மேற்கொண்ட ஆய்வுகள் சகபாடிகளின் இடை வினைகளின் பண்பு நிலையான தன்மைகள் ஒருவரது ஒழுக்கங்களை எவ்வாறு பாதிக்கின்றன, என்பவற்றை அடியொற்றியதாக அமைந்தன. நியாயப்பாடும் நேர்மையாக நடந்து கொள்ளலும் சகபாடிகளின் பரஸ்பர விட்டுக் கொடுப்புகளினால் கற்றுக் கொள்ளப்படுகின்றன என்பது **டமொன்** என்பவரின் ஆய்வுகளில் இருந்து முன்வைக்கப்படுகின்றது.

ஒழுக்க நடத்தைகளிலே குடும்பத்தின் மனவெழுச்சி சூழலின் முக்கியத்துவமும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (SALLY POWERS, 1988) குடும்பத்திலே காணப்படும் நேர்முகமான உணர்வுகள் நேர் நடத்தைகளை துாண்டுதலும், எதிர் நிலை உணர்வுகள் எதிர்ப் பங்குபற்றல் செயற்பாடுகளை சமூகத்திலே உருவாக்குதலும் கண்டறியப்பட்டுள்ளன.

நன்கு திட்டமிடப்பட்ட கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுக்க விருத்தியில் பங்கு கொள்ளலும் அண்மைக் காலத்தேய ஆய்வுகளிலே வெளிப்படுத்தப்படுதல் முன்னைய ஆய்வுகளின் முடிவுகளை நிராகரிப்பனவாக உள்ளன. (SPRINTHALL, 1994) ஒழுக்க முதிர்ச்சியில் கற்பித்தல் நடவடிக்கைகள் நேரடியான பங்களிப்பை செலுத்துகின்றது. ஒழுக்கப் பிரச்சனைகள் பற்றிய கலந்துரையாடல்கள் நேர்முகமான விளைவுகளை ஒப்பீட்டளவிலே கூடுதலாக ஏற்படுத்தவல்லவை. கல்விக்கும் ஒழுக்கத்திற்குமிடையே காணப்படும் பாரம்பரியமான கருத்துக்கள் நவீன ஆய்வுகளிலே மீள வலியுறுத்தப்படுகின்றன. கல்விச் செயல் முறையுடன் சமூக பொருளாதார காரணிகளை நேர்முகமாக மாற்றி அமைக்கும் அகல் விரி செயற்பாடுகளே நடைமுறை அனுகூலங்களை தரவல்லவை. கல்வி செயன்முறையுடன் சமூக பொருளாதார கட்டுமான மாற்றங்களையும் ஒன்றிணைத்து இயக்கும் பொழுதுதான் ஒழுக்கக்கல்வி நடைமுறை சாத்தியமாகும்.



# மன்ற செயற்பாடுகள்



தமிழ் மன்றம்



ஆங்கில மன்றம்



இந்து மன்றம்



கவின் கலைமன்றம்

# குழுச் செயற்பாடுகள்



மேலைத்தேசவாத்திய
இசைக்குழு



சுகாதாரக்குழு



மாணவமுதல்வர் குழு



வகுப்பு மாணவதலைவர் குழு



விளையாட்டுக்குழு

# தமிழ் மன்றச் செயற்பாடுகள்

அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் பொறுப்பாசிரியர்களைத் துணையாகக் கொண்டு இயங்கிவருகின்றது. மாணவர்களிடையே உள்ள தமிழ் மொழித்திறன் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக வகுப்பு, பாடசாலை மட்டத்தில் போட்டிகளை நடாத்தி திறமையான மாணவர்களைத் தெரிவுசெய்து கோட்ட வலைய மாவட்ட தேசிய மட்டத் தமிழ் மொழித்திறன் போட்டிகளில் பங்குபெறச் செய்து வெற்றியீட்டுவதற்கு வழிசெய்கின்றது. 1998இல் தமிழ் மொழி தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.





இதைவிட திருக்குறள் மனனப் போட்டி, முதியோர்தினம், சிறுவர் தினப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்றச் செய்து வெற்றியீட்டுவதற்கு துணைபுரிகின்றது. இது மட்டுமன்றி மாணவர் கையெழுத்துச் சஞ்சிகைக்குரிய ஆக்கங்களை வருடாவருடம்.

முதன்மைநிலை இரண்டு முதன்மைநிலை மூன்று மாணவர்களிடம் சேகரித்து சஞ்சிகையை ஆக்கி வலயமட்டத்திற்கு அனுப்பி வைக்கின்றது.

பாடசாலை நிகழ்வுகள், வைபவங்கள் தொடர்பான மொழிவளர்ச்சி செயற்பாடுகளிலும் பணியாற்றி வருகின்றது. இவ்வருடம் தேசியமட்டப் போட்டியில் தனி நடனம் இரண்டாம் இடத்தைப் பெற்றமை சிறப்பம்சமாகும்

**தமிழ் மொழித்தினப் போட்டி - பதிவுகளின்படி வெற்றிகள்.**

| ஆண்டு | பெயர் | நிகழ்ச்சி | பெற்ற இடங்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
| 1982 | க. சுகந்தி | சொல்வதெழுதல் | 3 | | | | |
| 1984 | ந.வாசுகி | பாவோதல் | 1 | 1 | 3 | | |
| 1985 | த.ரேவதி | பிரிவு.1ஆக்கம் | 3 | | | | |
| | கு.கார்த்திகா | வாசிப்பு | 2 | | | | |
| | ச.உஷாநந்தினி | எழுத்து | 2 | | | | |
| | வ.கௌசலி | பாவோதல் | 2 | | | | |
| | ந.தேவிகா | பிரிவு..2வாசிப்பு | 3 | | | | |
| | கு.துஷ்யந்தி | ஆக்கம் | 1 | | | | |
| | சே.கீதா | பாவோதல் | 1 | | | | |
| | ந.தேவிகா | எழுத்து | 2 | | | | |
| 1986 | வ.கௌசலி | பாவோதல் | 1 | | | | |
| | நா.கோகிலவாணி | ஆக்கம் | 1 | | | | |
| | மு.றஞ்சினிதேவி | வாசிப்பு | 1 | | | | |
| | ச.ஜனனி | எழுத்து | 3 | | | | |
| | சி.தமிழ்நங்கை | பாவோதல் | 2 | | | | |
| 1989 | ச.தர்சினி | வாசிப்பு | 2 | | | | |
| | பா. தர்சினி | எழுத்து | 2 | | | | |
| | பிருந்தா | ஆக்கம் | 2 | | | | |
| | பா. சங்கீதா | பாவோதல் | 1 | | | | |
| 1991 | சி.ஷர்மினி | எழுத்து | 1 | | | | |
| 1992 | | பேச்சு | 1 | | | | |
| | | பாவோதல் | 1 | | | | |
| | | சொல்வதெழுதல் | 1 | | 3 | | |
| | | இசைவாய்ப்பாடு தனி | 1 | | | | |
| | | இசைவாய்ப்பாடு குழு | 1 | | 1 | | |
| | | நடனம் தனி | 2 | | | | |
| | | வாசிப்பு | 3 | | | | |
| | த.தாரணி | பாவோதல் | 1 | | | | |
| 1994 | த தனுஜா | பேச்சு | 3 | | | | |
| | த. ஜனார்த்தனி | பாவோதல் | 3 | | | | |
| | | சிறுவர் நாடகம் | 2 | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1996 | நா. இந்துஜா | எழுத்தாக்கம் | 1 | | | | |
| | பா. தாரணி | பாவோதல் | 1 | | | | |
| 1997 | த.தர்சிகா | வாசிப்பு | 1 | 2 | | | |
| | தாரணி | பாவோதல் | 1 | 1 | 1 | 2 | |
| | த.ஷகிர்தினி | நடனம் தனி | 1 | 2 | | | |
| | இ. கௌதமி | எழுத்தாக்கம் | 2 | | | | |
| | நாட்டிய நாடகம் | | 2 | | | | |
| | நாட்டார் பாடல் குழு | | 2 | | | | |
| 1998 | ச. கஜிந்தா | வாசிப்பு | 1 | 1 | 1 | | |
| | ப.கார்த்திகாஜினி | பாவோதல் | 1 | 1 | 2 | | |
| | ச. அபிராமி | நடனம் தனி | 1 | 1 | 1 | | |
| | இ.கஜீபா | பேச்சு | 3 | | | | |
| 1999 | ஜெ.தாரணி | எழுத்தாக்கம் | 1 | 3 | | | |
| | ப.கார்த்திகாஜினி | வாசிப்பு | 2 | | | | |
| | கி. சூர்மியா | பேச்சு | 3 | | | | |
| | மெ.லதாங்கி | பாவோதல் | 1 | 1 | 2 | | |
| | யோ. வினோதா | நடனம் தனி | 1 | 1 | 2 | | |
| 2000 | கு.கோபிகா | வாசிப்பு | 1 | 3 | | | |
| | ச.சாமனளா | கதை கூறல் | 1 | 1 | 2 | | |
| | க.அபர்னா | பேச்சு | 1 | 3 | | | |
| | ச.ருக்சிகா | பாவோதல் | 1 | | | | |
| | யோ.தர்சிகா | இசையும் அசைவும் | 2 | | | | |
| | ச.லாவண்யா | நடனம் தனி | 1 | 2 | | | |
| | | சிறுவர் நாடகம் | 1 | 1 | 1 | | |
| 2001 | ச.யசோதா | கதை கூறல் | 3 | | | | |
| | ஜெ.மாதங்கி | ஆக்கம் எழுத்து | 3 | | | | |
| | சி. சிவசொரூபினி | பேச்சு | 2 | | | | |
| | க.அபர்னா | பாவோதல் | 1 | | | | |
| | ச.ருக்சிகா | நடனம் தனி | 3 | | | | |
| | த.சிவவாஜினி | இசையும் அசைவும் | 1 | 2 | | | |
| | | சிறுவர் நாடகம் | 1 | 3 | | | |
| 2002 | அ.மீரா | வாசிப்பு | 1 | 1 | 2 | | |
| | தி. அருள்வாகினி | கதை கூறல் | 1 | 1 | 2 | | |
| | பு.கஜலக்ஷி | பாவோதல் | 1 | 1 | 2 | | |
| | செ.செல்வலக்சுமி | நடனம் தனி | 2 | 2 | | | |
| | | சிறுவர் நாடகம் | 2 | 2 | | | |
| 2003 | பக்த ஜெனனி | கதை கூறல் | 1 | 2 | | | |
| | பு.சுமிதா | பேச்சு | 3 | | | | |
| | யோ.சங்கிதா | பாவோதல் | 3 | | | | |
| | கி. பஞ்சுகா | நடனம் தனி | 2 | 3 | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | பா.ஆரண்யா | வாசிப்பு | 2 | | | | |
| | கு.கோபிகா | ஆக்கம் எழுத்து | 1 | 2 | | | |
| | | சிறுவர் நாடகம் | 1 | 1 | | | |
| 2004 | ச.சாரங்கா | வாசிப்பு | 2 | 3 | | 1 | 2 |
| | சு.கானப்பிரியா | கதை கூறல் | 2 | 3 | | | |
| | தெ.சரவண்ஜா | நடனம் தனி | 1 | 1 | 1 | | |
| | வ. சிறிதரா | இசையும் அசைவும் | 2 | 1 | 1 | | |
| | ஒ.கேதாரணி | ஆக்கம் எழுத்து | 3 | | | | |
| | | சிறுவர் நாடகம் | | | | | |

| சங்கீத நடன நாடக போட்டி | | | | |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பெயர்** | **நிகழ்ச்சி** | **வட்டாரம்** | **மாவட்டம்** |
| 1994 | இ.இரஜனி | தனிநடனம் | 1 | |
| | ந.வாசுகி | கர்நாடகம் | 2 | |
| | | குழுப்பாடல் | 2 | |
| 1995 | க.சுவர்ணாங்கி | தனிப்பாடல் | 1 | 1 |
| | 18மாணவர்கள் | குழுப்பாடல் | 1 | 3 |
| | சே.கீதா | தனிநடனம் | 1 | 2 |

| சர்வதேச எழுத்தறிவு தினம் | | | | |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பெயர்** | **போட்டி** | **நிலை** | **தரம்** |
| 1999 | ப.பிரதீபா | கட்டுரை | 1 | 1 |
| | மு.பானுப்பிரியா | | 2 | 1 |
| | யோ. தனீபா | | 1 | 2 |
| | செ.சங்கீதனா | | 2 | 2 |
| | கா.அபர்னா | | 1 | 3 |
| | சூ..ஹம்சாயினி | | 1 | 4 |
| | இ.வாகினி | | 2 | 4 |

1999 கையெழுத்துச் சஞ்சிகை வலய மாகாண மட்டத் தெரிவு

| சிறுவர் தினப் போட்டி | | | | |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பெயர்** | **போட்டி** | **நிலை** | **தரம்** |
| 2000 | யோ.மதுரா | கட்டுரை | 1 | 5 |
| | ஆ.சுபகா | கட்டுரை | 2 | 3 |
| | செ.சங்கீதனா | கட்டுரை | 3 | 5 |
| 2001 | கி.பஞ்சுகா | கட்டுரை | 1 | 4 |
| | ஆ.சுபகா | கட்டுரை | 2 | 5 |
| | த.சோபியா | கட்டுரை | 3 | 4 |
| 2002 | இ.கோபிகா | கட்டுரை | 2 | 4 |
| | ச.சோபிதா | கவிதை | 3 | 4 |
| 2003 | சு.சுபஸ்திகா | கட்டுரை | 3 | 4 |

| முதியோர் தினப்போட்டி | | | | |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பெயர்** | **போட்டி** | **நிலை** | **தரம்** |
| 2000 | இ.சரண்யா | கட்டுரை | 2 | 5 |
| | ச. சுகந்தினி | கட்டுரை | 3 | 3 |
| 2002 | ஆ.சுபகா | கட்டுரை | 1 | 5 |
| | ச.தேவசுகன்ஜா | கவிதை | 2 | 5 |
| 2003 | இ.கோபிகா | கட்டுரை | 2 | 5 |
| 2004 | ம.சாகித்தியா | கவிதை | 2 | 5 |
| | ஸ்ரீ.துளசிகா | கட்டுரை | 2 | 5 |

பகைமையை இவ்வுலகில் ஒருபோதும் பகைமையால் வெல்ல முடியாது.
அன்பினாலேயே பகமையை வெற்றி கொள்ள முடியும்.



# தொட்டில் பழக்கம் .........?

**கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்)**
முன்னாள் கொத்தணி அதிபர்

"தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்பதும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்பதும் கருத்துச் செறிந்த முது மொழிகள். பிள்ளையே மனிதனின் தந்தை (Child is the father of the man) என்ற ஆங்கிலப் பொன்மொழி ஆலம் வித்தினுள் ஆலமரமே அடங்கியிருக்கிறது என்ற சமய தத்துவத்தின் சாரம் எனலாம்.

ஒரு பிள்ளை தனது தாய் மொழியில் பெற்றுக்கொள்ளும் அடிப்படை அறிவுகளே அதன் வாழ்நாள் முழுவதும் அம்மொழியிலே கட்டியெழுப்பப்படும் திறன்களாகும்.

எனவே அதற்கு வழங்கப்படும் பாடநூல்கள், கதைகள், கவிதைகள், சிறுகட்டுரைகள் என்பன (Compositions) பிழையற்றவையாய் (எழுத்து, சொல், வாக்கியப் பிழைகள் அற்றவையாய்) விளங்குதல் அவசியமாகும்.

இது கணனியுகம் நவீன சாதனங்கள் யாவும் கணனியின் தயவை நாடுங்காலம் இது. இதற்குப் பிள்ளைப் பருவத்திலேயே பலமான அத்திவாரம் இடப்படுகின்றது. கணனி விளையாட்டில் (Computer game) இன்றுள்ள பிள்ளையின் வாழ்க்கை தொடங்குகின்றது என்று கூடச் சொல்லலாம்.

இது ஒருபாலாகத் தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள், சஞ்சிகை முதலான ஊடகங்களும் பிள்ளையின் மொழி வளர்ச்சியில் பங்கு கொள்கின்றன. ஆனால் இவையாவும் பிள்ளையின் அறிவுக்கு விருந்தளிப்பது போல, மொழித்திறன் வளர்ச்சிக்கு எந்த அளவிற்கு உதவுகின்றன என்பதே இன்றுள்ள கேள்வி கடந்த சில ஆண்டுகளாய் ஆங்கில ஊடகக்கல்வி 6ஆம் தரத்தில் (மாணவரில் ஒரு பகுதியாருக்கு)அறிமுகமாகி வருகின்றது எனினும் தாய் மொழி ஊடகக் கல்வியும் தொடர்கின்றது. ஆக தாய் மொழியிலேயே அனைத்துப் பாடங்களையும் கற்கும் மாணவர், முற்காலத்தில் போலவன்றி ஒரு வாக்கியத்தைப் பிழையின்றி எழுதத் தடுமாறுவது ஏன்? இந்தக் கேள்வியே இன்று கல்வியாளர்களை உறுத்துவதாய் உள்ளது.

கண்டல், கேட்டல், உரையாடல், வாசித்தல், எழுதல் என்ற படித்தரத்தில் மொழிக்கல்வி அமைந்துள்ளது. இவற்றில் முதன்மையானதும் முதலாவதுமான "கண்டல்" பிழையற்றதாய் அமைவது இன்றியமையாதது. ஆனால் பாடநூல் தொடக்கம் ஊடகங்கள் வரை சொற்பிழைகள், எழுத்துப்பிழைகள், வாக்கியப் பிழைகளை விடுகையில் அவற்றையே காட்சிகளாகக் காணும் பிள்ளைகள் என்ன செய்வார்கள்? "ஊரோடில் ஒத்தோடு" என்பதை அவர்கள் சிக்கெனப் பிடிப்பதில் தவறு என்ன?

தமிழ்க்கல்விக்கு உதவுபவை என்று மேலே நாம் குறித்தவற்றில் மிகக்கூடிய பொறுப்பு வாய்ந்தவை தமிழ்ப் பாடநூல்களே! தமிழிலேநிறைவான அறிவும், கலைபயில்திறனும், கட்டுரைவன்மையும் உடையோராகப் பாடநூல் ஆசிரியர்கள் விளங்க வேண்டும் என எதிர்பார்ப்பதில் எவ்வித தவறும் இல்லை. இருப்பினும் இவர்களின் கவனத்தையும் மீறிப் பல பிழைகள் தமிழ்ப் பாடநூல்களில் மலிவது கவலையைத் தருகின்றது.

இந்நூற்றாண்டின் அறுபது வரை அச்சுச் சாதனங்கள் மிகவும் கடினமான முயற்சியை வேண்டி நின்றன. அச்சுக்கோப்பது சரவை (Proof) பார்ப்பது, அச்சடிப்பது, நூல் வடிவிற் கொணர்வது யாவும் நீண்ட காலத் தொழிற்பாடுகளாய் இருந்தன.

அக்காலத்தில் அச்சுக் கோப்பாளர், சரவை பார்ப்போர் ஆகியோர் இன்று போல் குறைந்தது கா.பொ.த(சா/த) தேர்வு பெற்றவராயும் இருக்கவில்லை. ஆகக் கூடிய படிப்பு அவர்களைப் பொறுத்தவரையில் எட்டாம் வகுப்பே. இத்தகைய பின்னடைவுகள் இருந்த போதிலும் பாடநூல்களில் பிழைவராது பேணியமை அக்காலத்தின் சிறப்பு என்பதற்கு ஐயமில்லை.

இன்று நூற்பதிப்பில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டு வருகின்றது. குறைந்த கால இடைவெளியில் அழகுடனும் போதிய அளவு வண்ணப் படங்களுடனும் பாட நூல்களை வெளியிட வாய்ப்புள்ளது. தமிழ்ப் பாடநூலைப் பொறுத்தவரையில் அதன் விடயப் பரப்பு மிக விரிந்துள்ளது. வளர்ந்துவரும் அறிவியல் அதன் பயனாக கிடைத்த வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுவர்களுக்கான கதை நூல்கள், கவிதைகள் அவர்களின் அறிவுப் பசியை தீர்க்கும் அளவிற்கு பல்கிப் பெருகி வருகின்றன. கல்வியியல், உளவியல் சார்ந்த பயனுள்ள புதிய கருத்துக்கள் தமிழ்ப் பாடநூல்களிலே செல்வாக்கு செலுத்துவதையும் நாம் மறந்துவிடலாகாது.

இவைஎல்லாம் சாதகமான அம்சங்களாயினும் இங்கு நான் எழுத எடுத்துக்கொண்டது "தமிழ்" (1-2) பாட நூல்களிலேயே காணப்படும் சில பிழைகள் (எழுத்து, சொல், கருத்து) பற்றியதாகும்.

**நல்ல குரு அமைந்தால் ஆண்டவன் கொடை.**
**பிள்ளைகளின் நடத்தைக்கு பெற்றோரே பகைவர்.**



## தமிழ் தரம் 1

| | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 1<br>2 | மாணவரை செவிமடுக்க வினாக்கள் வினவி கலந் துரையாடுக (இவைஆசிரியருக்கு வழிகாட்டிகள்!) ஓற்று இடாத சொற்றொடர்கள் பல உள | மாணவரைச் செவிமடுக்க வினாக்கள் வினவிக் கலந்துரையாடுக. பக்கம் 2 |
| 3 | தங்கை வந்தால்(அச்சுப் பிழை என்று சமாதானம் கூறலாம்.இவ்வளவு பெரிய எழுத்தில் பிழை நேர்வது சரவை பார்ப்போரின் கவலையீனத்தாலாகும் ஆனால் "ள்,ல்" வேறுபாடு தெரியாத பிள்ளை என்னவாகும்?) | தங்கை வந்தாள் (பக்கம் 29) |
| 4 | வாழ்வில் பணியும் பூசணி பார் | வாழ்வில் பணியும் பூசினி (பக்கம் 36) |
| 5 | காகம் கருப்பு நிறம் (அடுத்த பக்கத்தில் நிறங்களை பெட்டியிட்டுக் காட்டியதில் கறுப்பு என்றுள்ளது.) | காகம் கறுப்பு நிறம் (பக்கம் 40) |

## தமிழ் தரம் 2

| | பிழை | திருத்தம். |
|---|---|---|
| 1 | மாடு கதறும் | மாடு முக்காரம் போடும் என்பது மரபு. இந்தத் தரத்திற்குச் சொற்றொடல் கடினந்தான் எனினும் மரபும் முக்கியமே (பக்கம ˙9) |
| 2 | சாமான் ஏற்றும் கப்பலாம் (சாமான் இடக்கரடக்கலாயும் வரும்)(வள்ளியப்பாவின் பாடலைத் திருத்தல் இயலாது,ஆனால் அவர் நாட்டில் வழங்கும் கருத்து நோக்கியதாக இருக்கலாம்.சிந்திக்கவும்) | சரக்கு ஏற்றும் கப்பலாம் (பக்கம் 12) |
| 3 | பூசணிக்காய் போன்று | பூசினிக்காய் போன்று(பக்கம் 14) |

| | | |
|---|---|---|
| 4 | பிறருக்கு உதவுவோம் என்ற கதை பொருத்தமற்றது. கண் பார்வை இழந்தோரின் செவிப்புலன் கூர்மையாக இருக்கும். புகையிரதத்தின் பெரும் ஒலி அவரை நிதான மாக நடக்க வைத்திருக்கும். வெள்ளைப் பிரம்பு அவர்களின் வழிகாட்டி. எனவே கண்ணற்றவர் ஆபத்துக்கு உள்ளானது நடக்க முடியாதது. இது கண்பார்வையற் றோரின் திறமையைக் குறைத்து மதிப்பிடுவதாகும். பக்கம் (18-19) | |
| 5 | வெள்ளை மனிதனுக்கு (?) கறுப்புத் தொப்பி | வெள்ளை மனிதனுக்குக் கறுப்புத் தொப்பி(பக்-20) |
| 6 | நிறையசத்துகள் உள்ளன | நிறையச்சத்துகள் உள்ளன. |
| 7 | பழங்கள் இனிமையானவை. | சுவையானவை என்பது வழக்கு(பக்கம் 20) |
| 8 | மாதவனை குடைக்குள் | மாதவனைக் குடைக்குள் (பக்கம் 28) |

## உனது வாழ்வைப் பார்
## TAKE A LOOK AT YOUR LIFE

- **பின்னோக்கிப் பார்** (look back)
  - நீ இதுவரை சமாளித்த இடையூறுகளைப் பார். நீ இந்த வாழ்வில் எவ்வளவு கற்றுவிட்டாய் என்பதையும், எவ்வளவு வளர்ந்துவிட்டாய் என்பதையும் பார்



# ஆரம்பக் கல்வியும் தமிழ் மொழியும்.

**திருமதி தயானி குகநாதன்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

மனிதனை சீரிய நற்பிரஜையாக வாழ வைப்பது கல்வியே. அதிலும் ஆரம்பக்கல்வி உறுதியானதாகவும் செம்மையானதாகவும் இருக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே. மண்ணிலே மனிதனாக மலர்ந்துவிட்ட ஒவ்வொருவரும் ஏதோ ஒரு மொழியைப் பின்பற்றுகின்ற வேளையில் திராவிட இனத்திலிருந்து தோற்றம் பெற்ற நாம் இன்ப மணம் கமழும் இனிய நல் தமிழ்மொழி பேசுவதில் பெருமை அடைகின்றோம்.

ஆரம்பக் கல்வியானது அத்திவாரம் போன்றது. அத்திவாரம் பலமானால்தான் கட்டடம் செம்மையாகக் கட்டமுடியும். அதுபோலவே ஆரம்பக் கல்வியைக் கற்பிக்கும் ஆசான்கள் ஒவ்வொருவரும் தன்பிள்ளைக்கு உணவூட்டும் தாய்போல் கருத்துடையவர்களாய் விளங்கவேண்டும். ஆரம்ப வகுப்புக்களில் தமிழ்மொழி கற்பிக்கும் போது பல்வேறு விடயங்களில் அக்கறை காட்டவேண்டும். ஆரம்பவகுப்புக்களில் தமிழ் மொழியானது செவிமடுத்தல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் போன்ற அடிப்படைத் திறன்கள் கொண்டனவாக விளங்குகின்றது.

செவிமடுத்தல் எனும்போது மாணவன் ஒருவனது கேட்கும்திறன், ஒலிவேறு பாடுகளை இனங்காணல், ஒலியைச்செவிமடுத்த பின் வேறுபிரித்துஅறிதல், செலிமடுத்த விடயத்தை மனதில் பதித்தல், பின்னர் ஞாபகமூட்டல். மீள வாய் மொழியாக செவிமடுத்தவற்றைக் கூறும் ஆற்றலை வளர்த்தல் என்பனவாகும். மீள அதனை அவன் கூறும்போது அங்கு பேச்சுத்திறன் தோற்றம் பெறுகின்றது.

பேச்சுத் திறனானது ஆரம்ப வகுப்புக்களில் அவசியம் வளர்க்கப்படவேண்டிய திறன்களுள் இதுவும் ஒன்றாகும். மாணவனின் கூச்ச சுபாவம் மறைந்து ஆளுமை வளர்க்கப்பட இது அடிப்படையாக விளங்குகின்றது. பேச்சாற்றல் தலைமைத்துவப் பண்புக்கும் இன்றியமையாதது. பேச்சானது திடீரென தலைப்பு ஒன்றில் பேசும் திறன், மனனம் செய்து பேசும் திறன் என இருபகுதியுள. அவ்வாறு பேசும்போது பேசுபவரின் தொனி, மனனம் செய்யும் திறன், விடயம், நிற்கும் நிலை, பேசும்போது ஏற்ற இறக்கங்களை அனுசரித்துப் பேசுதல், இயல்பான பேச்சாற்றல்/ பேச்சுவன்மை என்பவற்றை சிறு வயதிலேயே மாணவனுக்கு வழிகாட்டல் வேண்டும். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" "இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க சிறு பராயத்திலேயே செம்மைப்படுத்துவது மிக அவசியமாகும்.

வாசிப்புத் திறன் எனும் போது ஆரம்ப வகுப்புக்களிலேயே வளர்க்கப்பட வேண்டிய திறன்களில் இதுவுமொன்றாகும். வாசிப்புப் பொறிமுறையை அனுசரித்து வாசித்தல், தொனி

வேறுபாடுகள், உச்சரிப்பு, நிற்கும் நிலை, வாசிப்புப்பாணி, பிழையின்றி வாசிக்கும்திறன் (எழுத்துப் பிழை, சொற்பிழை, வரி மாறுபடல்) என்பன ஆரம்ப வகுப்புக்களிலேயே திருத்தமாக வளர்க்கப்படவேண்டிய கடப்பாடு ஒவ்வொரு ஆரம்பக் கல்வி ஆசிரியரையுமே சாரும். யதார்த்த வாழ்வில் எத்தனையோ மாணவர்கள் இடைநிலை வகுப்புக்களிலும் வாசிக்க முடியாத பரிதாப நிலை காணப்படுகின்றது என்றால் ஆரம்ப வகுப்புக்களில் அவர்கள் செம்மையாக வாசிப்புத்திறனை வளர்த்துக்கொள்ளாமையே காரணமாகும். இதற்கு ஒவ்வொரு ஆரம்பக் கல்வி ஆசிரியருமே பதில் சொல்லவேண்டும்.

எழுத்துத்திறன் எனும்போது எழுத்துப் பொறிமுறை என்று சொல்லப்படுகின்ற எழுத்தமைவு, (உறுப்பு, நேர்த்தி) அளவுப் பிரமாணம், எழுத்தின் தன்மை என்பன கவனிக்கப்படல் வேண்டும். ஆரம்பத் தரத்திலேயே இவற்றைக் கவனித்து இதற்கமைவாக எழுதவைப்பதில் ஆசிரியர் கண்ணுடையவராய் இருத்தல் வேண்டும். இதற்கெனவே நேர்கோடுகள் வரைதல், வளைகோடுகள் வரைதல், சுருள் ரேகைகள் வரைதல் போன்ற பயிற்சிகளை செம்மையாக வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படின் வகுப்பில் உள்ள சகல மாணவரும் உறுப்பமைய எழுதுவர் என்பதில் ஐயமில்லை.

எழுத்துக்களை சீராக அமைத்ததன் பின்னர் எழுத்தின் வகைகளை இனங்காணல், சொல்லாக்கம், எழுத்துப் பிழையின்றி சொற்களை எழுதும் திறன், சொல்வளத்தைப் பெருக்கி சொற்களஞ்சியங்களை அறியும் ஆற்றல் என்பவற்றில் விருப்புடையவராக ஒவ்வொரு மாணவனும் வளர்க்கப்பட வேண்டும். சொற்களைச் செவ்வனே எழுத்துப் பிழையின்றி எழுதும் ஆற்றல் பெற்றதன் பின் சொற்களின் வகைகளை அறியவும், வாக்கிய அமைவுக்கு அமைய பிழையின்றி வாக்கியம் ஆக்கற்திறனை ஒவ்வொரு மாணவரிடத்தும் வளர்க்கப்பட வேண்டும். வாக்கிய உறுப்புக்களான எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவற்றை இனங்காணும் திறன் வளர்க்கப்பட வேண்டும். அடிப்படை வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டதும் மொழிக்கு அழகுசேர்க்கும் அடைமொழிகளை வைத்து வாக்கியமாக்கவும், வாக்கியங்களில் வரும் அடைமொழிகளை அது எவ்வகை அடைமொழியென வகைப்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் வாக்கிய வகைகளான கூற்று, வினா, வியப்பு, வியங்கோள் போன்றவற்றை இனங்காணும் திறன் வளர்க்கப்படவேண்டும்.

அடிப்படை இலக்கணங்களான திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றை அறியச் செய்து அதனை அனுசரித்து வாக்கியத்தை இயைபுற எழுதும் ஆற்றல் மாணவரிடத்தில் ஆரம்ப வகுப்புக்களிலேயே வளர்க்கப்பட வேண்டும் இதற்கு மேலாக சொல்வளத்தைப் பெருக்கிக் கொள்ளும் அதே வேளை அச் சொல்லின் ஒத்தகருத்துக்கள், எதிர்க்கருத்துச் சொற்களை அறியும் ஆர்வத்தை ஆரம்ப வகுப்பிற்கு கற்பிக்கும் ஆசிரியர்களும் மாணவர்களும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றோடு எதிர்ப்பாற்சொற்களையும், மரபுச்சொற்கள், இணைமொழிகள், அடுக்கு மொழிகள், அணிகள் என்பவற்றிலும் அனைத்து மாணவர்களையும் வல்லுனர்களாக கட்டியெழுப்ப வேண்டிய கடமை ஆரம்ப கல்வி ஆசிரியர்களையே சாரும்.

ஒவ்வொரு ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் தத்தம் வகுப்பிற்கு உரிய விடயங்களை கற்பிக்கும்போது இரசனையுடனும் மாணவர் விரும்பும் விதத்திலும் கற்பிக்க வேண்டியது அவசியம். தமிழ் மொழி கற்பித்தலில் இரசனைக்கு பஞ்சமேது? படிப்போர் மகிழும்

பாடல்களும், நற்கதைகளும், நாட்டார் பாடல்களும், பழமொழிகளும், விடுகதைகளும், படித்துச் சுவைத்த கட்டுரைகளும், வர்ணனைகளும் என இரசனை மிக்க அம்சங்களோ பல. எனவே தான் போலும்

*"தண்ணிழல் தங்கித் தமிழ்ச் சுனையில் இன்னமுதம் உண்ணலாம் உவந்து நீவிர் வாரீர்."*

என்று முன்னவர்கள் பாடியுள்ளார்கள். இன்சுவையுடன் கூடிய அமுதம் உண்ண எவ்வளவு விருப்புடையவர்களாய் விளங்குவீர்களோ அவ்வாறே அமிழ்தினும் இனிய தமிழ் மொழி கற்றலிலும் கற்பித்தலிலும் விருப்புடையவர்களாய் விளங்க வேண்டும் என்பதே என் அவா.

ஆரம்பக் கல்வி கற்கும் மாணவர்கள் ஒவ்வொருவரும் பரிணாம வளர்ச்சிக்கேற்ப தமது பாடவிடயங்களை முறைப்படி கற்றுத் தேறினால் நற்பயனை அடையலாம். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் பலமான அத்திவாரத்தை செம்மையாக இட்டால் நிச்சயம் ஒவ்வொரு மாணவனும் புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய ஒரே உச்சப் பயனை அடைய முடியும்.

## உனது வாழ்வைப் பார்
## TAKE A LOOK AT YOUR LIFE

- **முன்னோக்கிப் பார்** (Look ahead)
  - தடக்கி விழுந்துவிட்டால் எழுந்து நில், உனக்கான குறிக்கோள்களையும், இலக்குகளையும், செயற்பாடுகளையும் தீர்மானித்து சிராக முன்னேறு.
- **உன் உள்ளே பார்** (Look in side your self)
  - உனது உள்ளெண்ணங்களை ஆராய்ந்து பார். உன் இதயத்தை அறிந்து, அதைப் புனிதமாக்கு. பெருமை, வீண்டம்பம், பொறாமை ஆகியன உன்னை ஆட்கொள்ளவிடாதே.

# மொழித்திறனும் மொழியாற்றலும்.

**இ. கௌதமி**
2006 A/L Arts,
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

மொழி என்பதை ஒரு கருத்து தொடர்பு சாதனம் என்றவாறே தற்கால மொழியியல் அறிஞர்கள் அர்த்தப்படுத்திக் கொள்கின்றார்கள். ஆதி மனிதன் மற்ற மனிதர்களோடும் தொடர்பு கொள்வதற்கும் தனது கருத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கும் பயன்படுத்தியது சைகைகளையும், பல்வேறு விதமான ஓசைவேறுபாடுகளையுமே. இன்றும் விலங்குகள் எழுப்புகின்ற பல்வேறு விதமான ஓசைகளை எம்மால் விளங்கிக்கொள்ள முடியாதிருந்தாலும் அந்த விலங்கினங்களுக்கு அவை அர்த்தமுள்ள ஒலிக் குறியீடுகளாகவே இருக்கின்றன. மௌனம் கூட ஒருவகையான மொழிதான். ஏனெனில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இந்த மௌனம் உணர்த்துகின்ற பொருள் வெறுமையானதல்ல. அது அர்த்தம் பொதிந்ததே.

எனவே மௌனமாகி - சைகையாகி - ஓசையாகி - சொற்களாகி - வார்த்தைகளாகி வடிவம் பெற்றதே மொழியாகும். இந்த மொழியே ஒரு இனத்தின் அடையாளமாகி நின்று அதன் பண்பாட்டையும் கட்டிக்காக்கின்றது. மொழியை இழந்த ஒரு மக்கட் கூட்டம் உலகில் தனது தனித்துவத்தை இருப்பை அடையாளப்படுத்தவே முடியாமல் போய்விடும். இதனாலேயே பல்வேறு மதங்களின் வழிபிரிந்து நின்றாலும் நாம் தமிழர்கள் என்ற ஒரே குரலில் இவர்கள் அனைவரும் தமது மொழியை போற்றியும் பேணியும் வருகின்றனர்.

மொழி கருத்து தொடர்பு சாதனமாக விளங்கினாலும் இன்று அது ஒவ்வொரு இனத்தினதும் பண்பாட்டுடன் கலந்து அந்தந்த இனத்தின் ஊனாகி உயிராகி உட்கலந்து நிற்கின்றது. பாரதியார்

**"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்**
**இனிதாவதெங்கும் காணோம்."**

என்று தமிழின் பெருமையை எமக்கு எடுத்துக்கூறினார். இன்று "யாம்" அறிந்த மொழிகளே பல. பாரதி வடமொழியை, ஆங்கிலத்தை, பிற இந்திய மொழிகளை அன்று கருத்திற் கொண்டாலும் இன்று எம்மவர்கள் உலகின் திசைகள் பலவற்றிலும் பரந்து வாழ்கின்றனர். இதனை இன்று "யாமறிந்த மொழிகள்" எனும்போது உலக மொழிகள் பலவற்றையுமே குறிப்பிடவேண்டிய நிலை உருவாகியுள்ளது. இத்தகைய நிலையிலும் தமிழ் இனிமையானது தான் என்பதை நிருபிப்பது சாத்தியமில்லாததாகி விடலாம். ஆனால் உண்மை அதுவாக இருக்காது. பாரதிக்கு மட்டுமல்ல எல்லோருக்குமே இனிமையானது தனது தாய் மொழிதான், எத்தனை மொழிகளை பேசினாலும் - தாய் மொழியில் இருக்கின்ற ஆற்றல் ஏனைய மொழிகளில் ஏற்படுவது சாதாரணமானதல்ல.

தாய் மொழி அறிவு வெறுமே வாசிப்பறிவால்; பேச்சு பழக்கத்தால் ஏற்படுவதல்ல. இது எமது பண்பாட்டினூடாக எம்மை வந்தடைகின்றது. இதனால் நாம்

சமூகமயமாக்கப்படும்போது எமது மொழியிலும் மிகுந்த ஆற்றல் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது. படிப்படியான வாசிப்பு மேன்மேலும் எமது மொழி ஆற்றலை வளப்படுத்துகின்றது. இதனால்

**"சொல்லுக சொல்லைப் பிறிது ஓர் சொல் அச் சொல்லை**
**வெல்லும் சொல் இன்மை அறிந்து"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க நாம் எமது மொழியில் எமது வார்த்தைக்கு எதிர் வார்த்தை கிடைக்காத அளவிற்கு ஆற்றலைப் பெறுகின்றோம்.

இந்த மொழி ஆற்றல் எமக்கு பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கைகொடுத்து உதவுகின்றது. மாணவ பருவத்திற் பரீட்சைக்கு விடை எழுதவும், நேர்முக தேர்வில் தயங்காமல் வினாவுக்கு விடை கூறவும், உணர்ச்சியின் உந்துதலால் வார்த்தைகளை வடித்து இலக்கியம் படைக்கவும், ஆற்றல் மிக்க பேச்சாளனாக மேடையிற் திகழவும் இந்த மொழியாற்றல் எமக்குத் துணை நிற்கின்றது. எனவே மொழியாற்றலை வளர்த்துக் கொள்வது சமூகத்தில் உயர்வானு நிலையினை அடைவதற்கு வழிவகுக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இதனாற் பாடசாலைக் காலம் முதற்கொண்டே ஒவ்வொரு மாணவர்களும் தத்தமது மொழித்திறனை வளர்த்து மொழியாற்றலைப் பெருக்குவதாற் சமூகத்தில் உயர்ந்த நிலையை நோக்கி உன்னதமாக நடைபோடலாம் என்பதில் ஐயம் இல்லை.

"Mind is monkey mind. Mad monkey. Body is like a water Bubble."

மனமும், நினைப்பும் குரங்கைப் போன்றது. உடல் வாழ்க்கை நீர்க் குமிழி போன்றது.



# வரவேற்புப் பாடல்
# இயற்றியவர் வரலாறு



எமது பாடசாலைக்கு உதவும் பலருள் ஒருவரான **கலாபூசணம் நவாலியூர் நா.செல்லத்துரை (நவாலியூரான்)**

இவரது எழுத்துருவாக்கத்தில் நூற்றுக்கு மேற்பட்ட நாடகங்கள், அறுநூறுக்குமேற்பட்ட சிறுகதைகள், "முகைவெடித்த மொட்டு" எனும் நாவல், மெல்லிசைப்பாடல் முதலியன தோற்றம் பெற்றுள்ளன. நாடகங்களிலும் நடித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் பலமேடைகள் ஏறிய "சின்னவனா பெரியவனா" என்ற சிந்துநடைக்கூத்து 1997ஆம் ஆண்டு பெற்றோர்தின பரிசளிப்பு விழா நிகழ்வில் ஐந்தாம் வகுப்பு மாணவிகளால் இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

இன்று எமது பாடசாலைப் பரிசளிப்புவிழாவில் ஆண்டுதோறும் பாடப்பட்டு வரும் வரவேற்புப்பாடல் இவரது எழுத்துருவிலும் மெட்டமைப்பிலும் உருவானது.

## பாடல்

வருக வருக உங்கள் வரவு நல்வரவு
வளர்த்திடுமே இது உங்கள் எங்கள் உறவு
இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
அழைக்குது உங்களைத் தன் இதயக் கோவிலுள்
பிரதம அதிதியை சிறப்பு விருந்தினரை
எங்கள் ஆசிரியரை பெற்றோரை மற்றோரை
பழைய மாணவர்களை எங்கள் அபிவிருத்திச்
சங்க உறுப்பினர்களை எங்களது அதிபரை
வருக வருக என்று அழைக்கிறோம் உங்களை
வளம் நிறை ஆசியில் நனையுங்கள் எங்களை
நனைத்திடுங்கள் எம்மை உங்களின் ஆசியில்
நடத்திடுங்கள் எம்மை தெய்வ அன்புப் பாதையில் (வருக)

ஆகாயம் போல் நன்கு விரிகின்ற உங்களின்
அதிசய அன்பினில் நாம் வாழ வேண்டும்
தாராளமாய் நீங்கள் எங்களுக்குத் தருகின்ற
தங்கள் அறிவுரையினில் நாம் திகழ வேண்டும்
ஆதாரம் எங்களுக்கு இறைவனும் நீங்களும்
அகன்றிடும் எங்களது அல்லலும் ஏங்கலும்
சேதாரம் ஏதுமின்றி கல்வி நம்மில் பெருகும்
தேசாதி தேசமெங்கும் எங்கள் பெயர் உலவும்
வளரட்டும் வளரட்டும் அன்பினில் உலகம்
சிறக்கட்டும் சிறக்கட்டும் மானிடர் நெஞ்சம்
வருக வருக என்று அழைக்கிறோம் உங்களை
வளம் நிறை ஆசியில் நனையுங்கள் எங்களை
நனைத்திடுங்கள் எம்மை உங்களின் ஆசியில்
நடத்திடுங்கள் எம்மை தெய்வ அன்புப் பாதையில் (வருக)

அன்பே வாழ்வு என்ற நல்ல குறிக்கோளை
அகத்தினிற் கொண்டதே எங்கள் பாடசாலை
வன்பே இல்லாத வளம் நிறை வாழ்வினை
அன்பு தான் தந்திடும் நீக்கிடும் தாழ்வினை
அதன் வழி என்றுமே நாம் வாழும் போது
அழிவுகள் எங்களுக்கு இவ்வுலகில் ஏது
முரண் வழி செல்லாது வாழ்ந்திடலாமே
மகிழ்வுறும் அமைதியில் ஆழ்ந்திடலாமே
வளரட்டும் வளரட்டும் அன்பினில் உலகம்
சிறக்கட்டும் சிறக்கட்டும் மானிடர் நெஞ்சம். (வருக)

**கலாபூசணம் நவாலியூர் சீ. என். செல்லத்துரை**

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

ஈழ நாட்டின் மணி முடியாக திகழும் யாழ்ப்பாணத்தில் உள்ள நவாலியில் 1878ஆம் ஆண்டு கதிர்காமர் இலக்குமி அம்பாளுக்கு மகனாக பிறந்தார். இவர் தாய் மொழிக் கல்வியை அருணாசலப் புலவரிடமும், ஆங்கில கல்வியை மாரிமுத்து ஆசிரியரிடமும் கற்று தேர்ச்சி பெற்றார். இவரது இல்லத்தரசி சின்னம்மா ஆவார்.

இவருடைய தோற்றத்தைக் கண்டு எல்லோரும் "தங்கத் தாத்தா" என செல்லமாக அழைத்தனர். இவர் சிறுவர்களுக்காக ஆடிப்பிறப்பு, கத்தரிவெருளி முதலிய பாடல்களைப் பாடினார். நவாலி அட்டகிரி முருகன் மீது மிகுந்த இறையன்பு கொண்டு பதிகம் பாடினார். உயிரிலங் குமரன் என்ற நாடக நூலையும், இலங்கைவளம், தாலாவிசாலம், சிறுவர் செந்தமிழ் ஆகிய கவிதை நூலையும் தமிழ் அன்னைக்கு காணிக்கையாக்கினார். இவர் 1953ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார்

**யோ.தனுசியா,**
தரம் 3 ஏ

## எங்கள் வீட்டுத்தோட்டம்.

எங்கள் வீடு பெரியது வீட்டின் பின்புறத்தில் கிணறு சிறிய தோட்டம் ஆகியன அமைந்துள்ளன. எங்கள் தோட்டத்தில் அப்பா, அம்மா ஆகியோருடன் நானும் இணைந்து வேலைகளை செய்வேன். அப்பா நிலத்தை மண்வெட்டியால் கொத்தி பண்படுத்தி செடிகளை நாட்டுவார். எங்கள் வீட்டுத் தோட்டத்தில் கத்தரி, வெண்டி, மிளகாய், மரவள்ளி முதலிய பயிர்கள் உள்ளன. அப்பாவுடன் நாமும் சேர்ந்து செடிகளுக்கு நீர் இறைப்போம். செடிகள் வளர்ந்து வரும் போது அவற்றிற்கு பசளை இட்டு பூச்சி கொல்லி மருந்துகள் தெளிக்கும் வேலைகளை அப்பா செய்வார். செடிகள் காய்த்து முற்றியதும் அம்மாவும் நானும் அவற்றைப் பிடிங்கிக் கொண்டு வருவோம். எமது உணவுத் தேவைகளுக்கு அதிகமாக காய்கறிகள் கிடைக்கின்ற போது அப்பா அவற்றை சந்தையில் விற்று வருவார். எமது வீட்டுத் தோட்டம் எமது அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் இலாபத்தையும் தருகிறது. பள்ளிப் படிப்பு முடிந்து வேலை கிடைக்கவில்லையே என்று இருப்பவர்கள் வருமானத்தைப் பெற வீட்டுத் தோட்டம் உதவுகின்றது. எனவே எம் வீட்டிற்கு ஒரு தோட்டம் வைத்திருந்தால் வீட்டிலும் பஞ்சமில்லை. நாட்டிலும் வேலை இல்லாப் பிரச்சனை இல்லை. நாடு வளம்பெறும்.

**இ. கௌதமி**
பழைய மாணவி

## வேண்டும் முயற்சி

சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வயைந்து வயைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே.

தேனீ கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமையாய்
சேர்ந்து வீட்டைக் கட்டுமே
பெரிய வீட்டைக் கட்டுமே

எறும்புப் புற்றைப் பாருங்கள்
என்னைப் போன்றே எறும்புகள்
அருமையான முயற்சியால்
அழகுப் புற்றை செய்தன

குருவிக் கூட்டைப்பாருங்கள்
குடவை போன்று பின்னியே
விரைவில் கட்டி முடிக்குமே
வேண்டும் முயற்சி என்றுமே..

**மா.கஜலக்சஷி**
தரம்- 5ம

## மரம் நாட்டுவோம்

நெட்டை குட்டை தென்னைமரம் நட்டுவைப்போமே
அது பட்டுத்தான் போகாமல் பாதுகாப்போமே
கிட்ட வரும் ஆடு மாட்டை விரட்டிடலாமே
அதை சுற்றியொரு முள்வேலி அமைத்திடலாமே

அதில் காய்த்து வரும் தேங்காயை பறித்திடலாமே
அதை விற்றுவரும் பணந்தன்னை எடுத்திடலாமே
அதனை பயனுள்ள காரியத்தில் செலுத்திடலாமே,
எளிமையான வாழ்க்கை தன்னை நடத்திடுவோமே.

**ம.சாகித்தியா**, தரம் 5 சி.

## இனிய தமிழ் மொழி

எம் இதயம் கவர்ந்த மொழி இன்பத் தமிழ் மொழியாகும். இதுவே எமது தாய் மொழியாகும். தாய் மீது எவ்வளவு பற்று பாசம் கொண்டுள்ளோமோ அவ்வளவு பற்று தாய்மொழியிலும் காணப்படும் என்பது சிறிதும் சந்தேகமில்லை.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மொழி எனும் பெருமையுடையது. தமிழ் மொழி பேசும் மக்கள் தமிழர் என அழைக்கப்படுகின்றனர். அமிழ்தினும் இனிய இம் மொழியிலுள்ள நூல்கள் எண்ணக்கணக்கற்றவை.

இத் தமிழ் மொழி வானமளந்த வண் மொழி எனப்பட்டது. நாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதான பிற மொழிகள் இல்லை என்றெல்லாம் முன்னவர்களால் பாடப்பட்டும் கூறப்பட்டும் உள்ளன.

சொல்லில் உயர்வானதும் இனிதானதும் புதிதானதும் தமிழ்ச் சொல்லே என்கிறார் பாரதியார். அறியாப் பருவத்திலும் நம் உயிருக்கு உறுதுணையாக நின்று அறிவுச் செல்வத்தை வளர்க்க உதவி வரும் தமிழ் மொழி பழமையும் சிறப்பும் வாய்ந்ததாகும்.

இத்தகைய பெருமைவாய்ந்த தங்கத்தமிழால் நாம் உயர்வடைவதோடு தமிழ் மொழியையும் உயர்வடையச் செய்வோம்.

**பிறிம்ஷி அன்ரன் யோக்குமார்.**
தரம் 5 டீ.

## மல்லிகை

வண்ண வண்ண மல்லிகை - நல்ல
வாசமுள்ள மல்லிகை

வெள்ளை நிற மல்லிகை நெஞ்சம்
கொள்ளை கொள்ளும் மல்லிகை

இரவில் மலரும் மல்லிகை- பல
வகையாய் உள்ள மல்லிகை

வாசமுள்ள மல்லிகை -ஈர்க்கு
ஊசி போன்ற மல்லிகை

அடுக்கு இதழ் மல்லிகை-அழகாய்
பூத்துச் சொரியும் மல்லிகை

மாலையாகும் மல்லிகை-இறைவனுக்கு
சமர்ப்பணமாகும் மல்லிகை.

**ஜெ.ஜானகி**
தரம் 5 "யு"

# பிள்ளையின் கற்றலில் பெற்றோர் ஆசிரியரின் தொடர்பின் முக்கியத்துவம்.

**திருமதி யா.சச்சிதானந்தன்**
பெரியபுலம் மகாவித்தியாலயம்.

ஒரு பாடசாலையின் தனித்துவமான கல்வி விருத்தி அப் பாடசாலை மட்டத்தில் செயலாற்றும் அதிபர் பகுதித் தலைவர், ஆசிரியர், பெற்றோர், மாணவர்கள் சகலரும் தத்தமது இயலுமைக்கேற்ப ஊக்கத்துடன் சுதந்திரமாகச் செயற்படுதலிலேயே தங்கியுள்ளது எனலாம்.

பிள்ளை ஒரு வெற்றுக் குடமல்ல. பிள்ளை வீட்டிலேயே கற்கத் தொடங்குகிறது. அதனால் அதற்கு இயைபான ஒரு சூழல் வீட்டில் அமைய வேண்டும். பாடசாலை ஒன்று இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன பிள்ளைகளிடையே பல்வேறு கற்றல் நிகழ்கின்றது. சமுதாயம் விரும்பும் நடத்தைகளை விருத்தி செய்து கொள்ள கற்றலுக்கான ஒரு சூழலை உருவாக்குவதே ஆசிரியர் பணியாகும். இவ்வாறான பணியினை ஆசிரியர் திறம்பட செயலாற்ற பெற்றோர், ஆசிரியர் தொடர்பு முக்கியம் பெறுகின்றது.

வீட்டிலும் பாடசாலையிலும் பிள்ளையானது தனது வேலையைச் செய்து முடித்தவுடன் வீட்டிலுள்ள வயது முதிர்ந்தோருக்கு காட்டுவது கணிப்பினைப் பெறுவதற்கேயாகும். வயது முதிர்ந்தவர்கள் அதனைப் பாராட்டி கற்றலுக்கான சூழலை வீட்டிலே ஏற்படுத்திக் கொடுக்க பெற்றோர், ஆசிரியர் தொடர்பு அவசியமாகின்றது.

பிள்ளைகளிடம் வழமைக்கு மாறான செயற்பாடு காணப்பட்டால் அவற்றிற்கு காரணமாய் அமைகின்ற பின்னணி வீட்டுச் சூழலே. பிள்ளையிடம் விரும்பத்தக்க நடத்தை மாற்றம் ஏற்பட பிள்ளையின் கற்றல் தொடர்ச்சியான ஒன்றாகும். இதற்கு பிள்ளையின் வரவு மிக மிக அவசியம். ஒரு பிள்ளை பாடசாலைக்கு அடிக்கடி வராமல் இருப்பதற்கான காரணத்தை அறிந்துகொள்ள பெற்றோர், ஆசிரியர் தொடர்பு சிறந்ததொன்றாகும்.

தரம் 1இல் அனுமதிக்கப்பட்ட பிள்ளை தாயிடம் இருந்து எதிர்பார்க்கின்ற பாதுகாப்பை பெறும் இடமாக தனது வகுப்பறையை கருதிக் கொள்வதில்லை. தாயின் பாதுகாப்பு நீண்ட நேரம் இல்லாமல் வகுப்பிலே தங்கியிருக்கின்றான். இத்தகைய பிள்ளைகள் அடிக்கடி அழுதல், கோபப்படுதல், வெட்கப்படுதல், கூச்சம், பயம், அமைதியின்மை, மௌனம், திடுக்கிடல், பொறாமை, பாடசாலைக்கு வர விருப்பமின்மை, பிள்ளைகளிடத்தில் நட்பின்மை போன்ற மனவெழுச்சி பிரச்சனைகளுக்கு தீர்வு காண பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு அவசியம்.

போஷாக்கு இன்மையால் அல்லலுறும் பிள்ளைகளை இனங்கண்டு குறைந்த செலவில் அதற்கு நிவாரணமளிக்கவும், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய பல்வேறு தகவல்களை பிள்ளைகள் அறிந்து தம்மை பாதுகாப்பதற்கான வழிமுறைகளை கையாளவும், பெற்றோர்கள் இதுபற்றி விழிப்பாக இருக்கவும், போதை பொருட்கள் பாவனையால் ஏற்படும் அபாயங்கள் பற்றி அறியவும் அவற்றை தவிர்ப்பதற்கான வழிகாட்டல்களை பின்பற்றவும், வறுமை, வளர்ந்தோரின் நெறிபிறழ்வு, பரவிவரும் எயிட்ஸ் போன்ற ஆட்கொல்லி நோய்கள் என்பனவற்றால் பிள்ளைகள் பாதிக்கப்படுவதை தவிர்க்கவும், சிறுவர்கள் தம்மை தாமே

பாதுகாக்கவும், சிறுவர்களை பாதுகாப்பதில் பெற்றோர் கொள்ளவேண்டிய கரிசனை பற்றியும், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் பெற்றோர்களுக்கு வழிகாட்ட பெற்றோர், ஆசிரியர் சந்திப்பு அவசியம்.

உடல், உள, ஆரோக்கியம், நன் மனப்பாங்கு, சமூக இயைபு, தலைமைத்துவப்பண்பு, முயற்சி, ஆராய்வூக்கம், எதையும் தாங்கும் இயல்பு, சமயோசிதபுத்தி போன்ற ஆளுமைப் பண்புகளை நாம் பிள்ளைகளிடம் விருத்தி செய்யவும், பிள்ளைகளின் நடத்தைகளை அவதானித்து உளக் குறைபாடுகளை இனங்கண்டு உரிய வழிகாட்டல்கள் மூலம் அவற்றை நிவர்த்தி செய்து சுமூகமான கற்றலுக்கு இட்டுச் செல்லல் ஆசிரியரின் கடமையாகும். இக் கடமையை சரிவர செய்ய பெற்றோர், ஆசிரியர் தொடர்பு அவசியம். மாணவர்களின் உடற் குறைபாடுகள் இனங்காணப்பட்டு தடுப்பு மருந்து மூலம் தொற்றுநோய் பாதுகாப்பு வழங்கல், தேவையான மாணவர்களுக்கு சிகிச்சைகளை வழங்கல், தொடர் நடவடிக்கைக்கு வழிகாட்டல், பெற்றோர்களுக்கு பிள்ளைகளின் சுக வாழ்வு பற்றிய அறிவூட்டல், பதிவுகள் பேணல் மூலம் பிள்ளையின் சுகாதார வரலாறு பேணப்படல். மொத்தத்தில் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க பெற்றோர் தொடர்பு அவசியம்.

பிள்ளைகள் பாடசாலைக்கு பலவேறுபட்ட சூழலிலிருந்து வருகின்றார்கள். அவர்கள் வெவ்வேறு இயல்புகளையும், ஆற்றல்களையும் கொண்டுள்ளார்கள். ஒவ்வொருவரும் தனித்தன்மை வாய்ந்தவர்கள். அவர்களை வழிநடத்திச்செல்லும் பொறுப்பு ஆசிரியர்களுக்குரியது. எனவே பிள்ளைகள் ஒவ்வொருவரையும் பற்றி தனித்தனியாக இனங்காணுதலும், வழிகாட்டுதலும் அவசியமாகும். ஒவ்வொரு பிள்ளையினதும் அறிவு விருத்தியை மட்டுமல்ல உள விருத்தியையும், உடல் விருத்தி, மனப்பாங்கு விருத்தி, ஆளுமைவிருத்தி, சமூகவிருத்தி போன்றனவற்றினையும் மேம்படுத்துதல் ஆசிரியர்களின் பிரதான பொறுப்பாகும். எனவே பிளளைகளின் இயல்பான ஆற்றல்களை அறிந்து அவற்றை ஆக்கபூர்வமாக வெளிக்கொணரத்தக்கவாறு கற்றல் செயற்பாடுகளை நெறிப்படுத்தவேண்டியதும் அவர்களது பல்வேறு நடத்தைக் கோலங்களை சீர்ப்படச்செய்ய வேண்டியதும் ஆசிரியர்களின் பணியேயாகும். இக் கருமங்களுக்காக ஒவ்வொரு பிள்ளைகளினதும் இயல்புகளையும் தனி ஆற்றல்களையும், அவர்களது குடும்ப பின்னணிகளையும் அறிந்திருத்தல் அவசியமாகும். ஒவ்வொரு பிள்ளைகளினதும் வதிவிடச் சூழல் குடும்ப பின்னணி போன்ற தகவல்களை திரட்டவும், பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு அவற்றின் சாதக, பாதக நிலை பற்றி ஆராயவும் வீடு சார்ந்த கல்வி தொடர்பாக பெற்றோருக்கு ஆலோசனை வழங்கவும் ஆசிரியர், பெற்றோர் தொடர்பு அவசியமாகும்.

ஆசிரியர்கள் தமது பணியை சிறப்பாக செய்வதற்கு வகுப்பறையின் கவின்நிலை பொருத்தமானதாக இருக்க வேண்டும். இதற்கு ஆசிரியர் மட்டுமல்லாது மாணவர்களின் கற்றலோடு தொடர்புடைய சகல தரப்பினரும் உரிய புரிந்துணர்வுடன் செயற்படுவதன் மூலமே கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும் பயனை அடைய முடியும்.

கற்றல், கற்பித்தல் செயல் முறையில் முதன்னிலையில் நுகர்வோர்களாக கொள்ளப்படுபவர் பெற்றோராகும். பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர் பாடசாலையில் இருந்து பெருந்தொகையான விடயங்கள் தமது பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். அத்தோடு தமது பிள்ளைக்கு கிடைக்க வேண்டியவை சட்டபூர்வமானவை என்பதோடு பாடசாலையும் ஆசிரியர்களும் தமது பிள்ளையின் கற்றலுக்கு வகை கூற வேண்டும் என எதிர்பார்க்கும் பெற்றோர் ஆசிரியருடன் தொடர்பு கொள்ளல் மிக மிக அவசியமாகும்.

மாணவர் கற்க மறுக்கும் போது ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்குமிடையே பல முரண்பாடு ஏற்படலாம். மாணவர்களின் கற்றல் முன்னேற்றம் தொடர்பாக ஆசிரியர்

போதிய கரிசனை எடுக்கின்றார்கள் என்பதை பெற்றோர் அறிய வேண்டும். இங்கு இதனைச் செய்வதற்குரிய முகவராக செயற்படுபவர் மாணவராவர். இச் செயல் முறையால் ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்குமிடையில் நல்லெண்ணம் தோன்ற இடமுண்டு.

"எல்லோருக்கும் கல்வி" என்பதில் தாக்கத்தை விளைவிக்கும் காரணிகளில் ஒன்றாக விளங்குவது இடைவிலகலாகும். இடை விலகல் என்பது குறிப்பாக கட்டாய கல்வியை பெறவேண்டிய வயதெல்லையில் பாடசாலை அனுமதியைப் பெற்ற பின்னர் பாடசாலைக்கு கல்வியை தொடராது இருப்பதை குறிப்பதாகும். கட்டாயக் கல்வியை பெறவேண்டியது 5-14 வயதெல்லைக் காலத்திலாகும். தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கைகளின்படி இலங்கையில் கட்டாயக் கல்வியை பெறவேண்டிய வயதில் ஏறக்குறைய 34% பாடசாலையை விட்டு இடைவிலகுகின்றனர். இந்த இடைவிலகலுக்கு பெற்றோரின் கல்வி தொடர்பான விளக்கமின்மையே முக்கிய காரணமாகக் கொள்ளப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய பெற்றோர் ஆசிரியர் தொடர்பு அவசியமாகும்.

பொதுவாக பிள்ளைகளின் மூளை வளர்ச்சியின் பெரும்பகுதி ஐந்து வயதாகும்போது பூர்த்தியடைந்து விடுவதாகக் கொள்ளப்படுகின்றது எனவே ஆரம்ப காலத்தில் பிள்ளைகளின் கல்வியில் குடும்பம் கவனம் செலுத்துதல் முக்கியமாகும். கல்வி வழங்கலில் பல்வகைப்பட்ட ஆளணியும், நிறுவனங்களும் பங்கேற்கின்றன. இதனால் கல்வியை வழங்கும் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் மூலமே உரிய பயனைக் கல்வியின் மூலம் பெற்றுக்கொள்ள பெற்றோர் ஆசிரியர்கள் கூட்டாகச் செயற்படுவதே சாலச்சிறந்ததாகும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே — அவன்
நல்லவராவதும் கெட்டவராவதும்
பெற்றோர் கவனிப்பிலே.

துணை நூல்கள் :


1. எல்லோருக்கும் கல்வி: உலகநாதர் நவரத்தினம் பதிப்பு 2001 யூன்.
2. வகுப்பறையில் ஆசிரியவாண்மை: உலகநாதர் நவரத்தினம், மாரிமுத்து கணபதிப்பிள்ளை பதிப்பு 2002 சித்திரை
3. மகிழ்ச்சிகரமான கற்றல்: பயிற்றுநர் கைந்நூல் வெளியீடு ஆசிரியர் சேவைக்காலச் செயற்திட்டம் (T.I.P/ G.T.Z) கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு, வ.கி.மா., திருகோணமலை.
4. பாடசாலைமட்டக் கல்வி அபிவிருத்தி பயிற்றுநர் கைந்நூல்: தயாரிப்பு- ஆசிரியர் சேவைக்காலச் செயற்திட்டம்(T.I.P) மத்திய மாகாண கல்வித் திணைக்களம்.
5. பாடசாலையில் சுகாதாரமும் போசாக்கும்: பயிற்றுநர் கைந்நூல் வெளியீடு- ஆசிரியர் சேவைக்காலச் செயற்திட்டம்(T.I.P/G.T.Z) கல்வி பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு, வ.கி.மா., திருகோணமலை.




# இந்து மன்றச்செயற்பாடுகள்.

காலத்திற்கு காலம் பொறுப்பாசிரியர்களைத் துணைக்கொண்டு இயங்கி வருகின்றது. 1986இல் இந்து மகளிர் கல்லூரியின் விநாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நிகழ்ந்தபோது அதிபர், ஆசிரியர், மாணவர்கள் பங்களிப்புச்செய்தனர். அன்று தொடக்கம் 1997வரை கல்லூரி இந்து மன்றத்துக்கு பங்களிப்பை நல்கி வந்தோம்.

1979ஆம் ஆண்டு தொடக்கம் 1982 வரை ஆலயத்தில் வெள்ளிக்கிழமைகளில் காலை ஆராதனையின் போது தரம்5 மாணவர்கள் கூட்டுப் பிரார்த்தனை செய்து வந்தனர்.

நவராத்திரியின்போது விஜயதசமி அன்று விசேட பூசை நடைபெற்று அதிபரால் ஏடுதொடக்கி வைக்கப்பட்டது.

1988ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை வெள்ளிக்கிழமை தோறும் மாணவர்களிடம் இருந்து தர்மக் காசு ஒரு ரூபா தீர்மானப்படி சேர்க்கப்பட்டு வருகிறது.

1979ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சைவ பரிபாலன சபையால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற உதவி வருகிறது.

1988இல் திருமதி விமலாதேவி சர்வேஸ்வரசர்மா அவர்களைப் பொறுப்பாசிரியராகவும், அதிபரை போஷகராகவும் கொண்டு "சிவநெறித் தொண்டர் கழகம்" என்ற அமைப்பு அமைக்கப்பட்டது. இதன் நோக்கங்களாக நன்மாணாக்கர்களை உருவாக்குதல், சைவ நெறியிலும், அதன் பாரம்பரியங்களிலும், பூரணநம்பிக்கையுடனும், தெளிவுடனும் ,உறுதியுடனும் செயலாற்றத்தக்க செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றது.

1979 தொடக்கம் - இன்று வரை பாடசாலைகளில் நடைபெறும் முக்கிய நிகழ்வு, விசேடதினம், கால்கோள் விழா தரம் 5 மாணவர் பரீட்சைக்கு போகும் முன் வழிபாடு ஆசிரியர் தினம் போன்ற நிகழ்வுகளின் போது கல்லூரி விநாயகர் ஆலயத்தில் வழிபாடு செய்து வருகிறது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் ஓதப்பட்டு வருவதுடன் காலை ஆராதனையின் போது வியாழக்கிழமை தோறும் சத்திய சாயி சேவா நிலையத்தில் இரந்து வரும் அன்பர்களினால் நற்சீவிய பண்புகள் தொடர்பான அறிவுரைகள், நல்லொழுக்கங்கள், விழுமியம் சார் கதைகள், போன்றவற்றை மாணவர் 5நிமிடம் செவிமடுக்க ஒழுங்கு செய்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. குரு பூசை தினங்கள், நவராத்திரி விழாபோன்ற சமய நிகழ்வுகள் சிறப்பாக நடை பெற்று வருகின்றன.

தற்பொழுது தினமும் நாட்களுக்குரிய பஞ்சபுராணம் ஓதப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

| யாழ்மாவட்ட பாடசாலை பண்ணிசைப்போட்டி | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | பெற்ற இடங்கள் | | | |
| ஆண்டு | பெயர் | பிரிவு | நிகழ்ச்சி | கொத்தணி | கோட்டம் | வலயம் | மாவட்டம் |
| 1983 | 25 மாணவிகள் | கீழ்ப்பிரிவு | தனிப்பாடல் | | | | 3 |
| | | கீழ்ப்பிரிவு | குழுப்பாடல் | | | | 1 |
| | | பாலர்பிரிவு | குழுப்பாடல் | | | | 2 |
| 1984 | வ.கௌசல | பாலர்பிரிவு | தனிப்பாடல் | | | | 1 |
| | | பாலர்பிரிவு | குழுப்பாடல் | | | | 1 |
| | ந.வாசுகி | ஆரம்பப்பிரிவு | தனிப்பாடல் | | | | 3 |
| | | ஆரம்பப்பிரிவு | குழுப்பாடல் | | | | 1 |
| 1985 | சூ.கவிதா | பாலர்பிரிவு | தனிப்பாடல் | | 1 | | |
| | 15மாணவிகள் | பாலர்பிரிவு | குழுப்பாடல் | | 1 | | |
| | க.சுவர்ணாங்கி | கீழ்ப்பிரிவு | தனிப்பாடல் | | 2 | | |
| 1986 | க.சியாமளாங்கி | ஆரம்பப்பிரிவு | தனிப்பாடல் | | 1 | | 1 |
| | க. சுவர்ணாங்கி | மத்திய பிரிவு | தனிப்பாடல் | | 2 | | |
| | 16 மாணவர்கள் | கீழ்ப்பிரிவு | குழுப்பாடல் | | 1 | | 2 |
| 1992 | | பாலர்பிரிவு | குழுப்பாடல் | | 1 | | 1 |
| | | ஆரம்பப்பிரிவு | குழுப்பாடல் | | 1 | | 1 |
| | | கீழ்ப்பிரிவு | குழுப்பாடல் | | 1 | | 2 |
| 1993 | | பாலர்பிரிவு | குழுப்பாடல் | 1 | 1 | 1 | |
| | | கீழ்ப்பிரிவு | குழுப்பாடல் | 1 | 1 | 1 | |
| | | ஆரம்பப்பிரிவு | குழுப்பாடல் | 1 | 1 | 1 | |

| ஆண்டு | பெயர் | நிகழ்ச்சி | தரம் | நிலை |
|---|---|---|---|---|
| | | கீரிமலை சிவநெறிக்கழக | | |
| 1983 | பா.இ.பாலசரஸ்வதி | கதாப்பிரசங்கம் | ஆ.பிரிவு | 3 |
| 1977 | சி. பிரணலாசரி | ஸ்ரீ கற்பக விநாயகர் | 5 | 2 |
| | | சைவ அறிவுப் போட்டி | | |
| | ஸ்ரீ.சுகிர்தா | | 5 | 3 |
| | ப.தனோயா | | 1 | 3 |
| | ச.மகிழினி | | 2 | 2 |
| | கு.கோபிகா | | 2 | 3 |
| 2001 | செ.சங்கீதனா | நீதிநூல் மனனப்போட்டி | 4 | தங்கப்பதக்கம் |
| | ஜெ.ஜானகி | | 1 | சிறப்புப்பரிசு |
| | த.தர்சிகா | | | சிறப்புப்பரிசு |
| | பா.கிருசாந்தி | | | சிறப்புப்பரிசு |
| | சி.துளசிகா | | | சிறப்புப்பரிசு |
| | யோ.சங்கீதா | | | சிறப்புப்பரிசு |
| | தி.தமிழினி | | | சிறப்புப்பரிசு |
| 1997 | த.துளசி | சைவநெறித்தேர்வு | 3 | தங்கப்பதக்கம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1998 | கு.கோபிகா | சைவபரிபாலனசபை | 2 | 3 |
| 2001 | செ.சங்கீதனா | | 4 | தங்கப்பதக்கம் |
| 2002 | வ.சந்தனா | | 5 | தங்கப்பதக்கம் |
| 2003 | ப.பிரசாந்தி | | 4 | வெண்.பதக்கம் |
| | சி.சித்திரா | | 5 | 3 |
| 2004 | ர.சிந்துஜா | ஸ்ரீசித்தி விநாயக ஆலயம். | | |
| | | கந்தர்மடம் | 4 | 1 |
| | சு.கனிமொழி | சைவ எழுத்தறிவுப்போட்டி | | 2 |
| | ஸ்ரீ.சோபிகாசினி | | | 3 |
| | சோ.லக்ஷிதா | | | 3 |

| சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் பண்ணிசைப்போட்டி | | |
|---|---|---|
| **ஆண்டு** | **பெயர்** | **நிலை** |
| 1997 | ஸ்ரீ.தாரணி | வெள்ளிப்பதக்கம் |
| | த.தர்சிகா | ஆறுதல் பரிசு |
| 2001 | த.சிவாஜினி | வெண்கலப்பதக்கம் |
| 2002 | கு.மயூரி | தங்கப்பதக்கம் |
| 2003 | சி.சித்திராங்கி | ஆறுதல்பரிசு |
| 2004 | ஜெ.ஜானகி | தங்கப்பதக்கம் |

| கல்வி வலயம் சைவநெறிப்போட்டி | | | | |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பெயர்** | **நிகழ்ச்சி** | **கோட்டம்** | **வலயம்** |
| 2003 | ச.சோபிதா | எழுத்து | 2 | |
| | பு.சுபிதா | பேச்சு | 1 | 1 |
| | கு.மயூரதி | பண்ணிசை | 1 | 3 |
| | ஜெ.ஜானகி | பண்ணிசை | 3 | |
| 2004 | கு.மயூரதி | பண்ணிசை | 1 | 1 |
| | ச.ஜெனனி | பேச்சு | 2 | |
| | யோ.தனுசியா | சகலகலா வல்லி மாலை | 3 | |
| | சு.சுபித்திரா | பண்ணிசை | 3 | |

# திருமுறைப் பெருமை
# ஆக்கியோன்



"கலாபூசணம்" - தேவாரஇசைமணி"
**இராசையா திருஞான சம்பந்தன்.**

**தி**ரு. திருமதி கே.எஸ் இராசையா தம்பதியினருக்கு புதல்வனாக தாவடியில் 1946.07.04இல் பிறந்த இவர் தந்தையாரிடம் கர்நாடக இசையும், திருமுறைப் பண்இசையும் பயின்றார். தொடர்ந்து இலங்கையிலும், தமிழகத்திலும் உள்ள தேவாரப் பண்ணிசை வகுப்புக்களில் பயின்று பல பட்டங்களையும், சான்றுகளையும் பெற்றார்.

தமிழ்நாட்டுப் பண்ணிசைக் காசித் திருமடம், நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதினம். இந்து சமயக் கலாச்சார அமைச்சு, சர்வதேச இந்துமதக் குருபீடம் முதலான பல்வேறு அமைப்புக்கள் வழங்கிய பாராட்டும், தேவார இசைமணி, பண்ணிசைப் புலவர், திருமுறை வித்தகர், பண்ணிசைக் கலாபமணி போன்றன அவர் பெற்ற பட்டங்களுள் சிலவாகும்.
பாடசாலைகள் பலவற்றில் தமிழிசைப்பணி புரிந்த பண்பாளர். தமிழகம், மலேசியா ஆகிய நாடுகளுக்குச் சென்றும் தங்கியும் பல இசைஅரங்குகளில் திருமுறை முழக்கம் செய்து புகழ் பெற்றது மட்டுமன்றி இன்றும் பல இடங்களில் தமிழ்ப் பண்ணிசை வகுப்புக்கள் நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் பல ஒலிப்பேளைகளை வெளியிட்டு செந்தமிழ் திருமுறையைப் பரப்பிச் சிறப்பித்து வருகிறார். இவ்வாறான சிறப்பம்சங்களுடைய பண்ணிசை வேந்தர், அருளிசை அரசு, கலைஞான கேசரி ஆகிய தாவடியூர் சிவத்திரு கே. எஸ். ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்தி அவர்களின் சீரிய திருமுறைப் பணியினைப் பாராட்டி 2004 பங்குனியில் அருள் திரு நமசிவாய மூர்த்திகள் ஆசிக் கவசமாகப் பட்டாடை போர்த்தியும், பவித்திரமணிவித்தும் பொற்கிழி வழங்கியும் வாழ்த்தி அருளி உள்ளார்கள்.

"சைவத்தின் கண்களாக திகழுகின்ற, சைவத் திருமுறை பண்ணிசையின் பெருமையை, அதன் தெய்வீகத் தன்மையை, ஆரம்ப பாடசாலைக் கல்வியிலிருந்து நன்கறிந்து உணர்ந்து, ஓதுவதற்கு பெரிதும் உதவும் முகமாக, இக் கட்டுரை அமைந்திருக்கிறது."

# திருமுறைப் பெருமை

திரு என்ற சொல்லுக்கு செம்மை, மங்களம், தெய்வீகமானது, தெய்வத் தன்மை பொருந்தியது, சிறப்புக்குரியது என பல பொருள்கள் உள. முறை என்றால் ஒழுங்கு, நேர்த்தி என்பது பொருள். திருமுறை என்ற தொடர் தெய்வத் தன்மை பொருந்திய ஒழுங்குபடுத்தப்பட்டு நூல் வரிசை என்ற பொருளில் குறிப்பிடப்படுகின்றது.

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்" என்கிறது திருமந்திரம். இதனை நிகர்த்த பிறிதொரு கருத்து குறிப்பிடத்தக்கது. பதினோராம் திருமுறையில் திருவாலவாயுடையார் திருமுகப்பாசுரம் இறைவனாலேயே திருவாய் மலர்ந்தருளப் பெற்றது. சுந்தரர், மணிவாசகர், சேக்கிழார் ஆகியோரிடம் தாமே கேட்டும் அடியெடுத்துக் கொடுத்தும் திருப்பாடல்கள் அருளப் பெற்றமை ஈண்டு கவனிக்கத்தக்கது. "அருச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுக" எனவும் "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" என்றும் அமையும் தொடர்கள் நோக்கத் தக்கன. "பித்தா" எனவும், "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" எனவும் "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" எனவும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்தமை அறியற்கிடக்கின்றது. 12 இராசிகள் போல் 12 திருமுறைகள் 27 நட்சத்திரங்கள் போல் 27 அருளாளர்கள் போற்றப்படவேண்டும்.

"தேவாரம் வேதசாரம்" என்று காசி வாசி . செந்தில் நாத ஐயர் விளக்கியிருப்பது காணலாம். ஓராம் திருமுறை ஓராவது பாடல் ஓராவது அடி "தோடுடைய" என ஆரம்பிக்கின்றது. இதில் த்+ஓ = தமிழ் +ஓங்காரம் - சிவம் + சக்தி என்ற தத்துவம் விளக்கப்படுகின்றது. மார்கழி திருவாதிரையில் சிதம்பரத்தில் ஓடாது நின்ற தேர் ஓடவும், இறைவனை இன்பமயமான விம்பமாக காட்டும் கொடித் தம்பத்தில் திருக் கொடி ஏறவும் செய்த பெருமை தமிழ் வேதத்திற்கு உண்டு.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழும் தரிசனம் தரும். தெய்வத் தமிழ் படைப்புக்களே திரு முறை. திரு முறை - திருவாசக இசை கேட்ட பறவைகள், விலங்குகள் கூட முத்தி பெறும் என்பதுவும் திருமுறைப் பிறவி நோயின் அருமருந்தென்பதும் மனங்கொள்ளத்தக்கது.

**திருமுறை ஓதுவார்**

திருமுறை ஓதுகின்றவர் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி கந்தர்மடம் சிவாமிநாத பண்டிதர் திருமுறைப் பெருமை என்ற நூலில் நிறையவே குறிப்பிட்டுள்ளார். அதன்படி நோக்கின் ஒரு சிலரை தவிர ஏனையோர் சற்றும் பொருத்தமில்லாதவர் "மூலபண்டாரம் வழங்குகிறான் வந்து முந்து மினே" என்பது திருவாசக அடி. பண்டம் என்றால் பொருள். பண்டாரம் என்றால் கருவூலம். மூல பண்டாரம் என்பது கருவூலத்தின் உரு மூலமாகிய சிவன். பண்டாரம் எனும்போது சிவனைப் பாடுகின்ற, பணி செய்கின்ற அருளாளரை குறிக்கின்றது. ஓதுவார் என்று சொல்வதற்கு பலர் நாணம் கொள்கிறார்கள். பதவியை பெருமையாகக் கருதி அத்தகைய சொற்களைப் புறக்கணிப்பவர்களுக்கு இது சமர்ப்பணம்.

சைவ அபிமானியாக, விபூதி உருத்திராக்க தாரராய், சிவ தீட்சை பெற்றவராய், பதி.பசு.பாச இலக்கணம் கற்றவராக, சைவ போசனத்தவராக, சிவனை மறவா சிந்தனையாளராக இருப்பவரே திருமுறை ஓத தகுதியுள்ளவர். ஓதுவார்கள் அபரக்கிரியையில் பாடமுடியாது. பன்முறை நுணுக்கம் அறிந்து தமிழிசையை பக்குவமாக பாடக்கூடிய தகுதி அவசியமானது. ஓதுவார்களுக்கு கோலம், சீலம் ஆகியன இன்றியமையாதன.

பல இடங்களில் காலணிகளோடு சிறியோரும், பெரியோரும் திருமுறை பாட முற்படுகின்றார்கள். கோயில்களில் மேலாடைகளுடன் பணிபுரிவது கண்டிக்கப்பட வேண்டியது.

சனக்கூட்டத்தின் முன் புகழுக்காகவும், தம் பெயரை வெளிப்படுத்தவும், சுயநலத்துடனும், பலர் திருமுறை பாட முற்படுகின்றனர். தெரு வீதிகளில் நாஸ்தீகம் பேசியும் திருக் கோயில் வீதியில் ஆஸ்தீகம் பேசியும் வருகின்ற போலி வேடம் நீக்கப்படவேண்டும். பக்தி இன்றி பண்ணிசைப்பது விரும்பத்தகாது.

**சமகாலத்தில் திருமுறை**

தெய்வத் தமிழ் சூரியன், சந்திரன் வாழும் வரை வாழும் "நாங்கள் இல்லாவிட்டால் இன்று திருமுறை எவ்வாறிருக்கும். நாங்களே திருமுறையை வளர்த்தோம்". என்று பிதற்றுகின்ற வேடதாரிகளின் வார்த்தைகள் வேடிக்கைக்குரியன. திருமுறையை யாரும் தூக்கிப் பிடிக்க வேண்டியதில்லை. அதனை போற்றி பரவுவதே எம் கடமை. கோயில்களில் 10 அல்லது 15 நாட்கள் வேதனத்துடன் பணிசெய்துவிட்டு வாய்விட்டுக் கேட்டு பட்டம் வாங்கி சூடி மகிழுகின்ற பெரியவர்கள் திருமுறைக்கு என்ன மதிப்பளிக்கின்றார்கள்? தமது ஓய்வு நேர இசை போலவே இதை கருதுகிறார்கள். திருமுறை பாடும் வேளையில் கதைப்பதுவும், தேனீர் அருந்துவதும், அடுத்த கோயிலுக்கு செல்வது பற்றி பேசுவதும் பெரியவர்கள் திருமுறைக்கு தரும் பெருமை.

திருக்கோயிற் கிரிகையை நெறியில் தோத்திரத்தின் பின்பே வாழ்த்துக் கூற வேண்டும். ஆசிரியர் வாதத்தில் திருமுறைக்கும் வாழ்த்து உண்டு. திருத்த காலங்களில் பல இடங்களில் உரியவர்கள் இதை கவனிக்கத் தவறுகிறார்கள். திருமுறை பாடும் முன்பு ஆசீர்வாதத்தை முடித்துக்கொண்டு உரியவர்கள் ஓய்வு எடுக்கிறார்கள். பாட்டும் பொருளும் பொருளால் பொருந்தும் பயனே நிறைவானது. சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லிய பொழுதே முழுப்பயனும் கிடைக்கும். திருமுறை பாடும் வேளையில் அடியார்கள் பெரும் பாடுபடுகின்றார்கள். தீபாராதனையின் போது அடக்கி வைத்திருந்து கதை முடிச்சுக்களை அவிழ்த்து விடுகிறார்கள். பல இடங்களில் இந்த நேரத்தில் அருச்சனை செய்யப்படுவதும், விபூதி முதலான பிரசாதம் வழங்கப்படுவதும் இன்று தாராளமாக காணக்கூடிய நிகழ்வுகள். 12 திருமுறை பாடவேண்டியவிடத்து பஞ்ச புராணமும் பஞ்ச புராணம் பாடவேண்டிய இடத்து தேவாரமும், புராணமும் அமைவதற்கு முயலுகின்ற இந்த இந்துமத உபசாரர்கள் உணரவேண்டும்.

திருமுறை பாடுவதற்கு பல இடங்களில் பலர் போட்டியுடன் முன்வருகிறார்கள். போட்டியிடுபவர்களில் 99 வீதத்தினர் முழுப் பிழையாகவே பாடுகின்றார்கள். அவர்களின் பிழைகள் சொல்லில் அடங்கா. "திருவாக்கும் செய் கருமம்" "ஐந்து கரத்தனை" ஆகியவற்றை பாடி ஆரம்பிக்கிறார்கள். பெரிய புராணம் பாடவேண்டிய வேளையில் "மூவிரு முகங்கள் போற்றி", "ஆறிரு தடந்தோள் வாழ்க", "வான்முகில்", "பரமனை மதித்திட பங்கையாசனம்" என்றெல்லாம் பாடுகிறார்கள். திருமுறைகளின் அடிகளில் மிக கொடுமையான தவறுகளை விடுகிறார்கள்.

*"பிடியதன் உருகுமை.."*
*"அங்கமும் வேதமும் ஓதும் நால்வர்.."*
*"கங்குல் விளங்கரி ஏந்தி ஆடும்.."*
*"பொங்கழல் உருவன் **பூ**தநாயகனால் வேதமும்.."*
*"நல்லூரில் நட்டம் பயின்றாடும் நாதனே.."*
*"கூலி கொண்டு அக்கோலால் மொத்துண்டு.."*
*"வண்டு பாட மயில் ஆட மான்கன்று துள்ள.."*
*"குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.."*
*"அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலம்.."*
*"மற்றுபாற்று எனக்கு.."*
*"இனிப்புற வாததன்மை.."*
*"கற்றுணை **பூ**ட்டியோர் கடலினுட் பாய்ச்சினும்.."*
*"உலகலாம் உணர்ந்து ஓதுதற்கரியவன்.."*

என்று இப்படி ஆயிரம் பிழைகளை விடுகிறார்கள். திருத்துவாருமில்லை, திருந்துவாருமில்லை. பாடுகின்றபோது"கட்டி"என்பதை "காட்டி" என்பது போலகுறில்கள் நெடில்களாக உச்சரிக்கிறார்கள். சொற்களைச் சப்புகிறார்கள். விழாவின் ஆரம்பத்தில், கூட்டுப் பிரார்த்தனையில், ஒரு தடவைக்கு மேல் பாடுவதும் சங்கதி செய்வதும் நிரவல் செய்வதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. சுவாமி சந்நிதானத்தில் ஓர் அடி ஒரு தடவையே பாடப்படவேண்டும். இன்று சுவாமி சந்நிதியில் தாம் நினைத்த படியெல்லாம் பாடுகிறார்கள். வாயில் வரும் இசையில் கண்ட இராகங்களில் பஜனை பாடுவது போல திருமுறை பாடுகிறார்கள். இது அடியோடு நீங்க வேண்டும். குறித்த நோய்க்கு குறித்த மருந்தே நிவாரணமாவது போல குறித்த சந்தர்ப்பத்தில் குறித்த பண்ணே பாடப்படவேண்டும். பக்தியோடு பாடுகிறோம் என்று கூறிக்கொண்டு கதை சொல்வது போலவும் கத்துவது போலவும் திருமுறை சொல்வதைக் காண முடிகிறது. எழுதப்படாத சட்டங்கள் கொண்டு மரபு பூண்டு ஒழுகும் முறைப்படி, ஒவ்வொரு பண்ணும் அதற்குரிய இராகத்தில் பாடப்பட வேண்டும். திருவாசகம் மோசம் என்றால் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை தவிர, மோகனத்திலேயே பாடப்படவேண்டும். குறித்த இரண்டும் காலையிற் பூபாளத்தில் பாடப்படும்.

எமது நாட்டில் குறித்த இலக்கண விருத்தத்தில் பாடல்களை எழுதி அதற்கு பண் குறிப்பிடுகிறார்கள். எம் துர்ப்பாக்கியமே இது. அருளாளர் தந்த தெய்வ தமிழ் இருக்க ஆரவாரிகளின் வெற்றுப் பாடல்களுக்கு பண் குறிப்பிட்டால் பின்னோருக்கு இது குழப்பமாக அமையும்.

பண் பாடும்போது எழுத்து, சொல்,பொருள்,அடி, தவறாமல் பக்திக்கு பங்கமில்லாமல் பாடவேண்டும். இதன் பின்னரே இராக தாள வித்தைகள் அமைய வேண்டும். தமிழகத்தில் ஆதீனங்கள் முறையாக பரீட்சித்து உரிய தகுதி கண்ட பின்னரே பட்டங்களை வழங்குகின்றன. எங்கள் நாட்டு ஆதீனங்களும் முறையான தகுதி கண்டு பட்டம் வழங்கவும் நடைமுறையில் திருமுறை வளர்க்கவும் முன்வரவேண்டும். பல்கலைக் கழக மட்டத்தில் பண் இசை வந்தால் மட்டும் போதாது. திருமுறை பற்றிய போதிய அறிவு வழங்கப்பட வேண்டும். இதனை யார் திறம்பட நடாத்துவார்? பெயரளவில் ஒரு பட்டம் வழங்கும் துறையாக மட்டும் இருந்தால் போதுமா? இன்று பலர் வாயினால் பேசுகிறார்கள். ஆத்மார்த்தமாக நடைமுறையில் திருமுறைக்கு பணி செய்யாவிட்டால் வாய்ப் பேச்சில் அர்த்தமில்லை.

பதவியில் உள்ளவர்கள் நிறுவனங்கள், அறிஞர்கள் திருமுறை வளர்க்க முன்வர வேண்டும். திருமுறை நூல்கள் பலராலும் போற்றிப் பேணப்பட வேண்டும். பண் இசைப்

போட்டியில் பங்கு பெறுவோர் பரிசிற்காக புகழுக்காக மாணவப் பருவத்தில் மட்டும் பங்கேற்று பின்பு தேடாது விடுவது வேதனைக்குரியது. மானசிகமாக திருமுறையை போற்ற வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோள்.

பல அம்மன் கோயில்களில் தேர் இழுக்க முடியும் என்றால் ஏன் திருமுறை பாடமுடியாது? என்று இளைய, முதிய பெண்கள் வேகம் கொள்கிறார்கள். தஞ்சைப் பெருவுடையாரில் 400 பெண்களை நடன மாதராக நியமித்த இராஜராஜசோழன் ஓதுவாராக 48 பேர் பெட்டி வாசிக்க ஒருவர் மத்தளம் வாசிக்க ஒருவர் என 50 ஆண்களில் திருமுறைப் பணிக்கு நியமித்தமை காண்க. தமிழகத்தில் எத் தலத்திலும் பெண்-ஓதுவாட்டி இருந்த வரலாறு இல்லை ஆகம வழிபாட்டில் எங்கேனும் பெண்பூசகர் இருந்ததாகவில்லை. இதனை பெண்கள் நன்கு உணர வேண்டும். தருணத்தில் நடைபெற்ற பல உதாரணங்கள் உள. விரிவஞ்சி விடுகிறேன்.

யாழ்ப்பாணத்திற்கெனப் பண்ணிசைப் பாரம்பரியம் ஒன்று உண்டு. நாவலர் பெருமான் தமிழ் நாட்டிலிருந்து ஓதுவார்களைக் கொணர்ந்து கோயில் மகோற்சவங்களில் வீதியில் பாடிய வரலாறு உண்டு. இந்த வழியில் சங்கர சுப்பையர், நாகலிங்கம் பரதேசியர், சைவப் புலவர், கொக்குவில் குமாரசாமிபிள்ளை, இசை வல்வார்குப்புளான் செல்லத்துரை ஆகியோர் திருமுறைக்காக உழைத்த பெரியோர்கள். ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள், ஸ்ரீமத் வடிவேல் சுவாமிகள் நல்லை ஆதினம் ஓராவது திருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கொக்குவில் குமாரசிங்கம் எனப் பலர் கதாப் பிரசங்கங்களினூடாக திருமுறையை வளர்த்தனர். இங்கு குறிப்பிடப் பட்டோரில் சிலர் பாடியும் சிலர் பாடிப் பேசியும் பணி செய்தார்கள் என்பதும் அறிக.

எனது குருவும் தகப்பனாருமாகிய தாவடி எஸ் இராசையா அவர்களின் வாழ்க்கை-திருமுறைப் பணி பற்றி யானேகூற முற்படுவது எனது துர்ப்பாக்கியமோ என கருதுகிறேன். இவர் பல வகுப்புக்கள் ஊடாகவும் கச்சேரிகள் ஊடாகவும் திருமுறை வளர்த்தார் என்பது இன்று மௌனத்தோடு மார் தட்டி நிற்கும் பலருக்குத் தெரியும். V.T.V .சுப்பிரமணியம் அவர்களும் இங்கு சொல்லப்பட வேண்டியவர்கள்.

தமிழ் நாட்டில் சிதம்பரம் V.S.Trust, தமிழிசைச் சங்கம் போன்ற பல நிறுவனங்கள், தேவாரப் பாடசாலைகள் ஊடாகவும் விழாக்கள் ஊடாகவும் திருமுறையையும் ஓதுவார்களையும் பெருமைப்படுத்துவது காணலாம். இசை விழாக்களில் திருமுறைக்கு முதன்மையிடம் வழங்கப்படும். திருமுறை ஆராய்ச்சி மாநாடு, பண் ஆராய்ச்சி மாநாடு முதலிய மாநாடுகளை நடாத்துவது காணலாம்.



# சைவ சமயத்தின் வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு

**திரு. ஆர். திருமுருகன்** *(B.A)*
ஆசிரியர் உபஅதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
சுன்னாகம்

வரலாற்றுப் பெருமையும் வாழ்வியல் தத்துவங்களும் நிறைந்த புனித சமயம் சைவசமயம். காலத்தின் எல்லைக் கணிப்புக்கு முன்பாகவே கருத்தோடு வாழ்ந்த சமயமாகவே உலக அறிஞர்கள் இச்சமயத்தைப் போற்றுகிறார்கள். இச் சமயத்தின் கடவுட் கோட்பாட்டிலென்றாலென்ன வாழ்வியற் கோட்பாட்டில் என்றா லென்ன பெண்மைக்குக் கொடுக்கப்பட்ட முதன்மை தனித்துவமானதாக விளங்குகின்றது. மூலப் பரம்பொருளாக போற்றும் இச் சமயத்தின் தெய்வமாகிய சிவனது இடப் பாகத்தில் பெண்ணாகிய சக்தி வீற்றிருப்பதாகக் கடவுட் கோட்பாடும், வழிபாடும் காலங்காலமாக இருந்து வருகின்றது. வாழ்வியற் கோட்பாட்டிலும் பெண்ணை வாழ்க்கைத் துணை என இச் சமயத்தவர் போற்றிப் பேணி உள்ளனர். சைவத்தின் மேன்மைகளைக் காப்பதில் மங்கையர் மகத்தானவர்களாக விளங்கி உள்ளமைக்குச் சைவத்தின் பெயரால் எழுந்த வரலாற்று நூல்கள் விளங்குகின்றன. சைவத்தின் மேன்மைகளைச் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலமாக எழுந்த வரலாற்று நூல்களும், திருமுறைகளும், புராணங்களும், சைவசித்தாந்த தத்துவ நூல்களும் அகலவிளக்கியுள்ளன.

சைவத் தமிழ்ப் பண்பாட்டில் பொதுவாக மங்கையர் எனும் சொல் மங்கலம் எனும் பெயர் அடியாகத் தோன்றியது என்பர். மங்கலம் என்பது நன்மை, இன்பம், மகிழ்ச்சி முதலிய பல பொருளைத் தருவது. இவை அனைத்தையும் உடையவரே மங்கையர் ஆவர். இதனால் தான் சைவத் தமிழ் பண்பாட்டு மரபில் "வீட்டுக்கு விளக்கேற்ற பெண் வேண்டும்" என்று ஆன்றோர்கள் சொல்லி வைத்தார்கள். பெண்கள் ஏற்றும் விளக்கானது சாதாரண விளக்கேற்றுதல் என்பது மட்டும் பொருளல்ல. இல்லத்திலுள்ள அனைவரதும் அறியாமை இருளை அகற்றி, அன்பு, பண்பு, பரிவு, பாசம், நேசம், ஆகிய அழுக்கற்ற ஆனந்த ஒளியை ஏற்றுபவள் பெண் என்பதே ஆன்றோர் வாக்கின் அகக் கருத்தாகும். இக்கருத்து நெறியில் வாழும் சமயம் சைவ சமயம்.

சைவ மரபில் பல நிலைகளிலும் பல பொருட்களிலும் இயற்கையோடு இணைத்து தெய்வமாக இன்றுவரை மதிக்கும் மரபு உண்டு. கங்கையை மாதா என்றும் நிலத்தைப் பூமாதேவி என்றும் உண்ணுகின்ற அன்னத்தை அன்னலக்சுமி என்றும் எத்தனையோ பல வார்த்தைகளினால் பெண்ணைச் சிவனோடு ஒன்றாய் ஒரு பொருளாய்ப் போற்றும் பண்பு சைவத் தமிழரின் உயர்தத்துவ மரபாகும். நான்மறையாகிய வேதம் முதல் சங்க இலக்கியச் சான்று ஈறாகத் தொன்மைச் சமய உண்மைகளை விளக்குகின்ற வகையில் தாய்மை வழிபாட்டு மேன்மையினையும் பெண்மையின் பெருந்தன்மையினையும் போற்றத் தவறவில்லை. பெண்மையின் மேன்மையினைப் போற்றிய சைவ மரபைப் பண்டைய நூல்கள் மாத்திரமன்றித் தொன்மைச் சான்றாக அமைந்த சிந்துவெளித் தொல் பொருள் ஆய்வுகளும் நிரூபிக்கின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த சமயத்தில் பெண் எத்தகையளவு சிறப்பாக மதிக்கப்பட்டாளோ அத்தகையளவு அக்காலப் பெண்மணிகளும் சைவத்தின் உயர்பண்புகளைப் பேணுவதில், பேணிக் காப்பதில், வளர்ப்பதில் முன்னிலையில் நின்று உழைத்தமையை அறிய முடிகிறது. சைவ சமயத்தின் நீண்ட ஆயுள் அகன்று விரிவதற்கு அன்னையர் பலர் காலத்திற்குக் காலம் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியதாகும். சைவத் தமிழ்ப் பண்பாட்டில் பெண்ணை உயர்ந்த சக்தியாகக் கருதியதற்கு அமையப் பெண்மையின் பேரருட் பங்களிப்பு இன்றுவரை இச்சமயத்திற்கு உறுதுணையாக உள்ளது. அறச் சிந்தனைகளையும் ஆன்மீக நல்வாழ்வினையும் சைவத்தின் நெறியில் நின்று இவ் வையகத்திற்கு உரைத்த ஔவைத் தமிழ் மூதாட்டி இச் சமயத்தின் நெறி வளர ஆற்றிய பங்களிப்பு மிகவும் மகத்தானது. சைவத் தமிழரின் தலைமகளாகப் போற்றப்படும் ஔவை மூதாட்டி அன்று இச்சமயத்தின்பால் வைத்த பற்றின் காரணமாக வாழப் போகும் சந்ததிக்கு வார்த்தைகளால் சொன்ன பாவரிகள் சைவத் தமிழ் வையகத்தை வாழ்வித்தது என்றால் மிகையாகாது. அவரது காலத்தை அறிஞர்கள் பல எல்லைகளை வைத்துக் கணித்தாலும் மூத்த தமிழ்ப் பெண்மணியாக நீண்ட காலம் வாழ்ந்தவராகக் கருதப்படுவது மரபாகவுள்ளது. அவர் சைவ சிந்தனையை இன்றும் இவ் உலகில் நிலை பெற ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. சங்க காலத்தில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் தமிழுக்கு அழகு செய்தார்கள். இவர்களில் பலரது பாடல்களுக்குள்ளே சைவப் பண்பாடு ஊறியுள்ளமையை அறிஞர்கள் ஒப்புக்கொள்வர். ஔவையார் ஊர் தோறும் சென்று குடிமக்களுக்கும் கோல் ஓச்சும் மன்னனுக்கும் சைவத் தமிழ்ப் பண்பை உறைய வைத்தமையை மறக்க இயலாது. நீலமணிமிடற்றொருவன் போல மின்னுக என்று அதிகமானை வாழ்த்துகிறார். "சிவாய நம என்று சிந்தித்து இருப்பார்க்கு அபாயம் ஒருநாளும் இல்லை" என்றும் இறைவனுக்கும் இறையடியவர்க்கும் உள்ள அரும்பெரும் உறவையும் அவனிக்கு அழகான பாவரியில் வெளிப்படுத்தியுள்ளார். கந்தப் பெருமானைச் சந்தித்த ஔவை உலகில் பெரியது எது என்ற வேலவனின் வினாவிற்கு

**இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்:**
**தொண்டர்தம் பெருமை சொல் லவும் பெரிதே!**

என்று சிவதொண்டர் மேன்மையினைப் புகழ்ந்து உரைத்து விளக்கியுள்ளார். ஔவையாரது பாடலுக்குள் சைவத் தத்துவக் கருத்துக்கள் பொதிந்து காணப்படுகின்றன. அவர் நல்வழிப் பாடல் ஒன்றில் சொன்ன பிறவித்தத்துவம் எக்காலத்திலும் தத்துவச் சிந்தனையாளர் முதல் சாதாரண மானிடர் வரை சிந்திக்க வைப்பன.

**புண்ணியமாம் பாவம்போம் போன நாட் செய்தவை**
**மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள்**

என அவர் கூறும் தத்துவச் சிந்தனை எக்காலத்திலும் எல்லோரையும் சிந்திக்க வைக்கக் கூடியது. எனவே சைவசமய வாழ்விற்கு அவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. ஔவையாரின் காலமும் ஔவையார் ஒருவரா, இருவரா, பலரா என்ற இன்றைய ஆய்வாளரின் சிந்தனையும் பல்வேறு பட்டதாக இருந்தாலும் ஔவையார் சைவத் தமிழ் மகளே என்பதில் சந்தேக மில்லை.

காலத்திற்கு காலம் சைவத் தமிழ் மகளிரிடத்தே உயர்நெறிப் பண்புகள் இயல்பாகவே நின்று நிலைத்து வந்தமையை அக்காலங்களில் எழுந்த நூல்கள் சிறப்பித்துக் கூறுகின்றன. சங்க மருவிய காலத்தில் வாழ்ந்து முதல் முதலாகப் பதிகம் பாடிய பெண்மணியாக விளங்கும் காரைக்கால் அம்மையார் சைவசமயத்திற்கு ஆற்றிய பணி அற்புதமானது. அவரது பெருமைதனைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் அழகாக எடுத்துக் கூறியுள்ளார். இவ் அம்மையார் இல்லறமாம் நல்லறத்தில் இணைந்து பெண்ணின் நல்லாளுக்குரிய

சைவப்பண்பாட்டோடு வாழ்ந்தவர். உயர் பண்பாகிய விருந்தோம்பலைப் பெரிதெனக் கருதி சிவனடியார்களைப் பேணியவர். அவரது வாழ்வில் ஏற்பட்ட இறை சோதனை அவர் சைவத்திற்குப் பணியாற்றிய சாதனையாகியது. பெரும் செல்வக் குடியில் பிறந்திருந்தும் செல்வத்துட் செல்வமாக வளர்ந்திருந்தும் உலக இன்பங்களில் அவர் பற்று வைக்கவில்லை. சிறந்த கல்வி ஞானமுடைய அம்மையார் தன் கணவன் இன்னொரு பெண்ணோடு வாழ்கின்ற காட்சி கண்டு தன் வினைப்பயன் எனக் கருதித் தன் கணவனையும் அவன் ஏற்ற பெண்ணையும் அவன் பிள்ளையையும் வாழ்த்திவிட்டு இறைவனை நோக்கி இறவாத இன்ப அன்பு வேண்டினார். ஆதியும் அந்தமும் இல்லா அருட் பெரும் தெய்வமே "அம்மையே" என்று அழைக்கும் வரம் பெற்ற காரைக்கால் அம்மையாரின் பக்தியும் வாழ்வும் மெச்சத்தக்கது. அன்புருகப் பாடிப் பரவினார். அவரது திருப்பாடல்கள் சைவ சமய வளர்ச்சிக்கு அக்காலத்தில் பெரிதும் துணைபுரிந்தன. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி போன்ற அவரது படைப்புக்கள் அக்கால சமய வாழ்விற்குப் பெரிதும் உதவின.

பல்லவர் காலத்தில் சைவத் தமிழ் மகளிர் பலர் தோன்றி இச்சைவ சமய வாழ்வை மலரச் செய்துள்ளனர். சைவ சமயத்தின் புண்ணியக் கண் இரண்டெனப் போற்றப் படுகின்ற தவமுதல்வர் **சம்பந்தரும்**, வாக்கினில் வல்ல வாகீசராகிய **நாவுக்கரசரும்** சைவப் பணியாற்ற அருந்துணை செய்தவர்கள் மங்கையர் இருவர். **மங்கையர்க்கரசியாரும்** மருள் நீக்கியாரை பிடித்த இருளை நீக்கி "நற்றுணையாவது நமச்சிவாய" என நற்றமிழ் பாடவைத்த நல்நங்கை **திலகவதி அம்மையார்** ஆகிய இருவரும் அப் பெண்மணிகளாவர். இவர்கள் இருவரும் ஆற்றிய தெய்வீகப் பணி சைவசமய வரலாற்றில் பெரிதும் போற்றப்படுகின்றது. சமணமதத்தின் வலைக்குள் சைவ சமயத்தவர் அகப்பட்ட வேளை அகப்பட்டவர்களையும் மீட்டு அக்காலச் சந்ததி சைவநெறியில் தொடர்ந்து தழைத்தோங்க தன்னலங்கருதாப் பணி செய்த மங்கையர்கள் இவர்கள். மேலும் அடியார் வரலாறு கூறும் பெரியபுராணம் மனையறத்தின் வேராக நின்று மகத்தான சைவப் பணியாற்றிய இல்லறத்து நாயகிகளின் பெருமைகளை எடுத்துக் கூறியுள்ளது. திருநீல கண்டத்துக் குயவனார் எனும் அடியவர் புலன்கள் அடங்கும் மெய்யராகி அவரைப் பரம்பொருளே ஆட்கொள்ளும் அளவிற்கு வழி காட்டியவர், திருநீலகண்டரின் மனையாள். பரத்தையர் உறவினால் தன் கணவன் புருஷதர்மத்தை மீறியதன்மைகண்டு சத்திய வாக்கினைத் தன் கணவனிடம் பெற்று அற்புதப் புலனடக்கம் காட்டி இல்லறப் பணி செய்தவர், இந்நல்லாள். இவரது உயர் பக்தியால் திருநீலகண்டரது வாழ்வு புதுப் பொலிவு பெற்றது. இளமையை துறந்தும் இறைவன் மேல் சொன்ன வார்த்தையை நீலகண்டர் காத்தும் பெறுதற்கரிய பேறு அவர் பெற இப்பெண்மணியே காரணமாக இருந்தார். இவரது வாழ்வு சைவ உலகிற்கு வழிகாட்டியது. இல்லை என்று சொல்லாது வந்தவர்க்குப் பசியாற்ற முனைந்து பயன் பெற்றவர், இளையான் குடிமாறனாரின் இனிய பத்தினி. அவர் சைவ அடியார்களைப் பேணுவதிற் காட்டிய அக்கறை மகத்தானது. வாளால் மகவரிந்து விருந்து தருவேன். என வாக்குக் கொடுத்த சிறுத்தொண்டர்க்கு வாழ்க்கைத் துணையாய் நின்று தவத்தால் கிடைத்த அருமைந்தனாம் சீராள தேவனை அரிந்து உணவாக்கி அடியவர்க்கு அமுது கொடுக்க முனைந்த சிறுத்தொண்டர் மனைவி திருவெண்காட்டு நங்கையின் பேரருட் திறன் சைவ வளர்ச்சிக்கு என்றும் போற்றுதற்குரியதாய் அமைந்தது. உழவாரப் பணிசெய்த ஒப்புரவாளராம் அப்பர் சுவாமிகளுக்கு அமுது கொடுக்க வேண்டும் என்பதற்காக பெற்ற மகவு பின்புறத்தில் பிணமாய் கிடக்கையிலும் விருந்து கொடுக்க வேதனை ஒதுக்கிச் செயற்பட்ட அப்பூதிஅடிகளின் பிரிய பத்தினியினது பெரும் பக்தியும் மகத்தானது. மேலும் செயற்கரிய செய்கை செய்த தீரன் எனப் போற்றப்பட்ட இயற்பகை நாயனாரின் இல்லாள் பணியும், குங்குலிய நாயனாரின்

மனைவியின் மாண்பும், மானக்கஞ்சாரரின் மகன் செய்த தியாகமும், அமர் நீதி அடிகளின் அம்மையார் செய்த அரும் பணியும், சுந்தரர் மணந்த பரவையார் செய்த தெய்வீகக் கலைப் பணியும் சைவ வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தன. பெரிய புராணத்தில் வரும் பெண் அடியவர்கள், அருளாளர்களின் பிரிய பத்தினிகள் திருநீற்றுப் பொலிவும், தீதகன்ற வாழ்வும் நிலைக்கப் பெரிதும் துணை செய்தவர்கள் என்றால் மிகையாகாது.

சோழர் காலத்தில் கங்கை முதல் கடாரம் வரை ஆண்ட பெரும் சோழச்சக்கரவர்த்திகளுக்கு பெரிதும் துணைபுரிந்து சமயம் வளர்த்தவர்களுள் பெண்களும் அடங்குவர். கண்டர் ஆதித்த சோழனின் மனைவியான செம்பியன் மாதேவியார் பல கோயில்களை கற்றழி கோயில்களாக ஆக்க அரும் பாடுபட்டார்கள் என அறிய முடிகின்றது. தஞ்சைப் பெரும் கோயில் எழுவதற்கு இராஜராஜசோழனுக்கு முதற் காரணமாக அமைந்தவர் சோழனின் சோதரி. சோழர் காலத்துள் பெண்கள் சமயப் பணியாற்றியமைக்கு பல கல்வெட்டு சான்றாதாரங்கள் உண்டு. கி.பி 1240இல் திருவிடை மருதூர் மாளிகை மடத்தைச் சேர்ந்த ஈசான தேவர் எனும் துறவிக்குச் சிஷ்யையாகப் பெண் ஒருத்தி இருந்தாள் என்றும் அவள் சைவப் பணிகள் நிறைய ஆற்றியவள் என்றும் ஈசான தேவருக்கு பெருமடம் அமைத்து நிலங்களை எழுதுவித்தாள் என்றும் இக் காலத்தில் கல்வெட்டு சாசனம் கூறுவதாகத் தமிழ்க் கலை வரலாறு பற்றிய சென்னை சைவ சித்தாந்த மகாசமாசம் வெளியிட்ட கட்டுரை மலர் விளக்குகிறது. சோழர் காலத்தில் ஆலயங்கள் தோறும் ஆடல் பாடல்களில் மங்கையர்கள் கலந்துகொண்டு சைவத்தை வளர்த்தமையை தஞ்சைப்பெருங்கோயில் கல் வெட்டுக்கள் கூறுகின்றன. அக் காலத்தில் பாமர மக்களிடையே பக்தி உணர்ச்சியை வளர்க்க ஆலயத்தில் ஆடல், பாடல் மூலம் பணியாற்றிய பெண்களை பதியிலார் என்றும் தணிகையர் என்றும் அழைக்கப்பட்டதை அறியமுடிகின்றது. இக்காலத்தில் தேவ அடியார் என்ற பெயரில் பெண்கள் சமய வளர்ச்சிக்கு உதவியுள்ளனர். இவர்கள் ஆடல், பாடல்களோடு மட்டுமன்றி ஆலயங்களில் திருவலகிடல், திரு மெழுகிடல், படையல், கவரிவீசுதல் போன்ற பல பணிகளை ஆற்றியுள்ளனர். அத்தோடு சமய வரலாற்றை வெளிக்காட்டுகின்ற நாடகங்களிலும் பெண்கள் பாத்திரங்களை ஏற்று நடித்து பங்களிப் பாற்றி உள்ளார்கள். நீண்ட காலமாக தமிழ் நாட்டில் சைவப் பெண்கள் அம்மானை, ஊசல், பொற்சுண்ணம், தெள்ளேணம், முதலிய ஆடல்களிலும், விளையாட்டுக்களிலும் சிவபெருமானின் புகழைப் பாடிக்கொண்டு ஆடி சைவ மரபை வளர்த்தமையை சம்பந்தர், மாணிக்கவாசகரது பாடல்களினூடாக அறிய முடிகின்றது. திருவிளையாடல் புராணத்தின் ஊடாக என்றோ வாழ்ந்த செம்மனச் செல்வி என்ற மூதாட்டி சிவன் மேல் பற்று வைத்து ஆற்றிய பணியினையும் அறிய முடிகின்றது.

சைவத்தமிழர் வரலாற்றில் தமிழகம் விஜய நகரப் பேரரசு ஆட்சிக்குட்பட்ட காலத்தில் பிற சமயமும், பல்வேறு மொழிகளும் இனங்களும் தமிழகத்தில் புகுந்து சைவ வளர்ச்சிக்குக் குந்தகங்கள் பலவற்றை ஏற்படுத்திய போதும் பாரம்பரிய சைவப் பண்பாட்டைப் பேணுவதில் இக்காலத்தில் பெண்கள் இல்லம் தோறும் ஆற்றிப் பேணிய சைவப் பண்பாடு என்றும் நன்றிக்குரியது. தெலுங்கர்களின் வழமைகள் தமிழகத்துக்குள் ஆட்சியோடு புகுந்த போதும் தெய்வீக சைவ வழமைகளை மாற்றமுடியாமல் போனமைக்கு தாய்க்குலத்தின் பங்களிப்பு முதன்மைக் காரணம் என்பதை **ஆ.கி.பரந்தாமனார்** எழுதிய மதுரை வரலாற்றைப் படிக்கும்போது விளங்க முடிகிறது. மதுரையில் 16ஆம் நூற்றாண்டில் **மங்கம்மாள்** என்னும் பெண்மணி ஆட்சியில் இருந்துள்ளார். இவரும் சைவ ஆலயங்களுக்கு இடையூறு இன்றி பூசை வழிபாடு நடைபெற உதவியுள்ளார். பாண்டி நாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பு தடாதகைப் பிராட்டியார் செழியர் பிரான் திருமகளாய் முடிபுனைந்து செங்கோல் தாங்கி சைவம் காத்து பாண்டி நாட்டை ஆண்டதாக திருவிளையாடல் புராணம் கூறுகின்றது.

இதற்குப் பின் பாண்டி நாட்டில் தெலுங்கர் காலத்தில்தான் பெண்மணி ஆட்சியில் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. மங்கம்மாவினது ஆட்சியின் போது அறப்பணிகள் பலவற்றை ஆரம்பித்து ஆன்மீகப் பணி செய்தார் என அறியமுடிகிறது. சைவ, வைணவ சமயங்களை ஏற்றவர்களாக பல கோயில்களை கட்டுவிப்பதற்கு காரணமாக விளங்கியுள்ளார். இராமேஸ்வரத்திற்கு செல்லும் பாதையில் அக்காலத்தில் பல சத்திரங்களையும், தண்ணீர் பந்தல்களையும் அமைத்து பராமரிக்க ஒழுங்கு செய்தார் என்பதை மதுரையில் எழுந்த தெம்மாங்கு பாடல்கள் ஊடாக அறியமுடிகிறது. இவரது சைவப் பணிகளின் ஞாபகமாக மதுரை மீனாட்சி அம்மன்கோயிலில் பொற்றாமரைக் கோயில் மேற்குப் பக்கத்திலுள்ள சிறு கல் மண்டபத்தின் மேற் தளத்து உட்புறத்தே இவளது உருவம் அழகிய ஓவியமாக என்றோ வரையப்பட்டுள்ளது.

மங்கம்மாளுக்குப் பின் மதுரையை மீனாட்சி எனும் அரசி சிலகாலம் ஆட்சியிலிருந்து சமயப் பணிகளை செய்ததாக கூறப்படுகின்றது. எனினும் தமிழ் அரசுகள் ஆண்ட காலம் போல் இக்காலம் அமையவில்லை. நாயக்கரது வருகைக்குப் பின் பெண்கள் வீட்டிற்கு வெளியே பொதுநிகழ்வுகளில் கலந்து கொள்கின்ற தன்மை குறையத் தொடங்கியது. முஸ்லிம் படையெடுப்புக்களும் அதனைத் தொடர்ந்து கிறிஸ்தவ படையெடுப்புகளும் சைவத் தமிழ் பண்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்திய காலத்தில் எல்லாம் சமயப் பண்பைக் காத்து குடும்ப உறவுகளை சைவ ஒழுங்கில் பேணி திருமுறைகள், விரத அனுட்டானங்கள், வழிபாட்டு முறைகள், நடையுடை பாவனை தளர்ந்து விடாது காப்பாற்றிய பெருமை அக்காலப் பெண்களை முழுமையாகச் சாரும்.

இக்காலத்தில் ஆதீனங்கள், மடாலயங்கள், சமயப் பணிக்கு பெரிதும் பங்காற்றின. எனினும் இம் மடாதீனங்கள், ஆதீனங்களில் ஆடவர்கள் நைஷ்டிகபிரமச்சாரிகள், சந்நியாசிகள், பண்டாரங்கள் போன்றவர்களே அங்கம் வகித்தனர். பெண்கள் நிறுவன ரீதியாக சமயப் பணியாற்ற இக்காலம் பொருத்தமானதாக அமையவில்லை. ஆலயங்களில் நடனமாடிய ஆடல் நங்கையரையும் தெய்வ அம்சமாக சமூகம் பேணத்தவறியது. ஆதலால் பெண்கள் மனையறத்தின் ஊடாகவே சைவமாண்புகளை காத்தமையை விளக்க முடிகிறது.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் இன்றுவரை தமிழகத்தில் நிறுவன ரீதியாக சமயப் பணிகளில் மங்கையர் பங்காற்றி சிறப்பித்து வருகின்றனர். சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜம் நீண்ட காலமாக சைவ மங்கையர் மகாநாடுகளை ஏற்படுத்தி சைவமகளிர் பணிகளை உற்சாகப் படுத்துகின்றது. பல சைவப் பெண்மணிகள் சொல் ஆற்றலையும், நூல்களின் ஆய்வு வெளியீடுகளையும் வெளிக்காட்டி பணிபுரிந்து வருகின்றார்கள்.

சிவபூமி எனப் போற்றப்படும் ஈழத் திருநாட்டில் சைவத் தமிழ் வரலாற்றில் காலத்துக்குக் காலம் பெண்கள் சைவப் பண்பாட்டைக் காப்பதில் பெரிதும் பங்கேற்றுள்ளனர். திருமுறைகளை இல்லந்தோறும் பூசை வழிபாட்டில் படித்து தம் சந்ததி அதைப் பேண காலம் காலமாக சைவப் பெண்கள் உதவியுள்ளனர். அந்நியப் படையெடுப்புக்களும் வெளியார் ஆட்சியும் நீண்ட காலமாக நிலவிய போதிலும் சைவப் பண்பாடு பேணுவதில் சைவ மகளிர் நற்பணி செய்துள்ளனர். உணவு, உடை, பாரம்பரியங்களை பறிபோகாமல் காத்து வந்த பண்பு ஈழப் பெண்களுக்கே உரியது. பஞ்ச ஈச்சரங்கள் எல்லாம் இருந்து சிறப்புற்ற இச் சிவ பூமியில் மகளிர் எத்தகைய மாண்புடன் விளங்கினர் என்பதற்கு இதிகாசம் கூறும் இலங்காபுரி மன்னன் இராவணனின் மனைவியாளின் திருநீற்றுப் பொலிவு, பண்பாடு- சான்றாக அமைந்துள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தன் ஆலயம் எழுவதற்கு பாரத நாட்டின் மன்னன் மகள் மாருதப்புரவீகவல்லி காரணமென வரலாறு கூறுகின்றது. அவளது முகம் புனிதம் பெற்றமையால் அவளது நேர்த்திக்காக மன்னன்

ஆலயம் எழுப்பியதை அறிய முடிகிறது. இலங்கையில் 19ஆம் நூற்றாண்டிற்கு பின்னரே பெண்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னராக கல்வி அறிவை அகல வளர்க்கத் தொடங்கினர். குடும்பப்பாங்கையும் கணவனுக்கு நல்ல வாழ்க்கைத் துணையாக நிற்பதையும் இல்லத்தில் இனிது பேணிய பண்பாடு ஈழநாட்டுப் பெண்மணிகளுக்குரிய பண்பாடாகும். எனவே எழுத்தறிவில்லாத பெண்களிடத்தேயும் ஈழ நாட்டில் பல திருமுறைகளை கேள்வி ஞானத்தில் பாராயணம் செய்யும் திறனும், புராணப் படிப்புக்களை அறியும் ஆர்வமும் இருந்து வந்தமையை அறிய முடிகின்றது. ஈழநாட்டு சைவ சமயப் பணியை முன்னின்று உழைத்து கிராமம் தோறும் பணி செய்த மாதரார் பணியினை வரலாற்றுப்படுத்தக் கூடிய நூல்கள் அக்காலத்தவர் ஆக்கத் தவறியுள்ளனர். சுமார்200 வருடங்களுக்குட்பட்ட வரலாற்றில் ஈழ நாட்டில் சைவத்தைப் பேணுவதில் உழைத்த சித்தர்கள், ஞானிகள் நிலையில் நின்றவர்களான **சடையம்மா, சுன்னாகம் செல்லாச்சி அம்மையார், யாழ் பொன்னம்மா அம்மையார் (அன்னச் சத்திரத்தடியம்மா)** போன்றவர்களது சிவப்பணி, தவப்பணி பற்றிய வரலாறுகள் நூல் வடிவில் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. சில ஆலயங்களின் தல வரலாறுகளில் அத் தலங்களோடு தொடர்புடைய பெண்ணடியவர்கள் சிலர் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஈழ நாட்டுச் சைவ வளர்ச்சியில் மலர்ச்சியை ஏற்படுத்தி சைவத் தமிழ் பண்பாடு தழைத்தோங்க அரும்பாடுபட்டவர் **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்.** அப்பெருந்தகையின் வழிபாட்டிற்கு பின் ஊர் தோறும் சைவப் பாடசாலைகள் பல்கிப் பெருகின. ஆடவரும் பெண்களும் கல்வி நாட்டத்திலும் பக்தி நாட்டத்திலும் வளரத் தொடங்கினர். அவ்வளர்ச்சி சிறப்பு பெற்ற காலத்தில் சைவ உயர்பண்பாட்டில் தோன்றிய உயர் கல்விமான் **சேர் பொன் இராமநாதன்** அவர்கள் மேலத் தேய நாட்டில் அறிவியல் விடயமாக சென்றபோது அவர் ஆற்றலால் கவரப்பட்டு இலங்கை வந்தவர் செல்வி **ஆர்.எல்.ஹரிசன்** என்னும் அவுஸ்திரேலியப் பெண்மணி. இவர் இராமநாதனை தன் குருவாகவும், கணவனாகவும் பற்றி இந்நாட்டிற்கு வந்தார். பின் சைவசமயத்தின் ஞான வேட்கையில் அகப்பட்டு திருவாட்டி **லீலாவதி இராமநாதன்** என்ற நாமத்தோடு சைவதத்துவ நூல்கள் பலவற்றையும் கற்று ஆங்கிலத்தில் பல நூல்களை எழுதி சைவப் பணிசெய்தார். இவர் சைவப் பண்பாட்டு உடை, உணவு, சிவபூசை என தன் வாழ்வை அமைத்து சைவப் பெண்கள் பண்பாட்டோடு கல்வி கற்கக் கணவனால் உருவாக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியை உயர் நிலையில் வளர்க்கப் பாடுபட்டார். கல்விச் சாலைகள், சிவாலயங்கள் கட்ட கணவனுக்கு பேராதரவு காட்டியவர் இவ் அம்மையார். இவர்களது சிந்தனைகளில் எழுந்த சைவக் கல்லூரி சைவ ஆசிரியர் கலாசாலை போன்றவற்றால் சைவப் பெண்கள் பலர் அறிவியல் மேன்மை பெற உதவியது.

இவர்களது முன் மாதிரியான பணிக்குப் பின் இலங்கையில் பல சைவ மகளிர் கல்லூரிகள் எழுந்தன. பல சைவப் பெண்கள் உயர் பதவிகளைப் பெறுகின்ற அறிஞர் ஆகினர். இத்தகைய நிலையில் சைவப் பெண்கள் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் சைவ மங்கையர் கழகங்களை ஏற்படுத்தி நிறுவன ரீதியான பணிகளைச் செய்யத் தொடங்கினர்.

பெண்கள் கல்வி வளரத் தொடங்கிய இக்காலத்தில் குறிப்பாக 1925இல் தெல்லிப்பளையில் பிறந்த பெண்மணியாகிய சிவத்தமிழ்ச் செல்வி **தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள் இராமநாதன் கல்லூரி சைவ ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கற்றுத் தேறி பண்டித, சைவப் புலவர் போன்ற அக்கால உயர் பரீட்சைகளில் நற் சித்தி பெற்று சைவ சமயப் பணிக்காக அயராது உழைத்து தனக்கென வரலாற்றுச் சிறப்பை ஏற்படுத்தியதால் உலகம் போற்றும் சைவப் பெண்மணியாக திகழ்கின்றார். இவரது பேராற்றலை

தமிழகத்திலுள்ள சைவாதீனங்கள் கௌரவித்து பல பட்டங்களை வழங்கியுள்ளது. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் ஆகிய நாடுகளெல்லாம் சென்று சைவப் பேருரைகளாற்றிப் பணி செய்துள்ளார். தெல்லியூர் துர்க்கை அம்பாள் ஆலய நிர்வாக தலைவராக இருந்து சைவத்தின் பேரால் பல பணிகளை ஆற்றி வரும் இவர் துர்க்காபுரம் மகளிர் இல்லம் என்ற சைவப் பெண்கள் நிலையத்தை தோற்றுவித்து பேணி வருகின்றார். கோயில்கள் தோறும் சமயப் பிரசங்கங்களை ஆற்றி வரும் இவர் பல கட்டுரைகளையும் சைவ நூல் களையும் எழுதி வெளியிட்டுள்ளார்.

ஈழத்திருநாட்டில் சைவம் வளர்க்கும் பெரும் பணியில் பெண்களில் சிலர் இல்லாளாக, கலைஞராக, ஆசிரியைகளாக, ஆய்வாளர்களாக சமயப் பிரசாரகராக, எழுத்தாளர்களாக, புராணப் படிப்பாளர்களாக, ஆலயத் தொண்டர்களாக பல்துறை ஆற்றி வருகின்றனர். இன்று புலம் பெயர்ந்து ஈழத்தவர் பல மேலைத்தேயநாடுகளில் வாழ்ந்த போதும் அங்கு சைவப் பாரம்பரியம் பேணி வளர்ப்பதில் மகளிர் நற்பணியாற்றி வருவது அறிய முடிகிறது.

மேலும் ஈழநாட்டுப் புராணப் படிப்பு வளர்ச்சியில் பெண்கள் இன்றும் பணி செய்வது குறிப்பிடத்தக்கது. "ஈழநாட்டு புராண படல செல்வாக்கு" என்ற **இரா. வை. கனகரத்தினம்** எம். ஏ விரிவுரையாளரின் ஆய்வில் அவர் பின்வருவோரைக் குறிப்பிட்டு உள்ளார். **துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திருமதி. சத்தியதேவி துரைசிங்கம், திருமதி நா. பாக்கிம், திருமதி வசந்தா வைத்தியநாதன். திருமதி சி.பாலநாதன், திருமதி இராசையா, செல்வி புஷ்பா செல்வநாயகம்** போன்றோரைக் குறிப்பிட்டுள்ளார். சைவப் பிரசார சொற்பொழிவுப் பணியில் **திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம். புலவர் சி.விசாலாட்சி** போன்றவர்களினது பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே சைவசமய வளர்ச்சியில் மங்கையரின் பங்களிப்பு அளப்பரியது என்பது புலனாகிறது.

- **அன்னையின் ஆசியிலே ஆண்டவனைக் காணலாம்.**
- **எந்தவிதமான இலட்சியமும் இல்லாமல் வேலை செய்வது எண்ணையில்லாத விளக்கிற்கு சமன்.**



# இந்துமதமும் மானிட வாழ்வும்.

**திருமதி கௌ.யோகேஸ்வரன்**
சைவத் தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.

மனிதன் என்பவன் சமூக வாழ்க்கையை மேற்கொள்ளும் ஒரு சமூகப் பிராணி. இந்த மனிதனை மனிதனாக வாழ வைக்க உதவுவதே மதம். மதத்திற்காக மனிதன் தோன்றவில்லை. மனிதனுக்காகத் தான் மதம் தோற்றுவிக்கப்பட்டது.

உலகினிலே பல்வேறுபட்ட சமயங்கள் காலத்திற்கு காலம் தோன்றியபோதும் அவை விரைவில் மறைந்து போய்விடுகின்றன ஆனால் அன்று முதல் இன்றுவரை அனற் காற்றையும், குளிர்ந்த தென்றலையும் ஒருங்கே கருதி உலகளாவிய சமயங்களிலே தொன்மை மிக்கதாகப் போற்றப்படுவது எமது மதமான இந்துமதமே.

எமது இறைவன் அன்பே வடிவானவன். மனித வாழ்விற்கு அன்பு இன்றியமையாததாகும். ஒவ்வொரு மனிதனும் ஏதோவொரு அன்புக்கு ஏங்குபவனாகவே உள்ளான். அது கிடைக்காத பட்சத்தில் விரக்தியுறுகின்றான். வாழ்க்கை நெறியாம் திருக்குறளில்,

**"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரந் தளிர்த்தற்று"**

அஃதாவது அன்புக்கு இடமளிக்காத உயிர் வாழ்க்கை என்பது பாலைவனத்தில் பட்டமரம் தளிர் விடுவது போல மிகக் கஷ்டமானதாக இருக்கும் என வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார். இதிலிருந்து அன்பின் முக்கியத்துவத்தை புலப்படுத்துகின்றார்.

"பற்றற்று வாழ்" என்று கூறுகின்றது இந்து மதம். "துன்பத்தைக் கண்டு துவண்டுவிடாதே, தீங்கு விளைத்தவனை மன்னித்துவிடு, மனதை கட்டுப்படுத்தி இறைவனை நினை" என்கிறது. இந் நிலையை அடைய சந்நியாசம் கொள்ளத் தேவையில்லை. இல் வாழ்க்கையில் இருந்து கொண்டே சரியான முறையில் மேற்கொள்ள முடியும்.

இதுமட்டுமல்ல வாழ்க்கை ஒழுக்கத்தையும், சமுதாய ஒழுக்கத்தையும் அதிகமாக வலியுறுத்துவது இந்துமதம். இதன் பண்பாடுகளும், சடங்குகளும் உன்னதமானவை. மங்கள வழக்கு, அமங்கல வழக்கு எனத் தரம் பிரித்து இவை இரண்டிற்கும் தனித்தனியாக சடங்குகளைக் கூறுவது இந்துமதம்.

உன்னதமானது வெண்மையாகவும், தூய்மையாகவும் இருக்கிறது என்பதற்கு அடையாளமாக "திருநீறைப் பூசு", உடம்பு நோய் நொடி இன்றி இரத்தம் சுத்தமாகும் என்பதற்கு அடையாளமாக "குங்குமம் வை" என்கிறது. தன் கண்களால் ஆடவனது ஆசையை ஒரு பெண் தூண்டிவிடக்கூடாது என்பதற்காக பெண்கள் நிலத்தைப் பார்த்து குனிந்து நடக்க வேண்டும் என்று சொல்கிறது. அதுபோல எதிரே வரும் பெண் திருமணமானவள் என்று இனங்கண்டு ஆண்கள் விலக வேண்டும் என்பதற்காக "கழுத்தில்

மாங்கல்யம் தரித்துக் கொள்" என்கிறது. இவ்வாறு ஒவ்வொரு தத்துவங்களும் கூறி தனக்கென ஒரு தார்மீக வேலி போட்டு வளைத்து வைத்திருப்பது இந்துமதம்.

இந்துக்களின் ஒவ்வொரு நடத்தையிலும், பழக்க வழக்கங்களிலும், ஏன் பேசுகின்ற வார்த்தைகளிலும் கூட இந்துமத தத்துவங்கள் ஒலிக்கின்றன. நிலம் என்பது மதம். வானம் என்பது பரம்பொருள். நிலத்தை பங்குபோடலாம் ஆனால் வானத்தை பங்குபோட முடியாது என்ற உயர்ந்த கருத்தை வலியுறுத்துவது இந்துமதம் தான்.

இத்தகைய சிறப்பு பெற்ற இந்துமத தத்துவங்கள் நாகரிக மோகத்தினாலும், வெளிநாட்டுக் கலாச்சாரப் பழக்க வழக்கங்களினாலும், தாராள பொருளாதார இறக்குமதி காரணமாகவும் இன்றைய இளைய தலைமுறையினர் திசை திருப்பப்படுகின்றனர். அன்பும், அமைதியும் குடியிருக்க வேண்டிய இடங்களில் எல்லாம் கொடுமையும், சஞ்சலமும் கோரத்தாண்டவமாடிக்கொண்டிருக்கிறது. அதே வேளை ஆழமான கோட்பாடுகளைத் தகர்ப்பது என்பதோ உதாசீனம் செய்வதோ முடியுமான செயலல்ல.

எனவே ஆண்டவனின் மெய்ப்பொருள் வடிவத்தை அடைய உதவும் வழி நின்று வீடுபேறு அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அருள்பெறுவோமாக.

**"மேன்மைகொள் சைவநீதி**
**விளங்குக உலகமெலாம்".**

## உனது வாழ்வைப் பார்
## TAKE A LOOK AT YOUR LIFE

- **சுற்றிவரப் பார்** (Look around)
  - உன் உதவி வேண்டியவருக்கு உதவு. கடவுள் உன்னை நேசிப்பது போல், அயலவரை நேசி, மற்றவர்களின் தேவைகளை அறிவதற்கு மனத்தை மென்மையாக்கு.

- **கீழே பார்** (Look downwards)
  - யாரையும் அவமானப்படுத்தாதே, தாழ்மையாக இருப்பவரைப் பார்த்து அவரிடமிருந்து கற்றுக்கொள். கடவுளின் முன்னால் நாம் அனைவரும் சமமானவரே. கடவுளுக்கு நாம் பதில் சொல்லும் நிலையில் உள்ளோம்.

## ஆங்கில மன்றச் செயற்பாடுகள்

**ஆ**ங்கில மொழித்திறன் வளர்ச்சியில் தனது பங்களிப்பை ஆற்றி வருகிறது. கோட்ட, வலைய, மாவட்ட, மாகாண மட்டப்போட்டிகளில் மாணவரை பங்குபற்றச்செய்து வெற்றியீட்ட வழிசெய்துள்ளது. 1998இல் ஆங்கில தினம் கொண்டாடப்பட்டது.




புதிய கல்விச் சீர்திருத்தக் கட்டமைப்பின்படி தொடர்பாடலுக்கான ஆங்கில மொழி விருத்தியில் ஆர்வமும் முயற்சியும் இயன்றவரை எடுத்து வருகிறது.

The proper study of mankind is man.

பேசும் பேச்சும், செய்யும் செயலும், எண்ணும் எண்ணம்
இவையனைத்தும் ஒருமைப்பாடோடு இருக்க வேண்டும்.

# Achievements in the English day competitions

| Year | Grade/ Year | Name | Competions | Divisional | Zonal | District | Provincial |
|---|---|---|---|---|---|---|---|
| 1985 | Grade-4 | V.Koushali | Reading aloud | 2nd | | | |
| | Grade-4 | T.Revethy | Reading aloud | 2nd | | | |
| | Grade-4 | S.Usha | Recitation | 2nd | | | |
| | Grade-5 | N.Devika | Reading aloud | 3rd | | | |
| | Grade-5 | | Choral Recitation | 3rd | | | |
| 1986 | Year-5 | V.Koushali | Recitation | 1st | | | |
| | Year-5 | S.Subasini | Dictation | 2nd | | | |
| | Year-6 | P.Mithilarasi | Recitation | 1st | | | |
| | Year-6 | J.Revethy | Recitation | 2nd | | | |
| | Year-6 | S.Usha | Reading aloud | 2nd | | | |
| | Year-4 | | Nursery Rhyme | 1st | | | |
| | Year-6 | | Role play | 1st | | | |
| | Year-6 | | Choral Recitation | 1st | | | |
| 1996 | Year-3 | S.Abiramy | Recitation | 2nd | | | |
| | Year-4 | S.Sukirtha | Reading aloud | 2nd | | | |
| | Year-4 | S.Mahilini | Reading aloud | 2nd | | | |
| | Year-4 | T.Tharsika | Recitation | 1st | | | |
| | Year-5 | B.Kajana | Reading aloud | 2nd | | | |
| | Year-5 | P.Thanusha | Reading aloud | 3rd | | | |
| | Year-5 | N.Ajanthini | Recitation | 2nd | | | |
| | Year-5 | S.Mauri | Dictation | 3rd | | | |
| 1997 | Year-3 | T.Anusiya | Recitation | 2nd | | | |
| | Year-3 | K.Eeeswarajanani | Recitation | 3rd | | | |
| | Year-4 | S.Abiramy | Recitation | 1st | | | |
| | Year-4 | S.Abiramy | Reading aloud | 3rd | | | |
| | Year-5 | S.Sukirtha | Reading aloud | 1st | | | |
| | Year-5 | S.Mahilini | Reading aloud | 2nd | | | |
| | Year-5 | S.Sukirtha | Dictation | 1st | | | |
| | Year-5 | T.Tharsika | Recitation | 2nd | | | |
| | | | Drama | 1st | | | |
| 1998 | Year-3 | S.Lavanja | Handwriting | 1st | 2nd | | |
| | Year-3 | G.Bavithira | Recitation | 2nd | 3rd | | |
| | Year-4 | T.Sharmila | Handwriting | 1st | 2nd | | |
| | Year-4 | K.Eeeswarajanani | Recitation | 1st | 1st | | |
| | Year-5 | S.Abiramy | Recitation | 1st | 3rd | | |
| | Year-5 | R.Arani | Handwriting | 1st | 3rd | | |
| | | | Dialogue Drama | 1st | 2nd | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1999 | Grade3 | P.Thanoja | Handwriting | 1st | 2nd | | |
| | Grade3 | K.Abarna | Recitation | 1st | 1st | 3rd | |
| | Grade4 | G.Bavithira | Handwriting | 2nd | | | |
| | Grade4 | K.Gobika | Handwriting | 3rd | | | |
| | Grade4 | K.Gobika | Recitation | 1st | 1st | | |
| | Grade3 | K.Abarna | Handwriting | 3rd | | | |
| | Grade3 | S.Rukshika | Recitation | 2nd | 2nd | | |
| | Grade5 | K.Eeeswarajanani | Recitation | 3rd | | | |
| | | | Drama | 3rd | | | |
| 2000 | Grade 3 | P.kajaluxy | Recitation | 1st | 2nd | | |
| | Grade 3 | T.Arulvahini | Recitation | 2nd | | | |
| | Grade 3 | R.Hasthanee | Copy writing | 1st | 1st | | |
| | Grade 4 | S.Gobinantha | Reading aloud | 1st | 3rd | | |
| | Grade 4 | P.Thanuja | Copy writing | 1st | 1st | 3rd | |
| | Grade 5 | K.Gobika | Recitation | 3rd | | | |
| | Grade 5 | S.Chaarmalai | Reading aloud | 2nd | 2nd | 2nd | |
| | Grade 5 | S.Lavanja | Reading aloud | 3rd | | | |
| | Grade 5 | P.Rojitha | Copy writing | 2nd | | | |
| | | | Drama | 1st | 1st | 2nd | |
| 2001 | Grade 3 | M.Thushanthi | Recitation | 2nd | | | |
| | Grade 4 | S.Subaka | Dictation | 1st | 1st | | |
| | Grade 4 | R.Mathura | Dictation | 2nd | 2nd | | |
| | Grade 4 | P.kajaluxy | Reading aloud | 3rd | | | |
| | Grade 4 | S.Selvaluxy | Story telling | 1st | | | |
| | Grade 4 | T.Arulvahini | Recitation | 2nd | 1st | | |
| | Grade 4 | S.Selvaluxmy | Recitation | 3rd | | | |
| | | | Action Song | 1st | 3rd | | |
| | | | Drama | 1st | 1st | 1st | 3rd |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2002 | Grade 3 | V.Santhana | Recitation | 2nd | | | |
| | Grade 5 | T.Arulvahini | Recitation | 1st | | | |
| | | | Group Song | 1st | 3rd | | |
| 2003 | Grade 3 | R.Sinthuja | Recitation | 3rd | | | |
| | Grade 3 | S.Ganimoli | Copy writing | 1st | | | |
| | Grade 3 | S.Hajanarajani | Copy writing | 2nd | | | |
| | Grade 4 | V.Santhana | Recitation | 1st | | | |
| | Grade 5 | M.Neethini | Recitation | 3rd | | | |
| | | | Group Song | 2nd | | | |
| | | | Drama | 1st | 2nd | | |
| 2004 | Grade 3 | S.Subalaxmy | Recitation | 1st | 3rd | | |
| | Grade 3 | U.Thadshajini | Recitation | 2nd | | | |
| | Grade 4 | S.Saranka | Recitation | 1st | 3rd | | |
| | Grade 4 | S.Hajanarajani | Copy writing | 2nd | | | |
| | Grade 5 | V.Santhana | Recitation | 1st | 2nd | | |
| | Grade 5 | K.Mathura | Recitation | 2nd | | | |
| | | | Group Song | 2nd | | | |
| | | | Drama | 1st | 1st | 2nd | |

பண்பில்லாதவன் ஆடையில்லாதவன்.
பாராட்டத் தெரிந்தவனே உலகில் உயர்ந்தவன்.

## Jaffna

Jaffna is our city. It is a very old city. It is not as big as Colombo. It is very crowded. The roads are narrow. The traffic is heavy. There is always a traffic jam. There are rows and rows of shops on both sides of the road. There are many temples and churches in Jaffna. There are many schools and a main library in our city.

***K. Keerthana***
*Grade 4'C'*

## Myself

My name is Keerthiga. I am eight years old. I am in grade 3. I live in Jaffna. My father is a carpenter. My mother is a housewife. I have two brothers and one sister. I study at J/Hindu Ladies' primary School. My favourite subject is Maths. I like cake. My hobby is gardening. I want to become a doctor.

***Keerthiga***
*Grade 3'C'*

## My Pet

My pet is a cat. It's name is Kitty. It likes to eat fish. It drinks milk. My father brought it from my grandmothers' house. Its' colour is white and it has four black spots on its back. It likes to play with me. My mother doesn't allow me to keep it near me. But when I sleep I keep it on my bed. It bites our legs when it is hungry. When I go anywhere it runs after me.

It cries 'mew' 'mew' and licks my hand. At that time I feel that it is better if it also can speak like us. It comes near us and gets on to our laps and sleeps. I love my cat very much and I wish god's care for it.

***S. Saranga***
*Grade 4'B'*

## The Elephant

The Elephant is the largest animal. It is a strange animal to look at with its thick legs, huge sides and back, small tail, large ears and above all its long nose, the trunk. It can move very quickly when it likes.

Elephants are found in India and Africa. They live in herds in the forests. Catching elephants alive is very difficult.

***P. Piraveena***
*Grade 2 'A'*

## Do you know?

1. The largest island – Greenland
2. The largest lake – Caspian sea
3. The largest bird – North African Ostrich
4. The longest wall – The Great Wall of China
5. The highest mountain – Mt. Everest
6. The hottest desert – Arabia Desert
7. The tallest animal – The Giraffe
8. The saltiest sea – The Dead Sea
9. The first man to travel to space – Yuri Gagarin
10. The first man to land on the moon – Neil Armstrong

***Piraveena***
*Grade 4'C'*

## Good Manners

Good manners do not come naturally. They have to be learnt. If children were not told and shown how to behave politely, they would grow up rough and rude like savages. Good manners are the mark of a gentleman. A real gentleman always tries to consider other people's feelings. He will not say things that will hurt them. He will not speak in a rude way to offend them. He will not do things, when he is with them, that he knows they do not like.

So good manners are really a form of unselfishness. Good manners are necessary to success in life.

***G. Vishalini***
*Grade 3"A"*

## My Country

My country is Sri Lanka. It is in the Indian Ocean. It is a tropical country. It is very small and beautiful. My country has many ancient places. The capital of Sri Lanka is Sri Jayawardanapura. Mahaweli Ganga is the longest river. Pidurutalagala is the highest mountain. There are many water falls and rivers in Sri Lanka. Sri Lanka exports tea, rubber and coconut. The people in our country are well educated. Many tourists visit my country every year. I love my country very much.

***S. Subaluxmi***
*Grade 3 'A'*

# Should English be a compulsory subject?

*Mrs.S.Paheerathan.*
*J/Jaffna Hindu Ladies' Primary School.*

The importance of English is felt by one and all today. English is given great prominence and importance. There is a big clamour for English. English has been neglected over the years, because it has been made an optional subject in the curriculum. The decision of the Education Ministry to make English as a compulsory subject from the year 2000 is a welcome change. Leading educationists hail this change. If English is a compulsory subject students will make special efforts to learn English. They will feel the importance of English.

English is vital in the fast changing world. English is essential for global communication and world knowledge. Students should learn English to know the world better. English is a must for university and other forms of higher education. We should learn English to become more enlightened.

English is a window to world knowledge. English is a most wide spread language in the world. We have stepped into the computer and internet age. English is essential for computer science. English is essential to communicate with the other ethnic groups. Knowledge of English makes one fit to move in the international community. Young people with a good English background have good openings at home and abroad. English is also a means to find employment abroad. We should learn English to enjoy the benefit of English education.

"Tell me your company, I shall tell you what you are"

உனது நட்பு எப்படியோ, அப்படியே உனது எண்ணங்களும், நீயும் அவ்வாறே ஆகிறாய்.

# ஆரம்பக் கல்வி மாணவர் ஆங்கில மொழியைக் கற்க வேண்டியதன் அவசியமும் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான சில தீர்வுகளும்.

**திரு. க. கனகரத்தினம்**
முன்னாள் பட்டதாரி மொழிபெயர்ப்பாளர்,
யாழ் பல்கலைக்கழகம்.

இன்று தேசிய மட்டத்தில் விவாதிக்கப்படும் கல்வி பற்றிய முக்கிய விடயங்களில் ஆங்கிலத்தில் பயனுறுதியுடன் கற்பித்தல் என்பதும் ஒன்றாகும். 1960களின் பின்னர் கல்வி முறைமைகளில் ஆங்கிலத்திற்கு கொடுக்கவேண்டிய அந்தஸ்து அரசியலுடனும் தேசிய வாத சிந்தனைகளுடனும் தொடர்புபடுத்தப்பட்டதனால் ஒரு குழப்ப நிலை ஏற்பட்டது. அது ஒரு துரதிஸ்டவசமான நிகழ்வாகும். அதனை ஒரு நிலைமாறு காலச் சிந்தனை எனக் கருதப்பட வேண்டும். ஆனால் ஒரு பரம்பரை பாதிக்கப்பட்ட பின்னரே புதிய சிந்தனை, யதார்த்தபூர்வமான சிந்தனை உருவாகியுள்ளது.

சர்வதேச மட்டத்திலும் உள்நாட்டிலும் அரசியல், பொருளாதார ஒழுங்கமைப்பில் ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்களுக்கு முகம் கொடுக்கக்கூடியதான கல்வி முறையில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது தவிர்க்கமுடியாத ஒரு விடயமாகிவிட்டது. கணிசமான எண்ணிக்கையில் மாணவர்கள் இலங்கையிலுள்ள சர்வதேச பாடசாலையிலுள்ள முதலாந் தரத்திலிருந்து ஆங்கில மொழியின் மூலம் கல்விகற்று வருகின்றனர். இதனால் மாணவர் சமூகம் இரு கூறுகளாக பிரிந்துள்ளது. இந்த பிரிவின் தாக்கம் ஏற்கனவே தொழில் வாய்ப்பு பெறுவதில் பிரதிபலித்துள்ளது. ஆங்கில மொழி மூலம் கற்றவர் முன்னுரிமை அடிப்படையில் தனியார் துறையில் வேலைவாய்ப்பை பெறுகின்றனர். இந்த நிலைமையை சமாளிக்கும் ஏற்பாடாக தாய் மொழி மூலம் கல்வி கற்கும் மாணவர் இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை இடைவிடாது அதனைப் பேச்சிலும் எழுத்திலும் நன்கு பயன்படுத்தக்கூடிய தேர்ச்சியை பெறக் கூடியவர்களாக உருவாக்குவது சமூகத்தின் கடமையாகும்.

இதற்காக ஆரம்ப கல்வியினை தொடக்கத்திலிருந்தே அக்கறையுடனும் பயனுறுதியுடனும் ஆங்கிலத்தை கற்பிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது காலத்தின் தேவையாகும். அதற்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் ஆரம்ப பாடசாலைகளில் ஏற்படுத்தி கொடுத்தல் கல்வி திணைக்கள அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் தலையாய கடமையாகும்.

“இளமையிற் கல்வி சிலையில் எழுத்து” என்பது மொழியை கற்பதற்கு மிகவும் பொருத்தமான மூதுரையாகும். பாலர் பாடசாலைகளிலே ஆங்கிலப் பாடல்களை சிறார்கள் படிக்கத் தொடங்குகின்றனர். பாடல்களின் கருத்துக்களை அவர்கள் முழுமையாக விளங்கிக் கொள்வதில்லை. ஆனால் பல ஆங்கில சொற்களை மனனம் செய்து விடுகின்றனர். அதே போன்று ஆரம்ப கல்வியின் தொடக்க நிலையில் எளிய வாக்கியங்களை பல முறை எழுதுவதன் மூலமோ சொல்லுவதன் மூலமோ உணர்வுநிலையற்ற தன்னிலைப்படுத்தலைப் (UNCONSCIOUS ASSIMILATION) பெறுவதனால் சரியான மொழி வழக்காற்று மரபை (CORRECT USAGE) மாணவர் கற்றுவிடுகின்றனர். இதனால் தயக்கம் ஏதும் இன்றி ஆங்கில மொழியில் கருத்தை வெளிப்படுத்தும் திறனைப் பெற்றுவிடுகின்றனர்.

இன்றைய காலச் சீர்திருத்தங்களின் செல் நெறியை நோக்கும் போது எதிர்காலத்தில் ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்யும் மாணவர்கள் ஆங்கிலத்தைப் போதனை மொழியாக தொடரவேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படலாம். ஆகையினால் ஆங்கிலத்தை ஆரம்ப கல்வியில் கற்பது அவசியமாகும்.

அச்சு. இலத்திரன் ஊடகங்கள் மூலம் பெறப்படும் செய்திகள் தகவல்கள் ஆகியவற்றை கிரகித்து அறிவைப் பெறவும் கணனியை நன்குபயன்படுத்தவும் ஆங்கிலத்தை ஆரம்ப கல்வியில் கற்கவேண்டியது அவசியமாகும்.

தமிழ் மொழியில் வெளியிடப்படும் நூல்களில் பெரும்பாலானவை ஒரு வண்ணத்தில் அச்சிடப்படுகின்றன. இவை புத்தாயிரமாம் ஆண்டின் மாணவர் தேவையை நிறைவு செய்வதாக தெரியவில்லை. ஆங்கிலத்தில் மிகச் சிறந்த முறையில் தரமான காகிதத்தில் பல வண்ணங்களில் அச்சிடப்பட்ட நூல்கள் பல, தினமும் வெளியிடப்படுகின்றன. அவற்றைப் படிப்பதனால் பல்துறை சார்ந்த அறிவை ஆரம்பக் கல்வி மாணவர்கள் பெறலாம்.

இடைநிலைக் கல்வி மட்டத்தில் ஒருசில பாடங்களை ஆங்கில மொழியில் கற்பித்தல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களில் பெரும்பாலான பீடங்களில் ஆங்கில மொழியே போதனா மொழியாக உள்ளதுடன் ஏற்கனவே தாய் மொழிமூலம் கற்பிக்கப்பட்ட கற்கை நெறிகளைக்கூட ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும் மிகவிரைவாக மாறிவரும் உலகில் பல்வேறு துறைகளில் ஆங்கிலத்தில் வெளியிடப்படும இடைநிலைக் கல்வி, உயர் கல்விக்குரிய நூல்களையும்,சஞ்சிகைகளையும் மொழி பெயர்த்து வெளியிடுவதற்கான மனித வளமும் பொருள் வளமும் இலங்கை போன்ற வளர்ச்சி அடைந்து வரும் நாட்டில் இல்லாததனால் நூல்களையும், சஞ்சிகைகளையும் மொழி பெயர்ப்பதில் மூன்று நான்கு தசாப்தங்களின் முன்னர் காட்டிய அக்கறை இன்று காட்டப்படுவதில்லை. ஆகையால் ஆரம்பக் கல்வி தொடக்கம் ஆங்கிலத்தை கற்பிக்க வேண்டியுள்ளது.

ஆரம்ப மொழியை கற்பிப்பதில் ஆரம்ப பாடசாலைகளும் இடைநிலை பாடசாலைகளைப் போன்றே பின்வரும் பிரச்சனைகளை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அவையாவன, மாணவர் ஒவ்வொருவரும் வெவ்வேறு பின்னணியிலிருந்து வருகின்றனர். குறைபாடுடைய கற்பித்தல் முறைமை, போதிய அளவில் பார்த்தல் , கேட்டல், சாதனங்கள் பாடசாலைகளில் கிடைக்காமை.(சில பாடசாலைகளில் சாதனங்கள் ஏதும் இல்லை) மாணவரிடையே ஆங்கிலத்தை கற்கவேண்டும் என்ற ஊக்கமில்லை. பெரும்பாலான மாணவர்களின் வீட்டுச் சூழல் ஆங்கிலம் கற்கும் வாய்ப்புக்களை கொண்டிருப்பதில்லை. பாட நூல்களினதும் துணை வாசிப்பு நூல்களினதும் பற்றாக்குறை முன்னைய காலத்தில் விதிக்கப்பட்ட பாட நூல்களுக்கு துணை நூல்களும் விதிக்கப்பட்டிருந்தன. அந்த முறை தற்பொழுது கடைப்பிடிக்கப்படுவதில்லை. இலத்திரன் தொடர்புச் சாதனங்களின் தாக்கத்தால் வாசிப்பு பழக்கம் தாழ் மட்டத்தில் உள்ளது.

பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ள சில புதிய சொற்கள் மாணவரின் அறிவு மட்டத்திற்கு மேற்பட்டதென ஆங்கில மொழி கற்பிப்பவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். பொருத்தமான ஆங்கில நூற் தொகுதி பாடசாலை நூலகத்தில் இல்லாத நிலை. ஏறத்தாழ 200 நாட்கள் கொண்ட பாடசாலை ஆண்டு 130 பக்க ஆங்கில பாடநூலையும் 190 பக்க பயிற்சி நூலையும் கற்பித்து நிறைவு செய்யவேண்டிய ஒரு பாரிய பணியை ஆங்கில ஆசிரியர் செய்யவேண்டியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கில ஆசிரியர்களுக்கு கடும் பற்றாக்குறை நிலவுகின்றது.

மேற்குறித்த பிரச்சனைகளுக்கான தீர்வை கல்வித் திணைக்களம், அதிபர், ஆசிரியர், பெற்றோர், நலன்விரும்பிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஆகியன அளிக்கலாம்.

ஆங்கில மொழியை கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் நிலையில் எல்லா ஆசிரியர் மத்தியிலும் ஆங்கிலத்தின் அவசியம் பற்றிய சிந்தனை இருத்தல்

வேண்டும். இதுவரை ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாத ஆனால் தேர்ச்சி பெற விரும்பும் இதர பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தீவிர கற்கை நெறி (INTENSIVE COURSE) ஒன்று அளிக்கப்படுமானால் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் அடிப்படைத் தேர்ச்சியைப் பெற்றுவிடுவார்கள். ஆங்கிலப் பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புபடி ஒன்று வழங்கப்படல் வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் தொடர்பாடல்களுக்கான சூழல் ஒன்றை பாடசாலையில் உருவாக்கி கொடுக்கலாம். அத்தகைய சூழல் ஒன்று இன்று ஆரம்ப பாடசாலைகளில் இல்லை. இந்தப் பணியை கல்வித் திணைக்களம் மேற்கொள்ளலாம். இதற்கு நவீன மொழிக் கற்பித்தல் முறைமைகள் பயன்படுத்தப்படல் வேண்டும். ஆரம்பத்தில் மொழி கற்பித்தலுக்கான சாதனங்கள் அடங்கிய நிலையம் ஒன்று நிறுவப்பட வேண்டும். வளப் பற்றாக்குறை நிலவினால் விளம்பர அனுசரணையுடனும், தனியார் நிறுவனங்களின் உதவியுடனும் இதனை ஆரம்பிக்கலாம். இப் பயிற்சியை பெறுபவர்கள் ஆரம்ப ஆசிரியர் தேவையின் ஒரு பகுதியையாவது சமாளிக்கக்கூடியவர்களாக உருவாக்கப்படுவார்கள் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இதற்காக புலமைகண்டோரின் சேவையை கல்வித் திணைக்களம் பெற்றுக்கொள்ளலாம். இதனை பல பாடசாலைகள் இணைந்து கொத்தணி முறைமையிலும் மேற்கொள்ளலாம்.

ஆங்கிலத்தை கற்பிக்கும் சாதகமான மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் அதிபர் முக்கிய பங்கு வகிக்கலாம். இரைச்சலற்ற தனியான ஆங்கில அறை ஒன்றை பாடசாலையில் நிறுவலாம். அங்கு கற்றல், கற்பித்தல் சாதனங்களையும் உசாத்துணை நூல்களையும் களஞ்சியப்படுத்தி வைக்கலாம். வெண்கட்டியுடனும் பேச்சுடனும் ஆங்கிலத்தை கற்பிக்கும் முறைமையை மட்டும் தொடராமல் பாடசாலையின் வளத்திற்கு ஏற்றவாறு வானொலி, ஒலி நாடா, தொலைக்காட்சி, ஒளி எறியும் கருவி (Projector) ஆகியன ஆங்கிலத்தை கற்பிப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

அதிபர் தலைமையில் பாடசாலையின் ஆங்கில மொழிகற்பித்தல் குழுவொன்று அமைக்கப்பட வேண்டும். இந்த குழுவின் உறுப்பினர்களை பாடசாலையின் அபிவிருத்தி சபையுடன் கலந்து ஆலோசித்து நியமிக்கலாம். இந்த குழு மாணவரின் ஆங்கில மொழி தேர்ச்சியை காலத்திற்கு காலம் மதிப்பிட்டு பரிகார கற்கை முறைகளை அறிமுகப்படுத்தலாம்.

ஆரம்ப பாடசாலையின் நூலகத்தின் வளம், புதிய ஆங்கில நூல் சேகரிப்புக்கள் ஆகியன ஆங்கில மொழி அறிவை மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதில் பெரும் பங்கு ஆற்ற முடியும். மிகவும் அண்மையில் பிரசுரிக்கப்பட்ட ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக கற்பித்தலையும், கற்றலையும் இலக்காக கொண்ட நூல்களையும் ஆங்கில இலக்கியத்தை எதிர்காலத்தில் அறிமுகம் செய்யக்கூடிய இலகுபடுத்தப்பட்ட மீள் எழுதப்பட்ட ஆங்கில இலக்கிய நூல்களும் நூலகத்தில் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

பெற்றோர் தமது பிள்ளைகளின் ஆங்கில மொழி அறிவை வளர்ப்பதில் பெரும் உந்து சக்தியாக அமைகின்றனர். ஆங்கில மொழியை கற்பதற்கு ஒதுக்கப்படவேண்டிய நேரத்தின் அளவு இதர பாடங்களுக்கு ஒதுக்கப்படவேண்டிய நேரத்திற்கும் அதிகமாக இருக்கவேண்டியது அவசியம். ஏனெனில் மொழி கற்றலின் பல்வேறு கூறுகளான உச்சரிப்பு, சொற்களஞ்சியம், வசன அமைப்பு, அடிப்படை இலக்கணம், புரிந்துகொள்ளும் திறன் உரையாடல் மொழி, சரியான மொழி வழக்காறு, மரபுச் சொற்றொடர்கள் ஆகியவற்றிற்கு கவனம் செலுத்தி கற்கவேண்டியுள்ளது.

மாணவர் ஒவ்வொருவரினதும் இல்லந்தோறும் ஒரு வீட்டு நூலகம் இருத்தல் வேண்டும். அதில் பயனுள்ள ஆங்கில நூல் சேகரிப்புக்கும் உரிய இடம் வழங்கப்படவேண்டும். மாணவரின் இல்லத்தில் தொடரும் ஆங்கிலம் கற்கும் செயற்பாடு பாடசாலையின் கற்றல் செயற்பாட்டிற்கு வலுவூட்டுவதாக அமைதல் வேண்டும்.

# "How to Develop Positive Attitudes"?

*Miss. Sankary Paramsothy*
*J/Jaffna Hindu Ladies' Primary School.*

*No one is born with clear set of attitudes. The degree of success of any organization depends largely on the degree and level of positive, creative and enthusiastic work attitudes of its people. If you think like, "I can do better", "I will perform the best", you may achieve every thing. Organizational experiences are closely related to attitude formation. Principals and class room managers (teachers) set the trend for attitude formation of their people. Therefore, educational leaders can contribute towards development of positive and creative work attitudes of their people through their own positive, creative, optimistic and constructive approaches. Every thing that makes you whether positive or negative is determined by your thoughts. /the quality of your thoughts determines the quality of your work. I would like to share my ideas with you, for "How to develop positive attitude?*

- *Select positive words! For an example in response to the question 'How are you?' never say 'not bad'! or 'it is ok'. Instead always use expression such as wonderful, fine, excellent, I am doing well etc....*
- *Make it a habit to be positive: You are what you think! Your actions and attitudes are formed by your thoughts; Fill your mind with fresh new, creative and positive thoughts. Thoughts and words have power. You must feed your mind just as you feed your body.*
- *Smile and be enthusiastic.*
- *Plan on doing something positive each day.*
- *Think of 'problems' as challenges: Problems are an educational part of life. They can actually be good for you. All worth while achievements are the result of problem solving. Think of problem solving. The positive approach towards problem solving will result in the development of positive attitudes. You can take command of your life.*
- *Appreciate and admire your people: The deepest urge in your environment is the craving to be appreciated and admired. Pleasing manners will promote fruitful and rewarding relationship.*

## A perahera I have seen

*I went to see the Nawam Maha perahera with my family and an aunt who visited us from abroad. The perahera took place this year on the 15th and 16th of February and started around 6 p.m. on these days.*

*The first performers at this perahera were the whip crackers. They made a very loud noise. They usually announce the perahera. Then came the flag carriers.*

*They carried the Buddhist and the National flags. Then came the conch shell carriers, dancers and drummers. Soon after came the majestic elephants and the special elephant who carries the tooth relic. They looked magnificent in their colourful clothing.*

*The most breath-taking event was the man performing tricks with fireballs. There were also very big fat, tall stilt walkers, some were walking and dancing. Each one of them did their part very well.*

*That evening I went home very happy having seen this spectacular perahera.*

***Pirashanthini Panchalingam***
*Year 5c*

## Visit to Trincomalee.

*Last April we went on a trip to Trincomalee. We stayed at the Nilaveli Beach Hotel and spent three days visiting the important and beautiful places there. On the first day, we enjoyed Nilaveli beach. We were fascinated by the beauty of it. Then we worshipped at Konneswaran Kovil and Kirigaduseya. This has been built by king Devanampiyatissa. There is a margosa tree near Kirigaduseya and the specialty of this tree is that the leaves are sweet. Then we visited Pigeon Island, Wilgamuwa Temple and oil tankers. We visited the cemetery maintained by the English.*

*This has been built to commemorate a crew that died in blast during the Second World War. We visited the most famous hot springs. There are seven of them and people believe that this water has the power to cure some ailments. However, there were a lot of people bathing from these springs. We visited the Muttur Jetty and the Trincomalee harbour also. This harbour has an inner and outer harbour. Many ships that sailed to any country of the world can be seen from this harbour. I will never forget this trip.*

***Mathura Kaneshanathan.***
*Year 5 B*

# Our Country

Our country is called an Island as it is fully surrounded by water. It is well known as the pearl of the Indian Ocean. Palk Strait separates Sri Lanka from India.

The president of Sri Lanka is Chandrica Bandaranayaka Kumarathunga. She also is the first woman president. Sri Jayawarddanapura is the new capital of our country. Its independence day falls on 04th of February.

It is a small country where all races and religious groups like to live together peacefully. Our country is provided with full of nature. The popular natural harbour and seven spiritual hot water wells are situated in Trincomalee District. Sri Lanka is well known for its tea. Tea, rubber and coconuts are exported and in turn we import many things.

There are 25 provinces all together and our school is placed in the Northern Province. Today peace is brought to our country after a long time. That is what the people yearn for and pray for. All in all our country is a beautiful country with natural resources.

*Y.Sangeetha*
*Year 5c.*

### ஔவையார் அருளிச்செய்த மூதுரை

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரங்
கன்மேல் எழுத்துப்போற் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர் எழுத்திற்கு நேர்.

## *The following are the proverbs which were derived from our teacher's mind according to contextual and environmental*

1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
   Unity is strength

2. அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்
   A friend indeed is a friend inneed

3. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒடுக்கும்
   Tears of the poor are equal to the knife

4. ஆழமறியாமல் காலை விடாதே
   Look before you leap

5. நிறைகுடம் தளம்பாது
   Empty vessels make the most noise

6. நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கும்
   Man proposes but God disposes

7. ஆனைக்கும் அடி சறுக்கும்.
   Good homer sometimes none

8. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
   Make hay while the sun shines

9. மதியாதார் வாசல் மிதியாதே.
   Don't respect those who don't respect

10. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
    Unity is strength

11. வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும்.
    Prevention is better than cure

12. விளையும் பயிரை முளையில் தெரியும்.
Man is known by the company he keeps

13. சிறுதுளி பெருவெள்ளம்.
Many a little makes a mickle

14. பேராசை பெருநட்டம்
Covet all lose all

15. மனமுண்டானால் இடமுண்டு
When there is a will there is a way

16. குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்காது.
Sugar is sweet even in darkness

17. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
Guilty mind is always in trouble

18. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்.
Industrious person never fails in life

19. வினைவிதைத்தவன் வினையறுப்பான்.
As you sow so you shall reap

20. துட்டனைக் கண்டால் தூர விலகு.
Keep away from bad company

21. நெருப்பின்றி புகையாது.
No smoke without fire

22. பணம் பாதாளம்மட்டும் பாயும்.
Money makes every thing

23. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து
Too much of anything is good for nothing

24. காகம் திட்டி மாடு சாகாது.
The moon does not need the barking of dog

25. வேலியே பயிரை மேய்ந்தால் விளைவது எப்படி.
The law maker should not be a law breaker

26. ஏற்றமுண்டானால் இறக்கமுண்டு.
Every tide has it's ebb

27. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
Face is the index of mind

28. கண்டதும் கற்க பண்டிதன் ஆவான்.
Reading makes a perfect man

29. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
Health is wealth

30. புத்திமான் பலவான்.
Knowledge is power

31. தோல்வியை கண்ணியமாக ஏற்றுக்கொள்.
Accept defeat sportingly

32. நிதானமும் விடாமுயற்சியுமே வெற்றிக்கு அடிப்படை.
Slow and steady wins the race

33. சுயநலவாதிகள் பேசும் இனிமையான சொற்கள் தமது சுய லாபத்துக்கே.
Selfish people speak sweet words to serve their own ends

34. அதிகதேவைகள் அதிக துன்பங்கள் தரும்.
Riches do not always bring happiness

35. நாளைய தேவைக்கு இன்றே சேமியுங்கள்.
Save today's surpluses for tomorrow's needs

36. அதிக ஆசை அதிக நஷ்டம்.
Greed leads to grief

37. நற்செயல் நன்மைதரும்.
One good turn deserves another

38. பேராசை பெருநஷ்டம்.
Greed is the root of all evils

39. கோபம் துன்பம் தரும் சாந்தம் இன்பம் தரும்..
Anger leads to sorrow peace leads to joy

40. சிறுஉருவம் உடையவரும் அருஞ்செயலைச் செய்வர்.
It is good to be kind and humble

41. முட்டாளின் தற்பெருமை அழிவைத் தரும்.
Vanity is foolishness

42. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
A third person gains when two persons quarrel

43. அவன் செய்த வினை அவனுக்கு.
Tit for tat

44. அகம்பாவம் பெரும்பாவம்
Might is not always right

45. வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் இருப்பான்.
Those who play smart are likely to be out smarted by smarter people

***Kanimozhi Suthananthararaja***
*Year-4B*

## *Live Your Life*

| | |
|---|---|
| *Life is a book* | *Study it* |
| *Life is a Beauty* | *Worship it* |
| *Life is a Challenge* | *Meet it* |
| *Life is a Dream* | *Realize it* |
| *Life is a Sorrow* | *Over come it* |
| *Life is a Tragedy* | *Face it* |
| *Life is a Song* | *Sing it* |
| *Life is a Love* | *Enjoy it* |
| *Life is a Game* | *Play it* |
| *Life is a Adventure* | *Dare it* |
| *Life is a Promise* | *Fulfill it* |
| *Life is a Struggle* | *Accept it* |
| *Life is a Duty* | *Perform it* |
| *Life is a Journey* | *End it.* |

# ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் வகை கூறல்களும் சவால்களும்.

**திரு. பா. தனபாலன்**
B.A(cey).P.G.D.E.MPhil in Ed.
உப பீடாதிபதி(கல்வியும் தர மேம்பாடும்).
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி

ஆரம்பத்துறையே இடைநிலை. உயர்கல்விக்கும், உவப்பான வாழ்க்கைக்கும் மாணவர்களை உயர்த்தும் ஏணிப்படிகளாகும். இதைக் கருதியே இன்றைய கல்வி உலகமும், சமுதாயமும், அரசாங்கமும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இத்துறையில் மிகக்கூடிய அக்கறை காட்டி வருகின்றனர். ஆனாலும் எம் பிரதேசங்களில் இத்துறை சார்ந்த கரிசனையோ, அக்கறையோ, தேவையான அபிவிருத்திநோக்கிய செயல்திட்டங்களோ போதுமானவையாக இல்லை. மேலும் ஆரம்பக்கல்வித்துறையில் அபிவிருத்தி காணப்படாததால் தான் தற்போது சமூகத்தில் பல சீரழிவுகள் இடம்பெற்று வருவதாக சமூகவியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே ஆரம்பக்கல்வி அமுலாகும் பாடசாலைகள் சமூகத்திற்குப் பெருமளவு வகைக் கூறல்களை வழங்க வேண்டியுள்ளது.

இங்கு வகைகூறல் என்பது தமது கடமைகட்கு பொறுப்புக் கூறல் என்பதாகும். இதனை செவ்வனே செய்ய பல சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. இன்றைய பெரும்பாலன சமூக உறுப்பினர்கள் தமது இருப்பு, அடையாளம், தேவை, கடமை, என்பற்றில் அக்கறை செலுத்தாமலும், ஆக்கபூர்வ சிந்தனை, படைப்பாற்றல், தொடர்பாடல் திறனின்மை, ஒத்துழைப்பு, சமத்துவம், சுயமுகாமைத்துவம்போன்ற விடயங்கள் தொடர்பான விழிப்புகள் அற்றுக்காணப்படுகின்றனர்.

மேலும் பலர் ஒரு நற்பிரசையின் அர்த்தம் விளங்காது, சமூகமயமாகாது சமூக சீர்கேடுகளையும் செய்து வருகின்றனர். எமது சமய விழுமியங்களும் பண்பாடுகளும் சிதைந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் அடிப்படையிலேயே தீர்வு காணும் விதை ஆரம்ப பாடசாலையிலேயே உள்ளது.

**ஆரம்பப் பாடசாலை அடிப்படையிலான புதிய வேலைத்திட்டங்கள்:-**

ஆரம்பக்கல்விப் பாடசாலையானது சமூகத்தின் ஒரு மாதிரியாக, குறுக்குவெட்டாக உள்ளது. மேலும் சமூகத்துடன் இன்றியமையாத உயிர் துடிப்பான தொடர்புகளையும், ஆரம்ப பாடசாலை கொண்டிருக்க வேண்டும். ஆனாலும் எமது பிரதேசத்தில் ஆரம்ப பாடசாலைகளுக்கும் சமூக எதிர் பார்ப்புக்களுக்கும் இடையே பெரும்பாலும் முரண்பாடுகள் நிலவுகின்றன. பாடசாலைகள் பற்றிய விளக்கமின்மைகளும், விமர்சனங்களும் பல்கிப் பெருகியுள்ளன. இதற்குப் பெற்றோர்- சமூகத்தவரிடையே ஆரம்பக் கல்விப் பாடசாலை

அதன் சீர் திருத்தச் செயலாற்றுகைகள் பற்றிய விளக்கமின்மைகள் நிலவுகின்றன. ஆரம்ப ஆசிரியர்கள், அதிபர், நிர்வாகிகளிடையே சமுதாயம் தொடர்பான உணர்வுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கு பாடசாலை அடிப்படையிலான புதிய சமூக மயமாக்கல், கல்வி மயமாக்கல் வேலைத் திட்டங்கள், செயல் நிலை ஆய்வுகளை அமுலாக்க வேண்டியுள்ளது. உதாரணமாக

1. மாதாந்த பெற்றோர் கூட்டங்கள், பெற்றார் ஆசிரியர் தினம், பாடசாலை தினம், கல்விக் கண்காட்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் மூலம் பெற்றோரையும், சமூகத்தையும் பாடசாலைக்குள் வரவழைத்து ஈடுபாடு கொள்ளவைத்தல்.

2. ஆரம்ப கல்விச் சிறார்களைக் கொண்டு அருகிலுள்ள வீதி, கோவில், பொது இடங்களை தொண்டு அடிப்படையில் அதிபர், ஆசிரியர்கள், சமூகத்தவர்களையும் இணைத்து சுத்தமாக்கல். சிறார்களுக்கான களப் பயிற்சிகளை, சுற்றாடல், சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தல்.

3. பாடசாலை அபிவிருத்தி சங்கத்தை உயிர்த் துடிப்பாக செயலாற்ற வைத்தல். மாணவர்களின் ஆரம்ப கல்வி தொடர்பாக சமூகம் நோக்கிய, வீடு நோக்கிய விழிப்புணர்வு செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்தல் என்பவற்றின் மூலம் பொது நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று சமூக உறவுகளைக் கட்டி எழுப்பலாம். தற்பொழுது மேற் கண்டவாறான செயற்பாடுகள் நிகழ்ந்தாலும் அவை உயிர்த்துடிப்பானவையாக இல்லை. இந் நிலையை எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மாற்றுதல் வேண்டும்.

இன்றைய ஆரம்ப பாடசாலைகள் கல்வி நிலையங்களாக மட்டும் கருதப்படுவதில்லை. அவை ஒரு சமூக ஒழுங்கமைப்பாகும். இங்கு வருபவர்களே எதிர்காலச் சந்ததிகளாக உள்ளனர். எனவே அயற் சமூகத்துடன் ஆரம்ப பாடசாலை பல்வேறு தொடர்புகளை உயிரோட்டமாக வைத்திருத்தல் வேண்டும். பாடசாலை தொடர்பான நம்பிக்கையைச் சமூகம் பெறும்போது சமூகத்திலிருந்து பல உதவிகள், வளங்கள் பாடசாலைக்கு கிடைக்கும். அதனூடு வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாடசாலைகளில் நிலவி சமநிலை ஆளுமையையும் ஆற்றலும், ஒழுக்கமும் கொண்ட இளம் சமுதாயத்தை அடிப்படையிலிருந்து உருவாக்கலாம். இதற்கு ஆரம்ப கல்வி ஆசிரியர்களின் பங்களிப்பும், அர்ப்பணிப்பும் அவசியமாக தேவைப்படுகின்றது.

## புதிய ஆரம்ப கல்வி ஆசிரியர் நடிபங்கு, வகைகூறல்.

மாற்றத்தின் முதன்மை முகவர் ஆசிரியர். மேலும் இன்று ஆரம்ப ஆசிரியர் வளர்ப்புப் பெற்றோராகவும் செயல்பட வேண்டும்.




வழிகாட்டியாக. உதவுபவராக, ஆலோசகராக, அன்பு செலுத்துபவராக மேற்கூறிய அனைத்து விடயங்களும் அடங்கும் நடி பண்புகளை ஆரம்ப ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும். ஆனால் இவ்வாறான நடி பண்புகளுக்கான ஆற்றல்களைப் பெற பல தடைகளும், சவால்களும் உள்ளன. இவை களைந்தெறியப்படவேண்டும். இதற்கான வளங்களையும் வாய்ப்புக்களையும் கல்வி முகாமையாளர்களும், அரசாங்கங்களும் வழங்க வேண்டும். இவ்வாறு வழங்கும் போது ஆசிரியர்களும் வகைகூறல்களுக்கு (Accountability) உட்படுவர்.

இங்கு வகைகூறலானது ஆரம்ப ஆசிரியர் தனக்குள்ள பொறுப்புக்களை சரிவர ஏற்று அதற்கான விளைவுகளை உணரும் தன்மையே வகைகூறலாகும். சமூக மாற்றம், சமூக நீதி, சமூக எதிர்பார்ப்புக்கள், விழுமியங்களுக்கு அமைதல், தன்னை தயார்ப்படுத்தல், கலாசாரப் பண்புகள், தர்க்க ரீதியாக செயற்படும் சிந்திக்கும் திறன். பொறுப்பேற்கும் தன்மை, மாணவர்களை குறித்த தேர்ச்சி மட்டத்திற்கு அடையவைக்கும் பொறுப்புணர்வைப் பெறல் என்பவை வகைகூறலின் அம்சங்களாக உள்ளன.

ஆசிரியர்கள் தம்பணி தொடர்பாக பலருக்கு வகை கூறவேண்டியுள்ளது. பல்வேறு துறையினர் வாயிலாக ஆசிரியரிடம் பொறுப்பானது(Responsibility) கையளிக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் ஆசிரியர் வகைகூறல், அரசாங்க ஒப்பந்த ரீதியான வகைகூறல், தொழில் ரீதியான வகைகூறல், நிதி-சம்பள ரீதியான வகைகூறல், அரசியல் ரீதியான வகைகூறல், சமூக உறுப்பினர் ரீதியான வகைகூறல், கற்பித்தல் ரீதியான வகைகூறல்கள் என விரிந்து செல்கின்றது. இவ் விரிவுகளுக்கெல்லாம் ஆரம்ப ஆசிரியர் வகைகூறக்கூடியதாக இருக்க தமது தொழில்வாண்மையை தொடர்ச்சியாக உயர்த்திக்கொண்டே செல்ல வேண்டும். இதற்கு,

- சுயமதிப்பீடு (Selfevaluation)
- மீள் சிந்தனை (Reflection)
- செயல் நிலை ஆய்வு (Action Research)
- ஆய்வுகள் (Survey)
- புத்தாக்கங்கள்;(Innovations).

என்பவற்றில் ஈடுபடவேண்டும். இவை ஆரம்பக் கல்வி மாணவர்கள், சமூகம் சார்பாக் இருக்க வேண்டும்.

**ஆரம்ப பாடசாலை சவால்களைக்களைய அதிபர்-ஆசிரியர் சுயமுகாமை.**

- பாடசாலைக் குறிக்கோள்களினூடு தம் திறன்களை செயற்படுத்தும் முனைப்பு தம் நலிவுகளை களைந்து வினைத்திறனாவதற்கான எண்ணக் கருக்களை சுயமாக இனங்காணல்.
- தலைமைத்துவம் - தன்னம்பிக்கை, தர்க்க ரீதியான சிந்தனை, தகவல்களை எண்ணக்கருக்களாக்குவது.
- மனிதவளமாதல் - சூழ்நிலைக்கேற்ப குழு நிலையில் இணைந்து பணியாற்றல், நேர்முறை நோக்கல், தன் செயல்களை சுகமாக, துல்லியமாக மதிப்பீடு செய்தல், மீளாய்வு செய்தல்.
- சகபாடிகளை வழிப்படுத்தல் - ஏனையோர் மேல் உயர, அவர்களுக்கேற்ப நேர்மையாக வழிகாட்டடல்.
- பிறர் மீதான கவனம் - சுயகட்டுப்பாட்டுடன் பேசுதல், பழகுதல், பக்கச்சார்பின்றி எதையும் நோக்குதல், அணுகுதல், வெளிப்படுத்துதல், பின்வாங்குதல், குழப்பங்களை தவிர்த்தல், நிலமைகளுக்கேற்ப சூழலுக்கேற்ப ஆளணியினர்களுக்கேற்ப மாறிக் கொள்ளுதல், பொருந்திச் செயற்படல், சூழலை உற்று நோக்கி அதற்குரிய செயல்களை, அணுகு முறைகளை நுட்பங்களை சுயமாக திட்டமிட்டு செயற்படுதல்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் ஆரம்ப பாடசாலைகள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வகைகூறல்கள், அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளும்போது ஆரம்பப் பாடசாலைகள் அபிவிருத்தி அடையும். இங்கு அர்ப்பணிப்பு (Dedication) என்பது கட்டாயமாக செய்யவேண்டியதை செய்வதற்கு கட்டுப்பட்ட ஒரு நிலையாகும். இதில் திட சங்கற்பம், பக்தி, தியாகம், வலுவான விருப்பு என்பனவும் அடங்கும். அர்ப்பணிப்பான செயலாற்றுகை மூலம் ஆரம்ப பாடசாலைகளை மேலும் அபிவிருத்திக்காக தொடர்ந்தும் தொடர்ச்சியாக புதிய செயற்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் இன்றைய தேவையாக உள்ளது.

# தாய்ப்பாலின் மகத்துவமும் துணை உணவின் அவசியமும்

இறைவனால் எமக்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதங்களுள் தாய்ப்பால் தனித்துவமானது. குழந்தைகளுக்கு ஏற்ற சுவை மிக்க விலை மதிப்பற்ற ஆகாரம் தாய்ப்பால் என்று கூறின் மிகையாகாது. தாய்ப்பாலினாலேயே ஒவ்வொரு குழந்தையும் போசாக்கு படவேண்டியது ஒவ்வொரு பெண்ணின் கடமையாகும். சேய்களுக்கு முதன் முதலில் அறிமுகமான பாலும் தாய்ப்பால் தான். ஆதிகாலம் தொட்டு இது வாழையடி வாழையாக வழக்கிலிருந்து வருகின்றது. மிருகங்கள் கூட தாய்ப்பாலினாலேயே தம் குட்டிகளை வளர்க்கின்றன. எனவே தாய்ப்பால் சேய்களுக்கு முக்கியமானது என்பதை ஆணித்தரமாக கூறலாம்.

தாய்ப்பால் ஆனது நோய்க் கிருமியற்ற சுத்தமான பாலாக விளங்குகிறது. அதுமட்டுமல்ல நோய்களைத் தடுக்கும் சக்தியையும் குழந்தையிடம் அதிகரிக்கச் செய்யும் வல்லமையும் உடையது. இதனால் வளரும் மழலையானது வியாதிகள் எதுவுமின்றி வாழ முடிகிறது. அன்னையின் பாலில் உள்ள சத்துப்பொருள் சரியான விகிதத்தில் அமைந்துள்ளது. இது குழந்தையின் வளர்ச்சிக்கு ஏற்ற அளவில் இருப்பதால் அதற்கு சமனாக செயற்கை முறையில் ஒருவித ஆகாரமும் தயாரிக்க முடிவதில்லை. மாதாவின் பால் மழலைக்கு மலச்சிக்கலை ஏற்படுத்துவதில்லை. இலகுவில் ஜீரணிக்க முடிகிறது. தாய்ப்பால் தேவையான சூட்டில் கிடைக்கின்றது. தாய்ப்பாலை விலை கொடுத்து வாங்கத் தேவையில்லை என்பதையும் பணத்தை மிச்சப்படுத்துகிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள வேண்டும்.

அன்னையின் பால் கொடுப்பது என்றால் நேரமும் மிச்சமாகின்றது. ஏன் தெரியுமா? புட்டிப்பால் கொடுப்பது என்றால் பாத்திரம் கழுவ வேண்டும். புட்டிப் பாலுக்காக கடைகடையாக அலைய வேண்டும். இவற்றைத் தயாரிக்க வேண்டும். இவைஎல்லாவற்றிற்கும் எவ்வளவு நேரம் வீணாகின்றது. எனவே ஒரு தாயின் பொன்னான நேரத்தை மண்ணாக்காமல் இருக்க உதவுவது மாதாவின் பாலேயாகும். அடுத்து செயற்கை முறைப் பாலைத் தயாரிப்பதற்கு பாத்திரங்கள் கழுவ வேண்டும். இல்லையேல் தொற்று கிருமிகள் ஏற்படுகின்றது. இந்த அபாயத்திலிருந்து மழலையை காப்பாற்றுவது மாதாவின் பாலேயாகும். பிரயாணம் செய்யும் போது புட்டிப்பால் கொடுக்கும் ஒரு தாய் ஒரு கையில் குழந்தையுடனும் மறுகையில் புட்டிப்பாலுக்கு வேண்டிய உபகரணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும். இது குழந்தையுடன் செல்லும் தாய்க்கு மேலதிக பழுவாக இருக்கின்றது. இப்பழுவை தாய்ப்பால் விடுவிக்கின்றது. குழந்தைகளுக்கு தாய்ப்பாலானது மகத்தானது போல துணை உணவும் இன்றியமையாததாகின்றது. துணை உணவு இல்லாவிடின் குழந்தையின் மூளை வளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் பாதிக்கப்படும். உணவை சிறிய அளவில் தொடங்கி படிப்படியாக அதிகரித்து செல்லுதல் வேண்டும். பழச்சாறு, அவித்த கீரைச் சாறு, அரை அவியல் முட்டை என்பன முதலில் துணை உணவாக அமைகின்றன. பின் ஆறுமாதத்தில் சோறு வடித்த கஞ்சி, கூழ், களி என்பன கொடுக்கப்படல் வேண்டும். 7,8 மாதத்தில் திரிபோசா போன்ற சத்துணவையும் 9ஆம் மாதத்தில் பாலுடன் கூடிய உணவையும் கொடுக்க வேண்டும். பின் ஒரு வயதில் மிளகாய் இல்லாத கறி வகைகள் சேர்க்கப்பட வேண்டும். உணவு தான் குழந்தையின் பிற் காலத்தை நிர்ணயிக்கின்றது. எனவே ஒரு நாட்டிற்கு தேவையான வீரனை தமர் மேதைபோல் உருவாக்க இலட்சிய உணவான தாய்ப்பாலும், துணை உணவும் மிக அவசியம் என உறுதியுடன் கூறலாம்.

**செல்வி ஸ்ரீ மனஸ்வினி**
தரம் 5 பி (1992)
(பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்றது.)

# கவின்கலை மன்றச் செயற்பாடுகள்

அழகியல் உணர்வை வெளிப்படுத்தும் நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றது. கலைவிழா பரிசளிப்பு விழா போன்ற விழாக்களுக்கான ஆடல், பாடல் நிகழ்வுகளைத் தயாரித்து வழங்குவதிலும் பங்கு வகிக்கிறது. இவ்வருடம் கல்வியியல் கல்லூரியால் நடாத்தப்பட்ட "அழகெழல்" போட்டியில் பங்குபற்றி இரு குழு நடனப் போட்டியில் முதலிடத்தைச் சுவீகரித்து கேடயத்தினையும் பணப்பரிசினையும் பெற்றுக்கொண்டமை பெருமைக்குரிய விடயமாகும். இது மட்டுமன்றி பல்வேறு சித்திரப் போட்டிகளுக்கு தயார்ப்படுத்தப்பட்டு மாணவர்கள் பங்குபற்றுவதற்கு வழிகாட்டப்படுகின்றது.

| ஆண்டு | பெயர் | போட்டி | தரம் | கோட்டம் | வலயம் |
|---|---|---|---|---|---|
| 1997 | க.புஸ்பலதா | தையல்போட்டி | 4 | 1 | விசேடசித்தி |
| 1997 | வி.விபூசாலினி | தையல்போட்டி | 1 | 2 | - |
| 1998 | கு.இரம்யா | ஓவியப்போட்டி | | - | மெச்சத்தக்கது |
| 1998 | யோ.தர்ஷிகா | ஓவியப்போட்டி | | - | 1 |
| 1998 | ச.அபிராமி | ஓவியப்போட்டி | | - | 2 |
| 1998 | வி.தாட்சாயினி | ஓவியப்போட்டி | | - | 3 |

**1998 ஹற்றன் நஷனல் வங்கியால் நடத்தப்பட்ட ஓவியப்போட்டியில் அகில இலங்கை ரீதியில் பரிசில் பெற்றோர்**

| இல | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 | அ. தாட்சாயினி | 2 |
| 2 | ச. அபிராமி | 4 |
| 3 | யோ. தர்ஷிகா | 4 |
| 4 | கி. சர்மியா | 4 |
| 5 | இ. சுகன்யா | 4 |
| 6 | து. அபிராமி | 5 |
| 7 | ம. ஜிவோனா | 5 |
| 8 | சு. சசிகலா | 5 |

**1999 யுனிசெவ் நிறுவனமும் யாழ். கல்வி வலயமும் இணைந்து நடத்திய ஓவியப்போட்டியில்**

ச. அபிராமி — பாராட்டுக்குரியது

# அரங்கில் அரும்புகள்























# விழாக்களின் நிழல்கள்



# ஆரம்பக் கல்வியில் அழகியல்

திருமதி ஞானசக்தி கணேசநாதன்
(Dip.Dance, B.A,Dip.Ed.)
விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசியகல்வியியற் கல்லூரி.

சுதந்திரமான வெளிப்படுத்தல் உருவாவது சுதந்திரமான பிள்ளைகளிடம் இருந்தாகும். பிள்ளைகளிடத்தே இச் சுதந்திரம் ஏற்படுவது தனது சுற்றாடலை நன்கு கிரகித்துக்கொள்வதனாலேயே ஆகும்.

பிள்ளையின் சுயாதீன செயற்பாட்டிற்குரிய தடைகளை நீக்கும்பொழுது பிள்ளை சுதந்திரமான வெளிப்படுத்தலில் ஈடுபடும். "Advance Montessori methods" எனும் நுலில் **மரியமொன்ரிசோரி** அம்மையார் எடுத்துக்காட்டியுள்ளார். அந்த அடிப்படையிலேயே குழந்தைகளின் தனிதன்மைக்கு மதிப்பளிப்பதன் ஊடாக அழகியற் கலை வளர்க்கப் படுகின்றது. அழகியல் கலையை வழங்கும் களங்களாக ஆரம்ப பாடசாலை விளங்குகிறது. அறிவுக்கு வழி திறக்கும். புலமைகளுக்கும், தசைகளுக்கும் நன்கு பயிற்சியளிக்க உதவும் கலை அழகியற் கலையேயாகும். இக் கலையை கற்பதனூடாக மாணவர்களை பூரண ஆளுமையுடையவர்களாகவும், சமூகத்தில் சிறந்த நற் பண்புள்ள சிற்பிகளாகவும், கலைஞர்களாகவும், சுவைஞர்களாகவும் உருவாக்குவது ஆரம்பப் பாடசாலை என்றே கூறவேண்டும்.

கலைத்திட்ட சமூகத்தில் அழகியற் பாடத்தை கற்பிப்பதன் மூலம் மாணவர்களிடையே

- ஆக்க இசை
- ஆக்க அசைவு
- ஆக்க நடிப்பு
- உடற்கல்வி செயற்பாடுகள்.

என நான்கு அம்சங்களில் பிரதானமாக அவதானம் செலுத்தப்படுகின்றது. ஆக்கம் எனக் கூறுவது போல செய்தல் இல்லாமல் புதிய பாங்கில் ஏதேனுமொரு ஊடகத்தினூடாக முன் வைக்கப்படும் சுயாதீனமான வெளிப்படுத்தல் ஆகும். இசை, அசைவு, நடிப்பு எனும் செயற்பாடுகள் "ஆக்கம்" எனும் சொல்லினால் விசேடப்படுத்தப்பட்டு காட்டப்படுகின்றது. இத்தகைய சிறப்பு பெற்ற அழகியல் பற்றிய தத்துவ ஞானிகளின் கருத்துக்களை நோக்கும்போது **"பென்ஸ்சீரெக்"** என்பவர் சுய வெளிப்படுத்தலை ஊக்குவித்தல், பிள்ளையின் இயல்பான ஆக்கத் திறனை மேம்படுத்துவதற்கு காரணமாக அமையும் என்று கூறுகின்றார். அகத்தினுள் எழும் மனவெழுச்சியினால் பிள்ளை வெளிப்படுத்தலுக்கு முற்படுகின்றன. உளச் சமநிலைக்கு முக்கியமான இச் சுயசிந்தனை செயலொழுங்கு தடை இன்றி பிரவாகிப்பதற்கு இடமளிப்பது ஆசிரியரின் பணியாகும் என **"ஹேரபட்றீட்"** **"EDUCATION THROUGH ART"** எனும் நூலில் குறிப்பிடுகின்றார். ஆகவே ஆரம்பக் கல்வி கலைத்திட்ட அமுலாக்கத்தினூடாக மாணவர்களிடையே ,

- இரசனைத்திறன் விருத்தி
- விருத்திகற்பனைத் திறன் விருத்தி
- ஆக்கத்திறன் விருத்தி
- கருத்தை வெளிப்படுத்தும் திறன் விருத்தி

ஆகியவற்றை வளர்க்க முடியும்.

**இரசனைத் திறன் விருத்தி** :

ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் மாணவர்களிடையே இரசனைத்திறன் விருத்தியை ஏற்படுத்துவதற்கு மாணவர்களின் உபயத்திற்கு பொருத்தமான அபிநயப் பாடல்களை தெரிவு செய்து கற்பிப்பதன் ஊடாகவும், வெகுசன தொடர்பு சாதனங்களான வானொலி, தொலைக்காட்சியில் இடம்பெறும் சிறுவர் நிகழ்வுகளை இரசிப்பதற்கு வழிப்படுத்துவதனூடாக இரசனைத் திறனை மாணவரிடத்தே ஏற்படுத்த முடியும்.

**கற்பனைத்திறன் விருத்தி**:

ஒரு சிறிய கதையின் பகுதியை உணர்ச்சி வெளிப்பாட்டுடன் ஆசிரியர் கூறி அதன் கதையை முடிக்குமாறு மாணவர்களை ஊக்குவிக்கும் பொழுது அவர்களிடத்து அவர்களே அறியாமலே கற்பனைத்திறன் உருவாகிவிடும்.

**ஆக்கத் திறன் விருத்தி**:

ஆக்கத் திறன் விருத்தியை உருவாக்குவதற்கு சிறிய பாடல்களை எழுதி அதன் வரிகளை பூர்த்தி செய்வதற்கு வழிப்படுத்தல். புத்தளிப்பு கருவிகளை உருவாக்குதல், சித்திரம், உருவங்களை உருவாக்குதல் போன்றவற்றை மாணவர்களிடையே ஏற்படுத்தும் பொழுது அவர்களிடம் மறைந்திருக்கும் திறன்களை வெளிப்படுத்தவும் வாய்ப்பு வழங்குவதனூடாகவும் ஆக்கத் திறனை மேம்பாடு அடையச் செய்யலாம்.

**கருத்து வெளிப்பாட்டு திறன்**:

சித்திரக் கதைகள், பாடல் போன்றவற்றின் கருத்தை கூறுவதற்கு வழிப்படுத்துவதனூடாக மாணவர்களிடம் கருத்தை வெளிப்படுத்தும் திறனையும் சிந்திக்கும் திறனையும் உருவாக்க முடியும்.

மேலும் அபிநயங்களைப் போதிப்பதனூடாக முகபாவத்தையும், உணர்ச்சி வெளிப்பாட்டையும் வளர்த்தெடுக்க முடியும். ஆகவே ஆரம்பக் கல்வி மாணவர்களது பிஞ்சு உள்ளங்கள் நன்மை தீமை அறியாமல் எதையும் கிரகிக்கும் தன்மைவாய்ந்தவர்களாக இருப்பது இயற்கை. இத்தகைய கபடமில்லாத உள்ளங்களிலே விவேகத்தையும், சாதுரியத்தையும் வளர்ப்பதற்கும், அவர்களது குணாதிசயங்களை நல் வழியில் திருப்பி சிறந்த நற் பிரஜை ஆக்குவதற்கு கலையுணர்வு ஒரு தலை சிறந்த சாதனமாக அமைகிறது. இக் கலையுணர்வு அக் குழந்தையின் எதிர்கால நல் வாழ்விற்கு வித்திடுகிறது. இந்த இரசிக தன்மையே மனிதனை மனிதனாக்குவது. எனவே கலைகளால் குழந்தைகளிடம் நல்ல கலையுணர்வை தூண்டி நல்ல கலையின்பத்தை வளரச் செய்வது, நற்பிரஜையாக்குவது ஆரம்பக் கல்வி ஆசிரியர்களது முக்கிய பணியாகும்.

# ஆரம்பக் கல்வியில் ஆக்கச் செயற்பாடுகளின் பங்களிப்பு

**திருமதி இ. சுதானந்தராஜா**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

ஆரம்பக் கல்வியில் ஆக்கச் செயற்பாடு என்பது, பிள்ளையின் நயப்பு விருத்தியினைப் பெருமளவிற்கு நிறைவேற்றுகின்றன. ஆக்கச் செயற்பாடுகளின் மூலம் பிள்ளை இரசனையுடன் கூடிய அனுபவத்தையும் மகத்தான பூரிப்பையும் பெற்றுக் கொள்ளுகிறது.

இவ் ஆக்கச் செயற்பாடுகளைக் கருத்துள்ளவைகளாக மாற்றுவது ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் அதி உன்னத பணியாகும். மாணவரின் ஆக்கத்திறனைக் கருத்துள்ளதாக விருத்தி செய்வதற்கு ஆசிரியர் தமது பாடப்பரப்பில் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் வரக்கூடிய சந்தர்ப்பங்களையும், அதற்கேற்ற ஊடகங்களையும், அவற்றினைப் பயன்படுத்தும் வழிமுறைகளையும் பற்றித் தெளிவான அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். ஆக்கச் செயற்பாடுகளில் நல்ல ஊக்கத்தை ஏற்படுத்தி மகிழ்ச்சிகரமான சூழலை வகுப்பறையில் உருவாக்குவதுடன், உத்தேசக் குறிக்கோள்களை நிறைவேற்றி நோக்கத்தை உறுதி செய்யக் கூடியவாறு செயற்பாடுகளை முறையாகத் திட்டமிடல் வேண்டும்.

ஆரம்ப வகுப்பு ஆக்கச் செயற்பாட்டுப் பாடப் பரப்பில் அடங்கக்கூடியவற்றைப் பின்வருமாறு பிரித்துக் கூறலாம். வரைதல், அச்சுப்பதித்தல், கொலாஜீம் மொஸைக்கும், பிசைதலும் செதுக்குதலும், தைத்தலும் பின்னுதலும், கட்டி எழுப்புதலும் மாதிரிகளை அமைத்தலும் என்பனவாம். இவ்வாக்கச் செயற்பாடுகளை வகுப்பறையில் ஆசிரியர், மாணவர்களுக்கு வழிப்படுத்த, அவர்களின் செயற்படு திறன் அதிகரித்துக் கொண்டே போகும். அதாவது "சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப் பழக்கம்'' என்பதற்கிணங்க ஆசிரியர்களின் ஆக்கச் சந்தர்ப்பங்கள் கூடும்போது மாணவர்களின் ஆக்கத் திறன்களும் கூடிச் செல்லும்.

**வரைதல்**



இதில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு கூடியளவு பொருத்தப்பாடுடையது. கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமாகும். மாணவர் தம் எண்ணங்களை வெளிப்படுத்தி வரைகின்ற சித்திரமே கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமாகும். இது ஒரு பொருள் குறியீடாக அமையாது பலதின் கலப்பாக அமைதலே சிறப்பு. சிறுவர் சித்திரம் ஒன்று சுயமானதாகவும் இயல்பானதாகவும் அமைதல் வேண்டும்.

**அச்சுப்பதித்தல்**



இவ் ஆக்கச் செயற்பாடு சிறுவர்களால் இரசனையுடனும் இலகுவிலும் செய்யக் கூடியது. பதித்தலுக்கான அச்சுக்களை இயற்கைப் பொருள்களிலிருந்தோ அல்லது உருவாக்கியோ எடுத்து அதை நிறச் சாயங்களில் தோய்த்து ஒரு கோலத்திற்கு ஏற்ப பதித்தல் வேண்டும்.

**கொலாஜும் மொஸைக்கும்**



இதில் மாணவர் மிக விருப்புடன் பங்கேற்பர். இவ்விருவகையும் ஒட்டுச் சித்திரமாகவே இருந்தபோதும் செயற்பாட்டில் சிறு வேறுபாடு காணப்படுகிறது. கொலாஜ் தலைப்பிற்கு ஏற்ப கழிவு நிறக் கடதாசி துணித்துண்டுகளைக் கிழித்து ஒட்டி உருவின் அமைப்பைப் பெற்றுக் கொள்ளலாம். மொஸைக் என்பது தேவையான உரு அமைப்பைத் தளத்தில் வரைந்தபின் அக் கோடுகளை மறைத்துத் துண்டுகளை ஒட்டிப் பின்னணியை நிறைத்தலாகும்.

**பிசைதலும் செதுக்குதலும்**



கீழ் ஆரம்ப நிலை மாணவர்கள் பிசைதல் செயற்பாட்டிலும், மேல் ஆரம்பநிலை மாணவர்கள் செதுக்குதல் செயற்பாட்டிலும் மிக விருப்புடன் பங்கேற்பர். பிசைதலுக்கு சிறந்த மூலப்பொருள் கழிமண் ஆகும். இதை நன்கு துப்பரவு செய்து பதப்படுத்தி விரும்பிய உருக்களை ஆக்கலாம். செதுக்குதல் என்பது கனமான பொருள்களின் பகுதிகளை அகற்றுவதன் மூலம் வடிவங்களை பெற்றுக்கொள்ளுதலாகும். உதாரணமாக சவற்காரம், பாரமற்ற பலகை, மண்கட்டி, ரெஜிபோம், கிழங்கு வகைகள், மெழுகு போன்றவற்றை கத்தி நீண்ட ஆணி, ஈர்க்கு, குடைக் கம்பி போன்ற உபகரணங்களால் வெட்டுவதன் மூலமோ, சுரண்டுவதன் மூலமோ வடிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தைத்தலும் பின்னுதலும்**



ஆரம்ப வகுப்புகளிலேயே இக் கலை ஆக்கங்களில் ஈடுபடுவதால் மாணவர்களின் தன்னம்பிக்கைக்கு அடித்தளம் இடப்படுகின்றது. மேல் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் தையலூசியை கவனமாகவும், நேர்த்தியாகவும் கையாண்டு கைக்குட்டை, தலையணை, பொம்மைகள் என்பவற்றை உருவாக்கலாம். இவ்வாறே பின்னுதல் முறையிலும் தும்புக் கயிறு, நூல் வகைகள், கழிவு சணல், ஓலை, ரயர் ரியூப்பில் வெட்டிய கீலங்கள் இவற்றைக் கொண்டு பை, சிறு பாய், வலை, தலைப்பட்டி, மிதி தடம் போன்றவற்றை உருவாக்கலாம்.

**கட்டியெழுப்புதலும் மாதிரிகளை அமைத்தலும்.**



சூழலிலிருந்து பெறக்கூடிய பல்வேறு பொருட்களை உபயோகித்து பல பொருட்களை நிர்மாணிக்கும் செயற்பாடு ஆகும். உதாரணமாக தென்னைமட்டை மாடு, விளையாட்டு வண்டி, காற்றாடி, புத்தழிப்பு கருவிகள், பட்டம், வெளிச்சக் கூடு போன்றவற்றை கூறலாம். இவ் ஆக்கங்களில் ஈடுபடும் போது கத்தி, கத்திரிக்கோல், வெட்டுளி, குறடு போன்ற உபகரணங்களை பாவிக்க வேண்டியிருப்பதால் ஆசிரியர் மாணவர்களுக்கு சரியான வழி காட்டலுடன் பாதுகாப்பை வழங்க வேண்டும்.

இத்தகைய ஆக்கச் செயற்பாடுகள் ஆரம்பக் கல்வியில் சிறப்பிடத்தை பெறுவதால் பிள்ளை இரசனை உணர்வு உள்ளவனாகவும் தனது சூழலில் மகிழ்ச்சி நிறைந்தவனாகவும் எதிர்காலத்தில் சிறந்த படைப்புக்களை தரக் கூடியவனாகவும் உருவாக்கப்படுகின்றான்.

**உசாத்துணை: மொடியூல்**
(ஆரம்ப ஆசிரியர்களுக்கான ஆக்கச் செயற்பாடு)

# ஆரம்ப வகுப்புக்களில் அழகியல் பாடத்தை கற்றலின் முக்கியத்துவம்.

**திருமதி ஜெ.இளங்கீரன்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

ஆளுமை வளர்ச்சி கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். சமநிலையானதோர் ஆளுமையை உருவாக்குவதற்கு தனியாளின் அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உழ இயக்க ஆட்சி என்பவற்றின் சார்பளவான வளர்ச்சி அவசியமாகும். குறிப்பாக எழுச்சி ஆட்சி விருத்திக்கு அழகியல் பாடங்களை கற்றல் மிகப் பெரும் ஊக்குவிப்பாக அமையும். எனவே ஆரம்ப பாடசாலை பாடவிதானத்தில் இப்பாடங்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்படவேண்டும்.

சமூகத்திற்கு நன்மை பயக்கும் ஒருவராக வாழவேண்டுமாயின் அவனிடத்தில் சிறந்த மனப்பாங்கு வளர்ச்சி இடம்பெறல் வேண்டும். சமூகப் பிரச்சினைகளை அனுதாபத்துடன் பார்க்கக் கூடிய மனிதாபிமானியை கல்வியினூடாக உருவாக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தகைய மனப்பாங்கு பிள்ளைப்பருவத்திலிருந்தே படிப்படியாக வளர்ச்சிபெற வேண்டும். கருணை, தயவு, அகிம்சை போன்ற குணப்பண்புகளை பிள்ளைகளின் உள்ளங்களில் பதியச் செய்வதற்கு அழகியல் பாடப் பரப்பு சுலபமானதொரு வழியாகும். சூழலின் அழகை மதிப்பதற்கும், அதை பேணுவதற்கும் இச் செய்முறைகளின் மூலம் வழிகாட்டப்படும். இயற்கை அன்னையின் அழகைக் கண்டு இரசிப்பதில் நிரந்தரமாக ஈடுபடுவதனால் பிள்ளைகளின் நயப்பு சக்தி படிப்படியாக விருத்தியடையும். தான் வாழும் வீட்டையும் அதன் சுற்றாடல் சூழலையும் பாடசாலை பெரும் தெருக்கள் போன்ற இடங்களையும் துப்புரவாகவும், அலங்காரமாகவும் வைத்துக் கொள்வதற்கு பிள்ளைகள் தூண்டப்படுவர். சூழலில் உள்ள பொருட்களுக்கு மதிப்பளிப்பதன் மூலம் படிப்படியாக கலையைச் சார்ந்த இரசிக்கும் இதயம் பிள்ளைகளிடம் உருவாகும்.

பிள்ளையின் மனவெழுச்சி வளர்ச்சிக்கும் அழகியல் கல்வி ஒரு தூண்டுதலாக அமையும். பயன்மிக்கதோர் ஊடகத்தின் மூலம் மனவெழுச்சிகளை வெளியிடுவதற்கு சந்தர்ப்பமும் ஏற்படும். குரோதம், பகைமை போன்ற சமூகத்திற்கு நன்மை பயக்காத மனவெழுச்சி இயல்புகளை கீழடையச் செய்து தர்ம சிந்தனை மிக்க தனிப்பட்டவர்களை உருவாக்கும் ஆற்றல் கலைக் கல்விக்கு உண்டு. இரசனை நயப்பு விருத்தியடைந்த அளவிற்கு அத் தனியாளிடம் சாந்தமான இயல்பும் குடிபுகும் எனலாம். அவர் மனக்கட்டுப்பாடு அமையப்பெற்ற ஒருவராக மாறுவார். இரசனை உணர்வுமிக்க அவர்களுடைய புலன்களும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாக மாறும். மானிட வர்க்கத்தின் அபிவிருத்திக்கு இத்தகையதோர் மனநிலை அனைவரிடமும் அமைந்திருத்தல் அவசியமாகும். பல்வேறு உள எழுச்சிகளைப் பயமின்றி எதிர்நோக்கும் ஆற்றல் கொண்ட ஒரு இரசிப்பு தன்மையையும், தன்நம்பிக்கையையும் அவரிடத்து விருத்தி செய்வதில் அவர் வெற்றி பெறுவர். இத்தகைய குணப் படைப்புக்களை சிறு பராயம் முதல் படிப்படியாக வளர்க்க வேண்டும். ஆகையால் ஆரம்ப பாடசாலையில் அழகியல் செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.

நல்லொழுக்க பண்புகளை விருத்தி செய்வதற்கும் அழகியல் கல்வி பெரும் தூண்டுகோலாக அமையும். உயர் இரசனைக்கு பழக்கப்பட்ட உள்ளத்தைக் கொண்ட மாணவர் இயல்பாகவே சமூகத்தின் நலனுக்கே மதிப்பளிப்பர். மற்றவர்களுக்கு உதவுவதற்கும் அவர்களுடன் ஒத்துழைப்பதற்கும் விரும்பும் அதே வேளை கூட்டுறவுடன் செயலாற்றும் வல்லமையும் பெறுவர். மேலும் கலைப் பாடங்களின் ஊடாக தமது கலாச்சாரத்தின் உள்ளார்ந்த இயல்புகளை விளங்கிக் கொள்வதற்கும் விழுமியங்களை மதித்து நடப்பதற்கும் பழகிக் கொள்வர். இதனூடாக வெவ்வேறு கலாச்சாரங்களை இனங்காண்பதற்கும் அவற்றை மதித்து நடப்பதற்கும் அழகியல் கல்வி வழியாக அமைகின்றது எனலாம்.

உணர்திறனை விருத்தி செய்வதற்கும் இவ் அழகியல் செயற்பாடுகள் பயன் தரும். சிறுவயது முதல் சூழலில் நிகழும் சிற்சில சம்பவங்களை அவதானிப்பதற்கும் பழகிக்கொள்வதன் மூலம் புலன்களை கூர்மையடையச் செய்யலாம். நல்லொழுக்க பண்புகளுடன் கூடிய உள்ளத்துடன் வாழ்வதற்கு இத்திறமை பெரிதும் உதவியாக அமையும்.

அழகியல் கல்வி கற்கும் ஒருவர் பரந்த கலாச்சார பரிமாணங்களுடனும், கலை ஆக்கங்களுடனும், இலக்கிய நூல்களுடனும், வாழ்க்கையுடன் தொர்புபட்ட பழக்க வழக்கங்களுடனும், உயிர்த் துடிப்புடனும் சம்பந்தப்படுவார். மனித தன்மையின் உச்சப் பெறுமானங்கள் என மதிக்கப்படும் இவற்றை எய்துவதற்கு லலித கலைப் பாடங்கள் உதவியாக அமையும். லலித கலைப் பாடங்கள் தனிமையில் ஒரு நண்பனாக அமைவதுடன் மட்டும் நில்லாது உலகுடனும் ஒத்து வாழ்வதற்கு வழிவகுக்கும்.

"ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையிலும் அறிவுடமையுடனும் செலவு செய்வதற்கு அழகியல் பாடங்கள் காரணமாகின்றன. இவை தனித்தேனும் ஒருங்கே கூடியேனும் மகிழ்வெய்தக் கூடிய சமூகத்திற்கு ஒரு நன்மை பயக்கும் ஊடகமாகும்." என **அரிஸ்டோட்டல்** கூறியுள்ளார்.

தனி ஆள் வளர்ச்சிக்கு அழகியல் செயற்பாடுகள் பெருமளவில் உதவுவது போன்று கல்வி பரப்பில் வேறு விடயங்களையும் கற்பதற்கன ஊடகம் என்ற வகையிலும் இவை முக்கியத்துவம் பெறுகின்றன. செய்முறைகளும் அனுபவங்களும் நிறைந்ததாகக் காணப்படும் அழகியல் பாடங்களை ஊடகமாக்கிக் கொள்வதன் மூலம் அதிகம் முயற்சியின்றியே ஏனைய பாட விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

ஆரம்ப வகுப்புக்களில் இந்த அழகியல் பாடங்கள் நல்ல முறையில் கற்பிக்கப்படுமாகவிருந்தால் ஆரம்ப மாணவர்களிடையே அழகியல் உணர்வும் இரசனையும் ஏற்படும். இந்தச் செயற்பாடு எதிர்காலத்தில் மாணவர்கள் தம்மை வளப்படுத்துவதற்குரிய ஒரு அடிக்கல்லாக அமையும் என்பது சந்தேகமில்லை. அத்திவாரம் சரியாக அமைந்தால் அந்தக் கட்டடம் சிறப்பாக அமையும். அதே போல் ஆரம்ப வகுப்புக்கள் இவ்வாறு அமையுமானால் அவர்களின் எதிர்காலம் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கையில் ஆரம்ப பாடசாலையில் அழகியல் கல்விக்கு முக்கியமானதொரு இடம் உரியது தெளிவாகும்.



# மாணவர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்தும் நடனக் கலை

செல்வி கி.கலையமுதா
யா/இந்துமகளிர் ஆரம்பபாடசாலை

உலகம் போற்றும் உன்னதமான பண்பாட்டு விழுமியங்களை தன்னகத்தே கொண்ட இந்துமதமானது உலகையே வியக்க வைக்கும் அளவிற்கு கலைத்துவம் மிக்க அற்புதமான தன் கலைப்படைப்புக்கள் வாயிலாக இந்துப் பண்பாட்டின் உயர் விழுமியங்களையும் உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கிறது. "கல்" என்ற வேர்ச் சொல்லிலிருந்து தோன்றிய சொற்கள் பல. "கல்வி, கலை, கட்டி" என்பவை அவற்றுள் சில. கலை என்பது சதா வளர்ந்து கொண்டே இருக்கும். ஆடல், ஓவியம், சிற்பம் என்பன நுண்கலைகளாகும்.

மேலும் "ஆய கலைகள் அறுபத்தினான்கு" எனக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் கூறியுள்ளார். கோல்ரிட்சு செல்லிங்கு என்பவர். "கலை மெய்ப்பொருளின் முற்றத்திலிருந்து துய்ப்போரைக் கருவறைக்கு இட்டுச் சென்று உலகியலைக் கடந்து நிற்கும் காட்சியினைப் புலப்படுத்தி நிற்கும் என்றார்". கவின் கலையில் கலைஞனின் கை, மூளை, இதயம் ஆகிய மூன்றும் இணைந்து செல்கின்றன. மாணவர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்துவது நடனக் கலை என்றால் அது மிகையாகாது. இத்துணை உயர்வாக பேசப்படும் நடனம் ஐந்தாம் வேதமாக சிறப்பித்துக் கூறப்படுகின்றது. நந்திகேஸ்வரருடைய அபிநய தர்ப்பணம் சுவை பற்றிப் பின்வருமாறு கூறுவர்.

"யதோ ஹஸ்தஸ் ததோ திருஷ்டி:
யதோ திருஷ்டிஸ் ததோ மன:
யதோ மனஸ் ததோ பாவோ:
யதோ பாவஸ் ததோ ரச: "

இதன் பொருள் கைவழி பார்வை செல்ல, பார்வை வழி மனம்செல்ல, மனம்வழி மெய்ப்பாடு(பாவம்) தோன்ற, மெய்ப்பாட்டின்வழி சுவைபிறக்கும். இன்பத்தினைத் தோற்றுவிக்கும் ஆற்றல் உலகிலுள்ள பொருட்கள் யாவற்றிற்கும் உண்டு. புலன்களை வருடும் எல்லாம் இவ்வாற்றலை கொண்டுள்ளன. இன்பத்தைத் தோற்றுவித்தலின் ஆரம்பம் புலனுணர்வாகும். ஐம்புல உணர்வுகளினூடாக அவைகள் தோன்றுகின்றன. புலன்கள் வெளிப்படுத்தும் உணர்வுகள் காரணமாக மனம் அநுபவங்களைப் பெறும். இத்தகைய அனுபவங்களைப் பெற்றுப் பழக்கப்பட்ட மாணவர்களுக்கு புதிய சந்தர்ப்பத்தில் காதில் விழும் ஒரு பாடல் கண் முன் தோன்றும். சித்திரம், நடனம் என்பன புலன்களைத் தூண்டி பழைய அனுபவ அறிவை வெளிப்படுத்தும். ஒருதாயின் மடியில் இருக்கும் குழந்தை அவளது தாலாட்டுப் பாடலை கேட்டு மகிழ்கின்றது. பாட்டில் உள்ள சந்தம் குழந்தைக்கு இனிமையளிக்கின்றது. தாயின் உணர்ச்சி வெளிப்படையாகப் புலப்படுகின்றது. இயற்கையிலும், செயற்கையிலும் குழந்தைப் பருவத்திலேயே தன்னுடைய அசைவுகளை வெளிக்கொணருவதை நாம் அவதானிக்க முடிகின்றது. நடனக் கலையை சிறுவயதில் பயிலும் போது முரட்டுத்

தன்மைகளைக் கொண்டிருக்கமாட்டார்கள். மாணவர்களுடைய நடை, உடை, பாவனை அழகாக இருக்கும். நடனக் கலை பற்றிய அறிவு அவரை வளம்படுத்தும். பள்ளிப் பருவத்தில் கற்றல், கற்பித்தல் தொழில்பாடுகள் மூலமாக இந்த நிலைகளை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் மாணவர்கள் தமது கல்வியை கிரகித்துக் கொள்வதற்கு நடனம் முக்கியத்துவம் பெறுகின்றது. மேலே கூறியது போல் நடனக் கலை மூலம் ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்த முடியும். உதாரணமாக "சின்னக் கருங்குயிலி செவ்வனே......" என்ற பாரதியாரின் பாடலை முதலில் இராகத்துடன் பாடி பின்பு அதற்கு அபிநயம் செய்வதன் மூலம் அவர்களின் மனதை படிப்படியாக ஒருநிலைப்படுத்திக் கொள்ள பழகிக்கொள்கிறார்கள். எதிர்காலத்தில் கல்வியின் செயற்பாட்டை வெளிப்படுத்துவதற்கு ஒரு ஊன்று கோலாக நடனக் கலை அமைகின்றது. எனவே நாம் இரசனையனுபவத்தை எதிர்காலப் பரம்பரையினருக்கும் வழங்க வேண்டும். தேசிய உணர்வுள்ள ஒருவரை உருவாக்க, வீட்டுச் சூழலில் தொடங்கி மாணவர்களின் மனதில் கலை உணர்வை வெளிக்கொணர வேண்டும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர். மாணவர்களின் ஐம்புலனுக்கும் இதமூட்டக் கூடிய விதமாக அவர்களுடைய எண்ணங்கள், கருத்துக்கள், அறிவு என்பனவற்றை தூண்டத் தக்க வகையில் நடனக் கலையில் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்ட வேண்டும். அத்தகைய நடனக் கலையை ரசிப்பது மட்டுமன்றி அவைபோன்ற ஆக்கங்களை ஆக்குவதற்கும் வழிகாட்ட வேண்டும்.

எனவே மாணவர்களின் செயற்பாட்டை வெளிப்படுத்தும் கலைகளாக சங்கீதம், சித்திரம், நடனம் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன.

**உசாத்துணை நூல்கள்:-**


1. பரதக் கலையின் அடிப்படை அம்சங்கள்- பரத நடனம், ஆசிரியர் கல்விப் பாடநெறி.
2. அழகியல் இரசனை அனுபவம் -அழகியற்கல்வி ஆசிரியர் பாடநெறி.
3. கமலையா.க.சி – தமிழகக் கலை வரலாறு.


***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

சாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.





# வசந்த காலம் வந்தது

வசந்த காலம் வந்தது
வாழ்வில் வசந்தம் வந்தது.

பச்சை மரங்கள் ஆடுது
பசுமை எங்கும் நிலவுது.

இச்சை கொண்டு நாங்களும்
இனிய கீதம் பாடுவோம்.

குளிர் காற்று எங்கும் வீசுது
குளிர்மை எங்கும் நிலவுது.

பூக்கள் பூத்துக் குலுங்குது
புள்ளினங்கள் மகிழுது.

கோகிலங்கள் கூவுது
மயிலினங்கள் ஆடுது.

கவிகள் கொப்பில் தாவுது
காய்கள் எல்லாம் உண்ணுது.

அளிகள் தேனைக் குடிக்குது
அழகாய் பூவில் மொய்க்குது.

பூக்கள் எல்லாம் காய்க்குது
புள்ளினங்கள் நாடுது.

வித்தைத் தூக்கி பலதூரம்
காற்று கொண்டே செல்லுது.

வித்திலிருந்து மரங்கள் முளைத்து
பசுமை எங்கும் தருகுது.

பயனைப் பெற்ற மாந்தரும்
மகிழ்ந்து பாரில் வாழ்கின்றான்.

**ப.தர்மிளா**
*தரம் 5 C.*



# நான் ஒரு மருத்துவரானால்

**21** ஆம் நூற்றாண்டை எட்டிவிட்ட இன்றைய காலகட்டத்தில் பல தகுதிகளுக்கு ஏற்ற ஒரு பொருத்தமான தொழிலைச் செய்து வாழ முடியாது. எவ்வகை தொழிலாக இருந்தாலும் அங்கு கல்வியே முதற் தளமாகின்றது. சிறு வயது முதல் கல்வியை கற்று உயர் வகுப்பிலே ஒரு துறையில் கல்வியை தொடர்ந்து அதிலே தேர்ச்சி பெற்று அத் துறையை சார்ந்த தொழிலைச் செய்கின்றனர். இவ்வகையில் நான்காம் தரத்தில் கல்வி கற்கும் நான் உயர் தரத்தில் விஞ்ஞானப் பிரிவை கற்று எதிர்காலத்தில் ஒரு வைத்தியனாக வரவேண்டும் என்ற என் இலட்சியமும், அவாவும் என்னை தூண்டுகின்றது.

நான் ஒரு மருத்துவனானால் நோயாளிகளுக்கு அன்போடும், ஆதரவோடும் மருத்துவம் செய்வேன். அவர்களின் நோய் நொடிகளை சரியாக இனங்கண்டு தகுந்த சிகிச்சை அளிப்பேன். ஏழைகளுக்கு இலவசமாக எனது சேவையை வழங்குவேன். இரவு, பகல் என்ற வேறுபாடு இன்றி எப்பொழுதும் சேவையாற்றுவேன். கொடிய நோய்களிலிருந்து பாதுகாப்பாக வாழ மக்களுக்கு நல்ல அறிவுரைகளை வழங்குவேன். அனைத்து உள்ளங்களும் புகழும் அளவிற்கு மருத்துவ துறைக்கு மகத்தான சேவையை ஆற்றுவேன்.

**செ. கஜநாராயணி**
தரம் 4 C.

# "எனது அன்னை"

"அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை அவள் அடிதொழ மறுப்பவர் மனிதரில்லை" என்பது எத்தனை உண்மை. ஆம் என் அன்னை ஈடு இணையற்ற பெண்மணி. என்மீது அம்மா கொண்டிருக்கும் அன்புதான் எவ்வளவு உயர்ந்தது. என்மீது கொண்டிருக்கும் அக்கறை என் முன்னேற்றத்திற்காக அவர் படும்பாடு சொல்லில் அடங்காதவை. நான் அவருக்கு என்ன துன்பம் கொடுத்தாலும் அதைப்பற்றி கவலைப்படுவதோ, கோபப்படுவதோ இல்லை. என் அன்னையை இட்டு நான் பெருமையடைகிறேன். கருணை மிகுந்த தெய்வம் என்னை அன்புருவில் வந்து ஆட்கொள்கிறது என பெருமிதம் அடைகின்றேன்.

**ஒ. கேதாரணி**
தரம் 5 சீ

# ஆரம்பக் கல்வியின் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களின் பங்கு

***திருமதி பே. பாலேந்திரா***
ஆசிரிய ஆலோசகர்,(ஆரம்பக்கல்வி)
நல்லூர்க்கோட்டம

ஆரம்பக் கல்வியின் புதிய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சீர்திருத்தங்களைப் பற்றி தெளிவான விளக்கத்தை பெற்றுக் கொள்வது மிகமிக முக்கியம்.

அதாவது ஆரம்பக் கல்வி சீர்திருத்தங்களின் புதிய கட்டமைப்பின் பரிமாணங்கள், தேர்ச்சி மையப் போக்கு பாடப்புலங்கள், கால அளவு, கற்றல், கற்பித்தல், உத்திகள். புதிய வகுப்பறையின் வளங்கள் தொடர்பாக தெளிவான அறிவைப் பெற்றுக் கொண்டால்தான் சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது சுலபம்.

முதலில் தேசிய கல்வி இலக்குகளையும், அடிப்படைத் தேர்ச்சிகளையும், சீர்திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அம்சங்களையும் அறிந்திருத்தல் அவசியம்.

5 வருடங்களைக் கொண்ட ஆரம்பக் கல்விப் புலம் பாடவிதான விருத்தியினதும், ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதிகருதி 3 நிலைகளாக்கி அறிமுகம் செய்தனர்.

| | | | |
|---|---|---|---|
| முதன்மை நிலை 1 | - | தரம் 1-2 | வரை |
| முதன்மை நிலை 2 | - | தரம் 3-4 | வரை |
| முதன்மை நிலை 3 | - | தரம் 5 | |

பாடசாலைக்கு, தரம் 1இல் மாணவனை அனுமதிக்கும் போது "பிள்ளையை இனங்காணுவோம்" எனும் 14 செயற்பாடுகள் முன்வைக்கப்பட்டு மாணவனது செயற்பாடுகள் மூலம் அவதானித்து, கற்றல், கற்பித்தல் செயல்முறைகளைத் திட்டமிட்டு அமுல்படுத்த முடியும்.

ஆரம்பக் கல்விப் பருவத்தினருக்குப் பொருத்தமான கற்றல் -கற்பித்தல் முறைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

- விளையாட்டுக்களும், விநோதச் செயல்களும்
- செயற்பாடுகள்.
- எழுத்து வேலைகள்.

1. ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட வகுப்பின் பாடத்திட்டம் ஆசிரியர் கைந்நூல், வேறு சுற்றுநிருபங்கள் என்பனவற்றை வாசித்து அவற்றை வகுப்பறையில் செயற்படுத்தல் வேண்டும்.
2. மாணவர்களை கற்றல், கற்பித்தலின்போது குழுக்களாக அமர்த்தினால் மட்டும் போதாது. அதற்குரிய செயற்பாடுகளை ஒப்படைத்து ஒப்படைகளை வழங்கி ஆசிரியர் சுற்றி நகர்ந்து செயற்பாடுகளை செவிமடுப்பதிலும், அவதானிப்பதிலும் அக்கறை உள்ளவராக இருத்தல் அவசியம்.

3. மாணவர்களின் அப்பியாசக் கொப்பிகளையும், செயல் நூல்களையும் கிரமமாகச் சரிபார்த்து பிழை திருத்தங்களைச் செய்வதற்கு வழிகாட்டுவது மிக முக்கியம்.
4. கற்றல் கற்பித்தலின் போது மாணவரின் துலங்கலை மையமாகக் கொண்டு வினாக்களை வினாவி கற்பித்தல் சாதனங்களை கையாண்டு வினைத்திறன் மிக்கதான கற்றலை நடாத்தல் வேண்டும்.
5. சுயகற்றலுக்கு வழிகாட்டல்.
6. சகபடிக் கற்றலுக்கு ஊக்கமளித்தல்.
7. செயற்பாட்டின்போது பிரச்சனைக்கு முகங்கொடுத்தல் மாணவர்-மாணவர் உரையாடலுக்கு ஊக்கமளித்தல்.
8. சுற்றாடல் சார் செயற்பாடுகள் என்ற பாடத்தை கற்றல்-கற்பித்தல் செயல்முறையின் போது மொழிசார்ந்த தேர்ச்சிகளையும், சமயப் பண்புகள் சார்ந்த தேர்ச்சிகளையும், கணிதம் தொடர்பான தேர்ச்சிகளையும் இனங்காணுவதோடு அல்லாமல் மீள வலியுறுத்தப்படவேண்டியது அவசியம்.
9. வாய்மொழி ஆங்கிலத்தை நடைமுறைப்படுத்தல் அவசியம்.
10. தரம் 1 மாணவர்கள் தரம் 5 மாணவர்களுடன் இணைந்து செயற்படுதல்.
11. காட்சிப்படுத்தல்பலகை, நவீன கற்பித்தல் சாதனங்கள், பொதுசன ஊடகங்கள் போன்றவற்றை செயற்பாட்டின்போது பயன்படுத்துவது வினைதிறன் மிக்க கற்பித்தலாக அமையும்.
12. வகுப்பறை கவின்கலை, விளையாட்டு முற்றம் என்பன முக்கியம்.

**கற்பித்தல் செயல் ஒழுங்குகள்.**

- ❖ பாடத்தைத் திட்டமிடல்.
- ❖ பொருத்தமான கற்பித்தல் சாதனங்களைத் தயாரித்தல்/தேடிப்பெறல்.
- ❖ பாடத்தை அறிமுகம் செய்தல்.
- ❖ பாடத்தை வளர்த்துச் செல்லல்.
- ❖ கணிப்பீடு செய்தல்.
- ❖ பின்னூட்டல்/மீள வலியுறுத்தல்.
- ❖ மேம்பாட்டுச் செயற்பாடுகள்.

**தேர்ச்சி**

இது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் சேர்ந்த ஓர் இயலுமை ஆகும். ஆரம்பப் பிரிவு மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சி விருத்தி வருமாறு:

- ❖ மாணவர்களிடத்தில் இயல்பாக உள்ள திறன்களை விருத்தி செய்தல்.
- ❖ நாளாந்த வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து தீர்வு காணக்கூடிய திறனை வளர்த்தல்
- ❖ தர்க்கித்தல், தேடியறிதல், தகவல்களை அட்டவணைப்படுத்துதல், ஒப்பிடுதல், சிந்தனைகளைத் தூண்டுதல், திறன்களை விருத்திசெய்தல்.
- ❖ நல்ல மனப்பாங்குகளை விருத்தி செய்தல் பொறுப்புணர்ச்சி, தலைமைத்துவம், அடக்கம், பணிவு, காலத்தை மதித்தல், இன்சொல், கருணை.
- ❖ தாய் நாட்டை நேசித்தல்.
- ❖ உயிரினங்கள் தாவரங்கள், சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அக்கறை.

பிள்ளையின் கருத்துத் திறன் இடர்பாடுகள் முதலியவற்றை உடனுக்குடன் இனங்கண்டு கொள்வதற்கும் உரிய பரிகார கற்பித்தலை வழங்குவதற்கும் முறைசாராத கணிப்பீட்டு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக் கணிப்பீட்டு முறையில் அடங்குவது வருமாறு:

- ❖ மாணவரது கற்றல் முன்னேற்றத்தையும் இடர்பாடுகளையும் நோக்கமாகக் கொண்டு தொடர்ச்சியாக அவதானித்தல்(தனித்தனி).
- ❖ மாணவர்களின் முன்னேற்ற நிலை என்பனபற்றி அறிந்து கொள்ளத்தக்க அவதானக் குறிப்புக்களைப் பேணுதல்.
- ❖ தொடர் கணிப்பீட்டு விபரம்
- ❖ ஆக்க வேலை மாதிரி, சேகரித்துப் பேணுதல்.
- ❖ பின்னூட்டலுக்கான பரிகாரக் கற்றல் செயற்பாடுகளை வைத்திருத்தல், மேற்கொள்ளல்.
- ❖ மாணவர் முன்னேற்றம் கருதி பெற்றோர் சந்திப்பு-கிரமமாகச் செய்தல்.
- ❖ கணிப்பீட்டு கருவிகளை தயாரித்தல்.
- ❖ மாணவர் அடைவ தொடர்பான பகுப்பாய்வை மேற்கொள்ளல்.
- ❖ ஓவ்வொரு முதன்மைநிலையிலும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியில் பாண்டித்தியம் அடைய வழிகாட்டல்.

மேலே கூறப்பட்டவற்றை சரியான முறையில் கைக்கொண்டு நடைமுறைப் படுத்துவதினால் நல்ல ஆசிரியர் என்ற பெயரையும் கௌரவத்தையும் பெறுவதோடு நாட்டிற்கு நற்பிரஜைகளை உருவாக்கிய பெருமையும் உங்களையே சாரும் என்பதில் ஐயமில்லை.

## நான் சென்ற பயணம்

**நா**ன் எனது குடும்பத்தாருடன் தனியார் வண்டி ஒன்றில் கதிர்காமத்திற்குப் புறப்பட்டோன். குளிரூட்டிய வண்டியில் அன்று தான் முதன் முதலில் எனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தேன். கோடை விடுமுறைக்கு புறப்பட்ட எனக்கு வண்டியினுள் இருக்கும் போது கார்காலமே என்ற எண்ணம் தோன்றியது. இந்தக் குளிர்மையை அனுபவித்தபடி சுற்றுப் புறங்களை அவதானித்துக் கொண்டு பய்ணம் செய்தேன். செல்லும் வழியெங்கும் வயல் வெளிகளும் அடர்ந்த காடுகளும் காடுகளின் நடுவே வானரங்களின் குறும்புகளையும் இரசித்த வண்ணம் கதிர்காமத்தைச் சென்றடைந்தேன்.

அனைவரும் பாவம் தீர்க்கும் மாணிக்க கங்கையிலே நீராடி இறைவனது தரிசனத்திற்காக ஆலயத்தைச் சென்றடைந்தோம். கப்பூறாளையின் பூசையை தரிசித்தோம். அச்சூழலில் யானை குரங்கு மயில் போன்ற பிராணிகளின் குறும்புகள் களியாட்டங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. பின் மலையேறி முருகனின் தரிசனத்தைப் பெற்றோம். களிப்புடன் வீடு திரும்பினோம்.

**சே. சுபலஸ்மி**
*தரம் 3 ஏ*

**சிந்தனையில்....**

S - Sincerity-நேர்மை.
C - Capacity-திறமை.
H - Honesty-உண்மைபேசும்குணம்.
O - Obedience-மரியாதை.
O - Orderliness-ஒழுக்கம்.
L - Learning-கல்வியறிவு



T - Training-பயிற்சி
E - Education-கல்வி.
A - Ability-திறமை.
C - Creativity-படைப்புத் திறன்
H - Humanism-மனிதம்.
E - Efficiency-வினைத்திறன்.
R - Regularity-ஒழுங்கு.

# பாடசாலைச் சிறுவர் அரங்கச் செயற்பாடு

**1987** ஆம் ஆண்டு முதல் சிறுவர் நாடக நிகழ்வு நடைபெற்று வருகிறது. நல்லூர் மூலவள நிலைய நாடக பயிற்சிப் பட்டறையின் இணைப்பாளராக இருந்து செயற்பட்டவர் மயிலங்கூடலூர் எஸ். நடராஜா அவர்கள். அங்கு பெற்ற பயிற்சியே ஒரு காத்திரமான நாடக ஆற்றுகையை மேடையேற்ற வழி அமைத்துள்ளது. அன்று தொடக்கம் இன்று வரை சிறுவர் அரங்க ஆற்றுகையில் தனக்கு என ஓர் முத்திரையைப் பதித்து தரமான ஆற்றுகைகளை மேடையேற்றி வருகிறது. சிறுவர் அரங்கின் ஊடே பல்துறை ஆற்றல் மிக்க மாணவரை உருவாக்க முடியும் என்பது கணகூடு.

2003ஆம் ஆண்டு தொடக்கம் சிறுவர்களுக்கான செய்து கற்றல், மகிழ்வோடு கற்றல் என்ற நிலையில் நாடகச்செயற்பாடுகளில் மனம் ஒன்றித்து ஆனந்தமாகப் பங்கு கொள்ளும் வகையில் வருடந்தோறும் சிறுவர் அரங்கு ஓர் நிகழ்வாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

## சிறுவர் அரங்க நிகழ்வுகள்











# சிறுவர் அரங்கும் ஆரம்பப் பாடசாலையும்

குழந்தை ம. சண்முகலிங்கம்

பிள்ளைகளது கற்றற் செயற்பாடுகளை மகிழ்வானதொரு செயற்பாடாக அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் அனைவரும் ஆர்வமாக இருக்கின்றனர். மகிழ்வாகக் கற்றல் என்பதைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்கு நாடகம் சார்ந்த செயற்பாடுகளும் அரங்கச் செயற்பாடுகளும் பெரிதும் உதவக் கூடியனவாக உள்ளன.

அண்மைக் காலமாகச் சிறுவர் அரங்க ஆற்றுகைகள் எமது ஆரம்பப் பாடசாலைகளில் அதிக அளவில் இடம்பெற்று வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. பல பாடசாலைகளும் ஆசிரியர்களும் இத்துறையில் அதிக நாட்டம் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். சிறுவர் அரங்கு பற்றிய அறிவையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்வதில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் பலர் ஆர்வமாக உள்ளார்கள்.

இந்த நிலையில் எமது பிரதேசத்தின் சூழ்நிலையினைக் கருத்திற் கொண்டும், பெரும்பாலான எமது ஆரம்பப்பாடசாலைகளின் பௌதிக சூழலையும், வள நிலைமைகளையும் கருத்திற் கொண்டுமே நாம் எமது சிறுவருக்கான அரங்கச் செயற்பாடுகள் பற்றிச் சந்திப்பது பொருத்தமுடையதாக அமையும். மேலைத் தேயச் சிந்தனை மரபுகளையும், கல்விசார் முன்னெடுப்புகளையும், அந் நாடுகளில் இருக்கின்றவாறே அள்ளி எடுத்து இங்கு கொணர்ந்து நடைமுறைப்படுத்த முயலுவதென்பது சாத்தியமான ஒன்றல்ல. அங்குள்ள சிந்தனைகளை நாம் எமது சூழலுக்கும் மரபுகளுக்குமமையப் பண்பாட்டு மயமாக்கி நடைமுறைப்படுத்த முயல்வது நல்லது.

சூழல் மற்றும் சூழல் அமைவு என்பது, குறித்ததொரு பௌதிகச் சூழலால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. பௌதிகச் சூழல் என்பது மிகவும் அடிப்படையான தேவை என்பதை மறுக்க முடியாது. பொருத்தமானதொரு பௌதிகச் சூழலில் எமது இலக்கை நோக்கி செயற்பாடுகளுக்கு உறுதுணையாக நிற்கக் கூடிய மனோபாவ மற்றும் மனப்பாங்கு சூழலும், மனநிலைச் சூழலும், மரபு வழிச் சூழலும், கருத்து நிலைச் சூழலும், கற்றல் வழி வந்த அறிவுச் சூழலும், பட்டறிவுனூடே பெற்ற அறிவு மற்றும் அனுபவச் சூழலும் இவை அனைத்தினதும் ஒன்றுபட்ட இசையின் சூழலே "மகிழ்வாகக் கற்றல்" என்ற எண்ணக்கருவோடு அமைந்த சூழலை உருவாக்க உதவும். மேற்கண்டவற்றில் ஒன்றோ, சிலவோ இல்லாத பட்சத்திலும் மகிழ்வும் கற்றலும் சாத்தியப்படாது.

"ஆரம்பப் பாடசாலையில் நாடகம்" என்பது பரந்த பரப்பைக் கொண்டதாகவும் பல் பரிமாணல் கொண்டதாகவும் இருக்கும். இங்கு நாம் "ஆரம்பப் பாடசாலையில் சிறுவர் அரங்கு" என்ற குறுகிய எல்லைக்குள் நின்றே நோக்க முற்படுகின்றோம். சிறுவர்களை பார்வையாளர்களாகக் கொண்டு மேடை ஏற்றப்படும் நாடகங்களையே "சிறுவர் அரங்கு" என நாம் கொள்ள முடியும். மேடை ஏற்றுவதை இலக்காகக் கொண்ட நாடக நடவடிக்கைகளையே இங்கு நாம் நோக்க முற்படுவோம்.

மேடையேற்றும் வரை கொண்டு செல்லும் நாடக முயற்சியை நாம் பின்வரும் முறையினை ஒன்றினை பின்பற்றி மேற்கொள்ள முடியும்.

1. வகுப்பறையில் சிறுவர்களோடு சேர்ந்து ஆசிரியர் புத்தளிப்பு முறையில் நாடகத்தை உருவாக்குதல். ஆற்றுகைக்கான நாடகமொன்றை உருவாக்குவதில் இது மிகச் சிறந்த முறையென கொள்ளப்படக் கூடியதாகும். சிறுவர் நாடகத்தின் அரங்க ஆற்றுகையில் சிறுவர்களது பங்குபற்றுதலும் பங்களிப்பும் ஈடுபாடும் மிகக் கூடிய அளவில் இருப்பதற்கு இந்த முறைமை பெரிதும் உதவும்.

இங்கு மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து கதை ஒன்றை தெரிவு செய்வர் அந்தக் கதையினை முதலில் ஆசிரியர் மிகவும் கவர்ச்சியான முறையில் மாணவர்களுக்கு கூறுவர். அதையடுத்து மாணவர்கள் சிலர் அந்தக் கதையினைக் கூறுவர். கதை கூறும் மாணவர் அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்படுவது நல்லது. கதையினை மாணவர்கள் கூறும் போது கதையில் சில மாற்றங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்கும். அவ்வாறு ஏற்படும் மாற்றங்களைக் கவனத்திற் கொண்டு எல்லோராலும் விரும்பப்படும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வது நல்லது.

இவ்வாறு கதை கூறப்பட்ட பின்னர் கதையில் வரும் பாத்திரங்களைப் பற்றி கலந்துரையாடலாம். பாத்திரங்களை பற்றிச் சிந்திக்கும் போது அவற்றின் குண நலன்கள் பற்றியும் அவற்றின் இலக்குகள் பற்றியும் மாணவர்களோடு கலந்துரையாடலாம். வகுப்பிலுள்ள மாணவர்களில் குறித்தவொரு நாடகத்தில் பாத்திரம் ஏற்று நடிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் நடிப்பதற்கான வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும் என்பதை ஆசிரியர் கருத்திற் கொள்ளுவது அவசியம். நாடகத்தைவிட மாணவர்கள் தான் முக்கியமானவர்கள் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளல் வேண்டும். போட்டி நடவடிக்கையிலும் சரி சிறந்த நடைமுறையை ஆசிரியர்கள் கடைப்பிடிப்பது மிக அவசியம்.

நாடகத்திற்கான எந்தவொரு கதையிலும் நாம் எமக்கு தேவையான பாத்திரங்களை சேர்த்துக்கொள்ள முடியும். உதாரணமாக "காகமும், வடையும்" என்ற கதையை எடுத்துக் கொண்டால் அதில் காகம், ஆச்சி, நரி என மூன்று பாத்திரங்கள் மட்டுமே வருகின்றன. எனினும் எமது தேவை கருதி நாம் மேலும் பல பாத்திரங்களை சேர்த்துக்கொள்ள முடியும். கதை சொல்வதற்கும் பாடுவதற்குமாக ஐந்து பேரையும் மரங்களாக நாலு பேரையும் ஆச்சியிடம் வடை வாங்கி போவோராக இருவரையும் சேர்த்துக்கொள்ளும்போது மொத்தமாக பதினான்கு பேர் நடிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகின்றது. அடுப்புக் கற்களாகக் கூட மூன்று மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். சிறுவர்களது புனைவுக் கனவு உலகத்தினுள் நாமும் செல்வோமானால் சிறுவர் அரங்கில் எதுவும் சாத்தியமாகும்.

பாத்திரங்களை தெரிவு செய்த பின்னர் அதாவது கதையில் எத்தனை பாத்திரங்கள் வரும் என்பதை மாணவர்களோடு சேர்ந்து தீர்மானித்த பின்னர் விரும்பிய மாணவர்களை விரும்பிய பாத்திரங்களைத் தெரிவு செய்து கதையை நாடகமாக நடிக்கும் படி கேட்கலாம். உரையாடல், செயல்கள் என்பனவற்றை மாணவர்களே புத்தளிப்புச் செய்து கொள்வர்.

இவ்வாறான புத்தளிப்பு முறையிலமைந்த நாடக ஆற்றுகையைப் பல தடவை மேற் கொள்ளலாம். அவற்றில் மாணவர் தாம் விரும்பியவாறு நாடகத்தை ஆற்றுகை செய்வர். அவற்றில் பிழைகளைக் கண்டுபிடித்து உணர்த்த ஆசிரியர்

முயற்சிக்கக் கூடாது. ஒவ்வொரு தடவையும் மாணவர் புத்தளிப்பு செய்யும் போது, அவை ஒவ்வொன்றினூடேயும் மேற்கிளம்பும் நல்ல அம்சங்களை ஆசிரியர் குறித்துக் கொள்வது நல்லது.

ஒவ்வொரு புத்தளிப்பையும் அடுத்து மாணவரோடு சேர்த்து, நடிக்கப்பட்ட விடயங்கள் பற்றி ஆசிரியர் கலந்துரையாட வேண்டும். இத்தகைய கலந்துரையாடலில் ஆசிரியரும் நடிப்பில் கலந்துகொண்ட மாணவர்களும், நடிப்பில் ஈடுபடாது பார்வையாளராக இருந்து மாணவர்களும் எந்த விதக் கட்டுப்பாடுமில்லாது கலந்து கொண்டு தமது கருத்துக்களை வெளிப்படையாக வெளிப்படுத்த வேண்டும். வெளிப்படையான ஆரோக்கியமான கலந்துரையாடலுக்கான ஒரு சூழலை ஆசிரியர் ஏற்படுத்திவிட வேண்டும்.

ஒவ்வொரு புத்தளிப்பு ஆற்றுகையும் அடுத்து கலந்துரையாடல் இடம்பெற்று அங்கு மேற்கொள்ளப்பட்ட முடிவுகளுக்கு அமைய மீண்டும் புத்தளிப்பு ஆற்றுகையும், கலந்துரையாடலும் என்ற படிமுறையில் ஆற்றுகையானது அனைத்து மாணவர்களது பங்களிப்போடும் உயர் செளிமையை நோக்கி வளர்ந்து செல்லும்.

இந்தப் படிமுறை வளர்ச்சிப் பயணத்தில் மாணவர்களது ஈடுபாடும் பங்களிப்பும், பங்குபற்றுகையும் அதியுயர் நிலையை அடையும். இந்தச் செயற்பாட்டில் அவர்கள் முழுமனதோடு தம்மை ஈடுபடுத்திக் கொள்வர். காரணம் அது அவர்களது செயற்பாடு. அது எவராலும் அவர்கள் மீது திணிக்கப்படாத ஒரு செயற்பாடு.

புத்தளிப்பு ஆற்றுகையில் வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களையும் விரும்பி ஈடுபட வைக்க வேண்டும். மிகுந்த கூச்ச சுபாவம் உள்ள மாணவர்கள் நடிப்பதற்கு விரும்பாது இருக்கக் கூடும். அத்தகையவர்களை பேசாப் பாத்திரங்களாக நிறுத்த முடியும். அதையும் விரும்பாத மாணவர்களை கலந்துரையாடலில் பங்கு கொள்ளச் செய்யலாம். எக்காரணம் கொண்டும் வற்புறுத்தல் என்பது இருக்கக் கூடாது.

மேற்கண்டவாறான "புத்தளிப்புச் செய்தலும் கலந்துரை யாடுதலும்" என்ற முறைமை மூலம் ஆற்றுகைக்கான நாடக எழுத்துருவை நாம் உருவாக்கிக் கொள்ள முடியும். அந்த நாடக எழுத்துரு மாணவர்களால் ஆக்கப்பட்டதாகவே இருக்கும். அதில் வரும் உரையாடல்கள், பாடல்கள், செயல்கள், நிகழ்வுகள், பாத்திரங்கள், உணர்வுகள், மனநிலைகள், காட்சிகள், படிமங்கள், வேட உடுப்பு, ஒப்பனை பற்றிய விபரிப்புக்கள் என யாவுமே மாணவர்கள் கூட்டாக இணைந்து கலந்துரையாடி வாதிட்டு விவாதித்து ஒரு முடிவுக்கு வந்து மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பெறுபேறுகளாகவே இருக்கும். இந்தப் படிமுறைச் செயற்பாட்டில் ஆசிரியர் என்பவர் கூடி பயணிக்கும் ஒரு வழிகாட்டியாகவே இருப்பர்.

இப்படி முறை மூலம் வரும் கற்றல் என்பது கூடிக் கற்றல், செய்து கற்றல், பட்டறிந்து கற்றல் என்ற வகையிலமைந்த சுய கற்றலாகவே அமைகின்றது. மகிழ்வாகக் கற்றல் என்பது இங்கு இயல்பாகவே இடம் பெறுகின்றது.

இந்தப் படிமுறைச் செயற்பாட்டில் நாடகத் தயாரிப்பு என்பது மேடை ஏற்றம் பற்றி மாணவர்களது செயற்பாடுகளாகவே அமையும். அதாவது காட்சியமைப்பு எவ்வாறாக அமைய வேண்டும், அவற்றில் பயன்படுத்தப்படும்

வர்ணங்கள் எவை, ஒப்பனை எந்தவாறு மேற்கொள்ளப்படவேண்டும், பாடல்களின் மெட்டுக்கள் எப்படி இருக்க வேண்டும், இசை எந்தவிதமாக எத்தகைய கருவிகளைக் கொண்டு இசைக்கப்படவேண்டும் என்பதை மாணவர்களோடு ஆசிரியர் கலந்துரையாடி அவர்களது கற்பனைக்கும் கருத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். சிறுவர் சித்திரங்கள், சிறுவர் பாடல், சிறுவர் இசைக் கோலங்கள் என்பன இங்கு ஆசிரியருக்கு உதவக் கூடியனவாக இருக்கும்.

மேற்கண்ட முறைமையில் மாணவர்களது முழுமையான பங்களிப்போடும், ஈடுபாட்டோடும் தயாரித்து மேடை ஏற்றப்படும் சிறுவர் அரங்கு ஆற்றுகையானது உண்மையிலேயே சிறுவரது அரங்காகவும், சிறுவராலான அரங்காகவும், சிறுவருக்கான அரங்காகவும் அமைந்து விடும்.

2 ஆரம்பப் பாடசாலையில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தத்தமது வகுப்பு மாணவர்களுக்கு தேவையான நாடகப் பிரதிகளை தாமே எழுதி மாணவர்களுக்கு அவற்றைப் பயிற்றுவித்து மேடையேற்றும் முறைமையும் உள்ளது. பாடசாலை விழாக்கள், தமிழ்த்தினப் போட்டிகள், பாடசாலை நாடக விழாக்கள் என்பவற்றிற்கு வேண்டிய நாடகங்களை பல ஆசிரியர்கள் தாமாகவே எழுதி தயாரித்து வரும் நிலைமை இன்றுள்ளது. இந்த முறைமையில் நாடகம் எழுதி தயாரிப்பதை இரண்டு முறைகளில் மேற்கொள்ளலாம்.

அ) ஒவ்வொரு வகுப்பாசிரியரும் தனித்து நின்று தானாகவே எழுதிக் கொள்ளுதல். அவ்வாறு எழுதுகின்ற ஆசிரியர் சிறுவர் நாடகம் பற்றிய அடிப்படை அறிவினை கொண்டவராக இருப்பது நல்லது . ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் யாவரும் சிறுவர்களோடு அவர்களது கற்றல், விளையாட்டு, கலைச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களாக இருப்பதால் சிறுவர் நாடகங்களை எழுதுவதற்கான தகுதி அவர்களுக்குத் தான் இருக்கின்றது. ஆர்வமும், தன்னம்பிக்கையும், துணிவும் இருந்தால் ஆசிரியர்கள் நாடகம் எழுத முடியும். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்காக நடைபெறும் நாடகப் பட்டறைகளில் பெரும்பாலான ஆசிரியர்கள் சிறுவர் நாடகங்களை எழுதுவதை காணக்கூடியதாக உள்ளது.

ஆ) தனித்து எழுதுவதற்கான துணிவு ஏற்படாத ஆசிரியர்கள், தமது பாடசாலையிலுள்ள ஏனைய ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களோடு சேர்ந்து கூட்டாக எழுதுவதற்கு முயற்சிக்கலாம். கூட்டு முயற்சியால் வரும் அனுபவத்தைக் கொண்டு பின்னர் தனித்து எழுதத் துணியலாம். அல்லது முதலாவதாக குறிப்பிட்ட மாணவர்களோடு சேர்ந்து நாடகத்தை எழுதி தயாரிக்கும், மிகச் சிறந்த முறையை இவர்கள் கைக்கொள்ளலாம். ஆசிரியர்கள், தமக்குள் கூடியும் மாணவர்களோடு சேர்ந்தும் பொதுவான கருமங்களை ஆற்றுவது என்பது, மாணவருக்கான மிகச் சிறந்த முன்னுதாரணமாக அமையும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

3 சிறுவர் நாடகங்களை எழுதுகின்ற பலர் இன்று உள்ளார்கள். அவர்கள்

எழுதுகின்ற நாடகங்களையும் ஆசிரியர்கள் தமது தேவைகளுக்காக பயன்படுத்திக்கொள்ள முடியும். அவ்வாறு தயாரிக்கும் போது சிறுவர் நாடகத்தயாரிப்புக்கள் பற்றிய அறிவையும் அனுபவத்தையும் ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ளுவது நல்லது. பிள்ளையின் மகிழ்வுக்காகவும், ஆளுமை விருத்திக்காகவுமே நாடகம் பயிற்றப்படுகின்றது. நாடகத்தின் மேன்மைக்காக அது மாணவரிடம் கொண்டு செல்லப்படவில்லை என்பதை ஆசிரியர்கள் நன்கு உணர்ந்துகொள்ளுவது அவசியம்.

4 ஆசிரியர்கள் சிறு சிறு குழுக்களாக ஒன்று சேர்ந்த சிறுவர் நாடகப் பிரதியாக்கப் பட்டறைகளையும், சிறுவர் அரங்கத் தயாரிப்பு பட்டறைகளையும் ஒழுங்கு செய்து, சிறுவர் நாடகம், சிறுவர் அரங்கு என்பவற்றில் போதிய புலமையையும் பட்டறிவையும் பெற்றுக்கொள்ள முடியும்.

5 மேலும் வகுப்பறைக் கற்பித்தலில் நாடகச் செயற்பாடுகள் எவ்வாறு துணைபுரியும் என்பதை ஆசிரியர்கள் அறிந்திருந்தால் நாளாந்தக் கற்பித்தல் செயற்பாட்டினூடாகவே அவர்கள் அரங்க ஆற்றுகைக்குத் தேவையான சிறுவர் நாடகங்களை உருவாக்கிக் கொள்ள முடியும் என்பதை அறிந்து கொள்வர்.

முடிவாக நாடகம் நல்லதொரு கற்பித்தல் முறை என்பதையும், செய்து கற்றல், மகிழ்வாகக் கற்றல், கூடிக் கற்றல், முனைந்து தவறி, மீண்டும் முனைந்து பட்டறிந்து கற்றல் என்பவற்றை அது கொண்டுள்ளது என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளுவது நல்லது. இன்று எமது சிறுவர்கள் மிக வேண்டி நிற்கின்ற மகிழ்ச்சியை நாம் சிறுவர் அரங்கினூடே அவர்களுக்குப் பெருமளவில் கொடுக்க முடியும்.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

**சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்**
**கபாய மொருநாளு மில்லை – உபாயம்**
**இதுவே மதியாகு மல்லாத வெல்லாம்**
**விதியே மதியாய் விடும்.**



# ஆரம்பப் பாடசாலையின் சிறுவர் அரங்கு சில முன்மொழிவுகள்

திரு.தே.தேவானந்

ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர்களின் மத்தியில் காணப்படவேண்டிய முக்கிய செயற்பாடாக *"சிறுவர் அரங்கு"* கல்வியாளர்களால் குறிப்பிடப்படுகின்றது.

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் கற்பித்தல் செழுமைக்கு சிறந்த ஆயுதமாக சிறுவர் அரங்கு இனங்காட்டப்படுகின்றது.

சிறுவர் அரங்கு ஆரம்ப பாடசாலைகளுக்கு ஏன் தேவை? இதில் கற்பனை விரிவிற்கு, கூட்டிணைவுச் செயற்பாட்டிற்கு, மகிழ்ந்து கற்பதற்கு, கட்புல தரிசனத்துடன் கூடிய கிரகித்தலுக்கு, கண்களுக்கும் காதுகளுக்குமான இனிப்பான வழங்கலுக்கு, உடலை ஊடறுத்து உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியைக் கிளறுவதற்கு ஏற்றதான சக்திவாய்ந்த வலுவுள்ளதால் ஆகும். இதனால் சிறுவர் அரங்கு சிறுவர்களை ஆளுமை மிக்கவர்களாக உருவாக்கிவிடுகின்றது.

அரங்கத்திறன் உடைய நல்லாசிரியன் மூலமே இது சாத்தியமாகும். இதன் மூலம் தான் ஆரம்ப பாடசாலைகளின் சிறுவர் அரங்கை குடிகொள்ள வைக்கலாம். சிறுவர் அரங்கு பாடசாலைகளில் குடிகொண்டால் பாடசாலை எங்கும் மகிழ்ச்சி வியாபித்திருக்கும்.

சிறுவர் அரங்கை எவ்வாறு ஆரம்பப் பாடசாலையில் குடிகொள்ளவைப்பது?

இது எம்முன் உள்ள கேள்வியும் சவாலும். இதற்காக சீரான செயற்றிட்டம் வடிவமைக்கப்படவேண்டும். இருக்கின்ற சிறுவர் அரங்கை சீர் செய்வதா? அல்லது இருப்பதை நிராகரித்து புதியதொன்றை அறிமுகம் செய்வதா? இருப்பது எது? புதியது எது? என்ற வினாக்களும் இதில் உண்டு.

செயல் திறன் அரங்க இயக்கம் 2002ஆம் ஆண்டிலிருந்து பாடசாலைகளில் சிறுவர்களுக்கான நாடகங்களை மேடையேற்றி வருகின்றது. அதில் இணைந்து செயற்பட்டதால் பல பாடசாலை அதிபர்களை, ஆசிரியர்களை சந்தித்து உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. இதன் போது நவீன கல்விச் சீர்திருத்தத்தை மையமாகக் கொண்ட கற்றல் கற்பித்தல் செயற்பாட்டிற்கு சிறுவர் அரங்கு அவசியம் என்று வலியுறுத்தினார்கள். இதற்காக ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சிறுவர் அரங்கக் களப் பயிற்சிகள், கருத்தரங்குகள் நடாத்தப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இதன்படி வடமராட்சிக் கல்விவலயம், வலிகாமம் கல்வி வலயம், தீவகக் கல்வி வலயங்களில் சிறுவர் கருத்தரங்குக்கான நாடக எழுத்துரு படைப்பாக்க களப்பயிற்சி, நாடகத் தயாரிப்பு களப் பயிற்சிகளை நடாத்தியிருந்தோம். இதன் போது ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர் அரங்கைக் குடிவைப்பதற்கு பலபோதாமைகள் இனங்காணப்பட்டன. அவைவருமாறு.

- ❖ சிறுவர் அரங்கிற்கான பயிற்சிகள் கல்வித் திணைக்களத்தால் போதியளவிற்கு நடாத்தப்படுவதில்லை.

- ❖ சிறுவர் அரங்கிற்கான ஆசிரிய ஆலோசகர்கள் கல்வித் திணைக்களங்களில் இல்லை. இதனால் இத்துறையை பாடசாலைகளில் வளர்க்க முடியவில்லை.
- ❖ சிறுவர் அரங்கிற்கான நாடக எழுத்துருக்கள் போதியளவு கிடைப்பதில்லை.
- ❖ சிறுவர் அரங்கிற்கான தொடர் பயிற்சிகளைப் பெறுவதற்கான களங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. பாடசாலைக்கு வெளியில் தனியார் நிறுவனங்களிலும் இதற்கான வாய்ப்புக்கள் இல்லை.
- ❖ சிறார்கள் ஆசிரியர்கள் பார்ப்பதற்கு ஏற்றதான தரமான சிறுவர் நாடக மேடையேற்றங்கள், பாடசாலைச் சூழலில் போதியளவு நடைபெறுவதில்லை. இதனால் பார்த்துக் கற்றுக்கொள்ள முடியவில்லை.
- ❖ சிறுவர் நாடக எழுத்துருக்கள், கட்டுரைகள், அடங்கிய நாடக நூல்கள், வீடியோ கசட்டுக்கள் கிடைப்பதில்லை. இதனால் தேடிக்கற்றுக்கொள்ள வாய்ப்பில்லாமல் போகின்றது.

மேற்சொன்ன போதாமைகளை நிவர்த்தி செய்து ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர் அரங்கை குடிவைப்பதற்கு கல்வித் திணைக்களங்கள் உதவிபுரியவேண்டும் என்பது பலரது விருப்பம். ஆங்காங்கே கல்வித் திணைக்களத்தால் சிறுசிறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவை போதியளவு தொடர்ச்சியான செயற்திட்டங்களாக இல்லை.

ஒவ்வொரு கல்வி வலய ரீதியாக ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களுக்கு களப் பயிற்சிகள், கருத்தரங்குகள் நடாத்தப்பட்டு சிறுவர் அரங்கிற்கான வளாளர் குழுக்கள் உருவாக்கப்படல் வேண்டும். இக்குழுக்கள் மூலம் பரவலாக களப் பயிற்சிகள் கருத்தரங்குகள் நடாத்தப்படலாம். கல்வித் திணைக்களத்திற்கு வெளியே அரங்கத்துறையில் நிபுணத்துவம் உடையவர்களின் உதவி ஒத்தாசைகள் இதற்கு வேண்டப்படுவது அவசியம். அப்போது தான் வளமான வளாளர் குழுக்கள் உருவாகும்.

மேலும் சிறுவர் அரங்கத்துறையில் தற்போது ஈடுபட்டு வருவோரை இணைத்து மாவட்டத்திற்கு பொதுவான சுயாதீனமான பயிற்றுவிப்பாளர் குழுவொன்று இணைக்கப்பட்டு இயங்க ஆரம்பிக்க வேண்டும். இத்தோடு நமக்குத் தேவைப்படும் சிறுவர் அரங்கு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு ஆக்கபூர்வமான முன்மொழிவுகளை வைப்பதற்காக நாடகத்துறை, கல்வித்துறை சார்ந்தோரை உள்ளடக்கிய ஆய்வுக் குழு ஒன்று உருவாக்கப்படவேண்டும். ஆய்வு முடிவுகள் புத்தகங்களாக வெளியிடப்படவேண்டும். இவ்வாறான பயன்மிக்க செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரும் இணைந்து ஒருமுகமாக செயற்படவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் சிறுவர்களுக்கு மிகப் பயன் மிக்கதான சிறுவர் அரங்கை ஆரம்பப் பாடசாலைகளில் குடிவைக்க முடியும்.

சிறுவர் அரங்கு என்பது சிறுவர் பார்வையாளர்களுக்காக வரன் முறையாக தயாரிக்கப்பட்டு அளிக்கை செய்யப்படும் நாடகத்தைக் குறிக்கும். இங்கு சிறுவர்களை மனதில் நிறுத்தி நாடகம் தயாரித்தல் முக்கியமானது. சிறுவர்களுக்காகச் செய்கின்றோம் என்ற நினைவு நாடகத் தயாரிப்பின்போதும், நாடக மேடை ஏற்றத்தின்போதும் இருத்தல் வேண்டும். சிறுவர்களுக்காக ஆற்றுகை செய்வோர் சிறுவர்களாக, பெரியவர்களாக, சிறுவர்களும், பெரியவர்களும் இணைந்த குழுவாக இருக்கலாம். பெரியவர்கள் நடிக்கின்றபோது சிறுவர்களின் மனநிலைக்கு வந்துவிடுதல் வேண்டும். இங்கு சிறுவர்களின் மனநிலைக்கு இறங்கிவருகிறோம் என்ற நினைப்பு இல்லாது வருதல் வேண்டும். இதன் பின்பே பாத்திரம் தாங்க முடியும்.

சிறுவர் அரங்கிற்கான வரண்முறையான நாடகத் தயாரிப்பில் 'எழுத்துரு' மிக அடிப்படையானது. எழுத்துருவை மையமாகக் கொண்டே நாடகம் தயாரிக்கப்பட வேண்டும்.

எழுத்துரு சிறுவர்களோடு ஊடாடுகின்ற பெரியவர்களால் எழுதப்படுவதே விரும்பத்தக்கது. இதிலும் தனியொருவர் தனபாட்டில் எழுதுவதும் சிலர் இணைந்து கூட்டாக பேசிக்கதைத்து நாடகம் எழுதுவதுமான வழிமுறைகள் உள்ளன. சிலர் இணைந்து பேசிக்கதைத்து எழுதுவது சிறந்த படிமுறையாகக் கொள்ளப்படுகின்றது.

சிறுவர் அரங்கிற்கான நாடகம் எழுதப்படுகின்றபோது விநோதம், மகிழ்வு, சாகசம், அதீதகற்பனை நிறைந்த கதைகள் தேர்ந்தெடுக்கப்படலாம். இவ்வாறு தேர்ந்தெடுத்த கதையை சிறுவர்களுடன் இணைந்தும் எழுத முடியும். இது கடுமையான, சலிப்பான படிமுறையாக இருந்தாலும் இதனைச் செயற்படுத்துகின்ற போது நிறைய அதிசயங்களைக் காணமுடியும். சிறுவர்களுடன் இணைந்து நாடகங்கள் எழுதுவதற்கான திறனை முயன்று தவறல் முறைமையினூடாகவே பெற்றுக்கொள்ள முடியும். நம் மத்தியில் உள்ள நாடக எழுத்தாளர்களிடம் இந்தத் திறன் போதியளவு இல்லை எனலாம். தனியொருவர் தன்பாட்டில் நாடகம் எழுதும் படிமுறையே நம்மத்தியில் அதிகம் பழக்கத்தில் உள்ளது.

1978ஆம் ஆண்டு யாழ் நாடக அரங்கக் கல்லூரியினரால் மேடையேற்றப்பட்ட குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ***"கூடிவிளையாடு பாப்பா"*** நாடக மேடையேற்றத்தில் இருந்து யாழ்ப்பாணத்தில் வரண்முறையான சிறுவர் அரங்கிற்கான நாடகங்கள் பாடசாலைகளில் துளிர்விட ஆரம்பித்தன எனலாம். இதன் பின் குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் பல சிறுவர் நாடகங்களை எழுதியுள்ளார். அவரது பல நாடகங்கள் இன்றும் பல பாடசாலைகளில் மேடையேற்றப்படுகின்றன. சிறுவர் அரங்கிற்கான நாடக எழுத்துருப் பற்றாக்குறையே இதற்கான காரணமாக அமைகிறது. குழந்தை ம.சண்முகலிங்கத்திற்கு பின் சிறந்த சிறுவர் நாடகாசிரியர்கள் உருவாகவில்லை என்பதையே இது கோடிட்டுக்காட்டுகிறது. இதனால் சிறுவர் அரங்க வளர்ச்சிக்கு அத்தியாவசியமான நாடக எழுத்துருக்களைப் படைப்பதற்கான திறனை ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கு வழங்குதல் மிக அவசியமான உடனடித் தேவையாக உணரப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் குழந்தை ம.சண்முகலிங்கம் தலைமையில் செயல் திறன் அரங்க இயக்கத்தினால் ஒழுங்குபடுத்தப்பட ஆசிரியர்களுக்கான நாடக எழுத்துருப்படைப்பாக்கக் களப்பயிற்சிகள் புதிதாக பல ஆசிரியர்கள் நாடகம் எழுதத்தூண்டுகோலாக அமைந்திருக்கின்றன. இந்தக் களப்பயிற்சிகள் மூலம் சிறுவர் நாடகங்கள் தயாரிக்கின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையும் அவதானிக்கலாம்.

சிறுவர் நாடக நூல்களினதும் எழுத்துக்களினதும் பற்றாக்குறையை நீக்குவதற்காக, வடக்குக் கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் "சிறுவர் அரங்கு" என்ற நாடக நூல் ஒன்றை பாடசாலைகளுக்கு அறிமுகம் செய்திருக்கிறார்கள். இதில் சிறுவர் நாடக எழுத்துருக்களும் உள்ளடங்கியுள்ளன. இந்த நூலில் காணப்படுகின்ற எழுத்துருக்களை அதிகமான ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் தயாரிப்புக்காக எடுத்துக்கொள்கின்றார்கள். இந்த நாடகங்கள் ஆசிரியர்கள் பின்பற்றுவதற்குரிய மாதிரிகளாகக் (MODEL) கொள்ளப்படுகின்றன. கல்வித் திணைக்களம் ஊடாக இந்த நூல் கிடைக்கப்பெற்றதால் அவர்கள் அவ்வாறு கருதுகிறார்கள் போலும். ஆனால் இந்த நாடகங்கள் மாதிரிகளாக அறிமுகம் செய்தற்குகந்தனவா? என்ற கேள்வி உண்டு. ஏனெனில் இவற்றில் மாணவர்களின் உளவிருத்திக்கு ஏற்ற பண்புகளையோ, சீரான அழகியல் எண்ணத்துடன் கோர்க்கப்பட்ட கோர்வைகளையோ நல்ல மனித விழுமியங்களையோ காணமுடியவில்லை. ஒரு நூலை மாதிரியாக அறிமுகம் செய்வதற்கு முன் துறைசார்ந்தோர் ஆய்வு செய்து சிபார்சு செய்ய வேண்டும். அவ்வாறு செய்கின்ற போது தான் சீரான சரியான வளர்ச்சியை நோக்கி நகர முடியும்.

சிறுவர் நாடகங்களில் பல்வகைத் தன்மைகொண்ட பல சாத்தியப்பாடுகளை, பல்வேறுபட்ட சிந்தனைகளை தூண்டும் விடயங்களை அறிமுகம் செய்யலாம். ஒருமுகப்பண்பு கொண்ட விடயங்களை அறிமுகம் செய்வதால் பல்பரிமாண வீச்சை நிராகரித்துவிடுவோம். சிறுவர் நாடகங்கள் பல்பரிமாண வீச்சு கொண்டவையாக அமைதல் வேண்டும்.

சிறுவர்கள் எப்போதும் மிருகங்கள் பாத்திரங்களாக ஊடாடுகின்ற கதைகளையும், அதிமானிடப் பண்பு கொண்ட கதைகளையும் அதிகமாக விரும்புவார்கள்.

எங்கள் மத்தியில் காணப்படும் பஞ்சதந்திரக் கதைகள், ஈசாப் கதைகள், தென்னாலிராமன் கதைகள் எல்லாம் தந்திரம், குறுக்குத்தனம் தவறான வழிகளில் இலக்கை அடைதல், பொய் சொல்லல் போன்ற பண்புகளையே அனேகம் கொண்டுள்ளன. இந்தக் கதைகளை தெரிவு செய்து அப்படியே நாடகமாக எழுதி அப்படியே சிறுவர்கள் மத்தியில் போடுவது அவர்களை தவறாக வழிநடத்துவதாக அமைந்துவிடும். இதனால், சிறுவர் அரங்கிற்கான நாடக எழுத்துருப்படைப்பாக்கத்திற்காகத் தெரிவு செய்யப்படும் கதைகளில் நற்பண்புகள் துலங்கக் கூடியதான மாற்றங்களைச் செய்து கொள்ளலாம். அதே வேளை புதிதாகப் பல கதைகளை மாணவர்களுடன் இணைத்து உருவாக்கியும் கொள்ளலாம்.

சிறுவர் அரங்கில் கதைத்தெரிவு, மொழிக்கையாட்சி இரண்டும் மிக முக்கியமானவை. எளிமையானதும் இலகுவில் புரிந்து கொள்ளத்தக்கதுமான வெளிப்படையான அசைவியக்கத்தை சிறுவர் அரங்கிற்கான எழுத்துரு கொண்டிருக்க வேண்டும்.

மர்மங்கள், உள்ளார்ந்த அர்த்தப்பாடுகள், அவிழ்படமுடியா முடிச்சுக்கள் சிறுவர் அரங்கிற்கான எழுத்துருவில் இருக்கமுடியாது. ஒழிவு மறைவின்றி இலகு நடையில் மீண்டும் மீண்டும் கூறுதலை சிறுவர் இரசிப்பார்கள். இவற்றை மனதில் இருத்தி சிறுவர் அரங்கிற்கான எழுத்துருக்களை படைக்க வேண்டும்.

நாடக எழுத்துரு ஒன்று கையில் கிடைத்ததும் நடிகர்களுடனான சந்திப்பு நடைபெறும். ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர்களே நடிகர்கள் இவர்களை சந்தித்து நாம் ஏன் நாடகத்தை தயாரிக்கிறோம் என்பது பற்றி கலந்துரையாட வேண்டும்

எமது ஆரம்பப்பாடசாலைகள் சிறுவர் அரங்க விழா என்ற பெயரில் நடைபெறும் நாடகப் போட்டிகளுக்காகவே நாடகங்களைத் தயாரிக்கின்றன. இதில் ஆசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் முதலாம் இடத்தை அல்லது அதிவிசேட இடத்தினை பிடித்து விடுவதே நோக்கமாக இருக்கிறது. இதற்காக அதிகமான பாடசாலைகள் குறுகியகாலத்தில் நாடகத்தயாரிப்புக்களை மேற்கொள்கிறார்கள். சிறுவர்கள் குறுகிய காலத்திற்குள் வசனங்களை புரிந்து கொள்ளாது மனனம் செய்வதற்கும் அசைவுகளை நினைவில் வைத்திருப்பதற்கும் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். வெல்வதற்காக ஆசிரியர் கையில் தடியுடன் நின்று சிறுவர்களை அடித்து, ஏசி உறுக்கி நாடகம் பழக்குகிறார்கள். இதனால் சிறுவர்கள் விருப்புடன் மகிழ்வாக ஈடுபடும் களம் தொலைந்து இறுக்கமானதும் பதட்டமானதுமான அவசரமானதுமான சூழல் நிலவுவதை போட்டிக்காக அவதானிக்கலாம்.

ஒரு சிறுவர் நாடகத் தயாரிப்பு சிறுவர்கள் மகிழ்ந்து கற்பதற்குரியதான விளையாட்டாக(Play) அமைய வேண்டும். முதலில் சிறுவர்களோடு இணைந்து கலந்து விளையாடுதல் மிக அவசியம் அதன் பின் நாடகத்தின் கதை சிறார்கள் விரும்பக்கூடியதாக தெளிவாக சொல்லப்படவேண்டும். கதையை சிறார்கள் சிறு குழுக்களாகப் பிரிந்து தங்கள் பாட்டில் நடித்துப் பார்க்க அனுமதிக்கலாம். கதையில் வரும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட புத்தாக்க செயற்பாடுகளை செய்து பார்க்கலாம். இவற்றில் இருந்து சிறார்கள் பாத்திரத்திற்கு பொருத்தமானவர்களை தெரிவு செய்ய வாய்ப்பளிக்கலாம். அவர்கள் சரியான

தெரிவுகளை மேற்கொள்வார்கள். அதற்கான களத்தை சிருஷ்டித்து கொடுப்பது பழக்குபவரின் கடமை. நாடகத்தில் பங்கு கொள்கின்ற ஒவ்வொரு சிறுவனும் தன்னால் முடியும் என்ற தற்துணிவைப் பெறத்தக்க வகையில் தயாரிப்புக்களம் சிருஷ்டிக்கப்பட வேண்டும்.

நாடகத் தயாரிப்புக்காக சந்திக்கின்ற ஒவ்வொரு சந்திப்பும் சிறுவர்களின் ஆளுமையை, ஆக்கத்திறனை விருத்தியாக்குவதாக இருக்க வேண்டும்.

ஒரு சிறுவர் நாடகத்தை ஒரிரு நாட்களில் தயாரித்து விடுவதை சிலர் கெட்டித்தனமாக குறிப்பிடுகிறார்கள். உண்மையில் அதன் அர்த்தம் பல பிள்ளைகளை நிறையவே வருத்தியிருக்கிறார்கள் என்பதாகவே அமையும். நீண்ட காலம் எடுத்து சீராக சிறுகச் சிறுக வளர்த்துச் செல்வதன் ஊடாகவே சிறந்த சிறுவர் நாடகத் தயாரிப்பும் சிறுவர்களின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்ட படைப்புக்களாக அமைய வேண்டும்.

தயாரிக்கப்படுகின்ற நாடகங்கள் ஒவ்வொன றும் சிறுவர்களுக்கும், சிறுவர்கள் மீது அக்கறையுள்ளவர்களுக்குமாக போடப்பட வேண்டும். அவ்வாறு போடப்படுகின்றபோதே ஆற்றுகைசெய்யும் சிறுவரும் பார்க்கின்ற சிறுவர்களும் மகிழ்ந்து பூரிப்பார்கள். நாடக மேடையேற்றத்தின் பின் ஆற்றுகை செய்த சிறுவர்களை பார்வையாளர்களுடன் கதைக்க விடவேண்டும். பார்வையாளர்களின் பாராட்டுக்கள், அபிப்பிராயங்கள் சிறுவர்களை மிகுந்த ஆற்றல் உள்ளவர்களாக ஆக்கியிருக்கிறது. வகுப்பறையில் பதுங்கியிருந்த பல சிறுவர்கள் மேடையில் அதிசயிக்கத் தக்க வகையில் செயற்படுவார்கள். அவர்களைப் பார்த்து ஆசிரியர்கள் வியப்பார்கள். பாராட்டுவார்கள். இவை அந்த சிறார்கள் கல்வியில் ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் தன்னம்பிக்கையுடனும் ஈடுபட உதவியிருக்கிறது.

பார்ப்போனும், ஆற்றுவோனும் சங்கமிக்கும் போது எழுகின்ற பிரவாகம் சிறார்களுக்கு தித்திப்பானது.

***ஒளவையார் அருளிச் செய்த நல்வழி***

**நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபாழ்**
**ஆறில்லா வூருக் கழகுபாழ் – மாறில்**
**உடற்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே**
**மடக்கொடி யில்லா மனை.**



# சிறுவர் நாடகமும் அரங்க ஒப்பனையும்

திரு. பீ.ஸ்ரனீஸ்லாஸ்
ஒப்பனைக் கலைஞர்.

குழந்தை பிறந்தது முதல் படிப்படியாக சகலவிதமான வளர்ச்சியையும் விருத்தியையும் பெற்றோரிடமும், சூழலில் இருந்தும் பெறுகின்றான். நாளுக்கு நாள் வளர்ச்சியும் விருத்தியும் அடைந்து வரும் குழந்தை பராயம் வந்ததும் பாடசாலையில் சேர்க்கப்படுகின்றான். அங்கு அதிபர், ஆசிரியர்கள், சகமாணவர்கள் இப்பிள்ளையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் ஒப்பற்ற உதவி புரிகின்றார்கள்.

விடுமுறை நாட்கள் தவிர்ந்த பாடசாலை நாட்களில் ஒவ்வொரு நாளும் சில மணி நேரம்தான் பாடசாலையில் செலவு செய்தாலும், விடுமுறையின்றி, நாள் முழுக்க பாடசாலையிலேயே செலவு செய்வது போன்ற மனோபாவத்துடன் உற்சாகமாகவும், சந்தோசமாகவும் இருப்பதை அவதானிக்கலாம். இதற்கு முக்கிய காரணம் அதிபர், ஆசிரியர் அவர்களுடன் நடந்து கொள்ளும் விதமும் அரவணைப்பும்தான்.

இப்படியான பிள்ளையைத்தான் நாம் நடிக்க மேடைக்குக் கொண்டு வரப்போகின்றோம். தினம் தினம் நாடக ஆசிரியர் பிள்ளைகளின் நடமாட்டத்தை அவதானித்து ஏற்ற பாத்திரத்தைக் கொடுக்க வேண்டும். இந்த விடயத்தில் மிக அவதானமாக அணுக வேண்டும் முதலில் கொடுத்த பாத்திரத்தில் பிள்ளை சரிவர செய்யவில்லையே என்று, மாற்றவோ நீக்கவோ கூடாது. அப்படி நீக்குவதினால் பிள்ளையின் மனோநிலை பாதிக்கப்படும். மற்றைய பிள்ளைகள் கேலி செய்ய இடம் உண்டு பெற்றோரின் மனம் புண்படும். ஆகவே ஆரம்பத்திலேயே சரிவர செய்ய வேண்டும்.

அடுத்து நாடகத்துக்குரிய கதை நாடக ஆசிரியர் கதைத் தெரிவில் மிகக் கவனமாக ஈடுபடவேண்டுமானால் அதிபரையோ, மற்றைய உடன் ஆசிரியர்களையோ கலந்துரையாடிச் சேர்த்துக் கொள்ளலாம். குழந்தைக்குப் பொருத்தமான விரும்பக் கூடிய கதை, வசன அமைப்பில் இலகுவாக உச்சரிக்கக்கூடிய சொற்பதங்கள், பிள்ளைகள் பாடக்கூடிய பாட்டும் மெட்டும், நன்கு நடிக்கக்கூடிய நடிப்பு ஆகியவற்றை கவனத்தில் எடுத்துச் செயல்பட வேண்டும்.

பிள்ளைகளுக்கு பாத்திரங்களை தெரிவு செய்து கொடுக்குமுன்பே நாடக ஆசிரியர் பிள்ளைகளுடன் ஈடுபாடாகி தான் கொடுக்கும் பாத்திரத்தை திறம்பட செய்து முடிக்குமா என்ற முடிவை எடுத்துவிட வேண்டும்.

பாத்திரங்களை நிர்ணயிக்கும் முன்பே தனித்தனியாக, நடிக்க இருக்கும் பிள்ளைகளுடன் கதையைக் கூறி கூடிய விருப்பை ஏற்படுத்திக்கொண்டு, அப்பிள்ளைக்குரிய வசனங்களை, முதலில் சொல்லிக்காட்டி பின்பு பிள்ளையை சொல்ல வைத்து, நடிக்க வைத்து, பாடவைத்துத்தான் ஓர் தீர்மானத்திற்கு வந்தபின் சகலரையும் சேர்த்து அப்பியாசம் கொடுக்க வேண்டும். முன்பு தனித்தனியாக இயங்கியபிள்ளை இப்போ கூட்டாக சேரும்போது உற்சாகமாகத் தொழிற்பட இடம் உண்டு.

எல்லோரும் பிற உதவியின்றி நடிக்கின்றார்கள் என்று கண்டபின் தான் மேடைக்குக் கொண்டு வர வேண்டும். வசதியானால் நடிக்கப் போகும் மேடையிலேயே இரண்டொரு ஒத்திகை பார்ப்பது சாலச்சிறந்தது.

மேடைக்கு போகும்முன்பே உடை ஒப்பனை பக்க வாத்தியங்களுடன் இரண்டு முறையாவது நடித்து அப்பியாசப்படல் சிறந்தது.

பாத்திரங்களுக்கு ஏற்ற உடைகள் கண்டிப்பாக சரியாக அமைய வேண்டும். முகஒப்பனையும் அதே போன்று பாத்திரப் பொருத்தமாக அமைய வேண்டும்.

முக ஒப்பனையில் சிலருக்குப்பாவிக்கும் ஒப்பனைப் பொருட்கள், முகப்பவுடர், புருவமை, கண்மை, உதட்டுச்சாயம் என்பன தரமானதாக இல்லாவிட்டால் முகத்தில் வீக்கம், எரிவு, புண்போடல், ஒவ்வாமை ஆகியன ஏற்படக்கூடும். இவற்றினால் காலப் போக்கில் பிள்ளைக்கு நடிப்பில் இருக்கும் ஆர்வம் குறைவடைய இடம் உண்டு.

இம்முறைகள் எல்லாம் எல்லாவித நாடகங்களுக்கும் பொருந்தும் எந்தப் பாஷைக்கும் பொருந்தும்.

இதே நேரத்தில் பாஷை என்று கூறும் போது ஒப்பனையில் அவைகளை கண்டு விளங்கிக் கொள்ளக் கூடியதாய் உடைகளும் ஒத்ததாக அமைய வேண்டும்.

ஆங்கில நாடகம் நடிக்கும் போது முழுக்க முழுக்க ஆங்கில பாணியிலேயே முக ஒப்பனை தலை ஒப்பனை, உடைகள், தளபாடங்கள் என்பன ஆங்கில பாணியிலேயே அமைதல் கட்டாயம்.

கடைசியாக மேடையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறின் காட்சிக்குக் காட்சியோ ஓர் அங்க நாடகமாயின் ஒரே காட்சியமைப்போ பார்ப்பவர் மனம் நாடகத்தின் உணர்வைத் தொடக்கூடிய வகையில் தத்துவரூபமாக அமைய வேண்டும்.

மேடைக்கு போதிய வெளிச்சம் அதாவது மண்டபத்தின் கடைசி ஆசனத்தில் அமர்ந்திருப்பவரும் நன்கு பார்க்கக்கூடியதாக அமைய வேண்டும்.

ஒலியமைக்கும் போது அதிக சத்தம் இல்லாமல் ஓர் அளவு ஒலியுடன் இரைச்சலோ விசிலடிப்போ இல்லாமல் அமைந்தால் போதுமானது. ஒலி, ஒளி அமைப்பில் சிறார் நாடகங்களில் அதிக அக்கறைகாட்டாது மேடை இருட்டறை போல் இருப்பது வருந்தத்தக்கது.

எல்லா வகையிலும் ஓர் அளவு கவனம் செலுத்தி சிறார் நாடகங்களை மேடையேற்றி வரும் பாடசாலைகள், மன்றங்களில் அநேகமாக முன்னணியில் நிற்கும் பாடசாலையில் ஒன்றாக யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை விளங்கி வருவது மகிழ்ச்சிக்குரியது.

இத்தனைக்கும் காரணகர்த்தாக்களாக பாடசாலை அதிபரும், சில ஆசிரியர்களும் விளங்குகின்றார்கள் என்பதில் ஐயமில்லை.

இப்பாடசாலை மேலும் பல சிறந்த பாலர் நாடகங்களை வித்தியாசமான கோணங்களில் படைத்து மேடைக்குக் கொண்டு வர வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்போமாக.



# ஆரம்பக் கல்வியில் புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றிய நோக்கு

**திருமதி க. சுப்பிரமணியம்**
ஆரம்ப கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர்

**ஆ**ரம்பக் கல்வி திட்டமிடல் செயற்திட்டம் கேம்பிறிஜ் கல்வி மதியுரையாளர்களின் தொழில்நுட்ப ஆதரவுடன், சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தின் நிதி உதவியுடனும் செயற்படும் இலக்கை கல்வி, உயர்கல்வி அமைச்சினது ஒரு செயற்திட்டமாகும்.

"பெற்றோர் மகிழ சிறார் கூடிப் பெரியோர் செய்யும் செயல் செய்து மற்றோர் போலத் தெருவின் கண் மணல் வீடமைத்து விளையாடுபவர்களே குழந்தைகள்'' இக் குழந்தைகளுக்கு ஏற்ற கல்வியை வழங்குவதே அமைச்சினது நோக்கமாகும்.

அத்திவாரம் பலமாக இருந்தால்தான் வீடு உறுதியாக இருக்கும் என்று உதட்டளவில் எல்லோரும் கூறிக்கொள்வது மட்டுமல்லாது நடைமுறையில் ஆரம்பக் கல்வியில் கவனம் செலுத்துதலே எம்மவரின் நோக்காக இருக்க வேண்டும். மனப்பாங்கில் மாற்றம் ஏற்பட்டாலேயொழிய சீர்திருத்தம் வெற்றிப்பாதையை நோக்கிச் செல்லாது.

ஐம்பது வருடங்களுக்கு மேலாக "சகலருக்கும் கல்வி" என்பது இவ்வகை சமூகத்தின் ஒரு நோக்காக உள்ளது. சமீப வருடங்களில் கல்வியில் பாரிய சீர்திருத்தத்தை இலங்கை மேற்கொள்கின்றது. ஆரம்பக் கல்விக் கட்டம் கல்வியில் பண்பு சார் தன்மையை கொண்டுள்ளது. கல்வி சீர்திருத்தத்தின் மையம் வகுப்பறைகளிலும், ஆசிரியர்கள், மற்றும் கற்பவர்களின் எண்ணங்கள், செயல்கள் எல்லாவற்றிலும் படிந்துள்ள அதே வேளை கொள்கை வகுப்போர், பாடவிதான விருத்தியாளர்கள், ஆசிரியர்கள், திட்டவியலாளர்கள், முகாமையாளர்கள் ஆகியோரின் வேலைகளினால் சீர்திருத்தம் வழிகாட்டப்படுவதாகவும் மற்றும் ஆதரவளிக்கப்படுவதாகவும் உள்ளது. கீழ் ஆரம்ப மேல் ஆரம்ப தரங்களுக்கான முன் மொழியப்பட்ட கற்பித்தல் முறைகளில் சகல ஆசிரியர்களையும் பயிற்றி அதன் பின் பாடசாலைக்கு செல்லும்போது அவற்றை நடைமுறைப்படுத்துவதையே வேலைக்காக கொண்டுள்ளது.

ஒழுங்கான துப்பரவான பாடசாலை சூழலினதும் மற்றும் செயற்பாட்டு அடிப்படைக் கற்றலினதும் வேலைகளை ஆரம்பக் கல்வி பாடவிதான சீர்திருத்தங்கள் தெளிவாக வலியுறுத்துகின்றன.

1. சுறுசுறுப்பான, ஆக்கபூர்வமான, இன்பகரமான அனுபவமாக கற்றல் அமையும் வண்ணம் பிள்ளை மைய அணுகுமுறையை ஆசிரியர் கடைப்பிடிக்க வேண்டும்.
2. வேலை செய்யும் அர்ப்பணிப்பு மனப்பான்மை மொழி, நாடகம், கதை, பாட்டு ஆகியவை மூலம கற்பிக்க வேண்டும்.
3. தன்னுடையதும், மற்றவர்களினதும் உரிமைகளையும், கடமைகளையும் சிறு

பராயத்திலேயே விளங்கிக் கொள்ளவைக்க வேண்டும்.

4. சகல சூழ்நிலைகளிலும் ஒருவரோடொருவர் போட்டி போடுவதை விட ஒருவர் மீது ஒருவர் சிரத்தை காட்டும்படி கற்பிக்க வேண்டும்.
5. குழு முறை கற்பித்தல் மற்றவர்களுடைய கலாச்சாரத்தையும் தன்னுடைய சொந்த கலாச்சாரத்தையும் மதித்தல், தனது வேலையில் அக்கறை காட்டல் போன்றனவும் வளர்க்கப்படுகின்றன.

**இத்துடன் அதிபர்கள் ஆற்றவேண்டிய பணியின் மீள்பார்வை**

1. வகுப்பறையிலும், வகுப்பறைக்கு வெளியிலும் ஒழுங்கான ஒரு சூழலை அமைத்து பேணுதல்.
2. கற்பித்தல் உபகரணங்களைத் தயாரிப்பதற்கு நேரத்தை வழங்குதல்.
3. ஏனைய வகுப்புக்களில் கற்பித்தலிலிருந்து ஆரம்ப வகுப்பாசிரியர்களை விடுவித்தல்.
4. ஆரம்ப தரங்களில் பின்பற்றப்படும் பாடவிதானம் பற்றியும் கற்பித்தல் முறைகள் பற்றியும் அறிந்திருத்தல்.
5. சீர்திருத்தங்கள் பற்றிய விளக்கத்தை பெற்றோரிடையே ஏற்படுத்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்துதல். அதிகமான பிள்ளைகளைச் சேர்ப்பது பொருத்தமற்றது. முதனிலை 1க்கு ஓர் ஆசிரியரும், முதனிலை 2க்கு ஓரே ஆசிரியரும் கற்பித்தல் போன்ற இன்னும் பல புதிய கல்விச் சீர்திருத்தத்தின் மீள் பார்வையாகும். ஆரம்ப வகுப்புக்களில் கற்பது கற்றல் விருத்தியில் மிகவும் தீர்க்கமான கட்டத்தை தூண்டிக் கொண்டிருக்கும் மாணவர்களே ஆவர். சமூகத்தில் சிறந்த பிரஜையாக வளர்வதற்கும் எதிர்காலக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை நன்கு விளங்கி சகல மாணவர்களையும் எதிர்பார்த்த பாண்டித்திய மட்டத்தை நோக்கி இட்டுச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களின் கடமையாகும். மாணவர்களை இனங்கண்டு கற்பிப்பதே சிறந்த ஆசிரியரின் பணியாகும். ஆசிரியரின் அர்ப்பணிப்பினால் எதிர்காலத்தில் வளரும் பிள்ளைகளினால் மிகச் சிறந்த பிரபலமான சமூகமொன்று கட்டியெழுப்பப்படும்.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழு முனிமொழியுங் – கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.



# இலங்கையின் ஆரம்ப பாடசாலைக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பும் நடைமுறைகளும்

**கலாநிதி செ.திருநாவுக்கரசு,**
விரிவுரையாளர்,
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.

இந்தக் கட்டுரையானது, இலங்கையின் ஆரம்ப பாடசாலைக் கலைத் திட்ட ஒழுங்கமைப்புப் பற்றி, 20ஆம் நூற்றாண்டு தொடக்கம் இன்று வரையிலான காலப்பகுதியினை உள்ளடக்கி ஆராய்வதாக அமைகிறது.

**பண்டைய இலங்கையின் ஆரம்ப பாடசாலைக் கலைத்திட்டம்.**

பண்டைய இலங்கையின் கல்வி முறையானது வரையறுக்கப்பட்டவர்களுக்கே உரித்தானதாகவிருந்தது. ஆட்சி நிலைப்பட்ட அரசர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. நிறுவன மொன்றிலிருந்து கற்காது வீட்டிலிருந்தே கற்கக் கூடிய அமைப்பு முறை நிலவியது. குடும்பத்தினரது அனுபவங்களினூடான கல்வியே ஏனையோருக்குக் கிடைத்தது. பௌத்தசமயம் இலங்கையில் பரவுவதற்கு முன்னர், பிராமணீயந் தழுவிய இந்துசமயச் சார்பான கற்பித்தல் முறையின் படி "ஓம்" என்ற பதத்துடன் தொடங்கும் பாடலை ஆசிரியர் கூறிய பின், மாணவர்கள் கூறிக் கற்கும் வழக்கம் காணப்பட்டது. வீடுகளுக்குச் சென்று பிராமணர்களே கல்வியைக் கற்பித்தனர். பாடமையக் கல்வியும், வினாவிடைமுறை, கலந்துரையாடல் முறை, விரிவுரைமுறை முதலான கற்பித்தல் முறைகளும் ஆரம்பக் கல்வியில் பின்பற்றப்பட்டன. இந்தப் பாரம்பரிய முறையின்படியான கல்வி வழங்குதலில் குரு-சீட முறையிலான கல்வி வழங்கப்பட்டது. அதுவே தமிழ்ச் சைவர்களிடத்து நீண்ட காலம் நிலைபெற்றுப் படிப்படியாகத் திண்ணைப்பள்ளிகளாக விரிவடைந்தது. பௌத்தமதச் செல்வாக்கின் பின், கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டிருந்த பன்சாலைகளே, சிங்கள பௌத்தர்களின் ஆரம்பக் கல்வியை வழங்கும் நிறுவனங்களாகச் செயற்பட்டன. பன்சாலைகளில் வழங்கப்பட்ட ஆரம்பக் கல்வியானது, எழுத்து, வாசிப்பு, எண் அறிவு, சமயஞ்சார்ந்த கதைகள், பாடல்கள், இசை தழுவிய ஆன்மீகம், நல்லொழுக்கம், சுகாதாரம் முதலியன உள்ளடங்கிய கலைத்திட்ட வகையினைக் கொண்டிருந்தன. முறைசார் கலைத்திட்டமாக இவை இல்லாத போதிலும் அவற்றின் செயற்பாடுகள் பல. தற்காலத்து ஆரம்பக்கல்விக் கலைத்திட்ட ஒழுங்குகளின் முன்னோடிகள் எனலாம். பௌத்த கல்விப் பாரம்பரியத்தைப் போன்றதாகவே இந்து (சைவ) இஸ்லாமிய கல்விப்பாரம்பரியங்களும் சமயஞ்சார்ந்த நல்லொழுக்க நியமங்களுக்கு முதலிடம் அளித்தன.

**ஐரோப்பியர் கால ஆரம்பக் கல்விக் கலைத்திட்டங்கள்.**

கி.பி பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றி ஆளத் தொடங்கிய போது ஆரம்பக் கல்வியினையே

பிரதானமாக வழங்கும் நோக்கத்தினைக் கொண்டு செயற்பட்டனர். கத்தோலிக்க தேவாலயங்களை மையமாகக் கொண்டு நிறுவப்பட்ட ஆரம்பப்பாடசாலைகளை நிர்வகிக்கும் பொறுப்புக்களை பிரான்சிஸ்கன், ஜெஸ்யிட்ஸ், டொமினிக்கன், ஒகஸ்டினியன் ஆகிய சமயக் குழுக்கள் பொறுப்பேற்றுச் செயற்பட்டன. கல்வி வழங்கும் முழுப்பொறுப்பும் இவற்றிற்கே உரியதாகமைந்தது. பரிஸ் பாடசாலைகள் அல்லது கோவிற் பற்றுப் பாடசாலைகளே ஆரம்பக்கல்வி நிறுவனங்களாகும். இவற்றில் சுதேச மொழிகள் மட்டுமே கற்பிக்கப்பட்டன. இவற்றுக்கு மாற்றாகப் பிறமொழிகளைப் பயிற்றுவிக்கும் ஆரம்பப் பாடசாலைகளும் சில இடங்களில் உருவாக்கப்பட்டன. சமயஞ்சார்ந்த பாடங்களிலேயே அக்கறை செலுத்தும் கலைத்திட்டமே கோவிற்பற்றுப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. சமயத்தினைப் பரப்புவதற்கு உதவக்கூடிய வாசிப்பு, எழுத்து, பேச்சு, தர்க்கம் முதலான பாடங்களும் சமயப் பாடங்களும் இங்கு கற்பிக்கப்பட்டன. சமயப் பிரசார நோக்கில் ஆரம்பப் பாடசாலைகளில் போர்த்துக்கீச, அராபிய, இத்தாலிய, கிரேக்க, லத்தீன் மொழிகள் கற்பிக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகிறது. இக்காலத்தில் ஆரம்ப பாடசாலைகளில் கல்வி கற்கும் வாய்ப்புக்கூட வரையறுக்கப்பட்டோருக்கே அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வினாவிடை, மனனம், நாடகமாக நடித்தல் முதலான கற்பித்தல் முறைகள் ஆரம்ப பாடசாலைகளில் பின்பற்றப்பட்டன. போத்துக்கேயருக்கு பின்னால் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தர்கள் கல்வி வழங்கும் பொறுப்பினை அரசே ஏற்றுக்கொள்வதை உறுதி செய்தனர். அவர்களும் ஆரம்பக் கல்வியை மட்டுமே கவனத்திற் கொண்டனர். ஒரு சிலருக்கு உயர் கல்வி வாய்ப்பும் கிடைத்தது. ஆயினும் போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் இடைநிலைக் கல்வியில் அக்கறை செலுத்தவில்லை. இவர்களது கல்வி முறையிலும் பரிஸ் பாடசாலைகளே ஆரம்ப பாடசாலைகளாக விளங்கின. அவற்றில் சிங்களமும் தமிழும் போதனா மொழிகளாக இருந்தன. எழுத்து, வாசிப்பு, கிறிஸ்தவசமயக்கோட்பாடுகள் முதலான பாடங்களே கலைத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. சமயக் கல்விக்கு இங்கு முக்கியத்தவம் அளிக்கப்பட்டது. போத்துக்கேயர் ஒல்லாந்தர் ஆகிய ஆட்சியாளர் காலத்து ஆரம்பக் கல்வி கலைத்திட்டங்கள் குறுகியனவாகவே காணப்பட்டன.

கி.பி 1796இல் பிரித்தானியர் இலங்கையின் ஆட்சியினைக் கைப்பற்றினர். 1815இல் இலங்கை முழுவதும் அவர்களது ஆட்சிக்கு உட்பட்டது. அவர்களது காலத்தில் லண்டன் மிசனறி குழு, பப்டிஸ்ட் மிசனறி குழு, மெஸ்லியன் மிசனறி குழு, அமரிக்கன் மிசனறி குழு, கிறிஸ்தவ திருச்சபை குழு ஆகிய சமயக் குழுக்களிடம் கல்விவழங்கும் பெரும் பொறுப்பு கையளிக்கப்படுகின்றது. ஆயினும் படிப்படியாக சுதேசிய சமய நிறுவனங்களும் நேரடியாக அரசினரும் கூடக் கல்வி வழங்கும்பொறுப்பில் பங்கெடுக்கும் சூழ்நிலை உருவானது. முன்னர் இயங்கிய பரிஸ் பாடசாலைகளுக்கு பதிலாக ஆரம்ப பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இவைகளில் உயர்ந்த ஆரம்ப பாடசாலைகளில் இடம்பெற முடியாத வறிய மாணவர்களுக்கு ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டது. இப் பாடசாலைகளுள் ஆரம்பக் கல்வி தாய் மொழியிலும், இடைநிலைக் கல்வி ஆங்கில மொழியிலும் வழங்கப்பட்டது. இப்பாடசாலைகளிலும் கலைத் திட்ட ஒழுங்கும் படிப்படியாக மாற்றம் பெற்றே விரிவாக்கம் பெற்று வந்துள்ளது.

**சுதந்திரத்திற்கு பிந்திய ஆரம்ப வகுப்பு கலைத்திட்டங்கள்.**

முதன் முதலாக 1920ஆம் ஆண்டில் முதலாம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழான பணிப்புரையின் படியே "ஆரம்ப கல்வி" பற்றிய வரைவிலக்கணம் செய்யப்பட்டது. ஆங்கிலப் பாடசாலை விடுகைச் சான்றிதழ்ப் பரீட்சைக்குத் தோற்றக் கூடிய மாணவர்களை தயார் செய்யும் 8ஆம் தரத்தை முடிவெல்லையாக கொண்ட ஆங்கில பாடசாலைகளும்,

சகல சுயமொழி பாடசாலைகளும் ஆரம்ப பாடசாலைகளென வரைவிலக்கணம் செய்யப்பட்டது. ஆனால் 1929ஆம் ஆண்டின் விதிக் கோவைகளின்படி பாடசாலைகள் அவற்றின் முடிவெல்லை தரங்களுக்கு அல்லது வகுப்புகளுக்கு அமைவாக பாகுபடுத்தப்பட்டிருந்தன. அவற்றுள் முதல்நிலையாக முடிவெல்லைத் தரம் அல்லது வகுப்பு 5ஆக காணப்பட்டது. ஆயினும் முதல் 8 தரங்களில் அல்லது வகுப்புகளின் வேலைத் திட்டமானது பொதுவாக ஆரம்ப கல்வி பாடத்திட்டமென விதிக்கப்பட்டது. இப் பாகுபாடு 1957ஆம் ஆண்டில் முடிவுரை நீடித்தது. 1968 ஜனவரியில் முதலாம் தரம் தொடக்கம் 7ஆம் தரம் வரையுள்ளவை ஆரம்ப பாடசாலைகள் எனவும் 8ஆம் தரமும் அதற்கு மேலே உள்ளவைகளும் உயர் நிலை பாடசாலைகள் எனவும் பாடசாலைகள் இரு பகுதிகளாக மீளமைக்கப்பட்டன. பாடசாலைகள் போதனா மொழி அடிப்படையில் சிங்கள, தமிழ், ஆங்கில பாடசாலைகள் என பாகுபடுத்தப்பட்டன.

எல்லா ஆரம்ப பாடசாலைகளுக்கும் பொதுவான கலைத்திட்டமொன்று விதிக்கப்பட்ட போதிலும் வளப் பகிர்வுகளில் இடைவெளிகள் காணப்பட்டன. பாலர் வகுப்பு முதல் 5ஆம் தரம் வரையுள்ள பாடசாலைகளில் போதனா மொழி தாய் மொழியாகவே இருக்க வேண்டும் என 1945ஆம் ஆண்டில் விதப்புரை செய்யப்பட்டது. எனினும் பெற்றோர் சிங்களவர்களாகவோ அல்லது தமிழர்களாகவோ இல்லாதவிடத்து பெற்றோர் விரும்பிய மொழியே ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு போதனா மொழியாக இருக்க வசதி செய்யப்பட்டது. ஆங்கில முதல்நிலை வகுப்புகளுக்கான வளச் சாதனங்கள் குறைந்த அளவிலேயே கிடைத்தன.

1947இன் பின்னர் சுயமொழி ஆரம்ப பாடசாலைகள் திறக்கப்பட்டதனால் பழைய ஆங்கில பாடசாலைகளுக்கும் இவைகளுக்குமான ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்தே காணப்பட்டன. ஓர் ஒழுங்கு முறைமைக்கு உட்படுத்தப்பட்ட ஆரம்ப கல்வி கலைத் திட்டத்தினை 1928 ஆம் ஆண்டின் பின்னரே நாம் காண முடிகிறது. பாலர் வகுப்பு முதல் எட்டாந்தரம் வரையுமான வகுப்புக்களுக்குரிய பாட அட்டவணையும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கு முன்னர் ஒவ்வொரு பாடத்திற்குமென இரண்டொரு வசனங்களில் அறிவுறுத்தல்கள் கொடுக்கப்பட நிலைமாறி, தெளிவான முறையில் கலைத்திட்ட ஒழுங்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. உதாரணமாக 2ஆம் வகுப்புக்கான மொழி பாடத்திட்டத்தின்

"பாடங்கள், பொருள்கள், கதைகள், செயல்கள், தெரிந்த காட்சிகள் ஆகியவற்றில் வாய்மொழிப்பாடம்"

என முன்னர் காணப்பட்டிருந்தது. ஆனால் புதிய கலைத்திட்ட விவரணையில் ஒவ்வொரு விடயமும் இரு தலைப்புகளின் கீழ் ஆசிரியருக்குத் தரப்பட்டுள்ளது

1. அதன் விரிவு-அதாவது ஏதேனும் வகுப்பு , அல்லது தரத்தின் வேலை சம்பந்தமான மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அறிவு.
2. அதன் பிரயோகம்-அதாவது பாடசாலை வாழ்க்கையின் உள்ளும், புறமும் இவ்வறிவைப் பயன்படுத்துதல்.

இவ்வாறு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். தரம் 1-5 வரை பிரதான 3 பாடங்கள் காணப்பட்டன. அவையாவன

1. மொழி, இதில் வாசிப்பு, எழுத்து, பேச்சு என்பன அடங்கும்
2. எண்.
3. தேகப்பியாசம், வரைதல், சங்கீதம் போன்ற செய்முறைப்பாடங்கள், உடனலம், குடியியல், இயற்கைப் படிப்பு, நல்லொழுக்கப்பயிற்சி அளிக்கும் பாடங்கள் என்பன, இப்பாடத்திலுள்ள பேச்சுப் பகுதியினுள் அடங்கியிருந்தன.

இவ்வாறு படிப்படியாக இலங்கையின் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டச் செயன்முறைகள் வளர்ச்சி காணத்தொடங்கின. ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவைக்கேற்ப

சீர்திருத்தங்கள் ஊடாக மாற்றங்கள் புகுத்தப்பட்டன. 1940ஆம் ஆண்டிலே ஆரம்பக் கலைத்திட்டத்தில் மீண்டும் மாற்றஞ் செய்யப்பட்டது. முதனிலை வகுப்புகளில் (தரம் 1-5) முதல் மொழி, எண், உடற்பயிற்சி, வரைதல், கைப்பணி, பாடல், ஆடல் பெண்களுக்குத் தையல், புவியியல் (5ஆந் தரத்தில்) என்பன பாடங்களாக இருந்தன. எனினும் 1945ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பப் பாடசாலைகளில் (தமிழ் சிங்களப் பாடசாலைகளில்) 3ஆந் தரம் முதல் ஆங்கிலத்தைக் கட்டாயத் துணைப்பாடமாகக் கற்பிக்க வகை செய்யப்பட்டது. இலவசக் கல்வியின் வளர்ச்சியின் ஒரு பகுதியாக ஆங்கிலக் கல்வியும் அளிக்கப்பட்டது.

1953இல் பாலர் பாடசாலைப் பாடத்திட்டம் வெளியிடப்பட்டதன் பிரகாரம், எட்டு வயதுக்குக் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலைகள் யாவும் செயல் நோக்கம் நிறைந்த வேலைக்குகந்த மகிழ்விடங்களாக அமைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும் 1954ஆம் ஆண்டு கல்வி அமைச்சரால் நியமிக்கப்பட்ட கலைத்திட்ட ஆலோசனைக் குழுவானது ஆரம்ப பாடசாலைகளுக்கான கலைத்திட்டத்தினை இரு பிரிவுகளாக சமர்ப்பித்திருந்தது. பிரிவு 1இல் சமயம், தாய்மொழி, எண் என்பனவும் 3ஆம் தரத்திலிருந்து ஆங்கிலமும், பிரிவு 2இல் உடற்கல்வி, நிர்மாணப் பணிகள், சூழல் கல்வி என்பனவும் பயிற்றப்பட வேண்டுமென விதப்புரை செய்திருந்தது. கைப்பணிகளும், தோட்ட வேலைகளும், நிர்மாணப் பணிகளும், இயற்கைச் சூழலும், சமூகச் சூழலும், சூழல் கல்விக்குள்ளும் அடங்கியிருந்தன. அவதானிப்பு முறை மூலம் கற்பது இங்கு வலியுறுத்தப்பட்டது. ஒவ்வொரு பாடத்துக்கும் ஒவ்வொன்றாக மொத்தம் நான்கு நூல்கள் கற்றலில் பயன்படுத்தப்பட்டன.

1966ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ஆம் திகதியின் வெள்ளை அறிக்கையின் முகவுரையில் உத்தேசிக்கப்பட்ட பொதுக்கல்வி திட்டமானது ஆரம்பக்கல்வி, உயர் நிலைக்கல்வி, மேற்கல்வி என்னும் மூன்று முன்னேற்ற முறையான நிலைகளில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இதனடிப்படையில் ஆரம்பக்கல்வி பரந்ததாயும் பொதுவானதாயும் 6-14 வயது வரையில் 8 வருடங்களுக்கு நீடிப்பதாகவும் ஒழுங்கமைக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டில் 3ஆம் தரத்திற்கு பதிலாக 5ஆம் தரத்திலிருந்து ஆங்கிலம் துணைமொழியாக போதிக்க வகைசெய்யப்பட்டது. இத்தகைய சூழ்நிலைகளின் கீழ் ஆரம்ப பாடசாலைகளின் கலைத்திட்டச் செயற்பாடுகள் இலங்கைப் பாடசாலைகளில் தொடர்ந்தன. பாடசாலை அமைப்பு வகைகளுள் அடிக்கடி மாற்றங்கள் உருவாகின. தரம் 1-5வரையிலுள்ள ஆரம்பப் பாடசாலைகளிலேயே முதன்மை நிலைக் கல்வி அளிக்கப்பட்டது. ஆயினும் தரம் 8 வரை அல்லது தரம் 7 வரையிலுள்ள பாடசாலைகளும் ஆரம்ப பாடசாலைகள் எனப்பட்டன. எனினும் 1972ஆம் ஆண்டு இலங்கை அரசினால் கொண்டுவரப்பட்ட "புதிய பாதை" கல்விச் சீர்திருத்தமே இதுவரை ஏற்படுத்தப்பட்ட இலங்கையின் கல்விச் சீர்திருத்தங்களில் குறிப்பிடத்தக்க கலைத்திட்ட மாற்றங்களைப் பொதுக் கல்வியின் சகல மாற்றங்களிலும் ஏற்படுத்தியதெனலாம். அந்த வகையில் ஆரம்ப பாடசாலைக் கல்வித் திட்டத்தில் அதன் தாக்கம் பற்றி ஆராய்வோம்.

**1972இல் கல்விச் சீர்திருத்தம்.**

1972இன் கல்விச் சீர்திருத்தமானது இதுவரை காலமும் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்கும் வயதெல்லை 5ஆக இருந்த நிலைமையை மாற்றி 6வயது என விதித்தது. 6வயது பூர்த்தியடைந்த பின்னரே பாடசாலைகளில் ஒரு பிள்ளை சேர்க்கக்கூடியதாக இருந்தது. மேலும் அதற்கு முன்னர் முன்பள்ளிச் செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபட வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. எனவே 1-5வரையான வகுப்புக்களில் தொடக்க கல்வி பயிற்றப்பட வேண்டுமென சிபார்சு

செய்யப்பட்டது. இது 7-11 வயது வரையினதாகும். 1943இல் கன்னங்கரா அறிக்கை 5 வயது நிறைந்த பிள்ளைகளை பள்ளியில் சேர்க்கும்படி விதந்துரைத்தது. எனினும் அது பாலர் வகுப்புக்களுடன் சேர்த்து 6 ஆண்டுகள் ஆரம்பக்கல்வி நடைமுறையில் இருந்த காலத்திலாகும் என 1972இன் கல்விச் சீர்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டது. 1964இல் ஆரம்ப கல்வியில் பாலர் வகுப்பு நீக்கப்பட்டமையால் தற்போது 6 வயது பாடசாலைஅனுமதி எல்லையாக இருப்பது பொருத்தமெனப்பட்டது.

1. சமயம் 2. கல்விமொழி 3. இரண்டாம் மொழி 4. கணிதம் 5. உடலியல், அழகியற் செயற்பாடுகள் 6. படைப்புச் செயற்பாடுகள் 7. சூழல் சார் செயற்பாடுகள்

ஆகிய எழு தொகுதிகள் 1-5 வகுப்புக்களுக்கான ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்திற்குரியதென "புதிய பாதை" ச் சீர்திருத்தம் குறிப்பிட்டது. ஏற்கனவே நடைமுறையில் இருந்த பாடவிடயங்களை ஒழுங்கமைத்து கொடுத்திருப்பதே புதிய கல்விச் சீர்திருத்தத்தின் பணியாகவிருந்தது. உடலியல், அழகியல் செயற்பாடுகள் என்ற பரந்த படைப்புலத்தில் விளையாட்டு, சுகாதாரப் பழக்கம், சுகாதாரப் பேச்சு, உடல் அசைவுக் கலை, பாட்டு, வாத்திய இசை, நாட்டியம் முதலான பாடங்கள் கற்பிக்கப்பட வாய்ப்பளிக்கப்பட்டது. படைப்புச் செயற்பாடுகள், அல்லது ஆக்கச் செயற்பாடுகள் என்ற பாடப்புலமும் பரந்ததாக அமைந்திருந்தது. இதனுள் ஓவியம், கைப்பணி, பெண் பிள்ளைகளுக்கு தையல், ஆண் பிள்ளைகளுக்கு தோட்ட வேலை என்பன கற்பிக்கப்பட வேண்டுமென விதந்துரைக்கப்பட்டது. அதனுடன் சூழல் சார் செயற்பாடுகள் எனும் பரந்த படைப்புலத்தினுள் இயற்கைப் பாடம், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்கள் கற்பிக்க வகைசெய்யப்பட்டது. 3ஆம் வகுப்பிலிருந்து இரண்டாம் மொழி பயிற்றுவதும் மேற்கண்ட பாடவிதானத்துள் அடங்கியிருந்தது. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பிப்பது தொடர்பாக ஆசிரியர் வளத் தேவை இன்றுவரை நிறைவு செய்ய முடியாத சூழ்நிலையிலேயே இலங்கையில் நிலவுகிறது. ஆதலால் இதன் செயற்பாடுகள் குறுகியனவாகவே அமைந்திருந்தமை காலம் காட்டிய உண்மையாகும்.

1972இன் ஆரம்ப வகுப்பு கலைத்திட்டத்தில் போதனையை காட்டிலும் சாதனைக்கே இடமளிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செய்முறை அனுபவங்களுக்கு முதலிடம் வழங்க விதந்துரைக்கப்பட்டது. சிறப்பு பயிற்சி பெற்ற ஆசிரியர் வள ஆளணியை பயன்படுத்த வேண்டுமென கருதப்பட்டது. சேவைக்கால பயிற்சிகளை ஆரம்ப கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கு உடனுக்குடன் வழங்க வேண்டுமெனக் கூறப்பட்டது. மதிப்பீட்டு முறைகளிலும் மாற்றம் செய்யுமாறு கோரப்பட்டது. 1ஆம், 2ஆம் வகுப்பு மாணவர்களுக்குரியதிலும் வேறுபட்ட மதிப்பீட்டு முறைகளை 3-5 வகுப்பு மாணவர்களுக்கு பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டது. மேலும் ஆங்கில பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் யாவற்றையும் ஓர் ஆசிரியரே கற்பிக்கக் கூடிய ஒழுங்கு முறையும் செய்யப்பட்டது. ஒன்றிணைந்த பாடக் கலைத்திட்ட அமைப்பினைப் பின்பற்றியே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற வேண்டுமெனக் கூறப்பட்டது. ஓர் ஆசிரியரே சில வகுப்புக்களில் தொடர்ச்சியாக கற்பிக்கவும் வகை செய்யவேண்டுமெனப்பட்டது. அப்போது தான் மாணவரைப் புரிந்து கொண்டு கற்பிக்க முடியும் எனக் கருதப்பட்டது.

ஒரு பொருள் அல்லது விடயம் பற்றி மொழி, கணிதம், சமயம், சுற்றாடல் ஆக்கம் என்பனவாகிய பாடங்களுக்குப் பொருந்துமாறு ஒன்றிணைத்துக் கற்பதனூடாக மாணவர்கள் அனுபவம், பயிற்சி, அறிவு, ஆகியவற்றில் மேம்பட முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.

1972இன் கல்விச் சீர்திருத்தமே தொடர்ந்து வந்த கல்விச் சீர்திருத்தங்களுக்கு வழிகாட்டியாக விளங்கி, ஆரம்பக்கல்வியுடன் பொதுக் கல்வித் துறையின் செல்நெறியினை மாற்றியமைத்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**1981இன் கல்விச் சீர்திருத்தம்.**

அடுத்ததாக 1981ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கல்வி வெள்ளையறிக்கையில் ஆரம்ப வகுப்புகளின் கலைத்திட்ட ஒழுங்கமைப்புப் பற்றி நோக்குவோம்.

1972இன் கல்விச் சீர்த்திருத்தத்தின்படியான பாடசாலை அனுமதி வயது 6 என்ற எல்லையானது, மீண்டும் ஐந்து வயதாக 1981இன் சீர்திருத்தத்தால் மாற்றியமைக்கப்பட்டது. பொதுக்கல்வியில் தரம் 1 தொடக்கம் 5 வரையில் ஆரம்பப் பாடசாலைப் படிப்பாக 5-10 வயதெல்லையுள் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. ஆரம்பக் கல்வியின் பொது நோக்கங்கள் பத்து வெளிப்படுத்தப்பட்டன. அவையாவன.

1. அன்றாட வேலைகளுக்காக எழுத்து, வாசிப்பு, கருத்துக்களைப் பரிமாற்றம் செய்யும் திறன்களை வளர்த்துக் கொள்ளல்.
2. கொடுக்கல், வாங்கல் செய்வதற்கும் தினசரிச் செயல்களுக்கும் கணித எண்ணக்கருத் திறன்களை வளர்த்துக் கொள்ளல்.
3. சுகதேகியாக வாழ்வதற்கான அடிப்படைச் சுகாதார அறிவையும், பழக்கவழக்கங்ளையும் கைக்கொள்வதற்கு வழிகாட்டல்.
4. செயற்பாடுகள், முறையான பரீட்சித்தல் மூலம் விஞ்ஞான ரீதியாகச் சிந்திப்பதற்கும் சுற்றாடலை விளங்கிக் கொள்வதற்கும் அவசியமான திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கான அடிப்படையை உருவாக்குதல்.
5. வாய்மொழி மூலமும் எழுத்து மூலமும் தமது கருத்துக்களையும், உணர்வுகளையும் சுதந்திரமாகவும் ஆக்கபூர்வமாகவும் வெளியிடும் திறன்களைப் பெற்றுக்கொள்ள வழிகாட்டல்.
6. நயத்தலுக்கான பொழுது போக்கு ஆற்றல்களையும் திறன்களையும் வளர்த்துக்கொள்ள வழிகாட்டல்.
7. எதிர்காலக் கற்றல் செயல்கட்குத் தேவையான அடிப்படைப் பயிற்சிகளைக் கற்றுக்கொள்ள உதவுதல்.
8. பௌதிக, சமுதாய, கலாசார சூழலைப் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல்.
9. ஒத்துழைப்பு இணக்கம், தைரியம், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், சட்டத்திற்கு அடிபணிதல் ஆகிய பண்புகளை வாழ்க்கையிற் பின்பற்றப் படிப்படியாகப் பயிற்றுவித்தல்.
10. தேசிய ஒருமைப்பாட்டையும், தாய் நாட்டின் மீது பற்றையும், பக்தியையும் ஏற்படுத்துவதற்கான மனப்பாங்கினை உருவாக்குவதற்கான வித்தினையிடுதல்.

ஆரம்பக் கலைத்திட்ட நடைமுறைகளினூடாக இப்பொது நோக்கங்கள் எய்தப்பட வேண்டுமெனக் கருதப்படுகிறது. ஒரு பாடசாலையினுள் நடைபெறும் கல்விசார் செயற்பாடுகள் அனைத்தும் கலைத்திட்ட நடவடிக்கைகள் எனப்படுவதால், இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளையும் முறைசார் பாட நடவடிக்கைகளோடு நாம் இணைத்தே நோக்க வேண்டும். 1981இன் கல்வி வெள்ளை அறிக்கையானது, ஆரம்பப் பாடசாலைகளுக்கான கலைத்திட்டத்தில் அபிநயம், நடிப்பு, நடனம், பாடல், வரைதல் இயற்கையையும் இயற்கைத் தோற்றப்பாடுகளையும் அவதானித்தல் போன்ற இயல்பான ஆற்றல்களைக் கொண்டு

பிள்ளைகள் தமது ஆளுமையை வெளிப்படுத்த துணைபுரியக் கூடிய செயன்முறைகள் இடம்பெற வேண்டுமெனக் கூறியது. பிள்ளையிடம் இயல்பாகவே காணப்படும் புதியது காணும் வேட்கையைப் பயன்படுத்தி ஆக்கச் செயற்பாடுகளில் முழுமையாக ஈடுபடக் கூடிய வாய்ப்புக்கள் அளிக்கப்படல் வேண்டும். தானாகவே விடயங்களைத் தெரிந்து கொள்ளும் தன்மையில் அனுபவங்களை நேரடியாகப் பெற வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். வாசிப்பு, எண்,எழுத்து, சொற்களைத் தெரிந்து கொள்ளல், சொற்களின் செவ்வையான உச்சரிப்புப் பிரயோகம், எழுத்துக்களை எழுதிப் பழகல், இலக்கணம், சொற்றொடர் என்பவற்றைத் தெரிந்து கொள்ளல் ஆகிய முறைகளில் அடிப்படைத் தேர்ச்சிகளைப் பெறல் முதலான செயன்முறைகள் ஆரம்பக் கல்விக்கான கலைத்திட்டத்தில் உள்ளடங்கியிருந்தன.

இயந்திர முறையிலன்றித் தேர்ந்தறிமுறைக்கே கற்றலில் இடமளிக்க வேண்டும். வாசிப்பு நூல்கள் சுற்றாடல் செயற்பாடுகளுக்கு ஏற்றதாக அமைய வேண்டும். மேலும் நாட்டின் சமூக, கலாசார, பொருளாதார தேவைகளுக்கு ஏற்றதாகவும் இருத்தல் வேண்டும். பிள்ளையின் வயது மட்டத்திற்கேற்ப, பண்புசார் நடத்தைகளை ஊக்குவிக்க கூடிய கற்றல் நடவடிக்கைகளையும் மேம்படுத்த வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் செயற்திறனையே மதிப்பீடு செய்தல் வேண்டும்.

இவ்வாறு 1981இன் கல்வி வெள்ளையறிக்கையானது ஆரம்ப வகுப்புக் கலைத்திட்ட ஒழுங்குகள் பற்றி விதப்புரை செய்திருந்தது. ஏற்கனவே 1972இன் கல்விச் சீர்திருத்தம் கூறியிருந்த முன்மாதிரிகளே 1981இன் கல்விச் சீர்திருத்தத்தின் ஆரம்பக் கல்வி சம்பந்தமான கலைத்திட்டத்தில் பின்பற்றப்பட்டிருந்தன. கூடுதலான, சில ஆலோசனைகளே இதில் தெரிவிக்கப்பட்டிருந்தது எனலாம். 1981-1998 வரையிலான காலப்பகுதியில் பாடசாலைகளின் ஆரம்பக்கல்விக் கலைத்திட்ட நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் நிகழவில்லை. இலங்கையும் உள்நாட்டுப் போரினால் அலைக்கழிக்கப்பட்டே வந்தது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் கல்வி சார் ஒழுங்குகள் யாவும் கேள்விக்குரியனவாக்கப்பட்டன. ஏராளமான பாடசாலைகள் இடம்பெயர்ந்தன. இருப்பினும் 1998இல் மீண்டும் புதிய கல்விச் சீர்திருத்த ஆலோசனைகள் கல்வியமைச்சினால் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**1998இன் கல்விச் சீர்திருத்தம்.**

1992ஆம் ஆண்டிலிருந்து இதற்கான முன் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1995இல் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொதுக்கல்வி பற்றிய அறிக்கை ஒன்று சனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது. பொதுக்கல்வி, பல்கலைக்கழக கல்வி, தொழில்நுட்பக்கல்வியும் தொழிற்கல்வியும் என மூன்று வகைகளில் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் புதிய கல்விச் சீர்திருத்தமாக பின்னர் வெளிப்படுத்தப்பட்டன. 1997இல் பொதுக் கல்விக்கான சீர்திருத்தங்கள் (Reforms in General Education) எனும் ஆவணம் வெளியிடப்பட்டது. இதன் அடிப்படையில் அமுலுக்கு வந்த ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் ஒழுங்கமைப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன. ஐந்து அடிப்படைத் தேர்ச்சி தகைமைகள் வலியுறுத்தப்பட்டன.

1. தொடர்பாடல் தொடர்பானவை. (Competencies relating to communication)
2. சூழல் தொடர்பானவை. (Competencies Relating to Environment)

3. ஒழுகலாறு சமயம் என்பன தொடர்பானவை (Competencies relating to ethics and Religion)
4. விளையாட்டு ஓய்வு நேரப் பயன்பாடு தொடர்பானவை. (Competencies relating to play and use of leisure)
5. கற்கக் கற்றல் தொடர்பானவை.(Competencies relating to learn to learn)

மேலே காட்டப்பட்ட ஐந்து தேர்ச்சிகளும் ஆரம்ப வகுப்புகளுக்குட்பட பொதுக் கல்வி வகுப்புகளில் கற்கும் மாணவர்கள் அடைய வேண்டிய இலக்குகள் எனக் கூறப்பட்டுள்ளன. பாடசாலை அனுமதி வயதான 5இல் எதுவித மாற்றமுமில்லை. ஆனால் பாடசாலை அமைப்பு முறையில் இதுவரையிலிருந்த நடைமுறையை மாற்றி தரம் 1-9வரையிலான வகுப்புகளைக் கொண்ட கனிஷ்ட பாடசாலைகள், தரம் 10-13 வகுப்புகளைக் கொண்ட சிரேஷ்ட இடைநிலைப் பாடசாலைகள் என இருவகைப் பாடசாலை அமைப்புமுறை சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் இன்னும் அம்முறை நடைமுறைப்படுத்தப்படாது பழைய முறையே தொடர்ந்துள்ளது.

1998இன் கல்வி மறுசீரமைப்பு அறிக்கையானது ஆரம்ப வகுப்புகளை பின்வருமாறு பிரித்துக் காட்டியது.

| | | |
|---|---|---|
| தரம் 1, 2 | - | முதன்மைநிலை 1 |
| தரம் 3, 4 | - | முதன்மைநிலை 2 |
| தரம் 5 | - | முதன்மைநிலை 3 |

பரீட்சார்த்தமாகக் கம்பஹா மாவட்டத்திலுள்ள முந்நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஆரம்பக் கல்விச் சீர்திருத்தம் 1998ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. 1999ஆம் ஆண்டிலிருந்து நாடு முழுவதும் செயற்பாடுகளுடன் கூடிய கற்பித்தலை உள்ளடக்கிய ஆரம்பக் கல்விக் கலைத்திட்ட மாற்றம் புகுத்தப்பட்டது. படிப்படியாக தரம் 1 இலிருந்து தரம் 5 வரையும் அமுலாக்கப்பட்டு 2003ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் ஆரம்பக் கல்வியிலான சீர்திருத்தம் நிறைவுபெற்றது. அதன் பின்னர் ஒழுங்கான முறையில் நடைமுறைகள் பின்பற்றப்படுமெனக் கூறப்பட்டது. அதனடிப்படையில் செயற்பாடுகளும் நடைபெறுகின்றன. ஏற்கனவே வகுப்புகள் ஆண்டு என அழைக்கப்பட்ட முறைமை மாறி தரம் என அழைக்கப்படலாயின. ஆரம்ப வகுப்புகளில் தனித்தனியே வடிவமைக்கப்பட்ட செயற்பாட்டு அறைகளில் மாணவருக்கான கற்றலை மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டு வருகின்றமை அவதானத்திற்குரியது. மேலும் ஒன்றிணைந்த பாடத்திட்டப் போதனைகள் செயன்முறை முக்கியத்துவத்துடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

பாடங்களைப் பொறுத்த வரையில் முதல்மொழி. கணிதம், சமயம், ஆகியவற்றுடன் சுற்றாடல்சார் செயற்பாடுகள் என்றும் பரந்த பொருள் கொண்ட பாடம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முந்தைய காலத்தில் பேணப்பட்ட சுற்றாடல், விஞ்ஞானம், அழகியல், ஆக்கம் என்பன யாவற்றையும் இப்பாடம் இணைத்துள்ளது. தொடர்பாடல் தேர்ச்சியில் எண், எழுத்து, சித்திரம் ஆகியன பற்றிய அறிவும் அனுபவமும் கிடைத்தலும், சுற்றாடலை அறிதலிலான தேர்ச்சியில் பௌதிகம், உயிரியல், சமூகம், ஆகிய விடயங்களில் அறிவும் அனுபவமும் பெறலும் விதந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் சமயமும் ஒழுகலாறு பற்றிய விடயத்தில் விழுமியப் பண்புசார் கதைகள், பாடல்கள், நாடகங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. விளையாட்டின் மூலம் ஆரோக்கியமான உடலினுள்ளே ஆரோக்கியமான உள்ளம் இருக்க முடியும் என்பதை நிலை நிறுத்தவும், மனச் சமநிலை

பெறக்கூடுமெனவும் ஓய்வுநேரத்தைப் பயனுள்ள வகையில் நூல்களை வாசிப்பதில் செலவழிக்கலாமெனவும் புதிய கல்விச் சீர்திருத்தமானது கலைத்திட்ட ஒழுங்குகளை விதந்துரைத்துள்ளது. கற்கக் கற்றல் என்பது, கருதுகோள்களைக் கட்டி எழுப்பிப் புதிய அனுபவங்களுடன் பொருத்தப்பாடு காணும் சிந்தனை வளர்ச்சி ஆகும். இதனூடாக மாணவரது அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியேற்பட வேண்டும் எனக் கூறப்பட்டது. மேலும் முதனிலை ஒன்றுக்கு விளையாட்டு அதிகமாகவும் எழுத்தறிவு குறைவாகவும் இருத்தல் வேண்டுமெனவும் முதனிலை இரண்டில் இரண்டும் சமமாகவும் முதனிலை மூன்றில் எழுத்தறிவு அதிகமாகவும் விளையாட்டு குறைவாகவும் இருத்தல் வேண்டுமெனவும் கலைத்திட்ட அமுலாக்கல் பற்றிக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது. தரம் 1மாணவர்களை தரம் 6 மாணவர்களுடன் இடைவினை கொள்ளச் செய்வதனூடாக, இடைநிலை வகுப்புகளுக்குச் செல்லும்போது ஏற்படக் கூடிய அச்சவுணர்வு தவிர்க்கப்படலாமெனவும் கருதப்பட்டது. முதனிலை 1இல் வாய்மொழி ஆங்கிலமும், முதனிலை 2இல் முறைசார் ஆங்கிலமும் பயிற்றப்பட வேண்டுமெனப் புதிய 1998இன் கல்விச் சீர்திருத்தம் விதப்புரை செய்தது. இரண்டாவது தேசிய மொழியை முதனிலை இரண்டில் கற்கவும் வழிசெய்வதை அனுமதித்தது. இதே போன்று நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களே ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்க வேண்டும் எனவும் கூறப்பட்டிருந்தது.

பயன்படு பிரசையாகப் பிள்ளையை உருவாக்குவது கல்வியின் இலக்காகும். ஆரம்ப வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களிடத்தே ஐவகைத் தேர்ச்சிகளையும் நிலைபெறச் செய்ய வேண்டும். தாய் மொழியினைப் பயிற்றும்போது அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றில் தேர்ச்சிபெறவும், நாளாந்த பயன்பாட்டில் மொழியை இணைக்கவும் கூடியதாகக் கற்றல் அனுபவங்களைக் கொடுத்தல் வேண்டும். பாடல்கள், கதைகள் முதலானவற்றினைச் செவிமடுக்க , இரசிக்க, விளங்க வகைசெய்தல் முறையாகும். சமூக பண்பாட்டு விழுமியங்களை அறிந்து பேணுவதற்கேற்றதான வாசித்தல், பேசுதல், பாடுதல், உரையாடுதல் முதலான நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்தல் அவசியம்.

சுற்றாடல் செயன்முறைகளில் மனிதர்கள், விலங்குகள், தாவரப் பகுதிகளைப் பயன்படுத்திச் சித்திரங்கள் ஆக்கல் வளிக்குமிழ்களை உருவாக்கல், உருளை மூலம் பொருட்களை அசைத்தல், நீர் வடிகட்டும் முறையைச் செய்துகாட்டல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இதுபோன்று ஆங்கில மொழி பயிற்றலில், தொடர்பாடலுக்கான இலகுவான வாக்கியங்களைச் செவிமடுக்கவும், பேசவும் செய்வது நன்மைதரும். அந்த மொழிகற்பதற்கான ஆர்வத்தை மாணவரிடத்தே ஏற்படுத்த வேண்டும். சமய பாடத்தினைக் கற்பிக்கும்போது விழுமியங்களை அறியச் செய்தல் வரலாற்றை அறியச் செய்தல், பாடல்களை பாடச் செய்தல், செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல், இரசனைபெறச் செய்தல் முதலான உத்திகளைப் பயன்படுத்த முடியும். ஆக்கச் செயற்பாடுகளிலும் இதே போன்றதாகப் பார்த்துச் செய்தல், அறிந்து செய்தல், கற்பனையில் உருவாக்கல் ஆகிய முறைகளில் புத்தாக்கங்களுக்கு இடமளித்தல் வேண்டும். தேவையான உடல் உளச் செயற்பாடுகளும், ஓய்வு நேரத்தை நூல்களை வாசித்தல், படங்களை வரைதல், சேகரித்தல் முதலானவற்றில் ஈடுபடச் செய்வதும் ஆரம்பக் கல்விக் கற்றல்-கற்பித்தல் செயன்முறைக்கு உகந்ததாகும்.

ஆரம்பக் கல்வி என்பது முறைசார் ஒழுங்கமைப்புள்ள பாடசாலைகளில் தரம் 1 இலிருந்து 5 வரை, 5-10 வயதுள்ள பிள்ளைகளுக்கு வழங்கப்படுவதாகும். இலங்கையில்

காலத்துக்குக் காலம் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டங்களைப் பொறுத்தவரையில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டதாயினும், உண்மையில் அவை பாரிய மாற்றங்களல்ல. ஒழுங்கமைப்பில் ஏற்பட்ட வேறுபாடுகள் யாவும் உயிர்ப்புடைய செயற்றிறன் மிக்க ஆரம்பக் கல்வியை உலகின் மாறுதல்களுக்கேற்ப வழங்குவதற்கு முயற்சி செய்வனவாகவே காணப்பட்டன என்பதே பொருத்தமான கூற்றாகும்.

இதுவரையில், இலங்கையின் ஆரம்பக் கல்விக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு பற்றி, அவ்வக் காலத்து கல்விச் சீர்திருத்தங்களின் அடிப்படையிலான கருத்துக்கள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**உசாத்துணை நூல்கள்.**


1. இலங்கையிற் கல்வி நூற்றாண்டுவிழா மலர் 111, இலங்கைக் கல்வி கலாசார அலுவல் அமைச்சின் வெளியீடு, கொழும்பு, மு.ப.1969.
2. புதிய கல்விச் சீர்திருத்தங்கள், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம், சமூக விஞ்ஞானப்பிரிவு, யாழ்ப்பாணம் மு.ப. 1999
3. புதிய பாதை, கல்வி அமைச்சு வெளியீடு, கொழும்பு, 1972
4. கல்விச் சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள், கல்வி உயர்கல்வி அமைச்சு வெளியீடு, கொழும்பு 1981
5. பொதுக்கல்விச் சீர்திருத்தங்கள், பொதுக்கல்விக்குரிய ஜனாதிபதியின் துரித செயற்குழு வெளியீடு, கொழும்பு 1997.
6. பொருளியல் நோக்கு, நவம்பர்-டிசம்பர் 1999
7. கல்வியின் வரலாற்று அடிப்படை, பட்டப்பின் ஆசிரியர் கல்வித்துறை, தேசியகல்வி நிறுவகம், மகரகம 1991.


***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

**வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்**
**அனைத்தாய நூலகத்து மில்லை – நினைப்பதெனக்**
**கண்ணுறுவ தல்லாற் கவலைபடே னெஞ்சேமெய்**
**விண்ணுறுவார்க் கில்லை விதி.**



# விளையாட்டுச் செயற்பாடு

முதலாவது பாலர் விளையாட்டு விழா கல்லூரி மைதானத்தில் 1979ஆம் ஆண்டு நடைபெற்றது. அப்போது நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். தொடர்ந்து விளையாட்டுச் செயற்பாடுகள் படிப்படியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

பாடசாலை முதல் பருவத்தில் இல்ல விளையாட்டுப் போட்டியினை நடாத்தி மாணவர்களின் உடல் உள விருத்திக்கு உதவிவருவதோடு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றது. உடற்பயிற்சி, வினோதஉடை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. தினமும் காலை நேரம் மாணவர்களால் உடற்பயிற்சி செய்யப்பட்டு வருகிறது.

## இல்லங்கள்



# இல்ல மெய்வல்லுநர் போட்டி வீராங்கனைகள்

| ஆண்டு | பெயர் | தரம் |
|---|---|---|
| 1992 | சி.கஜானி | 1 |
| | கு.சிந்துஜா | 2 |
| | ந.ஜெயப்பிரதா | 3 |
| | த.ஜெயந்தி | 4 |
| | செ.கலாறஜனி | 5 |
| 1993 | இ.விஜயா | 1 |
| | சி.சுகன்ஜா | 2 |
| | அ.மிதுனா | 3 |
| | வை.சிந்துசா | 4 |
| | வி.சோபிகா | 5 |
| 1994 | வி.ஜீவிதா | 1 |
| | தி.பிரியதர்சினி | 2 |
| | சி.சுகன்ஜா | 3 |
| | சி.கஜானி | 3 |
| | த.லீதாயினி | 4 |
| | வை.சிந்துசா | 5 |
| 1995 | மோ.மயூரி | 1 |
| | வி.ஜீவிதா | 2 |
| | தி.பிரியதர்சினி | 3 |
| | சி.சுகன்ஜா | 4 |
| | த.லீதாயினி | 5 |
| 1997 | ப.தனோயா | 1 |
| | ச.ஷாமளை | 2 |
| | மோ.மயூரி | 3 |
| | சொ.சத்தியப்பிரியா | 4 |
| | தி.பிரியதர்சினி | 5 |
| 1998 | கி.தேனுகா | 1 |
| | ந.சிந்துஜா | 2 |
| | க.தாரகா | 3 |
| | த.பிரதீபா | 4 |

| ஆண்டு | பெயர் | தரம் |
|---|---|---|
| 1999 | ச.நிசானிக்கா | 1 |
| | ச.பானுஜா | 2 |
| | ந.சிந்துஜா | 3 |
| | இ.வாகினி | 4 |
| | மோ.மயூரி | 5 |
| 2000 | மோ.ஹம்சிகா | 1 |
| | யோ.சுகன்யா | 2 |
| | ச.பானுஜா | 3 |
| | சு.சிந்து | 4 |
| | ச.வாகினி | 5 |
| 2001 | கு.லக்சிகா | 1 |
| | மோ.ஹம்சிகா | 2 |
| | க.காதம்பரி | 3 |
| | கி.தேனுகா | 4 |
| | சு.சிந்து | 5 |
| 2002 | த.தாட்சாயினி | 1 |
| | மோ.ஹம்சிகா | 3 |
| | க.காதம்பரி | 4 |
| | ச.பானுஜா | 5 |
| 2003 | சி.மதுசா | 1 |
| | அ.பிரவீனா | 2 |
| | மு.சுஜீபா | 3 |
| | ஜெ.கஸ்தூரி | 4 |
| | சி.ரூபிகா | 4 |
| | ஸ்ரீ.தீபிகா | 5 |
| 2004 | க.அருள்ஜெனனி | 1 |
| | நா.பிரசாந்தி | 2 |
| | அ.பிரவீனா | 3 |
| | மு.சுஜீபா | 4 |
| | த.விதுர்ஷீகா | 5 |

## மெய்வல்லுநர் போட்டி முடிவுகள்

| ஆண்டு | பெயர் | போட்டி | வட்டாரம்/ கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|
| 1983 | | 4*50m அஞ்சல் | 1 | | | |
| | | நீளம்பாய்தல் | 3 | | 1 | |
| 1986 | 13-கீழ் | | | | | |
| | பெண்கள் | உடற்பயிற்சி | | | | |
| | தி.வக்சலா | உயரம்பாய்தல் | 1 | | | |
| | ச.தர்சினி | 100 m ஓட்டம் | 2 | | | |
| | ச.தர்சினி | 75 m ஓட்டம் | 3 | | | |
| 2002 | ச.பானுஜா | 75m ஓட்டம் | 1 | 2 | 3 | |
| | | 100m ஓட்டம் | 1 | 1 | 2 | 4 |
| | | நீளம்பாய்தல் | 2 | 1 | | |
| | கி.தேனுஜா | 100m ஓட்டம் | 3 | | | |
| 2003 | ஸ்ரீ.தீபிகா | 75m ஓட்டம் | 1 | | | |
| | | 100m ஓட்டம் | 1 | | | |
| | | உயரம்பாய்தல் | 3 | | | |
| | தி.சரண்ஜா | 100m ஓட்டம் | 2 | | | |
| | கோ.றஜித்தா | உயரம்பாய்தல் | 3 | | | |

## பிரதம விருந்தினர் வரிசையில்

| | | |
|---|---|---|
| 1988 | திரு. சு.சிவநாயகமூர்த்தி | நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி |
| 1990 | திருமதி. தி.நாகராஜா | இ.ம.கல்லூரி அதிபர் வண் வடக்கு கொத்தணி அதிபர் |
| 1992 | திரு .திருமதி. ஈ.சரவணபவன் | நிர்வாக இயக்குனர் உதயன் பணிமனை |
| 1993 | திரு. கோ. சி. வேலாயுதம் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் |
| 1994 | திரு. சி. புலேந்திரன் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் நல்லூர்க் கோட்டம் |
| 1995 | திரு .வ. சுப்பிரமணியம் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் திட்டமிடல் |
| 1997 | திரு .ப. விக்கினேஸ்வரன் | உதவிக்கல்விப் பணிப்பாளர் |
| 1998 | திரு. ஈ. அருளானந்தம் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் நல்லூர்க் கோட்டம் |
| 1999 | திரு.து .வைத்திலிங்கம் | மேலதிக அரசாங்க அதிபர் யாழ் |
| 2000 | திரு. கோ .சி. வேலாயுதம் | பிரதிக்கல்விப் பணிப்பாளர் |
| 2001 | திரு. சிவகுரு பத்மநாதன் | முகாமையாளர் மக்கள் வங்கி யாழ் |
| 2002 | திரு. பெ. ஜெயராஜசிங்கம் | முகாமையாளர் (H.N.B) |
| 2003 | திரு. த .அருணகிரிராஜா | உடற்கல்வி |
| 2004 | திரு .யோ .ரவிந்திரன். | பிரதிக்கல்விப் பணிப்பாளர் |

# விளையாட்டு போட்டி நிகழ்வுகள்













# உடற்பயிற்சியும் அணிவகுப்பும்













# மேலைத்தேய வாத்திய இசைக்குழு

எமது பாடசாலை விளையாட்டு விழா பாடசாலை நிகழ்வுகளில் விருந்தினர் வரவேற்பு ஆகியவற்றை சிறப்புற நடாத்துவதற்கு உதவுகின்றது. இக்குழுவிற்கு திருமதி த.துரைசிங்கம் அவர்கள் பொறுப்பாகவும், இவருக்கு உதவியாக செல்வி தர்சினி முத்துராஜா அவர்களும் செயற்பட்டு வருகிறார்கள்.

1998.03.14 பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டி நிகழ்வில் முதன் முதலாக எமது பாடசாலை வாத்திய இசைக்குழுவினரினால் வாத்தியம் இசைக்கப்பட்டது. இசைக் கருவிகள் வாடகைக்கு எடுக்கப்பட்டது. பங்குபற்றிய மாணவர்கள்

1. விதுஜா ரவிராஜன்-தலைவி
2. சரண்யா ஸ்ரீவரதன்
3. பத்மாஜினி பத்மநாதன்
4. சிந்துஷா செல்லத்துரை
5. மயூரதி செல்வரத்தினம்
6. லாவண்யா சற்குணனந்தன்
7. சத்தியா சதாசிவம்
8. ஜெயவாணி ராஜேந்திரம்
9. கௌதமி விக்கினேஸ்வரன்
10. அகல்யா தர்மலிங்கம்
11. தாட்சாயினி விஜயநாதன்
12. ஸ்ரீலக்ஷ்மி ஸ்ரீகரன்
13. தபோதினி குணராஜா
14. கிருஷாளினி மகேந்திரம்
15. ஜிலோஜனா மகேந்திரன்

2000.02.23 இல் மாவட்ட இணைப்பாளர்,சிறுவர் பாதுகாப்பு நிதியம் **லிபிகேனாட்** அம்மையார் அவர்களும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் திரு. ஏ.நல்லதம்பி அவர்களும் பாண்ட் இசைக்கருவிகளை எமது பாடசாலைக்கென வழங்கி உதவினார்கள்.

இத்துறையில் மாணவரிடம் இயல்பாக மறைந்து கிடக்கும் ஆற்றல்களை இனங்கண்டு வெளிக்கொணர்ந்து அத்துறைகளில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்றநோக்கில் இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வருடம் இதற்காக

1. பா.சூரியப்பிரியா-தலைவி
2. கி.கோசலா
3. வ.சந்தனா
4. க.டயானா
5. யோ.சங்கீதா
6. ஞா.கஜகதுனி
7. க.மதுரா
8. சு.நிரோஜினி
9. சி.ஜெனனி
10. த.சரவண்ஜ
11. இ.தரணிகா
12. ச.ஜனனி
13. செ.கஜநாராயணி
14. வ.ஸ்ரீதரா
15. டி.சிவாசினி
16. க.துஸ்யந்தி ஆகியோர்
17. அ.தனுஜா

தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

***ஔவையார் அருளிச்செய்த மூதுரை***

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் – தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் – சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

# விளையாட்டின் மூலம் மேம்பாட்டுக் கல்வி

**திருமதி ம.சரவணபவன்**
வடபிராந்திய பாலவிகாஸ் இணைப்பாளர்

துறையில் பாடத் திட்டத்திலுள்ள அறிவை மட்டும் போதிக்காமல் மேம்பாடுகளையும் சேர்த்து கற்பிக்க வேண்டும் என்ற கருத்து உலகளாவிய ரீதியில் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. மேம்பாடுகள் இல்லாத கல்வியினால் தான் இன்று உலகத்திற்கு பேராபத்துக்கள் அச்சுறுத்தி வருகின்றன. என்று கல்வியாளர்கள் உணர்ந்துள்ளனர். பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்கள் "இன்றைய கல்வி முறையில் தலைக்கும் (விவேகத்திற்கும்) இருதயத்திற்கும் (பண்புகளுக்கும்) தொடர்பில்லாமல் உள்ளது. தலையில் உள்ள அறிவை இதயத்தில் சிந்தித்து செயற்படுத்த வேண்டும்." என்று கூறுகிறார். இன்றைய கல்வி அறிவை வளர்த்து பிற கோள்களுக்கு சென்று ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் அளவிற்கு வளர்ந்துவிட்டது. ஆனால் அயல் வீட்டவன் படும் கஷ்டத்திற்கு உதவ வேண்டும் என்ற மனப்பாங்கு இல்லாமல் போய்விட்டது. இது தான் இன்றைய கல்வியின் அவலநிலை. அறிவு வளர்ந்த அளவிற்கு இருதயம் வளரவில்லை.

ஆகவே தான் இன்று மேம்பாடுகளை அதாவது மனிதப் பண்புகளை பாடத்திட்டத்தினூடாக கற்பிக்கும் முறை விருத்தியடைந்து வருகின்றது. இதே போல விளையாட்டின் மூலமாகவும் பண்புகளையும் மாணவர்களின் விவேகம், ஞாபக சக்தி, ஒற்றுமை, மகிழ்ச்சி, திடீர் என முடிவெடுக்கும் ஆற்றல் ஒருமுக மனக் குவிப்பு ஆகிய பல சிறந்த பண்புகளை வளர்க்கலாம். இந்த ஆற்றல்கள் நேரடியாக பாடத் திட்டத்திற்கு உதவி செய்யாவிடினும் மறைமுகமாக மாணவன் தனது பாடங்களை படிக்கக்கூடிய ஆற்றலையும் விருப்பத்தையும் ஏற்படுத்துகின்றது.

ஆகவே இந்த விளையாட்டுகளில் சிலவற்றை இங்கு தருகிறோம். மேலும் ஆசிரியர்களே இவற்றை அடிப்படையாக வைத்து சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றங்களை செய்து விளையாடலாம். மாணவர்கள் உற்சாகமாக ஈடுபடுவதே முக்கியம்.

## விளையாட்டுக்கள்

**நற்பண்புகளை வளர்த்தல்**

சம அளவு அட்டைகள் சிலவற்றை எடுத்து நல்ல பண்புகளையும், தீய பண்புகள் சிலவற்றையும் ஒவ்வொரு அட்டையில் ஒவ்வொன்றாக எழுத வேண்டும். சத்தியம், பொறுமை, கோபம், அன்பு, பகை, இரக்கம் இவ்வாறாக எழுதிய அட்டைகளை சொற்கள் தெரியாதவாறு கவிழ்த்து ஒரு பெரிய வட்டத்தில் சம இடைவெளி விட்டு வைக்க வேண்டும். மாணவரைஇ இசை ஒலி தொடங்கியதும் அவற்றை சுற்றி பெருவட்டத்தில் ஓடவிடவேண்டும். ஒலி நின்றதும் அவர்கள் தமக்கு அருகிலுள்ள அட்டைக்கு அண்மையில் நிற்கவேண்டும். ஒரு அட்டைக்கு பக்கத்தில் 4,5 பேரும் நிற்கலாம். ஆசிரியர் அட்டைகளைப் புரட்டி பார்த்து

தீய பண்புகள் உள்ள அட்டையைச் சுற்றி நிற்பவர்களை வெளியேற்ற வேண்டும். அட்டைகளை மீண்டும் மாற்றி வைத்து மாணவரை ஓட விட்டு வெற்றி பெறும் மாணவனை கண்டுகொள்ளலாம். மாணவர்களிடம், எம்மிடம் நற்பண்புகள் அதிகரிக்க அதிகரிக்க நாம் அப்பண்பு அட்டைகளுக்கு அருகிலேயே நிற்போம். அப்பொழுது நாம் எப்போதும் வெற்றி பெறலாம். எம்மிடம் நற் பண்புகள் அதிகரிக்க அதிகரிக்க நாம் நற்பண்பு வட்டத்திற்குள்ளேயே நிற்போம். அதனால் எமக்கு எப்போதும் வெற்றி நிச்சயம்.

**வாசகங்களைப் பொருத்துதல்**

சில அட்டைகளை எடுத்து அதில் பொன் மொழியை இரண்டு பகுதியாக எழுத வேண்டும்.

| அன்னையும் பிதாவும் | முன்னறி தெய்வம் |
|---|---|

மாணவர் பத்துப்பேரிடம் ஒருபகுதி அட்டைகளைக் கொடுத்து வரிசையாக நிற்க விடவேண்டும். எதிரில் மறுபகுதி அட்டைகளை மேசையில் பரப்பி விடலாம். அல்லது இன்னும் சில மாணவர்களிடம் கொடுத்து நிற்க வைக்கலாம். ஆரம்ப அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டதும் முதல் வரிசை மாணவர் ஓடிச் சென்று மறுபகுதியை சேர்த்துக்கொண்டு முடிவிடத்தை நோக்கி ஓடவேண்டும். மாணவர் பொன் மொழிகளை மனனம் செய்ய, அறிய, ஞாபக சக்தியை வளர்க்க இவ் விளையாட்டு உதவுகின்றது.

இதே விளையாட்டை மிருகங்களின் பண்புகளை பொருத்தியும் விளையாடலாம். மிருகங்களின் படம் ஒருபகுதி அட்டையிலும் அவற்றின் பண்புகள் மறுபகுதி அட்டையிலும் அமைய வேண்டும்.

| | | |
|---|---|---|
| நாய் | - | நன்றி |
| பூனை | - | சுத்தம் |
| ஆமை | - | தன்னடக்கம் |
| கங்காரு | - | கவனிப்பு |
| அணில் | - | சேமிப்பு |
| ஒட்டகம் | - | பொறுமை |
| கழுதை | - | கடின உழைப்பு |
| காகம் | - | ஒற்றுமை. பகிர்தல் |
| புறா | - | சமாதானம் |
| மயில் | - | அழ்கு |
| எறும்பு | - | ஒழுங்கு |
| அன்னம் | - | பகுத்தறிதல் |

**எண்களை எண்ணுதல்**

மாணவர்களை வட்டமாக இருக்க வைத்து 1,2,3,4,5 என ஒழுங்காக கூறவிட்டு ஆறாவது எண் வந்ததும் 6 என்று கூறாமல் ஒரு கடவ்ள் பெயரைச் சொல்ல வைக்க வேண்டும் தொடர்ந்து இருக்கும் மாணவன் 1 எனத் தொடங்கி 2,3,4,5 6ஆவது கடவுள் பெயரை கூறலாம். அல்லது 6இலிருந்து 7,8,9,10,11 12ஆவது அதாவது 6இன் மடங்கில் கூறவைக்கலாம். எந்த எண்ணின் பின் கடவுள் பெயரை கூறவேண்டும் என்பதை ஆசிரியர்

தீர்மானிக்கலாம். அடிக்கடி இந்த எண்ணை மாற்றி விரைவாகக் கூறவைக்க வேண்டும். எண்ணில் அல்லது கடவுள் பெயரில் தவறியவர் வெளியேற வேண்டும். இது கவனிக்கும் ஆற்றலைக் கூட்டவல்ல விளையாட்டாகும். ஞாபக சக்தியையும் வளர்க்க வல்லது.

**கடவுள் சொல்கிறார்**

மாணவர்களை வட்டமாக இருக்க வைத்து கட்டளைக்குப் பணிதல் என்ற அடிப்படையில் இதனை விளையாடலாம். "கடவுள் சொல்கிறார் கும்பிடுங்கள்" எனக் கூறின் மாணவர் அதனைச் செய்ய வேண்டும். "கும்பிடுங்கள்" என்று வெறுமனே கூறினால் செய்யக்கூடாது. இப்படியே அப்பா, அம்மா, குரு சொல்கிறார் எனவும் கூறலாம். கட்டளைகள் மாணவர் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டியவையாக அமைதல் நன்று. கட்டளைக்குப் பணிதலோடு கிரகிக்கும் ஆற்றலையும் கூட்ட வல்ல விளையாட்டு இதுவாகும். சொல்லும் வேகத்தைக் கூட்டுவதன் மூலம் மாணவரை விரைவாக சிந்திக்க வைக்கலாம்.

**சொல்லும் செயலும்.**

மாணவர்களை ஆசிரியரைப் பார்க்கக் கூடியதாக இருத்த வேண்டும். பின் ஆசிரியர் கட்டளைகளைப் பிறப்பித்து செய்கையிலும் செய்யவேண்டும். உதாரணமாக காதைப்பொத்துங்கள் எனக்கூறும் ஆசிரியர்கள் அதற்கு எதிர் மாறாகத் தன்கைகளால் கண்களை மூட வேண்டும். பார்த்துக் கொண்டிருக்கும் மாணவர் தொடர்ந்து இதனை விளையாடும்போது கைகள் செய்வதையே தாமும் செய்வர். கட்டளைகளுக்கு மாறாக இது நடைபெறும். மாணவர் நாம் செய்வதை வெகுவாக அவதானிக்கிறார்கள் என்பதை இது உணர்த்துகிறது. நற்பண்புகளையோ, மற்ற எவற்றையோ வாயால் சொல்வதைவிட நாமும் நடைமுறையில் நடக்கும்போது அது மாணவர் மனதில் பதிந்து அவரையும் அப்படி நடக்க ஊக்குவிக்கின்றது. இதன்மூலம் மாணவரின் அவதானிக்கும் ஆற்றலையும், விரைவாகத் தீர்மானம் எடுக்கும் திறமையையும் வளர்க்கலாம்.

**காட்ஸ் விளையாட்டு**

அட்டைகளில் "காட்ஸ்" அமைப்பில் வெட்டி அதில் நற்பண்புகளையும், தீய பண்புகளையும் எழுதி 4 பேர் சேர்த்து விளையாடலாம். "காட்ஸ்" மாணவர்களிடையே பங்கிடப்பட்டதும் முதலாமவர் அருகில் இருப்பவரிடம் தமக்குத் தேவையான நற்பண்புக் காட்டை கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம். "தயவு செய்து உம்மிடம் உள்ள அன்பு" என்ற காட்டை தரவும். "Please give me your Love" உயசன என்றதும் மற்றைய மாணவன் கொடுத்தால் "Thank You" "நன்றி" என்று கூறிவாங்க வேண்டும். அவரிடம் இல்லை என்றால் அவர் "இல்லை" எனக் கூறுவார். இப்படியே ஒவ்வொரு வரும் தமது முறை வரும்போது கேட்டு, முதலில் நற்பண்புகளைச் சேர்ப்பவர் வெற்றி பெறுவார். நற் பண்புகளை அறியவும் பணிவாக ஒருவரிடம் எதையும் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் பண்பான வசனங்களை பிரயோகிக்கவும் இவ்விளையாட்டு உதவுகின்றது.

இப்படி பல விளையாட்டுக்கள் மூலம் மாணவரிடத்தில் நற்பண்புகளை வளர்க்கலாம். விளையாட்டு என்பது உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆரோக்கியம் தருவதே. விளையாட்டுப் போட்டி பொறாமையை வளர்க்கக் கூடியதாக இருக்கக் கூடாது.



# ஆரம்ப வகுப்புக்களுக்கான உடற்கல்வி.

**திரு. க.கணேசநாதன்**
B.Com. (Hons.) Dip.in Edu.
உடற்கல்வி அலகு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆரம்ப பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடவிதானம் கடந்த தசாப்தங்களில் அனேக மாற்றங்களிற்கு உட்பட்டுள்ளது. உடற்கல்வியானது தசைநார் விருத்தி, புலன் தொகுதியின் மேம்பாடு, உடல் விருத்தி என்பனவற்றுடன் மட்டுமே தொடர்புடைய கல்வி இயல் என்ற கருத்திலிருந்து விடுபடும் காலகட்டத்தை நாம் அடைந்துள்ளோம். இது பிள்ளைகளின் உடல், உள, சமூக ஆன்மீக ஒழுக்க மனப்பாங்கு விருத்திகளை தோற்றுவிக்கும் ஓர் பரந்த கல்வியில் ஆக இன்று மிளிர்கிறது.

இன்று ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு அசைவு, ஆக்கத் தொழில்பாடுகள், ஆடல் பயிற்சி, வேறு விளையாட்டுக்கள் தொடர்பான பயிற்சி என்பன வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இக் கோட்பாடுகளை மையப்படுத்தி நன்கு திட்டமிடப்பட்ட வகையில் உடற் கல்வியை போதித்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர் பொருத்தமான, சிறந்த உள்ளடக்கங்களைக் கொண்ட வேலைத் திட்டங்களை முன் வைக்க வேண்டும்.

உடல், உள, உணர்வு புலன்களின் தூண்டற் செயற்பாட்டு தன்மையும் உடற் கல்வியின் பிரதான செயல் ஒழுங்குகளாக அமைகின்றன. பிள்ளைப் பருவத்திலிருந்து ஒருவர் விருத்தி செய்துகொள்கின்ற நடத்தைகளும், குண இயல்புகளும் மனப்பான்மைகளும் அவரது வினைத்திறனுடன் கூடிய மகிழ்ச்சிகரமான சுக வாழ்விற்கு வகை செய்யக் கூடிய வகையில் விருத்தி செய்யப்படும் இடம் பாடசாலையேயாகும். எனவே ஆரம்ப வகுப்புகளில் நன்கு திட்டமிடப்பட்டு சிறந்த முறையில் உடற்கல்வி கற்பிக்கப்படுவது அவசியமாகின்றது.

ஆரம்ப வகுப்புகளின் உடற் கல்வியானது பின்வரும் நோக்கங்களை எய்தும் பொருட்டு முன்னெடுக்கப்படுகின்றன.

1. உடல், உள, சமூக, ஒழுக்க, ஆன்மீக அம்சங்களை விருத்தி செய்து வினைத்திறன் மிக்க முழுமையான மனித வாழ்வுக்கு உதவுதல்.
2. ஒருவரின் உடல், அறிவு, உணர்வு, நடத்தைகள் எனும் சகல அம்சங்கள் விருத்தி செய்யக்கூடிய பிரதான கல்வி இயலாக உடற் கல்வி அமைதல்.
3. சமநிலை ஆளுமை விருத்திக்கு தேவையான உடல், உள, சமூக, ஆன்மீக மனவெழுச்சியினை பிள்ளைகள் சரியாக பெற்றுக் கொள்ள ஆரம்ப வகுப்புக்களில் இருந்தே சரியான வழிப்படுத்தலை மேற்கொள்ள உடற் கல்வி உதவுதல்.
4. பாடசாலை, வகுப்பறை, விளையாட்டு திடல் என்பவற்றின் மூலம் தலைமைத்துவ பண்புகளை விருத்திசெய்தல். ஒத்துழைப்பு சமூகவுணர்வு, பணிவு, ஏனையோரை மதித்தல், ஏனையோர் மீது செல்வாக்கு செலுத்தல், தன்னடக்கம், சட்டதிட்டங்களை பின்பற்றி ஒழுகுதல் போன்ற பண்புகளை விருத்திசெய்தல்.

சிறு வயது முதல் உடல் விருத்தியானது தன்னிச்சையாக நிகழ்கின்ற போதிலும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்ட உடற் செயற்பாட்டு முறை ஒன்றை பிள்ளைகளின் அபிவிருத்திக்கு உதவும் வண்ணம் ஏற்படுத்திக் கொள்ளல் அவசியமாகின்றது. பிள்ளைகளின் உடற்றிறனை விஞ்ஞான ரீதியாக மேம்படுத்தவும், உடற் குறைபாடுகள் காணப்படின் அவற்றை சீர் செய்யவும் புலக்காட்சி சார் அறிவு செயல்களாகிய எண், இடம், வெளி, காலம், அளத்தல் என்பவற்றை மேம்படுத்தவும் உடற் செயற்பாடுகள் மிகவும் அவசியமாகின்றது.

ஆரோக்கிய தன்மையை வெளிப்படுத்தும் பிரதான அம்சம் உடற் பொருத்தப்பாடாகும். தனி நபர் ஒருவரது செயற்பாட்டு தன்மை அவரது சக்தி, களைப்பை தாங்கும் திறன், சரியான மெய் நிலைகள், நெகிழ்ச்சி தன்மை என்பவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் உடலின் சிறந்த செயலாற்றல் எலும்பு, தசை, நரம்பு, குருதியோட்டம், சுவாச செயலொழுங்கு என்பவற்றில் இடம் பெறும். இயைபாக்கத்திலேயே தங்கியுள்ளது. இப் பொருத்தப்பாடு உணவு, தேக அப்பியாசம், உடற் காப்பு, சுகாதார முறைமை என்ற காரணிகளில் தங்கி விருத்தியுறுகின்றது.

மேற்படி உடல் விருத்தி சந்தர்ப்பங்கள் தொடர்பாக வெவ்வேறு வயதெல்லைகளை உடைய ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு பொருந்தத்தக்க செயற்பாடுகளையும் அவர்களுக்கான துலங்கல்களையும் விளங்கிக் கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாக ஆசிரியர்கட்கும், பெற்றோர்களுக்கும் அமையப் பெறுகின்றது.

5 வயதிலிருந்து 6 வயது வரையான காலகட்டம் மிகவும் தீவிரமான பண்புகளையுடைய காலகட்டமாகும். இப் பருவத்தில் பிள்ளைகள் ஓடுதல், பாய்தல், வினாவுதல் போன்ற செயற்பாடுகளில் பெரு விருப்பை வெளிப்படுத்துவர். அசைதற் செயல்களின்பால் பெறும் அனுபவங்களிலும் ஆர்வம் காட்டுவர். பல வர்ண ஈர்ப்பும், போலச் செய்தல், ஆய்வு ஊக்கம் என்பனவும் காணப்படும். ஆசிரியர் மாணவர்களில் செலுத்தும் அன்பும் ஆதரவும் அரவணைப்பும் இக் கட்டத்தில் உள விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் இக்கால கட்டத்தில் தொங்குதல், நடத்தல், தள்ளுதல், ஊர்தல், புரளுதல் போன்ற எளிய உடற்றிறன் செயற்பாடுகளைக் கற்பித்தல் பொருத்தமுடையதாக அமையும். தனித்தனியாகவோ அல்லது இருவர் இருவராகவோ செய்யும் செயறபாடுகளுக்கு பந்து, விதைப்பை, வளையம், கயிறு, சிறுகோல் போன்ற இலகுவான பொருட்களைப் பயன்படுத்தலாம். பந்தை வீசுதல் ஏந்துதல், தரையில் தட்டிச் செல்லல் போன்ற செயற்பாடுகளில் விருப்பார்வத்துடன் செயற்பட வைக்கலாம். மேலும் இசையுடன் கூடிய அசைவுகளின் மூலம் போலச் செய்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

7 முதல் 9 வயது வரையிலான காலப் பகுதியில் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்படும் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தலாம். உடல் அவயங்களாகிய கை, கால் என்பவற்றின் வளர்ச்சி இக் காலகட்டத்தில் துரிதமாக காணப்படும் போலச் செய்தல் திறன் அதிகமாக காணப்படும். அகலமாக சுவடுகளை வைத்து செய்யும் செயற்பாடுகளிலும் ஈடுபடும் ஆற்றல் ஏற்படும். ஆண், பெண் வேறுபாடுகளுக்கேற்ப செயற்பாடுகளை வேறுபடுத்தி அறிமுகப்படுத்தலாம். ஆரம்ப வகுப்புக்களின் நடுப்பகுதியை தாண்டி செல்லும் இம் மாணவர்களுக்கு 5 தொடக்கம் 6 வயதிற்கு பயன்படுத்திய எளிய உபகரணங்களுடன் கூடிய உடற் செயல்பாட்டை பிரயோகிக்கலாம். மேலும் வளையங்களினூடாக நுழைதல், விதைப்பை, பந்து என்ப்வற்றை எறிதலும் ஏந்துதலும் இலக்குகளை நோக்கி மற்றதையும் விதைப் பைகளையும் செலுத்துதல் போன்ற செயற்பாடுகளையும் அறிமுகப்படுத்தலாம். தனித்து செயற்படுவதை விட ஏனையோருடன் ஒத்து செயற்படும் செயற்பாடுகளை இக்கால கட்டத்தில் அதிகம் அறிமுகப்படுத்தலாம்.

9 வயதிலிருந்து 11 வயது வரையான காலப் பகுதி. இக் காலப்பகுதி பிள்ளைப் பருவத்திலிருந்து நீங்கி சிக்கலான பருவத்திற்கு செல்லும் காலகட்டமாகும். உடல், உள, வலு மேம்பாட்டையும் தனித்துவம் குறையும். எனினும் துருவி ஆராய்தல், சண்டை பிடித்தல், வெற்றி தொடர்பான ஆர்வம் போன்றவற்றில் ஈடுபாடு காணப்படும். குழு உணர்வு எதிரணியுடன் போட்டியிடுதல் போன்ற செயற்பாடுகளிலும் விருப்பம் காணப்படும். இக் காலகட்டத்தில் அடிப்படை உடல் இயக்கத் திறன்களை முறையாக அறிமுகப் படுத்தல் வேண்டும். என்பு, தசை, நரம்புகள் என்பவற்றை மேம்படுத்த வேண்டிய காலகட்டம் இதுவாகும். அடிப்படை ஜிம்நாஸ்ரிக், மெய் வல்லுனர் விளையாட்டுக்கள், நடனம், நீச்சல், புறச் செயற்பாடுகள் என்பன இக் காலகட்டத்திற்கு பொருத்தமான செயற்பாடுகளாக அமையும்.

உடற் கல்வி வேலைத்திட்டமானது உடல், உள, சமூக, ஆன்மீக, ஒழுக்க மனப்பாங்கு ஆகிய அம்சங்களை மேம்படுத்தத்தக்க செயற்பாடுகளை உள்ளடக்கியதாக அமையப் பெறல் வேண்டும். பல்வேறு விளையாட்டுக்களை பயன்படுத்தி கற்பிக்கப்படும் பாடங்கள் ஆரம்ப வகுப்புக்களில் உடற் கல்வி கற்பித்தல் செயல்பாட்டில் முக்கிய பங்களிப்பை நல்குகின்றது. ஒவ்வொரு பிள்ளைக்கும் தன்நம்பிக்கையுடனும், தளராத உறுதியுடனும் செயற்பட்டு தனது திறன்களை வெளிப்படுத்தும் அனுபவ சந்தர்ப்பங்களை விளையாட்டுச் செயற்பாடுகளே வழங்குகின்றன. தனித்தும், குழுவாகவும் உபகரணங்களுடனும், உபகரணங்கள் இன்றியும் சிறு விளையாட்டுக்களில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களது திறன்களை அளவிடுதல், உடற்றிறன்களை வரவழைத்தல், இணைந்து செயற்படும் ஆற்றலை விருத்தி செய்தல், மகிழ்ச்சியாக இருத்தல் போன்ற விரும்பத்தக்க பிரதி பலன்களைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

ஆரம்ப வகுப்புக்களில் உடற் கல்வியை நன்கு திட்டமிட்டு அனுபவமும் ஆற்றலும் மிக்க ஆளணியினரை பயன்படுத்தி பெற்றோரதும், சமூகத்தினரதும் ஒத்துழைப்புடன் முன்னெடுப்பதன் மூலம் சமநிலை ஆளுமை பண்புகளைக் கொண்ட சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். உடற் கல்வியை பாடசாலையில் முன்னெடுப்பதற்கு உட்கட்டுமான வசதிகளும் போதுமானதாக அமைந்திருத்தல் வேண்டும். இந்த வகையில் எல்லா ஆரம்ப பாடசாலைகளிலும் ''விளையாட்டு முற்றங்கள்'' நிறுவப்படுதல் இன்றியமையாததாக காணப்படுகின்றது. மேலும் உடற்கல்வி அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களை ஊக்குவிக்கும் நேர்க் கணிய மனப்பாங்கு பெற்றோரிடத்தில் காணப்படுதல் வேண்டும். இன்றைய தமிழ் கல்வி முறையிலே போட்டிப் பரீட்சைகளுக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் மனப்பாங்கு குறித்த சில வான்மை தொழில்களுக்காக மட்டும் மாணவர்களை ஊக்குவிக்கும் மனப்பாங்கும் ஒர் ஆரோக்கியமான சூழ் நிலையும் நின்று நிலைக்கக்கூடிய மகிழ்ச்சிகரமான வாழ்க்கையும் ஏற்படுத்தப் போதுமானதாக அமையப் பெறாது. வான்மைத் தொழிலில் நிலைக்கவும் தனக்கும் ஏனையோருக்கும் பயனடையும் வண்ணம் நற் பிரஜையாக செயற்படவும் ஒருவருக்கு ஆரம்பக் கல்வியில் கிடைக்கின்ற உடற் கல்வி அனுபவங்களே அத்திவாரமாக அமைவதனால் இவ் அத்திவாரத்தை பலமாக்கி கொள்வதற்கான சிந்தனை தெளிவும் மனப்பாங்கு மாற்றமும் எமது தமிழ்க் கல்வி சமூகத்தில் விருத்தியுற வேண்டிய தேவையை நாம் அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டியுள்ளது.

# மாணவர்களின் ஆளுமை விருத்தியில் உடற்கல்வியின் பங்கு

**செல்வி வாகினி இரகுநாதன்**
கனிஷ்ட விளையாட்டுத்துறைத் தலைவி,
யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப்
பாடசாலை.

கல்வி மனிதனை முழு மனிதனாக்குகின்றது. நாம் எமது மாணவப் பருவத்தில் பாடசாலைக் கல்வியிலேயே பெரிதும் தங்கியுள்ளோம். பாடசாலைகளில் எமக்கு ஊட்டப்படுகின்ற கல்வி வெறுமனே ஏட்டுக் கல்வியாக மட்டும் அமைந்து விடுவதில்லை. வகுப்பறையில் பாடநூல்களை கற்கின்ற மாணவன் மைதானத்தில் உடற்கல்வியின் மூலம் பெற்றுக்கொள்கின்ற அறிவும் அதனால் அடைகின்ற ஆழுமை விருத்தியும் அற்புதமானவை. உடற்கல்வியும் விளையாட்டும் அவனை ஆளுமை மிக்க முழு மனிதனாக சமுதாயத்தின் தலைவனாகவே உருவாக்கி விடுகின்றது.

"சுவர் இருந்தாலே சித்திரம் வரையலாம்" என்ற முதுமொழிக்கிணங்க நாம் எமது உடலை ஆரோக்கியமானதாக பேணிக் கொள்வதன் மூலமே எமது உயிர் வாழ்க்கையினை அர்த்தப்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு நாம் உண்கின்ற உணவுகள் மாத்திரமன்றி செய்கின்ற உடற் பயிற்சிகளும் உறுதுணையாக இருக்கின்றன. ஆரோக்கியமான தேக வலுவுள்ள ஒருவராலேயே சமூகத்தில் எந்த விடயத்தையும் முன் நின்று நடாத்தக்கூடிய வல்லமை கிடைக்கும். அந்த வல்லமையை உடற்பயிற்சியே எமக்கு வழங்குகின்றது.

மேலும் விளையாட்டுக்களில் பங்குபற்றுகின்ற போது ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கும் பண்பு, மற்றவர்களை மதித்து நடக்கும் இயல்பு, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு ஆகியவற்றை மாணவர்கள் பழகிக்கொள்கின்றார்கள். இதனால் இம் மாணவர்கள் சமுதாயத்திலும் பெரியோர்களை மதித்து சமுதாய ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு வாழ பழகிக்கொள்கின்றார்கள். இத்தகைய மாணவர்களின் உருவாக்கத்தினால் சிறந்ததொரு சமுதாயம் உருவாக வழி ஏற்படுகின்றது.

விளையாட்டில் பங்குபற்றுகின்ற மாணவன் ஒருவன் வெற்றியை இலக்காக கொண்டிருந்தாலும் தோல்வி ஏற்படுகின்றபோது அதனை ஏற்றுக்கொள்கின்ற மனப்பாங்கினை பெற்றுக்கொள்கின்றான். தன்னோடு போட்டியிட்டு வெற்றிபெற்றவனை தானே வாழ்த்தி மகிழ்கின்றான். இத்தகைய மனநிலை அவனுக்கு தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்படுகின்ற இழப்புக்களையும், தோல்விகளையும் கண்டு துவண்டுவிடாத ஒரு திடமான மனநிலையினை உருவாக்கி விடுகின்றது. சமூகத்தில் தனிப்பட்ட வாழ்வின் தோல்விகளால் தற்கொலை செய்து கொள்பவர்கள் நிச்சயமாக விளையாட்டு வீரர்களாக இருக்க முடியாது. இவர்கள் இத்தகைய விரக்தி நிலையினை சாதாரண மாகவே எதிர்கொள்ளும் மனநிலையை பெற்றுக்கொண்டவர்கள்.

மேலும், விளையாட்டுக்களில் பங்குபற்றுகின்ற மாணவர்கள் அங்கு தலைமைத்துவம், ஆளுமை ஆகியவற்றிலும் விருத்தியடைகின்றனர். இளமையிலேயே தான் தலைமை

தாங்குகின்ற அணியை எவ்வாறு வழி நடத்துவது என்பதை பயிற்சியாகவே மேற்கொள்கின்ற ஒரு மாணவன் இயல்பாகவே தலைமைத்துவத்தில் தேர்ச்சிபெற்று விடுகின்றான். இது ஏனையவர்களை வழிநடத்தவும், முடிவுகளை எடுக்கவும் வல்லமையுள்ள ஆளுமையுள்ள ஒரு தலைவனாக அந்த மாணவனை உருவாக்கி விடுகின்றது.

பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டு செயற்பாடுகள் நாடு பூராகவுமுள்ள சகல இன மாணவர்களையும் இணைத்து நடாத்தப்படும் மாகாண, தேசிய மட்டப் போட்டிகள் வரை மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய சந்தர்ப்பங்களில் பல்வேறு சமூக, இன மாணவர்களையும் இணைத்து இப் போட்டிகள் நடைபெறுகின்றன. இவ்வாறு பல்வேறு சமூக மாணவர்களும் இணைந்து விளையாடும் போது இவர்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, அன்பு காட்டும் மனநிலை, நட்புறவு என்பன உருவாவதால் பல்வேறு சமூகங்களுக் கிடையிலும் இனங்களுக்கிடையிலும் ஐக்கியம், நட்புறவு என்பன உருவாகின்றன. இது முழு நாட்டினதும் சுபீட்சமான எதிர்காலத்திற்கு வழி சமைத்துக் கொடுக்கக் கூடியதாகும்.

எனவே பாடசாலைகளில் உள்ள உடற்கல்வியும் விளையாட்டுக்களும் மாணவர்களை ஆரோக்கியமானவர்களாக்கி ஆளுமை மிக்க தலைவர்களாக்கி சிறந்த சமுதாயத்தை உருவாக்க வழிவகுக்கின்றது. இவர்களே சமூக, இன, மத வேறுபாடுகளைக் கடந்து சுபீட்சமான ஒரு நாட்டை உருவாக்கும் சிற்பிகளாக உயர்வடைவார்கள் என்பது திண்ணம்.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் – வேண்டா
நமக்கு மதுவழியே நாம்போ மளவும்
எமக்கென்னென் றிட்டுண் டிரும்.

# மாணவ முதல்வர் குழுச் செயற்பாடு

1997.01.24இல் அதிபர் திருமதி த.துரைசிங்கம் அவர்களின் 25 வருட ஆசிரியர் சேவையின் ஞாபகார்த்தமாக முதன்முதலாக உருவாக்கப்பட்டது.

**முதலாவது அணியினர்**

1. சுகிர்தா ஸ்ரீவரதன் - மாணவ தலைவி
2. மகிளினி சிவலிங்கம் - உப தலைவி
3. நிருஜா அமரக்கொடி - விளையாட்டு தலைவி
4. தாரணி ஸ்ரீபாலச்சந்திரன்
5. கௌதமி இரகுநாதன்
6. சுகந்தினி சுதாகரன்
7. பிருந்தாயினி தியாகராஜா
8. சோபிகா சோதிநாதன்
9. பிரணவாஹரி சிவசேகரநாதன்
10. இந்துஜா மகாலிங்கம்
11. அபிராமி சந்திரகாந்தன்
12. சுஜித்தா சச்சிதானந்தம்
13. கரோலீனா சிவசுப்பிரமணியம்



பாடசாலையில் மாணவர்மத்தியில் ஒழுங்கு, கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கும் பாடசாலையின் பண்பாடு கலாச்சார விழுமியங்களை கட்டிக்காப்பதற்கும் வளர்ப்பதற்கும் தலைமைத்துவப்பண்பை விருத்தி செய்வதற்கும் என உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் பொறுப்பாசிரியர்களின் நெறிப் படுத்தலுடன் இயங்கிவருகிறது.

2004 அணியினர்

1. துளசிக ஸ்ரீவரதன் - மாணவ தலைவி
2. மதுரா கணேசநாதன் - உப தலைவி
3. ரூபிகா சிவராமலிங்கம் - விளையாட்டு தலைவி
4. சுபஸ்திகா சுந்தரலிங்கம்

5. சங்கீதா யோகரட்டினம்
6. ஷந்தனா வசந்தகுமார்
7. அருந்தசா தர்மலிங்கம்
8. கஜகர்னி ஞானசேகரம்
9. கோசலா கிஸ்ணகுமார்
10. தரணிகா இராஜதுரை
11. துஷாரகா சசிக்குமார்
12. ஜனனி சடாச்சரசோதி
13. கனிமொழி சுதானந்தராஜா
14. தனுஜா அமிர்தலிங்கம்
15. சூரியப்பிரியா பாஸ்கரன்
16. துஸ்யந்தி கந்தசாமி
17. சுமித்திரா சிவசுப்பிரமணியம்
18. சாரங்கா சபாநாயகம்



# மாணவ முதல்வர் குழுச் செயற்பாடு

1997.01.24இல் அதிபர் திருமதி த.துரைசிங்கம் அவர்களின் 25 வருட ஆசிரியர் சேவையின் ஞாபகார்த்தமாக முதன்முதலாக உருவாக்கப்பட்டது.

**முதலாவது அணியினர்**

1. சுகிர்தா ஸ்ரீவரதன் - மாணவ தலைவி
2. மகிளினி சிவலிங்கம் - உப தலைவி
3. நிருஜா அமரக்கொடி - விளையாட்டு தலைவி
4. தாரணி ஸ்ரீபாலச்சந்திரன்
5. கௌதமி இரகுநாதன்
6. சுகந்தினி சுதாகரன்
7. பிருந்தாயினி தியாகராஜா
8. சோபிகா சோதிநாதன்
9. பிரணவாஹரி சிவசேகரநாதன்
10. இந்துஜா மகாலிங்கம்
11. அபிராமி சந்திரகாந்தன்
12. சுஜித்தா சச்சிதானந்தம்
13. கரோலீனா சிவசுப்பிரமணியம்



பாடசாலையில் மாணவர்மத்தியில் ஒழுங்கு, கட்டுப்பாட்டை நிலைநாட்டுவதற்கும் பாடசாலையின் பண்பாடு கலாச்சார விழுமியங்களை கட்டிக்காப்பதற்கும் வளர்ப்பதற்கும் தலைமைத்துவப்பண்பை விருத்தி செய்வதற்கும் என உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது.

அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் பொறுப்பாசிரியர்களின் நெறிப் படுத்தலுடன் இயங்கிவருகிறது.

2004 அணியினர்

1. துளசிக ஸ்ரீவரதன் - மாணவ தலைவி
2. மதுரா கணேசநாதன் - உப தலைவி
3. ரூபிகா சிவராமலிங்கம் - விளையாட்டு தலைவி
4. சுபஸ்திகா சுந்தரலிங்கம்

5. சங்கீதா யோகரட்டினம்
6. ஷந்தனா வசந்தகுமார்
7. அருந்தசா தர்மலிங்கம்
8. கஜகர்னி ஞானசேகரம்
9. கோசலா கிஸ்ணகுமார்
10. தரணிகா இராஜதுரை
11. துஷாரகா சசிக்குமார்
12. ஜனனி சடாச்சரசோதி
13. கனிமொழி சுதானந்தராஜா
14. தனுஜா அமிர்தலிங்கம்
15. சூரியப்பிரியா பாஸ்கரன்
16. துஸ்யந்தி கந்தசாமி
17. சுமித்திரா சிவசுப்பிரமணியம்
18. சாரங்கா சபாநாயகம்



# பிள்ளைகளின் சமூக, ஒழுக்க விருத்திக்கான கல்வியில் ஆசிரியர், பெற்றோர் பங்களிப்பு.

**திரு. நா. வரதராஜா**
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

சிறுவர்கள் தமது தொடக்க வாழக்கையில் ஏனைய காலப்பகுதிகளை விட உடல், சமூக அறிவுசார் விருத்திநிலைகளைக் கொண்டிருப்பர். குழந்தைப் பராயத்திலிருந்து ஆரம்ப பள்ளிக்குச் செல்லும் காலப்பகுதியில் இப்பிள்ளைகள் படிப்படியாக ''மற்றையவர்கள் மீது தங்கியிருத்தல்'' என்னும் நிலையிலிருந்து விடுபட்டு சிக்கலான விளையாட்டுக்கள், அழுதல், சிரித்தல் போன்றவற்றிலிருந்து வயது வந்தவர்களைப் போல் பேசவும் சகபாடிகளுடன் விளையாடும் திறன்களையும் பெறுகின்றனர். இவ்விருத்திநிலையில் பண்பளவிலான தரம் இப்பிள்ளைகளை சூழலுடன் இடைவினையுறும் தரத்தில் தங்கியுள்ளது. சூழலுடன் தரமான இடைவினையை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர்.

மனிதர்களிடத்து சுய ஆளுமையும் விருத்தியடைவது தொடர்பாக பலவகையான நோக்குகள் உள்ளன. இந்நோக்குகள் சமூக விருத்தி ஏற்படும் நிலைமைகளை விளக்குகின்றன. இவற்றைப் பெற்றோர், ஆசிரியர் அறிவதன்மூலம் பிள்ளைப் பராயத்தில் சமூக விருத்தியில் காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும். அவையாவன,

1. உளப்பகுப்பாய்வு நோக்கு
2. சமூக கற்கை நோக்கு
3. ஆக்கபூர்வமான நோக்கு

**உளப்பகுப்பாய்வு நோக்கு**

இக்கோட்பாட்டில் எரிக் எரிக்சன் (ERIK ERIKSON) ''மனிதனின் எட்டு வகை வயதுப்பிரிப்பு'' எனும் மாதிரியை முன்வைத்தார். ஒவ்வொரு படிநிலையிலும் நேர், மறை எனும் இரு விசைகள் செயற்படுகின்றன எனவும் ஒவ்வொரு படிநிலைகளிலும் எதிர் மறை விசையை நீக்கி முன்னோக்கிச் செல்லும்போது சுயம் உறுதியடைகின்றது. இப்படி நிலைகளில் கூறப்பட்ட வெற்றியையும் தோல்வியையும் எமது வாழ்வு பூராகவும் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். எரிக்சனின் மாதிரியுரு பிள்ளை வாழும் பண்பாட்டு முறைகளைப் பிரதிபலிப்பனவாகக் காணப்படுகின்றது. எனவே பிள்ளைகள் வாழும் இடத்தைப் பொறுத்து வெற்றி, தோல்வி நிர்ணயிக்கப்படுகின்றது.

இக்கட்டுரையில் குழந்தைப்பருவம் முதல் ஆரம்பப் பள்ளி பருவம் வரையிலான படிநிலைகள் எடுத்துக்கூறப்படுகின்றது.

படிநிலை – 1 (பிறந்ததிலிருந்து 12 மாதம் வரை) அடிப்படை நம்பிக்கை எதிர் அடிப்படை நம்பிக்கையின்மை.

இப் படிநிலையில் வெற்றியை அடைவதற்கு குழந்தையான தன்னைக் காப்பவர்(தாய்) நம்பிக்கைக்குரியவர் எனும் திட நிலையைப் பெற வேண்டும். தாயானவர் பிள்ளையை விட்டு

வீட்டு வேலை செய்ய, வெளியில் செல்ல, வேலைக்குச் செல்வதற்காக பிரிந்து செல்லும்போது குழந்தை அவர் மீண்டும் வருவார் என்ற திட நம்பிக்கையைக் கொண்டிருக்க வேண்டும். அதே போல் பசி ஏற்படும்போது தாய் போஷிப்பாள் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கும். உணவு தருவதில் உணவின் அளவு போசனைத் தரம் அவ்வளவு முக்கியமானதல்ல. அதிலும் பார்க்க தாய் சேய் உறவின் பண்பளவுத்தரம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

படிநிலை -2 (12 மாதம் தொடக்கம் 3 வயதுவரை) சுதந்திரம் எதிர் வெட்கம், சந்தேகம்.

இப்படிநிலையில் பிள்ளைகள் சுதந்திரமான செயல்களில் ஈடுபடுவர். உதாரணமாக மலசலம் கழித்தலின் போது அச்செயற்பாடுகளுடன் தொடர்புடைய தசைகளை தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவரக்கூடியதாக இருப்பதனால் விரும்பிய நேரம் கழிக்கவும் ஏனைய நேரத்தில் கழிக்காமல் இருக்கவும் முடிகிறது. இந்நிலையில் பிள்ளைகள் முன்னோக்கி நகர வளர்ந்தவர்கள் பல விடயங்களை மீள வலியுறுத்த வேண்டியவராவர். உறுதிப்பாடு பிள்ளைகளின் அன்பினை ஏற்றுக்கொள்ளல் சுய வெளிப்பாட்டு சுதந்திரம் போன்றவற்றை வேண்டி நிற்பர். இந்நிலையில் பிள்ளைகளுக்கு தோல்வி ஏற்படும்போது சுயகட்டுப்பாடு, சுய உயர்வின்மை என்பனவற்றை இழந்து வெட்கித்தல், தன்னையே சந்தேகித்தல் போன்ற நிலைமைகள் ஏற்படும். எனவே இப் படிநிலையில் முன்னேற பெற்றோரின் காத்திரமான இடைவினையும் வாழும் சூழலின் பங்களிப்பும் அவசியமாகின்றன.

படிநிலை – 3 (3 வயது முதல் 5 வயதுவரை) முன்னெடுத்துச்செல்லல் எதிர்குற்றவுணர்வு.

இதுவே பள்ளி முன்னமான நிலைமையாகும் . இக்காலப் பகுதியில் பெரும்பாலான பிள்ளைகள் மழலைப் பூங்காவிற்கு செல்கின்றனர். இப்படி நிலையில் பிள்ளைகள் அதிக உந்துதலுடனும் முன்னெடுத்துச் செல்லும் மனநிலையையும், தனது அநுபவத்தினூடாக பெறுவர். அவர்கள் ஒரு செயற்பாட்டினை திட்டமிட்டு அதன் மீது தாக்கத்தை ஏற்படுத்துவர். அத்துடன் இவர்கள் சுதந்திரமான செயற்பாடுகளிலிருந்து விலகி மகிழ்வைத் தரும் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்குவர். இவ்வாறான நிலை பிள்ளைகளிடத்தில் மனமகிழ்வான செயற்பாடுகளில் ஈடுபட முடியாத நிலையிருப்பின் அவனிடத்தில் குற்ற உணர்வைத் தோற்றுவிக்கும். உதாரணமாக தான் தனியாக தாயின் அன்பைப் பெறவேண்டும் என விரும்பும் போது ஏனைய சகோதரர்கள் இருக்கக் கூடாது எனவும் எண்ணுவர்.

படிநிலை - 4 (6 வயது முதல் 12 வயது வரை) ஊக்கச் செயல் எதிர் தாழ்வு நிலை.

இது பிள்ளைகளுக்கு ஆரம்ப பள்ளிப் பருவமாகும். இக் காலப்பகுதியானது சிறுவர்களை பாலியல் ரீதியாக பக்குவமடையச் செய்யும் காலப்பகுதியும் இக் காலப்பகுதியே. சிறுவரை எதிர்காலத்தில் ஒரு தொழிலாளியாகவோ, அல்லது உற்பத்தியாளனாகவோ தயாரிக்கும் ஒரு படிநிலைமையாகும். இக்காலப்பகுதியில் பிள்ளையின் வளர்ச்சியில் கூடிய பங்கினை ஆசிரியர் எடுத்துக்கொள்கின்றனர். இந்நிலையில் பிள்ளைகள் வகுப்பறையில் வாசிக்க அல்லது படிக்க கற்றுக்கொள்கின்றனர். ஆசிரியர்கள் பொருத்தமான நிலையில் அவர்களின் மட்டத்திற்கேற்ப புதிய சவால்களை ஏற்படுத்தி ஊக்கம் ஏற்றி வெற்றி பெற உதவ முடியும். ஆனால் சில பிள்ளைகள் ஊக்கத்தை இழப்பதனால் தாழ் நிலையை அடைந்து படி நிலை 3இற்கு மீள பயணிக்கும் நிலை உருவாகின்றது. எனவே ஆசிரியர்கள் பிள்ளைகளுக்கிடையே சவால்களை ஏற்படுத்தும் கற்றல் செயற்பாடுகள், ஊக்கம் அளிக்கச் செய்யாத நிலையில் சமநிலையை தெரிவு செய்யவேண்டியுள்ளது.

**சமூகக்கற்கை நோக்கு**

அல்பேட் பண்டுரா பிள்ளைகளின் சுயம் (SELF) ஆளுமை (Personality) தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு பல வேறுபட்ட முடிவுகளுக்கு வந்தார். நம்பிக்கை, நம்பிக்கையீனம்

சுதந்திரம், வெட்கம், சந்தேகம் என்பவை சரியாக வரையறை செய்யப்பட முடியாதவை என்றார். எனவே ஆசிரியர்களும் ஆற்றுப்படுத்துவோரும் ஒரு பிள்ளையின் நடத்தையை நோக்கி அவர்கள் கோட்பாடு கல்விப் பின்னணி என்பவற்றின் அடிப்படையில் வித்தியாசமான உளவியல் வியாக்கியானங்களை செய்கின்றனர். இவரின் கருத்துப்படி சிறுவர்கள் தமது சூழலில் உள்ளவற்றை பின்பற்றியே தமது ஆளுமைப் பண்பினை வளர்ப்பர் எனவும் இச்சூழல் பெரும்பாலும் குடும்பமாக அமையும் என்றார்.

இவர் சிறுவர்கள், விழுமியங்கள், மனப்பாங்குகள் போன்ற சமூக நடத்தைகள், அவர்கள் வாழும் சூழலான குடும்பம், ஆசிரியர்கள் என்பவற்றால் நிர்ணயிக்கப்படுகின்றது. பெற்றோர் நாம் நேரடியாக கற்பிக்க விரும்பாவிடினும் பிள்ளைகள் பெற்றோரின் நடத்தை மனப்பாங்கினை பின்பற்றும் நிலை காணப்படுகின்றது. பிள்ளைகளிடத்திலுள்ள பய நிலைமையை நோக்கம் சார் நடத்தை உருவாக்கம் மூலம் நீக்கலாம்.

**ஆக்கப்பாங்கான நோக்கு**

J.பிஜாஜேயின் ஆய்வுகள் அறிவுசார் ஆட்சியுடன் அதிக தொடர்புடையதாக இருப்பதும் அவர் சமூக அல்லது ஒழுக்க விருத்தி தொடர்பாகவும் ஆய்வுகளைச் செய்துள்ளனர். இவ்விருவகை விருத்திகளும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தது எனவும் பிள்ளையின் அறிவுசார் விருத்தியானது சமச்சீரான ஒழுக்க அல்லது சமூக விருத்தியிலிருந்து தொடரும் எனினும் சமூக ஒழுக்க விருத்தியானது அறிவு விருத்தியின்றி நடைபெறாது எனவும் கூறியுள்ளார்.

இவர்களின் கோட்பாட்டின் படி பிள்ளைகள் இருபடிநிலைகளுக்கு சமூக அல்லது ஒழுக்க விருத்தியைப் பெறுவர். பிள்ளைகளிடத்திலுள்ள பாலியல் முரண்பாடுகளிலும் புற அவாக்களிலும் சூழலுடன் இடைத்தாக்கமடைகின்றது.

**சமூக ஒழுக்க விருத்தி**

பிள்ளைகள் எவ்வாறு பொருத்தமான சமூக இடைவினைகளை விளங்கிக் கொண்டு வளர்ச்சியடைகின்றனர் என்பதை விளக்க எரிக்சனின் 8 படிநிலைகளும் வழிகாட்டுகின்றது.

**பெற்றோரின் பங்களிப்பு**

பிள்ளைகளின் சமூக ஒழுக்கம் சார் ஆளுமையை விருத்தி செய்வதற்கு பெற்றோர் முன்னிற்கும் போது அவர்களால் பிள்ளைகளை சரியான முறையில் அறிய முற்படவேண்டும்.

பிள்ளைகளின் ஆளுமை விருத்தியில் அக்கறை செலுத்தும் பெற்றோர் பல வழிகாட்டல்களை பெறவேண்டியவர்களாக உள்ளனர். ஒவ்வொரு பிள்ளைக்கும் மெய்யாகக் கூடிய எண்ணங்கள் அவரினுள்ளே உறைந்திருக்கும். பெற்றோர் பிள்ளைகளிடத்தில் உள்ள நட்பு, அன்பு, கருணை போன்ற பண்புகளை வளர்த்தெடுப்பதற்கு உதவியையும் பாதுகாப்பினையும் வழங்க வேண்டும்.

இவ்வாறு உதவுவதற்கு பெற்றோரும், மூத்தோரும் பொருத்தமான சூழலை ஏற்படுத்தி அவற்றைப் பிளளை அறிந்து தம்முன் மலரச் செய்ய முடியும். ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளை பூரண ஆளுமையுடையதாகவும் கெட்டிக்காரப் பண்புடையதாகவும் ஏற்படுத்தும் எண்ணத்துடன் உள்ளனர். எனவே பிள்ளை உடல், உள, அறிவு, ஒழுக்கம் என்பனவற்றை வளர்ப்பதற்கேற்ற சூழலைப் பெற்றோர் வழங்க வேண்டும். இவ்வாறான சூழலை உருவாக்குவதில் பெற்றோர் செய்ய வேண்டியவைகளையும், செய்யக்கூடாதவைகளையும் உளவியலாளர்கள் எடுத்துக்கூறியுள்ளனர். தேசிய கல்வியாளரான ஏ.எஸ்.மகரன்கோ

"சமூகத்தில் நல்ல குடும்பமும் கெட்ட குடும்பங்களும் உள்ளன. குடும்பத்தில் நிகழும் கற்பித்தல் செயற்பாடுகள் சரியான முறையில் இடம்பெறுகின்றது என எதிர்பார்க்க முடியாது. எனவே ஆசிரியரே குடும்பத்தில் கற்பித்தல் தொழிலை ஒழுங்கு செய்யவேண்டியவராகின்றார்" என்றார். எனவே ஆசிரியர் பெற்றோருக்கு உதவுதல் மூலம் சரியான முறையில் குடும்பநிலைகற்பித்தலை மேம்படுத்த முடியும். எனவே பெற்றோர் பின்வரும் பண்புகளை கருத்திற்கொண்டு ஆளுமைப் பண்பை விருத்தி செய்வதற்கு பிள்ளைகளின் உள்ளத்தை வலுவூட்டவும் எண்ணங்களை வெற்றியடையச் செய்யக்கூடியதாகவும் செய்ய முடியும்.

**1. வலுவூட்டல்**

பிள்ளையின் உடல், உள வலுவை விருத்தி செய்யும் பணி வீட்டிற்குரியது. உடல் வளர்ச்சி தேவையான உணவு, உழைப்பு ஓய்வு என்பவை சரியான முறையிலும் அளவிலும் பிள்ளைகள் பெறுவதற்கு பெற்றோர் பங்களிப்பு செய்வதன் மூலம் உதவ வேண்டும். பிள்ளையிடத்தில் சுயத்தை அறியவும், சுதந்திர நிலையை உணரவும் பெற்றோர் உதவ வேண்டும்.

**2. உணர்திறன்**

பிள்ளைகள் பொருட்கள் நிகழ்வுகள் தொடர்பாக விருப்பு, வெறுப்பு, சுவையின்மை, துக்கம், மகிழ்ச்சி என்பவற்றை சரியான முறையில் வெளிக்காட்ட முடியாத நிலையில் இருப்பார். இதனை பெற்றோர் உணர்ந்து முன்னோக்கி செல்வதற்கான உணர்வுகளுக்கு ஆதரவளித்தல் வேண்டும்.

பிள்ளைகள் போல சில பெற்றோருக்கும் சிந்தனை வேகம் கீழ் நிலையில் இருக்கலாம். அதனைப் பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துவது அவசியமானதாகும். தனது அன்பினை மறைக்காது புதைக்காது வெளிபபடுத்துவதன்மூலம் உண்மையான மானிடப் பண்பினை பிள்ளை அறிய முடியும். உணர்வு நிலை, நட்பு, அன்பு என்பன தொடர்பாக பிள்ளைகளுக்கு அடிக்கடி உணர்வூட்ட வேண்டும். தந்தை தாயின் அன்பும் சகபாடிகளின் நட்பும் பிள்ளை நலமாய் வாழ உதவுவதுடன் அவர்கள் செழிப்பாக மகிழ்வாக விருத்தியடைய ஏதுவாகும்.

**3. சமூகமாதல்**

மற்றவர்களுடன் நட்புடன் வாழவேண்டும் எனும் எண்ணத்தினை பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்த வேண்டும். தன்னோடு நெருக்கமாக ஊடாடுபவர்களிடமிருந்து பெறும் ஏற்றுக்கொள்ளல், வியத்தல் போன்றவை பிள்ளை எதிர்காலத்தில் சமூகப் பற்றுள்ள, மக்களால் நேசிக்கப்படுபவராக மாறுவதற்கு உதவும். நட்பின் பெறுமதியை பெற்றோர் உணர்ந்து அதனை பிள்ளைகள் அநுபவிக்க உதவ வேண்டும். பிள்ளைகள் பெற்றோரை அணுகவும் அவர்களிடம் நட்புக் கொண்டாடும் நிலையும் உண்டு என்பதைப் பெற்றோர் பிள்ளைக்கு உணர்த்த வேண்டும். குடும்ப அங்கத்தவர் உறவினர், அயலவர், நட்புக்குரியவர்கள் என உணர பெற்றோர் வழிகாட்ட வேண்டும்.

சில பெற்றோர் பிள்ளைகளுடன் சுமுகமாதல், நட்பு என்ற நிலையில் செயற்படாது தம்மை வேலையில் ஈடுபடுத்திக்கொள்வதனால் அவர்களின் சுமுகமாகும் நிலை குறைகின்றது.

விளையாட்டு, குழுச்செயற்பாடு என்பவை மகிழ்ச்சி நிலையை ஏற்படுத்துகின்றது. இது எதிர்காலத்தில் ஆட்களுக்கிடையேயான தொடர்பினை வளர்க்கிறது. பிள்ளை

முதியவர்கள் தொடக்கம் தம்மிலும் வயது குறைந்தவர்களுடனும் தொடர்பு கொள்ளும் போது ஒவ்வொருவருடனும் பழகும் நிலையை கற்கின்றது.

விருந்தினர், உறவினர், பிள்ளையின் நண்பர், ஆகியோருக்கு திறந்துள்ள வீட்டுக் கதவுகள், மகிழ்வான வரவேற்பு என்பவை பிள்ளைகள் சமூகப்படுத்துவதில் உள்ள ஆர்வத்தைக் கூட்டும்.

**4. திறன்கள்**

பிள்ளைகளின் சமூகம் சார் திறன் வளர்ச்சியை அடைவதற்கு பெற்றோரின் திறன் வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். சமூகத் திறன்களை தமது வாழ்வில் இணைத்து வளர்த்த பெற்றோர் அத்திறன்களை பிள்ளை வளர்க்கும்போது பயன்படுத்தலாம். தமது அறிவையும், திறன்களையும், பிள்ளைகளுடன் பகிர்வதும் புதிய முறைகள் என்பனவற்றை பிள்ளையிடமிருந்தும் பெற்றோர் கற்கலாம்.

**5. தூண்டல்**

பிள்ளையை ஆர்வமான தொழிற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலம் தேவையான வழிகாட்டல், உதவுவதன் மூலம் அவற்றை அவர்களிடத்தில் உறுதியாக்க முடியும். பிள்ளைகளிடமிருந்து பல மறைந்துள்ள திறன்கள் இருக்கும். இவற்றை சரியான நடவடிக்கைகள் மூலம் வெளிக்கொணர முடியும். பிள்ளையின் வயதிற்கு பொருத்தமான விளையாட்டுப் பொருட்கள், புத்தகங்கள், இசைக்கருவிகள், சித்திரங்கள், உருவகங்களை அவரது சூழலில் வைக்க வேண்டும். சரியான நிலை பிள்ளை அவற்றுடன் தாமாகவே செயற்படத் தொடங்கும். அச்செயற்பாடுகளில் ஈடுபடும்போது பெற்றோர் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தும்போது பிள்ளைக்கு அத்திறன்கள் வளரும். இவ்வாறு தூண்டுதல் சூழல், உலகு தொடர்பாக பிள்ளையிடத்தே புதிது காணும் எண்ணம் உருவாகும்.

**6. அறிவுடையவராதல்**

இவ் உலகத்தில் நல்ல வகையில் உறுதியாகப் பாதம் பதிக்கும் ஆற்றலைப் பெற பிள்ளைக்கு பெற்றோர் உதவ வேண்டும். பிள்ளை புதிய ஆக்கபூர்வமானதும், கருத்துடையதுமான வெளிப்பாடுகளைச் செய்ய சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும்.

எந்தவொரு செயலைச் செய்யும் போதும் அதில் கருத்துடையது என்ற நிலையைப் பிள்ளை அறியச் செய்ய வேண்டும். பெற்றோர் மேற்கொள்ளும் ஒறுத்த சீவியம் பிள்ளையை பொருளாதாரக் கஷ்ட நிலைகளிலும் விரக்தி அடையாது வாழ முடிகிறது.

**7. காரிய சித்தி**

தமது எதிர்காலத்தினை நோக்கி தமது வாழ்க்கை மகிழ்வுடன் கழிக்கும் அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களில் தாம் பிரகாசிப்பதற்கும் முன்னோக்கிச் செல்வதற்கும் உதவ முடியாத தொழில் பெறும்போது தாம் முன்னேறக்கூடிய பாதையில் ஒருவன் பயணம் செய்வான். எப்பொழுதும் காரியசித்தியுடைய பெற்றோருடன் வாழும் பிள்ளை பெற்றோரைப் போன்று வெற்றியடையும்.

**ஆளுமையைப் பாதிக்கக்கூடிய குடும்பத்தின் பண்புகள்**

பிள்ளையின் ஆளுமையைச் சிதைக்கக்கூடிய குடும்பச் சூழல் பல இடங்களில் காணப்படுகின்றது. இக்குறைபாடுகளை இழிவளவாக்க முயற்சிக்க வேண்டும்.

**1. சுயநலம்**

பெற்றோர் சிலர் தமது தேவைகளையும், ஆசைகளையும் பிள்ளையின் மூலம் பூர்த்திசெய்ய வேண்டும் எனும் சுயநல நோக்கோடு செயற்படுகின்றனர். அன்பு, விளையாட்டு, நட்பு, அதிகாரம், கட்டுப்பாடு, போன்ற புலங்களில் சுயநலநிலை வளரும். பிள்ளையின் திறன்கள் மூலம் தான் விரும்பும், பெற்றோர் கற்றல், விளையாட்டுக்களில் தாம் விரும்பிய வகையில் செயற்பட அழுத்தம் கொடுக்கின்றனர். பிள்ளையின் வளர்ச்சி, முன்னேற்றம் அதன் விருப்பிற்கேற்ப தெரிவு செய்யவிடாதவர்களும் இப்பிரிவில் அடங்குவர். உதாரணமாக பிள்ளையின் கற்றலுக்கு பாதகநிலையில் தொலைக்காட்சி பார்த்தல், உரத்த ஒலியில் வானொலியில் பாட்டுக் கேட்டல், தாம் விரும்பும் இடங்களுக்கு சுற்றுலாச் செல்லல்.

**2. கருத்திலெடுக்காமை**

தனது பிள்ளையை இம்சித்தல், உடல், உள அழுத்தத்தை பிரயோகிக்கும் குடும்பங்களும் உள்ளன. பிள்ளையில் கருணை உள்ளத்தினகீழ் அழுத்தி தமது எண்ணத்தை திணிப்பார். இவ்வாறானவர்கள் மற்றவர்கள் மீதும், தன்மீதும் பகைமை பாராட்டுவார்கள். சிலர் கோபம், பொறாமை, என்பவற்றை பிள்ளைகள் மூலம் வெளிப்படுத்துவர்.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

**மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை**
**தானந் தவமுயற்சி தாளாண்மை – தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்**
**பசிவந் திடப்பறந்து போம்.**



# மதிப்பீடு என்பது வரிசைப்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொள்ளும் அளவீடு



# இலட்சிய ஆரம்ப பாடசாலை ஒரு கனவு

திருமதி கோகிலா மகேந்திரன

புதிய கல்விச் சீர்திருத்தம் எமது நாட்டில் அறிமுகமாகி ஏறத்தாழ ஐந்து வருடங்கள் நிறைவடைந்து விட்டன. மகிழ்ச்சியான கற்றல் தொடர்பாக ஏறத்தாழ எல்லா ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும் பயிற்றப்பட்டு விட்டார்கள். என்றாலும் இன்னும் இலட்சிய ஆரம்ப பாடசாலை என்பது எமது பிரதேசங்களில் ஒரு கனவாகவே உள்ளது. அதனால்தான் அந்தக் கனவைப் பற்றி இன்னும் பேச வேண்டியே உள்ளது.

இவ்வருடம் ஜனவரி மாதத்தில் ஒரு தந்தையார் என்னிடம் வந்தார். வங்கி ஒன்றில் உயர் பதவியில வகிக்கின்றார். ''எனது பிள்ளை தொடர்பாக உங்களிடம் ஒரு ஆலோசனை கேட்க வேண்டும்.'' என்றார். ஊளவளத் துணையாளராகிய நாங்கள் ஆலோசனை சொல்ல விரும்புவதில்லை. நீங்கள் பிள்ளையையும் அழைத்து வரவில்லை. என்ன பிரச்சனை? என்று கேட்டேன். ''இல்லை ஒரு சின்னப் பிரச்சனைதான். எனது மகள் இரவில் படுக்கை நனைக்கிறாள். சில வேளைகளில் பாடசாலைகளிலும் வகுப்பில் சலம் கழித்து விடுகின்றாள். இது ஓர் உளம் சார் பிரச்சினையாக இருக்கலாம் என்று சிலர் சொல்லுகிறார்கள். அவளுக்கு ஒரு குறையும் வைக்கவில்லை. நாங்கள் அவளுக்குத் தேவையானதெல்லம் கொடுத்திருக்கிறோம்'' என்றார்.

''இரவில் படுக்கையை நனைப்பதை அவள் பிறந்த காலத்திலிருந்து இன்னும் நிறுத்தவில்லையா? அல்லது 2,3 வயதில் நிறுத்தி இப்போது மீண்டும் தொடங்கியுள்ளாரா?'' என்று கேட்டேன்.

''இரண்டு வயதில் எல்லாம் கட்டுப்பாட்டில் வந்து சாதாரணமாகவே இருந்தாள். இப்போது இரண்டொரு கிழமைதான் இப்படி...'' என்றார்.

''உங்கள் பிள்ளை எந்த வகுப்பில் படிக்கிறா?'' ''முதலாம் வகுப்பு. இப்போது தான் பாடசாலையில் சேர்ந்திருக்கிறா. நல்ல பாடசாலை. நிறையப்பேர் ஸ்கொலசிப் பாஸ் பண்ணுகிற ஒரு பாடசாலை'' என்று கூறிப் பாடசாலைப் பெயரையும் சொன்னார்.

பிள்ளையின் பிரச்சினை இப்போது பிள்ளை வராமலே எனக்கு ஓரளவு தெளிவாகி விட்டது.

''பாடசாலைக்குப் போகத் தொடங்கிய பிறகுதானே இப்பிரச்சினை ஆரம்பமாகி உள்ளது''?

''ஆம்'' என்றார்.

இன்னும் சில கேள்விகளின் பின்னர் அந்தப் பாடசாலையில் நிலவும் மிக இறுக்கமான சட்டதிட்டங்களும் கட்டுப்பாடுகளும் தண்டனை வகைகளுமே பிள்ளையை இந்த நிலைக்கு தள்ளியுள்ளன என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

புலமைப் பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டும் பார்க்கும் போது அது ''நல்ல'' பாடசாலையாக இருக்கலாம். ஆனால் எனது பிள்ளையை நான் அப்பாடசாலைக்கு அனுப்ப விரும்ப மாட்டேன்.

ஆசிரியர் இலக்கணம் பற்றிப் பேசும் பழந்தமிழ் நூல் கூட, ''மலர் நிகர் மாட்சி'' என்கிறது. ஆசிரியர் பூவைப்போல இருக்க வேண்டும். மென்மையாக, அழகாக, மணம் வீசுபவராக பிள்ளைகளைத் தன்னை நோக்கி இழுக்கத்தக்கதாக! அப்போது தான் பாடசாலைப்

பிள்ளையின் ஆளுமையை உயரக் கட்டி எழுப்பக்கூடிய வளம் மிக்க சூழலாகும். (**Enriching Environment**).

பிள்ளை ஒவ்வொன்றும் தனித்துவமானது (Unique). அவர்களைத் தனித்தனி புரிந்து கொண்டு உதவி செய்ய ஒரு உன்னத ஆளுமை தேவை. அந்த ஆளுமை ஆரம்பக் கல்வி ஆசிரியர் அனைவரிடமும் அமைய வேண்டும்.

காலையில் பிள்ளையைக் கண்டவுடன் வாழ்த்துத் தெரிவித்துக்கொள்ள வேண்டும். அவர்கள் சொல்லுகின்ற ஒவ்வொரு விடயத்தையும் ஆசிரியர் கூர்ந்து கேட்க வேண்டும். பிள்ளை கதைக்கும் போது அதற்குப் பொருத்தமான ஒத்துணர்வுப் பதில்களை வழங்கும் ஆற்றல் ஆசிரியர்களுக்கு அமைய வேண்டும்.

மகிழ்ச்சி என்பது தொற்றக்கூடியது. ஆகவே ஆசிரியர் வகுப்பறையில் மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும். பிள்ளைகள் எழுதவும் வாசிக்கவும் மட்டுமன்றிப் பாடவும், ஆடவும், நடிக்கவும், வேலை செய்யவும், விளையாடவும் வகுப்பு நேரத்திலேயே சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். அவர்கள் இடையிடையேயாயினும் வகுப்புக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட வேண்டும். சிறுவர் பூங்காக்களில் அவர்கள் விளையாடுவதினூடாக கற்க வேண்டும். இயற்கையை இரசிப்பதன் மூலமும் பாடல்களைப் படிக்கப் பழக வேண்டும். அவர்களது ஆக்கங்கள், வகுப்பறையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் பிள்ளையின் சுய கணிப்பு உயர்த்தப்படுகின்றது.

பிள்ளை ஒவ்வொன்றிலும் அன்பு செலுத்துவதோடு பிள்ளையின் மனதிலே நம்பிக்கை ஏற்படும்படியும் ஆசிரியர் நடந்துகொள்ள வேண்டும்.

ஆசிரியரிடத்திலே ஒரு வாக்கு நேர்மை காணப்பட வேண்டும். அதே நேரத்தில் அவர் உறுதியான வெளிப்பாடுகளைக் காண்பிக்க வேண்டும்.

பிள்ளை சுதந்திரமாகவும், சுயாதீனமாகவும் நடமாடக்கூடிய சூழல் பாடசாலையில் அமைதல் வேண்டும். பாடசாலையின் ஒழுக்க நடைமுறைகளுக்குப் பயந்து நடுங்கிப் பின்பற்றும் நிலையன்றி விருப்பத்துடன் ஏற்று நடக்கும் சூழல் அமைய வேண்டும்.

பிள்ளை சொன்னதை மட்டும் செய்யும் கிளிப்பிள்ளையாக இருக்க வேண்டும் என்று ஆசிரியர் எதிர்பார்த்தால் அது ஒரு போதும் ஒரு சிறந்த பாடசாலையாக அமைய முடியாது. பிள்ளையின் சுய சிந்தனைக்கும் சுய தேடலுக்குமான பல கதவுகள் திறக்கப்பட்டிருத்தல் வேண்டும். அங்கு நல்ல நூலகம் அமைய வேண்டும். அவர்கள் நிறைய வாசிக்க வேண்டும். கற்றலை ஊக்குவிக்கும் படக்காட்சிகள் இடம்பெற வேண்டும். கணனியோடும் அவர்கள் விளையாட வேண்டும்.

"ரோம சாம்ராஜ்ஜியம் ஒரு தனிநாளில் கட்டப்படவில்லை" என ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. பாடசாலையின் ஆரம்ப வகுப்புக்களிலேயே ஒரு பிள்ளையின் 'ஆளுமை' என்ற பெரிய சாம்ராஜ்ஜியம் மெல்லக் கட்டியெழுப்பப்படுகின்றது.

உலகம் முழுவதிலும் கல்விபற்றிய பிரச்சினைகள் இருக்கின்றன தான். ஆயினும் உலகில் பள்ளி செல்லாதிருக்கும் 130 மில்லியன் சிறுவர்களில் பெரும்பாலானவர்கள் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்களே. அதிலும் உள்நாட்டுப் போருக்கு இலக்காகின்ற வளர்முக நாடுகளில் கல்வி நிலை சரிந்து செல்வது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. இதனை மனதில் வைத்துக்கொண்டு தான் இலட்சிய ஆரம்ப பாடசாலைகள் வடிவமைக்கப்பட வேண்டும். 89.6% எழுத்தறிவைக் கொண்ட எமது நாட்டில் 14இலட்சம் மாணவர்கள் பாடசாலை செல்லாதுள்ளனர். 4% உக்கும் அதிகமான பிள்ளைகள் 5ஆம் தரத்துடன் இடைவிலகுகின்றனர். இடப்பெயர்வு, முகாம் வாழ்வு, இழப்பு போன்ற துன்பங்கள் நாளாந்தக் கருமங்களாக உள்ள நிலையில்-மன வழுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்களைப் பார்க்காத பிள்ளைகளே இல்லை என்ற நிலையில் - 20% மான பிள்ளைகள் நெருக்கீட்டுக்குப்

பிற்பட்ட மனவழு எனும் உளவியல் ஆரோக்கியக் குறைவு நிலைக்கு ஆளாகியுள்ளதாக "VIVO" எனும் ஜேர்மனிய அரசசார்பற்ற நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கின்றது. மேலும் 40% மான பிள்ளைகள் இரும்புச் சத்துக் குறைபாட்டினால் ஏற்படும் குருதிச் சோகையாலும், இன்னுமொரு 20% பிள்ளைகள் புரதக் குறைபாட்டினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று வேறு உதிரி ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அடிப்படை உடற் றொழிலியல் தேவைகள் கூட பூர்த்தியாகாத நிலையில் பல மாணவர்கள் பாடசாலைக்கு வருவதை இத்தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஆகவே பாடசாலைகளில் உடல், உள, சமூக, ஆன்மீக விருத்திக்குரிய செயற்பாடுகள் இடம்பெறவேண்டும்.

கிராமங்களில் பௌதிக வளம், பொருளாதார வளம், மனித வளம் ஆகியவற்றைப் பாடசாலைகள் பயன்படுத்த வேண்டும். கிராமத்திலுள்ள அறிஞர்கள், சான்றோர்கள் அடிக்கடி பாடசாலைக்கு அழைக்கப்பட்டு பிள்ளைகள் மத்தியில் பேசவும் பிள்ளைகளோடு பழகவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்களை கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளின் தனித்துவ மட்டங்களிலும் நாம் உட்புகுத்திக் கொள்ள வேண்டும். அறவழிப் பயிற்சித் திறன்கள், தன்னுதவித் திறன்கள், சமூகத் திறன்கள் ஆகியனவும் கற்பிக்கப்பட வேண்டும்.

விழுமியக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது கற்பிக்கும் முறைகளிலும் மாற்றம் நிகழும். விரிவுரை முறைக்குப் பதிலாகக் கலைகள் மூலமும் கற்பித்தல், சேவைச் செயற்பாடுகளை அறிமுகஞ் செய்தல், மனப்பாங்கு பரீட்சைகள் வைத்தல், நேரான நடத்தை மாற்றங்களுக்குப் புள்ளி வழங்கல் ஆகிய முறைகள் பின்பற்றப்படல் வேண்டும். உலகத்தோடு ஒட்டி வாழவும், நல்ல முறையில் வாழ்வை அமைத்துக்கொள்ளவும், அதற்குவேண்டிய ஆற்றல்களை தரவும் கல்வி உதவ வேண்டும் என்றால் கோள் மயமாக்கல் அடிப்படையில் நாடுகளிடையேயான கல்விசார் பரிமாற்றல்கள் எமது பிரதேசத்தில் அதிகரிக்கப்படல் வேண்டும்.

பல நாடுகளின் கல்வி முறையில் வானொலி நிகழ்ச்சிகளும், சஞ்சிகைகளும், தொலைக்காட்சிகளும், வலையமைப்புக்களும் நன்கு நிலைபெற்று விட்டன. எமது நாட்டிலும் பல பிள்ளைகள் பள்ளியில் கழிக்கும் நேரத்தைவிட தொலைக்காட்சி பார்ப்பதில் செலவிடும் நேரம் அதிகம் எனலாம். ஆகவே தொலைக்காட்சி நிலையங்கள் வன்முறை நிரம்பிய படங்களைக் காட்டி குழந்தைகளில் மன வழுவை ஏற்படுத்துவதை விடுத்து கல்விசார் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் நிலையும், பாடசாலையில் மாணவர் அதனை விரும்பிப் பார்க்கும் மனப்பாங்கும் தோற்றம்பெற வேண்டும்.

மாணவரின் உரிமைகள் பாடசாலையில் மதிக்கப்படல் வேண்டும். அவர்கள் எவ்வகையிலும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகப்படக் கூடாது. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் குழந்தைகளின் உள ஆரோக்கியத்தைக் கவனிப்பதற்காக நன்கு பயிற்றுவிக்கப்பட்ட உளவளத் துணை ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

ஆரம்ப பாடசாலைகளின் ஆங்கிலக் கல்விக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்க வேண்டும். தரமான ஆங்கில ஆசிரியர்கள் எங்கிருந்தாலும் பெறப்பட்டு எமது பிரதேசப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட வேண்டும்.

பாடசாலைகள் அழகாகவும், கலையுணர்வுடனும் காட்சி தர வேண்டும். பூந்தோட்டத்தில் பல வர்ணப் பூக்கள் நிறைந்திருக்க வேண்டும். அழகான படங்கள் பாடசாலைச் சுவர்களில் தொங்க வேண்டும். பாடசாலைக்கு உள்ளே வருதல் பிள்ளைக்கு மகிழ்வு தரும் விடயமாக வேண்டும்.

இவை அனைத்தையும் நாம் செய்ய வேண்டுமாயின் கல்வி என்ற சக்திவாய்ந்த ஆயுதத்தை உலகையே மாற்றுவதற்கு பயன்படுத்தலாம்.

# மாணவர்களின் கற்றல் செயற்பாட்டில் உளவியலின் முக்கியத்துவம்

**திருமதி விநோதா விஜயசுந்தரம்**
யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

உளவியல் பற்றிய எண்ணக்கரு இன்று உலகெங்கும் பேணப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனாலேயே மருத்துவ விஞ்ஞானிகள் பலர் உளவியல் பற்றிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு உளம் சார்ந்த கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இதன் வெளிப்பாடாகவே சமூகநல அமைப்புக்கள் பல மாணவர்களின் உளவியல் தாக்கங்களை இனங்கண்டும் அவற்றை தீர்க்கும் நடவடிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

ஆனால் இவ் உளவியல் பற்றிய கருத்துக்களை ஏற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இதற்கு பல காரணங்கள் இருக்கின்றபோதும் உளம் சார்ந்த விடயங்கள் கட்புலனாலன்றி அது உணர்வு பூர்வமாக உணரப்பட வேண்டியதாக இருக்கின்றது. அத்துடன் உளம் பற்றிய பிரச்சனைகளுக்கான தீர்வு உடனடியாக காண முடியாதிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். இதனாலேயே உளம் பற்றிய சிந்தனைகளை ஏற்றுக் கொள்வோரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. அத்துடன் இதனை ஏற்றுக் கொள்வோரின் அறிவியற் பாங்கும் இங்கு முக்கியத்தும் பெறுகின்றது. அதாவது கற்றவர் மத்தியில் உளவியல் பற்றிய சிந்தனைகளை முன்வைப்பதற்கும் பாமர மக்கள் மத்தியில் இதனை வெளிப்படுத்துவதற்கும் இடையே நிறைந்த வேறுபாடுகள் காணப்படுகின்றது.

எது எவ்வாறு இருப்பினும் உளவியல் சிந்தனைகளை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டு எதிர்காலத்தில் ஆளுமை உள்ள ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் முன்வரவேண்டும்.

"ஒருவர் உடல் உளம் சமூக ஆத்மீக ரீதியில் நன்னிலையில் இருப்பதே சுகம்" என உலக சுகாதார ஸ்தாபனம் சுகத்துக்கு வரைவிலக்கணம் வகுத்துள்ளனர். எனவே நாம் உடல் சுகத்திற்கு வழங்குகின்ற அதே முக்கியத்துவத்தை உடல் சுகத்திற்கும் வழங்க வேண்டியுள்ளது.

மாணவர்களைப் பொறுத்தவரை இன்று அவர்களுக்கு இருக்கக்கூடிய உளவியல் பிரச்சனைகளுக்கு அவர்களைச் சுற்றியுள்ள சூழலே முக்கிய காரணியாக உள்ளது. சூழல் எனும் போது மாணவர்கள் அவர்களது குடும்பத்தவருடனேயே நேரத்தைச் செலவிடுகின்றனர். இதனால் குடும்பப் பின்னணி மாணவனின் உளவியல் தாக்கத்துக்கு கூடிய பங்கை வகிக்கின்றது. அதாவது நல்ல ஆரோக்கியமான குடும்பத்தில் வளரும் பிள்ளையின் நடத்தைக்கும், ஆரோக்கியமற்ற வறிய குடும்பத்தின் வளரும் பிள்ளையின் நடத்தைக்கும் இடையே நிறைய வேறுபாடுகளைக் காணலாம்.

அதாவது குடிபோதையில் வந்து துன்புறுத்தும் ஒரு குடும்பத்தில் இருந்து வந்த ஒரு பிள்ளை கல்வியில் கவனம் செலுத்துவது என்பது மிகவும் கடினம். இவ்வாறான பிள்ளை நாளடைவில் நடத்தை தவறான பிள்ளையாக மாறுகின்றது.

இதைவிட பிள்ளையின் சூழல் எனும்போது குடும்பத்தை அடுத்து முக்கியத்துவம் பெறுவது பாடசாலையாகும். ''தாரமும் குருவும் தலைவிதிப்படி'' என்பது போல் பாடசாலை ஒருவருக்கு ஏற்ற வித்தில் அமைந்து நல்ல ஆசிரியர்களும் அமையுமானால் அவரின் கல்வி சிறந்த முறையில் அமையும். மாறாக பாடசாலைச் சூழல் ஒருவருக்கு பொருத்தமற்றதாக அமையுமானால் அவனால் கல்வியில் நாட்டம் செலுத்த முடியாமல் வேறு நடத்தைகளில் நாட்டம் செலுத்துகின்றான்.

இவைதவிர எமது நாட்டில் பிள்ளைகளின் உளவியல் தாக்கத்திற்கு முக்கிய காரணமாக அமைவது உள்நாட்டு யுத்தமாகும். இவ் யுத்தத்தின் காரணமாக மக்கள் இடம்பெயர்வு, அகதி வாழ்க்கை, வறுமை, உடமைகள், உயிர்கள் இழப்பு என பல்வேறு இன்னல்களை அனுபவிக்கின்றார்கள். இவ்வாறான நிலமைகள் வளர்ந்தவர்களுக்கு ஏற்படும் உளத்தாக்கங்களைவிட சிறுவர்களே பெருமளவு பாதிப்படைகின்றார்கள்.

எனவே இவ்வாறு பல்வெறு வகையில் உளத்தாக்கமடையும் மாணவர்களை பெற்றோர்கள் ஆசிரியர்களாகிய நாம் அவர்களின் உளநிலமையை அறிந்து அதற்கேற்ப அவர்களை ஊக்கப்படுத்தவேண்டியது எமது தலையாய கடமையாகும். இதனைத் தவிர்ப்பதற்கு இவ்வாறான நெருக்கீட்டிற்குட்பட்ட பிள்ளையை நாம் இனங்காணல் அவசியமாகும். அந்த வகையில் நெருக்கீட்டிற்குட்பட்ட பிள்ளைகள் பின்வரும் நடத்தைகளை வெளிக்காட்டுவர்:

அஞ்சி ஒதுங்குதல், வன்முறை ஈடுபாடு, கீழ்ப்படியாமை, பொய் பேசுதல், தவறான நடத்தை, திக்குவாய், கற்றல் இடர்பாடு, ஞாபகக் குறைவு, நித்திரைக்குழப்பம்
இம்மாணவர்கள் இவ்வாறான நடத்தைகளை வெளிக்காட்டுவதோடு பின்வரும் முறைப்பாடகளையும் உடையவர்களாக காணப்படுவர். மயக்கம், தலைச்சுற்று, வாந்தி எடுத்தல், வயிற்றுவலி, களைப்பு, உழைவு.

எனவே பெற்றோர்கள் ஆசிரியர்களாகிய நாம் இவ்வாறான வெளிப்பாடுகளை உண்மையில் உடல் சார்ந்த பிரச்சினைகளா, உளம் சார்ந்தபிரச்சினைகளா என இனங்காணல் அவசியமாகும்.

இவ்வாறான மாணவர்களை மேலும் இந்நிலைக்கு ஆளாகாமல் அவர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகப் படுத்துவதன் மூலம் அவர்களை இவ்வாறான தாக்கத்திலிருந்து விடுவிக்கலாம். அத்துடன் இவர்களுக்கு பொறுப்புக்களை வழங்குதல், மற்றவர்களுக்கு முதன்மைப்படுத்துதல், அக்கறையாக அன்புகாட்டுதல் போன்றவற்றின் மூலமும் இவர்களை ஊக்கப்படுத்தலாம்.



# Importance of Educational Psychology for teachers

**Mrs. M.Uthayakumar**
*J/Jaffna Hindu Ladies'Primary School*

Educational psychology is an important branch of applied psychology. In this branch the laws and principles learned in general psychology are applied to all manner of problems in the education and upbringing of children.

Psychology helps the teacher to study the nature of the child. The primary child especially gains more prominence in the task of teaching, and the teacher tended to be more concerned with mental and social development of the child. In learning about children the most important guidelines are given by psychology. When studying about children the teacher should be conversant with the different areas and theories that come under psychology. If the teacher has studied psychology well he would be always proficient in applying them in different contexts in the classroom.

Different stages and aspects of child development, maturity, individual differences in children, behavioural patterns, cognitive and emotional behaviours, theories of motivation, theories of learning, perception and sensation are some of many aspects that a good teacher should be thorough with.

Educational psychology deals mainly with the changes in behaviour which takes place in children in the school setting. When handling children in the class room the teacher must make use of some knowledge of psychology.

Motivation is the very heart of the learning process. Teachers should be aware of the importance of motivation in class room learning of pupils and use a variety of methods such as grades, prizes, praise, blame, competition as devices for encouraging pupils to learn. Different theories have been put forward to explain the motivation of behaviour. Therefore a teacher cannot overlook the value of Educational psychology in the classroom teaching.

To be a teacher one has to be a successful psychologist. It helps him/her in solving various problems pertaining to the curriculum. In the preparation of teaching learning materials the authors are guided by psychology.

In the process of Education a teacher comes across children with special needs, they are slow learners, gifted, maladjusted and handicapped. All of them should not be treated in the same manner; the knowledge of educational psychology helps the teacher to cater to individual differences of children.

According to Nancy cutty "An important part of every teacher's work is the systematic study of children both as individuals and groups".

A careful observation of the children's behaviour will reveal a variety of character traits. Their interests, needs, abilities, aptitudes and attitudes will vary. A teacher should study the habavioural patterns of children, how they think and feel their attitudes towards learning their hopes and ambitions. When she identifies their problems teaching learning process could become a pleasant experience and necessary remedial measures which she could adopt will put her on the right path.

Therefore we can conclude that knowledge of educational psychology is the stepping stone of a teacher to his profession.

# ஆரம்பக் கல்வியில் விழுமியக் கல்வியின் அவசியம்

**திருமதி விஜயலட்சுமி தேவகுமாரன்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

ஒரு நாட்டினுடைய வளமான எதிர்காலம் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியிலேயே தங்கியுள்ளது. கல்வியானது அறிவுத் தேடலை மட்டும் மையமாக கொள்ளாது சிறந்த விழுமியங்களை குழந்தைகளின் மத்தியிலே வளர்ப்பதாக அமைய வேண்டும். இன்றைய கல்வி அமைப்பிலே மனித விழுமியங்கள் பற்றிய சிந்தனைகள் பல்வேறு மட்டத்திலும் பல அறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று உலக நாடுகளிலே கல்விக் கொள்கையை ஆராய்கின்றபோது பல நாடுகளிலே இந்த விழுமியக் கல்வியின் தேவை உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

விழுமியம் பற்றிய சிந்தனைகளை மாணவர்களுக்கு குழந்தைப் பருவத்திலிருந்து ஊட்டுதல் சிறப்பான விடயமாகும். பாடசாலைகளினூடாகத்தான் விழுமியங்களைப் புகட்டுதல் வேண்டும் என்ற சிந்தனையிலிருந்து விலகி அன்றாட வாழ்க்கைச் சம்பவங்களுடன் தொடர்புபடுத்தி விழுமியங்களாக கற்பிக்கலாம். குழந்தைகளிடத்து தூய சிந்தனை, தூய செயல், தூய சொற்கள் போன்றவைகளை ஏற்படுத்த வேண்டும். இவற்றினுள்ளே எல்லா விழுமியங்களும் பொதுவாக அடங்கிவிடுகின்றன. மனித வாழ்வில் சிறப்பிற்கும், உயர்ச்சிக்கும், உறுதுணையாக அமையும் மனித விழுமியங்கள் பற்றிய அறிவும் விளக்கமும் குழந்தைப் பருவத்திலிருந்து அவர்களுக்கு ஊட்டும் வகையில் கலைத்திட்டம் அமைய வேண்டும்.

இராமகிருஷ்ணபரமஹம்சர், கௌதம புத்தர், இயேசுபிரான், நபிகள் நாயகம், காந்தியடிகள், பாரதியார், விவேகானந்தர், ஔவையார் போன்றவர்களால் போதிக்கப்பட்ட விழுமிய கருத்துக்களை அவர்களுக்கு விளக்கும் வகையிலே கணிதம் மூலமோ பாட்டுக்கள், நாடகங்கள் மூலமோ போதிக்கலாம். அன்பு என்ற உயர் விழுமியங்கள் பற்றி அவர்கள் அறியும் வகையில் ஆசிரியர் செயற்பாடு அமைய வேண்டும். குழந்தைகளிடத்து அளவற்ற அன்புடையவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும். ஆசிரியரைப் பின்பற்றி மாணவர், வழிநடப்பவர் ஆதலால் ஆசிரியர்கள் உதாரண புருஷர்களாக விளங்க வேண்டும்.

மனிதன் ஒருவன் பெறுமதி மிக்கவனாக வாழ்வதற்கு அவனிடம் உயர்ந்த பண்புகள் இருப்பதும் ஒரு காரணமாகின்றது. ஆகவே சிறுவயதிலிருந்து சிறந்த பழக்க வழக்கங்களை போதிப்பதற்கு இத்தகைய ஆரம்ப பாடசாலைகள் பெரிதும் உதவுகின்றன. இதனை அடியொற்றி மனித வாழ்க்கைக்கு உறுதுணையாக அமைவது தூய நற் கல்வியே என்று திருமூலர் எடுத்துக் கூறியுள்ளார். ஆகவே ஆரம்பக் கல்வி சிறப்பாக அமைகின்றபோது பல விடயங்கள் குழந்தைகள் மனதில் பசுமரத்தாணிபோல இலகுவில் பதிந்து விடுகின்றது. மாணவர் மத்தியிலே காணப்படும் அமைதியின்மை ஒழுக்கக் குறைபாடு போன்றவைகள் சிறந்த கல்வியை போதிப்பதன் மூலம் குறைக்கப்பட்டு பல நற்குணங்கள் வளர வாய்ப்பு ஏற்படுகின்றது. அவ் வகையில் விழுமியங்கள் பற்றிய அறிவு, மனித மேம்பாட்டுக்கல்வி போன்றன அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.

"இன்றைய சிறுவர்களே எதிர்காலத்தின் சிற்பிகள்" என்ற நிலையில் சிறந்த மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பவற்றை இளமைப் பருவம் தொட்டே வளர்ப்பது ஆசிரியர்களின் உயர்ந்த கடமையாகும். சிறந்த கல்வித்திட்டம் ஒன்று நாட்டில் அமுல்படுத்தப்பட்டால் நல் ஒழுக்கமுள்ள இளைஞர்கள் எதிர்காலத்தில் உருவாகுவார்கள். ஆகவே சிறு வயதில் இருந்து சிறந்த விழுமியங்கள் நிறைந்தவர்களாக குழந்தைகள் வழிப்படுத்தப்பட்டால் பிற்காலத்தில் நற் பிரஜையாகும் வாய்ப்பை அவர்கள் பெறுவார்கள் இன்று சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வித்திட்டம் பலவிதமான சிறந்த மாற்றங்களை மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவது வரவேற்கத்தக்கதாகும். குழந்தைவயதிலேயே விழுமியக் கருத்துக்களைக் கற்பிப்பதற்கு சிறந்த ஊடகமாகக் கதைகள் அமைகின்றன.

விளையாட்டுக்கள் மூலமும் குழந்தைகள் சிறந்த உடற்பலம் உள்ளவர்களாகின்றனர். சமூக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் விளையாட்டுக்களை ஏற்படுத்த வேண்டும். விளையாட்டின் போது கூட்டுறவு, பொறுப்புக்களைப் பகிர்தல், சமத்துவம். சகோதரத்துவம், விட்டுக்கொடுப்பு, நன்றி சொல்லும் தன்மை போன்ற உயர் விழுமியங்கள் குழந்தைகள் மத்தியில் வளர்க்கப்படுகின்றன. விளையாட்டுப் பொருட்களாக மணல், தண்ணீர், கடதாசி, துணி, பஞ்சு, பிளாஸ்ரிக் பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம். விளையாட்டின் மூலம் உடல் வலு அதிகரிக்கும். அதே வேளை உள வலுவையும் மாணவர்கள் பெறுகின்றனர். சிறந்ததொரு பொழுதுபோக்காகவும் விளையாட்டுக்கள் அமைந்துவிடுகின்றன.

அன்பு, அறம், கருணை, இரக்கம், பண்பாடு போன்ற உயர்ந்த விழுமியங்களை உள்ளடக்கிய விதத்தில் பாடங்கள் போதிக்கப்படும் போது குழந்தைகளின் செயற்பாடுகளும் நல்ல திசையிலேயே திருப்பப்படுகின்றன. இன்று இளைஞர்கள் மத்தியிலே அன்பு, சகிப்புணர்வு, மன உறுதி போன்ற பண்புகளை காண்பது அரிதாகவே உள்ளது. மக்கள் மத்தியில் தீய பண்புகளே மேலோங்குகின்றன. கல்வியின் மூலம் ஒருவனிடம் சிறந்த பணிவுத்தன்மை ஏற்பட வேண்டும். இதனை அடியொற்றி சுவாமி விவேகானந்தரும் "முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள் அப்போது எஜமானாகும் தகுதி தானாகவே உனக்கு வந்து சேரும்." என்கிறார். ஒவ்வொருவரும் அறவழிநின்று ஒழுக்கத்தையும், ஒப்புரவையும் பேணும் வகையில் கல்வியில் செயலாற்ற வேண்டும்.

கல்வி ஒருவனை சிறந்த சமூக இயல்பினை ஆக்கும் வகையில் செயற்பட வேண்டும். ஒரு குழந்தை தன் குடும்பத்திலேயே முதலில் சமூக இயல்பினை ஆக்குகின்றது. தன் பெற்றோர், அயலவர், சமூகம் என்ற வகையில் சமூக மயப்படுத்தப்பட்டு பின் பள்ளிக் கூடங்களில் தன்போன்ற சிறுவர்களுடன் சேர்ந்து வாழும் மனப்பாங்கை பெறுகின்றது. இன்று மனித வாழ்க்கையில் விரிசல் நிலை ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் சிறந்த மனித விழுமியங்கள் குழந்தைகள் உள்ளத்தில் பதியப்படாமையாகும். இச் சிந்தனைகள் யாவும் குழந்தைப் பருவத்தில் ஏற்படுத்தப் படவேண்டுமானால் இத்தகைய ஆரம்பக் கல்வி நிலையங்கள் இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக அமைய வேண்டும்.

எனவே ஆரம்ப பள்ளிக்கூடங்களில் இவ்வகையான பாட ஏற்பாடுகள் மூலம் பலவகையான விழுமியங்கள் குழந்தைகள் மத்தியில் வளர்க்கப்பட வேண்டும். பெற்றோர்கள், ஆசிரியர்கள் போன்றோர் இவ்வகையான விழுமியக் கல்வியின் தேவையை உணர்ந்து எதிர்காலத்திற்கேற்ற சிறந்த பண்பான பிரஜைகளை உருவாக்குவதில் அக்கறை உடையவர்களாக செயற்பட வேண்டும். மனிதன் ஒருவன் தன்னிடம் குடிகொண்டுள்ள தீய அம்சங்களைத் தவிர்த்து மானிடப் பண்பை பெற்று வாழ்வதற்கு விழுமியக் கல்வி அவசியமாகின்றது.

# சுகாதாரக் கழகம்

**1979** ஆம் ஆண்டில் இருந்து மாணவர்களின் சுக நலம் தொடர்பான செயற்பாடுகள் நடைபெறுகின்றன. 1989இல் பாடசாலை சுகாதார அபிவிருத்திக்குழு தெரிவுசெய்யப்பட்டது. தலைவராக அதிபரும் அங்கத்தவர்களாக திருமதி ஜெ.கந்தையா, திருமதி ச.தயாளன், செல்வி த. ஜீவரட்ணம் ஆகியோர் இருந்து செயற்பட்டனர்.

1991இல் மூன்றாம் தவனைககாலப்பகுதியில் போர்க்காலச் சூழலினால் எமது பாடசாலை இடம்பெயர்ந்த மக்களின் நோயுற்ற பராமரிப்பு நிலையமாக இயங்க யாழ் இந்து ஆரம்பபாடசாலையில் எமது பாடசாலை மாலை நேரமாக நடைபெற்றது. 1992 முதலாம் தவணையில் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பாடசாலை நடைபெற்றது.

1998இல் பெற்றோருடன் மாணவரின் சுகநலம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. கருத்துரையை திரு கே. சிவலிங்கம் சுகாதாரக்கல்வி அதிகாரி கலாநிதி சபா ஜெயராசா Dr.ஆ.திருநாவுக்கரசு திரு பி.துரைராஜா, பொது சுகாதார பரிசோதகர் ஆகியோர் நிகழ்த்தினர். காலத்துக்கு காலம் கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

**சுகாதாரக்கழகத்தின் செயற்பாடுகளாக**

1) சுத்தம் பேணல்.
   - அ) வகுப்பறைச் சுத்தம் பேணல்: அட்டவணை தயாரித்து அதன்படி வகுப்பறைச் சுத்தம் பேணப்படுகின்றது.
   - ஆ) வளவு சுத்தம் பேணல்: ஊழியர் மூலம் தினமும் பேணப்படுகிறது
   - இ) நீர் விநியோகம்: கிணற்று நீர் மணவர்களின் புறச்சுத்தத்துக்கும் பயன்படுகிறது. வீட்டில் இருந்து கொதித்தாறிய நீர் கொண்டு வந்து பருக ஊக்குவிக்கப்படுகிறது.
   - ஈ) மலசல கூட வசதிகள்: தினமும் பாடசாலை முடிவடைந்த பின்னர் சுத்திகரிப்புத் தொழிலாளியினால் சுத்திகரிக்கப்படுகின்றது.
   - உ) குப்பை கூழங்கள் அகற்றல்: பொலித்தீன் உபயோகம் இயன்ற அளவு தடை செய்யப்பட்டுள்ளது. தேவையற்ற கடதாசிகள் எரிக்கப்பட்டும் அசேதனக் கழிவுகள் பசளையாக்கப்பட்டு பூஞ்செடிகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.
2) தினசரி காலைப் பரிசோதனை: ஒவ்வொரு நாளும் வகுப்பு ரீதியாக சுகாதாரக் கழக மாணவத் தலைவர்களால் உடல், உடை, சுத்தம் அவதானிக்கப்பட்டு திருத்தம் செய்வதற்காக வகுப்பாசிரியருக்கு அறிவிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் மூலம் ஆலோசனை வழங்கப்படுவதுடன் தேவை ஏற்படின் பெற்றோர் அழைக்கப்பட்டு நிலைமை விளக்கப்படுகிறது. புதன்கிழமை தோறும் சுத்தம் தொடர்பாக அறிவுறுத்தல்கள், பேச்சுக்கள் போன்றவற்றை அதிபர், ஆசிரியர்கன் வழங்கி வருகிறார்கள்.
3) பாடசாலை மருத்துவப் பரிசோதனை (பா.ம.ப)
4) இலவச மூக்குக் கண்ணாடி,செவிப்பன்னி பெற்றுக் கொடுத்தல்.
5) உலக சுகாதார தினம், மகளிர் தினம், அங்கவீனர் தினம், சிறுவர் தினம் போன்ற தினங்களில் நிகழ்ச்சிகள் மூலம் சுகாதார விடயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றது.
6) மாணவர் சங்கக் கூட்டம்
7) பெற்றோருக்கான சுகாதாரக் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்தல்.

ஒவ்வொருவகுப்பிலிருந்தும் இரு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு இயங்கும் சுகாதாரக் குழு பொறுப்பாசிரியர்களைத் துணைக் கொண்டு அதிபரின் ஆலோசனைப்படி இயங்கி வருகிறது.

# சிறாரின் வளர்ச்சியைப் பற்றிய தகவல்கள்

வைத்தியகலாநிதி
**இ. கணேசமூர்த்தி**.
யாழ் போதனா வைத்தியசாலை.

இப்போதைய பிள்ளைகள் வருங்காலத்தில் முக்கிய சமூக அங்கத்தவர்களாகவும், தலைவர்களாகவும் திகழப் போகின்றார்கள். நிகழ்காலம் இறந்த காலத்தால் நிர்ணயிக்கப்பட்டது போல, நிகழ்காலம் வருங்காலத்தை நிர்ணயிக்கும். ஆகவே பெற்றோர்கள் ஆசிரியர்கள் சமூகத் தலைவர்கள், எமது பிள்ளைகள் நல்லவர்கள் ஆகவும் வல்லவர்கள் ஆகவும் வளர்வதற்கு உந்துதல் கொடுத்துச் செயற்பட வேண்டும்.

நாம் செவ்வனே செயற்படப் பிள்ளைகளின் வளர்ச்சியைப் பற்றிய அறிவும், எவ்வாறு வளர்க்கவேண்டும், எவ்வாறு வாழ்ந்துகாட்டவேண்டும் என்பது பற்றிய தெளிவான விளக்கம் நமக்கு இருக்கவேண்டும்.

பிள்ளைகள் கருவாயிருக்கும்போது தாயின் சிந்தனை, உணர்வுகள், உணர்ச்சிகள், செயற்பாடுகள் எல்லாம் பிள்ளையின் மனச் செயற்பாட்டில் பங்கு வகிக்கின்றன வென்று, விஞ்ஞான ஆராய்ச்சியும் ஆன்மீக மகான்களின் கூற்றுக்களும் அறிவுறுத்துகின்றன.

பிறந்து இரண்டு வயதுவரை தாயின் மடியே பிள்ளையின் பாடசாலை. தாயின் அரவணைப்பு தாய்ப்பால், தாயின் சிந்தனை உணர்வு உணர்ச்சி எல்லாம் மீண்டும் முக்கிய பங்குவகிக்கின்றன.

இரண்டு தொடக்கம் ஐந்து வயதுவரை தாயும் தகப்பனும் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். இக்காலத்தில் சில பிள்ளைகள் அதிக துடிப்புடன் குழப்படி உள்ளவர்களாகவும் இருப்பார்கள். இப்பிள்ளைகளைச் சரியான முறையில் கட்டுப்பாட்டுடனும், அதேவேளையில் ஆக்கத்திறனையோ கற்பனைவளத்தையோ குன்றாது பாதுகாக்க வேண்டும். இக்காலத்தில்தான் புத்திக் கூர்மை அதிகளவில் வளர்ச்சியடைகின்றது. கதைகள், பாடல்கள், விளையாட்டுச் சாதனங்கள், பொருட்கள் மூலம் புத்தி கூர்மையுடைய உந்துதல் கொடுக்கவேண்டும். தொலைக்காட்சியில் தேவையற்ற காட்சிகளையோ, பாடல்களைப் பார்க்ககூடாது. அதில் காட்டப்படும் காட்சிகள் எல்லாம் அடி மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடும். தொலைக்காட்சி மிகவும் சக்தி வாய்ந்தது. அறிவையும் வளர்ச்சியையும் கொடுக்கக்கூடியது. என்ன விளைவு ஏற்படும் என்பது உபயோகிக்கும் விதத்தில் உள்ளது. ஸ்ரீசத்திய சாயி பாபா, டெலிவிசன் ஓர் டெலிவிசம் என்றும் அது தேனில் தோய்ந்த வாளின்முனை போன்றது என்றும் சொல்லியுள்ளார். இவ் வயதில் பிள்ளைகள் தொலைக்காட்சியில் வரும் நடிப்பையோ, பாடலையோ வெளிக்காட்டும் பொழுது நாமும் சிரித்து ஊக்கம் கொடுத்தால் அவர்கள் நல்லவர்களாக வளரும் வாய்ப்புக்குன்றிவிடும். இக் காலத்தில் பிள்ளை தாயையே தனது வீராங்கனையாக ஏற்றுக்கொள்ளுவார். தாய் சொன்னதுதான் சரி என்று அடம்பிடிப்பார்.

ஐந்து வயது தொடங்கி பன்னிரண்டு வயது வரை பிள்ளைகள் பாடசாலைச் சூழலில் வளர்கின்றார்கள். இக் காலத்தில் பிள்ளைகள் ஆசிரியரே தனது வீரனோ, வீராங்கனையாகவோ ஏற்றுக் கொள்கிறார்கள். ஆகவே இக் காலத்தில், பிள்ளைகளின் வளர்ச்சியில் ஆசிரியர் அதிக பங்கு வகிக்கிறார். ஆசிரியரின் சொல், செயல், நடை உடை பாவனை எல்லாம் ஆழமாகப் பதியும். ஆசிரியர் என்ன பாடம் படிப்பித்தது என்பதிலும் பார்க்க, எவ்வாறு படிப்பிக்கப்பட்டதென்பதே பிள்ளையின் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தும். இக் காலத்தில் பிள்ளையின் அறிவுத்திறன், செயற்றிறனுடன் உன்னத நடத்தையும் மிளிர வகை செய்யவேண்டும். இதை எவ்வாறு கையாளலாம் என்பதை மனோதத்துவியலாளர்களின் கருத்துக்களை எடுத்துக்கொள்வோம்.

கற்றலில் ஐம்புலன்கள் வழியாக உட்செல்லும் தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு அடி அறி மனதில் பதியப்படுகின்றன.

கற்றல் மூலமாக அறிவும் செயற்றிறனும் ஏற்பட்டு, நடத்தையில் மாற்றம் ஏற்படுகின்றது. பிறப்புடனேயே சில நடத்தைகள் எமது மனதில் பதிந்து விடுகின்றன. ஆகவேதான் சில நடத்தைகள், மற்றவர்கள் சொல்லித் தராமலேயே தெரிகின்றன (Instinctive Learning or Behaviour). முன்னையது உந்துதல் மூலம் கற்றுக் கொள்வது (Conditioned Learning) பிள்ளைக்கு தகவல்கள், பெற்றோர், ஆசிரியர்கள், சமூக சுற்றத்தவர்கள், இயற்கை, ஊடகங்கள் ஆகியவற்றிலிருந்து மௌனமாகவும் உட்புகுகின்றன. (Silent message or Metamessage) மௌனமாக தொண்ணூறு வீதமும், சொல் செயலால் பத்து வீதமும் உட்செல்கின்றன. ஆகவே ஆசிரியர்களின் பெற்றோர்களின் நடத்தை முன் மாதிரியாக அமையவேண்டும். பிள்ளைகளுக்குக் கிரகிக்கும் திறனுடன், ஞாபக சக்தியையும் விருத்தியடையச் செய்யவேண்டும். கிரகிக்கும் திறனை விருத்தியடைய, கற்றலில் விருப்பம், விளக்கம், சூழ்நிலை, அன்பு, ஆனந்தம், சாந்தி நிரம்பிய சூழ்நிலை அவசியம். வீடு மாத்திரமல்ல, பாடசாலையும், வெளிஉலகமும் இச் சூழலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். கற்றல் நன்றாக இருந்தாலும், பரீட்சையிலோ அல்லது வேறு போட்டிகளிலோ செய்யும் திறமை குறைவாகவும் இருக்கலாம். இது கற்றலில் ஓரளவு தங்கியிருந்தாலும், முயற்சி, முதிர்ச்சி, கவலையீனம், விருப்பமின்மை தேக ஆரோக்கியம் ஆகியவற்றிலும் தங்கியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவனின் கிருபையும் இருக்க வேண்டும்.

ஞாபகம் மூன்று வகைப்படும். புலன் ஞாபகம் (Sensory Memory), குறுகிய நேர ஞாபகம், நீண்ட கால ஞாபகம் என்ற மூன்றுமேயாகும். புலன் ஞாபகம் சில செக்கண்களே நீடிக்கும். 2ஆம் தொலைபேசி இலக்கம் தகவல்கள் மீள் பரிசீலிக்கப்பட்டு, இருமுறை மீட்டெடுத்தல் குறுகிய நேரத்திற்குதான் நீடிக்கும். விளங்கி மன ஒருமைப்பாட்டுடன் படித்து திரும்ப திரும்ப மீட்டெடுத்தல் நெடுங்கால ஞாபகப் பதிவாகிவிடும். குறுகிய நேர ஞாபகத்தில் ஒரே சமயத்தில் ஏழு வகையான தகவல்கள் மாத்திரமே பதியப்படும். நீண்டகால ஞாபகப் பதிவில் ஒரு வரையறையும் இல்லை. ஞாபகத்தில் பதியவைக்க பார்வை, கேட்டல் மூலமாக தகவல்களை விளக்கத்துடன் ஆர்வத்துடனும் பரிமாற வேண்டும். இடைக்கிடை முன்னறிவிப்பின்றி பரீட்சைகளை நடாத்துவதன் மூலம் பிள்ளைகள் எந்நேரமும் தயார் நிலையில் இருக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதால் ஞாபக சக்தி அதிகரிக்கின்றது.

உந்துதல்கள், புகழ்ச்சி மூலமும், உபகாரங்கள் மூலமாகவும் திறனை வெளிப்படுத்துவது ஒரு கடமை என்பதை உணர்த்துவதன் மூலமும் திறமையையே மேலாக்கலாம். இப்பராயத்தில் பிள்ளைகளின் நடத்தையை உபகாரம் தண்டனை மூலமாக மாற்றலாம். நன் நடத்தைக்கு உபகாரமும் அல்லது மெச்சலும் துர் நடத்தைக்குக் கண்டனமும் அளிப்பதன் மூலம் நடத்தையை மேன்மையாக்கலாம். எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளையின் அடிப்படைத் தேவைகளை(உணவு, உடை, உறைவிடம், ஆரோக்கியம், கல்வி, வழிபாடு) முதற் கொடுக்கவேண்டும். பின்பு அன்பு, பாதுகாப்பு ஆகியதை அளிப்பதன்மூலம் பிள்ளையின் சுய கௌரவம், தன்னம்பிக்கையைக் கூட்டலாம். குழந்தைப் பருவத்தை எவ்வாறு கையாளுகின்றோமோ, விடத்தல் பருவகாலத்தில் ஏற்படும் பிரச்சனைகள் குறையும்.

ஸ்ரீ சத்திய சாயி பாபா பிள்ளைகள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், வளர்வதற்கு பாலவிகாஸ் மனித மேம்பாட்டுக் கல்வி சத்திய சாயி வித்தியாலயம் ஆகியவற்றை முன்வைத்துள்ளார். இக்கல்வித்திட்டத்தில் கற்பிக்கும் முறையில் அமைதி, இருக்கை, தியானம், கதை கூறல், குழுப்பாடல், குழுமுயற்சி, சான்றோர்களின் வாழ்க்கைச் சரிதம் மூலம் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வளர்க்கலாம் என்று உறுதியளித்துள்ளார். பிள்ளைகளை பெற்றோர் வணக்கம் தினமும் காலையும் மாலையும் கடவுள் வணக்கம் ஆகியவற்றில் ஈடுபடச் செய்யவேண்டும். ஆசிரியர் பெரியோர்களை மதிக்கச் சொல்லிக் கொடுக்கவேண்டும். வீண்விரயம் செய்வதைத் தடுக்கவேண்டும். வீட்டில் பாடசாலையில் சிறு சிறு வேலைகளில் ஈடுபடச் செய்யவேண்டும். தண்டிக்க வேண்டிய இடத்தில் தண்டிக்கவும் வேண்டும். தண்டனை பல விதப்படும், உடற் தண்டனை (அடி) புறக்கணிப்பு சலுகைகளை நிறுத்துதல், கண்டிப்பாகச் சொல்லுதல், எம்மை வருத்துதல் ஆகியவையாகும். தண்டனை உடனே கொடுக்கப்பட வேண்டும். வளர்ச்சிக்கேற்றவாறு இருக்கவேண்டும. எந்நேரமும் ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும். குறுகிய தண்டனையாக விடுக்கவேண்டும். கோபம் வெறுப்பில்லாது கொடுக்கப்படவேண்டும்.

**"ஆசிரியர், பெற்றோரின் முன் மாதிரியே முக்கியம்".**



# சூழலும் மனித உடல் நலமும்

**திரு. பு.ஆறுமுகதாசன்**
பொது சுகாதார பரிசோதகர்,
வண்ணார்பண்ணை,
யாழ் மாநகர சபை.

மனித இனத்தின் வாழ்க்கைத் தரம் சூழலின் தரத்துடன் நெருங்கிய தொடர்புடையது. நோயும் இறப்பும் மனித வாழ்க்கையின் அங்கங்கள். இந்நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் மனிதனின் சராசரி வாழ்க்கைக் காலம் முப்பது ஆண்டுகளாக இருந்தது. அதற்கு முன்பு இன்னும் குறைவாக இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். 1910ஆம் ஆண்டிற்கு பின் வைத்தியத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக மனிதனின் சராசரி வாழ்க்கை காலம் படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது. இன்று வளர்ந்த நாடுகளில் 80 வயதாகவும் இலங்கையில் 70 வயதிற்கு மேலாகவும் உள்ளது.

ஆதிகாலத்திலிருந்து கைத்தொழில் புரட்சிக் காலம் வரை மனித சமுதாயங்களை தாக்கிய நோய்களும் அவற்றின் கோலங்களும் ஒத்த இயல்புகளையும் கோலங்களையும் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு அந்நீண்ட காலப்பகுதியில் வாழ்ந்த மக்களின் சமுதாய அமைப்புக்களும் வாழ்க்கை முறைகளும், சூழலுக்கும், மக்களுக்குமிடையே நிலவிய தொடர்புகளும் பிரதான காரணங்களாகும். மனிதன் ஆதியில் வேட்டையாடி உண்ணும் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்தான். அப்போது சிறு சிறு குழுக்களாக அவர்கள் வாழ்ந்தனர். அதனால் குழு உறுப்பினர்களுக்குள்ளே தொற்று நோய்கள் இலகுவாக பரவின. அதே நோய்கள் வெவ்வேறு குழுக்கள் ஒன்றாக சந்திக்கும் சந்தர்ப்பங்களில் குழுக்களிடையே பரவின. அதிகமாக அவை வைரசு, பக்ரீரியா ஆகிய நுண்ணங்கிகளால் ஏற்படும் நோய்களாகவே காணப்பட்டன. பெரியம்மை, கொப்புளிப்பான், சின்னம்மை, தடிமன் காய்ச்சல், கூவைக்கட்டு ஆகியவை பிரதான வைரஸ் நோய்களாகும். வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல், சயரோகம், பாலியல் நோய்களான சிபிலிஸ்கொலோரியா ஆகியவை பக்டீரியாக்களால் வரும் நோய்கள். கொழுக்கிப் புழு, நாடாப்புழு முதலிய புழுக்களால் வரும் நோய்களும், ஒட்டுண்ணியால் வரும் மலேரியாவும் அவர்களை தாக்கின.

நாடோடியாக வாழ்ந்த மனிதன் படிப்படியாக விவசாய வாழ்க்கையை கைக்கொண்டான். செழிப்பான ஆற்றுப் பள்ளத்தாக்கு பகுதிகளில் குடியேறி தனது உணவுத் தேவையான தானிய வகைகளை பயிரிட ஆரம்பித்தான்.

இந்த நிலைத்த வாழ்க்கையின் விளைவாக விவசாய குடியிருப்புக்களும், நகரங்களும் தோன்றின. கழிவு பிரச்சனைகளை அகற்றுவது பிரச்சனையாக உருவெடுத்தது. பாதுகாப்புக்கான குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டது. அத்துடன் மனிதன் நெருங்கி வாழ்ந்தமையினால் தொற்று நோய்கள் பரவும் வேகமும் சாத்தியமும் அதிகரித்தன. நாகரீக வளர்ச்சியால் மனிதன் அடைந்த முன்னேற்றம் அவன் தனது வாழ்க்கைக்காலத்தை உயர்த்த உதவத் தவறியமைக்கு இதுதான் காரணம்.

எனவே ஆரோக்கிய வாழ்விற்கு அக மற்றும் புற சுத்தம் அவசியம். இதை சிறு பராயத்திலிருந்து ஏற்படுத்துவதே பொது வெற்றிக்கு வழிவகுக்கும். அந்த வகையில் பாடசாலை மட்டத்தில் சுகாதாரக் குழுக்கள் அமைத்து, சிறு பராயம் தொட்டு அவர்களுக்கு சுகாதாரக் கல்வியூட்டி வருகின்றோம். இதன் மூலம் இவர்கள் சிறுவயது முதல் சுகவாழ்வு தொடர்பாக விழிப்பூட்டப்பட்டு வருகின்றனர். அத்துடன் அவர்களின் சுகநலனைப் பேணும் பொருட்டு மருத்துவ பரிசோதனை, தடை மருந்து ஏற்றல் போன்ற பணிகளையும் செய்து வருகின்றோம்.

அந்த வகையில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை யாழ் மாவட்ட பாடசாலைகளுள் சிறந்து விளங்குகிறது என்றால் மிகையாகாது. மாணவர்கள் தம் அக மற்றும் புறச் சூழலை பேணுவதில் மிகுந்த ஆர்வமாக இருப்பது அங்குள்ள ஆசிரியர்கள் மற்றும் அதிபரும் மிகவும் முன்மாதிரியாக திகழ்வதே தனித்துவமான காரணமாகும்.

எனவே குடா நாட்டிலுள்ள மற்றைய பாடசாலைகளும் இவர்களைப் போல திகழ வேண்டும் என்பதே எனது பேரவா. அதுவே ஆரோக்கிய சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும்.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்".**

### *ஔவையார் அருளிச் செய்த நல்வழி*

ஒருநா ளுணவை யொழியென்றா லொழியாய்
இருநாளுக் கேலென்றா லேலாய் – ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது.

# தேக ஆரோக்கியத்திற்கு பத்து அறிவுரைகள்

**திருமதி இ. வேணுகாந்தன்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

**நோ**ய் வரும் முன்னே காப்பதே மானிடப் பிறப்புக்குரிய சிறப்பம்சம். எனவே கீழ்கண்ட அறிவுரைகளைப் பின்பற்றி பலவகையான நோய்களிலிருந்து எம்மை பாதுகாத்துக் கொள்வோம்.

1. எந்த வகையான நோயால் பாதிக்கப்பட்டாலும் தகுந்த ஆலோசனையை வைத்தியரிடமிருந்து பெறவும்.
2. இயன்றவரையில் கொதித்தாறிய நீரைப் பருகுவதைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.
3. பல்வேறு இடங்களிலும் சுகாதார முறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்படாது விற்கப்படும் உணவுகளை வாங்கி உண்பதைத் தவிர்த்தல்.
4. மலம் கழித்த பின்னரும், உணவு அருந்த முன்னரும் கைகளை சவற்காரம் உபயோகித்து கழுவுதல் வேண்டும்.
5. வீட்டிலும், சுற்றாடலிலுமுள்ள கழிவுப் பொருட்களை எரித்துவிடுவதன் மூலமோ அல்லது புதைத்து விடுவதன் மூலமோ நோய்களை தவிர்க்கலாம்.
6. நாம் உணவுக்காக பயன்படுத்தும் மரக்கறிகள், பழவகைகளில் பூச்சி புழு முட்டைகள், கிருமிகள் நிறைய உள்ளன. எனவே மரக்கறிகளை சமைப்பதற்கு முன்னரும், பழங்களை உண்பதற்கு முன்னரும் நன்றாக கழுவுதல் வேண்டும்.
7. இள வயதில் இருந்தே அதிக கொழுப்புள்ள இனிப்புள்ள உணவுகளை உண்ணாமல் விடுவது நன்று.
8. காலையும், மாலையும் பற் தூரிகையால் பல் துலக்குவது மிகவும் அவசியம்.
9. உங்கள் வயதிற்கும் தொழிலுக்கும் ஏற்ப தேக அப்பியாசங்கள் தினமும் செய்து உடல் எடையை அதிகரிக்காமல் கவனித்துக் கொள்ளல்.
10. சுகாதார நிறுவனங்களால் வழங்கப்படும் அறிவுரைகளுக்கேற்ப நோய்த் தடுப்பு ஊசிகள், மருந்துகளை நோய்த் தடுப்பு கால அட்டவணைக்கு ஏற்ப தவறாது வழங்குதல் வேண்டும்.

# *Good Habits for Good Health*



**Brush your teeth every morning every night & after meals.**

Brushing removes food particles that get stuck between our teeth and cause toothache and cavities.



**Wash your face every morning.**

Washing our face takes the sleep out of our eyes & stops us from yawning. It washes away the stickiness & dribble that gets collected while we slept. It makes us feel clean and fresh and ready to face the new day.

**Keep your nails short.**

Nails which are not cut short can scratch and cause skin related problems. They also allow the accumulation of dirt under them which is unhygienic.



**Wash your hands on coming home.**

Our hand gets dirty when we are out side. Even though they look clean there are invisible germs which can make us ill. To get rid of these invisible germs we need to wash our hands when we come home.



## Have a bath & change clothes every day.

When we sweat at night our clothes soak up the moisture and get dirty, that's why it's best to have a bath and change into clothes that are clean and look nice.



## Do not sit right in front of the TV.

Sitting right in front of the TV is bad for our eyes. It's also selfish because it stops other people from enjoying TV as well.



## Clean your house every day.

Dirt and dust collect and make place for germs to live which can make us ill. A clean and tidy house will not have dust, dirt or germs and would be healthier to live.



# சுற்றாடல் பாதுகாப்பில் மாணவர் பங்களிப்பு

**திரு. த.ந. சூரியராஜா**
B.Sc (Agric) Hons.M.Sc (Agric)
பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்.
மத்திய சுற்றாடல் அதிகார சபை.

நாம் வாழும் சுற்றாடல் நாளுக்கு நாள் பல வழிகளாலும் மோசமடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. இந்நிலை நீடித்தால் எமக்கும், எமது எதிர்கால சந்ததியினருக்கும் பாரிய சவாலாகவும், அச்சுறுத்தலாகவும் அமையும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடம் இல்லை. எனவே இந்நிலையை தடுத்து எதிர்கால சந்ததியினரும் நாமும் வாழக்கூடிய தூய சுற்றாடலை கட்டியெழுப்புவது இன்றைய காலத்தின் கட்டாய தேவையாகும். இப்பணிக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய அங்கங்கள் சமுதாயத்தில் தோன்ற வேண்டும் என்பதே இன்றைய அவா.

இப்படியான அங்கங்கள் பாடசாலை மட்டத்தில் இருந்து உருவாகுவதே ஆரோக்கியமானதும், நிலையானதுமான தூய சுற்றாடலைக் கட்டியெழுப்ப உதவும். இதை மையமாகக் கொண்டே மத்திய சுற்றாடல் அதிகாரசபை பாடசாலைகளில் சிறுவர் சுற்றாடல் கழகம், சுற்றாடல் முன்னோடிக் கழகம் போன்ற அமைப்பு உருவாக்கத்திற்கு ஊக்கம் அளித்து வருகிறது. இவ்வாறான மனப்பாங்கை சிறுவயதில் இருந்து மாணவர் மட்டத்தில் உருவாக்க பாடசாலைகளில் 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரையான சிறுவர்களின் அங்கத்துவத்துடன் நிறுவப்படுவது சிறுவர் சுற்றாடல் கழகம் எனவும் 7ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட வகுப்பிலிருந்து மாணவர்களை அங்கத்துவமாக கொண்டு உருவாக்கப்படும் அமைப்பு சுற்றாடல் முன்னோடி கழகம் எனவும் அழைக்கப்படும்.

இவர்கள் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுசரணையுடன் ஆசிரியர்களின் வழிநடத்தலுடன் பிள்ளைப் பராயத்தில் இருந்தே சுற்றாடலுடன் இணைந்து வாழ்வதற்கு பயிற்றுவிக்கப்படுகின்றனர். இவர்கள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழுவதுடன் விழிப்புணர்வை தூண்டுபவர்களாகவும் இருக்க வேண்டும்.

சிறுவர் சுற்றாடல் கழக மற்றும் சுற்றாடல் முன்னோடிகள் தம் சுற்றாடல் பாதுகாப்பு பணிகளை பாடசாலையிலிருந்து ஆரம்பிக்கின்றனர். இச் சுற்றாடல் பாதுகாப்பு பணியானது வீடு தான் வாழும் சுற்றாடல், கிராமம், நகரம், பிரதேசம், மாவட்டம் என நாடளாவிய ரீதியில் வியாபித்துச் செல்லும். இப்பணியின் போது சிறுவர் சுற்றாடல் கழக முன்னோடிகள் பல சவால்களுக்கு முகங்கொடுப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். இங்கு அச்சமின்றி, நியாயமாக செயலாற்றுவது சுற்றாடல் முன்னோடி மாணவர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. தமது நடத்தையை சமுதாயத்திற்கு எடுத்துக் காட்டாகத் திகழச் செய்வது சுற்றாடல் முன்னோடி மாணவனின் பிரதான குணாம்சமாகும். தான் அறிவடைதல் மட்டுமன்றி மற்றவர்களையும் அறிவூட்டல் இவர்களது கடமை ஆகும். சுற்றாடல் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ளல், மற்றும் பேணல் பாதுகாப்பு முறைகள் பாதுகாப்பு நியதிகள்

பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்ளல் அவ்அறிவை செயல் ரீதியில் அமுல்படுத்தல் என்பன இவர்களது பணிகளில் முக்கியமானவையாகக் கொள்ள வேண்டும். இங்கு இக்கட்டமைப்பை உறுதிப்படுத்தி வழி நடத்துவது ஆசிரியரின் தலையாய பொறுப்பாக அமையும். இவர்கள் சிறுவர் சுற்றாடல் சமுதாயத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு மாணவர்களை தயார்படுத்தல் பிள்ளைகளினால் செயற்படும் சுற்றாடல் செயற்பாடுகளை கண்காணித்து நட்சத்திரங்களை பெற்றுக் கொடுத்தலும், பதக்கத்தை வழங்க நடவடிக்கை எடுத்தலும், மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் தொடர்புகளை வைத்திருத்தலும் இப்பணியை மேலும் சிறப்புறச் செய்யும்.

சிறுவர் சுற்றாடல் கழகத்தில் உள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தாவர, பறவை மற்றும் இயற்கைப் பதக்கம் வழங்கப்படுகிறது.

சுற்றாடல் முன்னோடி மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக பச்சை வண்ணப் பதக்கம், வெள்ளை வண்ணப் பதக்கம், தங்க வண்ணப் பதக்கம் மற்றும் உயர் விருதான ஜனாதிபதிப் பதக்கமும் வழங்கப்படுகின்றது.

எனவே மாணவர்கள் வெறும் பதக்கங்களை பெறுவதை மட்டும் நோக்கமாக கருத்திற் கொள்ளாது தங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் பாரிய பொறுப்பை முன் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு ஆகும். எனவே மாணவ சமுதாயம் இப்பணிக்கு தங்களை அர்ப்பணிப்புடன் சமர்ப்பித்து இந்நாட்டின் பிரஜைகள் என்ற வகையில் எதிர்காலத்தில் அவர்கள் ஆற்ற வேண்டிய மாபெரும் பணியானது சுற்றாடல் நட்பான ஒழுக்க நெறிமுறைகளின் வளர்ச்சியின் மீதே தங்கியுள்ளது. பூகோளத்தின் இருப்பிற்கு மாணவர் பங்களிப்பு உண்மையில் மகத்தானதும் விலை மதிக்க முடியாததும் ஆகும். எனவே மாணவர்கள் தேவையறிந்து கடமையாற்றுவது காலத்தின் கட்டாயமாகும்.

**"தூய சூழல் வாழ்வைப் பாதுகாக்கும்."**

## பொன் மொழிகள்

அமைதியான உள்ளமே மகிழ்ச்சிக் கடலின் எல்லை.

நல்ல நண்பன் இறைவனின் கொடை.

மனச்சோர்வே உண்மையான தொற்று நோய்.

ஆணவம் இல்லாத நெஞ்சில் மரியாதை பிறக்கும்.

நல்லோரின் கோபம் இமைப்பொழுது மட்டுமே.

அன்பிற்கு அப்பாற்பட்ட அறிவு கலகம் விளைவிக்கும்

# மழலைப் பாடல்கள்

மயிலங்கூடலூர் திரு. பி. நடராசன்

குழந்தை பிறந்ததும் தாயும் பாட்டியும் குழந்தையை அன்போடு வளர்க்கிறார்கள். அவர்கள் குழந்தையைத் தூங்கவைக்கும் போதும் உணவு ஊட்டும் போதும் குழந்தையோடு பேசுவது போலப் பாடுவார்கள். குழந்தையைத் தூங்க வைக்கும் போது,

கண்ணே உறங்குறங்கு
கண்மணியே கண்ணுறங்கு

என்று பாடுவார்கள். பகலிலே குழந்தையைத் தூக்கிச் சென்று வெளியே வைத்து உணவூட்டுவார்கள். அப்போது குழந்தைக்கு காகத்தைக் காட்டி,

காக்கா காக்கா பறந்துவா
காலையில் எழுந்து பறந்துவா

என்று பாடிக் காகத்துக்கு உணவைப் போடுவார்கள். காகம் வந்து உணவை உண்ணும். குழந்தைக்கும் உணவை ஊட்டுவார்கள். குழந்தை உணவை உண்ணும். இதே போல இரவிலே உணவூட்டும் போது,

நிலா நிலா ஓடிவா
நில்லாமல் ஓடிவா

என்று பாடி நிலவுக்கு உணவூட்டுவது போல நடித்துக் குழந்தைக்கு உணவூட்டுவார்கள். குழந்தை மகிழ்ச்சியோடு உண்ணும். இவ்வாறு பல்வேறு வேளைகளிலும் பாடிப் பாடிக் குழந்தையை மகிழ்வித்துச் செயற்படுத்துவார்கள். எளிமையான இப்பாடல்களும் உரையாடல்களும் குழந்தை கேட்டுப் பாடும் பாடல்களாக அமையாவிட்டாலும் மனநிலைக் கல்வியாக அமையும். இதனைக் “குழந்தை இலக்கியம்” என்ற நூலில் திரு.கி.வா.ஜகந்நாதன் பின்வருமாறு விளக்குகின்றார்:

“மனிதன் குழந்தைப் பருவத்திலே பாட்டைக் கேட்டு இன்புறக் கற்றுக் கொண்டிருக்கிறான். ஒலியின் இனிமையில் தன்னைமறந்து தூங்கும் குழந்தையை நாம் பார்க்கிறோம். தாய்மார்கள் தாலாட்டுப் பாடிக் குழந்தையைத் தூங்க வைக்கிறார்கள். குழந்தைக்குப் பாட்டின் ஒலி இன்பத்தைத் தருகின்றது. சிறிது வளர்ந்த பிறகு குழந்தை சொற்களைக் கேட்கிறது. கதை கேட்க ஆசைப்படுகிறது. இதற்காகவே பாட்டிமார்கள் கதையும் பாட்டும் குழந்தைக்குச் சொன்னார்கள்”

குழந்தைகளுக்கான இப்பாடல் மரபு புதியதன்று. இது மிகத் தொன்மையானது என்கிறார் கவிஞர் இ.முருகையன்.

”சிறுவர்களுக்கெனத் தனித்துவமான இலக்கியம் படைக்கப்படல் வேண்டுமென்னும் எண்ணம் தமிழ் மக்களுக்குப் புதியதொன்று அன்று. பண்டைத் தமிழ் இலக்கிய மரபில் இச் சிறுவர் பாடல்களுக்குத் தனியானதோர் இடமுண்டு.”

**அணிந்துரை, பாப்பாப் பாடல்கள், 1995**

குழந்தை பிறந்தது முதல் பதினைந்து வயது வரையுள்ள குழந்தையின் கல்விப் பருவம் பல்வேறு வகையில் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. குழவிப் பருவம் - 1-3 வயது
2. மழலைப் பருவம் - 3-5 வயது
3. பாலர் பருவம் - 5-7 வயது
4. குழந்தைப் பருவம் - 8-12 வயது
5. சிறுவர் பருவம் - 13-15 வயது

3 வயது முதல் 15 வயது வரையான காலப்பகுதியில் கற்பிக்கப்படுவனவே குழந்தை இலக்கியங்கள் எனப்படுகின்றன. இவ் இலக்கிய வகைகளுள் முக்கியமானது குழந்தைப் பாடல்களே. இப் பாடல்கள்

1. மழலைப் பாடல்கள் 3-5
2. பாலர் பாடல்கள் 5-7
3. குழந்தைப் பாடல்கள் 8-12
4. சிறுவர் பாடல்கள் 13-15

5 வயது முதல் 15 வயதுவரை பிள்ளை ஆசிரியரிடமோ ஆசிரியர்களிடமோ பாடசாலையில் கற்கின்றது. எனவே அக் காலத்தில் குழந்தை பரந்த அறிவுள்ளதாக வளர்ந்து வரும். எனவே அதன் அறிவுக்கு ஏற்ப தரமுள்ளவையாக இப்பருவங்களுக்கேற்ற பாடல்கள் தரம் உயர்ந்து செல்லும்.

3 வயது முதல் 5 வயது வரையுள்ள காலத்தில் பிள்ளை பெருமளவில் கேள்வி அறிவுள்ளதாகவே வளரும். எனவே இக்காலத்திற்குரிய மழலைப் பாடல்கள் எளிமையான சிறு சிறு சொற்களைக் கொண்ட சிறிய பாடல்களாக அமைய வேண்டும். எளிய ஓசை உள்ளதாக அமைய வேண்டும். ஓரே சொற்கள் திரும்பத் திரும்ப வருவதும் பொருத்தமாக அமையும். குழந்தைகள் அறிந்த சொற்கள் இடம்பெறுவதும் விரும்பத்தக்கது. இப் பாடல்கள் குழந்தை பாடக்கூடியதாகவும் கருத்தை உடல் அசைவுகள் மூலம்(அபிநயம், பாவனை) விளக்கக்கூடியதாகவும் அமைய வேண்டும்.

கவிஞர் ப.சத்தியசீலனின் "மழலைத்தமிழ் அமிழ்தம்" என்ற நூலிலே இப்பண்புகளைக் கொண்ட பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

அம்மா அம்மா வாருங்கோ
அன்பு முத்தம் தாருங்கோ

இது முதலாம் பக்கத்தில் படங்களோடு இரு வரிகளில் அமைந்த சிறிய பாடல், மூன்று வயதில் பிள்ளை இப்பாடலை வாசித்துப் படிக்க முடியாத நிலையில் இருந்தாலும் சொல்லிக் கொடுத்தால் உடல் அசைவுகளோடு இனிமையாகப் பாடிப் பாடமாக்க முடியும். கருத்துக்களை உணரவும் பேசவும் ஆற்றல் தரும். இரண்டாம் பக்கத்தில் படங்களோடு பின்வரும் பாடல் இடம் பெறுகின்றது.

அப்பா அப்பா வாருங்கோ
ஆசை முத்தம் தாருங்கோ.

இவ்வாறு இந்நூலில் இருபது பக்கங்களில் இருபது பாடல்கள் படங்களோடு இடம்பெற்றுள்ளன. 1935ஆம் ஆண்டிலே வடபெரும்பாக வித்தியாதரிசி கே.எஸ். அருணந்தி வட இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து குழந்தைப் பாடல் போட்டி ஒன்றை நிகழ்த்தினார். முதலாம் படி போட்டியில் கவிஞர் மா.பீதாம்பரம் பின்வரும் பாடலுக்கான முதல் பரிசு பெற்றார்.

ஆலமரம் ஆலமரம்
அழகான ஆலமரம்
பாலர் நாங்கள் ஆடல் பாடல்
பழக நல்ல ஆலமரம்

இப்பாடலும் சிறந்த மழலைப் பாடலாகும். கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி மூன்று மழலைக் கவிதை நூல்களை நினைவு மலர்களாக வெளியிட்டு அன்பளிப்பாக வழங்கச் செய்தார். பின் 1995இல் இம் மூன்றும் இணைந்து தமிழகத்தில் "பாப்பா பாடல்கள்" என்ற நூலாக வெளியிடப்பட்டுள்ளது. 63 பக்கங்களில் 63 மழலைப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அதிலுள்ள "பாப்பாப்பா" என்ற பாடல்கள் இதோ.

பாப்பாப் பா
பாப்பாப் பா
பாடவாருங்கோ
பாலர்களே
ஒன்றுகூடி
பாடிப்பாருங்கோ
புதுப்பாடல்
நீங்களும் கொஞ்சம்
பாடி ஆடுங்கோ.

ஓரளவு வளர்ந்த குழந்தை மழலையைப் பாடி ஆட வருமாறு அழைப்பது போல இப்பாடல் அமைந்துள்ளது. இதே நூலில் மழலை "அம்மா" வைப் பற்றிப் பாடும் பின்வரும் பாடல் இடம்பெற்றுள்ளது.

அம்மா அச்சாச் சாப்பாடு
அணைத்துத் தருவா அன்போடு
நம்மை நன்றாய் நீராட்டி
நாளும் பார்ப்பா அன்போடு

கவிஞர் த. துரைசிங்கம் "பாலர் பாட்டு" என்ற மழலைக் கவிதை நூலில் "சில்லு" என்ற பாடலைப் பாடியுள்ளார்.

வட்ட வட்ட சில்லு
வண்டியில் உள்ள சில்லு
உருள உதவும் சில்லு
உறுதியான சில்லு

இந் நூலில் உள்ள 33 பாடல்களுள் 29 பாடல்களும் இவ்வாறே மழலைகளுக்கேற்ப சிறியனவாக படங்களோடு உள்ளன.

கவிஞர் கலாநிதி சபா. ஜெயராசா "பாலர் கல்விப் பாடல்" என்ற நூலை வெளியிட்டுள்ளார். இதில் 26 மழலைப் பாடல்கள் சிறப்பாக அமைந்துள்ளன. இதில் உள்ள "பட்டம்" என்ற பாடல் வருமாறு.

மெல்ல மெல்லப்
போகும் பட்டம்
மேலே மேலே
போகும் பட்டம்
மாடி மேலே
நூலைத் தட்டி(மேலே மேலே...)
கூரை மேலே
நூலைத் தட்டி(மேலே மேலே...)

கவிஞர் பண்டிதர் "ச.வே.பஞ்சாட்சரம் கவிதைகள்" என்ற நூலில் "மழலை இன்பப்" பகுதியில் மழலைப் பாடல்கள் உள்ளன. இதில் "நாலு வயது வாத்தியார்" என்ற ஒரு பாடல் உள்ளது. தாயும் பாட்டியும் வாத்தியாரும் பிள்ளைக்கு பாட்டு படிப்பிப்பதாக பல பாடல்கள் உள்ளன. கவிஞர் ஆடலிறை "நல்ல வாத்தியார்" என்ற குழந்தைப் பாடலில் இக்கருத்துக்களை பின்வருமாறு பாடியுள்ளார்:

வீட்டில் எமக்கு கதைகள் கூறி
விளங்க வைத்தாள் பாட்டி
கூட்டி எம்மை நல்ல பாட்டுக்
கூறி வந்தாள் பாட்டி
பள்ளிக்கூடம் சென்றபோது
பண்புகொண்ட ஒருவர்
துள்ளிக் குதித்து கையைக் காட்டிச்
சொல்லித்தந்தார் பாட்டு
நல்ல கதைகள் படங்களோடு
நமக்குச் சொல்லித்தந்தார்
நல்ல வாத்தியா ரெமக்கு
நாளும் தந்தை போல்வார்.
எழுதத் தெரியா எமக்கு நன்றாய்
எழுத்தும் சொல்லித் தந்தார்
அழுதால் எம்மை அழைத்து அணைத்தே
அன்பு காட்டி நிற்பார்
சின்னத்தம்பி நீயும் வாடா
செல்வம் நீயும் வாடி
என்றும் மகிழ்ச்சியாய் இருக்க
எங்கள் பள்ளி செல்வோம்

**-மழலைச் செல்வம், 1964**

இதே போல கவிஞர் ச.வே.பஞ்சாட்சரமும் "நல்ல வாத்தியார்" என்ற தலைப்பின் பின்வரும் குழந்தைப் பாடலை பாடியுள்ளார்.

அன்னை போல அன்பி லெம்மை
அணைக்கு மெங்கள் வாத்தியார்
சின்னப் பாட்டு சொல்லித் தந்து
சேர்ந்து பாடும் வாத்தியார்
ஆனாக் கானா ஒன்று இரண்டு
அழகழகாய்ச் சொல்லியே
தேனாய் எங்கள் மனதில் ஊட்டி
தேங்க வைக்கும் வாத்தியார்
பள்ளி விட்டு போகும்போது
பாதை ஓரம் வரையிலே
மெள்ள எம்மைக் கூட்டி வந்து
விட்டுச் செல்லும் வாத்தியார்.

**மழலைச் செல்வம், 1964**

அன்னையிடமும் பாட்டியிடமும் படிக்கும் மழலைப் பிள்ளை “நாலு வயது வாத்தியார்” ஆகி கிளுவைக்கும், புளிக்கும், கப்புக்கும், கொப்புக்கும், கற்பிக்கும் நிலையை கவிஞர் ச.வே.பஞ்சாட்சரம் பின்வருமாறு பாடுகின்றார்:

நானே நல்ல வாத்தியார்
ஆனால் வயது நாலு தான்
கிளுவை எனது மாணவன்
புளியும் எனது மாணவன்
கப்பும் எனது மாணவன்
கொப்பும் எனது மாணவன்
பாடஞ் சொல்வேன் சொல்லார்கள்
மூடர் என்று திட்டுவேன்
தடி எடுப்பேன் கையிலே
அடி கொடுப்பேன் முதுகிலே
நானே நல்ல வாத்தியார்
ஆனால் வயது நாலுதான்.

இந்த நாலு வயது வாத்தியார்களை இன்றும் கூட காணலாம். “பாலர் விருந்து” என்ற நூலிலே கவிஞர் வை இளயதம்பி சில மழலைப் பாடல்களை பாடியுள்ளார். “காசு” என்ற தலைப்பிலே,

வட்ட வட்ட காசு
வடிவான காசு
பெட்டிக்குள்ளே ஐயா
பேணி வைத்த காசு

என்று தொடங்கும் பாடலையும் “பஞ்சு” என்ற தலைப்பிலே,

பஞ்சு பஞ்சு பஞ்சு
பஞ்சு படும் பாடு
பருத்தியிலே காய்த்த
பஞ்சு படும் பாடு

என்று தொடங்கும் பாடலையும் பாடியுள்ளார். இந் நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள பலாலி ஆசிரியர் கலாசாலை தமிழ் பேராசிரியர் பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை இந்நூல் பாடல்களின் பயன்பாட்டை பின்வருமாறு விளக்குகின்றார்.

“பாலர் வகுப்பு தொடக்கம் மூன்றாம் வகுப்பு வரையுள்ள பிள்ளைகள் ஓடி, ஆடி, குதுாகலித்து பாடக்கூடிய பாடல்கள் இவை. மிகச் சுவையான, தெரிந்தெடுத்த நல்ல சொற்களால் அமைந்துள்ளன இப்பாக்கள்”. இக்கருத்து மழலைப் பாடல்களுக்கு சிறப்பாக பொருத்தமானது.

தமிழகத்தின் மூத்த குழந்தைக் கவிஞரான கவிமணி சி.தேசிகவினாயகம் பிள்ளையின் “மலரும் மாலையும்” என்ற நூலில் “மழலை மொழி” என்ற பகுதியில் சில மழலைப் பாடல்கள் உள்ளன.

“முத்தந்தா” என்ற தலைப்பிலுள்ள பாடல் சிறந்த மழலைப் பாடலாகும்:

கண்ணே மணியே முத்தந்தா
கட்டிக் கரும்பே முத்தந்தா
வண்ணக் கிளியே முத்தந்தா

வாசக் கொழுந்தே முத்தந்தா
தேனே பாலே முத்தந்தா
தெவிட்டாக் கனியே முத்தந்தா
மானே மயிலே முத்தந்தா
மடியில் வந்து முத்தந்தா

இதில் "தாலாட்டு" என்ற தலைப்பிலுள்ள நீண்ட (25) பாடல்களைக் கொண்ட கவிதையை தவிர ஏனைய பாடல்கள் அனைத்தும் மழலைப்பாடல்களாகவே உள்ளன. இம் மழலைப் பாடல்கள் பாடசாலை செல்லாத மூன்று வயது முதல் ஐந்து வயதுவரையிலான பிள்ளைகளுக்குரிய பாடல்களாகும். இவ்வயது பிள்ளைகள் சிலர் பாலர் பாடசாலை எனும் தனியார் பாடசாலைகளில் கற்கும் நிலை உள்ளது. எனவே இக்கவிதைகள் பாலர் பள்ளிகளில் கற்பிக்கப்படுவது சிறந்த கல்வி முறையாக அமையும். இதே பாடல்கள் பள்ளிக்கூடக் கல்வித் தொடக்கப் பாடநூல்களிலும் தவறாது இடம்பெற வேண்டும்.

மழலைக் கவிதைகளும், குழந்தைக் கவிதைகளும் தரமான இலக்கியம் அல்ல என்று கருதும் அறிஞர் சிலரும் உள்ளனர். குழந்தை இலக்கியம் தொடக்க நிலை இலக்கியம். எனவே குழந்தைகளின் மனநிலையில், அவர்கள் அறிந்த சொற்களின் அடிப்படையில் குழந்தை இலக்கியங்கள் அமைகின்றன. எல்லாத் தமிழ் கவிஞர்களும் குழந்தைக் கவிதை படைப்பதில்லை. இத்துறைக்குரிய அறிவு பெற்றோரே குழந்தைக் கவிதைகளின் எழுத்தாளராக விளங்குகின்றனர். இவ்வுண்மையை தமிழர் அனைவரும் நினைவிற் கொள்ள வேண்டும்.

***ஔவையார் அருளிச் செய்த நல்வழி***

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் – கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யநுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.



# மனித உன்னதத்திற்கான கல்வி

பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி)

(சேர். பொன்.இராமநாதன் நினைவுப் பேருரையின் தொகுப்பு.)

மனித வாழ்வை மேம்படுத்தும் அதிமுக்கிய காரணங்களில் ஒன்றான கல்வியின் நோக்கங்களை காலத்திற்கேற்ப ஆராய்ந்து மதிப்பிட்டு தீர்மானிப்பது ஒரு தேவையாகும். மாபெரும் முன்னேற்றங்களை மிகக் குறுகிய காலத்தில் கண்ட சென்ற நூற்றாண்டு, தனது முடிவில் மனதிலே அன்பும் அமைதியும் இல்லாத தடுமாற்றமுள்ள மனித குலத்தையே விட்டுச் சென்றது.

ஆகவே மனிதன் கல்வியற் கொள்கைகளின் வளர்ச்சியையும், இன்றைய நிலையையும் சிந்தித்து அதற்கு வழிவகுத்த காரணத்தையும், பரிகாரத்தையும் இனங்காணவேண்டிய நேரமிதுவாகும்.

மனித உன்னதம் விளங்குவதற்கு மிகவும் கஷ்டமான சொல். சுருக்கமாக கூறுவதனால் தமிழின் குறள் தான் உதவ வேண்டும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான்
தெய்வத்துள் வைக்கப்படும்"

உலகத்திலே வாழவேண்டிய அன்பு நிலையையும் அறிவு நெறியையும் எடுத்துக்காட்டி மனிதனில் உள்ள தெய்வீகங்களை மலர வைப்பதே மத பேதங்களின் நோக்கமாகவும், கல்வியின் திட்டமாகவும் இருக்க வேண்டும். தன்னிலுள்ள தெய்வீகம் மலரும்போது தான் மனிதன் உன்னத நிலையை அடைகின்றான். இந்த ஆன்மீகச் சிந்தனையின் உண்மையை பல காலகட்டங்களில் மனிதன் அறியவும், உணரவும் ஆன்மீகவியலாளர் போதித்து வந்துள்ளனர். உபநிடத ரிஷிகள் மனித உன்னதத்தை சுதந்திரமாகவும், பரிபூரணமாகவும் அனுபவித்ததாக அறிகின்றோம். அவர்களின் உள்ளுணர்வும் சிந்தனையும் தந்த ஞானத் தொடர்பு, மனித வாழ்வின் உன்னத செயற்பாடாக எதிர்காலத்திற்கு வழிகாட்டியது பகவத் கீதை. கீதையின் செய்தி மனிதனின் ஆன்மீகச் செயற்பாட்டை விளக்குவதே. ஏற்கனவே மனிதனில் இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து அறிவது கீதையின் அடிப்படையான குறிக்கோளாகும்.

மனிதன் உன்னத நிலைக்கு ஏதுவானது மதிக்கும் தன்மைகளும், செயற்பாடுகளுமே. நாம் எதை மதிக்கின்றோமோ அதுவே ஆகின்றோம். மனிதத்தன்மையென்பது நல்ல மதிப்புக்களை மேம்பாடுகளை கொண்ட நிலைப்பாடாகும்

நமது வாழ்வில் நாம் தேர்ந்துகொண்ட கொள்கைகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் சார்ந்த கலந்துரைகளுக்கு ஏற்ப மதிப்புக்களை நிர்ணயிக்கின்றன. ஆகவே மதிப்பீடுகளை பல விதங்களில் வகுக்கலாம்.

உதாரணமாக சமூகக்கல்வி கற்பிப்பதற்கு யுனஸ்கோ தயாரித்த ஒரு கைநூல்களில் இருந்து சில மதிப்பு பிரிவுகளையும் அவை சார்ந்த மேம்பாடுகளையும் தந்துள்ளனர். ஆனால் நடைமுறையில் அந்த மதிப்புக்களின் துறைசார்ந்த பிரிவினர் தம்மால் மேம்பாடு காணப்பட்ட பிரிவுகளுக்கு அழுத்தம் கொடுப்பர். மற்ற மேம்பாடுகளுக்கு அழுத்தம் குறைக்கப்படும். அல்லது முற்றாக நிராகரிக்கப்படும்.

மனச்சாட்சி அன்பு போன்ற செயற்பாடுகள் அவர்களது செயல்களில் கவனிக்கப்படாமல் இருக்கலாம். அதே போல் அறிவியல் துறைசார்ந்த ஆசிரியர்கள் தமது மாணவர்களுக்கு கற்பிக்கும் போது புத்தி தெளிவான சிந்தனை, இவற்றினால் மாணவர் அடையும் பெறுபேறுகள் பற்றியே மேம்பாடுகளாகக் கருத்திற் கொள்வர். கல்வியின் நோக்கு உத்தியோகமாக இருந்தால் என்ன முன்னுரிமை கொடுப்பார்கள்? உத்தியோக மதிப்பு, உத்தியோகத்தில் வெற்றி ஆகியவை மேம்பாடுகளாகும். அங்கேயும் உண்மை, நேர்மை, பெருந்தன்மை, அன்பு ஆகிய சில்லறைகள் இருக்கலாம். அரசியல் வாதிகள் உண்மை, நேர்மை, மனச்சாட்சிகள் போன்ற மேம்பாடுகளுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என கருதும்போது அவர்கள் அரசியல் பேசும் மேம்பாடுகளான நீதி, சுதந்திரம் என்பன வெறும் சுலோகங்களாகிவிடும். கொள்கையில்லாத ஒழுக்கமில்லாத கல்வி மனிதாபிமானமில்லாத விஞ்ஞானம், அறநெறியில்லாத வணக்கம், இவை பிரயோசனமற்றவை, ஆபத்தானவை என்று பகவான் ஸ்ரீசாயிபாபா கூறுவார்

சமூகக்கல்வி பற்றிய யுனெஸ்கோ கைந்நூலின் மதிப்புக்கள் காலத்திற்கு காலம், கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் மாறுபடும் எனக் கூறப்பட்டுள்ளது. பெண்களுக்கு மரியாதை என்ற மேம்பாடு மனித இனம் முழுமைக்கும் பொதுவானது. எனினும் நடைமுறையில் கலாச்சாரங்களில் மாறுபடுகின்றது. தனிமனிதனுடைய மேம்பாடும், எண்ணமும், செயலும் சமூகத்தின் மேம்பாடுகளின் சாயல் அல்லது பிரதிபலிப்பு என்று கருதுவது தவறு எனக் கூறப்படுகின்றது.

**மேம்பாடுகள் பொதுச் சொத்து.**

அறிவியல், சமூகவியல் சார்ந்த இக் கூற்றுக்களைக் கேட்கும் போது மனித உன்னதத்திற்கான கேள்விக்கு உகந்த சிந்தனை இந்தப் பார்வைக்கு அப்பாற்பட்டதாக இருத்தல் வேண்டும் என நினைக்கிறேன். மனித உன்னதத்திற்கான மேம்பாடு என்றும், எக்காலத்திலும் மாறுபடுவதில்லை.

உன்னத மேம்பாடுகளிலான சிந்தனை, செயற்பாடுகள், சொல் என்பவை ஒன்றிணைந்ததாக அமைதல் வேண்டும். அத்தகைய மேம்பாடுகள் தனிமனிதனில் இருந்து ஊற்றாகி குடும்பம், சமூகம் என விரிந்து உலகத்தின் பொதுச் சொத்தாக இருக்க வேண்டும். மதத் தலைவர்கள், அறிஞர்களின் சாரமாகவும் இருத்தல் வேண்டும். சுருக்கமாகக் கூறின் அவை ஆன்மீகத்தின் வெளிப்பாடாக மிளிரும். அந்த மேம்பாடுகள் மனித மேம்பாடுகள் என்று பாபாவினால் இனங்காணப்பட்டன.

அறிவியல் பார்வையில் மனிதன் ஒரு மிருகம் என இனங்காணப்பட்டது. உயிரியல் சிந்தனையில் அவரின் அறிவு வளர்ந்து வருகின்றது. இரண்டாம் நூற்றாண்டில் **குளோடியஸ்கேலன்** என்ற பிரசித்தி பெற்ற அமைப்பியல், உடற்றொழிலியல் நிபுணர் மனிதனின் முன்னங்கை பற்றிப் படிக்க விரும்பினார். ஆனால் அவர் கீறிப் படித்த முன்னங்கை வாலில்லாக் குரங்கினுடையது. அவர் தொடங்கிய மனிதன்-மிருகம் என்ற ஒற்றுமை 19ஆம் நூற்றாண்டில் டார்வின் உடைய இனங்களின் தோற்றம், மனிதனின் பாரம்பரியம் என்ற பரிணாமக் கொள்கைகளில் இருந்து நெருக்கமடைந்தது.

மனிதனைப் பற்றி அறிவதற்கு மிருகங்களின் உடலும் தொழிற்பாடுகளும் அல்ல. பழக்க வழக்கங்களும் ஆய்வுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. உடற்றொழிலியலில் **பௌலோவின்** நாய்கள், மிருக நடத்தையில் **கொன்றாட்யோறன்ஸ்** என்பவரின் பறவைகள், உளவியலில் ஸ்கினரின் எலிகள் மிகவும் பிரசித்தி பெற்றன. இவை பற்றி "The Ascent of Man" என்ற பிரசித்தி பெற்ற நூலில் பிரனொஸ்கி எடுத்துக் காட்டிவிட்டு பின்வருமாறு கூறுகின்றார்.

மனிதனில் ஏதோ ஒரு தனித்தன்மை உண்டு. அன்றேல் வாத்துக்கள் தான் **கொன்றாட்லோறன்ஸ்** பற்றி விரிவுரையாற்றும் எலிகள் இனம்பற்றி ஆய்வுரை எழுதும்.

மனிதனுக்கும் குதிரைக்குமிடையில் உடலமைப்பில் ஒற்றுமை இருந்தும், குதிரை மனிதன் மேல் சவாரி செய்யயோசிக்கவில்லை. இவ்வாறு மிக நகைச்சுவையாக **பிரனொவ்ஸ்கி** கூறியபோதும் அவர்கூட மனிதனின் அறிவு ஆற்றலுக்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தது போல் தெரிகின்றது. இவற்றிற்கு மேலாகவும் ஓர் ஒற்றுமை உண்டு. மனிதனுடைய ஆத்மா அது தெய்வத்தின் குணமுடையது.

மனிதனின் அடிப்படை அலகு சமூகம் என்பது சமூகவியல், அரசியல் நோக்கமாகும். ஆனால் ஆன்மீகச் சிந்தனை-மனித வாழ்வு ஆத்மாவில் இருந்து ஊற்றெடுக்கிறது என்கிறார்கள். சமூகவியலாளர்கள் தமது ஆய்வுகளில், வகுப்பு வேற்றுமை, முரண்பாடு, எதிர்ப்புக்கள் என்பவற்றிற்கே அழுத்தம் கொடுக்கின்றனர். உண்மையான கசப்புகளைக் காட்ட வேண்டிய வேளையில் அதே சமூகத்தில் மண்டியுள்ள அன்பு சால் ஒற்றுமை, சேவை மனப்பாங்கு, பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கும் அறிவு பூர்வமாக காட்டியிருந்தால் அவர்களின் ஆய்வு வேற்றுமை முரண்பாடுகளுக்கு பரிகாரமாக இருந்திருக்கும். போராட்டங்களைக் குறைப்பதற்கு வாய்ப்பு தந்திருக்கும். மனிதனை ஒன்றிணைப்பது அவர்கள் சார்ந்த விருப்பு வெறுப்புக்கள், குழு உணர்வு என்று அறிவியல் ஆய்வுகளின் பார்வையாக இருந்தது. ஆனால் மனிதனை இணைப்பது மனிதனின் மனச்சாட்சி எல்லோருக்கும் பொதுவான ஆத்மாவே என்பது ஆன்மீகச் சிந்தனை.

உளவியல் பகுப்பாய்வில் பிதாமகன் **சிக்மன்டிஃபுராய்ட்** அவர்களின் கோட்பாடுகளுக்கு அளவுக்கு மீறிய ஆரவாரமும், அழுத்தமும் தவறான விளக்கமும் கொடுக்கப்பட்டு பாலியல் குழப்படிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றது. உளவியலின் உயரிய நோக்குகள் மனிதன் தெய்வத்தின் பொறி என்ற ஆன்மீகத் தத்துவத்துள் இணைந்தால் தான் பாலியல் சிந்தனைகளின் சீர் அழிவுகளை தணிப்பது சுலபமாகும். தற்புகழ்ச்சி, அதியுயர் தற்புகழ்ச்சி போன்றவற்றிற்கு நவீன சிந்தனை அழுத்தம் கொடுக்கின்றது. ஆன்மீக வளர்ச்சிக்கு ஈகோ எதிரியாகும். வாழ்வின் பலதரப்பட்ட மாற்றங்களுக்கும் நடுநிலைப் பிறழ்வுகளுக்கும் காரணம் நிரந்தரமற்ற சில நவீன நடைமுறைகளின் மேல் வைத்துள்ள வெறியான ஆசையாகும். ஆனால் ஒரு நாட்டின் பாரம்பரியம் சரித்திர சோதனைக்கு உட்பட அதற்கு மலிவான மதிப்புக் கொடுப்பது தன்னையே தாழ்த்துவதாகும். அப்போது மேம்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

**மனித மேம்பாடுகள் ஐந்து**

சமூகவியல் கருத்துக்களை நவீன விஞ்ஞானத்தால் முற்றாக நிராகரிக்க முடியாது. ஆத்மா சார்ந்த கருத்துக்களும் நவீன நடைமுறைகளும் ஒன்றிணைந்து நல்வாழ்விற்கு வேண்டிய வழிமுறைகளைக் காண்பதில் எதிர்காலம் தங்கியுள்ளது.

பகவான் பாபா ஐந்து மனித மேம்பாடுகளை இனங்கண்டுள்ளார். ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போன்று மனித வாழ்வு சகல நடத்தைகளிலும், நடவடிக்கைகளிலும் மிளிர வேண்டும். ஐந்து மேம்பாடுகளுக்கும் ஆதரவு சுருதியாக இருப்பது அன்பு, தர்மம், சத்தியம், சாந்தி, அகிம்சை என்பதாகும்.

அன்பு அனைத்து மனித மேம்பாடுகளின் அன்னையாகும். மனித ஒழுக்கத்தின் அடிப்படையானது இல்லாவிடின் மனிதன் உன்னத நிலையை அடைய முடியாது. மதநூல்கள்

சமயப் பெரியாரின் ஞானமொழிகளில் இருந்து அன்பு பற்றிய மேற்கோள்களை அறியலாம். ‘அன்புற்று அமர்ந்த வழக்கென்ப’ என்ற வள்ளுவர் குறளில் குறிப்பிடும் இன்பம் சிற்றின்பமல்ல, பேரின்பம். அகத்தின் ஆனந்தம் ஆத்மா அடையும் பேரின்பம். ‘அன்பின் வழியது உயிர்நிலை’ இதன் மூலம் உயிர் நிலை என்பது வெறும் உயிர் கொண்ட நிலையல்ல. அது உயர்நிலையாகும் என்பது இராமநாதன் பெரியாரின் அன்பு குறித்த சிந்தனையாகும்.

வள்ளுவர் சிந்தனையில் உயர்நிலை என்ற உள்ளார்ந்த கருத்தை அறிவதற்கு பாபாவின் வார்த்தைகள் உதவுகின்றன. சதையும், இரத்தமும் கொண்ட வெறும் பிராணியல்ல மனிதன். அவன் ஆத்மா உருவானவன். அந்த உண்மையை உணர்ந்தால்தான் ஆன்மீகம் அவனில் தெரிய வரும். உண்மையை உன்னில் உணரவும் உன்னில் உண்மையை அறியவும் தான் உடல் உனக்கு தரப்பட்டது – என்கிறார் பாபா.

இராமநாதன் பெரியார் அன்பு என்ற கோட்பாட்டிற்கு அர்த்தமும், அந்தஸ்தும் தந்துள்ளார். “பூரண அன்பு ஆன்மீக வளர்ச்சியைக் காட்டும். அந்த அன்பான உயரமும், அழகும் அறியாதது நண்பர்கள், அயலவர்கள், எதிரிகள் எவரிலும் வேற்றுமை காணாது. எல்லோர் மேலும் சமமான அன்பு கொள்வது, கொடுமை செய்பவர்களுக்கு கூட உதவிசெய்வது இத்தகைய முழுமையான அன்பையே இந்திய ரிஷிகள் ஆத்மபேதம் என்றனர்.” – எனக் கூறுகின்றார் அவர்.

அது எண்ணம், சொல், செயல் உயிருக்கு தீங்கு விளைவிக்காது. கடவுள் இருக்கிறான் என்பதை உணர்த்தியவாறு இருக்கும்.

அன்பை எடுத்துக்கொண்டால் மனித மேம்பாடுகளின் உப மேம்பாடுகளாக நட்பு, பக்தி, மனிதநேயம் ஆகியவற்றை சேர்க்கலாம்.

சத்தியம்-பகுத்தறிதல் தன்னையறிதல், அறிவுத்தாகம், ஆய்வு, மனம், மதங்களை மதித்தல் என்பவற்றையும், தர்மம்-ஒழுக்கம், சுத்தம் நேர ஒழுங்கு மதிப்பு, தியாகம், சமத்துவம் பிறரை மதித்தல், உதவி செய்தல், எளிமையான வாழ்வு என்பவற்றையும் சாந்தி-மனத்திருப்தி பொறுமை தன்னடக்கம், தன்மானம், தன்னம்பிக்கை, புரிந்துணர்வு ஆகியவற்றையும் கொள்ளலாம்.

அகிம்சை மன்னிப்பு, சகோதரத்துவம், கூட்டுறவு சமூக நீதி, சமூக சேவை இயற்கை பேணல், சூழல் தூய்மை என்பவற்றை உப மேம்பாடுகளாகக் கொண்டது.

மனித மேம்பாடுகளை கற்பிக்கும் போது உப மேம்பாடுகளை கண்டுபிடிப்பது அதற்கு உதவுகின்றது. தர்மம் போன்று தோன்றும் ஒருவரின் செயற்பாடு அன்பின் காரணமாக செயற்பட்டால் தான் தர்மம் அந்தக் காரியத்தின் மூல எண்ணமாகும். தனக்கு ஏதாவது நன்மை, புகழ், பட்டம், பதவி கருதியதாயிருப்பின் அது தர்மமல்ல.

நீ செய்யும் செயலில் இருந்து நீ நல்லவனா? கெட்டவனா? என்று கூறுவது கடினம். நீ நல்லவனாக இருந்தால்தான் நீ செய்வது நல்லதாக இருக்கும். எதுவும் அன்பு என்ற செயற்பாட்டின் விளைவாக இருத்தல் வேணடும்.

மக்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்றுதான் எக்காலத்திலும் எல்லா நாட்டினரும் விரும்புவர். எல்லோரினதும் நல்வாழ்வு கருதிச் செயற்படுபவரே உன்னத நிலை அடைந்தவராவார். மனித ஒழுக்கத்திற்கும் அதற்கான கல்வி ஆன்மீகம் சார்ந்ததாக அமைய வேண்டும். பல தரப்பட்ட துறைகளில் ஈடுபட்டவர்கள் வாழ்வினாலும் ஆன்மீக சாதனையினாலும் பக்தி நிலவும் ஆளுமையினாலும் குருவாக அழைக்கும் தகுதியினைப் பெறுகிறார்கள்.

புத்துயிர் பெற்ற நவீன இந்தியாவின் விடிவெள்ளியான **ராஜாராம் மோகன்ராய்** ஓர் உன்னத வாழ்வை வாழ்ந்து காட்டிப் பிரகாசித்தவர். வயதில் மூத்தவர்.

**நாவலர்** சிறந்த குரு என்று சொல்லுக்கு ஏற்றவராக சமயம் சார்ந்த நன்நடத்தை

கற்பிப்பதில் வல்லுனராக இருந்தார். அவரது 'பாலபாடம்' பிள்ளைகளுக்கு நல்லொழுக்கத்தைப் போதித்தது. ஔவையாருக்கு அடுத்து ஒழுக்கம் நிலவிய சிறுவர் இலக்கியம் படைத்த எழுத்தாளராக நாவலரைக் கொள்ள முடியும்.

இந்தியாவில் நாவலருக்குச் சமகாலத்தில் வாழந்தவர் **இராமகிருஷ்ணர்.** ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று புதுமை கண்டவர் அவர். திருமூலர் வழியிலும் சமரசத்திற்கு புத்துயிர் தந்த தாயுமானவர் வழியிலும், சமரச சன்மார்க்கத்தை அவர் நிறுவினார். இராமகிருஷ்ணரும் ***சில்திசைபாபாவும்*** இரண்டு ஆண்டுகள் வித்தியாசத்தில் பிறந்தனர். இருவரதும் வாழ்வின் அடிநாதமே ஆன்மீகம் தான். தெய்வீகத்தில் வாழும் உருவங்களாக அவர்கள் வாழ்ந்தார்கள். 18ஆம் நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த யேசுக் கிறிஸ்து போல் இருவரும் அருமையான நீதிக்கதைகளை வழங்கினார்கள். இராமகிருஷ்ணருக்கு உன்னதமான சீடராக **விவேகானந்தர்** கிடைத்ததால் அவரது சிந்தனைகள் உலகளாவிய ரீதியில் பரவின.

சில்திசைபாபாவுக்கு அத்தகைய பிரகாசமான சீடர் இல்லை. அவர் சமாதியடைந்து எட்டு ஆண்டுகளின் பின் அவரது அவதாரமாகத் தோன்றிய சத்தியசாயிபாபா இன்றைய உலகம் வியக்கும் வகையில் சர்வமத சமரச நிலையில் ஆன்மீகத்திற்கு சரியான அர்த்தமாக உன்னத கல்விச் சேவை நிலைக்கு வழிகாட்டினார்.

சுவாமி **விவேகானந்தர்** பிறக்கும்போது இராமநாதனுக்கு 12 வயது. இராமநாதனின் சமயக் கல்வி சம்பந்தமான பேச்சுக்களைப் படிப்பவர்கள், விவேகானந்தனின் கருத்துக்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டை உணர முடியும். மனித உன்னதம் என்ற பதம் விவேகானந்தரால் கையாளப்பட்டு அவரது சொற்பொழிவுகளில் ஊடுருவியதை உணர முடியும். விவேகானந்தர் அடிக்கடி கேட்கும் ஒரே கேள்வி நீ மனிதனா? என்பது.

**விவேகானந்தரின் கல்விக் கொள்கை**

நீ எந்தச் சமயத்தை, சாதியைச் சேர்ந்தவன் என்பதை நான் அறியவிரும்பவில்லை. நீ மனிதனா? என்பதை அறிய விரும்புகிறேன். இது தான் விவேகானந்தரின் கல்விக் கொள்கையாகும். அவர் வேண்டியது மனிதனை உருவாக்கும் கல்வி. (The Man Making Education) பாபாவின் கூற்றுக்களை அறிந்தவர்களும் இதே கூற்றுக்கள் இருப்பதை அறிவார்கள். I am a Man. Not an animal.

எனக் கூறும்படி சொல்வர். மிருகமாகப் பாவித்த உயிரியல் சமூகக் கேட்பாட்டினால் மனித மேம்பாட்டிற்கு ஏற்படக்கூடிய விபத்துக்கள் விபரீதங்கள் பற்றி ஏற்கனவே பார்த்தோம். எனவே இதற்கு நிவர்த்தியான கல்வியும், சிந்தனையும், வழிமுறையும் அறிஞர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மனிதன் சத்தியத்தையும் தர்மத்தையும் முழுமையாக உணர்ந்து வாழ வேண்டும் என்ற சிந்தனை **தாகூரின் சாந்திநிகேதன்** 1907இல் ஆரம்பமாகக் காரணமானது.

அந்தக் காலக் கல்வி பிள்ளையின் புத்தியின் உடல் ஆன்மீக வாழ்வுக்கிடையினில் ஆழ்ந்த பிளவு உண்டுபண்ணுவதாக தாகூர் கருதினார். ஆனால் நாம் வாழும் உலகில் இருந்து பிரிக்கப்படாத ஆன்மீக உலகத்திலேயே தமக்கு நம்பிக்கை இருப்பதாக அவர் கூறினார்.

இக்கல்விச் சிந்தனையாளர் வரிசையில் நாம் போற்றுபவர் அரவிந்தன். கல்வியானது முழுமையடைய வேண்டுமானால் அது மனிதனின் உயிர், உடல், உளம், புத்தி, ஆத்மா என்ற ஐந்தும் ஒன்றிணைந்ததாக இருத்தல் வேண்டும் என அவர் கூறினார்.

**பாரதியார்** அரவிந்தரின் நண்பர். அவர் கவிதை ரூபத்தில் தமிழருக்கு கிடைத்த ஆன்மீகச் செல்வம். தெய்வபக்திக்கு முன்னிடம் கொடுத்த முற்போக்கு கவிஞர். ஆத்மீக

சக்தியின் அழுத்தத்தை தோத்திரப் பாடல்கள் மட்டுமன்றி பாப்பா பாட்டுக்களிலும் காணலாம். ஐம்பது வருடங்களுக்கு முன் வாழ்ந்த **ரமண மகரிஷி** அவர்கள் அடியார்களின் அக இருள் அகன்று விடுவது ஒரு அனுபவம் என்று கூறியுள்ளார். ஏறத்தாள அவரது காலத்தில் வாழ்ந்த மோகன்தாஸ், காந்தி மகாத்மா என்று போற்றப்படுவது அரசியல் சாணாக்கியத்தினாலோ அறிவின் மேதாவிலாசத்தினாலோ அல்ல. தோல்வியிலும் வெற்றியிலும் சத்தியத்தைக் கடைப்பிடித்தவர் என்பதனாலேயே மகாத்மாவாகப் போற்றப்படுகின்றார்.

எல்லா நாடுகளிலுமே இன்றைய அரசியல் வாதிகள் மனித அழிவுக்கு எய்ட்ஸ் நோயுடன் போட்டியிடுகின்றனர். இராமநாதன் காலத்தில் இளைஞராக இருந்தவர் **சுவாமி விபுலானந்தர்**. அவர் பல கல்வி நிறுவனங்களையும், ஆச்சிரமங்களையும் தோற்றுவித்து ஒழுக்க வாழ்வை வற்புறுத்தியவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ் பேராசிரியராக இருந்தவர் ஓர் உன்னதமான ஆன்மீகவியலாளர். விபுலானந்தர் ஞாபகத்திற்கு எமது பல்கலைக்கழகம் மரியாதை அளிக்க வேண்டும்.

**இன்றைய கல்வி நிலை.**

மனித மேம்பாடுகளைப் பொறுத்தவரை இன்றைய கல்விநிலை பயங்கரமாக உள்ளது என இலங்கை இந்தியக் கல்விமான்கள் கூறுகின்றனர். இலங்கையில் 1997இல் வெளியான பொதுக் கல்விச் சீர்திருத்த அறிக்கையில் "எமது கல்வித்திட்டமானது சமூக மனப்பான்மையையும் பன்மைமக்கள் கொண்ட ஒரு சமூகத்தில் மனித வாழ்வுக்குரிய மேம்பாடுகளை ஊக்குவிக்கத் தவறிவிட்டது. மாணவர்கள் கூட்டுணர்வுடன் முரண்பாடுகளை தவிர்க்கவும் சுமுகமாக தீர்க்கவும் தகுதி பெறவேண்டும். மனித உன்னதத்துவமான கல்வி பாடசாலையின் எல்லா நடவடிக்கைகளிலும் இணைக்கப்படவும் பாடசாலைத்திட்டங்களை வகுக்கும்போது அதற்கு முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும்." எனக் கூறப்பட்டது.

21ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழும் எல்லா மக்களினதும் எதிர்காலம் குறித்து நாம் பீதியடைகின்றோம். ஏன்?

1. மகான்களின் சிந்தனை கல்வி ரூபத்தில் அடிமட்ட மக்களிடையே சரியாகச் சுவறவில்லை.
2. கடந்த இரு நூற்றாண்டுகளில் முக்கியமாக மறைந்த நூற்றாண்டில் விஞ்ஞானம் தொழில்நுட்பவியல் என்பன உடலில் ஏற்படுத்திய மாற்றங்களின் வேகம், உத்வேகம் சமய அமைப்புக்களை நிலைகுலையச் செய்தன. பாரம்பரிய வேர்கள் கருக மனிதன் அதிர்ச்சி நிலையில் இருக்கிறான்.

**நவீன நாடோடிகள்**

இந்த தீவிர மாற்றங்கள் சமூக உணர்வியலில் பாதிப்புக்களை ஏற்படுத்தி விட்டன. நவீன நாடோடிகள் அதிகரித்து விட்டனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணத் தமிழன் நல்ல உதாரணம். விஞ்ஞானத்தின் ஆதிக்கத்தால் சமூகம் மாறவில்லை ஒரு புதிய சமூகம் தோன்றிவிட்டது எமது கல்வி முறை பயங்கரமாகப் பழுதடைந்து விட்டது என்கிறார் **அல்பின்ரொயிலர்.**

விஞ்ஞானத்தினால் உண்டாகும் அழிவுபோல, உயிரியல்கலங்களின் அழிவுகளும் இயற்கை நியமங்களை விழுத்திவிடும் என்ற பீதி எல்லோர் மனதிலும் உண்டு. குளோனிங் போன்ற விஞ்ஞான விளையாட்டுக்கள் வினையில் முடியலாம்.

1. மனதைச் சாந்தப்படுத்த வேண்டிய மதம் ஆன்மீகத்தை மறந்துவிட்டது. அது அரசியல் ஆதிக்கம், ஆரவாரங்கள் மீது அக்கறை கொண்டுள்ளது.

2. விஞ்ஞானம் இல்லாத சமயம் குருடு. சமயமில்லாத விஞ்ஞானம் முடம். உலகமக்கள் இப்போது இரண்டாகவும் உள்ளனர். நல்லவர்களாக இருப்பவர்கள் ஊமைகளானதே துன்பங்களுக்கு காரணம் என்கிறார் **ஐன்ஸ்டயின்.**

பாகிஸ்தான் நாட்டு அணுசக்தி விஞ்ஞானி அப்துல் காதர் கான். இந்தியாவை சில நிமிடங்களில் அழிப்போம், அதற்கான அணுகுண்டு, ஏவுகணைகள் தயாராக உள்ளன என்று கூறியது சமீபத்தில் உதயனில் செய்தியாக வெளிவந்தது. நாங்கள் நகர்களை அழிப்போம். அதற்கு தயார் என்றுதான் இப்படிச் சொல்லப்படுகின்றது.

இதை நாங்கள் படிக்கும் போது மத அரக்கனும் விஞ்ஞான விசரனும் ஒத்து ஊழித்தாண்டவம் ஆடும் காட்சி கண்ணில் தெரிகிறது. இத்தகைய சிந்தனை பாகிஸ்தானுக்கு மட்டுமுரியதல்ல. மதங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. 'ஹிரோசிமாவையும் மக்களையும் அமெரிக்கா அழித்தது. வெவ்வேறு மதங்களைக் கடைப்பிடிக்கும். அதிதீவிர சமயப் போக்கினால் ஏற்படும் விபரீதங்கள் இவை. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல.

**இலங்கைத் தேசியமும் தமிழர்களும்.**

சைவசமயத்திற்கு நாவலர் போன்று புத்த மதத்திற்கு புத்துயிர் தந்தவர் அநகாரிக தர்மபாலா. மகாபோதி சங்கத்தின் ஸ்தாபகர்.

தேசாபிமான எழுத்தாளர். தர்மபாலாவைப் பார்க்கும்போது எப்படி இலங்கையின் தேசியம் மிகவும் உறுதியான தமிழர் எதிர்ப்பு பார்வை கொண்டிருந்தது என்பது புலனாகும். இந்த மனப்பான்மை இப்போதும் சிலரிடம் உண்டு என லோலண்ட் பல்கலைக்கழக **பேராசிரியர் கார்லா விஸ்பூ** என்பவர் எழுதிய நூலில் காணப்படுகின்றது. அவர் காட்டும் இந்த நிலையைத் தமிழ் மக்கள் 1948இன் பின் படிப்படியாக அனுபவிக்கின்றனர்.

ஒரு மதத்தின் அழுத்தம் இனத் துவேசமாக மாறி மதத்தின் பெயரால் ஆதிக்கம் செய்யப்படுகின்றது. இதற்கு மதத் தலைவர்களே தலைமைவகிக்கிறார்கள். மிகக் குறைந்த அளவு அரசியல் தீர்வைக் கூட அவர்கள் விரும்பவில்லை.

சிறுபான்மையினரின் அபிலாசை உரிமைகளுக்குச் சிறிதளவு மதிப்பும் அழிக்காத பௌத்த மகாசங்கத்தின் மனப்போக்கு நாட்டை பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்று "இந்து சாதனம்" பத்திரிகை கூறுகிறது. இந்தப் பேரழிவை தவிர்க்க மதத்தலைவர்களும் ஏனையோரும் பேதமின்றிச் செயற்படுவது இன்றியமையாதது.

கல்வியின் விரிவான பயன் பிள்ளைகள் நல்லொழுக்கத்தையும் மனித உணர்வையும் அடையச்செய்தல் வேண்டும். கல்வி கற்பிக்கும் தகுந்த முறையைக் கண்டறிந்து உபயோகிக்க வேண்டும். அத்தகைய கல்வியால் பிள்ளை ஆன்மீகத்திற்கு பக்குவமான மதிப்பளிக்கும். யாழ் பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் மனித மேம்பாடுகள் உயரத்தக்கதாக ஆன்மீகக் கல்விக்கான பீடம் (FACULTY OF SPIRITUALITY) ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

(நன்றி உதயன்)

# பரிசளிப்பு விழாவின் ஞாபகங்கள் அழைப்பிதழ்கள்

யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
**பரிசளிப்பு விழா 1994**

இடம்:- யா/ இந்து மகளிர் கல்லூரி மண்டபம்
காலம்:- 09-10-1994 ஞாயிறு மு.ப 9.00 மணி
தலைவர்:- திருமதி யோ. ஸ்ரீ விக்கினேஸ்வரா (அதிபர்)
பிரதம விருந்தினர்:- திரு. சி புவேந்திரன்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர் தனிஞர் யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்:- திரு வ. ஞானையா
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)
திருமதி ஏ ஜெயராஜா அதிபர் (இந்து மகளிர் கல்லூரி)
செல்வி ம. யாகவி மாணவர் அமைப்பு
(தமிழ் மகளிர் அமைப்பு பொறுப்பாளர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்.

**யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை**
**பரிசுத்தினம் - 2003**

காலம் : 2003.11.29 சனிக்கிழமை மு.ப. 9.30 மணி
இடம் : விசாலாட்சி மண்டபம் (யா/ யாழ். இந்து மகளிர் கல்லூரி)

தலைவர் : திருமதி த..அ.துரைசிங்கம் (அதிபர்)

பிரதம விருந்தினர் : உயர்திரு. ப. விக்னேஸ்வரன் அவர்கள்
B.Sc. Dip. in. Ed. S.L.E.A.S.
(வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)

பரிசில் வழங்குநர் : திருமதி. தவமணி விக்னேஸ்வரன் அவர்கள்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

**யா/யாழ். இந்து மகளிர்**
**ஆரம்ப பாடசாலை**
**பெற்றோர் தினமும்**
**பரிசளிப்பு விழாவும் - 1997**

இடம்: யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி
விசாலாட்சி மண்டபம்
காலம்: 15-11-1997 சனிக்கிழமை
மு. ப. 9.30 மணி (புதிய நேரம்)

தலைவர்: திருமதி தனரஞ்சனி - துரைசிங்கம் (அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு. க. இரத்தினராசா
(கல்விப் பணிப்பாளர், யாழ். வலயம் 1)
திருமதி யோகேஸ்வரி - இரத்தினராசா

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை
**பரிசளிப்பு விழா - 1999**

இடம் : விசாலாட்சி மண்டபம்
(யாழ். இந்து மகளிர் கல்லூரி)
காலம் : **09-12-2000** சனிக்கிழமை
முற்பகல் **9-30** மணி (இலங்கை நேரம்)
தலைவர் : திருமதி தனரஞ்சினி துரைசிங்கம் (அதிபர்)
பிரதம விருந்தினர் : திரு. குணரட்ணம் செயபாலன் அவர்கள்
(பொறியியலாளர் கல்வித்திணைக்களம் யாழ்ப்பாணம்)
பரிசில் வழங்கல் : திருமதி வசந்திமாலா செயபாலன் அவர்கள்
அதிபர், யா / கொக்குவில்/ துறை
இந்து மகா வித்தியாலயம்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள். மாணவர்கள்

# பரிசில்களின் ஞாபகங்கள்











# சிறுவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பினையும் பேணுவதில் சமுதாயத்தின் பங்கு

**செல்வி மகிழினி - சி**
யாழ் வேம்படி மகளிர் கல்லூரி உயர்தர பாடசாலை

"தனி, மரம் தோப்பாகாது" என்பதை யாவரும் அறிவோம். ஒரு கிராமம், நகரம், தேசம் எதை நோக்கினும் பல மானிட அங்கத்தவர்களைக் கொண்டது தான் சமூகம்.

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிதினும் அரிது" "அதிலும், கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிதினும் அரிது" என்கிறார் ஔவையார். ஆனால் மானிடரோ சமூகத்தின் மத்தியில் பகுத்தறிவற்ற தீக்கோழி தலையை மட்டும் புதைத்து தான் மறைந்து விட்டதாக எண்ணுவது போல, கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், மனச்சாட்சி இருந்தும் உள்ளத்தில் கூன் விழுந்தவராய் சமூகம் தங்களை எப்படிக் கணிக்கும்? என்று நினைவே இல்லாமல் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று நடப்பது. அறிவறிந்த சான்றோருக்கு மன வேதனையைத் தருகிறது.

அழகு, அவலட்சணம், வேண்டியவர், வேண்டாதவர், ஏழை, பணக்காரன் என்று பாரபட்சம் காட்டி முகமன் கூறி திறமையான சிறுவனில் இல்லாத ஒரு குறையையும் சமூகத்திற்குக் கூறி சிறுவர்களின் உள்ளங்களைப் பாழடிக்கும் சந்தர்ப்பங்கள் இல்லாமல் இல்லை. திறமைசாலி ஒருவன் எப்போட்டியிலும் முழு ஆர்வத்துடன் பங்கு பற்றி இலகுவாக வெற்றியீட்டுவான். ஆனால் அவனுக்குப் பங்கு பற்றும் சந்தர்ப்பத்தை சமுதாயம் அளித்தால் அல்லவோ?

அன்பினால் எதனையும் சாதித்துவிடலாம். சிறுவர்களின் இயல்புக்கேற்ப அவர்களை அணுகி அவர்களின் ஆற்றல்களை வளர்க்க சமுதாயம் முன்வர வேண்டும். பாடசாலைகள், வாசிகசாலைகள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சிறுவர்களிற்கு விளையாட்டு, பேச்சு, நடனம், நாடகம், சித்திரம், வினாடிவினா போன்ற போட்டிகள் வைத்து ஊக்குவிக்கின்றன.

யுனெஸ்கோ போன்ற நிறுவனங்கள் சமூகக் குறைபாடுகள் இன்றி போட்டிகளை வைத்து குறைபாடுள்ள சமூகத்திற்கு சவாலாக அமைவதில் பெருமை அடைபவர்கள், பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அல்லாமல் வேறுயாராக இருக்க முடியும்?

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் ஒக்டோபர் முதலாந் திகதியில் உலக சிறுவர் தினத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருடாவருடம் உலகெங்கும் கொண்டாடப்படடு வருகிறது ஏன்?

சிறுவர்களிற்கு எந்த நிகழ்விலும் முன்னுரிமை வழங்கி நாளைய உலகை ஆள அத்திவார மிடுவதற்காக சிறுவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு சமூகம் தக்க பதில் அளிக்க வேண்டும். அவர்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது.

ஒரு சமுதாயம் கண்ணை இமைகாப்பது போல சிறுவர்களின் நலனைப் பேணுமேயானால் பண்பட்ட உள்ளங்களால் பயனுள்ள சர்வதேசம் உருவாவது நிச்சயம்.

நமக்கு மேலே ஒரு சக்தி இருந்து நம்மை ஆட்கொள்கிறது என்பதை உணர்ந்து, திருக்குறளில் திருவள்ளுவரால் கூறப்பட்ட வையத்தில் வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளைப் பின்பற்றி, விவேகானந்தர் "களை முளையா மண்" என உவமித்துக் கூறிய சிறுவர்களின் உள்ளங்கள் பண்பட சமூகத்தின் பங்கு மிக மிக முக்கியம். நுணுக்கமாக எண்ணிப் பார்த்தால் "இளங்கன்று பயமறியாது" சமூகம் தான் அரவணைத்து அன்பும், ஆதரவுமாக,

அனுபவப்பேறும், வரவரத் தெளிவும், தென்பும், தேற்றமும், நல்ல மாற்றமும் ஏற்பட சிறுவர்களைப் பேணி, பெரிய நிலத்தைப் பிளந்து செல்லும் வேர் போல, உறுதியாக நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும்.

சிறுவர்களின் உள்ளம் கண்ணாடி போன்றது. அதனை உடையாது பாதுகாக்கும் பொறுப்பு சமூகத்தின் கைகளில்தான் உள்ளது. ஒரு சிறுவன் அறிவாற்றலுடன், குறிப்பறிந்து செயற்படுவதற்கு மனதிலே துடிப்பு இருக்க வேண்டும். சொல்லாமலே செய்பவர் பெரியார், சொல்லிச் செய்பவர் சிறியார், சொல்லியும் செய்யார் கயவர் என்பார்கள். இத்தனையும் சமூகத்தின் வழிகாட்டலில் தான் தங்கியுள்ளது. ஒருவன் தவறு செய்து விட்டால் அதனை மன்னித்து அவனை நல்லபடி அணுகி, அடிக்கிற கைதான் அணைக்கும் என்பதற்கிணங்க, புத்திமதி கூறி வாடும் பயிருக்கு வான்மழை போல, அவனை நற் பிரஜை ஆக்குவது, சமூகத்தின் கடமையே. இதே நேரம் சிறுவன் நல்லது செய்யும் போது, பாராட்டி ஊக்குவிக்கத் தவறவும் கூடாது.

இரு சிறுவர்கள் சண்டையிட்டால், போட்டியிலே வெற்றி பெற்றவர் தோல்வி அடைந்தவரை ஏளனம் செய்தால், வெற்றியையும் தோல்வியையும் சமனென மதிக்கும் பக்குவத்தை வளர்க்கவும், அவர்கள் சற்று நேரத்தில் வேற்றுமையை மறந்து, ஒற்றுமையாகவும், புரிந்துணர்வுடனும் சமாதானமாக நண்பர்களாக சந்திக்கும் பண்பை வளர்க்க வேண்டும். பகைவனுக்கும் சந்தர்ப்பத்தில் உதவி செய்து நண்பர்களாக வியக்கும் நற்பண்பை வளர்க்க வேண்டும். ஒரு சிறுவனின் உரிமையோ பாதுகாப்போ பாதிக்கப்பட்டால், சமூகத்திடையே நியாயபூர்வமாக பலகுரல்கள் ஒலிக்க வேண்டும். நீதிக்குப் புதைகுழி தோண்டிப் பெருமையடைபவர்களைச் சட்டத்தின் முன்னிலையில் நீதிக்குத் தலைவணங்கி உண்மையின் உயர்வைச் சமூகத்தில் புலப்படுத்த வேண்டும். சிறுவர்களின் அடிப்படை உரிமைகளை அவர்களின் உடல், உளம் வென்றெடுக்க சமுதாயம் கைகொடுக்க வேண்டும். இன்றைய சமுதாயமே நாளைய உலகை ஆளப்போகும் சிறுவர்களின் பாதுகாப்பினைப் பேணுவதில் முக்கிய பங்கெடுக்க வேண்டும்.

1990ஆம் ஆண்டிலிருந்து 2000ஆம் ஆண்டுவரை மூளை தசாப்தமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இத் தசாப்தத்தில் நாம் ஏன் சிந்திக்கக் கூடாது? நேரம் பொன்னானது. சிறுவர்கள் ஒவ்வொருவரும் தகுதிக்கேற்ப, ஆற்றலுக்கேற்ப ஆக்கபூர்வமான சிந்தனைகளில் ஈடுபடவேண்டும். சிறுவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்த சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது சமுதாயமே.

விஞ்ஞானம் வளர்கிறது என்று சொல்லி அழிவுப் பாதையில் செல்லும் மூத்த சந்ததியினரை ஆக்கபூர்வமான சாதனைகள் புரிந்து சிறுவர்கள் மானிடனாகப் பிறந்த பயனை உலகசாதனைப் புத்தகத்தின் மூலம், நிரூபிக்கக் கூடாதா? ஏன்? ''பருவத்தே பயிர் செய்'' என்பார்கள். சிறுவர்களின் உரிமைகளையும் பாதுகாப்பினையும் அந்தந்த வயதில் பேணுவதில் சமுதாயம் தனது பங்களிப்பை, செவ்வனே செய்தால் நடக்க முடியாதது ஒன்றுமில்லை.

''பாடை ஏறினும் ஏடது கைவிடேல்'' என்பதற்கிணங்க ஏட்டுக்கல்வியை மட்டும் புகட்டாது சிறுவர்களிற்கு உண்மை, நேர்மை, அன்பு, பண்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, என்பனவற்றையும் உரியகாலத்தில் பாலோடு தேன் கலந்து பருகுவது போல் புகட்டவேண்டும். பாடசாலை சமூகத்தில் சட்டம் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும், பெரியோரைக் கனம் பண்ணவும், நல்ல நண்பர்களின் சகவாசத்தை ஏற்படுத்தவும், நற்பொழுது போக்குகளை ஏற்படுத்தவும், சமுதாயம் முன்வர வேண்டும். நமதுநாடு, தமது சிறுவர்கள் என்ற உணர்வோடு சமுதாயம் பாகுபாடின்றி திறமைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். சிறுவர் செய்யும் நற்காரியங்களைத் தடை செய்யக் கூடாது. வழிகாட்டியாக அமையவும் முன் மாதிரியாக நடக்கவும், பொது நிகழ்ச்சிகளில் சகல சிறுவர்களினதும் உரிமைகளை உள்ளபடியே யாவரும் ஏற்கக்கூடிய முறையில், பகிர்ந்தளித்தல் சமுதாயத்தின் கடமையே.

# சீர்திருத்தக் கல்வி

**செல்வி திலகவதி குமாரவேலு**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

இப்பரந்த சமுதாயத்திலே மானிடன் பிறக்கின்றான். பல்வேறு சக்திகளால் அவன் உருவாக்கப்படுகின்றான். அவனை நாட்டின் நலன்தரு பிரசையாக உருவாக்கும் சக்திகளில் கல்வி ஒன்றாக அமைகின்றது. இக்கல்வியே மாணவனின் வருங்காலச் சமூக வாழ்க்கைக்கு அடிப்படையாகவும் அமைந்துள்ளது. உயர்ந்த இலட்சியங்களைத் தன்னகத்தே கொண்ட இக் கல்வியானது பாடசாலை மூலம் மாணவருக்கு அளிக்கப்படுகின்றது. இப்பாடசாலை வாழ்க்கையும் அதில் அளிக்கப்படும் பயிற்சியும் நல்ல முறையில் அமைவதற்கு ஊன்றுகோலாகவும் உறுதுணையாகவும் இருப்பவர் ஆசிரியரே.

ஆசிரியர் சமுதாயத்திலே ஆணிவேர் போன்றவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவனை உடல், உள, சமூக ஆற்றல்களில் சிறந்தவனாக உருவாக்கும் பெரும் பணி ஓர் ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாடசாலைச் சூழலிலே கற்பித்தல் கற்றல் செயல் முறைகளில் எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் குழந்தையின் இயல்புகளையும் தேவைகளையும் உணரும் சீர்திருத்தமான ஒன்றிணைந்த கல்வித் திட்டம் ஆசிரியருக்குத் துணைபுரிகின்றது.

மேலும் குழந்தைகள் தமது சுய முயற்சியின் வாயிலாகப் புதிய கருத்துக்களை உருவாக்கவும் பிறரின் கருத்துக்களை ஆராய்ந்து மதிப்பிட்டுத் தமது வகுப்பறையில் பயன்படுத்தவும், ஒன்றிணைந்த கல்வி உதவுகின்றது. எமது புதிய கல்வி முறை ''நாம் குழந்தைகளோடு குழுந்தைகளாக வாழ்வோம்'' என்று கூறுகின்றது. இக் கூற்றினை எடுத்துக் கொண்டால் குழந்தைகளின் இயல்புகளை ஆசிரியர் முழுமையாக அறிந்து அவற்றிற்கு ஒத்தவாறு கற்பித்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. குழந்தைகள் வளரும் செடிக்கொப்பானவர்கள். இச் செடியானது செழித்து வளர்ந்து நற்கனி கொடுக்கும் மரமாகத் திகழ வேண்டுமாயின் ஆசிரியரின் சீர்திருத்த, ஒன்றிணைந்த கல்வியிலேயே தங்கியுள்ளது. முற்காலத்தில் கல்வி எனும் மூன்றெழுத்து குறுகிய கருத்தைக் கொண்டதாக இருந்தது. ஆனால் நவநாகரிகம் மலிந்த மானிடர் விண்ணிலே காலடி எடுத்து வைக்கும் அளவிற்கு முன்னேறிக்கொண்டிருக்கும் இந்நாளிலே அது விரிந்து பரந்த பொருளைக் கொண்டுள்ளதாய் உள்ளது. புதிய செயல் முறைகளைப் பெறுதலும், முன்னுள்ள நடத்தையில் மாறுதல்கள் ஏற்படுவதும் கற்றலின் விளைவேயாகும். மேலும் பாடசாலை அனுபவம் மாத்திரம் அன்றி, இயற்கைச் சூழ்நிலைகளில் இருந்து பெறப்படும் அனுபவங்களினாலும் ஒருவன் கற்கின்றான். அத்துடன் புதிய சீர்திருத்த ஒன்றிணைந்த கல்வி முறை குழந்தையை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. சூழலில் ஏற்படும் பாடத்தைக் கொண்டு எல்லாப் பாடத்தையும் தொடர்புபடுத்திக் கற்கின்றான். மேலும் பாடசாலை அனுபவம் மாத்திரமன்றி இயற்கைச் சூழ்நிலைகளினின்றும் பெறப்படும் அனுபவங்களினாலும் ஒருவன் கற்கின்றான்.

அத்துடன் ஒன்றிணைந்த கல்விமுறைப் பாடசாலையே ஒரு குழந்தையின் முடி வளர்ச்சிக்கும் துணை செய்யும் சிறப்புமிக்க சூழ்நிலையாகும். ஆதலினால் ஒரு குழந்தையின் ஆர்வ ஆற்றலில் உள்ள தேவைகள், உணர்ச்சிகள் என்பவற்றை உணர்ந்து அதற்கேற்றவாறு கற்பிப்பதற்கு புதிய கல்விமுறை ஆசிரியருக்கு துணை செய்கின்றது.

மக்களிடையே இயல்பாகவே தனிவேறுபாடுகள் உண்டு. ஒவ்வொருவரும் தனது ஆர்வ ஆற்றலுக்கேற்ப கல்வி கற்க முடிகின்றது. இவ்வேறுபாடுகளை உணராமல் ஆசிரியர் கற்பிப்பதனால் எத்தனையோ மாணவரின் அறிவுத் திறன் பாதிக்கப்பட்டு அவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்படும் நிலையும் ஏற்படுகின்றது. ஆகவே சீர்திருத்தக் கல்வி புதிய கற்பித்தல் முறைகளை ஆக்கித் தந்துதவுகிறது. மாணவரின் தனி வேறுபாடுகளுக்கு ஏற்ப இவற்றைப் பயன்படுத்தி அவர்களின் ஆர்வத்தைத் தூண்டி கவனத்தைத் தன்பால் கவர்ந்து கல்வியின் முழுப் பயனைப் பெற ஆசிரியர் வழிகாட்ட முடிகின்றது.

மேலும் ஒன்றிணைந்த சீர்திருத்தக் கல்வி நேரடி அனுபவக் கற்றல், விளையாடிச் செய்து கற்றல் முறைகளாகும். ஒரு வகுப்பறையை எடுத்துக் கொண்டால் அங்கு நடைபெறும் கற்பித்தல் முறைகள் சிறப்புற அமைவதற்கும் அதன் மூலம் மாணவன் பயனடைவதற்கும் கற்பதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கி அதற்கேற்றவாறு முயன்று கற்க மாணவனை ஆயத்தப்படுத்தி அதனால் பெற்ற வளர்ச்சியை கணிப்பிடுவதே புதிய சீர் திருத்தக் கல்வி முறையாகும். இந்த மகத்தான சேவையை நிறைவேற்றுவதில் ஆசிரியரின் பங்கு மிகப் பொறுப்பானது. குழந்தைகளிடம் இயல்பாக அமைந்துள்ள திறமைகளை மலர்ச்சியடையச் செய்வதில் அதிநுட்பமான வழிகளை ஆசிரியர் கையாள வேண்டும்.

அத்திவாரம் முறைப்படி அமைக்காவிட்டால் கட்டடம் ஆட்டம் கண்டுவிடும். இஃது அனுபவ உண்மை. அப்படியே பாலர் விடயத்திலும் பக்குவமான அறிவுத்திறன் உருவாக்காவிட்டால் அவர்களுடைய பிற்கால வாழ்க்கை பாதிக்கப்படும். குழந்தைகள் வளர்ந்து அவர்களின் திறமைகள் மலர சீர்திருத்தக் கல்வி மூலம் ஆசிரியர் அருந்துணையளிக்க வேண்டும். இப்படைப்புவேலையில் ஆசிரியர் பல இன்னல்களையும் தாங்க வேண்டியுள்ளது. இங்கேதான் ஆசிரியரின் ஆளுந்திறன் போற்றப்படுகின்றது. ஒவ்வொரு குழந்தையின் தனியாள் வேறுபாடு அறிந்து அவர்களை வசீகரிக்கும் மனப்பாங்கு நிறைந்தவராய் மாறுதல் வேண்டும். சுருங்கக் கூறின் ஆசிரியர் பாலர்களுக்கு தாய் தந்தையராக நின்று பாடசாலையை வீட்டுச் சூழலாய் மாற்ற வேண்டும் என்பதே புதிய சீர்திருத்தக் கல்வியாகும். பாலரின் சிந்தனா சக்தி ஆற்றல்கள் நல்ல முறையில் வளர்வதற்கு பாலர் கல்வி அமைதல் வேண்டும். இப்புதிய கல்வி முறையில் பாலர் சுய சிந்தனையுடன் தொழிற்பட உரிமையும், ஆர்வமும், சந்தர்ப்பமும் அளிக்கப்படுகின்றது. பாலரின் எண்ணங்கள் பெரியவரின் எண்ணங்களுக்கு முற்றாக மாறுபட்டது. அவர்களின் சிந்தனைத் திறனை மலரவைப்பதில் பாடசாலைக்குத் தான் பெரும் பங்குண்டு. பாலரின் சுயமுறையில் நம்பிக்கையும், ஊக்கமும் உண்டாக்கத் தக்க வகையில் தைரியத்தையும் நல் வழியையும் காண்பிப்பதே ஆசிரியரின் பணியாகும்.

இப்புதிய முறைப்படி பாலர்களைப் பயிற்றும் ஆசிரியர்கள் வழிகாட்டியாக அமைய வேண்டும். குழந்தையிடத்தில் அன்பின் தெய்வீக உணர்ச்சியைக் காட்டிக் கல்வி போதித்தல் அவசியம். புதிய கல்வி முறைப்படி தண்டித்தல் பயமுறுத்தல், கண்டித்தல், வெறுப்புக்காட்டுதல் என்பன கையாளக் கூடாத காரியமாகும். அப்படிச் செய்வதனால் அவர்களின் மென்மையும் அன்பும் அனல் போல் கருகிவிடும். பாலர் எல்லாவற்றையும் கண்ணால் காணத் துடிக்கின்றனர்.

காதால் கேட்கவும், கையால் தொட்டு ஆராய்ந்து பார்க்கவும் உந்துகின்றனர். இந்த ஆர்வங்களைப் பயன்படுத்தி விளையாட்டின் ஊடாக கல்வியைப் பயிற்ற வேண்டும்.

இப்புதிய கல்வி முறைப்படி பாலரின் கல்வி உடல் வளர்ச்சி, ஆன்ம வளர்ச்சி, செயற்றிறன் வளர்ச்சி எனும் இவைகளை அடக்கியதாய் இருத்தல் வேண்டும். இதனால் பாடசாலையில் போதியளவு உபகரணங்கள் இடம்பெறவேண்டும். அவற்றைத் தாமாகவே உபயோகித்துப் பயன்பெற அவை உதவியளிக்கும். எனவே ஒரு மாணவனை ஓரளவு அனுபவங்கள் மூலம் தேர்ச்சி பெற்ற சுய சிந்தனையுள்ள ஒரு குழுவினராக அவனை ஏற்றுக்கொள்ளுதல், சிறுவர் பயில வேண்டியவற்றைக் கட்டாயத்தின் மூலம் அவர்களிடையே திணிக்காது அவைகளை அவர்கள் சுயமாக விரும்பிக் கற்பதற்கு ஒழுங்கு செய்தல் புதிய சீர்திருத்த ஒன்றிணைந்த கல்வியின் சிறப்பாகும்.

இதற்கு முன்பிருந்த கல்வி, கல்வித் திட்டத்தினை நடுவாக வைத்து கற்பிக்கப்பட்டது. இதே முறை தவறு என்று அறிந்துதான் குழந்தையை மையமாக வைத்துக் கற்பிக்கவேண்டுமென்ற புதிய முறை கொண்டு வந்தார்கள். புத்தகப் படிப்பை ஆதரிக்கவில்லை. பிள்ளையின் புலன்கள் வாயிலாகத்தான் கற்பிக்க வேண்டுமென அழுத்தமாகக் கூறினார்கள்.

இப்புதிய சீர்திருத்த ஒன்றிணைந்த கல்வியின் நன்மைகள் பற்பல. குறித்த ஒரு விடயத்தை மையமாக வைத்துக் கொண்டு பல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இதனால் அதனுடன் தொடர்பான சொற்கள், வசனங்கள் எல்லாப் பாடங்களிலும் வரும்போது மாணவர் மனதில் ஆழப் பதிந்து விடுகின்றது. அத்தோடு இப்புதிய சீர்திருத்தக் கல்வியில் மாணவர் குழுக்களாகவும் பிரிக்கப்பட்டு மாணவர் - மாணவர்களுக்கிடையேயும் அவர்கள் ஆற்றல்கள் பங்கிடப்படுகின்றது. இதனால் அவர்களின் தனிப்பட்ட ஆற்றலிலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பும் பெறுகின்றனர். அத்தோடு குழுத்தலைவர்களாக மாணவர் செயற்பட்டு வருதலால் தலைமைத்துவப் பண்பும் ஏற்படுகின்றது. இதனால் ஒத்து செயலைச் செய்யவும் கற்றுக்கொள்கின்றனர். குழுக்களிடையே தமக்கு பொறுப்பான உபகரணங்களையும் ஒழுங்காகப் பாவித்து திரும்ப சீராக வைக்கும் பழக்கத்தையும் கற்றுக் கொள்கின்றார்கள். எனவே ஆரம்ப புதிய கல்வி முறையினை கல்வி நவீன மயப்படுத்தலின் பேறாகக் கருதலாம். இக்கல்வி முறையானது இங்கிலாந்துக் கல்வியாளரினால் இந்நாட்டிற்கு அறியப் படுத்தப்பட்டதாகும். எனவே சுதந்திரமான சூழலில் மாணவர் தம் விருப்பப்படி தமது தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் உண்மை அனுபவங்களுக்கு வழிவகுத்தல் இக்கல்வி முறையின் நோக்கமாகும். அத்தோடு அழகியல், ஆக்கத் தொழிற்பாட்டுப் பாடங்களிலும் மாணவர்களுக்கு ஆர்வம், ஈடுபாடு, சுயமாகச் செயற்படும் இயல்பு, ஆகியவற்றை ஏற்படுத்துவதும் இலகுவாகும். எனவே இக்கல்வி முறையால் மாணவன் தன் வாழ்க்கையிலே திறம்படநடாத்தும் ஆற்றலைப் பெறுகின்றான். சுருங்கக் கூறின் நாட்டில் ஓர் சிறந்த சமுதாயத்தை தோற்றுவிக்க இந்த புதிய சீர்திருத்தக் கல்வித் திட்டம் துணைபுரிகின்றது.

# சிறுவர் உரிமைகளும் துஷ்பிரயோகங்களும்.

**திருமதி சு.சுஜீவன்**
யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

வளரும் நாட்டின் மூலதனம், மூளைவளம், மூலவளம் என்று வர்ணிக்கப்படும் சிறுவர்கள் சமூகத்தின் கலங்கரை விளக்குகளாவர். இவர்களே நாட்டின் சிற்பிகளாக நாட்டைக் கட்டிவளர்ப்பவர்களாக மாறப் போகிறவர்கள். சிறுவர்களின் உணர்வுகள் மிருதுவானவை, அழகானவை, அற்புதமானவை இவர்களின் கற்பனைகள், எல்லாம் நுணுக்கத்துடன் அணுகப்பட வேண்டியவை. ஒரு பண்பாடான சமூகத்தில் கண்ணென மிகவும் கவனத்துடன் மதிக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டியவர்கள் இச்சிறுவர்களே ஆவர்.

இவர்களின் ஆரோக்கியமான நிறைவான உடல் உள வளர்ச்சியில் பலவிதமான காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பெற்றோர், உறவினர், ஆசிரியர், வைத்தியர் எனச் சமூகத்தின் பல தரப்பினரும் அச் சமூகத்துச் சிறுவர்களின் நிறைவான உடல் உள வளர்ச்சியில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்கெடுத்துக் கொள்கின்றனர். மேலும் சமூகக் கட்டமைப்பில் உள்ள அனைவருமே சிறுவர் முன்னேற்றத்தில் முக்கிய கவனமெடுக்க வேண்டிய கடப்பாடுடையவர்களாவர்.

நாளைய பூக்களாக மலரவேண்டிய இன்றைய சிறுவர்கள் துஷ்பிரயோகங்களிற்கு உள்ளாக்கப்படுகின்றனர். சிறுவர்கள் சீரழிக்கப்படும் நிகழ்வுகள் உலகெங்கும் நடந்துவருகின்றன. ஆயினும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் சிறுவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுச் சிறுவர் துஷ்பிரயோகம் பலமடங்கு மேலோங்கிக் காணப்படுகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனில் முதலில் சிறுவர்களுடைய உரிமைகள் பற்றிய தெளிவான விளக்கம் சமூகத்தவரிடையே ஏற்படுத்தப்படவேண்டும். மனிதனின் அடிப்படை உரிமைகளிலிருந்தே சிறுவர்களின் உரிமையும் பரிணமிக்கின்றன. சிறுவர்களின் உரிமைகளை நோக்குவோமாயின் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் (ஐ.நா) ஒப்பந்தத்தில் 54 உடன்படிக்கை முடிவுகள் காணப்படுகின்றன.

இம் முடிவுகளின்படி சிறுவர் பற்றிய வரைவிலக்கணமாக 18 வயதுக்கு உட்பட்ட ஒவ்வொருவரும் சிறுவர் சிறுமியர் ஆகக் கணிக்கப்படுவர். அரசானது வயது, பால், ஆற்றல், நிறம், இனம், மொழி, சமயம் என்ற எந்த பாகுபாடுமின்றி எல்லாச் சிறுவர்களையும் பாதுகாத்தல் வேண்டும்.

- ❖ சிறுவர்கள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் முடிவுகளும் அவர்களின் உயரிய நலன்களை முழுமையாகக் கருத்தில் கொள்ளப்பட்டே எடுக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சிறுவனுக்கும் வாழ்வதற்கான வாழ்வியல் உரிமையுண்டு. ஒவ்வொரு குழந்தைக்கும் உயிர்வாழும் உரிமை மற்றும் பிறந்ததும் ஒரு பெயரைப் பெறுவதற்கும் ஒரு நாட்டினைச் சார்வதற்கும் தன் பெற்றோர் இன்னாரென்று அறிவதற்கும் அவர்களால் பராமரிக்கப்படுவற்க்கும் அது உரித்துடையது ஆகும்.

- ❖ குழந்தையின் பெயர் இனம் குடும்ப பந்தங்கள் போன்ற தனித்துவங்களைப் பேணுதல் அரசின் கடமையாகும்.
- ❖ ஒரு குழந்தைக்கு தன் பெற்றோருடன் வாழும் உரிமையுண்டு. தாய் தந்தையரிடமிருந்து பிரிக்கப்படும் பட்சத்தில் அவர்கள் இருவருடனும் உறவைப் பேணும் உரிமையுண்டு.
- ❖ வேறு நாட்டை விட்டு வெளியேறி தனது குடும்பத்துடன் மீளச் சேரும் உரிமையுண்டு.
- ❖ தனது கருத்தையும் எண்ணங்களையும் வெளியிடவும் தகவல் பெறவும் தகவலைத் தெரியப்படுத்தவும் உரிமையுண்டு.
- ❖ பெற்றோரின் முறையான வழிநடத்தலுக்கும் தேசியச் சட்டத்திற்கும் அமையச் சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம் என்பன உண்டு.
- ❖ பிறரின் உரிமைகளை மீறாது பிறருடன் சேரவும் சங்கங்கள் அமைக்கவும் அதில் சேரவும் உரிமையுண்டு.
- ❖ தமது சுதந்திரம் குடும்பம் வீடு கடிதத் தொடர்பு ஆகியவற்றில் பிறர் தலையிடாதிருக்க உரிமையுண்டு.
- ❖ அகதிச் சிறுவர்கள் விசேடபாதுகாப்பும் உதவியும் பெறும் உரிமையுண்டு.
- ❖ உள, உடல் ஊனமுற்ற பிள்ளைகள் சமுதாயத்துடன் இணைந்துகொள்ளும் பொருட்டு விசேட பராமரிப்பு, கல்வி, பயிற்சி என்பனவும் பெறும் உரிமையுண்டு.
- ❖ மிக உயர்ந்த தராதரமுடைய சுகாதாரத்தையும் பராமரிப்பையும் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.
- ❖ சகல சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் உள்ள பயன்களைப் பெறும் உரிமை பிள்ளைகளுக்குண்டு.
- ❖ ஒவ்வொரு பிள்ளையும் இசைவான வாழ்க்கைத் தரத்தைப் பெறும் உரிமை உடையதாகும்.
- ❖ ஒவ்வொரு பிள்ளைக்கும் கல்வி பயிலும் உரிமையுண்டு.
- ❖ சிறுபான்மை இனச் சிறுவர்கள் தமது சொந்தக் கலாச்சாரத்தை அனுபவிக்கவும் தமது சொந்த மதம் மொழி ஆகியவற்றைப் பயிலவும் உரிமையுண்டு.
- ❖ ஓய்ந்திருத்தல், விளையாட்டு, கலை, கலாச்சார நிகழ்ச்சிகளில் அனைவரும் பங்குபற்றும் உரிமையுண்டு.
- ❖ ஆரோக்கியம், கல்வி அல்லது மேம்பாடு ஆகியவற்றிற்கு ஊறு விளைவிக்கக் கூடிய வேலைப் பளுவிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை உண்டு.
- ❖ சட்டவிரோதமான மருந்துக்களையும் வேறு போதைவஸ்துக்களையும் உபயோகிப்பதிலிருந்தும் அவற்றைத் தயாரித்தல் விநியோகித்தல் ஆகியவற்றிலிருந்தும் பாதுகாக்கப்படும் உரிமையுண்டு.
- ❖ விபச்சாரம் மற்றும் ஆபாச நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல் உட்படப் பாலியல் சார்ந்த சுரண்டல் அல்லது இம்சைகளில் இருந்து பாதுகாப்புப் பெறும் உரிமையுண்டு.
- ❖ எந்தப் பிள்ளையும் சித்திரவதை துன்பம் தண்டனை சட்டவிரோதக் கைது சுதந்திரத்தை மறுத்தல் ஆகியவற்றிற்கு ஆளாக்கப்படக் கூடாது.
- ❖ 15 வயதிற்குட்பட்ட எந்தப் பிள்ளையும் சண்டைகளில் நேரடியாகப் பங்கேற்கவோ பயிற்சிகளுக்கு சேர்க்கப்படவோ கூடாது.
- ❖ குற்றம் சாட்டப்பட்டால் சட்டம் மற்றும் ஏனைய உதவி பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு.

மேற்கூறப்பட்ட பல்வேறுபட்ட விடயங்கள் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளவையாகும்.

இவ்வாறு இருப்பினும் இன்று அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வாழும் சிறுவர்களின் வாழ்வியல் உரிமை கேள்விக்குறிகளாகிக் கொண்டிருக்கின்றது. உள்நாட்டுப்

போரினால் பெரும்பாலான ஆசிய ஆபிரிக்க நாடுகளிலுள்ள சிறுவர்களின் வாழ்வியல் உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் கிழக்குத் தீமோரில் போரில் ஏற்பட்ட கலவரத்தின்போது ஏராளமான சிறுவர்கள் அகதிகளாக்கப்பட்டமை அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட தன்மையும் இதனால் சிறுவர்கள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் நிலையும் காணப்படுகின்றது.

அடுத்து நாம் சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிப் பார்ப்போமாயின் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக மிகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் வருமாறு.

"சிறுவன் அல்லது சிறுமியொருவரின் ஆரோக்கியம், வளர்ச்சி, விருத்தி ஆகியவற்றிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சகல நடவடிக்கைகளும் அத்துடன் வேண்டப்படாத துன்புறுத்தல்களுக்கு இவர்களை உள்ளாக்குதலும் சிறுவர் துஷ்பிரயோகம்" ஆகும்.

**சிறுவர் துஷ்பிரயோகம் செய்யப்படும் பல்வேறு விதங்கள் வருமாறு.**

1. உடல் ரீதியான துன்புறுத்தல்கள் (அடித்தல், காயப்படுத்துதல், தீயினால் சுடுதல்.)
2. உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள்.
3. சிறார்களை வேலைக்கு அமர்த்துதல்.
4. பாலியல் துன்புறுத்தல்கள்.
5. போசனை, மருத்துவ சுகாதார தேவைகள் வழங்கப்படாமை.
6. திட்டமிட்ட நஞ்சூட்டல் தேவையற்ற மருந்துகளை ஊட்டல்
7. யுத்தங்களில் ஈடுபடுத்தல்.

1) உடல் ரீதியான துன்புறுத்தல்கள்: சிறுவர்களைச் சுரண்டி வாழும் வழக்கம் எல்லா நாடுகளிலுமே இன்று பெருமளவு காணப்படுகின்றது. பல லட்சக்கணக்கான சிறுவர்கள் சிறு பராயத்தில் இருந்தே வேலைசெய்ய ஆரம்பித்து விடுகின்றார்கள். பலருக்கு வேலை வேதனையின் உறைவிடமாகின்றது. இங்கு சிறுவர்கள் உடலளவில் தமது கொள்வோர்களால் அடித்தும் துன்புறுத்தியும் பல்வேறுபட்ட உடல் ரீதியான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கப்படுவதுடன் சிறுவர்களின் வயதிற்கு மேலான தொழில்களை அவர்கள் செய்யவேண்டியிருப்பதனால் வீங்கிய விரல்களும், வலிக்கும் நுரையீரல், கூனியமுதுகுமாக இவர்களின் உடல் துன்பத்திற்கு உள்ளாக்கப்படுகின்றது. போர் மற்றும் வேறு அனர்த்தங்களினால் அநாதைகள் ஆக்கப்படும் இன்றைய சிறுவர்கள் கொடுமைக்கார அரக்கர்களின் கையில் சிக்கி வாழவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுவதால் அவர்கள் விளையாடவோ பாடசாலை செல்லவோ பாலர் பருவத்தை அனுபவிக்கவோ முடியாத நிலையில் சிறு வயதிலேயே தமது உடல் பலத்தை இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.

2) உளவியல் ரீதியான துன்புறுத்தல்கள்: சிறுவர்களின் உள்ளமானது நுண்ணிய தன்மையுடையது. சமூகத்தில் இணைந்துகொள்ள இன்னமும் பழக்கப்படாத இவர்களின் உள்ளமானது எதையும் அறிந்துகொள்ளாத நிலையில் பயம், அச்சம், கவலை, ஆசை போன்ற பல்வேறு கவலைகளைக் கொண்டதாக காணப்படும். இந்நிலையில் உலகமறியாத இப் பிஞ்சுகள் படிப்பறிவு அற்ற மற்றும் இரக்கமற்ற பெற்றோர்களால் புறக்கணிகப்படுதல் அச்சுறுத்தப்படுதல் போன்ற பல்வேறு செயல்களால் உளவியல் ரீதியாக தம்முள் தாழ்வு மனப்பான்மை மற்றும் தாம் புறக்கணிக்கப்படுகின்றோம் என்ற ஆதங்கம் போன்றவற்றால் உளப் பாதிப்புக்குள்ளாகின்றார்கள். மேலும் பாடசாலைகளில் தமது ஆசிரியர்கள் அதிபர்கள்

சக மாணவர்களுடன் கூட இவர்கள் புறக்கணிக்கப்படும் தன்மையையும் இவர்களின் உள தாக்கத்திற்கு காரணமாக அமைகிறது. இன்றைய யுத்தச் சூழ்நிலைகளால் பெற்றோர் பராமரிப்பாளர்கள் இன்றி அநாதைகள் ஆக்கப்படும் சிறார்கள் தமது பாதுகாப்பற்ற அரவணைப்பற்ற நிலையில் ஏக்கமுற்று உளத் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். வேலை செய்யும் இடங்களில் கூட எசமானர்களின் ஏச்சுக்கள், மற்றும் துன்புறுத்தல்களால் இவர்களின் உணர்வுகள் உரிமைகள் நசுக்கப்படுவதன் மூலம் உளத்தாக்கம் ஏற்பட ஏதுவாகின்றது.

3) சிறுவர்களை வேலைக்கமர்த்தல்: எல்லா நாடுகளிலுமே முக்கியமாகக் காணப்படும் பிரச்சனைகளில் ஒன்று பொருளாதாரக் கஷ்டமாகும். எனவே வறிய குடும்பத்தில் பிறக்கும் சிறுவர்கள் இளவயதிலேயே தமது கல்வி, சுதந்திரம், அன்பு, அரவணைப்பு என்பனவற்றை இழந்து வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. யுத்த நிலைமைகள் போன்ற பல்வேறு வன்செயல்களால் குடும்பங்கள் சின்னாபின்னம் ஆக்கப்பட்டு தாய் தந்தையரை இழந்து வேறு நபர்களை அண்டி வாழவேண்டிய நிலையில் இச் சிறுவர்கள் குறைந்த சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்படுவதன் மூலம் பெரியவர்கள் இச் சிறுவர்களைச் சுரண்டி பிழைக்கும் நிலை காணப்படுவதை இன்று நாம் அவதானிக்கலாம். அநேகமான சிறுவர்கள் தேநீர்ச்சாலைகள், அழகு சாதனப் பொருட்கள், விற்பனை நிலையங்கள், மற்றும் வர்த்தக நிலையங்கள், வாகனம் திருத்தும் நிலையங்களில் குறைந்த சம்பளங்களிலும் உடல் வளர்ச்சிக்கு மேற்பட்ட வேலைப் பழுவிலும் அவஸ்தைப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவற்றின் மூலம் இச் சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்படுவதுடன் நாளைய சமுதாயத்தின் நிலையும் கேள்விக் குறியாகவே காணப்படும் நிலை உருவாக ஏதுவாகின்றது.

4) பாலியல் துன்புறுத்தல்கள்: விபச்சாரத்தில் ஈடுபடுதல் ஆபாச நடவடிக்கையில் சிறுவர்களை ஈடுபட வைத்தல் என்பன பாலியல் துன்புறுத்தல்களாக கொள்ளப்படுகின்றன. அதாவது பொருளாதார கஷ்டங்களின் காரணமாக ஏதுமறியாத சிறுவர்கள் வருமானமுழைக்கும் நோக்கில் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகின்றார்கள். வேலை செய்யும் இடங்களில் கூட தமது எசமானர்களால் பல்வேறுபட்ட பாலியல் துன்புறுத்தல்கள் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி அனுபவிப்பதை காணலாம்.

5) போசனை, மருத்துவ தேவைகள் வழங்கப்படாமை: துன்பத்தையும் மரணத்தையும் தடுக்கக் கூடிய நுட்பங்களும் ஏனைய வளங்களும் உலகில் இருந்தும் தடுப்பு மருந்துகள் உரிய நேரத்தில் வழங்கப்படாமையால் பல இலட்சக்கணக்கான சிறுவர்கள் போலியோ சின்னமுத்து வைரஸ் நோய்களினால் நோய்வாய்ப்பட்டு வருந்தவும் இறக்கவும் நேரிடுகின்றது. பெரும்பாலான வறிய குடும்பங்களிலுள்ள சிறுவர் சிறுமியர்கள் தகுந்த போசாக்கான உணவுகள் வழங்கப்படாமை மற்றும் உயிர் கொல்லி நோய்கள் ஊனப்படுத்தும் நோய்கள் என்பனவற்றை உரிய நேரத்தில் கட்டுப்படுத்துவதற்குரிய மருத்துவ சுகாதார வசதிகள் அளிக்கப்படாமை போன்ற நிலைமைகள் கூடுதலான அளவு சிறுவர்களை ஊனமுற்றவர்கள் ஆக்கியதுடன் சிறுவர்களின் இறப்பு வீதத்தையும் அதிகரிக்கச் செய்து போசாக்கு இன்மையால் பல்வேறுபட்ட உடல் உபாதைகளையும் அனுபவிக்கச் செய்கின்றது.

6) திட்டமிட்ட நஞ்சூட்டல் தேவையற்ற மருந்துகளை ஊட்டல்: விளக்கமறியாத இளம் சிறுவர்களுக்கு உணர்வுகள் மற்றும் வேறு வழிகளினூடாக அவர்கள் பாதுகாவலர்கள் திட்டமிட்டு நஞ்சூட்டம் செய்கின்றனர். மேலும் அவர்களின் உடல்

வளம் என்பவற்றை பாதிக்கக்கூடிய வகையில் தேவையற்ற மருந்துகளும் ஊட்டப்படுகின்றன. இவ்வாறான துஷ்பிரயோகங்களால் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் இளம்வயதிலேயே மரணத்தைத் தழுவவேண்டியேற்படுவதுடன் கண்பார்வையற்று காதுகேளாது மற்றும் இன்னோரன்ன உடல் உபாதைகளையும் ஏற்று மனநோய்க்கு ஆளாகவும் ஏதுவாகின்றது.

7) படைகளில் சேருதல் போருக்கு பயன்படுத்துதல்: பல நாடுகளில் போரின் படைகளாகவும் இலக்குகளாகவும் சிறுவர்கள் நடத்தப்படுகின்றார்கள். அணி திரட்டப்பட்டும், கடத்திச் செல்லப்பட்டும் யுத்த காலங்களில் ஆயுதம் ஏந்தி போர் புரியும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். போரின் கொடுமைகள் சிறுவர்களையே பெரிதும் பாதிக்கின்றன. இதனால் பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் கொல்லப்பட்டிருப்பதுடன் பல மடங்கானோர் அங்கவீனர்களாக உள்ளதுடன் போரின் மிருகத்தனமான விளைவுகளால் பலர் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மேலே குறிப்பிட்ட சிறுவர் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவதற்கும் சிறுவர்களின் நிலைமைகளை நிலைநாட்டுவதற்கும் பல்வேறுபட்ட அமைப்புக்கள் இன்று செயற்பட்டு வருகின்றன. அந்த வகையில் இன்று யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் பின்வரும் நிறுவனங்களின் பங்களிப்பினை ஆராய்வோம்.

1989ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட சிறுவர் சமுதாயத்தின் 4ம், 15ம் உரிமையின்படி அவர்கள் கூட்டங்கள் கூடவும் சங்கம் அமைக்கவும் உரிமையுடையவர்கள். இவ்வாறு இலங்கையில் 1991 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைச் சமவாய ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக் கொண்டதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதற்கிணங்க இன்று யாழ்ப்பாணத்தில் 48 சிறுவர்கள் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. இவை சிறுவர்கள் சம்பந்தப்பட்ட அனைத்து தரச் செயற்பாடுகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றன.

சிறுவர்களின் மேம்பாட்டிற்காக உழைத்துவரும் சிறுவர்கள் அமைப்புக்களை நாம் அறியவேண்டியது அவசியமானது. அவ்வகையில் கீழ்வரும் அமைப்புக்கள் சிறுவர்களுக்கான வழிகாட்டியாக செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அதாவது சிறுவர்கள் பாதுகாப்பு (ஐ.நா) ஆனது சிறுவர் அமைப்புக்களுடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை அவர்களுடாக செயற்படுத்தி வருகின்றது. அவை வருமாறு:

1. சிறுவர் பரிந்துரைத்தல் செயற்பாட்டு குழு - Children Advacacy action Group (CAAG)
2. சிறுவர் ஊடகத் துறை - Children Media Group(CMG)
3. சிறுவர்களுக்கு இடையேயான தொடர்பை மேம்படுத்தல் - Kids Is Touch (KET)
4. சிறுவர் கழகங்கள் - Childrens Club

1) சிறுவர் பரிந்துரைத்தல் செயற்குழு (CAAG): இக் குழுவானது சிறுவர் சம்பந்தமான விடயங்கள், பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களின் தேவைகளை அவர்கள் சார்பாக உரியவர்களுடன் பரிந்துரைத்து அத்தேவைகளை பெற்றுக் கொடுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பதுவும் இதன் நோக்கமாக உள்ளது. குறித்த விடயம் பற்றி பாடசாலை மட்டத்தில் கலந்துரையாடி அதன் பிரகாரம் கல்வியின் முக்கியத்துவம் பற்றி இக்குழுவால் சிறுவர்களிற்கு கருத்துக்கள் முன்வைக்கப் படுகின்றன. பிரதேச மட்டச் சிறுவர்கள் மாவட்டத்திற்கென தமக்குள் இருந்து

தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்து மாவட்டமட்டச் சிறுவர்கள் பரிந்துரைத்தல் செயற்பாட்டுக் குழு செயற்பட்டு வருகின்றது.

2) சிறுவர் ஊடகத்துறை: சிறுவர் பாதுகாப்பு (ஐ.நா) அனுசரணையுடன் சிறுவர்கள் தமது கருத்துக்கள், ஆக்கங்களை வெளிக்கொணரும் வகையில் ஊடகம் மூலமாக சிறுவர் குழுவினால் சிறுவர் ஊடகத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இக்குழு தத்தமது வலைய ரீதியாக கூட்டங்களை நடத்தி சிறுவர் சம்பந்தமான விடயங்களை ஆராய்ந்து வலய ரீதியாக தீர்க்கக் கூடிய விடயங்களை அம்மட்டத்தில் தீர்த்து வைக்கின்றது.

3) சிறுவர்களுடைய தொடர்பை மேம்படுத்தல்: சிறுவர்களுக்கு இடையேயான செயற்பாட்டினை மேம்படுத்தும் இக் கழகம் வெவ்வேறு வெளி இடங்களில் உள்ள சிறுவர்களை ஒன்றிணைத்து அவர்களிடையே ஒரு புரிந்துணர்வை ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றது.

அதாவது சிறுவர் தொடர்பாடல் என்பது வெளி இடங்களில் வசிக்கும் மாணவர்களுடன் அல்லது படிக்கும் மாணவர்களுடன் தொடர்பு கொள்ளுவதுடன் கிராமத்து சிறுவர்களையும் ஒன்றிணைத்து தொடர்புபடுவதாகும். எனவே இன்று யாழ் மாவட்டத்தைப்பொறுத்த வகையில் சிறுவர் அமைப்புக்கள் முற்றுமுழுதாக சிறுவர்களின் செயற்பாட்டிலேயே இயங்குகின்றன. இதற்கு வழிகாட்டிகளாக சிறுவர் பாதுகாப்பு ஐக்கிய ராட்சியமும் சிறுவர் உரிமைகள் பயிற்சியாளர்களும் செயற்படுகின்றனர். ஆகவே சிறுவர்களின் உரிமைகள் துஷ்பிரயோகம் செயற்படாமலும் இருக்க உதவவேண்டியது சமுதாயத்தினதும் நாட்டினதும் தலையாய கடனாகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. சிறுவர்கள் உரிமைகள் பற்றிய சமபாயம் (ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் நிலையம்)
2. சிறுவர் உரிமைகள் ஒரு துரித நெறி காட்டி (Unicef வெளியீடு)
3. போரால் ஏற்படும் நெருக்கடிகளைக் கையாளல் (ஐ.நா.சிறுவர் நிதியம்)
4. துளிர்-1 சிறுவர் ஊடகத்துறை
   துளிர்-2 யாழ்ப்பாணம் - 2002
5. உதயன் தினகரன் சஞ்சிகைகள்.

# நூலகச் செயற்பாடுகள்

**1991**ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட நூலகம் நூலக அலுமாரியில் சிறுதொகை நூல்கள், சஞ்சிகைகளை உள்ளடக்கி இயங்கி வந்தது. மாணவரின் பயன்பாட்டிற்கு ஓரளவே உதவியது.

1997ஆம் ஆண்டு முதல், தரம் 1 மாணவரின் பெற்றோர்கள் தமது பிள்ளையின் பெயரால் மனமுவந்து நூல்கள் அன்பளிப்பு செய்கின்றனர். நூல்களின் தொகை வளர்ச்சிகண்டு வருகின்றது. மாணவரின் பயன்பாடு சிறப்பாக காணப்படுகின்றது.

மாணவரின் ஆங்கில அறிவை ஏற்படுத்த மல்லாகம் பிரதேச சபை தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் அம்மையார் அவர்கள் 2000ஆண்டு தொடக்கம் வருடாவருடம் ஆரம்ப பாடசாலைச் சிறுவர்களுக்கு ஏற்புடைய ஆங்கில நூல்கள் மலிவான விலையில் தந்து உதவிவருகின்றார்கள்.

தரம் 3இல் கல்வி பயின்றுகொண்டிருக்கும்போது சுகயீனம் காரணமாக 1990.03.08ஆம் திகதி இறைவனடி சேர்ந்த தமது மகள் அமரர் வாசுகி மணிவாசகர் ஞாபகார்த்தமாக திருமதி விமலா மணிவாசகன் அவர்கள் இன்றுவரை மாணவர் பயன்பாட்டிற்கு நூல்கள் வழங்கி வருகின்றார். வெள்ளிவிழாவை முன்னிட்டு தனது மகளின் ஞாபகார்த்தமாக பஞ்சபுராணம் அடங்கிய காலைப்பிரார்த்தனை திருப்பாடல்கள் அடங்கிய மலரை மறுபதிப்பாக வெளியிட்டு முதற்கட்டமாக 50 புத்தகங்கள் தந்துள்ளார். பண்ணிசைத் துறையில் மாணவரை ஊக்குவிக்க இந்நூல் மிகவும் பயன்படுகின்றது. இவரின் முன்மாதிரியான இச்சேவை போற்றுதற்குரியது.

வாசிப்பு பழக்கத்தை சிறுவயதுதொடக்கம் விருத்திசெய்ய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டுள்ளோம். தனது பிறந்தநாள் பரிசாக பாடசாலைக்கு ஒரு நூல் என்ற வகையில் மாணவர்கள் நூல்கள் கொண்டு வருகின்றார்கள். தமது வகுப்பறை வாசிப்பு மூலை எனும் பகுதியில் மாணவர் பயன்பாட்டிற்கு வைக்கப்படுகின்றன. காரியாலய நூலக அலுமாரியிலுள்ள ஆங்கில நூல்கள், தமிழ் நூல்கள் என்பன சிறுபாடசாலை நூல்நிலையத்தின் விதிகளுக்கு அமைவாக தமக்கு விரும்பிய நூல்களை வீடுகளுக்கு கொண்டுசென்று பயன்பெறுவதற்கு (7 நாட்கள் தவணை அடிப்படையில்) இந்த வழி அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்த பத்திரிகைகள், சஞ்சிகைகள், ஆசிரியர் தொழில்வன்மை விருத்தி நூல்கள் என்பன ஒழுங்கமைப்பு செய்யப்பட்டுள்ளன.

ஆரம்ப பாடசாலைகளுக்கான நூலகம் இன்றுவரை எமக்கு கிடைக்கவில்லை. நூல் நிலையம் அவசியம் இப்பாடசாலைக்கு தேவை. அப்போதுதான் நூல் நிலையத்தின் பயன்பாடு பற்றியும், நூல் நிலையத்தின் கட்டுக்கோப்பு, பராமரிப்பு, அமைதி பேணுதல் போன்ற நூலகத்திற்கான பண்புகளை மாணவர்கள் அறியக்கூடியதாக இருக்கும்

# நூல் நிலையம்

திருமதி விமலா மணிவாசகன்

மனிதனின் உடல் வளர்ச்சிக்கு உணவு அவசியமானது. அது போல அறிவு வளர்ச்சிக்கு கல்வி அவசியமானது. மனிதப் பிறவியின் சிறப்பு அறிவு வளர்ச்சியிலேயே தங்கி உள்ளது. அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய கல்வியை நூல்கள் மூலமாகவே பெறலாம். கல்வியறிவு இல்லாவிடில் உலக வாழ்க்கையில் சிறப்பும், இன்பமும் அடைய முடியாது. இதனாலேயே திருவள்ளுவர்

*"கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு*
*மாடல்ல மற்றை யவை."*

என்று கூறியுள்ளார்.

ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. ஏனைய பொருட் செல்வங்கள் நிலையான செல்வம் அல்ல. கல்வி அழிவற்றது. பிறரால் அபகரிக்க முடியாதது. அதை பிறருக்கு கொடுப்பதனால் குறைவுபடாது. மேலும்

*"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற் (கு)*
*எழுமையும் ஏமாப் புடைத்து."*

என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

ஒரு பிறப்பில் ஒருவர் கற்ற கல்வி ஏழு பிறப்புக்கும் அழியாது நின்று உதவும்.

*"கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்."*

என்றும் கூறுகிறார்.

முகத்தில் உள்ள கண் எதிரில் உள்ள பொருட்களைப் பார்க்க உதவுகிறது. அது போல அறிவுக் கண் முன்பு நடந்தவற்றையும், இப்போது நடப்பவை, இனிமேல் நடக்க இருப்பவை முதலியவற்றையும், தூர இடங்களில் நடப்பவற்றையும் அறிய உதவுகிறது. இதனால் கல்வியின் சிறப்பை அறியலாம்.

கல்வியறிவு இல்லாதவர்கள் பிறருடைய தயவில் தங்கி இருக்க வேண்டி வரும். இன்றைய நாகரீக வாழ்வில் கல்வியறிவு அவசியம் பெற வேண்டும். கல்வி உத்தியோகம் பெறுவதற்கு மட்டுமே தேவையானது என்று கருதலாகாது. நாம் பின்பற்ற வேண்டிய ஒழுக்க முறைகளையும், கடவுளை வழிபடும் நெறியையும் அறிவதற்கும், நாட்டில் நடக்கும் சம்பவங்களை அறிவதற்கும் கல்வி அவசியம். இன்று ஆண்களும், பெண்களும் வேலைக்கு செல்கின்றனர். அவர்களுக்கு மட்டும் அன்றி வீட்டில் இருந்து குடும்பம் நடத்தும் பெண்களுக்கும் கல்வி அவசியமானது. பிள்ளைகளுக்கு நல்ல பழக்கங்களை பழக்குவதற்கும், அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுவதற்கும், கல்வி இன்றியமையாதது. "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்றும், "வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோம் என்று கும்மியடி" என்றும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் கூறியது போல் பெண்களும் சிறந்த கல்விகற்று வீட்டிற்கும், நாட்டிற்கும் தொண்டு செய்தல் மிக அவசியமானது.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பது பழமொழி. இளமையில் கற்கும் கல்வி மனதில் நன்கு பதியும். ஆதலால் எல்லோரும் இளமைக் காலத்தில் பாடசாலைக்குச் சென்று கல்வி பயில வேண்டும். அதனாலேயே அரசாங்கத்தினர் எல்லா ஊர்களிலும் பள்ளிக் கூடங்களை நிறுவியுள்ளார்கள். பாட நூல்களோடு அவற்றுக்குத் துணையான

வேறு நூல்களையும் கற்க வேண்டும். இதனால் பள்ளிக் கூடங்களிலும் நூல் நிலையங்கள் உள்ளன. பாடசாலையை விட்டு விலகிய பின்பும் கல்வியறிவை விருத்தி செய்ய வேண்டும். 'கல்வி கரையில் கற்பவர் நாள் சில' என்பது பெரியோர் வாக்கு. ஒருவர் வாழ் நாள் முழுவதும் படிக்கலாம்.

கல்வியை விரும்பிக் கற்கும் மாணவர்கள் தமது பாடங்களோடு தொடர்புடைய பல நூல்களைக் கற்பது அவசியமானது. 'தான்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு' என்று ஔவையார் கூறியுள்ளார். அறிவு வளர்ச்சிக்கு புத்தகங்கள் வாசிப்பது அவசியமாகும். ஒரு தொழிலைச் செய்பவனுக்கு அதனை செய்வதற்கு உரிய ஆயுதம் இன்றியமையாதது. அது போல அறிவு வளர்ச்சிக்கு பல துறையிலும் உள்ள புத்தகங்களை வாசிப்பது அவசியமாகும். இன்று முன்னேற்றம் அடைந்த பல நாடுகளிலும் பொது நூல் நிலையங்கள் ஊர்கள் தோறும் நிறுவப்பட்டுள்ளன. அவற்றால் பலர் பயன் அடைகின்றார்கள். பகல் முழுவதும் தொழில் செய்து விட்டு மாலையிலும், இரவிலும் பல நூல்களையும் படித்து தம் வாழ்வை உயர்த்துகின்றனர். சில ஊர்களில் வீடு வீடாகச் சென்று மக்களுக்கு தேவையான நூல்களை கொடுத்து வாங்கும் முறையும் உள்ளது. இதனால் முதியோரும், உடல் தளர்ந்தோரும் பயன் பெறுகின்றனர்.

எமது நாட்டில் பொது நூல் நிலையங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. யாழ்ப்பாணத்தில் 1841இல் ஒரு நூல் நிலையம் தாபிக்கப்பட்டது. 1950இல் அது புதிய கட்டிடத்தில் பெரும் தொகையான நூல்களைக் கொண்ட நூல் நிலையமாக விளங்கியது. தென் ஆசியாவிலேயே மிகச் சிறந்தது என்று கருதப்பட்ட ஒரு பொது நூல் நிலையமாக இது விளங்கியது. இது யாழ்ப்பாணம் மாநகரசபையின் பரிபாலனத்தில் இருந்தது. துரதிஷ்டவசமாக 1981ஆம் ஆண்டில் அது எரித்து அழிக்கப்பட்டு விட்டது. இதனால் எமது சமூகத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு பயன்பட்ட பெரும் தொகையான அரிய நூல்கள் அழிந்து விட்டன. இன்று அந்த நூல் நிலையத்தை புணர் அமைப்பதற்கு எமது அறிஞர்கள் முயன்று வருகின்றனர்.

பெரும் பணக்காரர்கள் தம் வீட்டிலேயே நூல் நிலையம் அமைக்கலாம். அது அவர்களுக்கும், அவர்களின் பின் சந்ததினருக்கும் கல்வியில் ஊக்கத்தை ஏற்படுத்தும். நடுத்தர வகுப்பினருக்கும், ஏழையருக்கும் பொது நூல் நிலையங்கள் மிகவும் அவசியமாகும். எல்லோராலும் புத்தகங்களை விலைக்கு வாங்கி படித்தல் இயலாது. ஆனால் நூல் நிலையங்கள் மூலம் புத்தகங்களை இரவல் பெற்று படித்து வாழ்க்கை முழுவதும் அறிவை வளர்க்கலாம். இதனால் வாசிப்பு ஒரு பயன் உள்ள பொழுது போக்காகும். நூல் நிலையங்களை உபயோகிப்போர் தாம் வாசிக்கும் புத்தகங்களை கிழியாமலும், அழுக்கு படியாமலும், பாதுகாத்து வைத்து படித்தல் வேண்டும். பின்பு உரிய காலத்துக்குள் அவற்றை நூல் நிலையத்தில் திருப்பி ஒப்படைக்க வேண்டும்.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக."*

என்று திருவள்ளுவர் கூறியபடி

நாம் கற்கும் நூல்களை நன்றாகக் கற்று, அந்த கல்விக்கு ஏற்ப நல்ல நெறியிலே ஒழுக வேண்டும்.

இவற்றுக்கு எல்லாம் வேண்டிய நூல்களை தொகுத்து வைத்து சிறந்த நூல் நிலையங்களை ஊர் தோறும் நிறுவுதல் அவசியமாகும். இவற்றுக்கு செலவிடும் பணம் எமது சமூகம் உயர்வடைய பயன்படும். அதனால் இது பெரும் தருமம் ஆகும்.

"இளமையிற் கல்" என்னும் ஔவையார் வாக்குப்படி பெற்றோரும், ஆசிரியர்களும் தம் பிள்ளைகளை இளம் வயதிலேயே நூல் நிலையங்களை பயன்படுத்த பழக்குதல் நன்று. பாடசாலை நூல் நிலையங்களில் சிறுவருக்கு ஏற்ற நூல்களை வாங்கிக் கொடுத்து உதவுதல் கல்வி வளர்ச்சிக்கு பெரும் துணைபுரியும்.

# நூலகமும் பயன்பாடும்

**திருமதி பா ஸ்ரீ பாஸ்கரன்**
தலைவர்,
**மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கம்,**
முன்னாள் தலைவர் வலிவடக்குப் பிரதேசசபை.

இயற்கை அன்னை மனிதனை அறிவு வளத்திற்குரிய மூளையோடும், உணர்ச்சியும் கற்பனையும் ஊற்றெடுக்கும் உள்ளத்தோடும் படைத்துள்ளாள். மனிதனின் முழுமையான வாழ்விற்கு அறிவு இன்றியமையாததாகும். அதுவும் இன்றைய காலகட்டத்தில் வாழும் மனிதனுக்கு ஆங்கில அறிவு மிகவும் அவசியமாகக் காணப்படுகின்றது. இதற்கு இன்றைய கல்வி முறையில் ஆரம்ப பாடசாலைகளில் இருந்தே ஆங்கிலக் கல்வியை நல்ல முறையில் புகட்ட வேண்டும். இந்த வகையில் யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை அதிபர் திருமதி த.துரைசிங்கம் அவர்கள் சிறுவர்களுக்கு ஆங்கில அறிவை வளர்க்க மிகவும் ஆர்வத்தோடு முயற்சி எடுத்து வருகின்றார். அதற்கு முன்கூட்டியே நல்ல ஒரு நூலகத்தை உருவாக்குவது அவசியமாகும். அவர்களின் வேண்டு கோளிற்கிணங்க எங்கள் மல்லாகம் கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஊடாக அவர்களுக்கு பயனுள்ள ஆங்கில நூல்களை வழங்கியுள்ளோம். தொடர்ந்தும் ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில நூல்கள் மாத்திரமன்றி ஆங்கிலத்தில் சிறுகதைகள், பாட்டுக்கள் அடங்கிய ஒலி நாடாக்களையும் பெற்றுக் கொள்வார்கள்.

பாடசாலையில் நூலகம் அவசியமானதொன்றாகும் இதன் மூலம் மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், பல விடயங்களை தாமே தேடிக் கற்பதற்கும் ஆற்றுப்படுத்துகின்றது. சிறுவயதிலேயே நூலகங்களின் பயன்பாட்டை அறிந்துகொள்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஆசிரியர்களே மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய நூலகங்களின் பணிகளை மேலும் வளர்த்துக்கொள்ள சிறுவர்களுக்கு வர்ணப் படங்களுடன் கூடிய கதைகள் அடங்கிய நூல்கள், மற்றும் நூலுருவில்லாத சாதனங்கள் என்பவை சிறந்ததாகக் காணப்படுகின்றன. இவ்வாறு சிறுவர்கள் கவரப்படும் தன்மைகள் அவர்களின் மனதில் தெளிவாகப்பதிந்து அவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு வழிவகுக்கின்றன. சிறுவர்களுக்கு நூலக சேவையில் கதை நேரம் சம்பாஷனைப்பொழுது சித்திரம் வரைதல் போன்றன அவர்களின் சுயமான ஆக்கங்களை வெளிப்படுத்த வழி வகுக்கின்றன. ஒழுங்கு முறையான கல்வி, நற்பழக்கவழக்கம் எவ்வாறு வாழ்க்கையை மேம்படுத்துமோ அவ்வாறே நூல்களும் ஒழுங்கு முறையாக அமைவது அவசியமானதாகும். ஆனால் உலகளாவிய ரீதியில் வாசிப்புப் பழக்கம் தற்போது அருகிக் கொண்டு வருகின்றது. இதனாலேயே எமது சமூகம் சீரற்று பாழடைந்து செல்கின்றது. இதனாலேயே அக்டோபர் மாதம் வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் மாதமாக தேசிய ஆவணவாக்க சபைகள் பிரகடனப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# தேடல்கள்

**பத்திரிகைச் செய்திகள் சில....**

**27.06.97 பக்கம் 7 உதயன் பத்திரிகை**

**'யுனெஸ்கோ' நடத்திய**
**இலக்கியப் போட்டி முடிவுகள்**

யாழ்ப்பாணம், ஜுன் 27 "யுனெஸ்கோ" ஆதரவில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் யாழ். கோட்டப் பாடசாலைகளின் முடிவுகள் கடந்த புதனன்று உதயனில் வெளியாகியிருந்தன. நல்லூர்க் கோட்ட பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு :-

**பேச்சுப் போட்டி பிரிவு - 1**

* 1 ஆம் இடம் - செல்வி. த. தர்ஷிகா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)
* 2 ஆம் இடம் - செல்வி. ப. லாவண்யா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)
* 3 ஆம் இடம் - செல்வி. வி. ஜெனிற்றா (கோண்டாவில் சி. சி. றோ. க. த. பாடசாலை)

**14.07.97 பக்கம் 5 உதயன் பத்திரிகை**

**கோட்டங்களுக்கு இடையிலான**
**இலக்கியப் போட்டி முடிவுகள்**

யாழ்ப்பாணம், ஜுலை 14 யாழ். வலயம் - 1 பாடசாலைகளிடையே "யுனெஸ்கோ" நிறுவனம் நடத்திய இலக்கியப் போட்டிகளில் கோட்டங்களுக்கு இடையேயான இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றன. அந்த இறுதிப் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை வருமாறு :-

**நாவன்மைப் போட்டி பிரிவு -1**

1 ஆம் இடம் - செல்வி. மு அபிராமி – கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாசாலை.
2 ஆம் இடம் - செல்வி த. தர்ஷிகா - இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.
3 ஆம் இடம் - செல்வி. த. கிளனிஸ்ரா – புனிதஜோண் பொஸ்கோ.

**சம்பவத்திரட்டு புத்தகத்திலிருந்து....**

14-03-98
பாடசாலையில் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் முகமாகப் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தினர் 12-03-98 தேனீர் விருந்துவைத்து இருசாராருக்கும் அன்பளிப்புச் செய்து கௌரவித்தனர். இவ்விழாவில் பிரதமவிருந்தினராக வருகைதந்தேன் இச்செயற்பாடு ஏனைய மாணவர்களுக்கு உற்சாகத்தையும் நம்பிக்கையையும் ஊட்டுவதாக இருந்தது. முயற்சி பாராட்டுக்குரியது.

***S. Jeyarajah***
Principal
JHLC

1998.03.14
Participated at the Inter School Sports Meet held at the school grounds as Chief Guest. Each and every item was above average standard. The School Band display was magnificent. The drill and P-T competition display received higher commendation from the public. The assistance and co-operation given by the parents are highly commendable. I appreciate the general standard attained by the school in the field of sports.

***R. Arulanandam***
Deputy Director of Education, Nallur

16.05.98
இன்று பாடசாலையில் பெற்றோர்கள் பங்குபற்றிய சுகாதாரக் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் கலாநிதி சபா ஜெயராசா, சு. கல்வி அதிகாரி, பாடசாலை வைத்திய அதிகாரி பாடசாலை அதிபர் மற்றும் பலர் கருத்துக்கள் வழங்கினர். 160 பெற்றோர் இக்கருத்தரங்கில் பங்கேற்றிருந்தனர். இக்கருத்தரங்கு 9/30 மணியில் இருந்து மாலை 1 மணி வரை நடைபெற்றது. அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு மெச்சக்கூடியதாக இருந்தன.

**கு. சிவலிங்கம்**
சுகாதாரக்கல்வி அதிகாரி (யாபாம)
க-வசந்தினி
(குடும்பநல உதவியாளர்)

1998.11.14
Participated in the school English Day celebration today The entire programme needs commendation, maximum participation was envisaged. I understand that the school's first English Day celebration happens to be this day. Hence a special work of congratulation the Principal & the staff for all their efforts.

***D.Dammayniyae***
ADE(Eng)

1999.10.30

இன்று பாடசாலையின் 1997-98 பரிசளிப்பு விழாவில் கலந்து மகிழ்ந்தேன். என்னைப் பிரதம விருந்தினராகவும் எனது மனைவியை பரிசில் வழங்கலுக்கும் அழைத்திருந்தார்கள். சரியான நேரத்தில் விழா தொடங்கியது. மங்களகரமான வரவேற்பு, நேர்த்தியான, பிள்ளைகளுக்கு முன்னிடம் கொடுத்த நிகழ்ச்சி நிரல், தரமான கலை நிகழ்ச்சிகள் இப்படியாக ஒரு ஆரம்ப பாடசாலை தனது விழாவை நடாத்தியது என்னை பிரமிக்க வைத்தது. சிறு மாணவிகளே பரிசு பெறும் பிள்ளைகளின் பெயர்களைப் படித்தது எனக்கு முதல் அநுபவம். தமிழோடு ஆங்கிலத்திற்கும் மதிப்பு கொடுத்தது வரவேற்க வேண்டியது ஆகும். இத்தகைய விழாவை ஒழுங்கு செய்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரைப் பாராட்டுகின்றேன். பாடசாலைக்கு 'பாண்ட்' இசைக்கருவிகள் தேவைபோல் தெரிகிறது. நூலகத்திற்கு நூல்களும் தேவை மிகவும் ஒழுக்கமான முறையில் சேவை செய்யும் இந்த பாடசாலைக்கு பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்தி சபையினர் ஆகியோரின் அன்பளிப்புகளும், கல்வி நிறுவாகத்தினரின் கரிசனையும் மேலும் கிடைக்க வேண்டும் என விரும்புகிறேன். மீண்டும், திறமையாக விழா நடாத்திய பாடசாலையின் அதிபருக்கும், ஆசிரியர்களுக்கும், உற்சாகமாக ஒழுக்கத்துடன் இயங்கிய பிள்ளைகளுக்கும் எனது பாராட்டுக்கள். இறைவனின் அருள்கிடைப்பதாக!

**பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)**
மருத்துவ பீடம், யாழ்ப்பாணம்

23.02.2000

எமது பிரதேசத்தில் ஆற்றல் உள்ள பிள்ளைகளை இங்கு சந்தித்ததில் எமக்கு பெருமகிழ்ச்சி சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும் (TRRO) பெருமையடைகிறோம்.

தலைவர் – TRRO
**அ. நல்லதம்பி**

23.02.2000

இன்று பாடசாலையில் மிக முக்கிய நிகழ்வு நடைபெற்ற நாளாகும். சிறுவர் பாதுகாப்பு நிறுவனமும், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து இடைக்கருவினை வழங்கி மாணவர்களை உற்சாகப்படுத்தியதோடு, எமது கோட்டத்தின் இன்று பாடசாலையையும் பெருமைபடுத்தியதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்இசைக் கருவிகள் மாணவர்கள் பயன்படுத்தி பயன்பெற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன். இவ்இசைக் கருவிகளை பெற்றுக்கொண்ட அதிபர் ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

***S.Kangeyan***
Assistant Director, Nallur.

23.02.2000

Very pleased to be able to hand over, together with Mr. Nallathamby and Mr.Thevanath of TRRO, the long awaited band instruments. I hope the children will learn and enjoy making music.

***Libby Kennard***
SCF
Jaffna

உ

## யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

## பெற்றோர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 1997

இடம்: யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபம்
காலம்: 15 – 11 – 1997 சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி (புதிய நேரம்)
தலைவர்: திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் (அதிபர்)
பிரதம விருந்தினர்: திரு. க. இரத்தினராசா (கல்விப்பணிப்பாளர், யாழ். வலயம் 1)
திருமதி யோகேஸ்வரி இரத்தினராசா

✶ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ✶

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.**

(51170)

## வாழ்த்துகின்றோம்

காலம் பகைத்தாலும் கடமையே கண்ணாய் நின்று கற்பித்த ஆசிரியர் குழாத்தினரையும்,
உறுதி குலையாது நின்று உயர்ந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவச் செல்வங்களையும்,
47 வீதமான பெறுபேறுகளைப் பெற்று முன்னணியில் திகழும் பாடசாலையை மேலும் வளர்த்தெடுப்பதில் அதிக ஆர்வத்துடன் பணியாற்றும் அதிபரையும்,
1996 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கண்டு களிப்புற்று வாழ்த்துகின்றோம். வாழ்க! வளர்க!

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை.**

(9198)

## வெள்ளிவிழா நாளில் வாழ்த்துகின்றோம்

ஆசிரியப்பணியில் 25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக்காணும் எமது பாடசாலை அதிபர்

**திருமதி த. அ. துரைசிங்கம்**

அவர்களை வாழ்த்துகின்றோம்.
கல்விப்பணி தொடர்க! கல்லூரி வளம் பெறுக!

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். இந்துமகளிர் ஆரம்பப்பாடசாலை.**

(9199)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்





கொழும்பில் 2004.10.09 அன்று நடைபெற்ற தேசியநிலை தமிழ்மொழித் தினப்போட்டியில் பிரிவு I தனிநடனம் நிகழ்வில் இரண்டாம் இடம் பெற்ற செல்வி **சரவணயா தெட்சணாமூர்த்தி** அவர்களையும்,
மாவட்ட மட்டத்தில் பிரிவு I இசையும் அசைவும் நிகழ்வில் முதலாம் இடம் பெற்ற செல்வி **ஸ்ரீதுரா வரதராஜா** அவர்களையும் வழிப்படுத்திய அதிபர், நெறிப்படுத்திய ஆசிரியர்கள் **திருமதி ஜெ.இளங்கீரன**, செல்வி **வி.கலையமுதா** மற்றும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களையும் பாராட்டி வா[illegible]கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.**

(37759)
(34-13-44-24)

உ

## இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை
## பாலர் கலைவிழா

**காலம்: 2-7-1982** பி. ப. 3-30 மணி
**இடம்:** இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை

பிரதம விருந்தினர்:
திரு. சு. சிவநாயகமூர்த்தி அவர்கள்
(வட்டாரக் கல்வி அதிகாரி நல்லூர்)

★ கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும் ★

பாலர் வகுப்பு மாணவிகளின் பெற்றோர்களைச் சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள், பாலர் வகுப்பு மாணவிகள்
இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை.

29-6-82.

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

1996 ஆம் ஆண்டிற்கான,

ஆண்டு 5 புலமைப்பரிசில் பெற்ற

மாணவர்களுக்கான

# பாராட்டு விழா

இடம் : பாடசாலை மண்டபம்
காலம்: 07-03-1997 வெள்ளி மு. ப. 10-30 மணி
(இலங்கை நேரம்)

பிரதம விருந்தினர்: திரு. க. இரத்தினராஜா அவர்கள்
(கல்விப் பணிப்பாளர், வலயம் 1)

● நிகழ்ச்சி நிரல் ●

இறைவணக்கம்,
வரவேற்புரை: திரு. ம. இரகுநாதன் M.A. (விரிவுரையாளர்)
(செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)
தலைமை உரை: திரு. சி. பாலகுமாரன்
(உப தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)
அதிபர் உரை: திருமதி. த. துரைசிங்கம்
பிரதம விருந்தினர் உரை,
பரிசில் வழங்குதல்,
ஆசிரியரைக் கௌரவித்தல்,
நன்றியுரை: திருமதி. த. நவரத்தினம் (ஆசிரியை)
(பொருளாளர் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர்,

---

# வாழ்த்துகின்றோம்

யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

புலமைப்பரிசில் பரீட்சையில் வழமைபோல இம் முறையும் 47 வீதத்திற்கு மேற்பட்ட மாணவர்களைச் சித்திபெற வைத்த,

எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், சித்தியடைந்த மாணவர்களுக்கும் எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவிக்கின்றோம்.

பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

(44831)

---

# வாழ்த்துகின்றோம்

பாடசாலையின் வாழ்விலும், வளத்திலும்
கண்ணும் கருத்துமாகச் செயற்படும் அதிபரையும்,
குறைந்த வளத்தோடு நிறைந்த பணியாற்றிய
ஆசிரியர் குழாத்தினரையும்
36 வீதமான பெறுபேறுகளைப் பெற்றுத் தந்து
பாடசாலைக்குப் புகழ் சேர்த்த
மாணவச் செல்வங்களையும்

**1997 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகண்டு வாழ்த்துகின்றோம்.**

குறிப்பு: சித்திபெற்ற மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் 06-02-98 வெள்ளி பி. ப. 2.30 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். தவறாது கலந்து கொள்ளவும்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

[53095]

---

யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

# புதிய பாதை திறப்பு விழா

காலம் 1992-05-15 வெள்ளிக்கிழமை காலை 10-30 மணி
தலைவர்: திருமதி: யோ. சிவசங்கரி(?) அதிபர்
பிரதம விருந்தினர்:
திருவாளர் C. தியாகராஜா (முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்)
சிறப்பு விருந்தினர்:
திருவாளர்கள்:
சி வேலாயுதம் (பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாழ் / கோட்டம்)
த துரைசிங்கம் (கல்வியதிகாரி நிர்வாகம்)
இளம்பரிதி (பொறுப்பாளர் யாழ்நகர் அரசியல் பிரிவு)
த. ஈ. வி. புலிகள் யாழ்ப்பாணம்)
அருண் மாஸ்ரர் (கல்வி வளர்ச்சிக் கழகம்)
திருவாட்டிகள்:
தி. நாகராஜா (கோத்தணி அதிபர் வண். வடக்கு)
இ. சண்முகம் (உப அதிபர் யா/இந்து மகளிர் கல்லூரி)

அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர் ஆசிரியர்கள்
மாணவிகள் பா. அ. ச. உறுப்பினர்கள்

# ஆரம்பக்கல்வியில் திட்டமிடலின் முக்கியத்துவம்

**திருமதி அ. அல்பிறட் குருஸ்,**
யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

ஒரு நாட்டு மக்கள், சமூகம் என்றோருக்கு சில தேவைகளும் குறிக்கோள்களும் உள்ளன. அத் தேவைகளை நிறைவேற்றும்போது, கூடுதலான வினைத்திறனும், பயனுறுதி தன்மையும் விரும்பப்படுகின்றது. அத்தகைய தீர்மானம் பற்றிய விஞ்ஞான ரீதியான பொறிமுறையே கல்வி திட்டமிடலாகும். இவ்வாறு நோக்கும்போது, ஆரம்பக் கல்வியில் திட்டமிடல் என்பது மிகவும் முக்கியம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. ஏனென்றால் ஒரு பிள்ளையின் கல்வி வளர்ச்சிக்கு அடிக்கல் ஆரம்பப்பாடசாலையில்தான் நாட்டப்படுகின்றது. எனவே ஆரம்பப் பாடசாலை அதிபர், ஆசிரியர் சிறந்த திட்டமிடலை மேற்கொள்வது அவசியமாகின்றது.

ஆரம்பக் கல்வி திட்டமிடலில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன. நோக்கங்கள், அபிலாசைகள் அடையப்படவேண்டும். வளங்கள் எல்லாவற்றையும், வினைத்திறன் மற்றும் பயனுறுதியுள்ள முறையில் பயன்படுத்தல் வேண்டும். விஞ்ஞான ரீதியான செய்முறைகள் காணப்படவேண்டும். நோக்கத்தோடு தொடர்புபட்ட ஒழுங்கான நடவடிக்கைகள் பல ஒருங்கிணைக்கப்படுதல் வேண்டும். அத்தோடு கோட்பாடுகள், தொழில்நுட்பம், நிதி, நிர்வாகம், பொருளாதாரம், சமூக ஆராய்ச்சி முறைகள் போன்ற பலவும் இணைந்து செயல்முறை காணப்படல் வேண்டும்.

கல்வி முகாமைத்துவத்துடன் இணைந்த ஒரு பண்பாகவும் கல்வி திட்டமிடலானது காணப்படுகின்றது. ஒரு பயனுறுதி மிக்க திட்டமிடல் பாடசாலையில் காணப்பட வேண்டுமாயின் திட்டமிடல் செயன்முறையானது, தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் நடவடிக்கை பற்றிய செயல் முறைகளுடன் நெருக்கமாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதாவது திட்டமிடலானது, தனியானதாக காணப்பட்டால் ஒரு தூய கல்விசார் பயிற்சியாக மட்டுமே மாணவருக்கு அமையுமே அன்றி அது மாணவருக்கு முழு பயனையும் ஏற்படுத்தும் வகையில் அமையமாட்டாது. எவ்வாறெனில் ஆரம்பப் பாடசாலையில், திட்டமிடல் தீர்மானம் என்பன அதிபரால் மேற்கொள்ளப்படும்போது அது ஆசிரியர்கள், கல்விசார் சமூகம் என்பன இணைந்ததாக காணப்படுதல் அவசியம்.

திட்டமிடல், கல்வி நிறுவனங்களில் செயல்படும் கல்வி நிர்வாகிகளின் ஒத்துழைப்பு, திட்டம் பற்றிய விளக்கம், அவர்களின் ஈடுபாடு, ஊக்கம் என்பன மிகவும் அடிப்படையானவையாகும். அத்தோடு ஆரம்ப பாடசாலையில் தொடர்பாடலானது மேலிருந்து கீழாகவும் கீழிருந்து மேல் நோக்கியும். பக்க வாட்டிலும் சிறந்த தொடர்பாடல் காணப்படல் வேண்டும். இதனை கீழ்வரும் வரைபடம் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

## ஆரம்ப பாடசாலை ஒன்றின் தொடர்பாடல் வரைபடம்.




**வ**ரைபடத்தில் காட்டியவாறு அதிபர் ஆசிரியர்களுடன் சிறந்த தொடர்பாடலை வைத்திருப்பதும், ஆசிரியர்களும் அதிபருடன் சிறந்த தொடர்பாடலை வைத்திருப்பதுடன் ஆசிரியர்கள் சக ஆசிரியர்களுடன் சிறந்த தொடர்பாடலை வைத்திருப்பதும் மிகவும் அவசியமாகின்றது. அத்துடன் ஆசிரியர்கள் தமது மாணவர்கள் ஒவ்வொருவருடனும் சிறந்த தொடர்பாடலை வைத்திருப்பதும் மிகவும் அவசியமாகின்றது. ஏனென்றால் ஒரு ஆசிரியர் தமது பாடத்திட்டமிடலை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு மாணவரினதும் குடும்ப பின்னணி என்பதும், அவனது திறமைகளும், மிகவும் ஆராயப்பட்டு அதற்கேற்ப தமது திட்டமிடலை மேற்கொள்ளவேண்டிய அவசியமுடையவராக இருக்கின்றார். எனவே சிறந்த தொடர்பாடலானது ஆரம்ப பாடசாலையில் சிறந்த திட்டமிடலுக்கு வழி சமைக்கும். இல்லையேல் அதற்கு பதிலாக ஏமாற்றமும் விரக்தியும் எஞ்சும்.

ஆரம்பக் கல்வியில் திட்டமிடும்போது மாணவர் அபிவிருத்தி, ஆசிரியர் அபிவிருத்தி என்பன கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். மாணவர் அபிவிருத்தியை நோக்கும்போது, மாணவர்கள் பாடசாலையில் சேர்தலை ஊக்குவித்தல், மாணவர் இடைவிலகலை குறைத்தல், மாணவர் தேர்ச்சி மட்டங்களை அதிகரித்தல், மாணவர் ஆளுமையை விருத்தி செய்தல் என்பன உள்ளடங்கும். ஆசிரியர் அபிவிருத்தியை நோக்கும்போது ஆசிரியர்களை ஊக்கப்படுத்துதல், வரவின்மையை குறைத்தல், சிறந்த வேலைச் சூழலை ஏற்படுத்தல், ஆளுமையை விருத்தி செய்தல், கல்வி துறையில் அறிவை விருத்தி செய்தல் என்பன உள்ளடங்கும். இவற்றை கவனத்திற்கொண்டே திட்டமிடலானது மேற்கொள்ளப்படல் வேண்டும். எனவே ஆரம்பக் கல்வியில் திட்டமிடல் என்பது சிறந்ததாக காணப்படும் போது ஆரம்பக் கல்வியின் நோக்கமானது பயனுறுதி மிக்க வகையில் அடையப்படும் என்பது உண்மையாகும்.

# விசேட தேவைகள் உள்ள குழந்தைகளும் அவர்களுக்கான ஆரம்பக் கல்வியும்

***Mr. B.K.Ganesalingam,***
P.COT (SL) SROT (LON)
Senior Occupational Therapist,
Rehabilitation Hospital
Ragama.

**விசேட தேவைகள் உள்ள குழந்தைகள் என்றால் யார்?**

சாதாரண பாடசாலைக் கற்பித்தல் முறைகளுக்கும் மேலதிகமான கவனிப்புக்கள் வசதிகள் என்பனவும் கற்பித்தல் சிகிச்சை முறைகளும் அவசியமான குழந்தைகளே விசேட தேவைகள் உள்ள குழந்தைகள் என இனங்காணப்படுவர். இவ் விசேட தேவைகள் அல்லது கவனிப்புக்கள் அல்லது வசதிகள் ஒன்றில் தற்காலிகமானவையாக இருக்கலாம். அல்லது நிரந்தரமானவையாக இருக்கலாம். அது அவர்களுடைய சுய ஆளுமையைப் பொறுத்தது (Independency in life) அல்லது (Partially or permanently dependent in life)

பாதிப்புக்கள் நிரந்தரமானதாகவோ அல்லது தற்காலிகமானதாகவோ அல்லது நிரந்தரமான இலேசானதாகவோ (Partially or permanent) அல்லது கடுமையான நிரந்தரமானதாகவோ இருக்கும். எமது கற்பித்தல் முறைகள் பொதுவாக இந்தப் பஞ்ச இந்திரியங்கள் சம்பந்தப்பட்டவையே. கண், காது, மூக்கு, வாய், மெய் இவற்றின் உணர்வுகள் சைகைகள் மூலமே இந்த கல்வி கற்றல், கல்வி புகட்டல் எனும் இரு நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. இதில் ஓர் இந்திரியம் பயன்படுத்தப்படலாம் அல்லது இரண்டு அல்லது மூன்று அல்லது அனைத்துமே பயன்படுத்தப்படலாம். ஆனால் கிரகித்தல் ஒரு நிலையிலேயே நடைபெறுகின்றது.

**கற்பது யார்? கற்பிப்பது யார்?**

இந்த உடல் கற்கின்றதா? அல்லது கற்பிக்கின்றதா? இல்லை இந்த உடல் இயங்குகின்ற ஆத்மாவே கற்கின்றார், கற்பிக்கின்றார், அனைத்து செயல்களையும் செய்கின்றார். ஆத்மா உணர்வுள்ள உயிர். இந்த உடல் பஞ்ச பூதங்களால் ஆன ஒரு பௌதீகப் படைப்பாகும். இந்த உணர்வுள்ள உயிர் (ஆத்மா) போய்விட்டால் இந்த உடலால் எதுவுமே செய்ய முடியாது. இந்த உடல் பஞ்ச பூதங்களாலானதாலேயே அது பஞ்ச பூதங்களுடனும் சங்கமம் ஆகின்றது. ஆனால் ஆத்மா அழிக்கமுடியாதது அனாதியானது அமரத்துவமானது. உடல் ஒரு வெறும் கருவி மாத்திரமே.

**குழந்தைகள் எவ்வாறு குறைபாடுடையவை ஆகின்றன**

குழந்தைகள் தாயின் வயிற்றில் கரு நிலையில் இருக்கும்போதோ அல்லது அவர்கள் பிறக்கின்ற நேரத்திலோ அல்லது பிறந்து மூன்று வருடகாலத்தின் உள்ளோ, அல்லது பின்போ குறைபாடுடையவர்கள் ஆகின்றனர். முதல் நிலையில் குறைபாடுடையவர்கள் ஆகும்போது அவர்கள் ஒருவிதமான பராமரிப்பு நிலைக்கும் இரண்டாவது நிலையில் (மூன்று வயதின்பின்) குறைபாடுடையவர்கள் ஆகும்போது வேறு ஒருவிதமான பராமரிப்பு நிலையிலும் இருக்கின்றனர். (Habilitation & Re-habilitation)

இக்குறைபாட்டு நிலைகள் எவ்வாறு உருவாகின்றன என்பதைப் பௌதிக ரீதியாக நோக்கினால் ஆண், பெண் அகச் சூழல் புறச்சூழல், நோய்கள், விஞ்ஞான முறைகளின் தாக்கம், பயன்பாடு மனித சரீர வேறுபாடுகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். பொதுவாக கண்டறியப்படாத காரணங்கள் என்ற வகையினுள்ளேயே பெரும்பாலும் அடங்குகின்றன.

ஆனால் ஆத்மீக ரீதியில் பார்க்கும்போது ஒவ்வொரு ஆத்மாவும் இந்தக் கர்மசேஸ்திரத்திலே (பூமியில்) கர்மங்களை ஆற்றுவதற்காக ஒரு உடலை எடுத்தே ஆகவேண்டும். ஆத்மா அழிவற்றது. அதனுள்ளே இந்த எல்லையற்ற உலக நாடக மேடையிலுள்ள நடிப்பிற்கான ஒரு அனாதியான பாகம் பதியப்பட்டுள்ளது. இது ஆத்மாவிற்கு ஆத்மா வேறுபடும். இரண்டும் ஒன்றோடொன்று பொருந்துவதாக இருக்க மாட்டாது. யோகர் சுவாமிகளின் கூற்றில் சொன்னால் இது எப்பொழுதோ முடிந்த காரியம், ஆகவே ஒவ்வோர் ஆத்மாவும் தத்தமது பாகத்தையே நடிக்கின்றன. தவிர அப்பாகங்கள் யாராலும் மாற்றப்படவோ, அல்லது நடிக்கப்படவோ முடியாது. ஒருவரின் பாகத்தை இன்னொருவர் நடிக்கமுடியாது. உதாரணமாக ஒரு குறைபாடுடைய குழந்தையின் குறைபாட்டை வேறு ஒரு உறவினர் நடிக்க முடியாது. அக் குழந்தையே அதனை நடிக்கவேண்டும். ஆந்த ஆத்மாவினால் மட்டுமே அந்தப் பாகத்தை மிகச் சரியாக நேர்த்தியாக சிறிதளவும் பிழையின்றி நடிக்க முடியும். கர்மக் கணக்கின் அடிப்படையிலேயே பிறப்பு, உணவு உண்பது, கிடைப்பது, வாழ்க்கை, படிப்பு, செயல்கள், இறப்பு அனைத்துமே அடங்கியுள்ளது. நேரடியாகக் கூறின் நாம் கர்மக் கணக்கை கூட்டிக் குறைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இது குறைப்பதற்கான காலமாகும். ஒவ்வொரு பிறவியிலும் நாங்கள் கணக்கை சரியாக நடித்து முடிக்கின்றோம். முடித்தவுடன் இன்னும் ஒரு பிறவியை வேறு சரீரத்தில், வேறு இடத்தில் வேறு பெயரில், வேறு உருவத்தில் வேறு நிறத்தில் அதே ஆத்மா நடிக்கின்றார். எனவே குறைபாடுடைய குழந்தைகள் நிரந்தரமான குறைபாட்டுடனோ அல்லது தற்காலிக குறைபாட்டுடனோ அல்லது குறைவான அல்லது கடுமையான குறைபாட்டுடன் தமது பாகத்தை நடிப்பார்கள். ஆனால் எமது கடமை அவர்களிற்கான கற்பித்தல் முறைகள் கற்பித்தல் பாடவிதானம், கற்கை நெறி, கற்பித்தல் மூலம் என்பன அவர்களின் குறைபாடுகளிற்கேற்ப வித்தியாசம் அடைவதுடன் எமது மிகக் கூடிய அளவு சேவை அவர்களை சுய நிலையில் இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்

கற்பித்தல் முறைகள் பஞ்ச இந்திரியங்களினாலேயே அவற்றிற்கூடாகவே நடைபெறுகின்றன. இப்பஞ்ச இந்திரியங்கள் நரம்பு மண்டலத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. நரம்பு மண்டலத்திற்கு ஒரு செய்தி கொடுக்கப்படும்போது அது ஒரு நினைவினை ஏற்படுத்தும். சாதாரணமாக ஒரு மனிதன் ஒரு நிமிடத்திற்கு 30-40 நினைவுகளை ஏற்படுத்துகின்றான். (Thought) இது புத்தியினால் சரிபார்க்கப்பட்டு உணர்ச்சியாக மாற்றப்படுகின்றது. இவ்வுணர்ச்சியானது மனநிலையிலே மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இது பின்னர் ஞாபகமாக மனதிலே பதிகின்றது. ஞாபகத்திலிருந்தே நரம்பு மண்டலத்தினூடாக பஞ்ச இந்திரியங்களின் செயற்பாட்டினைப் பெறுகின்றன.

செய்தி நினைவு உயர்ச்சி மனோநிலை ஞாபகம் நரம்பு மண்டலம் புலனுறுப்பு செயல் இவை அனைத்தும் ஆத்மாவின் செயல்பாடுகளே. எனவே குறைபாடுடைய குழந்தைகளின் குறைபாடுகள் இதில் எந்தவொரு படியிலோ அல்லது இரண்டு, மூன்று, முழு படிமுறைகளிலுள்ள குறைபாடுகளினாலோ ஏற்படலாம். இவை நாம் கற்பித்தல் பாடநெறி வகுக்கும் போது மிகவும் நுணுக்கமாக ஆராயப்படவேண்டியவையாகும். தற்போதுள்ள கல்வி முறைகளின்படி எங்கள் கண்ணிற்கு தெரிகின்ற பௌதீகமான குறைபாடுகளையே மையமாகக் கொண்டு எமது கல்விப்பாடவிதானம் அமைகிறது. ஆனால்

அதிலும் பார்க்க எவ்வளவோ விடயங்கள் விடுபட்டு விடுகின்றன. இதனால் எந்தவொரு திட்டமும் முற்றுமுழுதான பலனைத் தருவதில்லை.

மருத்துவக் கல்வியின் அடிப்படையில் நோக்குவோமானால் ஒரு கலம் பிரிந்து இரண்டாகி இரண்டு நான்காகி நான்கு எட்டாகியே இந்த எட்டு அங்கத்தொகுதியுடன் கூடிய உடல் பஞ்ச பூதங்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

*"நிலமைந்து நீர்நான்கு நீடங்கி மூன்று*
*பிருதுவி இரண்டு மற்றென்று விண்"* - **ஔவையார்**

இந்த விகிதாசாரத்தின் அடிப்படையிலேயே பஞ்ச பூதங்கள் கலக்கப்பட்டு இந்த உடலானது ஆக்கப்பட்டுள்ளது. இதேபோல் ஆத்மாவும் கூட இந்த ஏழு திவ்விய குணங்களினை மூலாதாரமாக கொண்டே இந்த எட்டு ஆக்கத் தொகுதிகளினால் ஆக்கப்பட்ட உடலைப் பாதுகாக்கின்றது. சூரியன் இல்லாமல் எவ்வாறு இவ்வுலகில் எம்மால் வாழமுடியாதோ அதே போன்று இந்த ஞான சூரியனான இறைவனில் (பரமாத்மா பரமதந்தை சிவனின்) இருந்து சக்தியைப் பெறாது எம்மால் ஆத்ம சக்தியைப் பெறமுடியாது. அவையாவன:

| | | |
|---|---|---|
| நரம்பு மண்டலம் | - | அறிவு(ஞானம்) |
| இயற்கை நீர்பீடனத் தொகுதியும் விசேட புலனங்கங்களும் | - | தூய்மை |
| சுவாசப்பை தொகுதி | - | அமைதி |
| இருதய நாடிநாள சுற்றோட்டத் தொகுதி | - | அன்பு |
| சமிபாட்டுத் தொகுதி | - | சந்தோசம் |
| மீள் இழைய அமைப்பு அகச்சுரப்புத் தொகுதி | - | பேரானந்தம் |
| கை கால் மூட்டு என்புத் தொகுதி | - | சக்தி |
| கழிவகற்றும் தொகுதி | - | மேல் குறித்த யாவும். |

எனவே இவ் ஏழு திவ்ய குணங்களின் கர்மக் கணக்கில் குறைபாடுகள் இருப்பினும் கூட அந்தந்த திவ்விய குணத்தின் நிலைகளில் அவ்வப் பிறவிகளில் இத்தொகுதிகளில் குறைபாடுகள் கொண்டவர்களாகக் குழந்தைகள் இருப்பர். எனவே பாடவிதானம் தயாரிக்கும்போது இப்படிப்பட்ட குழந்தைகளின் நிலைகள் மிகவும் கவனமாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**விசேட தேவைகள் உள்ள குழந்தைகளை எவ்வாறு தேர்ந்தெடுப்பது?**

விசேட தேவைகள் உள்ள குழந்தைகளிற்கான சிகிச்சைமுறை இரண்டு வகைப்படும் என நாம் முன்னர் பார்த்தோம். பிறக்குமுன், பிறப்பின் போது, பிறப்பின் பின் 3 வருடத்தினுள், இவர்களிற்கான சிகிச்சைமுறை பழக்கப்படுத்துதல் எனப்படும். இவர்கள் பிறப்பிலிருந்தே இனங்காணப்படுவர். இவர்களுடைய வளர்ச்சிப் படிமுறை ஆராயப்படும். அத்துடன் அதன்படிதான் அவர்களுடைய சிகிச்சைமுறையும் இருக்கும். இதன்போது இவர்களுடைய புத்திவளர்ச்சி வீதம் உணர்வு வளர்ச்சி வீதம் அத்துடன் பௌதிக வளர்ச்சி வீதம் என்பன பார்க்கப்படும். இதன் அடிப்படையிலேயே சாதாரண குழந்தைகளின் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பீடு செய்து அதற்கு அடுத்தபடிமுறைச் சிகிச்சை அளிக்கப்படும். இப்படிச் செய்வதனால் இவர்கள் ஆரம்பம் முதல் இறுதிவரை வளர்ச்சிப் படிமுறை மாறாமல் வளர்வார்கள். இவர்கள் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதன்படி அவர்களின் ஆரம்பக் கல்வித்திட்டம் அமுல் செய்யப்படும்.

1. பார்க்கமுடியாத, பார்வைக்குறைபாடுடைய குழந்தைகள்.
2. கேட்க முடியாத, கேட்டலில் குறைபாடுடைய குழந்தைகள்.
3. மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள்.
4. பௌதிக வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள்.
5. பௌதிக சுகவீனமுள்ள குழந்தைகள்
6. பேச்சு குறைபாடுடைய குழந்தைகள் (சில வேளைகளில் பேச்சும் கேட்டலும் குறைபாடுடையவர்கள் உள்ர்)
7. உணர்வினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள்.

**இவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறை என்ன?**

இன்று இலங்கையின் சிறிய நிர்வாக அலகாக உதவி அரசாங்க அதிபர் பணிமனை விளங்குகிறது. அதே போல் ஆரம்ப சுகாதார நிலையமாக சுகாதார அதிகாரி அலகு (MOH) இயங்குகிறது. இவற்றின் உதவியுடனும் சமூக புனர்வாழ்வு அமைப்பு அதிகாரியின் உதவியுடனும் இப்படியான குழந்தைகள் விசேட தேவைகளான குழந்தைகளின் பாடசாலைக்கு அல்லது விசேட வகுப்பைக் கொண்ட ஆரம்ப பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

இவர்களது கற்பித்தல் பாடநெறி எவ்வாறு அமையும். இவர்களிற்கான பாடவிதானம் மூன்று நிலைகளில் தயாரிக்கப்படவேண்டும். எப்படியாயினும் இப்பாடவிதானங்கள் பொதுவாக

1. குழுக்கற்பித்தலுக்கு உரியவையாக இருத்தல்
2. குழுக்கற்பித்தலுடன் கூடிய விசேட கவனிப்பு வகுப்பு இருத்தல்
3. அவர்களுடைய உடற்தொழிலியல் செயற்பாடுகளிற்கு அமைவானதாக இருத்தல் வேண்டும்.
4. விசேட கருவிகளைப் பயன்படுத்தும் நிலையுள்ளதாக இருத்தல் வேண்டும்.
5. தனிப்பட்ட கவனம் செலுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.
6. இலகு படிமுறைகளிற்குப் பிரிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.
7. கற்பித்தல் மட்டுமன்றி உள உடல் வளர்ச்சிப் போக்கில் அமைந்ததாக இருக்க வேண்டும்.
8. மனநிலை உணர்வு நிலை, சப்தநிலை, என்பனவற்றிற்கு அமைவாக இருத்தல் வேண்டும்.
9. இயற்கைச் சூழலில் அவர்களுடைய வாழ்வுப் பிரதேசத்தில் ஒத்துப்போகக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
10. அந்த மொழி, கலாச்சாரம், சமயம், சுகவாழ்வு, என்பவற்றுடன் இணைந்ததாக இருக்க வேண்டும்.
11. இது சாதாரண வகுப்பு பாடநெறியில் இருந்து மிகவும் விலகக் கூடாது.

ஏழு வகையான கற்கை முறைகளில் கற்பிக்க வேண்டும்

இவற்றை சரியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படல் வேண்டும். அத்துடன் அவர்களுக்கான கற்கை நெறிகள் அவ்வப் பிரதேசத்தைப் பொறுத்து தேவைகளைப் பொறுத்து ஊக்குவிக்கப்படல் வேண்டும். இதனை ஒரு தொழிலாக அல்லாது சேவையாக நினைக்கும் அளவிற்கு அந்த ஆசிரியரின் மனப்பாங்கு வளரும்படியான வழி நடத்தல் முறைகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல்கள் நடாத்தப்பட்டு ஏற்படும் Strength & weakness ஆராயப்பட்டு நேர்முகமான முடிவுகள் எடுக்கப்படல் வேண்டும். இவற்றினை செய்வதனால் ஆசிரியர் மட்டுமல்ல எந்த ஒருவரும் இதில் ஈடுபடுவதனால் மனநிறைவைப் பெறமுடியும் (self satisfaction). இதன்மூலமே பேரானந்த நிலையான அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்ய முடியும்.

**"தூய்மையான உள்ளத்திலேயே கல்வி நிலைத்திருக்கும்"**

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்திற் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே.

(முத்து)

அன்னைமடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளி வரும் பிஞ்சுப் பாலகனாய் - அவன்
தன்னந்தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம்.

(முத்து)

எண்ணும் எழுத்தும் உணர்ந்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்.

(முத்து)

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்.

(முத்து)

*பொன் வாமதேவன்*
உலக ஆசிரியர் தினம் (06.10.1991)

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| i | 6 | மனித பண்பை | மனிதப்பண்பை |
| iv | 2 | விளைந்து | விழைந்து |
| xxi | 6-7 | ஊழையும் உப்பக்கம் காண்புர் உலைவின்றி தாழாது உஞற்றுபவர் | ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி தாழாது உஞற்றுபவர் |
| xxv | 3 | நறுநறு | குறுகுறு |
| 5 | 16 | தேவைக்குத் தேவை | தேவையான போது |
| 7 | 9 | நுளைவாயில் | நுழைவாயில் |
| 8 | 11 | பதட்ட | பதற்ற |
| 13 | 5 | இந்துப் பெண்சிறுமியர்களுக்கென | இந்துச்சிறுமியர்களுக்கென |
| | 23 | இணைபாலம் | இணைப்புப்பாலம் |
| 14 | 20 | மாணவர் மன்றம் | மாணவர் மன்றங்கள் |
| | 29 | ஓர் | ஒரு |
| | 34 | ஓர் | ஒரு |
| | 39 | பெருக்கி | அதிகரித்து |
| 15 | 26 | வலையமட்டம் | வலயமட்டம் |
| 20 | 20 | 1984.01.01- 1997-04 | 1984.01.01 - 1997.09.04 |
| 30 | 13 | பைப்கள் | குழாய்கள் |
| 31 | 5 | பதட்ட | பதற்ற |
| 48 | 16 | அரைவணைப்பிலிருந்து | அரவணைப்பிலிருந்து |
| 51 | 13 | கவிநூறு | கவினூறு |
| | 23 | ஏனைய | ஏனை |
| 54 | 22 | 2004-161 | 2004- 164 |
| 56 | 07 | தோற்றத்தில் | நேரத்தில் |
| 58 | 02 | பங்குகளும் | பாங்குகளும் |
| | 15 | எதிர் கூற | எதிர்வு கூற |
| 59 | 03 | 3ஆம் 4ஆம் | மூன்றாம், நான்காம் |
| | 05 | பிறர்க்கும் | பிறர்க்கு |
| | 17 | 5ஆம் 6ஆம் | ஐந்தாம், ஆறாம் |
| | 22 | 5ஆம் | ஐந்தாம் |
| | 31 | 20ஆம் | இருபதாம் |
| | 32 | 20ஆம் | இருபதாம் |
| 61 | 04 | வலைய | வலய |
| 64 | 06 | நடனம் - தனி 111 | நடன - தனி 11112 |
| 65 | 22 | பகமையை | பகைமையை |
| 66 | 23 | கண்டல் | காண்டல் |
| 68 | தரம் 2 | சொற்றொடல் | சொற்றொடர் |
| 70 | 14 | செலிமடுத்த | செவிமடுத்த |
| | 22 | இருபகுதியுள | இருவகுதியுள |
| 71 | 34 | வல்லுனர்களாக | வல்லுநர்களாக |
| 77 | 19 | தலாவிசாலம் | தலவிசாலம் |
| 78 | 03 | வயைந்து வயைந்து | வளைந்து வளைந்து |
| 79 | 06 | எண்ணக்கணக்கற்றவை | எண்ணுக்கணக்கற்றவை |
| 80 | 30 | போதை பொருட்கள் | போதைப்பொருட்கள் |
| 87 | 23 | திரு முறை | திருமுறை |
| 90 | 07 | ஆண்களில் | ஆண்களை |
| 94 | 13 | சிஷ்ஷையயாகப் | சிஷ்ஷையாகப் |
| 96 | 19 | மேலைத் | மேலைத் |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 97 | 08 | பல்துறை ஆற்றி | பல்துறைப்பணி |
| | 16 | திருமதி. நா. பாக்கிம் | திருமதி.நா.பாக்கியம் |
| 100 | 02 | வலைய | வலய |
| 107 | 02 | ஆங்கிலத்தில் | ஆங்கிலத்தினை |
| | 11 | பாடசாலைகளிலுள்ள | பாடசாலைகளில் |
| | 22 | கல்வி திணைக்கள | கல்வித்திணைக்கள |
| 108 | 37 | ஆண்டு | ஆண்டில் |
| 112 | முதுரை | நீர் எழுத்தற்ரு நேர் | நீர் மேல் எழுத்திற்கு நேர் |
| 113 | 02 | A friend indeed is a friend inneed | A friend inneed is a friend indeed |
| | 03 | ஒடுக்கும் | ஒக்கும் |
| 114 | 16 | குண்டுமணி | குன்றிமணி |
| 119 | | விளிமியங்களைப் பேண | விழுமியங்களைப் பேண |
| 120 | 03 | பட வேண்டியது | பெற வேண்டியது |
| 124 | 08 | உபயத்திற்கு | உளவயதிற்குப் |
| 129 | 07 | அறுபத்தினான்கு | அறுபத்திநான்கு |
| 134 | 06 | சகபடிக் | சகபாடிக் |
| 138 | 12 | சந்திப்பது | சிந்திப்பது |
| | 28 | பரிமாணல் | பரிமாணம் |
| 140 | 14 | செளிமையை | செழுமையை |
| 144 | 41 | வரண்முறையான | வரன்முறையான |
| 145 | 15 | வரண்முறையான | வரன்முறையான |
| 146 | 33 | பதட்டமானதுமான | பதற்றமானதும் |
| 150 | 03 | இலக்கை | இலங்கை |
| | 22 | துப்பரவான | துப்புரவான |
| 153 | 28 | மெஸ்லியன் | வெஸ்லியன் |
| 170 | 06 | கல்வியல் | கல்வியியல் |
| 172 | 33 | வான்மைத் | வாண்மைத் |
| 185 | 22 | உடல் | உளச் |
| 186 | 23 | முறைப்பாடகளையும் | முறைப்பாடுகளையும் |
| 192 | 02 | வீரனோ வீராங்கனையாகவோ | வீரன் வீராங்கனை என |
| | 06 | பிள்ளையின் | பிள்ளையில் |
| | 08 | என்பதை | என்பது பற்றிய |
| | 19 | ஆரிரியர்களின் பெற்றோர்களின் | ஆசிரியர்களினதும்,பெற்றோர்களினதும் |
| 194 | 26 | கழிவு பிரச்சனைகளை அகற்றுவது | கழிவு அகற்றுவது |
| 195 | 05 | விழிப்பூட்டப்பட்டு | விழிப்புணர்வு ஊட்டப்பட்டு |
| | 06 | தடை மருந்து | நோய்த்தடை மருந்து |
| 220 | 33 | ஓர் சிறந்த | ஒரு சிறந்த |
| 221 | 31 | பராமரிக்கப்படுவற்க்கும் | பராமரிக்கப்படுவதற்கும் |
| 223 | 24 | தமது கொள்வோர்களால் | தமது வேலை கொள்வோர்களால் |
| 226 | 06 | வலைய | வலய |
| | 19 | செயற்படாமலும் | செய்யப்படாமல் |
| 227 | 27 | தொழில் வன்மை | தொழில்வாண்மை |
| 229 | 23 | புணர் அமைப்பதற்கு | புனரமைப்பதற்கு |
| | 27 | ஏழைருக்கும் | ஏழைகளுக்கும் |
| 232 | 04பந்தி | Work | Word |
| | 03 | D.Dammayniyae ADE(Eng) | D.R. Arumaynayagam ADE(Eng) |
| 233 | 13 | நிறுவாகத்தினரின் | நிருவாகத்தினரின் |
| | 03பந்தி02 | இடைக்கருவினை | இசைக்கருவியினை |

# நன்றிகள்

வெள்ளி விழா மலர் வெளி வர ஆக்கமும் ஊக்கமும் தந்த அதிபருக்கும், ஆசிச் செய்தி தந்த பெரியோர்க்கும், வாழ்த்துச் செய்தி தந்த கற்றோருக்கும், கட்டுரை உவந்தளித்த அனைவருக்கும் ஆசிரியர்களுக்கும், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், நலன் விரும்பிகளுக்கும், விளம்பரம் தந்துதவியோருக்கும், கணனியில் தட்டச்சுச் செய்து, வடிவமைத்துதவிய திரு. ஐ. சிற்றம்பலம் குடும்பத்தினருக்கும், புகைப்படங்களை எடுத்துதவிய ராஜி புகைப்பட ஸ்தாபனத்தினருக்கும் பதிப்புச் செய்து தருவதற்கு ஊக்கமளித்துதவிய திருமதி விமலா மணிவாசகன் குடும்பத்தினருக்கும், அழகுற பதிப்புச் செய்த யுனி ஆர்ட்ஸ் தனியார் நிறுவனத்தாருக்கும், மறைமுகமாகவேனும் பல உதவிகள் வழங்கி சிறப்பித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மலர்க் குழுவினர்.**



# All Ceylon Distributors

மாணவர்களுக்கு தேவையான பாடப்புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள் அனைத்தையும் ஒரேகூரையின்கீழ் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

## ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212 கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
T.P. 0212225542

# மல்லிகா மிக்சர்

மின்சார வீதி,
யாழ்ப்பாணம்




- ஜெலி ஐஸ்கிறீம்
- சொக்லட் கிறிப்ஸ்
- புரூட்சலட் ஐஸ்கிறீம்
- சொக்லட் ஐஸ்கிறீம்
- வனிலா ஐஸ்கிறீம்
- நட்ஸ்ஐஸ்கிறீம்

- ஸ்பெசல் ஐஸ்கிறீம்

மற்றும்

- கட்லட்
- மஸ்கட்
- ராஜ ஸ்பெசல் பீடா
- மட்டன்றோல்
- கேக்வகைகள்
- மிக்சர்
- பற்றீஸ்
- மைசூர்ப்பாகு
- குளிர்பானங்கள்

யாவற்றையும் ஒரே இடத்தில் சுவைத்து மகிழ்ந்திட நாட வேண்டிய ஸ்தாபனம்

**RAJA**

GREAM HOUSE
36, KASTHURIAR ROAD,
JAFFNA

# நிலா நகைமாடம்

தங்கப்பவுண் வியாபாரம்

280/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

# Makanathy Jewellery



மகாநதி ஜுவல்லறி

72A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

மங்கையரின் அழகு நகைகளை
அசல் 22 கரட்டில் செய்து
பெற்றுக்கொள்ள

# சோபனா
# நகை மாளிகை

116V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

உங்கள் ஆதரவிற்கு நன்றி!
மீண்டும் வருக

# Siva Textiles

Econo Bulb 80% Energy saving



ஏகபோக விநியோகஸ்தர்
**சிவா ரெக்ஸ்**

27, Grand Bazaar,
Jaffna.




உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகவகைகளும் மலிவாகவும் தரமாகவும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

4A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

பிஸ்கற் வகைகள் ரொபிவகைகள் குறேசரீஸ்
கச்சான்அல்வா உள்ளூர் உணவுஉற்பத்திப் பொருட்களுக்கு
நாடவேண்டிய இடம்.

# சிறி சக்திஸ்ரோர்ஸ்

**310A,** மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம்.

# தாரா அச்சகம்

138, **நாவலர் வீதி**
**யாழ்ப்பாணம்.**



வெளிநாடு: 0094-21-2881

உள்நாடு: 021-2222881

*With Best Compliments From*

# லாவண்யா

**பல்,மூக்கு கண்ணாடி அகம்**

**உரிமையாளர்:**
**டாக்டர் றெஜி சொலமன்**

கொடிகாமம் வீதி,
நெல்லியடி

525, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.

தரமும் விலையும் எங்கள்
பாரம்பரியம்

# G.S. லிங்கநாதன் & கோ

சல்வார்,சாரி,திருமணபட்டு
சாறிகளுக்கு நாடவேண்டிய
ஒரேஇடம்

இல:13,14,பெரிய கடை வீதி
யாழ்ப்பாணம்.
*T.P:2223139*

**எங்களிடம் சகலவிதமான ஆங்கில
மருந்துகளும் பால்மா வகைகளும்
நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்**

# வசந்தம் பாமஸி

*மக்களின் நலன்கருதி
காலை 6.30 இலிருந்து இரவு 9.00
வரைக்கும் திறந்திருக்கும்*

**456, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்**

வாடிக்கையாளரின்
நம்பிக்கையையும்
நன்மதிப்பையும்
நிலையான ஆதரவையும்
கொண்டு இயங்கும்
குடும்பவங்கி
பலதரப்பட்டசேவைகளை
துரிதகதியில் வழங்கும்
ஒரேவங்கி.

# தேசியசேமிப்புவங்கி








வடக்கு கிழக்கு மாகாணம்
தமிழ் மொழித் தினம்
2003
















DESIGNED & PRIMED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: +94 11 2330195.